ஆதியாகமம்

வேத ஆராய்ச்சி

TRANS WORLD RADIO - INDIA

அதிகாரங்கள் 1 முதல் 10 வரை

ஆதியாகமம்

முன்னுரை

பிரியமானவர்களே, நாம் ஆதியாகமப் புத்தகத்தைக் கற்கப் போகிறோம். முதலாவது அதற்கான சில முகவுரை குறிப்புகளை அறிந்துகொள்ளுவோம். வேதப் புத்தகத்திலே மிக முக்கியமான இரண்டு புத்தகங்களுள் ஒன்று ஆதியாகமம். வேதத்தை நன்றாகப் புரிந்து கொள்வதற்கு அடிப்படையான இரண்டு புத்தகங்கள் என்றால் பழைய ஏற்பாட்டை ஆரம்பித்து வைக்கும் ஆதியாகமும், புதிய ஏற்பாட்டைத் துவங்கி வைக்கும் மத்தேயு புத்தகமும் ஆகும்.

நாம் ஆதியாகமப் புத்தகத்தை விரிவாகக் கற்றுக்கொள்ளும் முன்பாக நீங்கள் ஆதியாகமத்தை முழுமையாக வாசித்தால் சிறந்தது என்று கூற விரும்புகிறேன். ஒரே நாளிலேயே நீங்கள் ஆரம்ப முதல் முடிவு வரைக்கும் வாசித்தாலும் மிகவும் சிறந்தது. ஆனால் தொடர்ச்சியாக நீங்கள் ஒன்று, இரண்டு, மூன்று நாட்களுக்குள்ளாவது அதை நீங்கள் வாசித்து முடித்துவிட வேண்டும்.

மூன்றாவதாக ஆதியாகமப் புத்தகத்தை மேலோட்டமாக அதில் என்னென்ன இருக்கிறது என்பதை நாம் பார்ப்போம். முழு வேத புத்தகத்திற்குமே அடிப்படையான அநேகக் கருத்துக்கள் ஆதியாகமப் புத்தகத்திலே இருப்பதினாலே மிகக் கவனமாக இந்தப் புத்தகத்தை நாம் படிக்க வேண்டும். அது மட்டுமல்ல, முதல் முறையாக என்று சொல்லி அநேகக் காரியங்களை ஆதியாகமத்திலே நாம் பார்க்கிறோம்: சிருஷ்டிப்பு, மனிதன், மனுஷி, பாவம், ஓய்வுநாள், திருமணம், குடும்பம், வேலை, நாகரீகம், கலாச்சாரம், கொலை, பழி, வெவ்வேறு ஜாதிகள், மொழிகள், மீட்பு மற்றும் பட்டணங்கள். சில வார்த்தைககளை அடிக்கடி இந்தப் புத்தகத்திலே நீங்கள் பார்க்கலாம். குறிப்பாக வம்ச வரலாறு என்ற வார்த்தை.

ஏனென்றால் ஆதியாகமத்திலே அநேகக் குடும்பங்களின் சரித்திரம் சந்ததி சந்ததியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது மிக முக்கியமானது. ஏனென்றால் நாமும் இப்படி ஆரம்பித்த மனித குடும்பத்தின் தொடர்ச்சியிலேதான் வந்தவர்கள். அதுமட்டுமல்ல, பல சிறப்பான மனிதர்களைக் குறித்தும் இங்கே நாம் பார்க்கிறோம். சிலர் ஆதியாகமப் புத்தகத்தை வாழ்க்கை வரலாறுகள் என்று சொல்கிறார்கள். ஆபிரகாமைப் பார்க்கிறோம், ஈசாக்கைப் பார்க்கிறோம், யாக்கோபைப் பார்க்கிறோம், யோசேப்பைப் பார்க்கிறோம், பார்வோனைப் பார்க்கிறோம், யாக்கோபுடைய 11 குமாரர்களையும், யோசேப்பையும் பார்க்கிறோம். அதோடுகூட, தேவன் தொடர்ந்து ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும் ஆசீர்வதிப்பதைப் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல, இவர்களோடு இணைந்தவர்களையும் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்.

லோத்து, அபிமலேக்கு, போத்திபார், பானபாத்திரக்காரன், பார்வோன் இவர்களையும் கர்த்தர் ஆசீர்வதிப்பதைப் பார்க்கிறோம். இந்தப் புத்தகத்திலே உடன்படிக்கையைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதிபிதாக்களுக்கு தேவன் காட்சி கொடுத்ததைக் குறித்தும், குறிப்பாக ஆபிரகாமை தேவன் சந்தித்துப் பேசுவதைக் குறித்தும் நாம் வாசிக்கிறோம்.

பலிபீடம் இந்தப் புத்தகத்திலே முக்கியமான ஒன்று. குடும்பத்திலே பொறாமை உணர்வு வருவதைப் பார்க்கிறோம். வேறு எந்த இடத்திலேயும் கூறப்படாத அளவு எகிப்தைக் குறித்து அறிந்து கொள்கிறோம். பாவத்திற்கான நியாயத் தீர்ப்பைக் குறித்து வாசிக்கிறோம். அதுமட்டுமல்ல பாவத்திற்கான மீட்பைக் குறித்தும் இங்கே நாம் பார்க்கிறோம். முதலாவதாக இந்த புத்தகத்தின் முழுமையான காரியங்களை அறிந்து கொண்டு பிறகு நாம் பகுதி பகுதியாக கற்றுக்கொள்ள வேண்டும்.

வேதப் புத்தகத்தை நாம் இரண்டு விதமாகக் கற்றுக்கொள்ள முடியும். ஒன்று டெலஸ்கோப் வைத்துப் பார்ப்பது போல நாம் பார்க்கலாம். அதாவது தூரத்தில் உள்ள காரியங்களை மொத்தமாக நாம் பார்ப்பது. அடுத்தது மைக்ராஸ்கோபிக் என்று சொல்லுகிறார்ள். அதாவது ஒவ்வொரு பகுதியாக மிக ஆழமாக தெளிவாக நாம் பார்க்கக் கற்றுக்கொள்ளுவது. முதலாவது தூரத்தில் உள்ளதை நாம் முழுமையாகப் பார்க்கவேண்டும். இரண்டாவதாக பகுதிபகுதியாக நாம் அலசி ஆராய வேண்டும்.

இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த சிறப்புப் பெற்ற போதகரான ராபின்சன் என்பவர்கள் இவ்விதமாய் எழுதியிருக்கிறார்கள், புத்தங்களின் காலங்களிலே நாம் வாழ்கிறோம். ஒவ்வொரு நாளும் அதிகம் அதிகமாக அச்சகத்தில் இருந்து புத்தகங்கள் நமக்கு வந்து கொண்டு இருக்கின்றன. நாம் எல்லாருமே அநேக செய்முறை புத்தங்களையும், பாட புத்தகங்களையும், கட்டுரைகளையும், தியான புத்தகங்களையும், குறைசொல்லி எழுதும் புத்தங்களையும், வேதத்தைக் குறித்த புத்தகங்களையும், சுவிசேங்களைக் குறித்த புத்தகங்களையும் வாசிக்கிறோம். ஆனால் இவற்றை வாசிக்க நாம் கொடுக்கும் நேரங்களிலே எத்தனை சதவீதத்தை நேரடியாக சுவிசேத்தை வாசிப்பதற்கு நாம் பயன்படுத்துகிறோம்? யாராவது ஒருவர் குறிப்பிட்டு எதைக் குறித்தாவது எழுதியிருந்தால், அதை மட்டுமே நாம் படிக்கும்போது, சீக்கிரமாக அநேகக் காரியங்களை நாம் கற்றுக்கொள்வோம் என்று நினைக்கிறோம். ஆனால் சிறப்பான சத்தியங்கள் இயற்கையாகவே, முழுமையாகவே எளிதாக நாம் எடுத்துக்கொள்ளும்படி கொடுக்கப்படுகிறதில்லை. கிருபை என்னும் பொக்கித்தை நாம் தேடி முயற்சி எடுத்து பெற்றுக்கொள்வதே தேவனுடைய மனிதர்களின் குணநலன் என்று சொல்கிறார். அவர் சொல்வது உண்மை. ஏனென்றால், வேதபுத்தகமே நம் ஒவ்வொருவரோடும் நம் இருதயத்தோடும் பேசுகிற ஒன்றாக இருக்கிறது. வேறு எந்தப் புத்தகமும் அவ்வாறு

www.Radio882.com

நம்முடன் பேசுவதில்லை. எனவேதான் இந்த வேத ஆராய்ச்சியிலே நாம் குறிப்பாக வேதப் புத்தகத்தின் வசனங்களை, ஒவ்வொரு இடத்திலேயும் வாசிக்க வேண்டும்.

ஆதியாகமப் புத்தகத்தை இரண்டுப் பகுதிகளாக பிரிக்க வேண்டுமென்றால் எந்த இடத்திலே பிரிப்பீர்கள்? முதலாவதாக முதல் 11 அதிகாரங்களை ஒரு பகுதியாகவும், 12ம் அதிகாரம் முதல் கடைசி அதிகாரம் வரை இரண்டாவது பகுதியாக நாம் பிரிக்கலாம். இந்த இரண்டு பகுதிகளும் வெவ்வேறு காரணங்களினாலே வித்தியாசமானதாக இருக்கின்றன. முதல் பகுதியில் சிருஷ்டிப்பிலிருந்து ஆபிரகாம் வரை நாம் பார்க்கிறோம். இரண்டாவது பகுதியிலே ஆபிரகாம் முதல் யோசேப்பு வரை நாம் வாசிக்கிறோம். ஆதியாகமத்தின் முதல் பகுதி மிக முக்கியமான கருத்துக்கள் அடங்கியதாக இருக்கிறது. ஏனென்றால் இன்றைய சிந்தனையாளர்களையும் சிந்திக்க வைக்கும் அநேகக் கருத்துக்கள் அங்கே உண்டு. குறிப்பாக சிருஷ்டிப்பு, மனிதனின் வீழ்ச்சி, வெள்ளம், பாபேல் கோபுரம் முதலியவற்றைக் கூறலாம்.

ஆதியாகமத்தின் இரண்டாவது பகுதியிலே அநேகத் தனி நபர்களைப் பார்க்கிறோம். விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமை நாம் பார்க்கிறோம். அவருடைய அருமையான குமாரனாகிய ஈசாக்கைப் பார்க்கிறோம். யாக்கோபைப் பார்க்கிறோம். யோசேப்பைக் குறித்தும், அவன் பாடுகளைக் குறித்தும், அவன் பெற்ற மகிமையைக் குறித்தும் வாசிக்கிறோம்.

இப்பொழுது நாம் பிரித்தது போன்ற இரண்டு முக்கியமானப் பிரிவுகள் இருந்தாலும் இன்னும் குறிப்பிடத்தக்க மற்றும் ஒரு பிரிவும் உண்டு. அது காலத்தைப் பொறுத்தது. முதல் 11 அதிகாரங்களும், குறைந்தது இரண்டாயிரம் ஆண்டுகள் முதல் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் அடங்கியதாக இருக்கிறது. இரண்டாவது பகுதியான 39 அதிகாரங்களிலே 350 ஆண்டுகளை நாம் கடந்து வருகிறோம். ஆதியாகமம் 12 முதல் பழைய ஏற்பாடு முழுவதும் மற்றும் புதிய ஏற்பாடு வரையிலான காலம் 2000 ஆண்டுகள் என்று சொல்லலாம். எனவே முதல் 11 அதிகாரங்களை நாம் கடக்கும்போது காலத்தைப் பொறுத்த மட்டிலே வேத புத்தகத்தின் காலத்திலே பாதி காலத்தை நாம் அங்கே கடந்து விடுகிறோம்.

இந்தக் காரியத்தை உங்கள் மனதும் இருதயமும் கவனிக்கும்போது ஏதோ ஒரு முக்கியமான காரணத்திற்காகத்தான் இந்த முதல் பகுதியை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனாலும் வேதத்தின் முதல் பகுதிக்கு தேவன் முக்கியத்துவம் கொடுக்கிறாரா, இரண்டாவது பகுதிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாரா என்று சிந்திப்போம் என்றால் இரண்டாவது பகுதியையே முக்கியத்துவப் படுத்துகிறார் என்று சொல்லலாம்.

முதலாவது பகுதி இந்த பூமியைக் குறித்தும், சிருஷ்டிப்பைக் குறித்தும் நமக்கு எடுத்துச் சொல்கிறது. ஆனால் இரண்டாவது பகுதி மனிதனைக் குறித்தும்,, தேசங்களைக்

www.Radio882.com

குறித்தும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் நமக்குக் கற்றுக் கொடுக்கிறதாயிருக்கிறது. தாம் படைத்த முழு உலகத்தைக் காட்டிலேயும் தேவன் ஆபிரகாமைக் குறித்து மிக கரிசனை உள்ளவராக இருந்தார்.

அருமையான சகோதரனே, அருமையான சகோதரியே, தேவாதி தேவன் தாம் படைத்த இந்த உலகத்தை விட உங்களைக் குறித்து மிக அக்கறையுள்ளவராக இருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். தேவன் இயற்கையிலே இவ்வளவு காரியங்களைப் படைத்திருக்கிறாரே. ஆகாய மண்டலத்திலே எத்தனையோ காரியங்கள் இருக்கின்றனவே என்று நீங்கள் யோசிக்கலாம். ஆனால் அவை எல்லாவற்றையும் விட அவர் உங்களைக் குறித்து மிகவும் அக்கறையுள்ளவராக இருக்கிறார்.

இதைக் குறித்து மேலும் விவரமாகச் சொல்லவேண்டுமென்றால், நான்கு சுவிசேஷங்களிலே உள்ள 89 அதிகாரங்களிலேயும் மொத்தம் 4 அதிகாரங்களிலே இயேசு கிறிஸ்துவின் முதல் 30 ஆண்டு வாழ்க்கைக் காலம் சொல்லப்பட்டுவிட்டது. மீதமான 85 அதிகாரங்களிலேயும் அவருடைய மூன்றரை ஆண்டுக்கால ஊழியமே விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல 27 அதிகாரங்களிலே அவருடைய வாழ்க்கையின் இறுதி எட்டு நாட்களைக் குறித்து நாம் அறிந்து கொள்கிறோம். அப்படியென்றால் பரிசுத்த ஆவியானவர் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா? ஆம் இறுதிப் பகுதிக்கு அவர் முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்கிறீர்கள். ஏனென்றால் இயேசு கிறிஸ்துவுடைய இறுதி எட்டு நாட்கள் 27 அதிகாரங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றன. அவை என்ன? அதுதான் அவருடைய மரணத்தைக் குறித்தும், அடக்கத்தைக் குறித்தும், உயிர்தெழுதலைக் குறித்தும் நாம் வாசிக்கும் பகுதி. அதுதான் சுவிசேத்தின் முக்கியமானப் பகுதி. தேவன் நமக்கு சுவிசேஷங்களைக் கொடுத்திருப்பதின் முக்கிய நோக்கமே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதை நாம் விசுவாசிக்கும்படியாகவும், நாம் நீதிமான்களாக்கப்படும்படி அவர் உயிரோடு எழுப்பப்பட்டார் என்பதை அறிந்து கொள்ளவேண்டும் என்பதே. இதுதான் மிக மிக முக்கியமான சத்தியம்.

ஆதியாகமம்தான் வேதப் புத்தகத்தின் விதைப்பகுதி என்று சொல்லலாம். இங்கேயே நாம் எல்லாவற்றின் ஆரம்பத்தையும், அதற்கான காரணத்தையும், அனைத்தின் பிறப்பிடத்தையும் குறித்து நாம் பார்க்கிறோம். ஒரு ரோஜா மலரின் அழகிய மொட்டுபோல ஆதியாகமம் இருக்கிறது. ஏனென்றால் இது விரிந்து திறக்கும்பொழுதுதான் வேதத்தின் மற்ற பகுதிகளும் நமக்கு வெளிப்படுத்தப்படுகின்றன. சத்தியமானது ஒரு சிறு உயிர் அணுவைப்போல அங்கே இருக்கிறது. ஆதியாகமத்தைப் பகுதி பகுதியாக நாம் பிரிக்கவேண்டுமென்றால், குறிப்பாகக் குடும்பங்களின் அடிப்படையிலே நாம் பிரிக்கலாம். ஆதியாகமம் 1ஆம் அதிகாரம் 1ஆம் வசனத்திலிருந்து 2ஆம் அதிகாரம் 6ஆம் வசனம்

வரை வானமும் பூமியும் உண்டான சம்பவங்களை நாம் வாசிக்கிறோம். அடுத்ததாக ஆதியாகமம் 2ஆம் அதிகாரம் 7ஆம் வசனம் முதல் 6ஆம் அதிகாரம் 8ஆம் வசனம் வரை ஆதாமின் சந்ததியைக் குறித்துப் பார்க்கிறோம். ஆதியாகமம் 6ஆம் அதிகாரம் 9 முதல் 9ஆம் அதிகாரம் 29ஆம் வசனம் வரை நோவாவின் சந்ததியைக் குறித்துப் பார்க்கிறோம். ஆதியாகமம் 10ஆம் அதிகாரம் 1 முதல் 11ஆம் அதிகாரம் 9ஆம் வசனம் வரை நோவாவின் குமாரரின் சந்ததியைக் குறித்து வாசிக்கிறோம். ஆதியாகமம் 11ஆம் அதிகாரம் 10 –12 வசனங்களிலே சேமுடைய குமாரரின் வம்சத்தைக் குறித்துப் பார்க்கிறோம். ஆதியாகமம் 11 : 27 முதல் 25 : 15 வரை தேராகுவின் வம்ச வரலாறை நாம் பார்க்கிறோம். ஆதியாகமம் 25 : 12–18 வரை இஸ்மவேலின் வம்சத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம். ஆதியாகமம் 25 : 19 முதல் 35 : 29 வரை ஈசாக்கின் சந்ததியைக் குறித்து நாம் வாசிக்கிறோம். ஆதியாகமம் 36 : 1 முதல் 37 : 1 வரை ஏசாவின் சந்ததியைக் குறித்து வாசிக்கிறோம். ஆதியாகமம் 37 : 2 முதல் 50 : 26 வரை யாக்கோபின் வம்சங்களைக் குறித்து நாம் பார்க்கிறோம்.

ஆதியாகமம் குடும்பங்களின் புத்தகம் என்று சொல்லலாம். இது மிக அற்புதமான புத்தகம். இப்பொழுது நாம் பிரித்த பகுதிகள் மட்டும் அல்லாமல் இன்னும் சிறிய சிறிய பகுதிகளாகவும் ஆதியாகமத்தை நாம் பிரிக்கலாம்.

இப்பொழுது ஆதியாகமம் 1ஆம் அதிகாரத்தை நாம் பார்போம். இங்கே, அண்ட சராசரங்களும் படைக்கப்படுதல் குறித்து, பூமியைக் குறித்து, பகல், இரவு என்றும், நாள் ஒன்று, நாள் இரண்டு, என்றும் பிரிக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல தொடர்ந்து ஒவ்வொரு நாளும் எந்தெந்த காரியங்கள் சிருஷ்டிக்கப்பட்டன என்பதைக் குறித்தும் நாம் பார்க்கப் போகிறோம். மிருகங்களுடைய வாழ்க்கை, மனிதனுடைய சிருஷ்டிப்பு இவற்றையும் நாம் கவனிக்கப் போகிறோம்.

ஆதியாகமம் 1

இதுவரை உலகத்திலே கூறப்பட்டுள்ள எல்லா வாக்கியங்களிலேயும் மிகவும் சிறப்பான ஒரு வாக்கியம் இது என்று சொல்லலாம். அதே சமயம் நாம் வாழும் இந்தகாலத்திலே சவாலை சந்திக்கும் ஒரு வாக்கியமும் இது என்று நாம் கூறலாம். சிருஷ்டிப்பைக் குறித்து நமக்கு இருக்கிற ஒரு வாக்கியம் இதுதான். இதைத் தவிர மற்றப் பகுதிகளிலே நாம் மிருகங்களை சிருஷ்டித்ததைக் குறித்தும், மனிதனை சிருஷ்டித்ததைக் குறித்தும், பின்னால் வரும் வசனங்களிலே நாம் கற்றுக்கொள்கிறோம். ஆனால் சிருஷ்டிப்பின் சரித்திரத்தைப் பரிபூரணமாகக் கூறும் முக்கியமான வசனம் இதுதான். இது மிகவும் சுருக்கமான கதை என்று சொல்லலாம்.

பத்திரிக்கை ஆசிரியர் ஒருவர் தனது நிருபர்களிலே ஒருவர் அதிகமாக எழுதிக்கொண்டு இருந்த ஒரு காரியத்தைக் கவனித்து விட்டு, இதை நீங்கள் சுருக்கமாக

www.Radio882.com

எழுதிவிடலாமே இத்தனை வார்த்தைகள் எதற்கு என்று சொல்லிவிட்டு, ஆதியாகமத்திலே உலக சிருஷ்டிப்பைக் குறித்தே 272 வார்த்தைகள்தான் சொல்லப்பட்டிருக்கின்றன என்றும் கூறினார். அதற்கு அந்த நிருபர் சொன்ன காரியம் என்ன தெரியுமா, சரி நீங்கள் சொல்வது உண்மைதான் ஆனால் மேலும் 200 வார்த்தைகளில் அதிகமாக அதைச் சொல்லியிருப்பார்கள் என்றால் இன்றைக்குக் காணப்படும் எத்தனையோ கருத்து வேற்றுமைகளுக்கும், வாக்குவாதங்களுக்கும் இடம் இல்லாமல் இருக்குமே என்று கூறினாராம்.

ஆம், அருமையான சகோதரனே, சகோதரியே, தேவன் நமக்கு சிருஷ்டிப்பைக் குறித்து சுருக்கமான ஒரு காரியத்தைத்தான் கொடுத்திருக்கிறார். இந்தப் பகுதியை அவர் நமக்குக் கொடுக்கும்போது, அவருடைய உள்ளத்திலே என்ன எண்ணியிருப்பார் என்ற கேள்வி நமக்கு எழும்புகிறது. இதை ஆக்கியோனின் எதிர்பார்ப்பு அல்லது காரணம் என்ன? உலக அமைப்பைக் குறித்து நமக்கு கற்றுகொடுப்பதற்கு எழுதப்பட்டதா? இந்தபகுதியைக் குறித்து அநேக கருத்து வேறுபாடுகளும் வாக்கு வாதங்களும் இருக்கின்றன.

முன்பு ஒரு காலத்திலே, கலிபோர்னியா என்று சொல்லப்படும் இடத்திலே பள்ளி பிள்ளைகளுக்கு உலகம் உருவாக்கப்பட்ட இந்த வேதத்திலே கூறப்பட்டிருக்கிறப் பகுதி பாடப் புத்தகத்திலே இணைக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. இதைக் குறித்து சிறப்பான ஊழியர்கள் கூட சந்தோமடையவில்லை. ஏன் என்று கேட்டபொழுது அவர்கள் சொன்ன காரியம் இந்த சத்தியம் புத்தகத்திலே இணைக்கப்பட்டாலும் இதைக் கற்றுக் கொடுக்கிற ஆசிரியருடைய குணநலன் எப்படிபட்டதாயிருக்கும் என்பது நமக்குத் தெரியாது என்று கூறினார். ஆம், அவர் சொல்வது உண்மைதான். பாடப் புத்தகங்களிலே இது சேர்க்கப்பட்டிருந்தாலும் இதை கற்றுக்கொடுக்கும் அளவு விசுவாசிகளான ஆசிரியர்கள் இல்லை. பொதுவாக பள்ளிகளிலே கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களிலேயே ஒரு சிலரே இந்த சத்தியத்தை மாணவ மாணவியருக்குக் கற்றுக்கொடுக்க ஆயத்தமுள்ளவர் களாயிருக்கிறார்கள். சிருஷ்டிப்பைக் குறித்த இந்த சத்தியமானது, அநேக வேறுபட்ட கருத்துகளையும் உருவாக்குகிறதாயிருக்கிறது. மனிதன் அநேகக் காரியங்களை சுயமாய் கற்பனை செய்கிறான். இப்படிப்பட்ட கற்பனை தேவனுடைய தெளிவான சத்தத்தை அமிழ்த்துகிறதாயிருக்கிறது.

சிருஷ்டிப்பின் சத்தியத்தைக் குறித்து இரண்டு விதமான கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. விஞ்ஞானத்தின் கணிப்புப்படி இப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்று சொல்லுகிற ஒரு கூட்ட மக்கள். இரண்டாவதாக, தேவன் இப்படித்தான் செய்திருப்பார் என்று நாம் நினைக்கிறோம் என்று விஞ்ஞானத்தையும் வேத புத்தகத்தையும் முடிச்சுப்போட அவர்கள் கொடுத்த ஆலோசனையான கருத்துக்கள். இந்த இரு கூட்ட மக்களுமே தேவன் யோபுவினிடத்திலே கேட்ட கேள்வியை சிந்தித்துப்

பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறரர்கள். தேவன் கேட்டது என்ன? யோபு 38ஆம் அதிகாரம் 4ஆம் வசனத்திலே

"நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிற போது நீ எங்கே இருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி."

தேவன் மனிதனைப் பார்த்து, உலகத்தின் ஆரம்பத்தைக் குறித்து நீ ஏதேதோ பேசிக்கொண்டு இருக்கிறாயே. ஆனால் இந்த பூமிக்கு நான் அஸ்திபாரமிட்டபோது நீ எங்கே இருந்தாய் என்று உனக்கே தெரியாது என்று சொல்கிறார். உலகம் எவ்வாறு உருவானது என்பதைக் குறித்துப் பல கருத்துக்கள் உலகத்திலே நிலவலாம். அவை எல்லாவற்றையும் இரண்டு கூறாக நாம் பிரிக்கலாம். ஒன்று சிருஷ்டிப்பு. அடுத்தது இப்படி சிருஷ்டிக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்து கணிப்பு. எல்லாமே இந்த இரண்டிலே ஒன்றின் அடிப்படையிலேதான் இருக்கிறது. உலகம் தானாகவே உண்டானது என்ற கருத்தை பழங்கால விஞ்ஞானிகள் நிராகரித்தார்கள். எனவே உலகம் தானாக உண்டானதைக் குறித்து இரண்டும் இரண்டும் நான்கு என்று சொல்வது போல நாம் சொல்ல முடியாது. அடுத்ததாக ஆதி 1ஆம் அதிகாரத்தில் நாம் பார்க்கிற சிருஷ்டிப்பின் வரலாறு. இதை நாம் விசுவாசத்தினாலே ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். தேவன் அதை சிருஷ்டித்த விதத்தைக் குறித்து நமக்கு ஆச்சரியமானதாக இருக்கிறது. ஆனால் விசுவாசத்தினால் மட்டுமே நாம் அதை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம்.

எபிரெய ஆக்கியோன் விசுவாசத்தைக் குறித்து சொல்லும்போது எப்படி சொல்லியிருக்கிறான் என்பதை சற்றே கவனித்துப் பாருங்கள். எபிரெயர் 11ஆம் அதிகாரம் முதல் 3 வசனங்கள்:

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும்,காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள். விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிற வைகளால் உண்டாகவில்லையென்றும், அறிந்திருக்கிறோம்".

எனவே இந்தப் பிரச்சனையானது இன்றைக்கும் நிலவி வருகிறது. ஒன்றுமில்லாததிலிருந்து எப்படி இவையெல்லாம் உருவாக முடியும்? இதற்கான விடையை நீங்கள் சொல்ல வேண்டுமென்றால் விசுவாசத்தினாலேதான் சொல்ல முடியும். நீங்களே யூகத்திலே எதை சொன்னாலும் அது இயற்கைக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கும்.

இந்தப் பகுதியிலே நாம் சிந்தித்த சத்தியங்களின் அடிப்படையிலே இரண்டு காரியங்களை உங்கள் முன்னாலே நான் தெளிவாக வைக்க விரும்புகிறேன். முதலாவதாக அண்ட சாரசரங்களையும் ஆண்டவர் படைத்திருந்தாலும், மனிதர்களாகிய நம் ஒவ்வொருவரைக் குறித்தும் அக்கறையுள்ளவராக இருக்கிறார்.

www.Radio882.com

நீங்கள் எந்த ஊரிலே இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருந்தாலும், எந்த சூழ்நிலையிலே நீங்கள் வாழ்ந்து கொண்டிருந்தாலும், தேவன் உங்களைக் குறித்தும், அக்கறையுள்ளவராயிருக்கிறார் என்பதைக் குறித்து நினைப்பூட்ட விரும்புகிறேன். உங்கள் வாழ்க்கையைக் குறித்து தேவனுக்கு ஒரு நோக்கம் உண்டு. உங்கள் வாழ்விலே ஒரு அர்த்தம் உண்டு. ஆனால் நீங்கள் அதை அறிந்து கொண்டீர்களா அதை அறிந்திருக்கிறீர்களா? என்பதுதான் முக்கியமான கேள்வி.

இரண்டாவதாக நாம் வாசித்ததுபோல தேவனே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்பதைக் குறித்து நாம் விசுவாசிக்கும்பொழுது மற்ற பகுதிகளை விசுவாசிப்பதற்கு அது நமக்கு உதவி செய்கிறதாயிருக்கிறது.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். உலகத்தின் சிருஷ்டிப்பைக் குறித்து பலர் பலவிதமான கருத்துக்களைச் சொல்கிறார்கள். அதைக்குறித்தும் நாம் சற்றே அறிந்து கொள்வது நல்லது. இன்று சிலர் விஞ்ஞானத்தின் விடையை ஏற்றுக்கொள்வதே சிறந்தது என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பார்த்து விஞ்ஞானத்தின் விடை என்னவென்று கேட்டால் அது மாறிக்கொண்டே இருக்கிறது என்று கூறுகிறார்கள். 1806ஆம் ஆண்டிலே பேராசிரியர் லேயல் என்பவர் பிரான்ஸ் தேசத்திலே எண்பதிற்கும் அதிகமான இந்த உலகத்தின் சிருஷ்டிப்பைக் குறித்த வேதத்திற்கு புறம்பான கருத்துக்களைக் கூறினார். ஆனால் அவைகளிலே ஒன்று கூட இன்று ஒரு கருத்தாக எடுத்துக் கொள்ளப்படுகிறதில்லை.

ஆதியாகமப் புத்தகத்தை எழுதுவதற்கு தேவன் பயன்படுத்திய மனிதன்தான் மோசே விஞ்ஞான பூர்வமாக விடையளிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர் அதை எழுதாததால் இன்று சிருஷ்டிப்பைக் குறித்து இருக்கிற கருத்து வேறுபாடுகளைக் குறித்து அவர் புன்முறுவல்தான் பூத்துக் கொண்டிருப்பார். வேத வசனங்களுக்கான காரணத்தைக் குறித்து அப். பவுல் இவ்விதமாய் கூறியிருந்தார். 2 தீமோத்தேயு 3ஆம் அதிகாரம் 16, 17ஆம் வசனங்களைப் பாருங்கள்.

“ வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால்அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும்,எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்துகொள்ளுதலுக்கும். சீர்திருத்து தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது.”

அப்படியென்றால் வேத வசனத்தைப் பிதாவானவர் எழுத வைத்ததின் நோக்கம் நீதியை படிப்பிப்பதற்கு. உயிரியலையோ, பூகோளத்தையோ போதிப்பதற்காக அது எழுதப்படவில்லை. தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை காண்பிப்பதற்காக வேதாகமம் எழுதப்பட்டது. அதுமட்டுமல்ல, மனிதனைக் குறித்து தேவனுடைய எதிர்பார்ப்பு என்ன என்பதைப் புரிந்துகொள்ள எழுதப்பட்டது. குறிப்பாக மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு

என்ன செய்யவேண்டும் என்பதை அறிவிக்க எழுதப்பட்டது. ஆதியாகமத்தின் முதல் பகுதியின் மேலேயே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்ற கேள்வியை நாம் எழுதிவைக்கலாம்.

ஒரு கேள்வியை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். தேவன் உலகத்தை உருவாக்கியதின் விஞ்ஞான விளக்கத்தைக் கொடுத்திருப்பார் என்றால் மோசேயின் காலத்தில் உள்ளவர்களிலே எத்தனைபேர் அதைப் புரிந்துகொள்ள முடியும்? இக்காலத்திலே வாழும் மனிதர்களிலேயும் எத்தனைபேர் அதை அறிந்து கொள்ள முடியும்? வேதப் புத்தகம் கல்வி அறிவுபெற்ற பேராசிரியர்களுக்காக மட்டும் எழுதப்படவில்லை. ஒவ்வொரு தேசத்திலும் உள்ள சாதாரண மக்களுக்காக எழுதப்பட்டிருக்கிறது. மோசேயின் காலத்து விஞ்ஞானத்தின்படி எழுதப்பட்டிருக்கும் என்றால் அது புறக்கணிக்கப்பட்ட ஒரு புத்தகமாயிருக்கும்.

எனவே, அருமையானவர்களே பூமி உருவானதைக் குறித்து பலர் பலவிதமான விளக்கம் கொடுக்கிறார்கள். முதலாவதாக, இது ஒரு மாயை என்று கூறுகிறார்கள். ஆனால் அது உண்மையாகவே, உண்மைக்குப் புறம்பான ஒன்று. ஆனாலும் இதே கருத்துடைய மக்களும் இன்றைக்கு இருக்கிறார்கள். இன்னும் சிலர் ஒன்றுமில்லாமையிலிருந்து அது தானாக வந்தது என்று சொல்கிறார்கள். வேறு வார்த்தைகளிலே சொல்ல வேண்டுமென்றால் வேத புத்தகமும் இதைத்தான் சொல்கிறது. ஒன்றுமில்லாமையிலிருந்து தேவனுடைய கட்டளையின்படி இது உருவாகியிருக்கிறது. அப்படியென்றால் தேவன் இதை உருவாக்கியிருக்கிறார். இந்த பூமியைக் குறித்த மற்றும் ஒரு கருத்து என்னவென்றால் இது காலம் காலமாக இருக்கிறது. இதற்குத் துவக்கம் என்று ஒன்றும் இல்லை என்றும் கூறுகிறார்கள்.

நான்காவதாக பூமியானது உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது ஏற்றுக்கொள்ளப் படுகிறது. ஆனால் எப்படி உருவாக்கப்பட்டது என்பதைக் குறித்து பல்வேறு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. Ðr. Harlow Shapely என்பவர் Harward விஞ்ஞான கூடத்திலே உள்ள இயக்குநர். அவர் என்ன கூறுகிறார் என்றால், “நாம் வசிக்கும் உலகத்தைக் குறித்த எந்தச் சரியான அறிவும் இல்லாதவர்களாய் நாம் இருக்கிறோம் என்கிறார். நாம் மிகக் குறைவாகவே முன்னேறியிருக்கிறோம். ஏனென்றால் இந்த உலகத்திலே இருக்கிற ஞானமானது மிகவும் அதிகமானதாக இருக்கிறது. இருட்டிலே இருக்கும் காரியங்களைக் குறித்து நாம் பயந்து போகக்கூடாது. மரணத்தைக் குறித்தும் விநோதமாய் எண்ணக்கூடாது. அநேக வேளைகளிலே நாம் அலசி ஆராய்ந்து பார்க்கிறவர்களாக இருக்கிறோம். நாம் அறிந்திருக்கிறவைகளிலே இன்னும் அறியாதது எவ்வளவு இருக்கிறது என்பது நமக்குத் தெரியாது. வேறு வார்த்தைகளிலே சொல்ல வேண்டுமென்றால் நாம் வசிக்கிற உலகம் உருவானதைக் குறித்த இருட்டிலேதான் நாம்

www.Radio882.com

இன்னமும் இருக்கிறோம்" என்று சொல்கிறார். பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் லாரன் எஸ்லி என்பவர், "இப்பொழுது நமக்குத் தெரிந்திருக்கிறதை விட இந்த உலகமானது, எப்படி உண்டானது என்பதை நாம் அறியாதவர்களாயிருக்கிறோம். சொல்லப்போனால் ஆவிக்குரிய காரியங்களை அறிந்திருக்கிறதைவிட இந்த பொருட்களைக் குறித்த அறிவு நமக்கு இல்லை. எனவே இப்பொழுது இருக்கிற அறிவைக் கொண்டு எது எதற்கு முந்தி வந்தது என்று சொல்வோமென்றால் அது அஞ்ஞானமானக் காரியமாயிருக்கும். பூமியானது பல வகையான நிலைகளைக் கடந்து வந்திருக்கிறது. அதற்கு முந்திய நிலையைவிட ஒவ்வொரு முறையும் மாற்றம் பெற்றிருக்கிறது. மனுக்குலமும் மற்ற எல்லா உயிர்வாழ்க்கையும் காலாகாலங்களிலே மாற்றம் பெற்றதாயிருக்கிறது. ஆனால் வெளியே நாம் காணும் இந்த காட்சிகளுக்கு கீழே என்ன இருக்கிறது என்பது நமக்குத் தெரியாது. உங்கள் கேள்விக்கு நான் விடையளிக்க விரும்புகிறேன். ஆனால் என்னுடைய அறியாமையை மூடுவதற்காக நான் எவ்வளவு பெரிய வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும் அது எனக்கும் பயனில்லை. உங்களுக்கும் பயனில்லை" என்று சொல்லியிருக்கிறார். 1961ஆம் ஆண்டிலே எழுதப்பட்ட ஒரு கட்டுரையிலே உலகத்தின் ஆரம்பத்தைக் குறித்த இரகசியத்தை மனிதன் அறிந்துகொள்ளும் நிலையிலே இருக்கிறான் என்று சொல்லப்படுகிறது. அதற்குப் பின்னானக் காலங்களிலேயும் எந்த ஒரு புதிதான காரியத்தையும் நாம் அறிந்துகொள்ளவில்லை. உயிரியல் நிபுணரான எட்வின் கான்கிளின் என்பவர் உலகம் தானாக உண்டானது என்பதைக் குறித்துச் சொல்லும்போது, "உலகத்திலே உயிர் தற்செயலாய் ஏற்பட்ட ஒரு விபத்தினால் உண்டானது" என்கிறார். இதை எதற்கு ஒப்பிடுகிறார் என்றால், ஒரு அச்சகத்திலே ஏற்பட்ட விரிவாக்கத்திலே தானாக ஒரு அகராதி உருவானால் எப்படியோ அப்படி என்கிறார்.

விஞ்ஞானத்திற்கே ஒவ்வாத ஒரு காரியத்தை அந்த விஞ்ஞானி கூறினார். ஆனால் இதை அவர் கூறியது உண்மை. விண்வெளிக்குச் சென்ற விண்வெளி வீரர்களும் இந்த பூமி எப்படி உருவானது என்பதற்குக் குறைந்தது மூன்று கருத்துக்களைச் சொல்கிறார்கள். ஒன்று நிலையான நிலை, இரண்டாவதாக பெரிய மோதல் என்ற கொள்கை, மூன்றாவதாக ஆடிக்கொண்டிருக்கும் என்ற ஒரு கொள்கை. நிலையான நிலை என்னும் கொள்கை என்ன சொல்கிறதென்றால், பூமியானது இப்பொழுது இருக்கிறது. ஆனால் புதிய பொருட்கள் தொடர்ந்து உண்டாகிக் கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது.

இரண்டாவதாக டாக்டர் பம்ப் என்பவர் பெரிய மோதல் என்ற ஒரு கொள்கையை உடையவராக இருக்கிறார். கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பதாக ஏற்பட்ட ஒரு பெரிய வெடிவிபத்தினாலே இந்த உலகம் உண்டானது என்கிறார். அநேக ஆண்டுகளுக்கு முன்பாக மனிதர்களைக் குறித்துப் படித்த டாக்டர் லூயிஸ் லீக்கே என்பவர் ஆப்ரிக்காவிலே

www.Radio882.com

தொலைந்துபோன ஒரு சங்கிலியின் பகுதிகளைக் கண்டுபிடித்தேன் என்று சொல்கிறார். ஒரு மண்டையோட்டின் பகுதிகளைத் தோண்டி எடுத்து அதில் காணப்படுகிற வளர்ந்த பற்களையெல்லாம் காட்டி இது கொட்டையை உடைக்கும் மனிதன் தலை. இவன் சுமார் 6 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னதாக வாழ்ந்திருக்கிறான் என்று கூறுகிறார். இதைப்போல பல கொள்கைகளை முன்பே உடையவர்களாயிருக்கிறோம்.

அருமையானவர்களே, இன்னும் சிலர் வேறுவிதமாக பூமியின் ஆரம்பத்தைக் குறித்துச் சொல்கிறார்கள். டாக்டர் லாரன்ஸ் எஸ் டில்லன், "மனிதன் ஒரு மிருகம் அல்ல. அவன் ஒரு தாவர வகையைச் சேர்ந்தவன். பிரௌன் நிறமான கடலிருந்து வந்த ஒரு செடியில் இருந்து உண்டானவன்" என்று சொல்கிறார். அப்படியென்றால் உங்கள் தாத்தா பாட்டியம்மாவை தவறான இடத்திலே நீங்கள் தேடிக்கெண்டு இருக்கிறீர்களா? சிலர் மரத்திலிருந்து மனிதன் வந்தான் என்று சொல்கிறார்கள். இங்கே பார்த்தால் கடற்கரையிலே ஒரு கடல் செடியிலிருந்து மனிதன் வந்தான் என்று ஒருவர் சொல்கிறார்.

இப்படி ஒவ்வொருவரும் கூறும் காரியங்கள் வேடிக்கையாகவே இருக்கின்றன. அநேக ஆண்டுகளுக்கு முன்பாக பத்திரிக்கை ஒன்றிலே இவ்வாறு செய்தி வந்தது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக உலகம் எவ்வாறு உருவானது என்பதைக் குறித்து அநேக வாக்குவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் அருமையான சகோதரனே, சகோதரியே எத்தனை ஆண்டுகளானாலும் இன்னமும் எந்த விதமான தெளிவான விடையை எந்த ஒரு விஞ்ஞானக் கூடமும் கொடுக்கவில்லை. உலகம் தானே உருவானது என்பதைக் குறித்தும் எல்லா விஞ்ஞானிகளுக்குள்ளும் கருத்து ஒற்றுமை வரவில்லை. இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த Kerkut என்பவர் சொல்லும்போது, "ஒரு கொள்கைப்படி பல காலங்களாக ஒரு குறிப்பிட்ட மிருகங்களை நாம் கவனித்துக் கொண்டிருந்தால் அவைகளிலே ஏற்படும் மாற்றங்களை கவனிக்கலாம். இறுதியான புதிய உயிரினங்கள் தோன்றும். சில காரியங்களிலே சில செய்முறை பயிற்சி மூலமாகவும் இதனை நாம் கண்டுகொள்ளலாம்" என்று கூறுகிறார். இவ்வாறு கூறுவதின் உண்மையை பார்க்கும்போது இதிலே எந்தவிதமான ஆதாரமும் இல்லை. சுவீடன் நாட்டைச் சேர்ந்த Heribert Nilsson என்பவர் சொல்லும்போது கடந்த 40 ஆண்டுகளாக இதைக் குறித்து பல செய்முறை பயிற்சிகளை மேற்கொண்டும் அத்தனையும் தோல்வியடைந்துவிட்டது. உலகம் தானாக உண்டானது என்று சொல்லுகின்ற கருத்தும் ஒரு நம்பிக்கையின் அடிப்படையிலேதான் இருக்கவேண்டும் என்று சொல்லி முடிக்கிறார்.

கவனித்தீர்களா? இவரும் இறுதியாக சமய எல்கைக்குள்ளேயே கடந்து வருகிறார். ஆம், உலகம் உண்டானதைக் குறித்து வேதம் சொல்கிறதை நாம் விசுவாசத்தினாலேயே ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படி ஒவ்வொரு விஞ்ஞானியும் உலகத்தின் துவக்கத்தைக் குறித்து எழுதுகிற எழுத்தைக் குறித்து நாம் பார்ப்போமென்றால் சரியான எந்தவொரு

முடிவிற்கும் வரமுடியாது. நம்முடைய உள்ளம் திறந்து கர்த்தருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்வதே சிறந்தது. வேதம் சொல்வது என்ன? ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.

சங்கீதக்காரன் என்ன சொல்கிறான்? சங்கீதம் 8 : 3 பாருங்கள். "உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும் நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்பொழுது" என்கிறார். அதுமட்டுமல்ல, சங்கீதம் 19 : 1 லே, "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" என்று வாசிக்கிறோம். அதுமட்டுமல்ல அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் ரோம திருச்சபைக்கு எழுதும்போது, ரோமர் 1ஆம் அதிகாரம் 20ஆம் வசனத்திலே இவ்விதமாய் எழுதியிருக்கிறார். "எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தெய்வத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே உலகம் உண்டானது முதற்கொண்டு தெளிவாய் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடம் இல்லை" என்கிறார். அதுமட்டுமல்ல எபிரெயரை ஆக்கியோனும் எபிரெயர் 11ஆம் அதிகாரம் 3ஆம் வசனத்திலே என்ன சொல்கிறார் என்று பாருங்கள். "விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினாலும் உண்டாக்கப்பட்டதென்றும் இவ்விதமாய் காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லை என்றும் அறிந்திருக்கிறோம்." எனவே சிருஷ்டிப்பை விசுவாசத்தினாலே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒன்றுமில்லாமை யிலிருந்து எப்படி நாம் ஒன்றை உருவாக்க முடியும் என்பதை விஞ்ஞானம் கூட விளக்க முடியாது. தேவன் அவ்வண்ணமாகவே உருவாக்கினார். எந்த ஒரு மனிதனாலும் உலகம் எப்பொழுது சிருஷ்டிக்கப்பட்டது என்பதையும் கூற முடியாது. உலக சிருஷ்டிப்பைக்குறித்து சொல்லப்படும் எல்லாக் காரியங்களையும் நாம் ஆதியாகமத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற சத்தியத்திலே ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது வேத வசனங்கள் மேலோங்கி நிற்கின்றன. அநேக தேசங்களிலே உலகம் இவ்வாறு உருவானது என்று கதைகள் பல உண்டு. பாபிலோன் தேசத்திலே தோண்டி எடுக்கப்பட்ட களிமண் பலகைகளிலே சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால் ஒரு குழப்பமான சூழ்நிலையில் இருந்து பூமி உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேத வசனத்திலே உலகத்திலிருந்து ஆரம்பமாகிறது. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று சொல்கிறது. அந்த பாபிலோனிய எழுத்துக்களின்படி வானத்திலே மிதந்து கொண்டிருக்கிற எல்லாம் ஒவ்வொரு கடவுள்களாம். இந்தக் கோள்கள் எல்லாமே திடப்பொருள் என்றுதான் வேதம் சொல்கிறது. பாபிலோனிய அந்த எழுத்துக்களின்படி பல கடவுள்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

www.Radio882.com

ஆனால் வேதத்திலோ ஒரே ஒரு கடவுளைக்குறித்தே வாசிக்கிறோம். பாபிலோனிய எழுத்துப்படி பூமியானது சிறந்த கைவினைத்திறனுள்ள ஒருவர் உருவாக்கியது என்று சொல்லப்படுகிறது. ஆனால் வேதத்தில், தேவன் பேசினார். அவர் சொல்லும்பொழுது அத்தனையையும் உண்டானது என்று வாசிக்கிறோம். நாம் அறிந்திருக்கிற விஞ்ஞானத்தின் அடிப்படைக்கும் பாபிலோனின் கருத்தும் ஒத்துப்போகவில்லை. ஆனால் வேத வசனத்திலே நாம் பார்க்கிற செய்தியானது விஞ்ஞானத்தோடும் ஒத்துப்போகிறதாக இருக்கிறது.

விசுவாசிகள் உலகம் தானாக உண்டானது என்பதை ஏற்றுக்கொள்கிறதில்லை. ஏனென்றால், அந்தக் கருத்துப்படி அது தேவனையும் அவருடைய வெளிப்படுத்து தலையும் நிராகரிக்கிறதாயிருக்கிறது. அந்தக் கருத்து பாவத்திலே அழிந்துபோன மனிதனைக் குறித்து சொல்கிறதில்லை. அந்த கருத்து இயேசு கிறிஸ்து கன்னிகையின் வயிற்றிலே பிறந்தார் என்கிறதை ஏற்றுக்கொள்கிறதில்லை. உலகம் தானாக உண்டானது என்ற கொள்கையிலே மூன்றுவிதமான கொள்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாததாக இருக்கிறது. முதலாவதாக ஒன்றுமில்லாமைக்கும் ஏதோ ஒன்று இருப்பதற்கும் உண்டான இடைவெளியை குறித்த விளக்கம் சொல்ல முடியாது. இரண்டாவதாக ஒன்றுக்கு ஜீவன் எப்படி வந்தது என்பதை அது விவரிக்க முடியாது. மூன்றாவதாக உலகத்திலே உண்டான ஜீவனுக்கும், மனுக்குலத்திற்கும் உண்டான தொடர்பைக் குறித்து அது விளக்கம் கொடுக்க முடியாது. அதாவது. தான் நினைத்ததைச் செய்யக்கூடிய தீர்மானம் எடுக்கக்கூடிய மனிதனைக் குறித்த விளக்கம் அதனால் கொடுக்கமுடியாது. உலகம் சிருஷ்டிக்கப் பட்டதைக் குறித்து பலர் பலவிதமாக கேள்விகளை எழுப்பும்பொழுது சிலர் யார் சிருஷ்டித்தார் என்று கேட்கிறார்கள். எப்பொழுது சிருஷ்டிக்கப்பட்டது என்று கேட்கிறார்கள். அதுமட்டுமல்ல ஏன் இது சிருஷ்டிக்கப்பட்டது என்றும் கேட்கிறார்கள்.

அருமையான சகோதரனே சகோதரியே இந்த மூன்றாவது கேள்வி மிக முக்கியமானது. தேவன் நம்முடைய மகிழ்ச்சிக்காகவே இந்த பூமியை சிருஷ்டித்தார் என்று வேதம் நமக்குத் தெளிவாகச் சொல்கிறது. அதை உருவாக்குவதைக் குறித்த சரியான எண்ணம் அவருக்கு இருந்தது. அதைக் குறித்து அவர் மகிழ்ச்சியடைந்தார். வேத புத்தகத்தின் இறுதி புத்தகத்திலே இதைக் குறித்த ஒரு குறிப்பை நாம் பார்க்கிறோம். கவனியுங்கள் வாசிக்கிறேன். வெளி. 4ஆம் அதிகாரம் 11ஆம் வசனம்:

“கர்த்தாவே தேவரீர் மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்கிறதற்கு பாத்திரராயிருக்கிறீர் நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர் உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்ட வைகளுமாயிருக்கிறது என்றார்கள்.”

தேவனே உலகத்தை உண்டாக்கினார். ஏனென்றால் அவர் உண்டாக்க வேண்டும்

என்று சித்தம் கொண்டார். அவருடைய மன மகிழ்ச்சிக்காகவே அதை அவர் செய்தார். உங்களுக்கு ஒரு வேளை இந்த உலகம் பிடிக்காமலிருக்கலாம். ஆனால் அவர் இதை உருவாக்கினார். அண்ட சராசரங்களிலேயும் நான் வாழப்போகிற இந்த உலகத்தை எங்கே வைக்க வேண்டும் என்று ஆண்டவர் என்னிடத்திலே கேட்கவில்லை. நான் இந்தியாவிலே பிறக்க வேண்டுமா அல்லது வேறு நாட்டியே பிறக்க வேண்டுமா என்று ஆண்டவர் என்னிடத்திலே கேட்கவில்லை.

அருமையான சகோதரனே, சகோதரியே நான் மீண்டும் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிற சத்தியம் என்னவென்றால், தேவன் அவருடைய மனமகிழ்ச்சிக்காகவே இந்த பூமியை உண்டாக்கினார். இரண்டாவதாக அவருடைய நாம மகிமைக்காக இதை அவர் உண்டாக்கினார். ஆதியிலே அவர் சிருஷ்டித்த சிருஷ்டிப்பானது அவருடைய துதியைப் பாடுகிறதாயிருந்தது. அதிகாலை நட்சத்திரங்கள் இணைந்து அவரைப்பாடியது. கடவுளுடைய குமாரர்கள் மகிழ்ச்சியினாலே முழங்கினார்கள். யோபு 38 : 7, "அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி தேவபுத்திரர்கள் எல்லாரும் கெம்பீரித்தார்களே"

கவனித்தீர்களா? அவருடைய நாம மகிமைக்காக இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்டது. ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தையும் கவனியுங்கள். ஏசாயா 43 : 7, "நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து என் நாமம் தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன்."

கர்த்தருடைய வசனம் தெளிவாய் சொல்கிற காரியம் என்ன? அவரோடே கூட ஐக்கியப்படும்படியாய் தேவன் இந்த உலகத்திலே மனுக்குலத்தையும் சிருஷ்டித்தார். எனவே சுயாதீனமுள்ள மனிதனாக அவனை அவர் உண்டாக்கினார். இயந்திர மனிதர்களை ஆண்டவர் உண்டாக்கியிருக்கலாம். ஒரு பொத்தானை அழுத்தினால் எல்லாம் அவருக்கு முன்பாக வணங்கும்படியான இயந்திர மனிதனை அவர் உண்டாக்கியிருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட மனிதர்கள் தேவனுக்குத் தேவையில்லை. அவர் படைத்த மனிதன் விடுதலை உணர்வுள்ளவனாக அவரை தொழுதுகொள்வதற்கும், அவரை நேசிப்பதற்கும் அவருக்கு சேவை செய்வதற்கும், தானே தெரிந்தெடுத்து தீர்மானம் செய்யும் மனிதனாகவேப் படைத்தார்.

அருமையான நண்பனே, இந்தவிதமான அவிசுவாசங்களுக்கு மத்தியிலேயும், தேவதூஷணங்களுக்கு மத்திலேயும், நம்மை சுற்றியிக்கிற தேவனுக்கு விரோதமான எல்லாக் காரியங்களின் மத்திலேயும் ஒரு மனிதனாக நீங்கள் செய்யக்கூடிய சிறந்த காரியம் என்னவென்றால் வெளிப்படையாக இயேசு கிறிஸ்துவை தெரிந்துகொள்ள வேண்டியதுதான். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின சர்வவல்லமையுள்ள

www.Radio882.com

தேவனாகிய தேவனை விசுவாசிப்பதும், அவருடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதும், நம்முடைய இருதயங்களிலே ஏற்றுக்கொள்வதுமே இந்த உலகத்திலே நீங்களும் நானும் செய்யக்கூடிய மகிமையான ஒரு சிலாக்கியமாகும். நம்மைச் சுற்றி பேச்சு உரிமைகளைக் குறித்து நாம் கேள்விப்படுகிறோம். இதில் பலவகையான விடுதலையைக் குறித்து நாம் கேள்விபடுகிறோம். ஆனால் இப்படி விடுதலையைக் குறித்து நம்மைச் சுற்றிப் பேசுகிற கூட்டமானது விடுதலை என்றால என்ன என்பதை அறியாமல் இருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம்முடைய வாழ்க்கையிலே நாம் தெரிந்துகொள்ளும்பொழுது உண்மையான விடுதலையை உடையவர்களாக இருக்கிறோம்.

ஆதியாகமம் : 1 : 1

இது ஒரு மிக பிரம்மாண்டமான வசனம். மிக அற்புதமான ஒரு வாக்கியம். இதுவே வேத புத்தகத்திற்குள்ளே நாம் கடந்து செல்வதற்கான நுழைவாயில். தேவனே சிருஷ்டிகர் என்பதை நீங்கள் விசுவாசிக்க வேண்டும். எபிரெயர் 11ஆம் அதிகாரம் 6ஆம் வசனத்திலே 'தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்று விசுவாசிக்க வேண்டும்' என்று பார்க்கிறோம். ஆம், ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். ஆதியிலே என்று சொல்லும் அந்த ஆரம்ப நாளுக்கான தேதியை நாம் குறிக்க முடியாது. இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக இருக்கலாம். ஆனால் எவ்வளவு ஆண்டுகளுக்கு முன்பாக என்பது யாருக்குத் தெரியும்? நிச்சயமாக எந்த மனிதனுக்கும் தெரியாது.

'தேவன் சிருஷ்டித்தார்' என்று வாசிக்கிறோம். இந்த சிருஷ்டித்தார் என்ற வார்த்தையானது எபிரெய வாக்கியத்திலே சொல்லப்படுகிறது. ஒன்றுமில்லாமையிலிருந்து உருவாக்கப்பட்டது என்பது அதன் பொருள். இந்த வார்த்தை ஆதியாகமம் முதலாம் அதிகாரத்திலே மூன்று முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனென்றால் தேவனுடைய மூன்று சிருஷ்டிப்புக்களைப் பற்றி மட்டுமே அங்கு நாம் வாசிக்கிறோம். முதலாவதாக ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை உருவாக்கிய நிகழ்ச்சி. அதுதான் ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்பது.

இரண்டாவதாக ஜீவனை தேவன் உருவாக்கியது. ஆதியாகமம் 1 : 21 லே, 'தேவன் மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜெனிப்பிக்கப்பட்ட சகல நீர்வாழும் ஜந்துகளையும் சிறகுள்ள ஜாதிஜாதியான சகலவித பட்சிகளையும் சிருஷ்டித்தார்' என்று வாசிக்கிறோம். நீரிலே வாழ்கிற திமிங்கலங்கள் மற்றும் எல்லாவிதமான மிருக ஜீவன்களையும் சிருஷ்டித்ததைப் பற்றி இங்கே பார்க்கிறோம்.

மூன்றாவதாக தேவன் மனிதனை சிருஷ்டித்தார் என்று வாசிக்கிறோம். ஆதியாகமம் 1ஆம் அதிகாரம் 27ஆம் வசனத்திலே, 'தேவன் தம்முடைய சாயலாக மனிதனை

www.Radio882.com

சிருஷ்டித்தார். அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்' என்று வாசிக்கிறோம். தேவனுடைய செய்கையின்படி கொஞ்சம் கொஞ்சமாக எல்லாமே உருவானது என்பது இதற்கான விடையல்ல. அப்படி கூறும்போது இயற்கையாக ஒவ்வொன்றாய் உருவாகி இறுதியிலே மனிதனும் தானாக வந்தான் என்று கூறுவதற்கு இணையாகும். இதை நம்புகிறவர்கள் அநேகக் காலக் கட்டங்களிலே இந்த செயல்பாடு தானாக நடந்தது என்று நினைக்கிறார்கள்.

ஆனால் அது உண்மை என்று நான் விசுவாசிக்கவில்லை. ஒவ்வொரு குறிப்பிட்ட கால கட்டத்திலேயும் தேவன் ஒன்றை சிருஷ்டித்தார் என்றுதான் வேதத்திலே வாசிக்கிறோம். சாயங்காலமும், விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று. இரண்டாம் நாளாயிற்று. மூன்றாம் நாளாயிற்று என்று வாசிக்கிறோம். இப்படிக் கூறுவதினாலே மிகவும் நீண்ட காலங்களிலே, எல்லாம் தானாக உண்டானது என்று சொல்ல முடியாது. சுமார் 12 மணிநேரம் இரவு நேரமும், 12 மணிநேரம் பகல் நேரமுமாகித்தான் ஒரு நாளாயிற்று என்று வாசிக்கிறோம்.

ஆம் தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். தேவனுடைய எல்லா படைப்புக்களிலிருந்தும் பூமி பிரத்தியேகப்பட்டிருக்கிறது. காரணம் என்ன? இதுதான் மனுகுலத்தின் வீடு. மனிதன் இங்கேதான் வைக்கப்பட்டிருக்கிறான். அவனைக் குறித்தே நாம் கருத்துள்ளவர்களாயிருக்கிறோம். ஏனென்றால் நாம் ஒவ்வொருவருமே இந்த சிருஷ்டிப்பின் ஒரு பங்காயிருக்கிறோம்.

அருமையான சகோதரனே, சகோதரியே, நாம் ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டிய ஒரு உண்மை என்னவென்றால், நாம் ஒவ்வொருவருமே தேவனுடைய சிருஷ்டிப்பாயிருக்கிறோம். அவருக்கு நாம் கடனாளிகளாயிருக்கிறோம். பல ஆண்டுகளுக்கு முன்பதாக, ஹெர்பர்ட் ஸ்பென்சர் என்பவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.'நாம் அறிந்து கூறமுடியாத காரியங்களைப் பகுத்து நாம் அறிந்துகொள்ளக் கூடியவை காலம், இடம், பொருள், சக்தி, அசைவு என்கிறார். சட்டம் படித்திருந்த ஒரு படைவீரனிடத்திலே ஜார்ஜ் டீவே என்பவர் பேசிக் கொண்டிருந்தார். தனது சாட்சியைப் பகிர்ந்து கொள்வதே அவருடைய நோக்கமாய் இருந்தது. அவ்வாறு பேசும்பொழுது, இந்தப் படைவீரன் ஹெர்பர்ட் ஸ்பென்சர் கூறியதை எடுத்துக்கூறிக்கொண்டு இருந்தான். அப்பொழுது ஜார்ஜ்,'ஹெர்பர்ட் ஸ்பென்சர் சொல்வதும், வேதப்புத்தகம் சொல்வதும் ஒரே காரியம்தான் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?' என்று கேட்டார். அப்பொழுது அந்த படைவீரன், 'அப்படியா?' என்று சொல்லி கண்களை அகலத் திறந்து ஆச்சரியத்தோடு கேட்டான், 'அது எப்படி?' அதற்கு ஜார்ஜ் கொடுத்த பதில் என்ன தெரியுமா? 'ஸ்பென்சர் நேரத்தைக் குறித்தும், இடத்தைக் குறித்தும், பொருளைக் குறித்தும், சக்தியைக் குறித்தும், அசைவைக் குறித்தும்

www.Radio882.com

பேசியிருக்கிறார். வேதப் புத்தகத்திலே ஆதியாகமம் முதல் இரண்டு வசனங்களிலும் நாம் பார்க்கிறோம். ஆதியிலே என்று சொல்லும்போது ஒரு காலக் கட்டத்தைக் குறிக்கிறது. வானத்தையும் பூமியையும் தேவன் சிருஷ்டித்தார் என்று சொல்லப்படுவது இடத்தையும், பொருளையும் சொல்கிறது. பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது. தேவ ஆவியானவர் என்று சொல்லும்போது அது சக்தியைக் குறிக்கிறது. அடுத்ததாக ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் என்று வாசிக்கிறோம். அது அசைவைக் குறிக்கிறது. ஸ்பென்சர் என்பவர் 50 ஆண்டு காலம் எடுத்து இந்த உண்மையான விதியை விவரித்திருக்கிறார். ஆனால் இங்கே 50 நொடிப் பொழுதிற்குள்ளே நாம் ஆதியாகமம் முதல் இரண்டு வசனத்திலே இந்த பெரிய உண்மையை வாசிக்கிறோம்' என்று விளக்கிக் காட்டினார். அந்தப் படை வீரனானவன் வேறு எந்த விதத்திலேயும் வாக்குவாதம் செய்யாமல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசித்தான்.

அருமையான சகோதரனே, சகோதரினே, இந்தப் பெரிய அடிப்படை சத்தியங்களை தேவன் ஆதியாகமம் முதல் இரண்டு வசனங்களிலே வெளிப்படுத்திவிட்டார். அப்படியென்றால் நாம் அதையும் அறிந்துகொள்ள வேண்டியது எவ்வளவு முக்கியமானது.

ஆதியாகமம் 1 : 2

முதலாவது வசனத்திற்கும், இரண்டாவது வசனத்திற்கும் இடையிலே பெரிய ஒரு அழிவு, குழப்பம் ஏதோ ஏற்பட்டிருக்கிறது. நாம் கவனமாய் கவனிக்கும்போது இதற்கான சான்று காணப்படக் கூடியதாக இருக்கிறது. முதலாவதாக இந்த மகத்துவமான சிருஷ்டிப்பை சற்றே நோக்கிப் பாருங்கள். இங்கே ஏதோ நடந்திருக்கிறது. மனிதன் சந்திரனுக்குப் போய் வந்த பிறகுதான் அங்கே மனிதன் வாழமுடியாத ஒரு வெற்று இடம்தான் இருக்கிறது என்பதை அறிந்துகொண்டான். தேவன் சிருஷ்டித்திருந்த சிருஷ்டிப்பிலே திடீரென ஏதோ ஒரு பெரிய விபத்து ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக இது பூமியைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் இங்குதான் மனிதன் வாழ்கிறான். எனவே பூமியைக் குறித்துத்தான் பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருக்கிறது என்று வாசிக்கிறோம்.

ஆழத்தின்மேல் இருள் இருந்தது என்பது, அங்கே தேவனுடைய பிரசன்னம் இல்லாமல் இருந்ததை வெளிப்படுத்துகிறது. அதுமட்டுமல்ல, ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது என்பது சிறப்பான ஒரு வெளிப்படுத்துதல்; ஒழுங்கின்மை என்பது எபிரெய வார்த்தையிலே "தோகு" என்பதாகும். இதன் பொருள் என்னவென்றால், அழிவுகள் அல்லது வெற்றிடம் என்று கூறலாம். அடுத்ததாக வெறுமையாக இருந்தது என்று வாசிக்கிறோம். இதற்கான எபிரெய வார்த்தை "போகு" என்பதாகும். இதுவும் ஒன்றுமில்லாத ஒரு நிலைமையைக் குறிக்கிறது. இந்த இடத்திலே ஏசாயா 45 : 18ஆம்

www.Radio882.com

வசனத்தையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'வானங்களைச் சிருஷ்டித்து பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவகப்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே கர்த்தர், வேறொருவர் இல்லை'. இங்கே கர்த்தர் சொல்கிறது என்ன? வெறுமையாயிருக்க பூமியை சிருஷ்டிக்கவில்லை என்று சொல்கிறார். வெறுமை என்பதற்கான எபிரெய வார்த்தை "தோகு". இதே வார்த்தையைத் தான் ஆதியாகமம் 1ஆம் அதிகாரம் 2ஆம் வசனத்திலேயும் நாம் பார்க்கிறோம். தேவன் ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் உலகத்தைப் படைக்கவில்லை. அங்கே ஒரு குழப்பத்தை அல்ல, ஒரு முழுமையான ஒரு உலகத்தையே அவர் படைத்திருந்தார். இதைத்தான் ஏசாயாவும் தெளிவுபடுத்த விளைகிறார். தேவன் ஒழுங்கின்மையும் வெறுமையையும் படைக்கவில்லை. ஆனால் உலகமானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது.

மனிதர்கள் குடியிருக்கும் படியாகவே தேவன் உலகத்தை சிருஷ்டித்தார். அதுமட்டுமல்ல, தேவனே மீண்டுமாக வந்து, இந்தக் குழப்பத்தைச் சீராக்கி, மனுக்குலம் வசிக்கத்தக்க ஒரு இடமாக மாற்றினார். விஞ்ஞானத்தின் வளர்ச்சியடைந்த இந்தக் காலத்திலே வாழ்கிற நாம் அறிந்து கொள்கின்ற உண்மை என்னவென்றால் பூமி மட்டுமே மனிதர்கள் வசிக்கத்தக்க ஒரு இடமாக இருக்கிறது என்பதுதான். இங்கே ஆதியாகமம் என்ன சொல்கிறது? பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிற்று. அதாவது சந்திரனைப் போல மனிதன் வசிக்க முடியாத ஒரு இடமாயிற்று. அந்த காலங்களில்தான் தேவ ஆவியானவர் ஜலத்தின் மேலே அசைவாடிக் கொண்டு இருந்தார். அண்ட சராசரங்களுமே இப்படிப்பட்ட ஒரு குழப்பமான சூழ்நிலைக்கு வந்தது என்று சொல்லலாம். இந்த மாபெரும் அழிவு என்ன? இதை நாம் யூகிக்கத்தான் செய்யலாம். ஆதாமுக்கு முந்தைய ஏதோ ஒரு படைப்பு அங்கே இருந்திருக்கிறது. விடியற்காலையின் மகனான லூசிபர் பரலோகத்திலிருந்து விழுந்த நிகழ்ச்சி தொடர்பானதாய் இருக்கலாம். நாம் சாத்தான், பிசாசு என்று சொல்கிறோமே, அவனோடு தொடர்புள்ள ஒன்றாய் இருக்கலாம். ஆனால் இந்தக் காரியங்களைக் குறித்ததான விளக்கத்தை தேவன் நமக்குத் தரவில்லை. மிகக் குறைவான கருத்துக்களையே தேவன் நமக்கு ஆதியாகமத்திலே வெளிப்படுத்தியிருக்கிறார்.

இரண்டாவது வசனத்தின் பின்பகுதியிலே நாம் பார்ப்பது என்ன? தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல அசைவாடிக் கொண்டு இருந்தார். அசைவாடிக் கொண்டிருப்பது என்றால், கோழி தன் குஞ்சுகளை அரவணைத்துக் காப்பதுபோல பரிசுத்த ஆவியானவர் பூமியைக் காத்துக் கொண்டிருந்தார். அவர் மீண்டும் மீண்டும் செய்யும் ஒரு பணியைத்தான் இங்கேயும் செய்து கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். அதாவது மீண்டும் புதுப்படைப்பு செய்தல். அவர் இந்த ஒழுங்கின்மையான சூழ்நிலைக்குள்ளே வந்து மீண்டும் புதுப்பித்து சிருஷ்டிக்கிறார்.

www.Radio882.com

ஆம் அருமையான சகோதரனே, சகோதரியே, இதுதான் பரிசுத்த ஆவியானவருடைய பணியாயிருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியது ஞாபகம் இருக்கிறதா? யோவான் 3ஆம் அதிகாரம் 5ஆம் வசனத்திலே, 'ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான்' என்று வாசிக்கிறோம். தண்ணீர் என்பது தேவனுடைய வார்த்தை. தண்ணீர் என்று சொல்லும்போது அதை ஞானஸ்நானத்திற்கு நீங்கள் ஒப்பிடுவீர்கள் என்றாலும் சரிதான். ஆனால் தண்ணீர் என்றால் அது கர்த்தருடைய வார்த்தை. பரிசுத்த ஆவியானவரே அதனை ஆக்கியோன். இந்த காரியங்களை நாம் எப்பொழுதுமே தெளிவாக அறிந்தவர்களாயிருக்க வேண்டும். அடுத்ததாக பூமி சிருஷ்டிக்கப்பட்டதை நாம் சிந்திப்போம். அண்ட சராசரங்களும் சிருஷ்டிக்கப்பட்டதைக் குறித்து முதல் வசனத்திலே நாம் பார்க்கிறோம். ஆனால் பூமியிலே ஏற்பட்ட ஒழுங்கின்மையையும் வெறுமையையும் குறித்து இரண்டாவது வசனத்திலே நாம் பார்த்தோம். தொடர்ந்து மூன்றாவது வசனம் முதல் 31ஆம் வசனம் வரை அவர் மீண்டுமாக உலகத்தை எவ்வாறு 6 நாட்களிலே சிருஷ்டித்தார் என்பதை நாம் பார்க்கப் போகிறோம்.

ஆதியாகமம் 1ஆம் அதிகாரத்திலே மட்டுமல்ல யாத்திராகமம் 20ஆம் அதிகாரம் 11ஆம் வசனத்திலேயும் கர்த்தர் 6 நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினார் என்று வாசிக்கிறோம். இந்த வசனத்திலே சிருஷ்டித்தார் எனறு சொல்லப்படவில்லை. உருவாக்கினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஏற்கனவே சிருஷ்டிக்கப்பட்ட காரியங்களிலிருந்து ஆறு நாட்களிலே மறுபடைப்பு செய்கிறார் என்று சொல்லலாம். அதாவது, ஏற்கனவே இருந்த பொருட்களைக் கொண்டு அவர் மீண்டும் செயல்படுகிறார். இந்தப் பொருட்களை அவர்தாம் ஒரு வேளை பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பாகப் படைத்திருக்கலாம். தேவன் நீரினங்களை உருவாக்கி இந்த உலகத்திலே வைத்தார். உலகத்திற்காக அவர் மனிதனையும் சிருஷ்டித்தார். இந்தப் படைப்பைக் குறித்தே நாம் கரிசனையுள்ளவர்களாயிருக்கிறோம். ஏனென்றால் நானும் நீங்களும் அப்படிப்பட்ட ஒரு படைப்பாயிருக்கிறோம். எனவேதான் ஆதியாகமம் இன்றும் நமக்கு ஒரு முக்கியமான பகுதியாயிருக்கிறது.

ஆதியாகமம் 1 : 3 – 5

இது 24 மணி நேரம் கொண்ட ஒரு நாள் என்று நான் விசுவாசிக்கிறேன். தேவன் என்ன கூறுகிறார்? வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். தேவன் பேசியதைக் குறித்து முதல் முறையாக இங்கேதான் நாம் பார்க்கிறோம். வேதப் புத்தகம் பதிவு செய்து வைத்திருக்கிற தேவனுடைய முதல் வார்த்தைகள் இவைகள்தாம். அவர் சொன்னதுபோலவே வெளிச்சம் உண்டாயிற்று. தேவனுடைய வார்த்தை வல்லமை நிறைந்தது.

ஆதியாகமம் 1 : 6

ஆகாய விரிவு என்று சொல்லும்போது காற்றாலான இடைவெளி தூரம் என்று சொல்லலாம். அதாவது ஜலத்திலிருந்து ஜலம் பிரியக்கடவது என்று கூறினார். அதன் பொருள் என்ன? அதாவது தண்ணீர் நமக்கு மேலும் இருந்திருக்கிறது. எனவே மேலும் கீழும் இருந்த தண்ணீர் அகன்று போகும்படியாக தேவன் கட்டளைக் கொடுத்தார். அது அப்படியே ஆயிற்று.

ஆதியாகமம் 1 : 7

எப்பொழுதுமே மழை பெய்து கொண்டிருக்கிற ஒரு இடத்தில் இருக்கிறவர்கள், எப்பொழுதாவது மழை பெய்யும் இடத்திற்குச் செல்லும்போது, எப்பொழுதும் தண்ணீருக்குள் இருக்கிற நிலைமைக்கும் தண்ணீர் இல்லாமல் வெறுமையான பகுதியிலே வாழக்கூடிய நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆதியாகமம் 1 : 8

ஆகாய விரிவை தேவன் வானம் என்று கூறிவிட்டார். வானம் என்று சொல்லும்போது அநேகர் சிந்திக்கிறது போல அது பரலோகம் அல்ல. வேதப் புத்தகத்திலே மூன்று வானங்களைக் குறித்து நாம் வாசிக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வானத்தின் பறவைகளைக் குறித்துப் பேசினார். அந்த வானத்தைக் குறித்துத்தான் இந்த வசனத்திலே நாம் வாசிக்கிறோம். அடுத்ததாக நட்சத்திரங்களையெல்லாம் பார்க்கிறோமே அந்த நட்சத்திரங்கள் எல்லாம் இருக்கும் வானம். அதாவது, இரண்டாவது வானம். தேவன் வாசம் செய்யும் வானம்தான் மூன்றாவது வானம்.

ஆதியாகமம் 1 : 9, 10

இப்பொழுது மீண்டுமாக தேவன் தண்ணீரைப் பிரிக்கிறார். முதலாவதாக பூமிக்கு மேலேயும் கீழேயும் இருந்தத் தண்ணீர் பிரிக்கப்பட்டது. இப்பொழுது நிலத்திலிருந்துத் தண்ணீரைத் தனியாக ஓரிடத்திற்கு அனுப்புகிறார். நான் கூறுகிற இந்த எந்த காரியமும் விஞ்ஞானத்திற்கு விரோதமானதல்ல. விஞ்ஞானிகளின் அறிவுப்படி பூமியிலுள்ள சகல இடங்களிலுமே ஒரு காலத்திலே தண்ணீர் இருந்தது என்று ஒத்துக்கொள்கிறார்கள். நாம் விபரமாக அறிந்து கொள்ளாத முன்னொரு காலத்திலே, பூமியின் மேலே ஒரு சாபமாக அல்லது நியாயத்தீர்ப்பாக அவ்வாறு தண்ணீர் கடந் து வந்திருக்கிறது. இதைக்குறித்து நாம் விவரிக்க முனைவோமென்றால் நம்முடைய யூகத்திலேதான் நாம் பேச முடியும். ஏனென்றால் இதைக்குறித்து நமக்குக் குறைவாகவேச் சொல்லியிருக்கிறார். ஆனால் நாம் அவர் மேலே விசுவாசம் வைப்பதற்குப் போதுமான அளவு நமக்குக் கூறியிருக்கிறார்.

சரி. தேவன் வெட்டாந்தரைக்குப் பூமியென்றும் ஜலத்திற்கு சமுத்திரம் என்றும் பெயரிட்டார் என்று வாசிக்கிறோம். இங்கே அவர் என்ன செய்யத் துவங்குகிறார்? அதாவது

www.Radio882.com

மனிதனை வைக்கக்கூடிய ஒரு இடத்தை அவர் ஆயத்தப்படுத்துகிறார். மனிதன் தண்ணீரிலே வாழும் ஒரு உயிரினமல்ல. கடலில் உள்ள ஒரு செடியிலிருந்து மனிதன் வந்தான் என்று சிலர் கூறிக்கொண்டு இருந்தாலும், சிலர் சாய்வாக வைக்கப்பட்ட ஒரு வாளியிலிருந்து வெளியே வந்தான் என்று சொன்னாலும் அது எவ்வளவு நகைப்பிற்குரிய ஒரு காரியம் என்பதை நீங்களே உணர்ந்து கொள்வீர்கள்.

ஆதியாகமம் 1 : 11

நோவாவின் காலத்திலே வெள்ளம் வரும்வரை மனிதன் சைவ உணவை மட்டுமே உட்கொண்டான். அதற்காகத்தான் அவனுக்குத் தேவன் பூமியிலே பயிரினங்களை உருவாக்கிக் கொடுக்கிறார். அக்காலங்களிலே மனிதன் பழங்களையும் கொட்டைகளையுமே, உணவாக எடுத்துக் கொண்டான். எனவே மூன்றாவது நாள் தேவன் இந்தப் பூமியிலே தாவரங்களை சிருஷ்டித்தார் என்று வாசிக்கிறோம்.

ஆதியாகமம் 1 : 12, 13

நாம் வாசித்ததுபோல மூன்றாவது நாளிலே தேவன் புல்லையும், பூண்டுகளையும், தாவர வகைகளையும், கனி மரங்களையும் சிருஷ்டித்தார்.

ஆதியாகமம் 1 : 14

இந்த காலக்கட்டத்திலேதான் தேவன் சூரியனையும் சந்திரனையும் படைத்தார் என்று நாம் எண்ணி விடக்கூடாது. இவை எல்லாமே ஏற்கெனவே இருக்கின்றன. அவைகளை அந்தந்த இடத்திலே அவர் கொண்டுவந்து வைக்கிறார்.

ஆதியாகமம் 1 : 15, 16

பகல் வேளையை பொறுப்பெடுப்பதற்காக தேவன் சூரியனை அந்த இடத்திலே வைத்தார். அது சிறப்பாகத் தனது பணியை செய்கிறது. இரவிலே வலம் வரும்படியாக சந்திரனையும் அவர் வைத்தார். இரவிலே வரும் நிலவும் அநேகருடைய வாழ்க்கையிலே ஒரு தாக்கத்தை உண்டு பண்ணுகிறது என்று சொல்லலாம். நிலவொளியிலே முழுநிலவிலே சிறப்பாகச் செய்யும் காரியங்களை மனிதர்கள் காலம் காலமாகத் திட்டமிட்டு செயல்படுகிறார்கள். பௌர்ணமி அன்று ஊழியங்களுக்குப் போகும் திருச்சபைகள் உண்டு. பௌர்ணமி அன்று ஆலய வளாகத்திலேக் கூடி ஆண்டவரை ஆராதிக்கும் சபைகள் உண்டு. பௌர்ணமி அன்று சிறப்பு விருந்தை நிலவொளியிலே ஒழுங்கு செய்வோரும் உண்டு.

அதுமட்டுமல்ல, “நட்சத்திரங்களையும் உண்டாக்கினார்” என்று வாசிக்கிறோம். ஏதோ சிறிய காரியம் போல எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இது எவ்வளவு பெரிய வேலையில்லையா? ஆனால் தேவனுக்கு அது ஒரு பெரிய வேலை அல்ல.

www.Radio882.com

ஆதியாகமம் 1 : 17, 18

வெளிச்சத்துக்கும் இருளுக்குமான வித்தியாசத்தை தேவனே இங்கே உண்டாக்கினார். அருமையான சகோதரனே, சகோதரியே, இன்றைக்கும் இருளுக்கும் ஒளிக்குமான வித்தியாசத்தை அவரே தீர்மானிக்கிறார். இன்றும் மனிதர்களுக்குள்ளே பலர் சரியான காரியத்திற்கும், தவறான காரியத்திற்கும் வித்தியாசம் என்ன என்று கேட்கிறவர்களாயிருக்கிறார்கள். தேவனே இவை இரண்டிற்கும் இடையேயான கோடைப் போட்டார். மற்றபடி நமக்கு எது சரி எது தவறு என்று எப்படித் தெரியும்? சரியானவை எவை என்று தேவன் சொல்கிறார். தேவன் சில சட்டத் திட்டங்களை நமக்குக் கொடுத்திருக்கிறார். வெளிச்சத்திலிருந்து இருளை அவர் பிரித்தார். அதாவது தவறுக்கும் சரிக்கும் உள்ள வித்தியாசத்தைப் போல. இன்றைக்கும் அந்த வித்தியாசத்தை தேவனே சொல்கிறார், எதிர்பார்க்கிறார், செய்கிறார்.

நம்முடைய வாழ்க்கையிலேயும், ஒளிக்கும் இருளுக்குமான வித்தியாசத்தை அறிந்தவர்களாக வாழ்கிறோமா என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இன்று அநேகர் தவறானக் காரியங்களிலே ஏன் உற்சாகமாய் கடந்து செல்கிறார்கள் என்றால் அது தவறு என்ற உணர்வற்றவர்களாய் அவர்கள் செல்கிறார்கள். வேத வசனங்களை நாம் வாசிக்கும்பொழுதும், தேவனோடு ஐக்கியமுள்ளவர்களாய் நாம் இருக்கும்பொழுதும் தவறுக்கும் சரியான காரியத்திற்கும் உள்ள வித்தியாசத்தை தேவன் நமக்கு உணர்த்துகிறார். எனவேதான் தேவனுக்குப் பிரியமாய் வாழ விரும்புகிற ஒரு மனிதன் தவறு செய்யும்பொழுது, தனது உள்ளத்திலே தான் செய்தது தவறு, இனி இதை செய்யக்கூடாது என்ற உணர்வைப் பெறுகிறான்.

அருமையான சகோதரனே, சகோதரியே, உங்களுடைய வாழ்க்கையிலே அந்த வித்தியாசத்தை உணர்ந்துகொள்ளும் உணர்வு உங்களுக்கு உண்டா? அப்படி என்றால் ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். சரியான காரியத்தை அறிந்திருந்தாலும் அதைச் செய்வதற்கானப் பெலனை பரிசுத்த ஆவியானவர் தருவார்.

ஆதியாகமம் 1 : 20

இங்கே குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பார்க்கிறோம். எல்லாமே ஒரு செல் உயிரில் இருந்துத் தோன்றியது என்பது இதற்கு அர்த்தமல்ல. தேவன் ஒவ்வொரு வகை உயிரினங்களையும் தனித்தனியாகப் படைத்தார். அவற்றிலிருந்து அந்த வகை உயிரினங்கள் தோன்றின. தேவன் "ஜலமானது திரளாய் ஜநிப்பக்கக்கடவது" என்று கூறிய பிறகு, அடுத்த வசனம், "தங்கள் தங்கள் ஜாதியின் படியே" என்கிறது. இது "வகை" என்பதைக் காட்டிலும் மேலான அர்த்தத்தை உடையது. "தங்கள், தங்கள் ஜாதியின்படியே" என்பதற்கான அர்த்தத்தைப் பார்க்கும் போது, "ஒரு குழுவிற்குள்ளிருந்து வரும் நேரடியான

www.Radio882.com

மரபு வழி வருகையாயிருக்கிறது" என்று இருக்கிறது. உதாரணமாக, இது ஒரு குதிரையை மட்டும் குறிக்காமல், குதிரை குடும்பத்திலுள்ள ஒவ்வொரு மிருகத்தையும் குறிக்கிறதாக இருக்கிறது. தேவன் இதுபோன்ற ஒன்றை சிருஷ்டித்தார். பிறகு அவை ஒவ்வொன்றிலுமிருந்து பெரிய உற்பத்தி நிகழ்ந்தது. முதலில் உற்பத்தி நிகழ்ந்தது, பிறகு சீர்குலைவு நிகழ்ந்தது.

ஆதியாகமம் 1: 21

"தேவன் அது நல்லது என்று கண்டார்" என்று வேதம் இங்கே சொல்கிறதைப் பார்க்கிறோம். தேவன் ஒன்றைச் செய்யும்போது, அது நலமானதாகவே இருக்கும். உங்களுடைய வாழ்க்கையிலும் கூட அவர் எதைச் செய்தாலும், அது நலமானதாகவே இருக்கும்.

ஆதியாகமம் 1: 22

இந்த உயிரினங்களெல்லாம், "பலுகிப் பெருக வேண்டும்" என்றே தேவன் சொல்கிறதைப் பார்க்கிறோம். மனித சமுதாயத்தைப் பார்த்தும் தேவன் இவ்வாறே சொல்கிறார். அன்றைய காலக்கட்டத்திற்கு இது தேவையான கட்டளையே.

ஆதியாகமம் 1: 23 – 25

இங்கே "ஜாதிஜாதியான" என்ற வார்த்தைகளை மீண்டும் பார்க்கிறோம். உயிரின வகை. இப்பொழுது தேவன் மனித சமுதாயத்திலிருந்து தாவர வாழ்க்கையையும், விலங்குகளின் வாழ்க்கையையும் தனித்தனியாகப் பிரிக்கிறதைப் பார்க்கிறோம். "நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" என்று தேவன் சொல்கிறார். இந்த மனிதப் படைப்பு உங்களுக்கு மிகவும் ஆர்வத்தைத் தூண்டுகிறதாக இருக்கக்கூடும். ஏனெனில் அவர் உங்களுடைய, என்னுடைய முப்பாட்டானாருக்கும் எவ்வளவோ முந்தின முப்பாட்டனாராக இருக்கிறார். ஆக, நாமெல்லாரும் உறவினர்கள்.

அடுத்துவரும் வசனங்களில் நாம் மனிதனின் படைப்பைக் குறித்துப் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 1: 26

இங்கே நமக்கொரு கேள்வி எழும்பலாம். மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான்? அடுத்துவரும் அதிகாரம் இதற்குப் பதில் தருகிறது. "பூமியின் மேல் ஊரும் சகலப்பிராணிகளையும் ஆளக்கடவர்கள்" என்று தேவன் சொல்கிறார். தேவன் மனிதனுக்கு பூமியின் மீது ஆளுகையைக் கொடுத்தார். இதற்காக ஆதாம் ஒரு மகிமையான தோட்டக்காரனாக அந்த ஏதேன் தோட்டத்திற்குக் கொடுக்கப்பட்டான் என்று அர்த்தமாகாது. ஆதாமிற்கு மிக அதிகமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இன்னும் சில வசனங்களுக்குப் பிறகு, ஆதாமிடம் இந்த சிருஷ்டிப்புகளுக்கு செய்யும்படி தேவன் கூறிய சில காரியங்களைப் பார்க்க இருக்கின்றோம்.

www.Radio882.com

ஆதியாகமம் 1 : 27

இங்கே மனிதனுடைய படைப்பைப்பற்றி சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். நாம் இங்கே மூன்றாவது முறையாக 'bara' என்ற வார்த்தையைப் பார்க்கிறோம். அதாவது ஒன்றுமில்லாமையிலிருந்து உருவாக்குவது என்பது அர்த்தமாகும். இவ்வாறே மனிதன் படைக்கப்பட்டதைப் பார்க்கிறோம். அவன் முற்றிலும் புதிய காரியம். ஆதியாகமம் முதலாம் வசனத்தில் வந்திருக்கின்ற அதே 'bara' என்ற வார்த்தையே இங்கேயும் பயன்படுத்தப்பட்டுள்ளது. "ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்". அங்கே அவர் உலகத்தைப் படைக்கிறார். அடுத்து 1 : 21ல் அவர் உயிரினங்களைப் படைக்கிறார். "சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார்." இங்கே சிருஷ்டித்தார் என்பது "டியசய" என்ற வார்த்தை. இப்பொழுது தேவன் மனிதனைப் படைக்கிறார். "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்" என்று வசனம் சொல்கிறது. மனிதனைப் பற்றிய படைப்பின் வரலாற்றை நாம் அடுத்த அதிகாரத்தில் விளக்கமாகப் பார்க்கலாம். தேவன் அண்ட சராசரத்தின் படைப்பு பற்றியெல்லாம் விளக்கமாகச் சொல்லவில்லை. "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்." இவ்வளவு செய்தி மாத்திரமே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து நாம் இவ்வளவே அறிய முடிகிறது. அவரால், அநேக விளக்கங்களை நமக்கு இதுகுறித்து தரமுடியும். ஆனால் கொடுக்கவில்லை. அவர் தன்னுடைய படைப்பிலே ஒன்றே ஒன்றை மட்டும் குறித்துத்தான் விளக்கமாகத் தருகிறார். அதுதான் மனிதனுடைய சிருஷ்டிப்பு. ஏன் தெரியுமா? ஏனெனில் இந்த வேதம் மனிதனுக்காக எழுதப்பட்டிருக்கிறது. அவன் தன்னுடைய ஆரம்பத்தை, தோற்றத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தேவன் மனிதனைப் பார்த்து இவ்வாறு கூறுவது போலிருக்கிறது. "நான் உன்னுடைய படைப்பிலே விசேஷித்த கவனம் செலுத்தியிருக்கிறேன் என்பதை நீ அறிய வேண்டும் என்று விரும்புகிறேன்."

"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்." வேதப் புத்தகத்தில் இது சிறந்ததொரு வாக்கியமாகும். இதன் அர்த்தமென்ன? அதாவது, மனிதன் தேவனைப் போல திரித்துவமாய் இருக்கிறான் என்று நினைக்கிறேன். இப்பொழுது சிலர் இவ்வாறு சொல்லலாம். மனிதன் சரீரம், சிந்தை, ஆவிக்குரிய காரியம் போன்ற மூன்றை உடையவனாக இருக்கிறான் என்று சிலர் சொல்லக்கூடும். இது உண்மைதான். 1 தெசலோனிக்கேயர் 5:23ல் பவுல் இவ்வாறுதான் கூறுகிறார். "சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி

www.Radio882.com

காக்கப்படுவதாக" என்கிறார். இது சத்தியம். இருந்தபோதிலும், நாம் அடுத்த அதிகாரத்திற்கு வரும்போது, இது இதனினும் அதிகமான அர்த்தமுடையதாக இருக்கிறதைக் காண இருக்கின்றோம். மனிதன் ஒரு தனிப்பட்ட பண்புகளுடையவனாக, சுய மனச்சாட்சியையுடையவனாக, சுய முடிவுகளை எடுக்கக்கூடியவனாக இருக்கிறான் என்ற சத்தியத்தை இது விளக்குகிறது. அவன் சுயசித்தம் உடையவனாக இருக்கிறான். மனித சமுதாயத்தின் விசேஷித்த காரியமும் இதுதான். தேவன் மனிதனை தன்னுடைய சாயலாகப் படைத்தார் என்பதற்கு இதுவே அர்த்தமாகும் என்று நான் விசுவாசிக்கிறேன்.

"ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்" என்று பார்க்கிறோம். இந்த வசனத்தில் எவ்வாறு ஆண் சிருஷ்டிக்கப்பட்டான் என்றும், எவ்வாறு பெண் சிருஷ்டிக்கப்பட்டாள் என்ற விளக்கமும் கொடுக்கப்படவில்லை. நாம் இரண்டாம் அதிகாரத்திற்கு வருகிறவரை அதைக் காண இயலாது. இந்தக் காரணத்திற்காகவே, தேவன் இந்த அண்டசராசரத்தின் படைப்புப் பற்றிய விளக்கத்தை நமக்குக் கொடுக்க விரும்பவில்லை. அப்படியாயிருந்தால் அவர் இந்த அதிகாரத்திலோ, அடுத்த அதிகாரத்திலோ இதுகுறித்து சொல்லியிருந்திருப்பார். ஆனால் அவர் சிருஷ்டிகர் தவிர வேறு விளக்கத்தை அவர் நமக்குத் தரவில்லை. நாம் எபிரெயர் 11 :3ல் பார்கிற சத்தியத்திற்கு இது சரியாக நம்மை வழிநடத்துகிறது. வசனத்தைப் பாருங்கள், 'விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப் படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்' என்கிறார். நாம் இன்று காண்கிறவைகள் யாவுமே முன்பு இருந்ததில்லை. அதிலிருந்தே தேவன் உண்டாக்கினார், ஒன்றுமில்லாமையிருந்து தேவன் உருவாக்கினார் என்று விளங்குகிறது. "Exnihilo" என்பது சிருஷ்டிப்பு. ஒரு வேளை இதுகுறித்து எனக்கு விளக்குங்கள் எனலாம். "விளக்க இயலாது" என்பதே இதற்குப் பதில். பரிணாம நிலை எவ்வாறு இருந்த நிலைக்கு மாறியது என்பதற்கு எந்தக் கொள்கையும் பதில் தருவதில்லை. இந்த கொள்கை ஒரு செல் உயிரியாகிய அமீபாவிலிருந்து ஆரம்பமாகிறது. ஆனால் அந்த ஒரு செல் உயிரி எவ்வாறு தோன்றியது என்பதற்குப் பதில் இல்லை. அருமையானவர்களே, நம்முடைய மூளை ஆரம்பமாகுவதற்கு ஏதோ ஒன்று அவசியமாயிருக்கிறது. ஆனால் வேதம் ஒன்றுமில்லாமையிலிருந்து ஆரம்பமாகிறது. தேவன் சிருஷ்டித்தார். இந்த அதிகாரத்தின் தலைசிறந்த வெளிப்பாடு இதுவேயாகும்.

ஆதியாகமம் 1 : 28

இங்கே தேவன் விநோதமானக் காரியத்தை இந்தப் படைப்பிற்குக் கொடுக்கிறதைப் பார்க்கிறோம். முதலாவது அவர் மனிதனைப் பார்த்து, "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை

நிரப்பி", என்கிறார். இதேக் காரியத்தை அவர் பெண்ணைப் படைத்தவுடனும் கூறுகிறதைப் பார்க்கிறோம். மனிதனல்ல, தேவனே உடலுறவை அறிமுகப்படுத்தினார் என்பதை இதன் மூலம் அறிகிறோம். தேவன் இதை ஆரம்பத்திலேயேக் குறிப்பிடுகிறார். மனிதன் இந்த உலகத்திற்குள் வருகிறதற்கு தேவன் நான்கு முறைகளை பயன்படுத்தியிருக்கிறார். முதலில் நேரடி படைப்பு. இப்படித்தான் ஆதாமை அவர் படைத்தார். இரண்டாவது முறை, மறைமுகமானப் படைப்பு. இப்படி ஏவாளைப் படைத்தார். மூன்றாவது கன்னியிடமிருந்து பிறப்பு. இவ்வாறே இயேசு கிறிஸ்து மனித சமுதாயத்திற்குள்ளே வந்தார். நான்காவவதாக இயற்கையான சந்ததி. இவ்வாறே இன்றைய மனித சமுதாயம் வளர்ந்து வருகிறது.

இந்த இயற்கையான இனப்பெருக்கத்தை நாம் கீழாக மதிப்பிடுகிறோம். தேவன் இந்த நோக்கத்தை உடையவராக இல்லையென்று அநேகர் சொல்கிறார்கள். மனிதன் பெருகி, பூமியை நிரப்ப வேண்டுமென்று தேவன் கட்டளையாகக் சொல்கிறார். இது ஆச்சரியமான, மகிமையான உண்மை. இதை இன்று சிலர் நடத்துவதுபோல சாதாரணமானதாக, அற்பமானதாக இழிவானதாக நடத்தக்கூடாது. இன்று சிலர் கீழ்த்தரமான, ஆபாசமான வகையிலே புத்தங்களை எழுதிவிட்டு அதைக் கலை என்று அழைக்கிறார்கள். திருமண உறவானது இவ்வாறு கீழ்த்தரமாக நடத்தப்படக்கூடாது. தேவன் அதை நலமாக காண்கிறபடியினாலே, அதை அவமதிக்கக்கூடாது.

தேவன் மனிதனை தம்முடைய சாயலாகப் படைத்தார். தேவன் மனிதனுக்கு அழியாத ஆத்துமாவைக் கொடுத்து, உண்மையான தனித்தன்மையையும் கொடுத்திருக்கிறார். மனிதனுக்கு சுயமான மனச்சாட்சி இருக்கிறது. மட்டுமல்ல, அவனுக்கு சுயமாக தேர்ந்தெடுக்கும் வலிமையும் உள்ளது. மேலும் மேன்மையான ஒழுக்கத்திற்கான பொறுப்பும் உடையவனாக அவன் இருக்கிறான். அவன் தேவனுடைய சாயலாக இருக்கிறான்.

"நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி", என்கிறார். மனிதன் பிள்ளை பெறுவதினாலே பூமியை நிரப்பும்படி தேவன் அவரிடத்திலே கூறினார். "நிரப்பி" என்று இங்கே சொல்லப்படுவது "மீண்டும் நிறைவாக்கு" என்ற அர்த்தத்தில் வருகிறது. இது நம்முடைய ஆர்வத்தைத் தூண்டுகிறது. அதாவது மனிதன் படைக்கப்படும் முன்னர் ஏதோ சில உயிரினப் படைப்புகளால் பூமி நிரம்பியிருந்திருக்கிறது என்பதை இது குறிக்கிறது. ஆனால் மனிதன் படைக்கப்பட்டபோது அவை மறைந்து போயிருந்தன.

மேலும், மனிதன் பூமியை கீழ்ப்படுத்த வேண்டும் என்று தேவன் சொல்கிறதை இந்த வசனத்தில் பார்க்கலாம். இதுவே கற்றலுக்கும், அறிவியல் வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருக்கிறது என்று நினைக்கிறேன். நீதிமொழிகள் 25 : 2 இவ்வாறு சொலகிறது: "காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை; காரியத்தை ஆராய்வதோ ராஜாக்களுக்கு மேன்மை."

www.Radio882.com

தேவன் பூமிக்கடியில் வைரத்தையும், பொக்கிஷங்களையும் மறைத்து வைத்திருக்கிறார்: மனிதன் அவற்றைத் தோண்டி எடுக்க வேண்டும். இது அறிவு விஷயத்திலும் சரியாகப் பொருந்தும். நாம் அறிவைத் தேடி, தோண்டியே எடுக்க வேண்டும். அதேப் போல் வேத வசனங்களைக் கற்றுக்கொள்ளும்பொழுதும் புதையலைத் தேடுவதுபோல ஆர்வத்துடன் தேடிக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் ஆய்வகத்திற்குச் சென்று சோதனைக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆனால் மனிதனோ, அணுகுண்டை கண்டுபிடித்து, மனித குல அழிவிற்கே வழி வகை செய்து விட்டான்.

"ஆண்டு கொள்ளுங்கள்" என்று தேவன் மனிதனுக்குச் சொல்கிறார். ஆதாம் ஒரு சாதாரண தோட்டக்காரன் அல்ல. பூமியை ஆண்டுகொள்வதற்காகப் படைக்கப்பட்டான். நாம் எவ்வாறு நம்முடைய அறையின் தட்பவெப்பநிலையை மின்சார இயந்திரத்தைப் பயன்படுத்தி மாற்றி அமைக்கிறோமோ, அதைப்போன்று ஆதாம் தட்பவெப்பநிலையைக் கூட மாற்றி அமைத்திருப்பான். அவன் இந்தப் பூமியை ஆண்டிருப்பான். நாம் இயேசு கிறிஸ்துவில் இதையேப் பார்க்கிறோம்.

அவர் இந்த பூமியில் இருந்தபோது, இயற்கையை கட்டுப்படுத்தினார். அவர் சீறும் புயலைக் கண்டு, "இரையாதே, அமைதலாயிரு" என்று கூற முடிந்தது. அவர் திரளான ஜனங்களை, ஐந்து அப்பம், இரண்டு மீன்களைக் கொண்டு போஷிக்க முடிந்தது. ஆதாம் வீழ்வதற்கு முன்பு வரை அவனாலும் இதைச் செய்ய முடிந்திருக்கும் என நான் கருதுகிறேன். அவன் வீழ்ச்சியுற்ற பிறகு தேவன் அவனுக்குக் கொடுத்த ஆளுகையை இழந்து போனான்.

ஆதியாகமம் 1 : 29

இந்த வசனத்திலிருந்து மனிதன் முதலாவது காய்கறிகளை உணவாக உட்கொண்டான் என்றறிகிறோம். ஜலப்பிரளயத்திற்குப் பின்னரே அவன் மாம்சம் உண்கிறவனாக மாறினான்.

ஆதியாகமம் 1 : 30, 31

இதோடு முதலாம் அதிகாரம் நிறைவுறுகிறது. இங்கே ஒரு காரியத்தை சிந்திக்க வேண்டியது அவசியம். இந்த அதிகாரத்தில் தேவன் என்ற வார்த்தை 32 முறை குறிப்பிடப்பட்டுள்ளது. தேவன் ஒருவர் இருக்கிறார் என்று நிரூபிக்க வேதம் ஒரு போதும் முயற்சிக்கவில்லை என்பதை கவனித்து பார்த்திருக்கிறீர்களா? ஏனெனில் “தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்”என்று சங்கீதக்காரன் சங்கீதம் 14 : 1ல் சொல்கிறான்.

இந்த வேதமானது, ஆவிக்குரிய, பக்திக்குரிய, மீட்பின் சத்தியத்தை வெளிப்படுத்த எழுதப்பட்டுள்ளது. இவை யாவுமே நாம் விசுவாசிக்கும்போது மட்டுமே நமக்கு சொந்தமாகும். ஆக, தேவன் சிருஷ்டித்தவர் என்றதொரு சத்தியத்தை நாம் இங்கே பார்க்கிறோம். நாம் இந்த முதலாம் அதிகாரத்திலே தேவனுடைய தனித்தன்மையையும், வல்லமையையும், ஐக்கியத்தையும் பார்க்கிறோம். ரோமர் 1 : 20ல் பவுல் சொல்கிறது இதற்குப் பொருத்தமாயிருக்கிறது. 'எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக் கிறவைகளினாலே, "உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்", என்கிறார். எவ்வாறு தெளிவாய்க் காணப்படும்? உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை.

இந்த அதிகாரத்திலே, நாம் வேறு சில சத்தியங்களையும் கற்றுக் கொள்ள முடியும். முதலாவது, இது பல தெய்வ வழிபாட்டை மறுக்கிறது. அதாவது ஒரே தேவன் சிருஷ்டித்தார் என்று இந்த அதிகாரம் சொல்கிறது. இரண்டாவது, பொருட்களின் நித்தியத்தன்மையை (eternity of matter) இது மறுக்கிறது. நாம் வேதத்தின் துவக்கத்தில் "ஆதியிலே" என்று பார்க்கிறோம். மூன்றாவது இது தேவன் எல்லாவற்றிற்கும் முன்பாக இருக்கிறார் என்றும், அவர் அவற்றிற்கு அப்பாற்பட்டவர் என்றும் சொல்கிறது. தேவன் இங்கே தம்முடைய சுய விருப்பத்தின்படி செயல்படுகிறதைப் பார்க்கிறோம். இதுபோன்ற சிறந்த காரியங்களை நாம் இந்த அதிகாரத்தில் பார்க்கிறோம். இன்னும் இந்த அதிகாரத்தில் நாம், ஒரு ஒழுங்கையும், முன்னேற்றத்தையும், விரைவாக செயல்படுகிறதையும், பரிபூரணத்தையும் பார்க்கிறோம். இவையெல்லாம் இந்த அதிகாரத்தின் சிறந்த காரியங்களாகும்.

அருமையானவர்களே, இந்த உலகம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது என்பதை அப்படியே விசுவாசிக்கிறீர்களா? அவரே சிருஷ்டிகர் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா? இதை விசுவாசித்தாலே, இந்த வேதம் தேவ வார்த்தைகளால் நிரம்பியுள்ளது என்பதை நீங்கள் விசுவாசிக்க முடியும். அப்பொழுதே இந்த வேதத்தினால் உண்டாகும் எல்லா ஆசீர்வாதங்களும், பயன்களும் உங்களுக்கு வரமுடியும். ஒரு வேளை உங்களுக்கு எந்த சந்தேகங்களும் குழப்பங்களும், அறியாமைகளும் இருந்தாலும் அவற்றையெல்லாம் ஓரமாக வைத்துவிட்டு, "தேவனே, நான் உம்மை விசுவாசிக்கிறேன். நான் உமக்கென்று வாழ உதவி செய்யும்" என்று கேட்பீர்களா?

www.Radio882.com

ஆதியாகமம் 2

இந்த அதிகாரத்தில்தான் முதல் முறையாக சிறந்த கொள்கையான வெளிப்படுத்தல் காணப்படுகிறது. ஆனால் இதே காரியம் வேதத்தில் மீண்டும், மீண்டும் ஆங்காங்கே காணப்படுகிறது. ஆவியானவருடைய ஏவுதலில் இதுவும் ஒன்று. இதை நாம் 'திரும்பவும் நடக்கும் விதி' அல்லது 'தொகுத்துரைக்கும் விதி' என்று அழைக்கிறோம். வேதத்தில் சில சத்தியங்களை மிகவும் சுருக்கமாக ஆவியானவர் கூறிவிட்டு, பிறகு முன்பு கூறியவற்றில் சில முக்கியமானவற்றை எடுத்து விளக்குவதைக் காணலாம். இங்கே தேவன் அதையே செய்கின்றார். முதலாம் அதிகாரத்தில் அவர் ஆறு நாள் படைப்பைக் குறித்து சுருக்கமாகக் கூறியுள்ளார். இப்பொழுது இந்த அதிகாரத்தில் அதை ஆவியானவர் சற்று விளக்கிக் கூறுகிறதைப் பார்க்கிறோம். இதேக் கொள்கையை நாம் உபாகமப் புத்தகத்திலும் பார்க்கிறோம். உபாகமம், நாற்பதாண்டு கால வனாந்திர அனுபவத்திற்குப் பின்னர் உண்டான நியாயப்பிரமாணத்தின் விளக்கத்தை உள்ளடக்கியுள்ள புத்தகமாக இருக்கிறது. இது நியாயப் பிரமாணத்தை மீண்டும் சொல்கிறதாக இல்லாமல், இதன் விளக்கமாக இருக்கிறது. அதே போன்று, நமக்கு ஒரு சுவிசேஷப் புத்தகம் கொடுக்கப்படாமல் நான்கு சுவிசேஷப் புத்தகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தேவனுடைய வார்த்தையில் இந்தவொரு தொகுத்துரைக்கும் முறை மீண்டும் மீண்டும் பின்பற்றப்படுகிறதை நீங்கள் காணமுடியும்.

இந்த 2ஆம் அதிகாரம், ஏழாம் நாளாகிய ஓய்வு நாளோடு ஆரம்பமாகிறது. ஆறு நாளில் படைக்கப்பட்ட காரியங்களைக் குறித்து இங்கே சற்று விளக்கமாகக் கூறப்படுகிறது.

ஆதியாகமம் 2 : 1-3

ஓய்வுநாளின் முக்கியத்துவத்தை இழந்து போகாதிருங்கள். ஓய்வுநாள் முக்கியமானது. சிறப்பாக ஆசரிக்கப்பட வேண்டியது. தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்று சொல்லப்படுகிறதே, இதன் அர்த்தம் என்ன? அப்படியானால் தேவன் களைப்படைந்தார் என்று அர்த்தமா? ஏழாம் நாளில் அமர்ந்து ஓய்வு எடுத்தார் என்பது பொருளாகுமா? அவர் அதிகமாக உழைத்ததால் அவருக்கு ஓய்வு அவசியமாயிருந்ததா? இந்தக் கண்ணோட்டத்தில் நீங்கள் இந்தப்பகுதியைப் பார்த்தால் அது மூடத்தனமாகவேக் காணப்படும். தேவன் தம்முடைய கிரியைகளை விட்டு ஓய்ந்திருந்தார் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். தேவன் தம்முடைய ஆறு நாள் வேலையை முடித்தபின்பு, அதை நல்லதென்று கண்டார். இதற்குப் பிறகு வேறெதுவும் அங்கே செய்ய வேண்டியதாக இல்லை. ஒருவேளை நீங்கள் ஒரு அலுவலகத்தில் வேலை பார்க்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்ள் விடுமுறைக்கு செல்ல இருக்கிற நாளில், பணியையெல்லாம் முடித்துச் சென்றுவிடலாம் என்று எண்ணுவீர்கள். இருந்தபோதிலும், அந்த வேலைகளெல்லாம்

www.Radio882.com

உங்களால் செய்து முடிக்க முடியாமற் போகக்கூடும். 'நான் எல்லாவற்றையும் முடித்துவிட்டேன்' என்று உங்களால் ஒருபோதும் சொல்ல இயலாது.

ஆனால் தேவன் எல்லாவற்றையும் ஆறு நாட்களுக்குள்ளே செய்து முடித்துவிட்டார். அவருடைய வேலை முடிந்து விட்டதால் அவர் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இங்கே ஒரு சிறந்த ஆவிக்குரிய சத்தியத்தைப் பார்க்கிறோம். எபிரெயர் நிருபத்திலே, விசுவாசிகளான நாம் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதாக சொல்லப்படுகிறது. அதாவது நாம் அவருடைய இளைப்பாறுதலுக்குள் நுழைகிறோம். நாம் அவருடைய பூரணமான மீட்பிற்குள் நுழைகிறோம். உங்களுக்காகவும், எனக்காகவும் அவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக சிலுவையில் மரித்தார். நாம் நுழையக்கூடிய ஒரு மீட்பை அவர் நமக்கு அருளினார். பவுல், ரோமர் 5 :1ல், "இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" என்கிறார். நான் இரட்சிக்கப்படுகிறதற்காக ஒரு சிறிய விரலைக்கூட உயர்த்த வேண்டியதில்லை. இயேசு எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டார்.

இயேசு எல்லாவற்றையும் செலுத்தி விட்டார், அவருக்கே எல்லாவற்றிற்கும் நாம் கடன்பட்டிருக்கிறோம். பாவம் நம்மில் கறையை ஏற்படுத்திவிட்டது, அவர் அதை பனியைப் போல வெண்மையாகும்படி கழுவிவிட்டார்.

ஆதியாகமம் 2 : 4

இந்தப் பெரிய அண்ட சராசரம் பலகோடிக்கணக்கான ஆண்டுகளாக இருக்கிறது என்பது தெளிவானது. ஆனால், இந்த பூமிக்கும், படைப்பிற்கும் ஏதோவொன்று இடையில் நடைபெற்றிருக்கிறது. இதன் காரணமாக தேவன் செயல்பட ஆரம்பித்திருக்கிறார். தேவனுடைய ஆவியானவர் ஜலத்தின் மீது அசைவாடிக் கொண்டிருந்திருக்கிறார். படைப்புக்கு முந்திய ஆகாய வெளியிலிருந்து 5 பிரபஞ்சம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இங்கே வசனத்தைப் பாருங்கள். "சர்வசேனை" என்று குறிப்பிடப்படுவது குடும்பங்கள் என்று அர்த்தமாகும். இந்த ஆதியாகமப் புத்தகம் ஆரம்பங்களின் புத்தகம் மட்டுமல்ல, குடும்பங்களின் புத்தகமும் கூட. "இவ்விதமாக வானமும் பூமியும் அவைகளின் குடும்பங்களும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன."

ஆதியாகமம் 2 : 5 – 6

இவையெல்லாமே மனிதன் பூமியில் சிருஷ்டிக்கப்படும் முன்னரே உண்டாக்கப்பட்டு விட்டது. இப்பொழுது நாம் ஆதியாகமம் 1ஆம் அதிகாரத்தில் தேவனுடைய நோக்கங்கள் என்னவாயிருந்தது என்பதைக் கண்டுபிடிக்கப் போகிறோம். அதிகாரம் 1ல், தேவன் தாம் உருவாக்கப் போகின்ற மனிதனுக்கு வீட்டை ஆயத்தம்

பண்ணிக் கொண்டிருந்தார். இப்பொழுது தேவன் ஆயத்தப்படுத்தின இடத்திற்கு அவனைக் கொண்டு செல்ல ஆயத்தப்படுகிறார்.

முதலாம் அதிகாரத்தில் அங்கே ஒன்றுமே இல்லாமல், வெறுமையாக காணப்பட்டது என்று காண்கிறோம். பிறகு கனிமப் பொருட்கள் உண்டாக்கப்பட்டன. "ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்." இதற்கு அடுத்த கட்டத்தில், சிருஷ்டிப்பில் உயிரினங்கள் படைக்கப்பட்டன. 21ஆம் வசனத்தில், தேவன் மகாப் பெரிய மீன்களையும், பின்னர் மற்ற உயிரினங்களையும் படைத்தார் என்று பார்க்கிறோம். அவர் உயிரினங்களைப் படைத்தார். ஆனால் தாவரங்கள் அழிந்து போயிருக்கவில்லை. தேவன் மீண்டும் சிருஷ்டித்துக் கொண்டிருக்கும்போது, பூமிக்குள் ஏற்கனவே விதைகள் இருந்தன. அவ்வாறே நாம் இந்தப் பகுதியிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. தேவன் இது சம்பந்தமாக மிகவும் குறைவாகவே நமக்கு சொல்லியிருக்கிறார். இதற்கு அடுத்ததாக மனிதன் படைக்கப்பட்டான். இங்கே பரிணாம வளர்ச்சி காணப்படவில்லை. இந்த பூமியானது மனிதன் படைக்கப்படும் முன்னரே அவனுக்காக ஆயத்தப்படுத்தப்பட்டது. ஒருவேளை ஆறு நாட்களின் படைப்புகள் நடைபெறாமல், முதலாவது மனிதன் படைக்கப்பட்டிருந்தால் எப்படியிருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். ஆம், தேவன் உங்களுக்கும், எனக்கும் தேவையானவைகளை இந்த பூமியில் ஏற்கனவே உருவாக்கி வைத்திருக்கிறார்.இன்றும் நம் தேவைகளை அவர நிச்சயமாக சந்திப்பார்.

ஆதியாகமம் 2 : 7

மனிதன் இந்த முறையிலேயே சிருஷ்டிக்கப்பட்டான். மனிதன் நிலத்திலிருந்து உருவாக்கப்பட்டான். நம்முடைய சரீரம் 16 வேதியியல் பொருட்களால் ஆனது. இவையாவும் நிலத்தில் இருக்கின்றன. அவன் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டான். நம்முடைய சரீரத்திலுள்ள பொருட்களையும், வேதியியல் பொருட்களையும் கொண்டு பார்க்கும்போது, நம்முடைய மதிப்பு மிகவும் அற்ப விலையே பெறும். ஒருவேளை 200 ரூபாய்க்கு மதிக்கப்பட்டாலே அதிகம் என்று நினைக்கிறேன். ஆம், நாம் மண்ணிலிருந்தே படைக்கப்பட்டதாலே, நம்முடைய விலை மதிப்பு குறைவாகவே இருக்கிறது. ஆனால், நாம் எவ்வளவோ விலையேறப் பெற்றவர்களாக நம்மைக் கருதிக் கொண்டு பெருமைப்பட்டுக் கொள்கிறோம்.

இருந்தபோதிலும், மனிதன் மண்ணைக்காட்டிலும், மேலானவனாக இருக்கிறான். சரீரப்பிரகாரமாக, அவன் மண்ணிலிருந்து தோன்றினபடியினால், மண்ணுக்கே திரும்புவான். ஆனால், அவனுடைய ஆவி தேவனிடத்தில் செல்லும். ஏன்? ஏனெனில், தேவன் 'ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்.' தேவன் அவனுக்குள் ஜீவ சுவாசத்தை ஊதினார். தேவன் மனிதனுக்கு சரீரப்பிரகாரமான வாழ்க்கையையும், பிறகு ஆவிக்குரிய பிரகாரமான வாழ்வையும் கொடுத்தார். மனிதன்

www.Radio882.com

இப்பொழுது தன்னைப் படைத்த சிருஷ்டிகளோடு ஆச்சரியமான உறவை உடையவனாகிறான். தேவனோடு தொடர்பு கொள்ளும் தகுதியைப் பெற்றான். தேவனுடைய இந்த அண்ட சராசத்தில் உள்ள மற்ற படைப்புகளுக்கும், மனிதனுக்கும் இதுவே பெரும் வேறுபாட்டை உண்டாக்குகிறது. தேவதூதர்கள் இருக்கிறார்கள். இருந்தபோதிலும், அவர்களைக் குறித்து நாம் மிகவும் குறைந்த அளவே அறிந்து கொள்கிறோம்.

சிலர், "மனிதன் இந்த அளவிற்கு வளர்ச்சியடைந்து வந்தான். அதற்குப் பிறகு தேவன் நாசியிலே சுவாசம் ஊதி, தொடர்ந்து அந்த சரீரத்திலே கிரியை செய்து அவனை உருவாக்கினார்" என்று சொல்வதுண்டு. இருந்தபோதிலும் எந்தவொரு தத்துவமும் மனிதனுடைய பேச்சைப் பற்றியோ, மனச்சாட்சியைக் குறித்தோ, தனித்தன்மையைக் குறித்தோ ஒன்றும் சொல்கிறதில்லை. அவர்களால் சொல்ல இயலாது. சில மனித எலும்புகளை எடுத்துக்கொண்டு அதை மனிதக் குரங்கோடோ அல்லது குதிரையோடோ ஒப்பிட்டுப் பேசுவது எளிது. அதிலே அநேக ஒற்றுமையுண்டு, இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் அதிலே பல வேற்றுமையுண்டு என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா?

இவ்வாறு இந்த உயிரினங்களுக்கிடையே ஒற்றுமை இருக்கத்தான் செய்யும். ஏனெனில், மனிதர்களாகிய நாம் வாழ்கின்ற இதே சுற்றுப்புற சூழ்நிலையில்தான், அவைகளும் வாழ்கின்றன. உதாரணமாக, இரண்டு வேறுபட்ட கம்பெனி கார்களை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் மோட்டார் பகுதியைத் தாங்கி நிற்கும் அடிச்சட்டம், நான்கு சக்கரங்கள், இன்னும் இன்ஜின் அமைப்பு போன்றவை பெரும்பாலும் ஒத்திருக்கும். அதற்காக எல்லா கம்பெனி கார்களும் ஒன்றே என்று சொல்லிவிடமுடியுமா? எல்லாமே ஒரே தொழிற்சாலையில் தயாரானது என்று கூறி விட இயலுமா? அதே போல்தான் மனிதனுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் உள்ள ஒற்றுமைகள். மனிதன் வேறுபட்ட படைப்பு. தேவன் அவனுக்கு ஜீவ சுவாசத்தை ஊதினார். அவன் உயிருள்ள ஆத்துமாவானான். மனிதன் மிகவும் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் மேன்மையான வகையிலே படைக்கப்பட்டிருக்கிறான். நாம் இதை நம்முடைய சிந்தையில் நிறுத்திக்கொள்ள வேண்டியது அவசியம்.

ஆதியாகமம் 2 : 8

ஏதேன் தோட்டம் எங்கேயிருந்தது என்று சொல்வது கடினமானது. ஆனால் ஐபிராத்து – டைகிரிஸ் நதியின் சமவெளியில் அமைந்திருந்திருக்க வேண்டும் என்று கூறமுடியும். ஒருவேளை அந்த சமவெளி முழுவதும் ஏதேன் தோட்டமாய் இருந்திருந்திருக்கலாம். உண்மையில் இந்த நதியின் படுகை மிகவும் செழிப்பானப்பகுதி. இப்பொழுதும் அது அவ்வாறே காணப்படுகிறது. ஒரு காலக்கட்டத்தில் அந்தப்பகுதியில்

வாழ்ந்தவர்கள் விவசாயம் கூட செய்ததில்லை. அங்கே தானாக வளர்ந்த பயிர்களை அறுவடை மாத்திரமே செய்து உணவிற்கு பயன்படுத்தினார்கள். இது மீண்டும் ஒரு நாளில் பூமியின் மைய இடத்தைப் பெறும் வாய்ப்பிருக்கிறது.

ஆதியாகமம் 2 : 9

இங்கே விநோதமான மரங்கள் குறிக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் காணமுடியும். குறிப்பாக ஜீவ விருட்சம் மற்றும் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சம் போன்றவை வித்தியாசமானவை. இன்று நம் மத்தியில் இவைகள் இல்லாததால், நாம் இதுகுறித்து விளக்கமாக ஒன்றும் சொல்ல இயலாது. இப்பொழுது அவைகள் இல்லை. தேவனாகிய கர்த்தர் சகல விதமான மரங்களையும் முளைக்கப் பண்ணினார் என்று இந்த வசனத்தில் பார்க்கிறோம். இவை பார்ப்பதற்கு அழகாகவும், புசிப்புக்கு நலமுமானதாக இருந்தன. அதாவது அழகான மரங்களாகவும், அதே வேளையில் பயனுள்ளதாகவும் இருந்தன. இன்றும் கூட நாம் வாழும் இந்தப் பூமியில் சில அழகான காரியங்களைப் பார்க்கிறோம். இந்தப் பூமியில் மனிதனுடைய வீழ்ச்சியினிமித்தம் சாபம் இருக்கிறது உண்மைதான். ஆனாலும், அழகான காட்சிகளையும் நாம் பார்க்கமுடியும். முள்ளையும், களையையும் பூமி முளைப்பித்தாலும், அழகானவற்றையும் பூமி இன்றும் முளைப்பிக்கிறது. ஒருமுறை ஒரு பூங்காவிற்கு சென்றிருந்தேன். அங்கேயுள்ள மலர்களையும், செடி, கொடி, மரங்களையும் பார்க்கும்போது என் உள்ளமெல்லாம் வியப்பிலும், ஆச்சரியத்திலும் நிரம்பியது. என்னதொரு அழகு! இனிமையான மணம் வீசும் மலர்கள். சிறிய நீரோடைகள். நிழல்தரும் மரங்கள். ஆம் இன்றும் பூரணத்தின் அழகை ஆங்காங்கே பார்க்கிறோம். உண்மையில் ஏதேன் தோட்டம் எவ்வளவு அழகாக இருந்திருக்கும் என்று வார்த்தைகளால் கூறமுடியாது.

ஆதியாகமம் 2 : 10 – 14

எத்தியோப்பியாவிலுள்ள ஆறு நைல் நதியாகும். இதெக்கேல் என்பது இப்பொழுதுள்ள டைகிரிஸ் நதியாகும்.

ஆதியாகமம் 2 : 15

ஆதாம் ஆளுகையுடையவனாக இருந்தான் என்று நாம் ஏற்கனவே பார்த்தோம். இயற்கையானது ஆதாமின் சத்தத்திற்கு பதிலளிக்கிறதாக இருந்திருக்க வேண்டும்.

ஆதியாகமம் 2 : 16 –17

மனிதன் மரிப்பது தேவனுடைய நோக்கமல்ல. ஆனால் இப்பொழுது மனிதன் பயிற்சிக் காலத்தில் இருக்கிறான். மனிதன் சுயசித்தம் உடையவனாக படைக்கப்பட்டான் என்று நாம் பார்த்திருக்கிறோம். சலுகை எப்பொழுதும் பொறுப்பை உண்டாக்குகிறதாக இருக்கிறது. மனிதன் சுயசித்தம் உடையவனாக படைக்கப்பட்டபடியால், அவன்

கீழ்ப்படிகிறானா, இல்லையா என்பதை உறுதி செய்வதற்காக ஒரு சோதனை நடத்தப்படவேண்டும்.

இந்த நன்மை, தீமை அறியத்தக்க விருட்சம் என்பது விஷம் என்று ஒரு சிலர் விளக்கமளிக்கிறார்கள். மாறாக, இது தோட்டத்திலுள்ள கனிகளிலேயே சிறந்ததாக இருந்தது என்று நான் நினைக்கிறேன்.

"அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று காண்கிறோம். மனிதன் திரித்துவமாக காணப்பட்டான் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். அவன் மூன்று விதமான வழிகளிலே மரிக்கவேண்டும், ஆதாம் சரீரப் பிரகாரமாக மரிக்கவில்லை. அவன் தொள்ளாயிரத்து முப்பது வருஷம் உயிரோடிருந்தான் என்று பார்க்கிறோம். ஆனால் தேவன் அவனைப்பார்த்து, 'நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்' என்று கூறினார். சாவு என்பது பிரிவு. ஆதாம் கனியை உண்ட நாளிலே தேவனோடு கொண்டிருந்த ஆவிக்குரிய உறவில் பிரிவை, அதாவது மரணத்தை சந்தித்தான்.

ஆதியாகமம் 2 : 18

தேவன் மனிதனை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தோட்டத்தில் தனியாக வைத்திருந்ததில் ஒரு நோக்கமிருந்தது. அவனுக்குக் கூட இருப்பதற்கு ஒரு துணை அவசியமாயிருக்கிறது என்பதை அவனுக்கு உணர்த்த தேவன் அவ்வாறு செய்தார்.

ஆதியாகமம் 2 : 19

எல்லா மிருகங்களுக்கும் பெயரிடுமளவிற்கு ஆதாம் மிகவும் புத்திசாலியாகத்தான் இருந்திருக்கிறான், ஒருவர் இவ்வாறு சொல்கிறார். தேவன் ஒரு யானையை ஆதாமிடம் கொண்டு வந்து "நாம் இதை எவ்வாறு அழைக்கலாம்?"என்று கேட்டபோது, ஆதாம் பதிலாக, "நல்லது, இது மற்றெதையும் விட ஒரு யானையைப் போல் தோற்றமளிக்கிறது. ஆகவே யானை என்ற பெயரிட்டு விடலாம்" என்றிருப்பான் என்கிறார். இது ஒரு நகைச்சுவைக்காக சொல்லப்பட்டாலும், ஒருவேளை ஆதாம் அவ்வாறே பெயரிட்டிருக்கலாம்.

ஆதியாகமம் 2 : 20

ஏற்ற துணை என்று பார்க்கிறோம். அதாவது ஒத்துப் போகிற, பதில் தருகின்ற ஒரு துணை. அந்த ஏற்ற துணை மனிதனின் மற்றுமொரு பாதியாக இருக்கிறாள். ஒரு மனிதன் திருமணமாகும் வரை பாதி மனிதனாகவே இருக்கிறான். அவன் திருமணத்திற்குப் பின்னரே முழு மனிதனாக மாறுகிறான். இதுவே தேவனுடைய நோக்கம். பெண்ணானவள் ஆணுக்கு பதில் தரவேண்டியவளாக இருக்கிறாள்.

அருமையானவர்களே, உங்கள் திருமண வாழ்க்கை எப்படிப்பட்டதாயிருக்கிறது? நீங்கள் தேவ சித்தப்படி ஒருவருக்கொருவர் ஒத்துப் போகிறவர்களாக, உதவி

www.Radio882.com

செய்கிறவர்களாக இருக்கிறீர்களா? ஏற்ற துணையாய் இருக்கிறீர்களா? இல்லாவிட்டால் இவரைத் திருமணம் செய்தது என் போதாத காலம் என்கிறீர்களா? தேவன் இணைத்த வாழ்க்கையை நீங்கள் வாழ முயற்சி செய்யுங்கள். இயேசுவினிடத்தில் வந்து கணவனும், மனைவியுமாக, கற்றுக் கொள்வீர்களென்றால் உங்கள் வாழ்க்கை இனிமையானதாக இருக்க முடியும். தேவன் விரும்புகிறபடி ஆசீர்வாதமானதாக அமையும். அதற்கு உங்களை அர்ப்பணிப்பீர்களா?

ஆதியாகமம் 2 : 21 – 22

இந்தப் பெண்ணானவள் ஆதாமிலிருந்து எடுக்கப்பட்டாள். ஆதாமின் விலாவிலிருந்து உண்டாக்கப்பட்டாள். மத்தேயு ஹென்றி என்ற வேத வல்லுநர் சொல்லும்போது, 'தேவன் அவளை, ஆதாமின் தலையிலிருந்து எடுக்கவில்லை. அப்படியெடுத்திருந்தால் அவள் அவனுக்கு உயர்ந்தவளாகியிருப்பாள். அவனுடைய பாதங்களிலிருந்தும் எடுக்கவில்லை. அப்படியானால் அவள் அவனிலும் தாழ்ந்தவளாகப்போயிருப்பாள். ஆனால் தேவன் ஆதாமின் விலாவிலிருந்து ஒரு எலும்பை எடுத்துத்தான் அவனுக்கு இணையாக அவள் இருக்கும்படியாய் சிருஷ்டித்தார்.. இதுவே தேவனுடைய நோக்கம். ஆணும் பெண்ணும் சமமாக இருக்கிறார்கள். அவள் மனிதனின் மற்றொரு பகுதியாக அவனுக்கு ஏற்ற துணையாக இருக்கிறாள். "மனைவிகளே, உங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" என்று சொல்லும்போது கர்த்தர் இந்த அர்த்தத்திலே கூறுகிறார். அவள், அவனுக்குப் பதில் கொடுக்கக் கடமைப்பட்டவளாக இருக்கிறாள் என்பதையே தேவன் அர்த்தப்படுத்துகிறார். அவனும் அவளும் பாதி பாதி மனிதர்களாக இருக்கிறார்கள். அவள் இல்லாமல் ஆதாம் வெறும் பாதி மனிதனாகவே இருக்கிறான். அவள் அழகு வாய்ந்தவளாகக் காணப்பட்டாள்.

ஆதியாகமம் 2 : 23

பெண்ணைக் குறிக்கும் எபிரெய வார்த்தையும் ஆணைக் குறிக்கும் வார்த்தையும் மிகவும் ஒன்றித்தே காணப்படுகிறது. அவள் மனிதனின் மற்றொரு பாதி. அவள் ஆதாமுக்கு பதில் சொல்ல வேண்டியவளாக இருக்கிறாள். மனிதனே குடும்பத்தினை நடத்திச் செல்கிறவனாக இருக்கவேண்டும் என்று தேவன் நோக்கமுடையவராக இருக்கிறார். ஆகவே, அவனை முதலாவது படைத்தார். பெண்ணை அதனைத் தொடர்ந்து படைத்தார். பெண் அவனைப் பின்பற்றிச் செல்ல வேண்டும். மனிதன் முன்னே செல்ல வேண்டும். தேவன் சரீர அமைப்பிலும் அவ்வாறே படைத்திருக்கிறார். பெண் பதிலளிக்க வேண்டியவளாக இருக்கிறாள்.

கணவன் தன் மனைவியைப் பார்த்து, "நான் உன்னில் அன்பாயிருக்கிறேன்" என்று சொல்லும்போது, அவள் அவனைப் பார்த்து, "நானும் உம்மில்

அன்பாயிருக்கிறேன்" என்று சொல்லக் கடமைப்பட்டவளாக இருக்கிறாள். கணவன் ஒரு காரியத்தைக் கேட்கும்போது, அவள் சரியாக பதில் சொல்லாதவளாகக் காணப்பட்டால், கணவன் தன்னுடைய நிலையில் சரியாக இல்லை என்று அர்த்தம். கணவன் குடும்பத்தலைவனாக இருந்து நடத்துகிறான். மனைவி பதில் உரைக்கிறாள். அவனைப் பின்பற்றுகிறாள்.

ஆதியாகமம் 2 : 24

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால், கணவன் மனைவிக்கு பொறுப்புடையவனாய் இருக்கிறான். அவன் தன்னுடைய தகப்பனுக்கோ, தாய்க்கோ கட்டுப்பட்டவனாக இருக்கப் போவதில்லை. அருமையானவர்களே, தேவன் ஏற்படுத்திய விதமாக நீங்கள் காணப்படுகிறீர்களா?

ஆதியாகமம் 2 : 25

இங்கே வேதத்தில் அதுகுறித்து கூறப்படாவிட்டாலும், அவர்கள் மகிமையின் ஒளியால் மூடப்பட்டிருந்தார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். இங்கே நமக்கு ஆண் – பெண்ணின் சிருஷ்டிப்பைக் குறித்து மிகவும் அழகான, விலையேறப் பெற்ற காரியங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இங்கே தேவன் திருமணம் என்றதொரு பந்தத்தை ஏற்படுத்துகிறதைப் பார்க்கிறோம். இதை அவரே மனிதர்களுக்கு தேவை என்று ஏற்படுத்தினார். ஆனால், மனிதர்கள் அதையே அவமானப்படுத்தும் வண்ணமாக, விவாகரத்தை நோக்கிச் செல்கிறார்கள். திருமணம் என்றதொரு உறவு வேண்டாமென்று தூக்கி எறிய விரும்புகிறார்கள். சங்கீதம் 2 : 3 சொல்வது போல, "அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மை விட்டு எறிந்து போடுவோம் என்கிறார்கள்" என்பது போல அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மனிதன் என்ன செய்ய முயற்சிக்கிறான் தெரியுமா? தேவனுடைய திட்டங்களை, அவருடைய கட்டுப்பாட்டை தன்னை விட்டகற்ற முயற்சிக்கிறான். தேவனே திருமணம் என்றதொரு அமைப்பைக் கொடுத்தார்.

தேவன் பெண்ணை மறைமுகமான சிருஷ்டிப்பாக்கினார். அதாவது, தேவன் அவளை மனிதனிலிருந்து எடுத்தார். அதன் மூலம், அவள் மனிதனுடைய ஒரு பகுதி என்பதை வெளிப்படுத்துகிறார். ஒரு தேவ மனிதர் அவ்வாறே கூறுகிறார். பெண்ணாணவள் வளர்ச்சி பெறாத ஆண் இல்லை. இருவரும் ஒருவரைப் போல் ஒருவர் இல்லை. அவர்களில் வித்தியாசம் இருக்கிறது. ஆனால் நாள்பட அவர்கள் ஒருவருக்கொருவர் பழகப் பழக ஒரே சிந்தையை உடையவர்களாகி விடுகிறார்கள். அவர்கள் தனிப்பட்ட மனிதர்களாக, தனித்தன்மையுடையவர்களாக இருந்தாலும், ஒருவரைப்போல் ஒருவர் இருக்கிறார்கள். தேவன் பெண்ணை மனிதனுக்காகப் படைத்த வரலாறு மிகவும் அழகான ஒன்றாகும்.

இந்த அதிகாரத்திலுள்ள கருத்துக்கள் மிகவும் சிறந்தவை. மனிதனுடைய படைப்பு, அவன் வைக்கப்பட்ட இடம், அவனுடைய தொழில், பொறுப்புக்களோடு அவன் இருந்த நிலை, அவனுக்குத் துணையின் தேவை, அடுத்து தேவன் பெண்ணை சிருஷ்டித்தது போன்று சிறந்த கருத்துக்களை இங்கேப் பார்க்கிறோம். கணவனுக்கும், மனைவிக்கும் இடையில் ஒரு ஒத்திசைவு இருக்க வேண்டும். தேவன் சொல்கிறார், "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள்." (எபேசியார் 5 : 25) இதுவே படைப்பின் வரலாறு.

அருமையானவர்களே, கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்கள், அவருடைய படைப்பையும், தாங்கள் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டதையும் புறக்கணிக்கிறார்கள். இந்த உலகம் அவரால் படைக்கப்பட்டிருக்கிறது என்றக் காரியத்தைக் கேலி செய்கிறார்கள். வேதம் தேவனால் அருளப்பட்டது என்பதையும் மறுக்கிறார்கள். ஆனால் இவ்வாறு செய்வதினால், அவர்கள் தங்களுக்கேக் கேடு உண்டுபண்ணிக் கொள்கிறார்கள். அநேகர் இதை செய்வதினாலேயே தற்கொலைக்கு நேராக செல்கிறார்கள். அவர்கள் தாங்கள் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்றும், தங்களைப் படைத்த தேவனுக்கு பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள் என்றும் அறியவேண்டியது அவசியம். இதை அறியாதபடியினாலேயே இன்று உலகில் தங்கள் உயிரை மாய்த்து கொள்வோரின் எண்ணிக்கை அதிகமாகக் காண்ப்படுகிறது.

நாம் இந்த 2ஆம் அதிகாரத்தில், தேவனோடு மனிதனுக்குள்ள நெருக்கம், மனிதன் தேவனை தொழுதுகொண்டது, மனிதன் தேவனோடு கொண்ட ஐக்கியம், மனிதன் தேவனுக்குச் செய்யும் சேவை, மனிதன் தேவனுக்கு உண்மையாக இருத்தல், தேவனிடத்திலிருந்து மனிதன் பெற்ற அதிகாரம், தேவன் மனிதனுக்குக் கொடுத்த சமுதாய வாழ்க்கைப் போன்ற காரியத்தைப் பார்த்தோம்.

அதிகாரம் 3

நாம் இப்பொழுது ஆதியாகமம் 3ஆம் அதிகாரத்தில் ஒருசில வசனங்களை தியானிக்க இருக்கின்றோம். நாம் வேதத்தில் மிகவும் முக்கியமானதொரு அதிகாரத்திற்கு இப்பொழுது வருகிறோம். அநேக வேதவல்லுநர்கள் இதை வேதத்தின் மிகவும் முக்கியமான அதிகாரம் என்பதை ஏற்றுக் கொள்கிறார்கள். உங்களுக்கு ஒருவேளை இது சந்தேகமாக இருக்குமானால், ஆதியாகமத்தில் முதல் இரண்டு அதிகாரங்களை வாசித்துவிட்டு, 3ஆம் அதிகாரத்தை விட்டுவிட்டு, 4 முதல் 11ஆம் அதிகாரம் வரை வாசித்துப் பாருங்கள். அவ்வாறு வாசிக்கும்போது, அங்கே ஒரு பெறும் வெற்றிடம் காணப்படுவதை நீங்கள் உணர்வீர்கள். அங்கே ஏதோ ஒன்று நடந்திருக்க வேண்டும் என்று உங்களால் உணர முடியும். ஆதியாகமம் முதல் இரு அதிகாரங்களில் மனிதன் குற்றமற்றவனாகக் காணப்படுகிறதையும், எல்லாமே பூரணமாக காணப்படுகிறதையும், மனிதனுக்கும் தேவனுக்குமிடையில் ஐக்கியம் காணப்படுகிறதையும் நாம் பார்க்கிறோம். ஆனால் 4ஆம்

www.Radio882.com

அதிகாரத்தை வாசிக்க ஆரம்பித்த மறு நிமிடமே, அங்கே பொறாமையையும், கோபத்தையும், கொலையையும், பொய்யையும், கலகத்தையும், நியாயத்தீர்ப்பையும் பார்க்கிறோம். 11ஆம் அதிகாரத்திற்குள்ளாகவே, இவையெல்லாவற்றையும் உங்களால் காணமுடியும். இவைகள் எங்கிருந்து வந்தன? இவைகள் எங்கே ஆரம்பமாயின? எங்கே பாவம் பிறந்தது? மனிதனை பொறுத்தமட்டில் இது ஆதியாகமம் 3ஆம் அதிகாரத்தில் ஆரம்பமாகிறது.

இந்த அதிகாரத்தைக் குறித்து அநேக வேத வல்லுநர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். "'இங்கே ஒரு பெரிய நாடகம் ஆரம்பமாகிறது. இது மனித வரலாற்று மேடையில் 6000 ஆண்டுகளாக அரங்கேற்றப்பட்டபோதும், இன்னும் நிறைவடையவில்லை. நம்முடைய மனித இனம் இன்று இவ்வாறு அழிந்து, வீழ்ந்துபோன நிலையில் காணப்படுவதற்கானக் காரணத்தை தேவன் விளக்குகிறார். இங்கே நாம் நம்முடைய எதிரியாகிய பிசாசின் தந்திரங்களைக் காண்கிறோம். தேவனுடைய கிருபை மனிதனை விட்டு நீங்கியிருக்கும்பொழுது, அவன் நீதியின் பாதையில் நடப்பதற்கு எவ்வளவு பெலனற்றவனாகக் காணப்படுகிறான் என்பதை இங்கே பார்க்கிறோம். இதில் பாவத்தின் ஆவிக்குரிய பாதிப்பைக் கண்டுகொள்கிறோம். மனிதன் தேவனை விட்டு ஓட முயற்சிக்கிறான் என்பதை அறிகிறோம். குற்ற மனச்சாட்சியுள்ள ஒரு பாவியோடு தேவன் எவ்வாறு செயல்படுகிறார் என்பதையும் நாம் பகுத்துணர்ந்து கொள்கிறோம். இங்கே. தன்னுடைய கைவேலையில், மனிதன் தன்னுடைய ஒழுக்க சீர்கேட்டை மூடிமறைப்பதைப் பார்க்கிறோம். இன்றைய காலத்தில் காணப்படும் மனிதனின் இயற்கையான சுபாவத்தில் ஒன்றாக அது ஆகிப்போய்விட்டது. அதற்கான அடிப்படை இங்கேயே இருக்கிறது. நம்முடைய அத்தியாவசியமான தேவையை சந்திப்பதற்கு தேவன் கிருபையாக உருவாக்கின காரியத்தைக் குறித்து இங்கே நமக்கு உபதேசிக்கப்படுகிறது. வேதப் புத்தகம் முழுவதிலும் ஓடுகிற ஆச்சரியமான தீர்க்கதரிசன நீரோடை இங்கே ஓட ஆரம்பிக்கிறதைப் பார்க்கிறோம். மத்தியஸ்தர் ஒருவர் இல்லாமல் மனிதன் தேவனை அணுக முடியாது என்பதை இங்கே நாம் கற்று கொள்கிறோம்" என்று அவர் கூறுகிறார்.

ஆதியாகமம் 3 : 1

இங்கே முதலாவது பிரிவில் மனிதனுடைய சோதனைக்கான சூழ்நிலை அமைக்கப்படுகிறதைக் காணகிறோம்.

இந்த வசனத்தில் நமக்கு சில கேள்விகள் எழும்புகின்றன. சோதனை எதற்கு? ஆதியாகமம் 1, 2ஆம் அதிகாரங்களில் மனிதன் மாசற்றவனாகப் படைக்கப்பட்டிருக்கிறான் என்று பார்க்கிறோம். ஆனாலும், அவன் நீதிமானாக சிருஷ்டிக்கப்படவில்லை. நீதி என்பது என்ன? சோதனையான சூழலின் மத்தியில் பாதுகாக்கப்படும் மாசற்ற தன்மையே நீதியாக இருக்கிறது. பார்த்தீர்களா? சோதனையானது ஒன்று உங்களை உருவாக்கும் அல்லது

அழித்து விடும். இரண்டில் ஒன்றைத்தான் செய்யும். மனிதனுடைய நடத்தையானது உருவாக்கப்பட வேண்டும். அது சோதனையின் மத்தியில்தான் உருவாக முடியும். மனிதன் பொறுப்புள்ளவனாகப் படைக்கப்பட்டுள்ளான். அவன் கீழ்ப்படியவும், மகிமைப்படுத்தவும், சேவை செய்யவும், தேவ இராஜ்யத்திற்கு கீழ்ப்படிந்திருக்கவும் படைக்கப்பட்டுள்ளான்.

மனிதன் தன்னைத்தானே சிருஷ்டித்துக் கொள்ளவில்லை. தேவனே அவனைப் படைத்தார். தேவன் மனிதனுக்குக் கொடுத்த நிபந்தனை அறிவுக்குப் பொருந்தாத ஒன்றல்ல. ஆதியாகமம் 2 : 17ஐ பாருங்கள். "ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." தேவன் எந்தக் கனியைக் குறித்து இங்கே கூறுகிறாரோ, அந்த ஒரே ஒரு மரம் மட்டும் அங்கே கனி கொடுக்கிறதாக இருக்கவில்லை. மற்ற மரங்களிலும் கனி உண்டாயிருந்தது. அவன் அந்தக் கனியை உண்ண இயலாமல் இருந்திருந்தால் அவன் பட்டினியாக கிடந்து இருந்திருப்பான் என்று சொல்வதற்கில்லை. அந்த ஏதேன் தோட்டத்திலே, கனிதரும் அநேக மரங்கள் இருந்தன. இந்த விலக்கப்பட்ட மரத்தின் கனியை அவன் சாப்பிட வேண்டும் என்பது அவசியமில்லை. மனிதன் மிகவும் பொறுப்புள்ளவனாகப் படைக்கப்பட்டிருப்பதை இங்கே பார்க்கிறோம்.

நாம் இங்கே முதலாம் வசனத்திலே, சர்ப்பத்தைக் குறித்துப் பார்க்கிறோம். இதைக் குறித்து பார்த்தவுடன், நமக்கு இங்கேயொரு நியாயமான கேள்வி எழும்பக்கூடும். இந்த சாத்தான் எங்கே இருந்து வந்தான்? அவன் எவ்வாறு இந்த ஏதேன் தோட்டத்திற்குள் புகுந்தான்? வேத வசனத்தினடிப்படையில் கூறுவோமானால் சர்ப்பமானது ஊர்ந்து செல்கிற பிராணியாக அப்போது காணப்படவில்லை. அவன் அங்கே தோட்டத்திற்குள்ளே எவ்வாறு வந்தான் என்று நமக்கு சொல்லப்படவில்லை. அவன் அங்கே இருந்தான் என்பது மாத்திரமே நமக்கு சொல்லப்படுகிறது. வேதவசனம் அநேகக் காரியங்களை சொல்லாமல் விட்டுவிடுகிறது. இந்த சர்ப்பமானது தேவனுடைய படைப்பு. அதை சாத்தான் எடுத்து பயன்படுத்திக் கொண்டான். இன்றும், சாத்தான் பயன்படுத்துகிற முறை இவ்வாறு இருக்கிறதல்லவா? 2 கொரிந்தியர் 11 : 14ல் பவுல் இவ்விதம் எழுதுகிறார். "அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே." ஆம், அவன் வேஷமிடுகிறவன். வேதத்தில் மற்றெந்தப் பகுதியையும் விட வெளிப்படுத்தின விசேஷம் சாத்தானைக் குறித்து அதிகம் சொல்கிறது.

வெளிப்படுத்தின விசேஷம் 12:9ஐ பாருங்கள், "உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுச்சர்ப்பம் தள்ளப்பட்டது. அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதனோடே கூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்" என்று பார்க்கிறோம். நாம் இன்று சிந்திப்பதுபோல,

www.Radio882.com

அந்த சர்ப்பமானது ஊர்ந்து செல்கிறதொன்றதாக இருக்கவில்லை. தேவனுடைய வார்த்தை அப்படிப்பட்டதொரு ஓவியத்தை நமக்குத் தரவில்லை. வெளிப்படுத்தின விசேஷம் 20 :2 "பிசாசென்றும், சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவும் கட்டி வைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின் மேல் முத்திரை போட்டான்."

இது மிகவும் வல்லமையான படைப்பாக இருக்கிறது. இதன் துவக்கத்தைக் குறித்து இங்கே ஆதியாகமத்தில் எதுவும் குறிக்கப்படவில்லை. ஏசாயா 14 மற்றும் எசேக்கியேல் 28ல், இந்த சிருஷ்டியின் தோற்றத்தை, ஆரம்பத்தைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதியாகமம் 3 : 2 -3

இந்த சர்ப்பம் ஏன் இந்தப் பெண்ணிடம் சென்று பேச வேண்டும்? அது ஏன் மனிதனிடம் செல்லவில்லை? தேவன் ஆதாமை சிருஷ்டித்தபோது, அவன் தோட்டத்திலுள்ள ஒரு மரத்தின் கனியைத் தவிர எல்லா மரத்தின் கனியையும் உண்ணலாம் என்று அவனிடம் கூறினார். ஆனால், இந்தப் பெண்மணி இறுதியாகப் படைக்கப்பட்டாள். அவளுக்கு நேரிடையாக இந்த செய்தி கிடைக்காமல், இரண்டாவதாக வந்து கிடைத்தது. மனிதன் மூலமாக இந்த செய்தியைப் பெற்றாள். ஆகவே, சர்ப்பம், முதலாவது பெண்ணிடம் சென்றது. மட்டுமல்ல, அவள் ஆதாமை விட நன்றாக படைக்கப்பட்டிருந்தாள். அதாவது, அவள் மிகுந்த மனதுருக்கமும், இரக்கமும் உடையவளாக இருந்தாள். ஆணை விட அவளே அதிகம் அறிந்து கொள்ள ஆவலுள்ள சுபாவம் உடையவளாகக் காணப்பட்டாள். இன்றும் கூட வரலாற்றில் அநேகப் புதிய கருத்துக்களை, தத்துவங்களை தோற்றுவிக்கிறவர்களாக பெண்கள் இருக்கிறதை நீங்கள் பார்க்க முடியும்.

சாத்தானுக்கு தான் செய்கிறது என்னதென்று தெரியும். அவன் செய்ததை கவனித்துப் பாருங்கள். அவன் மிகவும் தந்திரமாக செயல்படுகிறான். அவன் அவளிடம் இந்த கேள்வியைக் கேட்கிறான். "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?" இதன் மூலம், தேவனுடைய வார்த்தையின் மீது அவளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறான். அதோடுகூட அவளுடைய ஆர்வத்தைத் தூண்டி விட்டான். அதற்கு அவள், "நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தில் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம்" என்று தேவன் சொன்னதாகச் சொல்கிறாள். "தொடவும் வேண்டா" என்று தேவன் கூறியதாகச் சொல்வது வேதத்திலே இல்லாத ஒரு காரியம். அவள் இதைக் கூட்டிச் சொல்கிறாள்.

ஆதியாகமம் 3 : 4 – 5

"நீங்கள் சாகவே சாவதில்லை. அது நடக்கவே நடக்காது" என்று இங்கே சாத்தான் கூறுகிறதைப் பார்க்கிறோம். அவன் தேவனுடைய அன்பையும், சிறந்த தன்மையையும் குறித்து கேள்வி எழுப்புகிறான். "தேவன் நல்லவரானால், இந்தக் கட்டுபாட்டை ஏன் போடுகிறார்?" என்கிறான். மேலும், நீங்கள் சாவதில்லை என்று சொல்வதன் மூலம், தேவன் நீதியுள்ளவர் அல்ல என்ற கருத்தை உருவாக்குகிறான். அடுத்து, தேவனுடைய பரிசுத்தத்தைக் குறித்து கேள்வி எழுப்புகிறான். "நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை, தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்" என்கிறான்.

ஏவாள் தேவனுடைய வார்த்தையோடு சில வார்த்தைகளை கூட்டிக் கூறினாள் என்று முந்தின வசனத்தை தியானிக்கும்போது பார்த்தோம். இன்றும் அநேகர் இவ்விதமாகவேக் காணப்படுகிறார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தைகளில் சிலவற்றை நீக்கியும், வேறுசிலர், அதோடு கூட்டியும் போதிக்கிறார்கள். அல்லது புதிய கோட்பாட்டினை உருவாக்கி விடுவார்கள். இதனால் வஞ்சிக்கப்படுவோர் அநேகர். மட்டுமல்ல சாத்தான் இங்கே செய்த காரியத்தைக் குறித்தும் பார்த்தோம். அவன் தேவ வார்த்தையின் மீதும், அன்பின் மீதும், நீதியின் மீதும், பரிசுத்தத்தின் மீதும், அவருடைய சிறந்த தன்மைகளின் மீதும் சந்தேகத்தை எழுப்புகிறான். அருமையானவர்களே, நீங்கள் அவனுக்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? சிலர், நாம் நற்கிரியைகளை முதலாவது செய்தாலே இரட்சிப்பைப் பெற முடியும் என்பார்கள். சிலர், நாம் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பார்கள். யோவான் 6 : 29ல் இயேசு தரும் பதிலைப் பாருங்கள். "அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" என்கிறார். ஆம், நாம் விசுவாசத்தினாலேயே இரட்சிக்கப்படுகிறோம். இதை நீங்கள் உணர்ந்து விசுவாசிக்கிறீர்களா?

சாத்தான் தந்திரமான முறையிலே தேவனுக்கு முரண்படுகிறான். தேவனுடைய வார்த்தைக்கு பதில் தன் வார்த்தைகளை வைக்கிறான். ரோமருக்கு எழுதின புத்தகம், விசுவாசத்தின் கீழ்ப்படிதலைக் குறித்து நமக்கு நன்றாகப் போதிக்கிறது. விசுவாசமானது கீழ்ப்படிதலுக்கு நேராக நம்மை நடத்த வேண்டும். அவிசுவாசமோ கீழ்ப்படியாமைக்கு நேராக வழிநடத்துகிறது. சந்தேகம் எப்பொழுதுமே கீழ்ப்படியாமைக்கு நேராகவே நடத்தும். இந்த சந்தேகத்தை உருவாக்கவே சாத்தான் முயற்சிக்கிறான். அருமை நண்பரே, உங்களுக்கு சந்தேகங்கள் தோன்றும்போதெல்லாம் வேதத்தை இன்னும் அதிகமாக வாசியுங்கள். தேவனோடுள்ள நெருக்கத்தை நீங்கள் வலுப்படுத்துங்கள். ஜெபத்திலே இன்னும் சற்று அதிக நேரம் செலவு செய்யுங்கள். நீங்கள் தேவனிடம் எவ்வளவு நெருங்குகிறீர்களோ, அவ்வளவு தூரம் அவன் உங்களை விட்டு விலகிப் போவான்.

www.Radio882.com

ஆதியாகமம் 3 : 6

இங்கே சர்ப்பம் செய்கின்ற காரியம் நம்முடைய ஆர்வத்தைத் தூண்டுகிறது. அது மூன்று விதமானக் காரியங்களுக்கு நேராக அவர்களை சோதித்தது. முதலாவதாக சாத்தான் ஏவாளின் மாம்சத்திற்கு நேரான உணர்வுகளைத் தூண்டுகிறான். "அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும்" என்று உணர வைக்கிறான். ஆனால் அது முக்கியமில்லை. அடுத்து, "பார்வைக்கு இன்பமும்" என்று வஞ்சிக்கிறான். இதுவும் மாம்சத்திற்கு நேரான சோதனை. மேலும் இது அவனுடைய மனஇயல் தொடர்பானது. அடுத்ததாக, "புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமாய் இருக்கிறது" என்று அவளின் உணர்வுகளைத் தூண்டினான். இது மனிதனின் சமயம் சம்பந்தப்பட்ட காரியமாக இருக்கிறது.

வனாந்தரத்திலே இயேசுவுக்கும் இப்படிப்பட்ட சோதனைகளையே பிசாசானவன் கொண்டு வந்தான் என்று மத்தேயு அதிகாரத்தில் பார்க்கிறோம். முதலாவது அவன் இயேசுவைப் பார்த்து, "இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்" என்று சொன்னான். இதுவும் மாம்சத்திற்கு நேரான சோதனை. அங்கே, விருட்சம் புசிப்புக்கு நல்லது என்று அவன் சொன்னது போலவே இதுவும் இருக்கிறது. அடுத்து பிசாசு உலகத்தின் சகல இராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்துவிட்டு, பணிந்தால் அவருக்குத் தருவதாகச் சொன்னான். இது சிந்தைக்கு நேரான சோதனை. அந்த விருட்சம் பார்வைக்கு இன்பமாக இருக்கும்படி அவன் காண்பித்தான், அல்லவா? அதைப் போன்ற சோதனையே இது. இறுதியாக, "நீர் தேவனுடைய தமாரனேயானால் தாழக் குதியும்" என்று சொல்கிறான். இது மனிதனுடைய சமயம் சம்பந்தப்பட்ட சோதனை. ஆக, அவன் அன்றிலிருந்து இன்றுவரை இவ்வாறே செயல்படுகிறான். அவன் தன்னுடைய தந்திரங்களை மாற்றிக் கொள்ளவில்லை என்றே நினைக்கிறேன். அவன் இதேத் தந்திரங்களை, சோதனைகளை உங்களுக்கும், எனக்கும் கொண்டு வருகிறான். அவைகள் இன்றும் சரியாக செயல்படுவதினால் அவற்றைப் பயன்படுத்துகிறான். மனிதன் இன்றும் அதே காரியத்தில் வீழ்ந்து விடுவதால், அவன் தந்திர உபாயங்களை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

1 யோவான் 2 : 16ல் யோவான் இவ்வாறு எழுதுகிறார், "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்." "மாம்சத்தின் இச்சை" என்பது "விருட்சம் புசிப்புக்கு நல்லது" என்பதற்கு இணையானது. கண்களின்

www.Radio882.com

இச்சை – விருட்சம் பார்வைக்கு இன்பமானது என்ற சோதனை. அடுத்து ஜீவனத்தின் பெருமை "புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சம்" என்பதற்கு இணையானது. இவைகள், பிதாவினாலுண்டானவைகளல்ல, உலகத்தினாலுண்டானவைகள். இந்த மாம்சத்தின் பாவங்களெல்லாம் மனிதனுடைய இருதயத்திலிருந்து வருகின்றன என்று இயேசு கிறிஸ்து சொல்கிறார். இங்கேயே சாத்தானும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். அங்கே அவன் உணர்வுகளைத் தூண்டுகிறான். அதிலே அவன் வெற்றி பெற்றுக் கொண்டுதான் இருக்கிறான். அவர்கள் நன்மை, தீமை அறிந்து கொள்வார்கள் என்று அவர்களிடம் சாத்தான் சொல்லியிருந்தான். இப்பொழுது மனிதனுடைய வீழ்ச்சியினால் ஏற்பட்ட பாதிப்புக்களைப் பார்க்கப் போகிறோம்.

ஆதியாகமம் 3 : 7

"அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது" என்று வாசிக்கிறோம். இது அவர்களுடைய மனச்சாட்சியைக் குறிக்கிறது. மனிதன் வீழ்ச்சியுறும் முன்னர் அவனுக்கு மனச்சாட்சி என்பது கிடையாது. அவன் மாசற்றவனாக இருந்தான். தீமையை அறியாமல் இருப்பதே மாசற்றநிலை. மனிதன் மனச்சாட்சியை உண்டாக்கவில்லை. குற்றஞ்சாட்டுகிற ஒருவன், நமக்குள்ளே வசிக்கிறான். ஒரு மனோதத்துவ வல்லுனர், 'குற்ற மனச்சாட்சி என்பது மனிதனுடைய உடலிலே வலதுகையைப் போல, முக்கியமான அங்கமாக இருக்கிறது. மனோதத்துவ வழிகளினால், ஒரு மனிதன் தன் குற்ற மனச்சாட்சியிலிருந்து விடுதலை பெறமுடியாது' என்கிறார்.

"அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக் கச்சைகளை உண்டு பண்ணினார்கள்" என்று பார்க்கிறோம். அத்திமரம் மாத்திரமே இந்தப் பகுதியில் பெயர் குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் கவனித்தீர்களா? நன்மை, தீமை அறியத்தக்க விருட்சம் ஆப்பிள் மரமல்ல. சிலர் ஆப்பிள் மரம் என்று எண்ணுகிறார்கள். இந்த அத்தியிலைகள் அவர்களை மறைத்தன, ஆனால் உண்மையில் மூடவில்லை. ஆதாமும் ஏவாளும் தங்கள் பாவங்களை அறிக்கையிடவில்லை. அவர்கள் தங்களுடையப் பாவங்களை மூடவே நினைத்தார்கள். தாங்கள் தொலைந்துபோன நிலையிலிருப்பதை அவர்கள் ஒத்துக் கொள்ள முன்வரவில்லை.

இன்றைய மனிதனின் நிலையும் இவ்வாறுதான் இருக்கிறது. அவன் சமயம் என்ற பெயரில் தேவனை அணுக முயற்சிக்கிறான். பலதரப்பட்ட சடங்காச்சாரங்கள், பாரம்பரியங்களைச் சபையில் பின்பற்றி உண்மையான அணுகுதலை விட்டுவிட்டான். இயேசு கிறிஸ்து அத்திமரத்தை சபித்தார் என்பது உங்களுக்கு நினைவிலிருக்கலாம். அவர் அந்த அத்திமரம் போன்ற சமயத்தைத் தொடர்ந்து குற்றஞ்சாட்டினார். ஏனெனில் சமயம்

www.Radio882.com

என்பது பாவத்தின் மீது போடப்படும் ஒரு போர்வையாக, மூடலாகத்தான் இருக்க முடியுமே ஒழிய அது பாவத்தைப் போக்காது. நாம் இயேசுவினிடத்திலே வந்தே பாவமன்னிப்பைப் பெறமுடியும்.

இந்த சோதனையில், சாத்தான் மனித ஆத்துமாவிற்கும் தேவனுக்குமிடையில் வர விரும்புகிறான். வேறு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், அவன், மனிதனை தேவனைச் சார்ந்திருக்கும் பழக்கத்திலிருந்து திரும்ப முயற்சிக்கிறான். மனிதர்களைத் தன் பக்கமாக இழுத்து, மனிதர்களுக்கு தெய்வமாக விரும்புகிறான். மனிதன் அன்று ஒருவேளை திருடும்படி அல்லது பொய் சொல்லும்படி, அல்லது பொருளாசை கொள்ளும்படி சோதிக்கப்படவில்லை. மனிதன் தேவனுடைய வார்த்தையை சந்தேகப்படும்படியாகச் சோதிக்கப்பட்டான். ஐசுவரியவானான இளம் வாலிபனுக்கு இருந்த பிரச்சனை என்ன? அவன் தேவனை விசுவாசிக்கவில்லை. களைகளைப் பற்றிய உவமையில், களைகள் என்பது தேவனை விசுவாசிக்காதவர்களைக் குறிக்கிறது. சாத்தானுடைய அணுகுமுறையை நன்கு கவனியுங்கள். முதலாவது, ஏவாள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதாகக் கண்டாள். இரண்டாவது, பார்வைக்கு இன்பமும், மூன்றாவது புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாக இருக்கிறதைக் கண்டாள். சாத்தான் வெளிப்புறத்திலிருந்து உள்நோக்கிச் செல்கின்றான்.

மாறாக, தேவன் மனிதனுடைய இருதயத்திலிருந்து ஆரம்பிக்கிறார். சமயத்தை நீங்கள் வெளிப்புறத்திலிருந்துத் துடைத்து வீசி எறிந்துவிடலாம். ஆனால் தேவன் சமயத்திலிருந்து ஆரம்பிக்கிறதில்லை. அதன் வித்தியாசத்தை நாம் இவ்வாறு சொல்லலாம். கிறிஸ்தவம் என்பது சமயமல்ல. கிறிஸ்தவம் என்பது கிறிஸ்து என்ற நபராக இருக்கிறது. இன்று அநேக சமயங்கள் உலகில் இருக்கின்றன. ஆனால் இயேசு கிறிஸ்து மனிதனின் பிறப்பாகிய ஆரம்பத்திற்குச் சென்று, "நீ மறுபடியும் பிறக்க வேண்டியது அவசியம்" என்கிறார். வெளிப்பிரகாரமாக மிகவும் பக்திமான்களாகக் காணப்பட்டப் பரிசேயர்களை இயேசு பார்த்து, நீங்கள் பாத்திரத்தின் உள்பக்கத்தைக் கழுவுங்கள். நீங்கள் வெளிப்பக்கத்தில், பளிங்குக்கற்களால் கட்டப்பட்ட கல்லறை போன்று காணப்படுகிறீர்கள். அது பளபளப்பாக அழகாகத் தோன்றும். ஆனால், உட்பக்கத்திலோ, இறந்த மனிதனுடைய எலும்புகளால் நிறைந்திருக்கும் என்கிறார். என்னதொரு ஓவியத்தை இயேசு தருகிறார் பாருங்கள்! ஆதாமும், ஏவாளும் தங்கள் பாவத்தை அறிக்கை செய்வதை விட்டுவிட்டு, அத்தியிலைகளைத் தைத்து, தங்கள் சுயமுயற்சியினால் தங்களை மறைக்க முயற்சித்தார்கள். இன்று கூட அநேகர் இவ்விதமாகவே அத்தியிலைகளால் தங்களை மூடிக் கொள்ள விரும்புகிறார்கள். திருச்சபைக்குச் சென்று அங்கே சில பாரம்பரியமானக் காரியங்களையும், நற்கிரியைகளையும் செய்ய முனைகிறார்கள். தங்கள் இருதயத்தின் பாவங்களை அறிக்கையிடுவதை விட்டுவிட்டு, அந்தக் காரியங்களைச் செய்கிறார்கள்.

www.Radio882.com

அருமையானவர்களே, நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? உங்கள் பாவங்களை இயேசுவிடம் அறிக்கையிட்டதுண்டா? அல்லது அத்தியிலைகளால் உங்களை மூடிக் கொள்ள விரும்புகிறீர்களா?

ஆதியாகமம் 3 : 8 – 9

வெறும் பக்தியானது ஒன்றுக்கும் உதவாது. அது உங்களை தேவனிடத்திலிருந்து பிரிக்கும். ஆதாம் அவ்வாறே தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டான். அவன் அவரை விட்டு விலகிப் போனான். தேடிப் போகவேண்டிய இவன் தேவனைத் தேடவில்லை. ஆனால், தேவன் இவனை, மனிதனைத் தேடி வருகிறார். இன்றும் அவ்வாறுதான் அவர் மனிதர்களைத் தேடிவருகிறவராய் இருக்கிறார்.

ஆதியாகமம் 3 : 10 – 12

இங்கே ஆதாம் தன்னுடைய பாவத்தை அறிக்கையிடவில்லை என்பதை கவனித்துப் பாருங்கள். அவன் தன்னுடைய மனைவியையே குறை கூறுகிறான். அதாவது பழியை அவள் மீது போடுகிறான். தான் குற்றம் செய்தவன் என்பதை அவன் ஒத்துக் கொள்ளவே இல்லை. இன்றும் கூட அநேகர் அவ்விதமே காணப்படுகிறார்கள். "நான் சரியாகத்தான் செய்தேன். அவர்கள்தான் சரியில்லை" என்று சொல்கிற மனப்பாங்கு. அருமையான வர்களே, நீங்கள் பாவி என்று தேவனிடத்தில் ஒத்துக் கொண்டிருக்கிறீர்களா? இல்லாவிட்டால் மற்றவர்களைக் குற்றஞ்சாட்டுகிறீர்களா?

ஆதியாகமம் 3 : 13

இங்கே ஏவாளும், சர்ப்பத்தின் மீது குற்றஞ் சுமத்துகிறதைப் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 3 : 14

தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த சர்ப்பம், மனிதனை தேவனிடமிருந்துப் பிரித்துவிட்டது. தேவன் இந்த சர்ப்பத்தை நியாயந்தீர்ப்பதை இங்கே பார்க்கிறோம். இந்த சர்ப்பம் இப்பொழுது இருப்பது போன்று முன்பு ஊர்ந்து செல்கிறதாக இருக்கவில்லை. தேவனுடைய நியாயத்தீர்ப்பு அதன் மீது வந்த பிறகே அது அவ்வாறு ஆனது. தேவன் சாத்தான் மீது நியாயத்தீர்ப்பைக் கூறினார். அது மனிதன் மீது மிகப்பெரும் பாதிப்பை உண்டாக்கியது. அடுத்து வரும் வசனத்தை நீங்கள் மனப்பாடம் செய்ய வேண்டியது அவசியம். அது மேசியாவாகிய இரட்சகரின் வருகையைக் குறித்த முதலாவது தீர்க்கதரிச்சனம்.

ஆதியாகமம் 3 : 15

உனக்கும் (அதாவது சாத்தானுக்கும்), ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் (அதாவது கிறிஸ்து) உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய். இது ஒரு அற்புதமான வாக்கியமாகும்.

www.Radio882.com

இதிலே இறுதியான வெற்றி சொல்லப்பட்டிருந்தாலும் தொடர்ந்து யுத்தம் இருக்கிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது. உலகத்திலே நன்மைக்கும், தீமைக்குமிடையே தொடர்ந்து போர் நடைபெற்றுக்கொண்டேதான் இருக்கிறது. இந்தக் காரியத்தையே நாம் வேதத்தின் மீதியுள்ளப் பக்கங்களில் பார்க்கிறோம். இந்த போராட்டத்தைக் குறித்து இயேசு கிறிஸ்து யோவான் 8 : 44ல் இவ்வாறு சொல்கிறார். 'நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள், உங்கள் பிதாவினுடைய இச்சைகளின் படி செய்ய மனதாயிருக்கிறீர்கள். அவன் ஆதி முதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான், சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை. அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்' என்கிறார். இங்கே பிசாசு என்று சொல்லப்படுவது சாத்தான்.

தேவனுடைய பிள்ளைகளுக்கும், சாத்தானுடைய பிள்ளைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை இங்கே இயேசு கிறிஸ்து கூறுகிறார். யோவான் மீண்டும் இந்தப் போராட்டத்தைக் குறித்து 1 யோவான் 3 : 10ல் சொல்கிறார். "இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும் : நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல" என்கிறார். இவ்வாறு நாம் இந்த உலகில் இரண்டு விதமான வித்துக்கள் காணப்படுகிறதையும், அவர்களுக்கிடையே தொடர்ந்து போராட்டம் நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறதையும் குறித்து அறிகிறோம். இதிலே இறுதியாக தேவ பிள்ளைகளுக்கு வெற்றி நிச்சயம். ஆனால், தொடர்ந்து போராட்டம் இருக்கிறது என்பதை நாமறிய வேண்டும். ஒவ்வொரு மனிதனும் சோதனைகளை சந்தித்து அதிலே வெற்றி பெற வேண்டியது அவசியம். இயேசு இவ்வுலகிற்கு முதல்முறையாக வருமுன்னர், வெற்றி என்பது விசுவாசத்தினால் கீழ்ப்படிவதின் மூலமாகக் கிடைத்தது. இப்பொழுது இயேசு வந்தபிறகு, நாம் விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்துவோடு நம்மை அடையாளப்படுத்திக் கொள்கிறோம். சரி, இரட்சிக்கப்படுதல் என்றால் என்ன? கிறிஸ்துவில் இருப்பதே இரட்சிப்பாகும். சிருஷ்டிப்பில் மூன்று வரிசைகளில் மனிதனும் ஒருவனாக இருக்கிறான். தேவதூதர்கள், மனிதர்கள் மற்றும் மிருகங்கள். மிருகங்களுக்கு தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது. ஆனால் தேவதூதர்களுக்கும், மனிதர்களுக்கும் இந்த உரிமை இருக்கிறது. அவன் தீர்மானம் எடுக்கிறான். அவன் எடுத்த தீர்மானத்திற்கு அவன் பொறுப்புடையவனாக இருக்கிறான்.

இங்கே "அவள் வித்துக்கு" என்று சொல்லப்படுகிறதைக் கவனியுங்கள். இங்கே ஆணுடைய வித்து என்று சொல்லப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் கன்னி பிறப்பை இது குறிக்கிறதாய் இருக்கிறது. தேவன் தோட்டத்திற்கு வந்து மனிதனைத் தேடுகிறார். "நீ

எங்கே இருக்கிறாய்?" என்கிறார். அவன் இருக்க வேண்டிய இடத்திலே, இருக்க வேண்டிய விதத்திலே இல்லை. தேவன் மனிதனைத் தேடி வருகிறார். நீங்கள் வேறு எந்த நம்பிக்கையிலும், கொள்கையிலும், இப்படிப்பட்ட காரியத்தைக் காணமுடியாது. தேவன் மனிதனை தேடிவருவதே இரட்சிப்பு. மனிதன் தேவனை விட்டு ஓடிப்போய் விட்டான். தேவன் அவனைத் தம்மிடமாக அழைத்து, "நீ எங்கே இருக்கிறாய்?" என்கிறார். ஒரு தேவமனிதர் இவ்வாறு கூறுகிறார். "அந்த அழைப்பு தேவனுடைய நீதியின அழைப்பாக இருக்கிறது. ஏனெனில் அந்த நீதி பாவத்தைக் கண்டுகொள்ளாமல் விடாது. இது தேவனுடைய துயர அழைப்பின் சத்தம், அது பாவிக்காக வருத்துகிறதாக இருக்கிறது. இது தேவ அன்பின் அழைப்பு. அது பாவத்திற்கு மீட்பளிக்கிறதாக இருக்கிறது" என்கிறார். எல்லாவற்றையும் நாம் 15ஆம் வசனத்தில் பார்க்கிறோம். இதில் வரப்போகும் இரட்சகரைப் பற்றிய வாக்குத்தத்தத்தைப் பார்க்கிறோம்.

நாம் வேதத்தின் பல பகுதிகளிலே, தேவன் மனிதனைத் தேடி வருகிறதைப் பார்க்கிறோம். பவுல் ரோமர் 3 : 11ல் எழுதுகிறார். "தேவனைத் தேடுகிறவன் இல்லை." யோவான் 15 : 16ல் இயேசு கூறுவதைப் பாருங்கள். "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்" என்கிறார். நாமும் கூட யோவானோடு இவ்வாறு சொல்ல முடியும். 'அவர் முந்தி தம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்'. 1 யோவான் 4 : 19 தேவன் மனிதனைத் தேடுகிறார். அவர் மனிதனுக்கு இரட்சிப்பை அருளுகிறார். ஆனால், தேவனுடைய பிள்ளைகளுக்கும், சாத்தானுக்கும் அவனுடைய பிள்ளைகளுக்குமிடையே நீண்ட யுத்தம் நடந்து கொண்டேயிருக்கிறது.

ஆதியாகமம் 3 : 16

இது பெண்ணிற்குக் கொடுக்கப்பட்ட தேவ நியாயத் தீர்ப்பாகும். அவள் வேதனையில்லாமல் உலகில் பிள்ளை பெற இயலாது. இது இன்றைக்கும் உண்மையாக நம்முன்னே காணப்படுகிறதல்லவா? மனித குடும்பமானது வருத்தத்தின் வழியாக வந்தே வாழ்வில் சந்தோஷத்தைப் பெற வேண்டும்.

ஆதியாகமம் 3 : 17 – 19

இங்கே மனிதன் மீது வந்த நியாயத் தீர்ப்பைக் குறித்துப் பார்க்கிறோம். இப்பொழுது மனிதனுக்கு இறப்பு வருகிறதாயிற்று. மரணம் என்றால் என்ன? சரீரத்தில் நடக்கும் மரணமானது, அந்த நபரையும், ஆவியையும், ஆத்துமாவையும், சரீரத்தினின்று பிரித்து விடுகிறதாயிருக்கிறது. பிரசங்கி 12 : 7 சொல்கிறது, "இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும்

www.Radio882.com

போகும்." மனிதன் இறுதியாக தேவனுக்கு பதில் கூற வேண்டியவனாக இருக்கிறான். அவன் இரட்சிக்கப்பட்டவனாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவன் தேவனுக்கு பதில் சொல்ல வேண்டும். ஆனால் ஆதாம் அந்தக் கனியை உண்ட நாளிலே மரிக்கவில்லை என்று பார்க்கிறோம். இதன் அர்த்தம் என்ன? ஆதாம் கீழ்ப்படியாமற்போன அந்த நிமிடத்திலே ஆவிக்குரிய மரணத்தைத் தழுவினான். அவன் தேவனை விட்டு பிரிக்கப்பட்டான். மரணம் என்பது பிரிவினை. அப்போஸ்தலராகிய பவுல் எபேசியருக்கு எழுதும்போது, அவர்கள் அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களா யிருந்தார்கள் என்று குறிப்பிடுகிறார். இது அவர்களின் சரீரப் பிரகாரமான மரணத்தைக் குறிக்கவில்லை. அவர்கள் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்தார்கள். ஆவிக்குரிய மரணமடைந்தவர்களாகக் காணப்பட்டார்கள் என்கிறார்.

கெட்டக்குமாரன் கதையிலே, இளையகுமாரன் திரும்பி வந்தபோது, தகப்பனார் மூத்த குமாரனைப் பார்த்து, "என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான், காணாமற் போனான், திரும்பவும் காணப்பட்டான்" என்று சொல்கிறார். (லூக்கா 15 : 24) மரித்தான் என்றால் என்ன? அவன் மரித்துப் போயிருந்தான். சரீரத்தில் அல்ல; ஆத்துமாவில். அவன் தந்தையிடமிருந்து பிரிந்திருந்தான். தந்தையிடமிருந்து பிரிந்திருப்பது என்பதன் அர்த்தம் மரணமே. மார்த்தாளைப் பார்த்து, இயேசு கிறிஸ்து இவ்வாறு கூறுகிறார், யோவான் 11 : 25, "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்." இங்கேயும், மரணம் என்பது ஆவிக்குரிய மரணத்தைக் குறிக்கிறது. அதாவது தேவனை விட்டு பிரிக்கப்பட்டிருப்பது. ஆதாம், அந்தக் கனியை சாப்பிட்ட மாத்திரத்தில் ஆவிக்குரிய வாழ்வில் மரித்தான். ஆகவேதான் அவன் தேவனை விட்டு ஓடி மறைந்தான். தன்னை மூடிக்கொள்ள அத்தியிலைகளை உண்டு பண்ணினான்.

ஆதியாகமம் 3 : 20

காயீனும், ஆபேலும், ஏதேன் தோட்டத்தில் பிறந்தார்கள் என்று அர்த்தமல்ல. அவர்கள் ஆதாம், ஏவாளின் வீழ்ச்சிக்குப் பிறகு பிறந்தவர்கள் என்பது உறுதி.

ஆதியாகமம் 3 : 21

மிருகத்தின் தோல் வேண்டுமென்றால், அந்த மிருகம் கொல்லப்பட வேண்டும். இதுவே பலியின் ஆரம்பம் என்று நான் நினைக்கிறேன். அதைப் பிறகு தேவன் மனிதர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார். அதற்குப் பதிலாக அவர்களுக்கு தோல் ஆடைகளை உருவாக்கிக் கொடுத்தார். ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேற்றப்பட்ட பின்னர், அவர்கள் அந்த இரத்த பலியை திரும்பிப் பார்த்தார்கள். மோசேயைக் கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவன் உருவாக்கின கிருபாசனமும்

www.Radio882.com

அவ்வாறே இருந்தது. அந்த கிருபாசனத்தில் இரு கேருபீன்கள் கீழ் நோக்கி அங்கேயிருந்த இரத்தத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன. அவ்வாறே தேவனிடம் செல்லும் வழி இருக்கிறது.

நாம், இந்த அத்தியிலையினாலான உடையிலிருந்து நான்கு சிறந்த பாடங்களைக் காணமுடியும். மேலும் தேவன் அந்த தோலினாலான உடையை கொடுத்ததின் காரணத்தையும் அதில் பார்க்க முடியும். 1. மனிதன் தேவனை அணுகப் போதுமான அளவு தன்னை மூடியிருக்க வேண்டும். நீங்கள் உங்களுடைய நற்கிரியைகளின டிப்படையில் தேவனிடத்தில் வர இயலாது. நீங்கள் எவ்வாறு இருக்கிறீர்களோ அவ்வாறே அவரிடத்தில் வரவேண்டும். பாவியாகவே அவரிடத்தில் வரவேண்டும். 2. அத்தியிலை மூடலை அவர் ஏற்றுக் கொள்ளமாட்டார். அது அவர்களால் தயாரிக்கப்பட்டது. அவர்களுடைய தயாரிப்பை தேவன் ஏற்றுக் கொள்வதில்லை. 3. அந்த ஆடையை இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

தேவனுடைய கோபத்திற்கும், தனக்குமிடையில் மனிதனுக்கு ஒரு பதிலாள் தேவையாயிருக்கிறது. இது இன்றைய நாட்களிலும் அவசியமே. அது இயேசு கிறிஸ்து. மனிதர்கள் தேவனுக்கு முன்பாக ஒரு சரியான நிலைக்கு வருவதே உலகில் கடினமானக் காரியமாக இருக்கிறது. ஒரு தேவ மனிதரின் ஜெபத்தைப் பாருங்கள். அதுவே உங்களுடைய ஜெபமாகவும் இருக்கட்டும்.

அவன் சாதிப்பதற்காக வலிமைக்காக ஜெபித்தான், ஆனால் அவன் கீழ்ப்படிவதற்காக பெலவீனமாக்கப்பட்டான். அவன் பெரிய காரியங்களை செய்வதற்காக ஆரோக்கியத்திற்காக ஜெபித்தான். ஆனால் அவன் சிறந்த காரியங்களை செய்வதற்காக அவனுக்கு பெலவீனம் கொடுக்கப்பட்டது. அவன் மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ள செல்வத்துக்காக ஜெபித்தான். அவன் ஞானவானாக அவனுக்கு தரித்திரம் கொடுக்கப்பட்டது. அவன் மனிதர்களின் புகழ்ச்சியைப் பெற அதிகாரத்திற்காக ஜெபித்தான். தேவன் தனக்குத் தேவை என்பதை உணர, அவனுக்கு பெலவீனம் கொடுக்கப்பட்டது. அவன் வாழ்க்கையை அனுபவிப்பதற்காக எல்லாவற்றிற்காகவும் ஜெபித்தான். ஆனால், எல்லாவற்றையும் அனுபவிப்பதற்காக அவனுக்கு ஜீவன் கொடுக்கப்பட்டது. அவன் நம்பியிருந்த, கேட்ட எதையுமே பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவன் ஜெபம் பதிலைப் பெற்றிருந்தது. அவன் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டான்.

நண்பரே, இது உங்களுடைய ஜெபத்திற்கு அர்த்தத்தைக் கொடுத்திருக்கும் என்று நம்புகிறேன். நம் தேவன் பதிலளிக்கிறவர். நமக்கு நலமானவற்றை, நாம் பரலோகத்திற்கு தகுதியாகும்படியான காரியங்களையே தேவன் நமக்கு தருவார்.

அருமையானவர்களே, நீங்களும், நானும், தேவனிடத்தில் பாவியாக வரும்போதே இரட்சிப்பைப் பெற முடியும். நீங்கள் உங்கள் நிலையை ஒத்துக் கொள்ள வேண்டும். என் நிலை இதுதான் கர்த்தாவே. என் பாவங்களைக் கழுவும். பரிசுத்த ஜீவியம் செய்ய உதவும் என்று ஜெபியுங்கள். உங்கள் ஜெபத்திற்கு பதிலுண்டு.

www.Radio882.com

ஆதியாகமம் 3 : 22 – 23

இங்கே நாம் ஒன்றைக் குறித்து மகிழச்சி அடையலாம். தேவன் மனிதனை நித்தியமாக பாவத்திலேயே வாழ்ந்து விட விட்டுவிடவில்லை. நம்மையும் அவ்வாறு விட்டு விடவில்லை. இதுவே உண்மையில் ஆசீர்வாதம்!

ஆதியாகமம் 3 : 24

தேவன் வழியை அடைத்துவிட்டார் என்று இதற்கு அர்த்தமல்ல. ஜீவனுக்குப் போகிற வழி இன்னும் திறந்தே இருக்கிறது. மனிதன் தேவனிடத்தில் வரலாம். ஆனால் அந்த வழி இப்பொழுது ஜீவ விருட்சத்தின் மூலமாக இல்லை. இரட்சிப்பானது பலியின் மூலமாக வரவேண்டும். மனிதன் திரும்பிப் பார்க்கும்போது, அங்கே இரத்தபலி செலுத்தப்பட்டிருப்பதைக் காணமுடியும்.

அதிகாரம் : 4

ஆதியாகமம் 4ஆம் அதிகாரத்திலிருந்து சில வசனங்களை இப்பொழுது தியானிக்க இருக்கின்றோம். நாம் 3ஆம் அதிகாரத்திலே பாவத்தின் வேரைப் பார்த்தோம். 4ஆம் அதிகாரத்திலே பாவத்தின் கனியைப் பார்க்கிறோம். இந்த அதிகாரத்தில், ஆதாம் நன்மை தீமையை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்ததினால் எவ்வளவு துன்பப்பட்டான் என்று மாத்திரம் நாம் பார்க்கப் போவதில்லை. இந்த 4ஆம் அதிகாரத்தில் அவனுக்கு எவ்வளவாக கேடு சம்பவித்தது என்றும் பார்க்கப் போகிறோம். அவனுடைய அவிசுவாசத்தினாலும், கீழ்ப்படியாமையினாலும், அவன் தேவனை விட்டுத் திரும்பி, பாவம் செய்தான். இதன் மூலமாக, அவன் மீதும், மனித இனத்தின் மீதும் தேவ நியாயத் தீர்ப்பைக் கொண்டு வந்தான். உங்களுக்கும், எனக்கும் இந்த சுபாவம் வந்தது இதனால்தான். நம்முடைய தகப்பனாகிய ஆதாமின் அதே பாவ, கெட்ட சுபாவம் நமக்கும் வந்துவிட்டது. இவையெல்லாமே, ஆதாம் ஏவாளின் இரண்டு குமாரர்களின் கதையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கு அதிகக் குழந்தைகள் இருந்திருக்கலாம். ஆனால் நமக்கு இங்கே இரண்டு குமாரர்களுடைய காரியங்கள் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது.

ஆதியாகமம் 4 : 1

இந்தப் போராட்டம் நீண்டதாக இருக்கும் என்று ஆதாம் ஏவாள் நிச்சயமாக எதிர்பார்த்திருக்கமாட்டார்கள் என்பதை இது வெளிப்படுத்துகிறது. காயீன் பிறந்தபோது, ஏவாள் இவ்வாறு கூறியிருக்க வேண்டும். 'நான் தேவனிடத்திலிருந்து இந்த மனிதனைப் பெற்றேன். ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று தேவன் கூறினாரே, அந்த வித்தின் மகன் இவன்தான்' என்றிருப்பாள். ஆனால் காயீன் அப்படிப்பட்டவன் அல்ல. அவன் கொலைபாதகன். அவன் இரட்சகரல்ல. இரட்சகர் வருவதற்கு இது எவ்வளவோ முந்தின காலம். இரட்சகர் வர குறைந்தது ஆறாயிரம் ஆண்டுகள் ஆயிற்று என்று நம்புகிறேன். இதைக்காட்டிலும் நீண்ட காலமாக, ஸ்திரீயின் வித்திற்கும், சர்ப்பத்தின் வித்திற்கும் போராட்டம் இன்னும் நடந்து கொண்டேயிருக்கிறது.

ஆதியாகமம் 4 : 2

இங்கே இரண்டு சகோதரர்களைப் பார்க்கிறோம். இரண்டு விதமான தொழில் புரிகிறவர்கள்.

ஆதியாகமம் 4 : 3

"சிலநாள் சென்ற பின்பு" என்பது ஓய்வு நாளைக் குறிக்கிறது. தேவன் ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்த நாள் அது. 'கொண்டு வந்தான்' என்று இங்கே சொல்லப்படுவது, ஒரு குறிப்பிட்ட இடத்தைக் குறிக்கிறது. அவர்கள் தேவனுக்கு காணிக்கைகளோடு ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்து அவரைத் தொழுது கொண்டார்கள். இவையெல்லாவற்றையும் அவர்கள் வெளிப்படுத்தலினால் செய்தார்கள் என்பதை அறிகிறோம். எபிரேயர் 11 : 4ல் இவ்விதம் வாசிக்கிறோம். 'விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான். அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான், அவனுடைய காணிக்கைகளைக் குறித்து, தேவனே சாட்சி கொடுத்தார், அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்' என்று பார்க்கிறோம். எவ்வாறு விசுவாசத்தினாலே ஆபேல் காணிக்கை செலுத்த முடிந்தது? விசுவாசம் கேட்பதினாலே வரும். அது தேவனுடைய வசனத்தைக் கேட்பதினாலே வரும். (ரோமர் 10 : 17) தேவன் அவனுக்கு இதுகுறித்து தம்முடைய வார்த்தைகளை கொடுத்திருந்திருப்பார். இல்லாவிட்டால், ஆபேல் ஒருபோதும் காணிக்கையை விசுவாசத்துடன் கொண்டு வந்திருக்க முடியாது. இவ்வாறே ஆபேல் விசுவாசத்தோடே காணிக்கையைக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் காயீன் அவ்வாறு கொண்டு வரவில்லை. காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான். இந்தக் கனிகளில் எந்தப் பழுதும் இல்லை. அவன் மீதியானவைகளைக் கொண்டு வந்தான் என்றும் எண்ணாதீர்கள். ஊழியங்களுக்கு, ஏழைகளுக்கு பழைய துணிகளை கொடுப்பது போன்ற செயலல்ல அவனுடையது. சிறந்த கனிகளையேக் கொண்டு வந்தான். ஆனால் விசுவாசத்துடன் கொண்டு வரவில்லை. நீங்கள் எவ்விதம் காணிக்கை செலுத்துகிறீர்கள்?

ஆதியாகமம் 4 : 4 – 5

சிலர் இவ்வாறு சொல்வதுண்டு, "காயீன் செய்ததில் எந்தவொரு தவறும் இருந்ததாகத் தெரியவில்லை." விசுவாச துரோகத்தைக் குறித்துப் பேசும்போது யூதா, 11ஆம் வசனத்தில், "இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து" என்று சொல்கிறார். காயீனுடைய வழி எது? காயீன் தேவனுக்குக் காணிக்கை கொண்டு வந்தபோது, அதை விசுவாசத்தோடேக் கொண்டு வரவில்லை. அவன் தன் விருப்பப்படி வந்தான். மனித சுபாவம் தீமையானது என்பதை மறுக்கிறதாக அவனுடைய காணிக்கை இருந்தது. அதாவது மனித சுபாவம் நல்ல சுபாவம் என்ற தைரியத்தில் காணிக்கைக் கொண்டு வந்தான். தேவன் சொல்கிறார், "நீங்கள் உலகில் வரப் போகின்ற மீட்பரைக் குறிக்கும் வண்ணமாக சிறிது இரத்தபலிகளைக் கொண்டு வாருங்கள். அதனடிப்படையிலேயே வாருங்கள். உங்களுடைய சொந்த கரத்தின் கிரியைகளை எடுத்துக் கொண்டு என்னிடத்தில் வராதீர்கள்" என்கிறார்.

மேலும், தேவனிடத்திலிருந்து மனிதன் பிரிக்கப்பட்டிருக்கிறான் என்பதையும் காயீனுடைய காணிக்கை மறுக்கிறது. எல்லாமே சரியாக இருக்கிறது என்பதுபோல அவன் செயல்பட்டான். இன்று உலகளாவிய சகோதரத்துவம், எல்லோருக்குமே ஒரே பிதா போன்ற தத்துவங்கள் அதிகமாகப் பேசப்படுகின்றன. அருமையானவர்களே, இன்று நம் காரியங்களெல்லாம் சரியாக இல்லை. உலகில் உள்ள எல்லோருமே தேவனுடைய பிள்ளைகளாகப் பிறக்கவில்லை. தேவனுடைய பிள்ளைகளாக வேண்டுமானால் நாம் மறுபடியும் பிறக்க வேண்டும். மறுபடி பிறந்தாலே ஒருவன் தேவனுடைய பிள்ளையாக முடியும். உலகிலுள்ள யாவருக்கும் ஒரே தந்தை, பிதா இல்லை. மனிதன் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறான். காயீன் இதை அங்கீகரிக்கவில்லை. இன்றும் அநேகர் அவ்விதமாகவேக் காணப்படுகிறார்கள்.

மனிதனால் தேவனுக்கு தன்னுடைய கிரியைகளை காணிக்கையாகக் கொடுக்க முடியாது என்பதை காயீனுடைய காணிக்கை மறுக்கிறதாக இருக்கிறது. காயீன் தன்னால் அவ்வாறு காணிக்கை செலுத்த முடியும் என்று நினைத்தான். வேதம் சொல்கிறது, தீத்து 3 : 5, "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்." காயீனும், ஆபேலுக்குமிடையில் உள்ள நடத்தை வித்தியாசம் இங்கே முக்கியமல்ல. அவர்கள் கொண்டு வந்த காணிக்கையில்தான் வித்தியாசம் இருக்கிறது. இந்த இருவரும் ஒரே குடும்ப சூழ்நிலையில்தான் வளர்ந்தார்கள். அவர்கள் கொண்டு வந்த காணிக்கையில்தான் வித்தியாசமிருக்கிறது.

இன்றைய நாட்களிலும் அவர்கள் கொண்டு வருகிற காணிக்கை மக்களை வேறுபடுத்திவிடும். எந்த ஒரு கிறிஸ்தவனும் மற்றவர்களை விட சிறந்ததொரு இடத்தை எடுத்துக் கொள்ள முடியாது. ஒருவனை எது கிறிஸ்தவனாக்க முடியும் தெரியுமா? அவன் மற்றவர்களைப்போல் தானும் ஒரு பாவி என்று உணரும்போதே. அந்த மனிதனுக்கு ஒரு பலி அவசியமாயிருக்கிறது. அந்த மனிதனுடைய இடத்தை இன்னுமொருவர் எடுத்து அந்த இடத்தில் மரிக்க வேண்டும். ஏனெனில் பாவத்திற்குத் தண்டனை உண்டு. அதிலிருந்து நாம் விடுதலை அடைய வேண்டுமானால் நம்முடைய இடத்தில், அந்த பாவத்திற்கானத் தண்டனையை ஒருவர் பெற்று நிறைவேற்ற வேண்டும்.அதை இயேசு கிறிஸ்து செய்தார். அப்போஸ்தலனாகிய பவுல் இயேசு கிறிஸ்துவைக் குறித்து இவ்வாறு ரோமர் 3 : 26ல் சொல்கிறார், "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதாரபலியாக அவரையே ஏற்படுத்தினார்." ஆகவே பவுலால் தொடர்ந்து இவ்வாறு எழுத முடிந்தது, ரோமர் 10 : 3, “எப்படியென்றால் அவர்கள் தேவ நீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலை நிறுத்தத் தேடுகிறபடியால், தேவ நீதிக்கும் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்” என்கிறார். இன்னும் அநேகர் இப்படியேக் காணப்படுகிறார்கள் என்பதை இது அழகாகப் படம் பிடித்துக் காண்பிக்கிறது. அவர்கள் தேவனைப் பிரியப்படுத்துவதற்கான முயற்சியை சமயத்தின் மூலம் செய்கிறார்கள். சபையில் சில நற்காரியங்களை செய்வதின் மூலம் இதைப் பெற்று விடமுடியும் என்று நம்புகிறார்கள். தேவனுடைய நீதி உங்களிடத்தில் வரக்கூடியதாகவே இருக்கிறது. இது பூரணமான

நீதியாக இருக்க வேண்டும். அவை இயேசுவின் மூலமாக உங்களுக்கு கொடுக்கப்படுகிறதாக இருக்கிறது. ரோமர் 4 : 25 சொல்கிறது. "அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்." அதாவது நம்முடைய நீதிக்காக அவர் எழுப்பப்பட்டார். அவர் நம்முடைய இடத்தை எடுத்துக் கொண்டார். 2 கொரிந்தியர் 5 : 21, "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்." அடுத்து அப்போஸ்தலனாகிய பவுல பிலிப்பியர் 3 : 9ல், "நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும் படிக்கும், நியாயப் பிரமாணத்தினால் வருகிற சுய நீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும் படிக்கும்" என்கிறார். ஆனால் காயீன் நீதி, சுயநீதியாகும். ஆனால், ஆபேலின் காணிக்கை விசுவாசத்துடன் கொண்டு வரப்பட்டது. இயேசுகிறிஸ்துவின பலியை எதிர்பார்த்து செலுத்தப்பட்டதாக அது இருந்தது. காயீனும், ஆபேலும் சேர்ந்து வந்து தேவனைத் தொழுது கொணடார்கள் என்று நாம் பார்த்தோம். இந்த இரண்டு பேரும், முழுவதும் ஒத்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் இருவரும் ஆதாம் ஏவாளின் பிள்ளைகளே, அவர்களுககுள் ஓரே இரததம் ஓடியது. ஆனாலும், அவர்கள் காணிக்கையில் வித்தியாசம் உண்டானது. ஆபேல் அதை விசுவாசத்துடன் படைத்தபடியால் தேவன் அதை அங்கீகரித்துக் கொண்டார். காயீன் அப்படியல்ல. அவனுடைய காணிக்கை தேவ அங்கீகரிப்பைப் பெறவில்லை.

ஆதியாகமம் 4 : 6 -7

காயீன் ஏன் எரிச்சலடைந்தான்? அவன் தன்னுடைய சகோதரனைக் கொலை செய்யுமளவிற்குக் கோபமுற்றவனாக இருந்தான். ஒரு கொலை நடக்குமுன்னர் அங்கே கோபம் உண்டாயிருக்கும். இயேசு கிறிஸ்து இவ்வாறு சொல்கிறார், "நீ உன் சகோதரனிடத்தில் காரணமில்லாமல் கோபம் கொண்டாயானால், நீ கொலைக் குற்றத்திற்கு ஏதுவாயிருப்பாய்." கோபத்தின் பின்னே பொறாமை இருக்கிறது. பொறாமையின் பின்னே பெருமையிருக்கிறது. யாக்கோபு இவ்வாறு சொல்கிறார், யாக்கோபு 1 : 15, "பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்." காயீனின் கோபம் கொலை செய்யத் தூண்டியது. அதற்குப் பின்னே, அவனுடைய பெருமையும், பொறாமையும் இருந்தது. அருமையானவர்களே, உங்கள் கோபத்திற்கும் காரணம் இவைகளே.

தேவன் காயீனுடைய செயலுக்கேற்றபடி அவனை நடத்தினார். தேவன் காயீனைப் பார்த்து, "நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ?" என்று கேட்டால். இதற்கு சரியான அர்த்தம் என்னவென்றால், "உனக்கு மேன்மை இல்லையா?" என்பதாகும். இஸ்ரவேலில் மூத்த மகன்கள் மிகவும் பிரதான இடத்தைப் பெறுவார்கள். காயீன் தான் அதை இழந்து போய்விட்டதாக நம்புகிறான்.

ஆகவே தேவன் அவனிடம், "அவன் நன்மை செய்தால், அவன் அதை இழந்து போக எந்த வாய்ப்பும் இல்லை" என்கிறார். அவன் நன்மை செய்யும்போது, தேவன் ஆபேலை ஏற்றுக்

கொண்டது போல அவனையும் ஏற்றுக் கொள்ளும் நிலைக்குக் கொண்டு வரும். ஆபேல் தன்னை பாவியென்று ஒத்துக்கொண்டு, பலி செலுத்தியது தேவனால் அங்கீகரிக்கப்பட்டதுபோல, காயீனையும் ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்படும். ஆனால் காயீன் நன்மை செய்ய இடம் கொடாமல், கோபத்திற்கு இடம் கொடுத்து விட்டான்.

"பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்" என்கிறார். இதை சிலர், பாவ நிவாரண பலி வாசற்படியில் படுத்திருக்கும் என்று தேவன் சொல்கிறார் என்று விளக்குவார்கள். அதாவது பலிக்காக ஒரு ஆட்டுக்குட்டி வாசற்படியில் படுத்திருக்கும் என்பார்கள். இது ஒருவகையில் அர்த்தமுடையதாக இருந்தாலும், இது அவ்வளவு சரியானதாகத் தோன்றவில்லை. மோசேயின் காலம் வரைக்கும் பாவநிவாரண பலிக்கொடுக்கப்படவில்லை என்றே வேதத்தின் மூலம் அறிகிறோம். லேவியராகமப் புத்தகத்தில், பாவநிவாரணபலியைக் குறித்துச் சொல்லப்பட்டிருப்பதை நீங்கள் பார்க்கலாம். அந்தப் புத்தகத்தின் முதல் பகுதியில், ஐந்து விதமான பலிகளைப் பற்றி சொல்லப்பட்டிருக்கின்றன. நியாயப்பிரமானம் கொடுக்கப்படுமுன் பாவநிவாரண பலி செலுத்தப்படவில்லை. பவுல் ரோமர் 3 : 20ல் அதையே சொல்கிறார், "பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது." அதற்கு முன்பு வரை தகனபலியே செலுத்தப்பட்டு வந்தது. மோசேக்கு முன்பு வாழ்ந்த யோபு, தன்னுடைய நாட்களில் தகனபலியே செலுத்தினான். அது பாவ நிவாரணபலியல்ல. நீங்கள் வேதத்தை ஆராய்ந்து பார்த்தால் இது உண்மை என்று தெரியும்.

பாவத்தால் தான் எவ்வளவு தூரம் காயப்படக்கூடியவன் என்பதை காயீன் அறியாதிருந்தான் என்பது தெளிவாகத் தெரிகிறது. தேவன் அவனிடம், "பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்" என்று சொன்னது குறித்து நான் நினைக்கிறேன். அது ஒரு பயங்கரமான மிருகம் போன்று வாசற்படியில் படுத்திருந்து, அவன் மீது பாய்வதற்கு பதுங்கிக் கொண்டிருக்கிறது. அவன் வெளியே வரும்போது அது அவன் மீது பாய்கிறது. இதற்காகவே காயீனுக்கு தேவனால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய பலி அவசியமாயிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் பலியை அர்த்தப்படுத்துகிறதாக, பாவத்திற்காக செலுத்தப்படுகிற பலியாக அது இருக்க வேண்டும். 1 யோவான் 3 : 12, "பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை செய்த காயீனைப் போலிருக்க வேண்டாம். அவன் எதினிமித்தம் அவனைக் கொலை செய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும் தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே."

"நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்." காயீன் நன்மை செய்வது என்பது ஆபேல் கொண்டுவந்த காணிக்கையைப் போல அவனும் கொண்டு வருவதாகும். ஆபிரகாம் தகனபலியையே செலுத்தினான் என்று பார்க்கிறோம். நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுகிறவரையில் மீறுதல் என்பது இருந்திருக்க முடியாது. அதாவது, அதுவரையில், நியாயபிரமாணத்திற்கு மீறுதலாக பாவம் வரவில்லை. ஆகவே, தேவன் காயீனைப் பாதுகாத்தார் என்பதை நீங்கள் காண முடியும்.

ஆதியாகமம் 4 : 8 -9

உண்மையில் இது ஒரு ஆணவமான பதில். அவன் தன்னுடைய சகோதரனுக்கோ அல்லது தேவனுக்கோ கொஞ்சமேனும் மதிப்பு கொடுக்கவில்லை என்பது இதன்மூலம் தெரிகிறது. அவன் தன்னுடைய செயலை மூடி மறைக்க முனைந்தான் என்பதே உண்மை. ஆனால் வேதம் சொல்கிறது, மத்தேயு 10 : 26, "வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை, அறியப்படாத இரகசியமும் இல்லை." நீங்கள் ஒருவேளை இரகசிய பாவத்தில் வாழ்ந்து கொண்டிருப்பீர்களானால், இப்பொழுது நீங்கள் அதைக்குறித்து அதிகம் யோசிக்க வேண்டியது அவசியம். ஏனெனில் அவையெல்லாமே தேவனுடைய பிரசன்னத்தில் வெளியரங்கமாயிருக்கிறது. ஒருநாளில் வெளியரங்கமாக்கப்படும். தேவன் ஏற்கனவே அவற்றை அறிந்திருக்கிறார். நாம் அதை அப்படியே அவரிடம் சொல்லிவிட வேண்டியது அவசியம். காயீன் தான் குற்றமற்றவன் என்று சொல்ல முயற்சிக்கிறான். "என் சகோதரனுக்கு நான் காவலாளியோ?" என்கிறான். எவ்வளவு ஆணவமான பதில் பாருங்கள். தேவனிடத்தில் பேசுகிறோம் என்றறிந்தும், கீழ்ப்படிதலற்ற பதில்.

ஆதியாகமம் 4 : 10

எபிரெய நிருப ஆக்கியோன் எபிரேயர் 12 : 24ல் இவ்வாறு சொல்கிறார். "புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகியது இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசியதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிற தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்." ஆபேலின் இரத்தம் கொலையைக் குறித்துப் பேசுகிறது. இயேசுவின் இரத்தம் மீட்பைக் குறித்து, இரட்சிப்பைக் குறித்துப் பேசுகிறது.

ஆதியாகமம் 4 : 11 – 12

இன்றும் அந்த சாபம் பூமியின் மீதிருக்கிறது. மனிதனுடைய பாவத்தினாலே பூமியின் செழுமை போய்விட்டது. பூமியில் அடர்ந்த காடுகளைக் கொண்ட நாடுகளில் கூட அநேக ஜனங்கள் பசியினாலும் பட்டினியினாலும் வாடுகிறார்கள். நிலத்தை செழுமையானதாக்க எவ்வளவோ ஆராய்ச்சிகளும், முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டும், நிலம் செழுமையற்றதாகவே காணப்படுகின்றது. இதே பூமியிலிருந்த, ஆபேலின் இரத்தம் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறது.

ஆதியாகமம் 4 : 13

காயீனுக்கு இது சகிக்க முடியாதத் தண்டனையாக இருக்குமானால், அவன் ஏன் தேவனிடத்தில் திரும்பி மன்னிப்பு கோரியிருக்கக்கூடாது? தேவனுடைய கிருபைக்கு மன்றாடியிருக்கக்கூடாது? அவனுக்கு அது சகிக்ககூடாத தண்டனையாக இருந்தது. ஆனால், தேவனோ அவனுக்கு இரட்சிப்பளிக்க ஆயத்தமாயிருந்தார். அவன் திரும்பியிருந்தால் போதுமானது. இன்று அநேகர் தங்கள் பாடுகளிலேயே இருந்து கொண்டு, சகித்துக்கொள்ள விரும்புகிறார்கள். ஆனால் தேவனிடத்தில் திரும்ப விரும்புவதில்லை. அவருடைய இலகுவான நுகத்தை ஏற்றுக் கொள்ள விரும்புவதில்லை.

ஆதியாகமம் 4 : 14

தான் தேவனுடைய முகத்தை விட்டு மறைக்கப்பட வேண்டும் என்று காயீன் வேண்டுகிறான். அவ்வாறே நடந்து விட்டது. இருந்தபோதிலும், தேவன் அவனை பாதுகாக்கிறதைப் பார்க்கிறோம். இது ஒரு வித்தியாசமான காரியம். இங்கே ஒரு குற்றவாளிக்கு, கொலையாளிக்கு தேவன் புகலிடம் கொடுக்கிறார் என்பது விநோதமான காரியம்தான் இல்லையா?

அருமையானவர்களே, நீங்கள் தேவனிடத்தில் திரும்பி மன்னிப்பைப் பெற்றிருக்கிறீர்களா?

அதிகாரம் 4

ஆதியாகமம் 4 : 15

அவன் மீது எந்த அடையாளத்தைப் போட்டார் என்பது கூற இயலாத காரியம். அநேகர் இதுகுறித்து பல கருத்துக்களைக் கூறுகிறார்கள். ஆனால் தேவன் காயீனைப் பாதுகாத்தார் என்பதை இங்கே பார்க்கிறோம். அப்பொழுது எந்த நியாயப்பிரமாணமும் கொடுக்கப்படவில்லை. காயீன் ஒரு பாவியாக இருந்தான். ஆனாலும் கொலையைக் குறித்து எந்தவொரு நியாயப்பிரமாணமும் அப்பொழுது கொடுக்கப்படாதபடியினால் அவன் மீறுதலுக்குட்படவில்லை. அவனுடைய பெரிய பாவம் எது என்றால், அவன் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய காணிக்கையை கொண்டு வராததுதான். அவன் தேவனுக்குக் காணிக்கை கொண்டு வந்த விதத்தில் பொல்லாப்பு இருந்தது. அவன் தனது தீமையான சுபாவத்தைத் தன் சகோதரனைக் கொலை செய்ததின் மூலம் வெளிப்படுத்தினான்.

ஆதியாகமம் 4 : 16

தேவனை விட்டு காயீன் புறப்பட்டுப் போனான் என்று பார்க்கிறோம். இவன் ஒரு நாகரிகத்தை தோற்றுவித்தான். அது தேவனுக்குப் புறம்பானது. காயீனுடைய சந்ததியார் தேவனற்ற நாகரிகத்தை உருவாக்கினார்கள்.

ஆதியாகமம் 4 : 17

மனிதன் இந்தக் காரியத்தை அன்றிலிருந்து இன்றுவரை செய்து கொண்டுதான் இருக்கிறான். நகரத்திற்கோ, வீட்டிற்கோ, அமைப்பிற்கோ தன் பெயரையோ, தனக்குப் பிரியமானவர்களின் பெயர்களையோ வைக்க விரும்புகிறான்.

நகரவாழ்க்கை இப்பொழுது ஆரம்பமாகிறது. அப்பொழுது அவன் ஒரு பட்டணத்தைக் கட்டி, அந்தப்பட்டணத்துக்குத் தன் குமாரனாகிய ஏனோக்கின் பெயரை இட்டான். இன்று மனிதர்களுக்கு உள்ள பெரிய பிரச்சனைகளில் நகரவாழ்க்கையும் ஒன்றாகி விட்டது. அது மாசுபடிந்தது. நெருக்கடியானது என்று சொன்னாலும், மக்கள் அங்கேயே வந்து குடிபுகுந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆதியாகமம் 4 : 18 –19

இங்கே பலதார மணத்தின் துவக்கத்தைப் பார்க்கிறோம். அதாவது, ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களை திருமணம் செய்வது. லாமேக்கு இங்கே தேவனுடைய நோக்கத்திற்கு எதிராக இரண்டு பேரை திருமணம் செய்தான். ஆண்களுக்கு தேவன் கொண்டிருந்த திட்டத்திற்கு இது எதிரானது. பலதார மணத்தை தேவன் ஏற்றுக் கொள்ளவில்லை. இது ஒரு வரலாற்றுக் குறிப்புக்காக மட்டுமே ஆதியாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. "ஆதாள்" என்பதற்கு ‘அலங்காரம்‘ அல்லது ‘சொகுசு‘ என்று அர்த்தமாகும். ‘சில்லாள்‘ என்பதற்கு ‘மறைத்துக்கொள்‘ என்று அர்த்தமாகும். ‘ஆண்களை கவர்ந்திழுக்கும்படி செயல்படும்

www.Radio882.com

பெண்‘ என்றும் அதற்கு அர்த்தமாகும். எப்படிப்பட்ட இரண்டு பெண்களை மனைவியாக்கியிருக்கிறான் என்று கவனியுங்கள். இதினாலேயே அவன் வாழ்வில் அநேகப் பிரச்சினைகள் வந்தன.

இங்கே காயீனின் நாகரிகம் ஆரம்பமானது.

ஆதியாகமம் 4 : 20

"அவன் கூடாரங்களில் வாசம்பண்ணுகிறவர்களுக்கும், மந்தை மேய்க்கிறவர்களுக்கும் தகப்பனானான்." அப்போஸ்தலரானப் பவுல் கூடாரத்தொழில் செய்கிறவர் என்று பார்க்கிறோம். இங்கே வீடு கட்டுமானப் பணி செய்யும் முதல் நபரைப் பார்க்கிறோம். மேலும், முதல்முதலாக கால்நடைப் பண்ணை வைத்திருப்பவரைப் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 4 : 21

இங்கே இசைக்கலைஞர்களின் ஆரம்பத்தைப் பார்க்கிறோம். இன்றைய நவீன இசை எத்தனையோ வந்து விட்டது. இவையெல்லாமே காயீன் நாகரிகத்திலிருந்து பிறந்தது என்பதை அநேகர் ஏற்றுக்கொள்வார்கள்.

ஆதியாகமம் 4 : 22

இங்கே இரும்பு, பித்தளை ஆகிய உலோகங்களைக் கொண்டு வேலை செய்யும் வல்லுநர்களின் பிறப்பைக் குறித்துக் காண்கிறோம்.

ஆதியாகமம் 4 : 23 -24

லாமேக்கு சொல்வது இதுதான். ‘காயீன் அதினால் சாதித்தது உண்டானால், நானும் அதினால் சாதிக்கமுடியும். காயீனோ தன்னுடைய பாதுகாப்பிற்காகக் கொலை செய்யவில்லை. ஆனால் நானோ அப்படியில்லை‘ என்கிறான். அவன் அதற்காகத்தான் செய்தானா, இல்லையா? எனக்கு தெரியாது. ஆனால் அவன் தன் பாதுகாப்பிற்காகவேக் கொன்றதாகச் சொல்கிறதை இங்கே பார்க்கிறோம். இது எவ்வாறு நடைபெற்றது என்று நமக்குத் தெரியவில்லை. அவனுடைய மனைவிகளுக்காக இவ்வாறு அவன் செயல்பட வேண்டியதாயிற்றோ? அதுவும் தெரியவில்லை. லாமேக்கு எழுபத்தேழு பழி தனக்காக சுமரும் என்று இங்கே சொல்கிறான். ஆனால் நம்முடைய இரட்சகராகிய இயேசு, சீமோன் பேதுருவிடம் உன்னுடைய எதிராளியை கணக்கிலடங்காமுறை மன்னிக்க வேண்டும் என்று சொல்கிறதை நாம் வேதத்தில் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 4 : 25 -26

தேவனுடைய நாமத்தைத் தொழுதுகொள்ள மக்கள் ஆரம்பித்ததைக் குறித்து இங்கே தெளிவாகப் பார்க்கிறோம்.

www.Radio882.com

அதிகாரம் 5

நாம் இப்பொழுது ஆதியாகமம் 5ஆம் அதிகாரத்திலிருந்து ஒரு சில வசனங்களை தியானிக்க இருக்கின்றோம்.

நாம் ஆதியாகமப் புத்தகத்தின் முதல் பிரிவில் அதாவது 1 முதல் 11ஆம் அதிகாரங்களில், உலக நிகழ்ச்சிகளைப் பார்க்கிறோம். முதலாவது சிருஷ்டிப்பு. பிறகு வீழ்ச்சி. இப்பொழுது 5 – 9 அதிகாரங்களில் ஜலப்பிரளயம். இந்த 5ஆம் அதிகாரத்தில் சேத்தின் வழியாக ஆதாமின் வம்ச வரலாற்றினைப் பார்க்கிறோம். காயீனைப் பற்றிய வம்ச அட்வணை 4ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டது. அதோடு அது நிறுத்தப்பட்டு விட்டது. இது இனி தேவனுடைய வம்ச வழியில் எங்காவது குறுக்கிட்டால்தான் குறிப்பிட்டுச் சொல்லப்படும். இதுவே ஆதியாகமப் புத்தகத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற மாதிரி.

வேதத்தில் ஆதியாகமம் 5ஆம் அதிகாரமே மிகவும் சோர்வுறச் செய்கின்ற, மனத்தளர்ச்சியடையச் செய்கின்ற அதிகாரமாகும். அதற்குக் காரணம் என்னவென்றால், நாம் இந்த அதிகாரத்தின் வழியாகச் செல்லும்போது கல்லறைத்தோட்டத்தின் வழியாக நடந்துபோவது போலிருக்கும். தேவன் ஆதாமிடம், "அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று கட்டளையிட்டதைப் பார்க்கிறோம். அவ்வாறே ஆதாமின் பிள்ளைகள் மரித்தார்கள். அப்போஸ்தலர் பவுல் 1 கொரிந்தியர் 15 : 22ல், "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறார்கள் போல" என்கிறார்.

ஆதியாகமம் 5 : 1-2

'ஆதாமின் வம்ச வரலாறு' என்று பார்க்கிறோம். இதைப் போன்றதொரு வித்தியாசமான வாக்கியத்தை நாம் புதிய ஏற்பாட்டின் துவக்கத்தில் பார்க்கிறோம். அங்கே, 'இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு' என்று சொல்லப்படுகிறதைப் பார்க்கிறோம். நாம் ஏற்கனவே பார்த்தது போல, இரண்டு வம்ச வழி, இரண்டு வித்துக்கள். இவை ஒன்றிற்கு ஒன்று எதிரானவை. சாத்தானுடைய வம்ச வழிக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வழிக்கும் இடையே நீண்ட ஒரு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாம் இப்பொழுது சேத்தின் வழியாக ஆதாமின் வம்ச அட்டவணையைப் பார்க்கிறோம். இந்த வம்சத்திலேயே இயேசு கிறிஸ்து பின்பகுதியில் தோன்றினார்.

ஆதியாகமம் 5 : 3

ஆதாம் 130 வயதாக இருந்தபோது, அவன் எவ்வளவு முதிர்ந்தவனாகக் காணப்பட்டான்? ஆதாமை தேவன் படைத்தபோது எத்தனை வயதுடையவனாக சிருஷ்டித்தார்? 40 வயதுடையவனாகவா அல்லது 60 வயதுடையவனாகவா? ஏனெனில் அவன் சிறு குழந்தையாக பிறக்கவில்லையல்லவா? தேவன் அவனை எந்த வயதில் வேண்டுமானாலும் படைத்திருக்கலாம். சிலர் இந்த பூமியிலுள்ள பாறைகள் தோன்றி பல

www.Radio882.com

கோடி ஆண்டுகளாகிறது என்கிறார்கள். ஆனால், அவர்கள் அதை அறிந்தது கிடையாது. தேவன் அவனை எந்த வயதில் வேண்டுமானாலும் படைத்திருக்கலாம். இங்கே முக்கியமான காரியம் என்னவென்றால், ஆதாம் 130 வயதுடையவனாக இருந்தபொழுதும் தன்னுடைய சாயலில் ஒரு மகனைப் பெற்றான். ஆதாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டான். ஆனால், அவனுடைய மகன் ஆதாமின் சாயலாகப் பிறந்தான்.

ஆதியாகமம் 5 : 4 – 5

நாம் இப்பொழுது கல்லறை தோட்டத்தின் வழியாக நடக்க ஆரம்பிக்கின்றோம். ஆதாம் குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான். அதற்குபின் என்ன நடந்தது? அவன் மரித்தான். அடுத்து 8ஆம் வசனத்தில் சேத்திற்கு என்ன நடந்தது என்று வாசிக்கிறோம். அவன் மரித்தான். இவ்வாறு, ஏனோஸ், கேனான், மகாலெயேல், யாரேத் போன்ற எல்லோருமே மரணத்தைத் தழுவியதை வாசிக்கிறோம். ஆனால், இவர்களுக்குப் பின்பு ஒருவன் பிறக்கிறான். அவன் ஏனோக்கு. இவனுக்கு ஒரு விசேஷித்த காரியம் நடக்கிறது.

ஆதியாகமம் 5 : 21

இந்த ஏனோக்கு மரித்தானா? இல்லை. இந்த அதிகாரம் ஒரு இருண்ட அதிகாரம்தான். இருந்தபோதிலும், இங்கேயும் ஒரு சிறிய வெளிச்சம் காணப்படுகிறது.

ஆதியாகமம் 5 : 22 – 24

இது ஒரு சிறந்த காரியமாகும். மரித்தவர்களின் பட்டியல் மத்தியிலே ஒருவன் பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டான். ஏனோக்கு ‘தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்‘ என்று வேதம் அவனைக் குறித்துச் சொல்கிறது. இது மிகவும் ஆச்சரியமான காரியம். வேதத்தில் இரண்டே இரண்டு மனிதர்கள் மாத்திரமே இவ்வாறு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள் என்று பார்க்கிறோம். அடுத்த அதிகாரத்தில் அடுத்த மனிதனைப் பார்க்கிறோம். நோவா தேவனோடே சஞ்சரித்தான். அதேபோல் பழைய ஏற்பாட்டில் மரணத்தைக் காணாத இருவரைப் பார்க்கிறோம். ஒன்று இந்த ஏனோக்கு, மற்றொன்று எலியா தீர்க்கதரிசி.

ஏனோக்கைக் குறித்து நாம் அதிகம் அறிய இயலவில்லை. இருந்தபோதிலும், அவன் மரணத்தைக் காணவில்லை என்று பார்க்கிறோம். அவன் தேவனால் எடுத்துக் கொள்ளப்பட்டான். அவன் பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டான். அவன் பழைய சரீரத்தினின்று விடுதலையாகி, ஆவிக்குரிய சரீரத்தைப் பெற்றுக் கொண்டான். அவன் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்.

ஏனோக்கு அறுபத்தைந்து வயதானபோது, மெத்தூசலாவைப் பெற்றான். அதற்குப் பின்பு அவன் தேவனோடே சஞ்சரித்தான். அப்படியானால் அதுவரை அவன்

www.Radio882.com

எப்படிப்பட்டவனாக இருந்தான்? ஒருவேளை இந்த உலகத்தார் போன்று வாழ்ந்திருக்கக்கூடும். கருத்தற்ற வாழ்க்கை, உலகத்தோடு இணைந்து செல்லும் வாழ்வு. ஆனால் மெத்தூசலா பிறந்தபோது, ஏனோக்கின் நடை மாற்றமடைந்தது. அந்தப் பிள்ளை அவனை தேவனிடமாக திருப்பிற்று என்று கூட சொல்லலாம்! நண்பரே, ஒருவேளை தேவன் உங்கள் வாழ்க்கையிலேயும் குழந்தையை அந்த நோக்கத்திற்காக தந்திருக்கிறார். குழந்தை உங்களை தேவனிடமாகத் திருப்புகிறது.

இதற்குப் பிறகு அவன் தேவனோடே முன்னூறு வருடம் சஞ்சரித்துக் கொண்டு, பிள்ளைகளைப் பெற்றான். குமாரரும், குமாரத்திகளும் பிறந்தார்கள். "ஏனோக்குடைய நாளெல்லாம் முந்நூற்று அறுபத்தைந்து வருஷம்" – அவ்வளவு நாட்கள்தான் அவன் பூமியில் வாழ்ந்தான். அதற்குப் பின்பு? அவன் மரிக்கவில்லை. 'ஏனோக்கு மரித்தான்' என்று இங்கே சொல்லப்படவில்லை. மாறாக, 'ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற் போனான்: தேவன் அவனை எடுத்துக் கொண்டார்' என்று சொல்லப்படுகிறது.

ஒரு ஞாயிறு பாடசாலையில் பயிலும் சிறுமி தன் தாயிடம் வந்து, "அம்மா, இன்று என்னுடைய டீச்சர் ஏனோக்கு எவ்வாறு தேவனோடே சஞ்சரித்தார், நடந்து சென்றார் என்று எங்களுக்கு சொன்னாங்க" என்றாள். அதற்கு தாய், "என்ன சொன்னாங்க?" என்று கேட்டாள். அதற்கு சிறுமி, "தினமும் கர்த்தர் ஏனோக்கிடம் வந்து, ஏனோக்கே நீ என்னோடு வெளியில் வருகிறாயா?" என்று கேட்பாராம். அவனும் அவரோடு நடந்து சென்று வந்து கொண்டிருந்தான். தினமும் சென்று பேசி மகிழ்ந்தானாம். ஒருமுறை தேவன் அவனைப் பெருதொலைவு நடத்தி அழைத்துச் சென்றார். இப்பொழுது ஏனோக்கு, "தேவனே நாம் வெகுதொலைவு வந்துவிட்டோம். எனக்கு நேரமாகிவிட்டது. நான் வீட்டுக்குப் போகிறேன்" என்றான். அப்பொழுது தேவன் அவனிடம், "ஏனோக்கு, உன்னுடைய வீட்டை விட என் வீடு அருகில் இருக்கிறது. ஆகவே நீ என்னுடைய வீட்டிற்கு வா" என்று கூறினார். உடனே ஏனோக்கு தேவனுடைய வீட்டிற்குச் சென்று விட்டான்.' இதைவிட சிறப்பாக நாம் இதை விளக்க முடியாது என்று நினைக்கிறேன்.

ஏனோக்கு ஜலப்பிரளயத்திற்கு முன்பு எடுத்துக் கொள்ளப்பட்டான் என்று பார்க்கிறோம். இதேப்போல், மகா உபத்திரவக் காலத்திற்கு முன்பும் சபையானது எடுத்துக் கொள்ளப்படும் என்று ஒரு ஓவியமாக இது நமக்குக் காட்டப்படுகிறது.

ஆதியாகமம் 5 : 27 – 6 : 13

மெத்தூசலா, ஆதாமைவிட அதிக நாட்கள் உயிரோடே வாழந்தான். இந்த இரண்டு மனிதர்களும் அதாவது, ஆதாமும், மெத்தூசலாவும் படைப்பிலிருந்து, ஜலப்பிரளயம்

வருகிறவரையுள்ள இடைவெளியை நிரப்புகிறார்கள் என்று சொல்லலாம். நம்முடைய இந்த வேத வம்ச அட்டவணைப்படி மெத்தூசலா, நோவாவிற்கு உலக சிருஷ்டிப்பு முதற்கொண்டு நடந்த வரலாற்றினை சொல்லியிருக்கக்கூடும். நான் தனிப்பட்ட முறையில் நினைக்கிறது என்னவென்றால், இங்கேக் கொடுக்கப்பட்டுள்ள வம்ச வரலாற்றில் இடைவெளி இருக்கிறது. புதிய ஏற்பாட்டின் துவக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள இயேசுவின் வம்ச அட்டவணையை கவனித்துப் பார்ப்பீர்களென்றால், அங்கேயும் சிலருடைய பெயர்கள் விடப்பட்டிருக்கிறதைக் காணமுடியும். அது வேண்டுமென்றே அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. அதை மூன்று இணையான பிரிவுகளாக பிரிப்பதற்கு அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. சிலர் மாத்திரமே விடப்பட்டுள்ளார்கள். இருந்தபோதிலும், இது சரியாக, தெளிவாக, கால அட்டவணையைப் பின்பற்றி செல்கிறது என்பதை கவனியுங்கள்.

இங்கே நாம் பார்க்கின்ற பகுதியில் கூறப்பட்டுள்ள அட்டவணையும் சரியானது. இருந்தபோதிலும், இங்கே நாம் ஒரு இடைவெளியையே பார்க்கிறோம். இந்த அட்டவணையின் மூலம் நாம் என்ன அறிந்து கொள்கிறோமென்றால், நாம் நினைக்கின்ற காலத்தை விட மனிதகுலம் முன்பிருந்தே இந்த பூமியில் இருந்து வருகிறது என்பதையே. இந்தப் பகுதியில் வேதவசனம் மிகவும் தெளிவாக இல்லாததாகக் காணப்படுகிறதல்லவா? ஏன்? தேவன் அதிகம் அதை வலியுறுத்தவில்லை என்றே நினைக்கிறேன். அவர் நமக்குத் தெளிவாகச் சொல்ல விரும்புவது எல்லாம், பக்திக்குரிய, மீட்பிற்குரிய, மனித வரலாற்றை நமக்கு எடுத்துச் சொல்வது தான்.

'மெத்தூசலா' என்பதற்கு 'அனுப்பப்படுதல்' என்று அர்த்தமாகும். வேறு சிலர் மெத்தூசலா என்பதற்கு 'அவன் இறந்த போது, அது அனுப்பப்படும்' என்று அர்த்தம் கொள்கிறார்கள். எது அனுப்பப்படும்? ஜலப்பிரளயம். மெத்தூசலா உயிரோடிருந்தவரை ஜலப்பிரளயம் வரவில்லை. ஆனால் நீங்கள் கோத்திரபிதாக்களின் வம்ச வரலாற்றைப் பார்ப்பீர்களானால் மெத்தூசலா இறந்த வருடத்தில் ஜலப்பிரளயம் வந்தது. இது ஆர்வத்தை தூண்டுகிறதாக இருக்கிறதல்லவா? "அவன் இறந்தபோது, அது அனுப்பப்படும்' இதுவே அவனுடைய பெயருக்கு அர்த்தமாகும்.

மற்றவர்களைக் காட்டிலும் மெத்தூசலா ஏன் அதிக நாட்கள் உயிரோடே வாழ்ந்தான்? தேவன் இரக்கமும், பொறுமையும் உள்ளவராக இருக்கிறார் என்பதை மனிதகுலம் உணர்வதற்காக தேவன் அவனை இவ்வுலகில் அத்தனை ஆண்டுகாலம் உயிரோடு வைத்தார். தேவன் உங்களுக்காகவும் காத்திருக்கிறார், பிரியமானவர்களே, அவர் உங்கள் வாழ்நாள் முழுவதும் காத்திருப்பார். தேவனுடைய நீடிய பொறுமையைக் குறித்து பேதுரு இவ்வாறு சொல்கிறார், 1 பேதுரு 3 : 20, 'அந்த ஆவிகள், ஆர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள், அந்தப் பேழையிலே சிலராகிய எட்டு பேர் மாத்திரம்

www.Radio882.com

பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்.' நாம் இந்த அதிகாரத்தில் தொடர்ந்து பார்க்கும்போது, ஒவ்வொரு மனிதனின் பெயரும், மரணமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதியாகமம் 5 : 31 –32

மனிதர்கள் அனைவரும் நல்லவர்களே, அவர்களுடைய சுபாவத்தை நாம் முன்னேற்றமடையச் செய்துவிடலாம் என்று மனிதர்கள் நம்புகிறார்கள். இதை அப்படியே மக்கள் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்கிறார்கள். மனிதனுடைய சூழ்நிலையையும், அவனுடைய பாரம்பரியத்தையும் நாம் சற்று முன்னேற்றமடைய வைத்தால் அவன் நன்கு முன்னேற்றமடைந்து விடுவான் என்று இவர்கள் நம்புகிறார்கள். இதற்காகவே இன்று உலகத்திலே அநேக தத்துவங்கள், கொள்கைகள், அமைப்புகள் ஏற்பட்டுள்ளன. இவைகள் மனிதனை நல்ல நிலைமைக்கு எடுத்துச் சென்று விட இயலும் என்று நம்புகிறார்கள். இன்னும் சில கோட்பாடுகள் மனிதன் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள முடியும் என்று கூறுகின்றன. சில பிரிவினர் பாவம் என்ற ஒன்று இல்லையென்றும், மனிதனுடைய சுபாவம் முற்றிலும் நல்லது என்றும் சொல்கிறார்கள்.

ஆனால் வேதம் மனிதனைக் குறித்து என்ன சொல்கிறது தெரியுமா? மனிதன் முற்றிலும் பொல்லாதவன் என்கிறது. இதுவே நம்மெல்லாருடைய நிலையும் கூட. ரோமர் 3 : 10ஐ பாருங்கள், 'நீதிமான் ஒருவனாகிலும் இல்லை' என்கிறது. இதுவே தேவனுடைய வார்த்தையின் மதிப்பீடு ஆகும். நீங்கள் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்வீர்களென்றால், வாழ்க்கையைக் குறித்த சரியானக் கருத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். மற்றவர்கள், வாழ்வைக் குறித்து கூறுகின்றவை சரியான அர்த்தத்தைத் தருவதில்லை.

இங்கே மனித சமுதாயத்தைப் பார்க்கிறோம். நாம் தேவனுடைய சந்ததியைப் பின்பற்றிச் சென்று கொண்டிருக்கிறோம். இது எங்கே அழைத்துச் செல்கிறது? இது இங்கே பூமியில் வரப்போகும் ஆயிர வருட அரசாட்சிக்கு நேராக செல்கிறதா? இல்லாவிட்டால் ஒரு கற்பனை உலகத்திற்குக் கொண்டு செல்கிறதா? இல்லை. அடுத்த அதிகாரத்தில், பூமியின் மீது வரப் போகின்ற தேவ நியாயத்தீர்ப்பாகிய ஜலப்பிரளயத்தைக் குறித்துச் சொல்லப்படுகிறதைப் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 6

ஆறாம் அதிகாரத்தில் நாம் ஜலப்பிரளயத்தை மட்டுமல்ல, அதற்கான காரணத்தையும் பார்க்கிறோம். இந்த ஜலப்பிரளயம் தேவ நியாயத்தீர்ப்பினால் உண்டானது.

ஆதியாகமம் 6 : 1 – 2

இங்கே 'தேவகுமாரர்' என்றும் 'மனுஷகுமாரத்திகள்' என்றும் சொல்லப்படுவதைக் குறித்து அநேகக் கருத்துக்கள் உண்டு. சில தேவமனிதர்கள் 'தேவகுமாரர்' என்பது

www.Radio882.com

தேவதூதர்களைக் குறிக்கிறது என்பார்கள். இது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஏனெனில் அவர்கள் நல்ல தேவதூதர்களாக இருந்தார்களானால், இப்படிப்பட்ட பாவத்தை செய்ய முடியாது. தீய தேவதூதர்களாக இருப்பார்களானால் அவர்கள் தேவகுமாரர் என்று அழைக்கப்பட இயலாது. இவர்களுடைய பிள்ளைகள் மனிதர்களாக இருந்தார்கள். அவர்கள் அரக்கத்தனமான உருவமுடையவர்களல்ல. அநேகர் இவர்களுடைய பிள்ளைகள் இராட்சதர்களாக இருந்தார்கள் என்று சொல்கிறார்கள். நாம் இதுகுறித்து நான்காம் வசனத்திற்கு வரும்போது சற்று விளக்கமாகக் காண்போம்.

ஆதியாகமம் 6 : 3

நோவா நூற்றிருபது ஆண்டுகள் பிரசங்கித்தான் என்று நாம் விசுவாசிக்கிறோம். இந்தக் காலக் கட்டத்தில் தேவனுடைய ஆவி மனிதனோடு போராடிக் கொண்டிருந்தது. பேதுரு இது குறித்துத் தெளிவாகச் சொல்கிறார். பேதுரு, அவர்களை தேவனிடத்தில் கொண்டு வருகிறதற்காக, நோவாவின் காலத்தில் தேவனுடைய ஆவியானவர் மனிதர்களோடு போராடிக் கொண்டிருந்தார் என்றார். ஆனால் அவர்கள் தேவனிடத்தில் திரும்பவில்லை. 1 பேதுரு 3 : 18 –19ஐ பாருங்கள். "ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார். அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்" என்கிறார். இந்த ஆவிகளெல்லாம் சிறையிலிருந்தன. ஆனால் அவைகளுக்கு நோவா காலத்திலும் பிரசங்கிக்கப்பட்டது. இதை நாம் எவ்வாறு அறியலாம்? 1 பேதுரு 3 : 20: "அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள், அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்." எப்பொழுது இவர்கள் கீழ்ப்படியாமற் போனார்கள்? நோவாவின் காலத்திலே, தேவன் பொறுமையாக இருந்தபோது; அதாவது அந்த 120 ஆண்டுகளில்.

ஆதியாகமம் 6 : 4

அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள் என்றுதான் சொல்லப்படுகிறதேயொழிய, இவர்கள் தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால் பிறந்தவர்கள் என்று சொல்லப்படவில்லை. இவர்களுடைய பிள்ளைகளைக் குறித்து இவ்வாறு சொல்லப்படுகிறது. இவர்களும் பூர்வத்தில் பேர் பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள். இவர்கள் இராட்சதர்களல்ல, மனிதர்கள். இவர்களின் பிள்ளைகள் பலசாலிகளாக இருந்தார்கள் என்பதே இதன் அர்த்தம். இராட்சதர்கள் இவை நடக்குமுன்னரே பூமியில் இருக்கிறார்கள் என்று வேதம் தெளிவுபடக்கூறுகிறது.

www.Radio882.com

மனித சமுதாயம் சிறந்த திறமையை உடையதாக இருக்கின்றது. மனிதன் விசித்திர, விநோதமாய் உருவாக்கப்பட்டிருக்கிறான். இந்த சிறந்ததொரு சத்தியத்தை நாம் மறந்து போய்விட்டோம். சிலர் மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான் என்கிறார்கள். வேறு சிலர் கழிவுப் பொருட்களிலிருந்து வந்த புரோட்டோ பிளாசத்தினால் மனிதன் உண்டாக்கப்படுகிறான் என்கிறார்கள். இவையெல்லாமே மூடத்தனமான விளக்கங்கள்.

பரிணாமம் என்பது அறிவியல் பொறுத்தமட்டில், ஒரு கொள்கை, அவ்வளவுதான். மற்ற தத்துவங்களைப் போல இதுவும் ஒரு தத்துவமே. இதை நாம் ஏற்றுக் கொள்ள முடியும் அல்லது மறுக்கமுடியும். நீங்கள் இந்த தத்துவத்தை ஏற்றுக் கொள்ளும்போது, அது சில மூடத்தனமாக முடிவுகளுக்குள்ளாக நம்மை நடத்திச் செல்லும். இது உலகமனைத்தையும் பிரச்சினைக்குள்ளாக்கும். மனிதர்கள் இன்று தங்களை மிகவும் சிறந்தவர்களாக எண்ணிக் கொள்கிறார்கள். மனிதன் வீழ்ச்சியுற்ற நிலையில் இருக்கிறான். அவன் பரிதாபமான நிலையில் காணப்படுகிறான். இதை உணராத நிலையில் உலகம் பிரச்சனைக்குள்ளாக சென்று கொண்டிருக்கிறது.

இங்கே நாம் 4ஆம் வசனத்தில் பார்ப்பதென்ன? நாம் ஏற்கனவே சிந்தித்தது போல, ஆதியாகமம் என்பது வரலாற்றுப் புத்தகமாகும். இது குடும்பங்களின் புத்தகம். தேவகுமாரர் என்பது தேவபக்தியுள்ள சந்ததியில் வந்தவர்களைக் குறிக்கிறது. அதாவது ஆதாமின் வழியாக, சேத்தின் வம்சவழியில் வருகின்றவர்கள். மனுஷ குமாரத்திகள் என்பது காயீன் வம்சத்தைக் குறிக்கிறது. இங்கே நாம் காண்பது என்னவென்றால் தேவபக்தியுள்ள சேத்தின் சந்ததி, காயீன் சந்ததியோடே கலந்து வருகிறது. இறுதியாக ஒரு சந்ததியைத் தவிர, மற்றெல்லா சந்ததியும், மாசுபட்டு போய்விட்டது. இந்த ஓவியமே இங்கேக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் சில வேதவல்லுநர்கள் தேவகுமாரர் என்பது தேவதூதர்களைக் குறிக்கிறது என்பார்கள். நீங்கள் எதை ஏற்றுக் கொண்டாலும் பரவாயில்லை. இவை வேத வியாக்கியானம்தான்.

சரி, ஜலப்பிரளயத்திற்கு முன்பாக பூமி எவ்வாறிருந்தது? தேவன் இந்த நியாயத்தீர்ப்பை அவர்கள் மீது கொண்டு வர காரணமாக இருந்தது எது?

ஆதியாகமம் 6 : 5

இங்கே கூறப்படுகின்ற நான்கு முக்கியமான காரியங்களைப் பாருங்கள். இவையே முக்கியமான காரணங்களாக வேதம் வலியுறுத்துகிறது. ‘மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது. இருதயத்து நினைவுகள் பொல்லாதது‘, ‘நித்தமும்‘ ‘பொல்லாததே – அதாவது பொல்லாதது மட்டுமே – இந்த நான்கு காரியங்களும் அன்றைய நாட்களில் இருந்த மனிதர்களின் நிலையைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

www.Radio882.com

ஆதியாகமம் 6 : 6

"கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்" என்று இங்கே பார்க்கிறோம். கர்த்தர் மனஸ்தாபப்படும்படி செய்தது எது? மனிதனின் அக்கிரமே தேவனை அவ்வாறு மனஸ்தாபப்பட வைத்தது. இது தேவன் தம்முடைய சிந்தையை மாற்றிக் கொண்டது போன்று நமக்குக் காண்பிக்கிறது. மனிதனை பூமியிலிருந்து அகற்றி விட நோக்கமுடையவரானார். பூமியில் முன்பிருந்த படைப்பையும் அவர் அவ்வாறு செய்திருக்கக்கூடும். மனிதனுடைய பாவம் தேவனை துக்கப்படுத்தினாலும், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர் மனிதனைப் பரிபூரணமாக அழிக்கவில்லை.

ஆதியாகமம் 6 : 7

இங்கே தேவன் மீன்களைக் குறிப்பிடவில்லை. ஏனெனில் அவை தண்ணீரில் இருக்கின்றன. அவர் இன்னும் அதிகமாகத் தண்ணீரையே அனுப்பப் போகிறார் என்பதை கவனியுங்கள்.

ஆதியாகமம் 6 : 8

நோவாவுக்கு ஏன் கிருபை கிடைத்தது?

ஆதியாகமம் 6 : 9

தேவன் ஏன் நோவாவை இரட்சித்தார்? அவர் தேவனோடே சஞ்சரித்ததினாலா? ஆம், மேலும் இங்கே எபிரேயர் 11 : 7ல் சொல்கிறதைக் கவனியுங்கள்: "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான், அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்." அந்த வறண்ட நிலத்தில், மழை தூறக் கூட ஆரம்பிக்காதபோது பேழையை உருவாக்குவதற்கு விசுவாசம் அவசியமாயிருந்தது. எபிரெயர் 11ஆம் அதிகாரத்திலேயே, "விசுவாசத்தினாலேயே ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்" என்றும் சொல்லப்படுகிறது. சபையானது உலகத்தினின்று எடுத்துக் கொள்ளப்படும்போது ஒவ்வொரு விசுவாசியும் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். ஏனெனில் 'எடுத்துக்கொள்ளப்படல்' விசுவாசிகளுக்காகவே நடைபெறுகிறது. மிகவும் பெலவீனமான பரிசுத்தவான் கூட எடுத்துக் கொள்ளப்படுவான். தேவன் இரக்கம் காட்டுவதால் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். தேவனுடைய இரக்கம் அப்பொழுது காணப்படும் என்று நமக்கு சொல்லப்பட்டுள்ளது.

ஏன் ஜலப்பிரளயம்? தேவன் ஏன் ஜலப்பிரளயத்தை அனுப்பப்போகிறார்?

www.Radio882.com

ஆதியாகமம் 6 : 11 –12

அதாவது மனிதன் தேவனுடைய வழியை கெடுத்துப்போட்டு தன்னுடைய சொந்தவழிகளில் சென்று கொண்டிருந்தான். தேவன் அவனை எதற்காக சிருஷ்டித்தாரோ அந்த நோக்கத்தை விட்டு அவன் விலகிப்போனான்.

ஆதியாகமம் 6 : 13

தேவன் ஜலப்பிரளயத்தை அனுப்பப்போகின்றார். தேவன் ஏன் அதை அனுப்பினார் என்பதற்கான சில காரணங்களை நாம் இங்கே சிந்திப்போம்.

மீட்பரைப் பற்றிய வாக்குத்தத்தம் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. பூமிக்கு ஒரு இரட்சகர் வருவார் என்று அவனுக்கு சொல்லப்பட்டிருந்தது. இதையே மனிதன் எதிர்பார்த்திருக்க வேண்டும். மாறாக, அவன் தேவனை விட்டு விலகிச் சென்றான்.

தேவன், ஆதாமுக்கும், ஏவாளுக்கும் பலியை ஏற்படுத்திக் கொடுத்தார். அந்த சிறந்த, நித்தியமான கொள்கையை காயீன், ஆபேல் வாழ்க்கையில் பார்க்கிறோம். காயீனும், ஆபேலும் இரண்டு பெரிய முறைமைகளுக்கு, அதாவது இரண்டு பிரிவான மக்களுக்குப் பிரதிநிதிகள் போலக் காணப்படுகிறார்கள். அதாவது இரட்சிக்கப்பட்ட மற்றும் தொலைந்து போனவர்களுக்கு, சுயநீதியுள்ளவர்களுக்கு மற்றும் நொறுங்குண்ட ஆவியுள்ளவர்களுக்கு, ஒரு பெயரளவிலான கிறிஸ்தவனுக்கு மற்றும் உண்மையான விசுவாசிகளுக்கு அவர்கள் பிரதிநிதிகள் போன்று நின்று கொண்டிருக்கிறார்கள். மனித இனத்தில் அந்நாட்களில் இவ்வாறே காணப்பட்டது.

கோத்திரப்பிதாக்கள் மிகவும் நீண்டகாலமாக வாழ்ந்தார்கள் என்று பார்க்கிறோம். ஆதாமிலிருந்து மெத்தூசலா வரையுள்ள ஆயுட்காலம் அந்த சிருஷ்டிப்பிலிருந்து, ஜலப்பிரளயம் வரையுள்ள காலத்தை நிரப்பியுள்ளது. அவர்கள் தாங்கள் பெற்ற வெளிப்பாட்டை மற்றெல்லா மனிதர்களுக்கும் கொடுத்திருக்க வேண்டும். யூதா 14 மற்றும் 15ஆம் வசனங்களில் ஏனோக்கு பிரசங்கித்ததையும், தீர்க்கதரிசனம் உரைத்ததையும் பார்க்கிறோம். நோவா பேழையை கட்டிக்கொண்டிருந்த நாட்களில், பிரசங்கித்ததைக் குறித்தும் நமக்கு சொல்லப்பட்டுள்ளது. ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அது மக்கள் மத்தியிலே பரபரப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். தேவன் மக்கள் விஷயத்தில் தலையிடுகிறதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். மேலும் அவர்கள் மெத்தூசலா என்ற மனிதனைப் பற்றியும், அவனுடைய பெயருக்கான அர்த்தத்தையும் அறிந்திருந்தார்கள். அவன் மரித்தபோது, ஜலப்பிரளயம் வரும் என்பதையும் அறிந்திருப்பார்கள். இறுதியாக, பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தையும் அங்கே பார்க்கிறோம். தன்னுடைய ஆவி மனிதனோடு என்றைக்கும் போராடுவதில்லை என்று தேவன் கூறினார். ஆனால், மனிதன் தேவனை முற்றிலும் புறக்கணித்தபோது, தேவனுடைய நியாயத்தீர்ப்பாக ஜலப்பிரளயம் பூமியின் மீது வந்தது.

www.Radio882.com

மனிதகுலம் முழுவதுமே தேவனை விட்டு திரும்பிவிட்டது என்று பார்க்கிறோம். ரோமர் 3 : 10, "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்று சொல்கிறது. நோவாவும் அவனுடைய குடும்பத்தாருமாகிய சிலரே அவரை விசுவாசித்தார்கள். நோவா என்ற ஒரு மனிதன் தேவனோடு சஞ்சரித்தான். அவரை விசுவாசித்தான். இங்கே ஒரு மனிதன் தேவனை இன்னும் விசுவாசிக்கிறதைப் பார்க்கிறோம். "விசுவாசத்தினாலே நோவா" என்று வசனம் சொல்கிறது. இங்கே ஒரு மனிதன் வறண்ட நிலத்தில் பேழையைக் கட்டும் பெரிய இடர்ப்பாட்டை விரும்பத்துடன் எடுக்கிறதைப் பார்க்கிறோம். ஒருவேளை மழை வராவிட்டால், சமுதாயம் அவனைப் பார்த்து எள்ளி நகையாடும். இவ்வாறு நோவா 120 ஆண்டுகள் விசுவாசத்தோடு செயல்பட்டான்.

இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்க வரும்போது நோவாவின் நாட்களில் நடந்தது போன்ற அநேகக் காரியங்கள் நடைபெறும் என்று வாசிக்கிறோம். நோவாவின் காலத்திற்கு ஒத்த சில காரியங்கள் ஏற்கனவே நடைபெற்று விட்டன. உதாரணமாக, இந்த அதிகாரம் இவ்வாறு ஆரம்பமாகிறது. "மனுஷர் பூமியின் மேல் பெருகத்துவக்கி, அவர்களுக்குக் குமாரத்திகள் பிறந்தபோது" என்று சொல்லப்படுகிறது. நோவாவின் காலத்திலே, பூமியின் மீது மக்கள் தொகை அதிகமாகப் பரவியிருந்தது. வட அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா போன்ற கண்டங்களில் மனிதர்கள் பெருகியிருந்தார்கள். இன்றும்கூட மக்கள் தொயின் பெருக்கத்தைப் பாருங்கள். பூமியின் மீதெங்கும், திரள் திரளான கூட்டம். மக்கள் தொகை அதிகமாகப் பெருகியிருந்தது.

மேலும், இங்கேயொரு காரியத்தை நாமறிகிறோம். மகா உபத்திரவத்தின் காலத்தின்போது, பரிசுத்த ஆவியானவர் தீமையை கட்டுப்படுத்தப் போவதில்லை. அவர் மனிதர்களை மனந்திரும்ப வைப்பதற்கு அங்கேதான் இருப்பார். ஆனால் அப்பொழுது அவர் தீமையை தடுத்து நிறுத்தப் போவதில்லை. அவர் மனிதனோடு உடன்படிக்கை செய்ய நினைக்கும்போது, அவர்கள் அதை புறப்பணிக்கிறவர்களாக, நிந்திக்கிறவர்களாகக் காணப்படுவார்கள். இன்றும் கூட அப்படிப்பட்டவர் அநேகர் இருக்கிறார்கள். மக்களைப் பிரியப்படுத்தும் வகையில் ஊழியர்கள் பேசினால், அதைக் கேட்போர் உண்டு. வேதத்தைத் திரித்து அதை மக்களின் நடைமுறைக்கு ஒத்தாற்போன்று பேசினால் வரவேற்பு உண்டு. ஆனால் வேதத்தை அப்படியே பிரசங்கிப்போருக்கு எதிர்ப்புதான் வரும். இவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு இடம் கொடுக்காதவர்கள். இவ்வாறே மகா உபத்திரவ நாட்களிலும் மக்கள் காணப்படுவார்கள். ஆதியிலும் காணப்பட்டார்கள்.

இறுதியாக, எதிர்காலத்தில் உலகத்தில் உள்ளோர் சபை எடுத்துக் கொள்ளப்படல் என்ற நிகழ்ச்சியின் மூலம் பெரும் பிரச்சனையை சந்திப்பார்கள். அநேகர் இரகசியமான முறையிலே பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுவார்கள். மேலும், நோவாவின்

www.Radio882.com

காலத்திலே நியாயத்தீர்ப்பு காணப்பட்டும், அநேகர் செவிகொடாமற் போனதுபோல, இன்றைய நாட்களிலும், எதிர்காலத்திலும் செவிகொடாமற் போவார்கள். அருமையானவர்களே, நீங்கள் இன்று எவ்வாறு காணப்படுகிறீர்கள்? தேவனுக்கு செவிசாய்க்கிறவர்களாக இருக்கிறீர்களா? அவரிடத்தில் கற்றுக் கொள்கிறவர்களாகக் காணப்படுகிறீர்களா? அவருடைய இரட்சிப்பின் பேழைக்குள் நீங்கள் வந்திருக்கிறீர்களா? இல்லாவிட்டால் வெளியே நின்று கொண்டிருக்கிறீர்களா? அவர் இரட்சிப்பின் பேழையின் கதவை இப்பொழுது திறந்தே வைத்திருக்கிறார். கதவு மூடப்படும் நாள் ஒன்று வருகிறது. இன்றே உள்ளே வருவீர்களா?

ஆதியாகமம் 6 : 14 – 7: 24

இங்கே பேழையை ஆயத்தம் செய்யும்படி தேவன் நோவாவிடம் கூறுகிறதைப் பார்க்கிறோம். தேவன் ஜலப்பிரளயத்தை அனுப்பும் முன்னர், மக்களுக்குப் போதுமான வாய்ப்பை கொடுக்கிறதைப் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 6 : 14

"நீ கோப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு" என்கிறார். இந்த கோப்பேர் பலகை மிகவும் உறுதியானது மட்டுமல்ல எளிதில் அழிந்து போகக்கூடாதது. "அந்தப் பேழையிலே அறைகளை உண்டு பண்ணி" என்றும் தேவன் நோவாவிடம் கூறுகிறார். இங்கே அறை என்பது ஒரு பறவையின் கூடு போன்றதொரு அர்த்தத்தைத் தருகிறது. ஒருவேளை யானைக்கு ஒரு பெரிய அறை தேவைதான். மூஞ்சுறு போன்றவற்றிற்கு பெரிய அறை தேவையில்லை. அது ஒரு மூலையில் இருந்து கொள்ளும்.

"அதை உள்ளும் புறம்புமாகக் கீல்பூசு" என்கிறார். இது அந்த பேழைக்குள் தண்ணீர் நுழைந்து விடாதபடி தடுக்கும் நடவடிக்கையாகும்.

ஆதியாகமம் 6 : 15

நோவாவின் பேழையைக் குறித்து அநேகர் சிறிதானதொரு பார்வையை உடையவர்களாக இருக்கிறார்கள். ஞாயிறு பாடசாலையில் ஆசிரியை காண்பித்த ஓவியம் போன்று அந்தப் பேழையும் சிறிதாக இருக்கும் என்று எண்ணுகிறார்கள். இல்லை. நாம் நினைப்பதுபோல அது சிறிதானது அல்ல. தேவன் கொடுக்கின்ற அளவை வைத்துப் பாருங்களேன். இது ஒரு பெரிய பேழையாகும். "பேழையின் நீளம் முந்நூறு முழம்" என்று சொல்கிறார். அதாவது ஒரு முழம் என்பது 18 அங்குலம் என்று வைத்துக் கொள்வோமென்றாலும், அது எவ்வளவு பெரிதாயிருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

இப்பொழுது நமக்கொரு கேள்வி எழும்பக்கூடும். அன்றைய நாட்களில், இவ்வளவு பெரிய பேழையை அவர் எவ்வாறு செய்திட முடியும்? அருமையானவர்களே, நாம் குகையில் வாழும் மனிதனைக் குறித்து இங்கே சிந்தித்துக் கொண்டிருக்கவில்லை. நாம் ஒரு ஞானியை இங்கே காண்கிறோம். நோவாவிலிருந்தே இன்று நாம் காண்கிற புத்திசாலியான யூத ஜனம் தோன்றியிருக்கிறது என்பதை மறந்து போகக் கூடாது. அவன் மிகவும் புத்திசாலியான ஒரு மனிதனாய் இருந்திருப்பான். மேலும் நோவா செய்யப் போகின்ற பேழை, கடலில் செல்லக்கூடியதாக இருக்க வேண்டியதில்லை. அலைகளும், புயலும் தாக்கும் தண்ணீர் மேலே செல்லக் கூடியதாகச் செய்ய வேண்டியதில்லை. அவர் செய்ய வேண்டியதெல்லாம், விலங்குகளின் உயிரையும், மனிதனின் உயிரையும் பாதுகாக்கும் ஒரு இடமாக இருந்தால் போதும். சிறிதுகாலத்திற்கு வெள்ளத்தின் மீது மிதந்து கொண்டிருக்கும் இடமாக இருக்கும்படி அதைச் செய்தால் போதும். நீங்கள் கடலில் செல்லும் கப்பலைப் போன்ற காரியங்களை இதில் காண இயலாது. ஆகவே, இதில் அநேக அறைகள் இருந்திருக்க வேண்டும்.

ஒரு முழம் என்பது 18 அங்குலமாக இருக்குமென்றால் 300 முழம் என்பது 450 அடி நீளம் உடையதாக இருக்கும். உதாரணமாக இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட 'நியூ மெக்சிகோ' என்ற போர்க்கப்பல், 624 அடி நீளமும், 106 1/4 அடி அகலமும் உடையதாக இருந்தது. நாம் இந்த நோவாவின் பேழையை இதோடு ஒப்பிட்டோமானால், ஏறக்குறைய ஒரே அளவை உடையதாகவேக் காணப்படுகிறது. ஆகவே, நாம் நோவாவின் பேழையை அற்பமாக எண்ண முடியாது.

ஆதியாகமம் 6 : 16

"நீ பேழைக்கு ஓர் ஜன்னலை உண்டுபண்ணி" என்கிறார். இந்த ஜன்னல் பேழையின் பக்கவாட்டில் சிறிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒன்றல்ல! ஜன்னலானது ஒரு முழ உயரமாகவும், பேழையின் உச்சி வரை செல்கிறதாகவும் இருந்திருக்கிறது. இதற்கு சற்றுமேலே மேல்கூரை போடப்படுகிறது. இன்றைய நாட்களில் சில விளையாட்டு, உடற்பயிற்சி அரங்குகளில் அவ்வாறு கட்டப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இவ்வாறு பேழையை அமைக்கும்போது, அந்தப் பேழையில் மிருகங்களின் நாற்றம் இருக்காது. அதோடுகூட நோவா குடும்பத்தினரும் உண்டு, உறங்கி வாழ்வதற்கு ஏற்றதாக அமைந்திருக்கும்.

"பேழையின் கதவை அதின் பக்கத்தில் வைத்து" என்கிறார். அந்தப் பேழைக்கு ஒரே ஒரு கதவே இருந்தது. இது மிகவும் முக்கியமானது. இயேசு கிறிஸ்து, "நானே வழி" என்றும் "நானே ஆடுகளுக்கு வாசல்" என்றும் சொன்னார். மேலும் அவரே இந்தப் பேழையின் வாசலாகவும் இருக்கிறார். பேழை இரட்சிப்பாகும். அதற்கு இயேசுவே வழி. "கீழ்

www.Radio882.com

அறைகளையும், இரண்டாம் தட்டின் அறைகளையும், மூன்றாம் தட்டின் அறைகளையும் பண்ண வேண்டும்" என்கிறார். இந்த பேழையானது மூன்று தட்டுக்களை உடையதாக இருந்தது. இந்த ஒவ்வொரு தட்டிற்கும் கதவு இருந்ததா? இல்லை ஒரே ஒரு கதவே வெளியிலிருந்து உள்ளே வருவதற்கு இருந்தது. உள்ளே வந்த பிறகு பிரிந்து ஒவ்வொரு தட்டிற்கும் செல்ல வழி இருந்தது.

ஆதியாகமம் 6 : 17

தேவன் இந்த நியாயத்தீர்ப்பை மனிதன் மீது மட்டுமல்ல, எல்லா மிருகங்கள், பறவைகள் மீதும் கொண்டு வந்தார் என்பதை கவனியுங்கள்.

ஆதியாகமம் 6: 18 – 20

"வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உயிரோடே காக்கப்படுவதற்கு உன்னிடத்திலே வரக்கடவது" என்று பார்க்கிறோம். அதாவது இந்த மிருகங்களையும், பறவைகளையும் பிடிக்க நோவா அதன் பின்னாலே செல்ல வேண்டியதில்லை. அவன் ஒரு சிறந்த வேடனும் அல்ல. அவனைத்தேடியே இவைகள் வந்து விடும். அதற்கு தேவன் கட்டளையிடுவதினாலே அவ்வாறு வரும்.

Yosemite பள்ளத்தாக்கு பகுதியில், பனிமூடிக் காணப்படும் காலங்களில், மலை மேலே வாழும் கரடிகள் கீழே இறங்கி வந்து விடுமாம். மலையின் மேல் பகுதியில் பனியால் மூடியிருப்பதால் அதற்கு வாழ்வதற்கு இயலாது. அது ஆபத்தான சூழ்நிலை. ஆகவே அவைகள் கீழே நாட்டுப்பகுதியில் ஒரு சாதாரண மிருகத்தைப் போல பிரச்சினை, தொந்தரவு எதுவும் பண்ணாமல் வாழுமாம். ஆனால், மலையின் மேல் பகுதியில் பனி உருக ஆரம்பித்த பிறகு, இந்தக் கரடிகள் மேலே சென்று விடும். அங்கே இவை ஆபத்தை விளைவிக்கக்கூடியது. பார்த்தீர்களா? ஆபத்தான சூழ்நிலையில் மிருகங்கள் மனிதனைத் தேடி வருகின்றன. அதேபோன்று ஜலப்பிரளயத்தின்பொழுதும் நோவாவிற்கும் இந்த மிருகங்களைப் பற்றி எந்த பிரச்சனையும் இருந்திருக்காது. எல்லா மிருகங்களும் அவனைத் தேடி வந்தன.

ஆதியாகமம் 6 : 21 – 22

இப்பொழுது நோவா நடைமுறையான காரியத்தை செய்கிறதைப் பார்க்கிறோம். இந்த மிருகங்களுக்கெல்லாம் உணவு கொடுக்க வேண்டுமென்றால் அநேகப் போஜனப் பதார்த்தங்களை நோவா சேகரித்து வைத்திருக்க வேண்டும். சிலர் இவ்விதமாகச் சொல்லக்கூடும். "இவைகளில் சில மிருகங்கள், மாம்சம் தின்னக்கூடியவை. ஆகவே அவை ஒன்றையொன்று தின்று விடும்" என்று. இல்லை அவ்வாறிருக்க முடியாது. ஜலப்பிரளயம் வருகிற வரை, மனிதனும், மிருகங்களும், மாம்சத்தை உண்கிறவர்களாக இல்லை. தாவர உணவு உண்கிறவர்களாக இருந்தார்கள். ஆயிர வருட அரசாட்சியில், புலி

www.Radio882.com

வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்திக் கொள்ளும் என்றும், சிங்கம் மாட்டைப் போல் வைக்கோல் தின்னும் என்றும் சொல்லப்படுகிறதை ஏசாயா 11ஆம் அதிகாரத்தில் பார்க்கிறோம். இதுவே மிருகங்களின் உண்மையான நிலையாகவும் இருந்திருக்கும். ஆயிரவருட அரசாட்சியில் அவ்வாறே இருக்கப்போகிறது. நோவாவின் பேழையிலும் இதே நிலையே.

ஆதியாகமம் 7

ஆதியாகமம் 7 : 1

நோவா ஏன் நீதிமான்? அவனுடைய விசுவாசத்தினால், இவனுக்குப் பின்பு வந்த ஆபிரகாமும், விசுவாசத்தினாலே நீதிமானானான் என்று பார்க்கிறோம். ஆதியாகமம் 15 : 6, "அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" என்று சொல்கிறது. நோவா தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. எபிரேயர் 11 : 7ல் நிருப ஆக்கியோன், "விசுவாசத்தினாலே நோவா .... பேழையை உண்டுபண்ணினான்" என்கிறார். இந்தக் காரணத்தினாலேயே தேவன் நோவாவைக் காத்தார். அருமையானவர்களே, உங்களுக்கு இயேசுவின் மீது விசுவாசம் உண்டா?

இந்த நியாயத்தீர்ப்புக் கால முழுவதிலும், தேவன் நோவாவோடே எவ்வளவு கிருபையாக செயல்பட்டிருக்கிறார், என்பதை நீங்கள் எப்போதாவது கவனித்ததுண்டா? இங்கே 1ஆம் வசனத்தில், தேவன் நோவாவையும், அவருயை வீட்டார் அனைவரையும் வாருங்கள் என்று அழைப்பு கொடுக்கிறார். இன்று எல்லா மனுக்குலத்தையும் பார்த்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கொடுக்கும் அழைப்பும் இதுவே. மத்தேயு 11 : 28, "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்கிறார். மேலும் நீங்கள் இந்த 7ஆம் அதிகாரம் 16ஆம் வசனத்தைப் பார்ப்பீர்களானால், "அப்பொழுது கர்த்தர் அவனை உள்ளே விட்டுக் கதவை அடைத்தார்" என்று சொல்கிறதைக் காணலாம். இது அழகாக இருக்கிறதல்லவா? இறுதியாக 8ஆம் அதிகாரத்திலேயும் இவ்வாறு ஆரம்பமாகிறது. "தேவன் நோவாவை நினைத்தருளினார்." இது எவ்வளவு ஆச்சரியமானது? நோவாவை தேவனால் எளிதில் மறக்க வாய்ப்பிருக்கிறது. பல ஆண்டுகளுக்குப் பிறகு தேவன், "ஓ, நான் அந்த நோவாவை மறந்து போய்விட்டேனே. நான அவனை பேழைக்குள் வைத்ததோடு மறந்து போய் விட்டேனே" என்று கூறினால், எவ்வளவு மோசமான நிலையாக இருக்கும், இல்லையா? ஆனால், தேவன் மறக்கவில்லை, மறப்பதில்லை. தேவன் நோவாவையும் நினைத்தருளினார். அவர் உங்களையும் நினைத்திருக்கிறார்.

அவர் ஒன்றே ஒன்றை மட்டும் நினைவில் வைப்பதில்லை. நீங்கள் உங்கள் பாவத்தை அறிக்கையிட்டு இரட்சிப்படையும்பொழுது உங்கள் பாவத்தை அவர் திரும்ப நினைவிலே கொண்டுவருவதே இல்லை. இது எவ்வளவு அருமையான காரியம், இல்லையா?

இப்பொழுது நோவாவும். அவனுடைய குடும்பத்தாரும், பேழைக்குள் நுழைகிறார்கள். நோவாவின் வரலாறும், சிருஷ்டிப்பின் வரலாறைப் போன்றே உலகின் பல்வேறு பகுதிகளில் பலவிதமாகச் சொல்லப்படுகிறதை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பாபிலோனிய குறிப்பு ஒன்று இதை வித்தியாசமாகச் சொல்கிறது. நீங்கள் வேதத்தின் வரலாற்றினை மற்றவற்றோரு ஒப்பிட்டுப் பார்த்தால் அநேகக் காரியங்களை நீங்கள் அறிந்து கொள்ள முடியும். மற்ற குறிப்புக்களெல்லாம் வேடிக்கையானதாக, விநோதமானதாகக் காணப்படுகிறதை நீங்களறிய முடியும். அவர்கள் சிருஷ்டிப்பையும், ஜலப்பிரளயத்தையும் குறித்து சில காரியத்தைச் சொல்ல விரும்புகிறார்கள். இவற்றை சொல்ல அவர்களுக்கு அடிப்படையான ஒரு கருத்து வேண்டியதாயிருக்கும். அது வேதத்தினுடையதுதான் என்பதில் சந்தேகமில்லை. நீங்கள் அதோடு வேதத்தை ஒப்பிடும்போது, சரியானது எது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். பாபிலோனிய குறிப்பு எவ்வாறு சொல்கிறதென்றால், தெய்வங்களுக்கு இடையே போர் ஏற்பட்டதினால், இந்த ஜலப்பிரளயம் ஏற்பட்டது என்று சொல்கிறது. இது விநோதமாக இருக்கிறதல்லவா? மாறாக, மனிதனுடைய பாவத்தினிமித்தும், தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள் மீது வந்தது என்றும், அதுவே ஜலப்பிரளயம் என்றும் வேதம் தெளிவாய் சொல்கிறது. இதில் அர்த்தமிருக்கிறதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

ஆதியாகமம் 7 : 2 – 3

இங்கேயொரு காரியத்தை நாம் கவனிக்க வேண்டும். முதலாவது ஒவ்வொரு ஜோடு உயிரோடே காக்கப்படக்கடவது என்று தேவன் கூறிவிட்டு, இப்பொழுது சுத்தமான சகல மிருகங்களிலும் எவ்வேழு ஜோடு சேர்த்துக் கொள்ளும்படி தேவன் கூறுகிறாரே, இது எதற்காக? நோவா பேழையை விட்டு வெளியே வந்தபின்பு என்ன செய்தார் என்று 8ஆம் அதிகாரத்தின் இறுதிப்பகுதியை வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள். அவர் பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருக்கு சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்து கொண்டு, அவைகளைப் பலிபீடத்தின் மேல் தகனபலியாக பலியிட்டார் என்று பார்க்கிறோம். அவர் ஒவ்வொரு ஜோடுக்கு மேல் எடுக்காதிருந்தால், இப்பொழுது எவ்வாறு சுத்தமானவற்றில் சிலவற்றை பலியிட்டிருக்க முடியும்? சுத்தமானவற்றில் மட்டும் அவர் எவ்வேழு ஜோடுகளை எடுத்ததற்கான காரணத்தை நாம் இப்பொழுது அறிகிறோம். சுத்தமல்லாதவை ஒரு ஜோடு தான் எடுக்கப்பட்டது.

"ஆகாயத்துப் பறவைகளிலும், சேவலும், பேடுமாக எவ்வேழு ஜோடும் உன்னிடத்தில் சேர்த்துக் கொள்" என்று பார்க்கிறோம். இது சுத்தமானவற்றிற்கு சொல்லப்படுகிறது.

ஆதியாகமம் 7 : 4,5

இந்த ஏழு நாட்களும் உலகமக்கள் அந்தப் பேழையின் கதவண்டை வந்து தட்டியிருந்திருக்கக்கூடும். வெளிப்படையாகச் சொல்வோமானால் அவர்கள் உள்ளே வந்திருக்கமுடியும். பாதுகாக்கப் பட்டிருக்க முடியும். அவர்கள் செய்ய வேண்டியது எல்லாம், தேவனை விசுவாசிக்க வேண்டும். அவ்வளவுதான்.

ஆதியாகமம் 7 : 6 -9

நோவா வெளியே சென்று மிருகங்களை உள்ளே ஓட்டிக் கொண்டு வந்தான் என்று வேதத்தில் ஒரு பகுதியிலும் சொல்லப்படவில்லை. அது தேவையாயிருக்கவில்லை. காரணம், அவைகள் அவனிடத்தில் வந்தன.

ஆதியாகமம் 7 : 10- 17

சரி, இந்த ஜலப்பிரளயம் நிகழ்ந்ததற்கு ஏதாவது அறிவியல் பூர்வமான, வரலாற்று பூர்வமான சான்றுகள் இருக்கின்றனவா என்று நீங்கள் கேட்கலாம். இதற்கு அநேக ஆதாரங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் இங்கே குறிப்பிட நான் விரும்பவில்லை. ஆனால் ஒரு புத்தகத்தின் பெயரை குறிப்பிட விரும்புகிறேன். அது மிகவும் சிறந்ததொன்று. 'The Genesis Flood' என்று இந்தப் புத்தகத்தை ஆங்கிலத்தில் Henry M. Morris என்பவரும், John C. Whit Comb என்பவரும் சேர்ந்து எழுதியிருக்கிறார்கள். இதை இவர்கள் எழுதுவதற்குத் தகுதி பெற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய புத்தகத்தில் இந்த ஜலப்பிரளயமானது உலகம் முழுவதும் இருந்தது என்று ஆதாரத்துடன் குறிப்பிடுகிறார்கள். இவற்றிற்கு வரலாற்று ஆதாரம் இருக்கிறது என்கிறார்கள். மேலும், ஜலப்பிரளயத்திற்கு எதிராகக் கூறப்படும் கொள்கைகளுக்கும், தத்துவங்களுக்கும் இந்த புத்தகத்தில் பதில் கூறியுள்ளார்கள். அருமையானவர்களே, உங்களுக்கு வாய்ப்பிருந்தால் வாங்கிப் படியுங்கள். ஜலப்பிரளயத்தின் நிச்சயத்தை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

ஆதியாகமம் 7 : 23

"இந்த ஜலப்பிரளயம் பூமி முழுவதிலும் நடக்கவில்லை" என்று சில வல்லுநர்கள் சொல்கிறார்கள். அது ஐபிராத்து - டைகிரிஸ் நதியைச் சுற்றியுள்ள பகுதியில் மட்டுமே நடந்தது என்கிறார்கள். அது ஒரு பெரிய நீச்சல் குளம் போன்று காணப்பட்டது என்பதே அவர்கள் கருத்தின் சுருக்கம். ஆனால், நாம் சற்று முன்னர் கூறிய புத்தகம், இதற்குச் சரியான விளக்கம் கொடுக்கிறதாக இருக்கிறது. இந்த ஜலப்பிரளயம் பூமியெங்கும் காணப்பட்டது என்பதை வேதமும் தெளிவுப்படக் கூறுகிறது. பூமி முழுவதும் ஜலப்பிரளயத்தால் அழிக்கப்பட்டுப் போகும் என்றே தேவன் 6 : 13 இல் கூறுகிறார். "அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது, அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது. நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப் போடுவேன்" என்கிறார்.

www.Radio882.com

ஒருவேளை நீங்கள் இந்த ஜலப்பிரளயம் உலகம் முழுவதும் நடக்கவில்லை என்று சொல்வீர்களானால், நோவாவைத் தவிர, வேறு சிலரும் இருந்து மனிதகுலம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தார்கள் என்று நீங்கள் சொல்வதற்கு சமமாகும். ஆனால் தேவனுடைய வார்த்தை அவ்வாறு கூறவில்லையே. ஒன்று நீங்கள் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது அதைப் புறக்கணித்துத் தள்ள வேண்டும். இந்த இரண்டில் ஒரு நிலைமையைத்தான் நீங்கள் மேற்கொள்ள முடியும். ஆனால், ஜலப்பிரளயம் அந்த இடத்தில் மட்டுமே நடந்தது என்று சொல்வதென்பது, தேவனுடைய வார்த்தையை புறக்ககணிப்பதற்கு சமமாகும். பூமியெங்கும் ஜலப்பிரளயம் இருந்தது என்பதை வேதம் தெளிவுப்படக்கூறுகிறது. "பூமியின் மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்து, அவைகள் பூமியில் இராதபடிக்கு நிக்கிரகமாயின, நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டன" என்று வசனத்தில் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 7 : 24

சுமார் பாதி வருடம் வரை, ஐந்து மாதம் வரை தண்ணீர் பூமியின் மீது நின்று கொண்டிருந்தது.

சிலர் ஜலப்பிரளயம் போன்ற இப்படிப்பட்ட பெரிய கொந்தளிப்போ அல்லது இயற்கை சீரழிவோ ஏற்படவில்லை என்று சொல்வதுண்டு. இங்கே பேதுரு கூறியதை நாம் கவனிக்க வேண்டியது அவசியம். இப்படிப்பட்ட நிந்திக்கிறவர்கள் வருவார்கள் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும் என்று அவர் 2 பேதுரு 3 : 3 – 4ல் கூறுவதைக் காணலாம். வசனங்களைப் பாருங்கள், "முதலாவது நீங்கள் அறிய வேண்டியது என்னவெனில், கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின் படியே நடந்து அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்ற முதல் இருந்த விதமாயிக்கிறதே என்று சொல்லுவார்கள்" என்கிறார்.

இந்தப் பரியாசக்காரர்கள் இவ்விதமாகவே, வேதத்தின் காரியங்களை குறைகூறுகிறவர்களாகக் காணப்படுவார்கள். சிருஷ்டிப்பின் தோற்ற முதல் இருந்த விதமாயிருக்கிறது என்றே சொல்வார்கள். இடையில் பெருவெள்ளம் அதாவது ஜலப்பிரளயம் போன்றவையெல்லாம் ஏற்படவில்லை என்பார்கள். அருமையாளவர்களே, ஒருவன் இப்படிப்பட்ட கருத்துடையவனாக இருந்துகொண்டு, தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டவனாகக் காணப்பட இயலாது. நீங்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறீர்கள்? வேதம் முழுவதையும் தேவனுடைய வார்த்தை என்று ஏற்றுக் கொள்கிறீர்களா? அல்லது சில காரியங்களை மட்டும் நம்பிவிட்டு, மற்றவற்றை விட்டு விடுகிறீர்களா? நாம் வேதம்

www.Radio882.com

முழுவதையும் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாகும். அதுவே சரியான விசுவாசமாகும். ஒருவேளை இதுவரை நீங்கள் அவ்வாறு ஏற்றுக் கொள்ளவில்லையானால், இப்பொழுது ஏற்றுக் கொள்வீர்களா?

ஆதியாகமம் 8

ஆதியாகமம் 8 : 1-4

பூமியின் மீது ஜலப்பிரளயம் எவ்வாறு பெருக்கெடுத்தது என்பது குறித்தக் குறிப்புக்கள் வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது மட்டுமல்ல. அது எவ்வாறு வடிந்து சென்றது என்பதைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே "தேவன் நோவாவை நினைத்தருளினார்" என்று சொல்லப்படுகிறதைப் பார்க்கிறோம். இது எவ்வளவு அழகாயிருக்கிறது, இல்லையா? அடுத்து "தேவன் பூமியின் மேல் காற்றை வீசப்பண்ணினார். அப்பொழுது ஜலம் அமர்ந்தது" என்று சொல்லப்படுகிறது. இது ஒரே இரவில் நடந்துவிட்ட காரியமல்ல. ஜலப்பிரளயம் பெருக்கெடுக்க நூற்றைம்பது நாட்கள் ஆனது. அதற்குப் பிறகு 261 நாட்கள் ஜலம் வடிந்தது. ஆக இது நாம் காண்கின்ற, கேள்விப்பட்ட வெள்ளத்தை விட மிகவும் பெரியது என்பதை அறிய முடியும்.

ஆதியாகமம் 8 : 5 - 6

ஜலப்பிரளயத்தின் முடிவிற்கு இது ஆரம்பம் என்று நாம் சொல்ல முடியும். அடுத்து, நோவா என்ன செய்தான் என்று கவனித்துப் பாருங்கள்.

ஆதியாகமம் 8 : 7 - 8

வெளிப்படையாகச் சொல்வோமானால், நோவா பறவையை கவனிக்கிறவனாக ஆகிவிட்டான் எனலாம். அவன் காகத்தையும், புறாவையும் வெளியே பறக்க விட்டு அதை கவனித்துக் கொண்டிருந்தான்.

ஆதியாகமம் 8 : 9 -12

காகமும், புறாவும் பறக்கவிடப்பட்ட நிகழ்ச்சியிலே நாம் ஒரு சிறந்த ஆவிக்குரியப் பாடத்தைக் காண முடியும். நோவா பேழையில் ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்த பிறகு, காகத்தை வெளியே அனுப்பினான். அது போகிறதும் வருகிறதுமாய் இருந்தது. புறா சென்று திரும்புகிறதாக இருந்தது. ஒரு ஒலிவ மரத்தின் இலையை அது கொண்டும் வந்தது. புறாவும், ஒலிவ இலையும் சமாதானத்தைக் குறிக்கிறதாகச் சொல்வார்கள். அது அவ்வளவு சரியானதாக இல்லை. புறா திரும்பி வராமலே இருந்தது என்பதே நியாயத்தீர்ப்பு முடிவடைந்து விட்டது, பூமிக்கு சமாதானம் திரும்பிவிட்டது என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. அதேபோல், மனிதன் இந்தப் பேழையை விட்டு வெளியேறும்போது முன்னர் எப்படியிருந்தானோ அதே சுபாவத்தோடே காணப்பட்டான் என்றறிகிறோம். ஆதாமின்

குமாரர்களுக்கு இருந்த அதே தன்மை. முதலில் பூமியில் ஜலப்பிரளயம் வருமளவிற்கு தேவனைக் கோபப்படுத்திய அதே தன்மை, ஜலப்பிரளயத்திற்குப் பின்பும் மனிதனிடம் இருந்தது. மனிதனுடைய சுபாவத்தில் அவ்வளவு முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதை நாம் பின்வரும் பகுதிகளில் காண்கிறோம்.

நாம் ஏற்கனவே சிந்தித்தது போல இந்த வசனத்திலே சிறந்த ஆவிக்குரிய சத்தியம் இருக்கிறது. நோவா இங்கே பறவையைக் கவனிப்பதில் ஈடுபட்டிருந்தான். அவன் முதலாவது காகத்தைப் பறக்க விட்டிருந்தான். ஆனால் காகம், போகிறதும் வருகிறதுமாய் இருந்தது. ஏன்? நாமறிந்தது போல் காகம் மாம்ச பட்சிணியாக இருக்கிறது. அந்த ஜலப்பிரளயத்தின்போது அநேக இறந்த மிருகங்களின் உடல்கள் மிதந்து கொண்டிருந்தன. இவற்றை உண்ணவே காகங்கள் விரும்பும். உண்மையில் விருந்து உண்கிறதற்கு சிறந்த வேளையாக அதற்கு இருந்தது. காகம் சுத்தமல்லாத பறவைகளின் பட்டியலிலே வருகிறதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

ஆனால் புறாவானது சுத்தமான பறவைகளின் பட்டியலிலே வருகிறது. நோவா சுத்தமானவற்றையும், சுத்தமல்லாதவற்றையும் பேழைக்குள் வைத்திருந்தான் என்பதை வேதத்தில் பார்க்கிறோம். புறாவானது வீட்டுப்பறவையாக இருந்தபடியினாலே அது செய்தியை திரும்பக் கொண்டு வந்தது. புறா இரண்டாவது முறை திரும்பி வந்தபோது, பறவைகளை கவனித்துகொண்டிருந்த நோவா, வெட்டாந்தரையானது தோன்ற ஆரம்பித்து விட்டது என்பதைத் தெரிந்து கொண்டான். மூன்றாவது முறை புறா திரும்பி வராததினாலே ஜலத்தினால் வந்த தேவ நியாயத்தீர்ப்பு கடந்து போய்விட்டது என்பதையும் நோவா உறுதி செய்து கொண்டான்.

நாம் ஏற்கனவே சிந்தித்ததுபோல, வேதத்தின் சிறந்த சத்தியங்கள் ஆதியாகமத் திலேயே துளிர்விட்டிருக்கின்றன. விசுவாசிகள் இரண்டு சுபாவம் உடையவர்களக இருக்கிறார்கள் என்று வேதமே நமக்குப் போதிக்கிறது. பழைய மற்றும் புதிய சுபாவம். 2 கொரிந்தியர் 5 : 17: “இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின.”

சுத்தமானதும், சுத்தமல்லாததும் ஒன்றாகக் காணப்படுகின்றன. விசுவாசிகளான உங்களுக்கும், எனக்கும் இந்த இரண்டு சுபாவங்களும் காணப்படுகின்றன. இயேசு கிறிஸ்து யோவான் 3 : 6ல் கூறுகிறார். "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்," பவுல் ரோமர் 7 : 18ல் எழுதுகிறார், "அதெப்படியெனில், என்னிடத்தில் அதாவது என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிற தில்லையென்று நான் அறிந்திருக்கிறேன், நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது. நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை."

இந்த இரண்டு சுபாவங்களுக்கிடையேக் காணப்படுகிற போராட்டத்தைக் குறித்து பவுல் பேசுகிறார். இன்றும் விசுவாசிகளுடைய வாழ்க்கையிலும் பழைய, புதிய சுபாவங்களுக்கிடையே போராட்டம் காணப்பட்டுக் கொண்டேதான் இருக்கிறது.

காகமானது நியாயத்தீர்க்கப்பட்ட உலகத்திற்குள்ளே சென்று விட்டது. அதற்கு இறந்த மிருகங்களின் உடல்களே உணவாகையால், அதை உண்டு மகிழ்ந்து கொண்டிருந்தது. ஆனால் அது அங்குமிங்கும் போகிறதும், வருகிறதுமாக இருந்தது. இதுவே நம்முடைய பழைய சுபாவத்தைப் பற்றிய சரியான ஓவியம். காகத்தைப் போலவே நம்முடைய பழைய சுபாவம் இருக்கிறது. இந்த உலகத்தின் பொருட்களை நேசித்து அதிலே விருந்து அனுபவிக்க அது விரும்புகிறது. இதன் காரணமாகத்தான் அநேகர் ஆலயத்திற்கு வருவதைக் கூட நிறுத்திவிட்டு, தங்கள் மாம்ச விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான காரியங்களில் ஈடுபடுகிறார்கள். பொழுதுபோக்கு அம்சங்களில், இச்சைகளில் ஈடுபட்டு ஆவிக்குரிய காரியங்களைப் பின்னாகத் தள்ளுகிறார்கள்.

புறாவானது நியாயந்தீர்க்கப்பட்ட உலகத்திற்குள்தான் சென்றது. ஆனால் அது அதில் ஓய்வைப் பெறவில்லை, திருப்தியடையவில்லை. ஆகவே, பேழைக்குத் திரும்பி வந்தது. புறா உலகத்திலே வாழ்கின்ற விசுவாசிகளைக் குறிக்கிறது. காகம் உலகிற்குள் சென்று அதை நேசித்தது. அது மரித்த உடல்களைப் பார்த்தபோது, அதற்கு ஆயிரவருட அரசாட்சியே வந்துவிட்டது போலிருந்திருக்கும். நாம் ஒன்றை எவ்வாறு பார்க்கிறோம் என்பதே முக்கியம். தேவன் எதை சரியென்று சொல்கிறாரோ அதுதான் சரியானது. அவர் எதை தவறென்று சொல்கிறாரோ அது தவறானது. 1 யோவான் 2 : 15 விசுவாசிகளுக்கு சொல்கிறது. "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்." நீங்களும் நானும் இந்த உலகத்தில் வாழ்கிறோம். நாம் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும், உலகத்திற்குரியவர்களல்ல. நாம் இதை பயன்படுத்தவேண்டும். ஆனல் இதை தவறாக உபயோகிக்ககூடாது. நாம் உலகத்தில் அன்புகூர்ந்து விடக்கூடாது. இந்த உலகத்திலே அழிந்துபோகும் ஆத்துமாக்களை நேசித்து, அவர்களை மீட்பர் அண்டை வழிநடத்தப் பிரயாசப்படவேண்டும். உலகத்திற்கு தேவ வார்த்தையை கொடுக்கப் பாடுபடவேண்டும். நம்முடைய கர்த்தர் மாற்கு 16 : 15ல் "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்கிறார். நாம் இந்த உலகில் இந்த வேலையை கவனமாக செய்து தேவ வார்த்தையை அநேகருக்குக் கொடுக்க வேண்டும். அதுவே முக்கியமானது. இந்த புறாவானது தான் எந்தவிதமான உலகில் இருக்கிறோம் என்பதை அறிந்து அதில் ஓய்வைப் பெறாமல் இருந்தது. புறாவுக்கு ஓய்வு, இளைப்பாறுதல் பேழையில் மட்டுமே இருக்கிறது. அங்கேயே சென்று இளைப்பாறுதல் கண்டது. அருமையானவர்களே, உங்கள் உள்ளம் இளைப்பாறுதலின்றி இருக்கிறதா? தவிப்புடன் காணப்படுகிறீர்களா? உங்கள் இளைப்பாறுதல் கிறிஸ்துவாகிய பேழையிலேதான் இருக்கிறது. அவரிடம் வந்து அந்த இளைப்பாறுதலை பெற்றுக் கொள்ளுங்கள்.

www.Radio882.com

நீங்கள் எப்படிப்பட்ட பறவையாக இருக்கிறீர்கள்? நீங்கள் காகமா? அல்லது புறாவா? நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருப்பீர்களானால், உங்களுக்கு இரண்டு சுபாவமும் இருக்கும். ஆனால் நீங்கள் எந்த சுபாவத்தில் வாழ்கிறீர்கள்? புதய சுபாவத்திலா? பழைய சுபாவத்திலா? நீங்கள் தேவனுடைய காரியங்களை விரும்புகிறீர்களா? இல்லையா? சற்று யோசித்துப் பாருங்கள்.

ஆதியாகமம் 8 : 13 – 17

ஆக 261 நாட்கள் ஆகிவிட்டன. மொத்தத்தில் பிரளயம் 371 நாட்கள் இருந்தது. ஒரு வருடத்திற்கும் மேலான நாட்கள். மேலும் இந்த ஜலப்பிரளயம் உலகம் முழுவதும் இருந்ததாகவே வேதம் நமக்கு உறுதியாய் கூறுகிறது. ஒரு நீச்சல் குளத்தை மட்டும் நிரப்புவதாக இது இருந்திருக்கவில்லை.

மேலும் ஜலப்பிரளயத்தைப் பற்றி மற்ற கண்டுபிடிப்புகள் அநேகக் காரியங்களை நமக்கு வெளிப்படுத்துகின்றன. Dr. J.E. Shelley என்பவர் தன்னுடைய புத்தகத்தில் இவ்வாறு சொல்கிறார். இந்த ஜலப்பிரளயம் உலகம் முழுவதிலும் இருந்தது என்பது இவருடைய கருத்து. இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டையும் நம்முன் வைக்கிறார். "யானை போன்ற பெரிய அழிந்து போன மிருகங்கள் துந்திரா, சைபீரியாவிலுள்ள வண்டல் மண்ணிற்குக் கீழாக மூழ்கிக் கிடக்கின்றன. கனடா மற்றும் வடக்கு அலாங்கா, ஆசியா கண்டம் பகுதிகளிலும் இவை காணப்படுகின்றன. இவை நீரால் நிரம்பியுள்ள சதுப்பு நிலத்திலல்ல, உயர்ந்த மேட்டுப்பகுதியில் ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் அமிழ்ந்திருக்கின்றன" என்கிறார். மேலும், இந்த யானை போன்ற மிருகங்களை சோதித்துப் பார்த்த பொழுது அவை மூழ்கிப்போனவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்கிறார். வடக்கு நோக்கிச் செல்ல செல்ல அவைகள் அதிகம் அமிழ்ந்திருக்கிறதைக் காணமுடியும். வெள்ளை கடலின் தீவுகளின் மணலிலும், ஆர்க்டிக் வளைவு பகுதிகளின் உள்பக்கத்திலும் இதன் எலும்புகள் மற்ற விலங்குகளான, நீண்ட கோரைப்பற்கள் கொண்ட பூனை போன்ற பாலூட்டி, கரடி, ஆடு போன்றதொரு மிருகம், மேலும் மரக்கட்டைகளோடு, நிலத்தில் வேர் விட்டுள்ள மரங்களோடு கலந்து அமிழ்ந்து காணப்படுகின்றன. இப்பொழுது ஆயிரக்கணக்கான மைல்களுக்கு மரங்கள் இந்தப் பகுதியில் காணப்படவில்லை. இதன் வயிற்றிற்குள் பைன் மற்றும் சிவப்பு, வெள்ளை வண்ணங்கள் கொண்ட புதர்ச்செடியின் கிளைகள் போன்றவை காணப்படுகின்றன. இந்த வண்டல் மண் படிவு மென்மையாக இருக்கும்பொழுது இந்தப் பெரிய யானைகள் உயிரோடு மூழ்கியிருக்கின்றன. பிறகு இந்த வண்டல் மண் படிவுகள் கட்டியாக உறைந்திருக்கின்றன. அவை பிறகு மென்மையாகவில்லை. அவை சிதைவடைந்ததற்கு எந்தவொரு அடையாளமும் இல்லை. லண்டன் துறைமுகத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் பெரிய யானைகளின் தந்தஸ்கள் விற்கப்பட்டு வருகின்றன.

www.Radio882.com

லண்டன் துறைமுகத்திலிருந்து, "இயற்கை வரலாற்று அருங்காட்சியகம்" என்ற அமைப்பு இந்தப்பெரிய யானையின் தலையையும், தும்பிக்கையையும் வாங்கியது. இந்தத் தலை உண்மையான ரோமத்தால் மூடியதாக, சிதைந்து போகாததாக அப்படியே காணப்படுகிறது. ஆக, யானைகள் அந்த ஜலப்பிரளயத்தில் மூழ்கியவை என்றும், இந்த ஜலப்பிரளயம் உலகம் முழுவதும் நடைபெற்றிருக்கிறது என்றும் இதினால் அறிகிறோம்.

ஒருவேளை உங்களுக்கு இன்னும் இது குறித்து சந்தேகம் வருமானால், அது உலகளவில் நடைபெற்ற ஒன்றுதான் என்று அடுத்துவரும் வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஆதியாகமம் 8 : 18 – 19

இதனைத் தொடர்ந்து நாம், தேவன் நோவாவோடே உடன்படிக்கை செய்கிறதைக் குறித்துப் பார்க்கிறோம். இது ஒரு முக்கியமான உடன்படிக்கையாகும். அடுத்த அதிகாரத்திலும் இது குறித்து நாம் பார்க்கிறோம். தேவன் நோவாவோடே மாத்திரமல்ல, மனித குலமனைத்தோடும் இந்த உடன்படிக்கையை செய்தார் என்று நாம் சொல்லலாம். இன்று வாழும் மனுக்குலத்திற்கும் இது பொருந்தும்.

ஆதியாகமம் 8 : 20

சுத்தமான மிருகங்களில் ஏழு ஜோடும், சுத்தமில்லாத மிருகங்களில் ஒரு ஜோடும் நோவா ஏன் எடுத்தார் என்பது இப்பொழுது புரிகிறதா? ஏனெனில் அவர் சுத்தமானவற்றில தேவனுக்கு பலி செலுத்தப் போகிறார்.

நோவா பேழையிலிருந்து வெளியே வந்தவுடன் செய்த முதல் காரியம், கர்த்தருக்குப் பலிபீடம் கட்டி, அவருக்கு பலி செலுத்தியதே, இந்தத் தகன பலி இயேசு கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறது. இது தேவன் அங்கீகரிக்கும் வண்ணமாகவும், அவரைத் துதிக்கும் வண்ணமாகவும் செலுத்தப்பட்டது. நோவாவுக்கு தேவனுடைய கண்களிலே கிருபை கிடைத்ததற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது என்பதற்கு சந்தேகமில்லை.

ஆதியாகமம் 8 : 21

இது மிகவும் உண்மையானது என்பதை நீங்களறிவீர்கள். உங்கள் சிறுவயதை, வாலிபத்தை நினைத்துப் பாருங்கள்! உங்களுடைய இருதயத்தின் நினைவுகள் பொல்லாததாயிருந்ததா, இல்லையா? இன்றைய நாட்களிலுள்ள வாலிப சகோதர, சகோதரிகளைப் பாருங்கள். அவர்கள் எவ்வளவு தீமையான வழிகளில் செல்கிறார்கள் என்பதை கவனித்தீர்களா? அவர்கள் அன்று போலவே இன்றும் பொல்லாத சிந்தனையோடு, பொல்லாத வழிகளில் செல்கிறார்கள் என்பதை நாமறியலாம். மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கி பொல்லாததாயிருக்கிறது. இதில் எந்தவொரு மாற்றமும் இல்லை. இது இன்று மட்டுமல்ல,

www.Radio882.com

அன்றிலிருந்தே அப்படித்தான் இருக்கிறது. இதை அன்றே வேதம் தெளிவுப்படக் கூறியுள்ளது.

ஆதியாகமம் 8 : 22

இந்த ஜலப்பிரளயமானது மிகவும் பெரிதாக இருந்தபடியால், அது பூமியை சாய்வுறச் செய்து விட்டது என்று கருதப்படுகிறது. நமக்கெல்லாம் தெரிந்திருக்கிறப்படி, பூமியானது அதன் அச்சில் நேராக இருக்கவில்லை. நாம் மத்தியப்பகுதியிலிருந்து தள்ளி இருக்கிறோம். நாம் இப்பொழுது சுழன்று கொண்டிருக்கும் மையத்திலிருந்து காந்த மையம் வேறுபட்டதாக இருக்கிறது. இது ஜலப்பிரளயத்தால் உண்டானது என்று நம்பப்படுகிறது. இவ்வாறு இன்று பூமி சுற்றிக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக நமக்குக் கால மாற்றங்கள் நிகழ்கின்றன.

இந்த ஜலப்பிரளயத்திற்கு முன்பாக மனிதன் மூன்று விதமானக் காரியங்களை உடையவனாக இருந்தான். 1. அவன் தேவனுக்கு எதிரான கலகத்தைச் செய்தான். அது உணரப்பட்டது. அது வெளியரங்கமானது. 2. தேவனிடத்திலிருந்து வந்த வெளிப்பாடு மனிதனால் மறுக்கப்பட்டது. நோவாவின் சாட்சி அவர்களைச் சென்று எட்டவில்லை. 3. மனந்திரும்புதலை அவர்கள் ஏற்றுக் கொள்ளவே இல்லை. தேவனிடத்தில் ஒருவருமே மனந்திரும்பவில்லை. தேவன் கொடுத்த அடைக்கலத்தை மனிதன் மறுத்துவிட்டான். 120 ஆண்டுகளாக, நோவா எந்தவொரு மனம் திருந்தியவனையும் காணவில்லை. இந்த மூன்றும் அன்றைய நாட்களில் வாழ்ந்த மனிதர்களிடத்தில் காணப்பட்டது. அவர்கள் தேவனுக்கெதிராக செயல்பட்டார்கள், அவர்கள் வெளிப்பாட்டை புறக்கணித்துத் தள்ளினார்கள், அவர்கள் மனந்திரும்பாதவர்களாகக் காணப்பட்டார்கள்.

இந்த வசனத்தில் 'நிரப்புங்கள்' என்ற வார்த்தை முக்கியமானது. அர்த்தமுள்ளது. ஏனெனில், ஜலப்பிரளயத்திற்கு முன்பும் நாகரிகம் இருந்தது. இப்பொழுதும், இந்த ஜலப்பிரளயத்திற்கு பின்பும் நாகரிகம் இருக்கப் போகின்றது.

தேவன் நோவாவோடே செய்ய வேண்டுமென்று முதலாவது சொன்ன காரியம் என்னவென்று கவனித்துப் பாருங்கள். 'நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்.' அப்பொழுது இனப்பெருக்கம் தேவையாயிருந்தது. தேவன் கூறிய சூழ்நிலையை கவனத்தில் கொள்ளுங்கள். இப்பொழுது மக்கள் தொகை பெருக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. இன்றைய காலக்கட்டத்தில் நாம் இந்த கட்டளையை எடுத்து கொள்ளக்கூடாது. அன்றைய காலக்கட்டத்தில் நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் மட்டுமே அங்கு நின்று கொண்டிருந்தார்கள். அந்த சூழ்நிலையிலேயே தேவன் அவர்களை பலுகிப் பெருகி, பூமியை நிரப்பச் சொன்னார்.

அருமையாளவர்களே, தேவன் நோவாவோடே உடன்படிக்கை செய்து கொள்கிறதை இங்கே பார்க்கிறோம். அவர் நம்மோடே இன்றும் இயேசு கிறிஸ்துவின் மூலமாக

www.Radio882.com

உடன்படிக்கை செய்திருந்தார். உங்களோடும் கூட தனிப்பட்ட உடன்படிக்கை பண்ணியிருப்பார். அவர் ஒவ்வொருவரையும் குறித்து தனிப்பட்ட சித்தம் உடையவராக இருக்கிறார். அதற்கு வாக்குத்தத்தங்களைக் கொடுத்து உடன்படிக்கை பண்ணுகிறார். ஒருவேளை அவர் உங்களிடம் வாக்குத்தத்தங்களைக் கொடுத்து உடன்படிக்கைகளைச் செய்யாவிட்டால் இன்றே அதற்காக ஜெபம் பண்ணுங்கள். அவர் உங்களோடு உடன்படிக்கை செய்வார்.

நோவா பேழையிலிருந்து வெளியே வந்தபோது, ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றவனாகக் காணப்பட்டான். ஆதாம் முன்பு பெற்றிருந்த மனுக்குலத்தின் தலைவன் என்ற இடத்தை இப்பொழுது நோவா பெற்றவனாகக் காணப்பட்டான். நாம் ஆதாமிற்கு சொந்தமான சந்ததி என்று சொல்லப்பட்டாலும், நாம் அதை விட நோவாவிற்கு மிகவும் நெருங்கிய சொந்தக்காரர்கள். ஒருவிதத்தில் நோவாவே நம் எல்லோருக்கும் தந்தை.

ஆதியாகமம் 9

நாம் இப்பொழுது புதியதொரு ஆரம்பித்திற்குள்ளாக வருகின்றோம். மனிதனுடைய மனச்சாட்சியின் காலம் நிறைவுறுகிறது. இப்பொழுது தேவன் மனிதனை அரசாங்கத்தின் கீழே கொண்டு வருகிறார். அவன் தன்னைத்தானே ஆளவேண்டும். தேவன் நோவாவோடே செய்துகொண்ட உடன்படிக்கையில் நாம் இதுகுறித்துப் பார்க்கிறோம். நாம் இங்கே ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, தேவன் நோவாவோடே உடன்படிக்கை செய்து கொண்டது அவனோடே மட்டுமல்ல, உங்களோடும் என்னோடும்தான் அவர் உடன்படிக்கை செய்திருக்கிறார். அவர் மனுக்குலமனைத்தோடும் உடன்படிக்கையை செய்திருக்கிறார்.

ஆதியாகமம் 9 : 1, 2

கடந்த நிகழ்ச்சியிலே ஜலப்பிரளயத்திற்குப் பின் நோவா பலியிட்டதைக் குறித்து நாம் வாசித்தோம். தேவனும் "இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியை சபிப்பதில்லை" என்று ஒரு உடன்படிக்கை பண்ணினார். அதுமட்டுமல்ல தேவன் நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்து நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று கட்டளை கொடுத்தார். ஆதியிலே பூமியில் ஆதாமையும், ஏவாளையும் சிருஷ்டித்தப்பொழுதும் இதேக் கட்டளையை அவர்களுக்குக் கொடுத்தார். சகல மனிதர்களும் அழிக்கப்பட்டதினால் அதேக் கட்டளையை மீண்டுமாக நோவாவுக்குக் கொடுத்தார். தேவன் பண்ணின உடன்படிக்கையின் மற்றும் ஒரு பகுதியிலே மனிதர்களுடைய பாதுகாவலும், மிருகங்களும் மேலாக அவர்களுடைய ஆளுகையையும் பற்றிக் கூறுகிறது.

இதற்கு முந்தைய காலம்வரை மிருகங்களும் மனிதர்களும் இருந்த உறவானது வித்தியாசமானதாக இருந்தது. மனிதன் மிருகங்களை உட்கொள்ளுகிறவனாகவும் இல்லை. எல்லா மிருகங்களுமே பழக்கப்பட்ட மிருகங்களாக வளர்ப்பு

www.Radio882.com

மிருகங்களைப்போல மனிதனோடு பழகியது. அதை அடித்துப் புசிப்பதற்கு எந்த மனிதனுக்கும் மனம் வராது. பூமியிலே ஜலப்பிரளயம் வந்த பிறகும்கூட எல்லா மிருகங்களும் நோவாவின் பேழையினிடத்திலே வந்து சேர்ந்தது. அவரைக் குறித்து எந்த விதமான பயமும் அவைகளுக்கு இல்லை. ஆனால் இனி மனிதனைக் குறித்த பயமும் அச்சமும் பூமியில் உள்ள சகல மிருகங்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும் உண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். என்றாலும் மனிதனே மிருக உலகத்திற்கும் பொறுப்பாளனாகிறான்.

மனிதன் மிருகங்களை துன்புறுத்திய சரித்திரங்களை நாம் அறிந்திருக்கிறோம். சில மிருகங்கள் பரிபூரணமாய் அழிந்து போகும் வண்ணமாக மனிதன் முயற்சித்திருக்கிறான். அநேக தேசங்களிலே அரசாங்கம் தலையிடாமல் இருந்திருக்கும் என்றால் எத்தனையோ திமிங்கலங்களும் காட்டு எருமைகளும் யானைகளும், புலிகளும்கூட அழிக்கப்பட்டிருக்கும். இப்படி மிருகங்களுக்கும் பாதுகாப்பு கொடுப்பது மிக அவசியமானது. ஏனென்றால் மனிதன்தான் அவைகளுக்குப் பொறுப்பாளனாக தேவனால் வைக்கப்பட்டிருக்கிறான். எத்தனையோ தேசங்களிலே அநேக நல்ல மிருகங்கள் பரிபூரணமாய் அழிக்கப்பட்டு இருக்கிறது. மனிதன் கொடூரமான ஒருவனாக இருக்கிறான். மனிதனிடத்தில் இருந்து ஒரு மிருகத்தை காப்பாற்ற ஒரு அரசாங்கம் தேவையானதாக இருக்கிறது.

ஆதியாகமம் 9: 3

இப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஒரு புதிய உணவை அவர்களுக்குக் கொடுக்கிறார். ஜலப்பிரளயம் வருவதற்கு முன்னதாக தாவரங்களில் இருந்து கிடைத்த உணவுப்பொருட்களை மனிதன் உண்டான். இப்பொழுது மிருகங்களையும் உட்கொள்ளலாம் என்று நோவாவுக்குக் கர்த்தர் சொல்லுகிறார். இப்பொழுது தேவன் மனிதன் இறச்சியை சாப்பிடும்படியாக அனுமதிக்கிறார்.

ஆதியாகமம் 9 : 4

இரத்தத்தை மனிதன் உட்கொள்ளக் கூடாது. இரத்தமானது தரையிலே சிந்தப்பட்டுவிட வேண்டும். ஏனென்றால் இரத்தம் ஜீவனைக் குறித்து பேசுகிறது. அதிக நேரம் அதை வதைக்காமல் உடனடியாக அதின் இரத்தம் தரையிலே பாய்ந்து அது மரிக்கும்படியாக மட்டுமே அது கொல்லப்பட வேண்டும் என்று கற்றுக்கொடுக்கிறார்.

ஆதியாகமம் 9 : 5

இது மிகவும் ஆர்வம் தரக்கூடிய ஒரு வாக்கியமாக இருக்கிறது. என்றாலும் ஒரு தேசத்தின் எல்லைப்பகுதியிலே வாழாதவர்களுக்கு இது அத்தனை கருத்துள்ள வாக்கியமாக தெரியாது. என்றாலும் சில மிருகங்கள் வியாதிகளைப் பரப்புவதினாலே அவற்றை பரிபூரணமாக அழிக்கவும் செயல்படுகிறோம். ஏனென்றால் உண்மையாகவே

www.Radio882.com

அது மனிதனுக்குக் கேடு விளைவிக்கிறதாக இருக்கிறது. அடுத்ததாக தேவனுடைய புதிய உடன்படிக்கையின் ஐந்தாவது வாக்கியம் என்ன சொல்லுகிறது.

ஆதியாகமம் 9 : 6

இங்கே தேவன் அரசாங்கத்திற்கான ஒரு சட்டத்தையும், மனிதனை பாதுகாப்பதற்கான ஒரு விதியையும் நியமிக்கிறார். மற்றவர்களைக் கொலை செய்கிறவனை தண்டிக்கும்படியாக அனுமதியை தேவன் அரசாங்கத்திற்குக் கொடுக்கிறார்.

ஆனால் எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே இந்த நாட்களிலே இந்த சமுதாயமானது, இந்த வேத சத்தியங்களைவிட்டு வெகு தொலைவிற்குச் சென்றுவிட்டது, என்று சொல்லவேண்டும். வேதத்தின் அடிப்படையிலான ஜனங்கள் இப்பொழுது இல்லை. வேத வசனங்களைக் குறித்த எந்த அறிவும் இல்லாதவர்களாகத்தான் அநேகர் இருக்கிறார்கள். இதன் விளைவாகத்தான் நீதிபதிகளோ, வழக்கறிஞர்களோ அரசாங்கத்தின் தலைவர்களோ யாருமே கொலை செய்கிறவர்கள் கொலை செய்யப்படவேண்டும் என்ற தண்டனையை தவிர்க்க விரும்புகிறார்கள். அநேக வழக்குகளிலே இப்படிப்பட்ட காரியங்களிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதன் விளைவாகவே இன்றைக்கு உலகத்திலே கொலைகளும் கொள்ளைகளும், அக்கிரமங்களும் பெருகிக்கொண்டே செல்லுகிறது. ஒருவேளை நீங்கள் கேட்கலாம். இப்படி கொலை செய்கிறவன் கொலைசெய்யப்படவேண்டும் என்பது வேதத்தின் அடிப்படையிலே சரியா என்று கேட்கலாம். ஆம் அருமையானவர்களே, இது தான் தேவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கிற கட்டளை மற்றும் ஒரு மனிதனை எடுத்துக் கொண்டவனுடைய ஜீவனை அரசாங்கம் எடுப்பது அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம். ஏனென்றால், மனிதனுடைய ஜீவன் முக்கியமானது பாதுகாக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடனே தேவன் இந்த கட்டளையை மனுகுலத்திற்கு கொடுத்திருக்கிறார். அப்படியென்றால்தான் மனிதனுக்குள்ளே ஒரு பய உணர்வு இருக்கும். மனிதனுடைய ஜீவன் பாதுகாக்கப்படும். இதுவே தேவனுடைய கட்டளை.

அருமையானவர்களே இன்றைய நாட்களிலே செய்தித்தாள்களிலே எத்தனை செய்திகளை நாம் கவனிக்கிறோம் இல்லையா? வீட்டிலே தனியே இருந்த எத்தனைபேர் கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள். எத்தனை அற்பமான காரியங்களுக்கு அண்ணனை தம்பியும், தம்பியை அண்ணனும் இப்படிக் குடும்பத்திற்குள்ளேயே ஒருவரையொருவர் கொலை செய்திருக்கிறார்கள். இன்று நாம் வீடுகளோ, தெருக்களோ நமக்கு பாதுகாப்பானது இல்லை. இப்படி மனிதர்கள் கொலைசெய்வதற்கான காரணம் கொலை செய்கிறவன் கொலைசெய்யப்படுவான் என்ற வேத வசனத்தின் நியதி கடைபிடிக்கப்படாததால் தொடர்ந்து இவை பெருகிக் கொண்டே இருக்கிறது. யாரையாவது கொலை செய்தால், அவனும் கொலை செய்யப்படுவான் என்பதை ஒரு மனிதன்

அறிந்திருப்பானென்றால், யாரைக் கொலைசெய்யும் முன்பதாகவும் பல முறை அவன் சிந்திப்பான்.

ஆதியாகமம் 9 : 7

முதல் வசனத்திலே அவர் சொன்ன அதே வாக்கியத்தை மீண்டுமாக சொல்கிறார். பின்பு தேவன் "நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து நீங்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள்" என்று சொல்லியிருக்கிறார்.

ஆதியாகமம் 9 : 8, 9, 10

இப்படிக் கூறுவதினாலே இந்த உலகத்திலே பிறக்கப்போகிற எல்லா மனிதர்களோடும் மிருக ஜீவன்களோடும் ஒரு உடன்படிக்கையை பண்ணுகிறார் என்பதை நாம் அறிகிறோம். அருமையான சகோதரனே, சகோதரியே, வரப்போகும் ஒரு காலத்திலே சிங்கமும் ஆட்டுக்குட்டியும் ஒன்றாக மேயும், ஒன்றாகப் படுத்துக்கொள்ளும், ஒன்றையொன்று அது அழிக்காது என்பதை ஏசாயா கூறியிருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதிய கடிதத்திலே சகல சிருஷ்டியும் இக்காலத்திலே வேதனையின் வழியாகவே கடந்து வருகிறது என்பதையும் புதிய ஒரு காலத்திற்காக எதிர்நோக்கியிருக்கிறது என்பதையும் கூறுகிறார். அவருடைய ராஜ்ஜியம் இந்த பூமியிலே வரும்வரை தேவன் இங்கே மனிதனோடும் மிருகங்களோடும் ஏற்படுத்திய இந்த உடன்படிக்கைதான் நிலவிவரும். இந்த உடன்படிக்கை நோவாவோடும் அவனுடைய சந்ததியோடும் சகல சிருஷ்டியோடும் தேவன் செய்த ஒரு உடன்படிக்கை.

ஆதியாகமம் 9 : 11

இது கர்த்தருடைய வாக்குறுதி. இங்கே அவர் சொல்வது என்ன? இனி இந்த பூமியை ஒரு பொழுதும் வெள்ளத்தினாலே தான் அழிக்கப்போவதில்லை என்று கூறுகிறார். அடுத்த முறை தேவன் இந்த பூமியை நியாயந்தீர்க்கும்பொழுது அக்கினியினாலே நியாயம் தீர்க்கப்போகிறார். இதைக்குறித்து நாம் 2 பேதுரு 3 : 6, 7 வசனங்களில் வாசிக்கிறோம். "அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது."

அடுத்த சில வசனங்களிலே இந்த உடன்படிக்கையை ஒரு காட்சியாக நாம் வாசிக்கப்போகிறோம். இந்த உடன்படிக்கையிலேயும் ஆவிக்குரிய அர்த்தமும் இருக்கிறது. ஒரு சாக்ரமந்தைப்போல இது இருக்கிறது என்றும் சொல்லலாம். அதாவது தேவன் கொடுத்த வாக்குத்தத்திற்கான வெளிப்படையான அடையாளம்.

www.Radio882.com

ஆதியாகமம் 9 : 12, 13

ஆம் அருமையான சகோதரனே சகோதரியே தேவன் ஜலத்தினாலே பூமியை அழிக்கமாட்டேன் என்று கொடுத்த வாக்குறுதிக்கு அடையாளமாகவே அவர் வானத்திலே மேகத்திலே வானவில்லை வைத்திருக்கிறார். ஒவ்வொருமுறை நாம் அதை பார்க்கும்பொழுதும் ஆண்டவர் மனிதனோடு செய்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்து அவருக்கு நாம் ஸ்தோத்திரம் செலுத்த கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். அதுமட்டுமல்ல அடுத்த முறை இந்த பூமியை அக்கியினாலே அவர் அழிக்கப்போகிறார் என்பதைக் குறித்த எச்சரிப்பின் சத்தமாகவும் அது இருக்கட்டும்.

ஆதியாகமம் 9 : 14 – 16

இங்கே கர்த்தர் சொல்வதை கவனித்தீர்களா? நான் நினைவுகூரும்படிக்கு அதை நோக்கிப்பார்ப்பேன் என்று சொல்கிறார். நீங்கள் அதைப் பார்ப்பீர்கள் என்று அவர் சொல்லவில்லை. அவரே அதைப் பார்த்து அந்த உடன்படிக்கையை நினைவுகூருவேன் என்று சொல்கிறார். இது தேவனுக்கும் ஜீவனுள்ள மனிதர்களாகிய நமக்கும், மிருகங்களுக்கும் இடையிலே தேவன் செய்த ஒரு உடன்படிக்கை. ஆம் அருமையான சகோதரனே சகோதரியே இந்த வானவில்லை நாம் வானத்தில் பார்க்கும்பொழுதெல்லாம் தேவனும் அதைப் பார்க்கிறார். நம்மோடு செய்த உடன்படிக்கையை அவர் நினைவுகூருகிறார் என்று நாம் நினைத்து நம்மை நாமே உற்சாகப்படுத்தி ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும்.

ஆதியாகமம் 9 : 17

இது தேவனுடைய உடன்படிக்கை. இது நோவாவோடே மட்டும் அல்ல சகல பூமியின் மேலுள்ள மாமிசமான யாவுக்கும் தேவனுக்கும் இடையிலான உடன்படிக்கை. வானவில் ஒரு சாக்ரமந்தைப்போல உள்ளான ஒரு வாக்குறுதிக்கு வெளியரங்கமான ஒரு அடையாளம். பஸ்கா பண்டிகையின் விருந்து, வெண்கல சர்ப்பம், கிதியோனின் தோல், இந்நாட்களிலே நாம் பார்ப்பதுபோல ஞானஸ்நானம் கர்த்தருடைய போஜனம் இவையாவுமே அடையாளங்களாக இருக்கிறது. ஆனால் இதற்குப் பின்னனியத்திலே உள்ளான அர்த்தம் உண்டு. டாக்டர் ஜோகன் பீட்டர் தேவனுடைய கிருபையின் கண்களும் நமது விசுவாச கண்களும் சாக்ரமெந்தில் ஒன்றையொன்று சந்திக்கிறது என்று எழுதியிருக்கிறார்.

ஆம் அருமையான சகோதரனே, சகோதரியே, நாமும் வானவில்லை நோக்கிப் பார்க்கும்பொழுது அதுதான் நடைபெறுகிறது. விசுவாசமானது அந்த அடையாளத்தோடு இணைக்கப்பட்டிருக்கிற வாக்குத்தத்தத்தை உறுதியாகப் பற்றிக்கொள்கிறது. வார்த்தையும் அடையாளமும் ஒன்றோடொன்று இணைந்து செல்கிறதாயிருக்கிறது. வாக்குத்தத்தத்திலே விசுவாசமில்லை என்றால், அடையாளத்திலே உறுதிப்பாடு இல்லை. தேவன் ஒரு

www.Radio882.com

வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார். அதோடு கூட ஒரு அடையாளத்தையும் அவர் தருகிறார். அந்த வானவில்லானது நோவாவின் பலிபீடத்திற்கு தேவன் கொடுத்த விடை என்று சொல்லலாம்.

தேவன் என்ன சொல்கிறார்? நான் நினைவிலே வைத்திருப்பேன். நான் அதை நோக்கிப்பார்ப்பேன் என்று சொல்கிறார். நம்மிலே கூட பலர் வானவில்லைப் பார்க்கும்பொழுதெல்லாம் நோவாவையும் தேவன் செய்த உடன்படிக்கையையும் நினைவுகூறுகிறோம் என்று நம்புகிறேன். இதுவரை நீங்கள் அதை எண்ணாத ஒரு சகோதரனாய், ஒரு சகோதரியாய் இருப்பீர்கள் என்றால் இனி வானவில்லைப் பார்க்கும்பொழுதெல்லாம் தேவன் நோவாவுக்குக் கொடுத்த அந்த வாக்குறுதி அந்த உடன்படிக்கை உங்களுக்கும் நினைவிற்கு வரும். இந்த அதிகாரத்தின் மீதிப் பகுதியிலே வருகிற காரியம் நம்மை துக்கப்படுத்தும் ஒரு காரியமாயிருக்கிறது. இங்கே ஒரு கேள்வி நமக்கு எழும்புகிறது. ஜலப்பிரளயத்திலே எல்லாப் பாவிகளும் மரித்த பிறகு மனிதன் பேழையை விட்டு வெளியே வந்தபோது அங்கே பாவமே இல்லை என்று அர்த்தமா? கவனியுங்கள் என்ன நடக்கிறது.

ஆதியாகமம் 9 : 18

காம் கானானுக்குத் தகப்பன் என்று ஏன் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது? இரண்டு காரணங்களைச் சொல்லலாம். இரண்டாவது காரணத்தை சற்றே பின்னர் பார்ப்போம். ஒரு காரணத்தை இப்பொழுது சொல்லுகிறேன். இந்த சரித்திரத்தையெல்லாம் மோசே எழுதியபொழுது இஸ்ரவேல் கானானை நோக்கிப் பிரயாணப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த கானானியர்கள் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து அவர்கள் அறிந்தபொழுது அது அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கிறதாக இருந்தது.

ஆதியாகமம் 9 : 19 – 21

இங்கே நோவாவின் பாவத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம். நோவாவின் இந்த செயலைக் குறித்து எத்தனையோ வியாக்கியானர்கள் விளக்கம் கொடுக்க முன் வந்தாலும் பாவம் பாவம் தான். சிலர் கூறும் விளக்கம் என்னவென்றால், யாருக்கும் இந்த திராட்ச ரசத்தின் போதையைக் குறித்து தெரியாது. எனவே அதை அறியாதவனாகக் குடித்திருக்கலாம் என்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஜலப்பிரளயத்திற்கு முன்னர் குடிப்பது பாவம் என்று எந்த இடத்திலேயும் சொல்லப்படவில்லை. இன்னும் சிலர் சொல்லுகிறார்கள். ஜலப்பிரளயத்திற்கு முன்பு பூமியைச் சுற்றி ஒரு பனிக்கட்டியாலான மெல்லிய வட்டம் இருந்தது. அதன் வழியாக சூரிய ஒளி ஊடுருவி வந்தபடியினால் வெள்ளத்திற்கு முந்தைய காலங்களிலே திராட்ச ரசமானது புளிக்காமலிருந்தது. இப்பொழுது அந்த வளையம் இல்லாதபடியால் ரசம் புளித்ததினாலேதான் நோவா இவ்வாறு படுத்திருந்தார் என்று கூறுகிறார்கள்.

www.Radio882.com

ஆனால் உலகத்தின் புதிய ஆரம்பமாக இது இருந்தாலும் அது பழைய பாவமாகவே இருக்கிறது. இந்த நிகழ்ச்சி அதை நமக்குத் தெளிவாக காட்டுகிறது. அது மட்டுமல்ல, பெரிய ஒரு கேள்விக்கு விடையாக இது நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வேத புத்தகத்தின் ஒரு சிறப்பு என்னவென்றால், நல்ல மனிதர்களுடைய நல்ல பகுதிகளை மட்டுமல்ல நல்ல மனிதர்களுடைய பெலவீனங்களையும் ஒளிவு மறைவு இல்லாமல் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. நோவா ஒரு விசேஷித்த மனிதன் என்பதை நாம் வேத புத்தகத்திலே பார்த்தோம். ஆனால் இந்த பகுதியை வாசிக்கும்பொழுது நமது உள்ளம் வேதனைப்படுகிறது. உயர்ந்த நிலையிலே இருந்த ஒரு மனிதன் இப்படியாகலாமா? என்று எண்ணத் தோன்றுகிறது. நோவாவுடைய தகப்பனாரும் விவசாயம்தான் செய்தார். ஆதியாகமம் 5 : 29 ஐப் பார்ப்பீர்களென்றால், லாமேக்கு பயிரிடுகிறவனாகவே இருக்கிறார். ஆனால் இங்கே நோவா திராட்சரசம் குடித்து செய்வதறியாது படுத்துக்கிடக்கிறார். கடவுளை அறியாமல் பாவத்திலே வாழ்ந்த மக்கள் ஜலப்பிரளயத்திலே கதறி, கதறி மரித்ததை பார்த்த நோவா பாவத்திலே விழுந்து போனார்.

இது மதி மயங்கச்செய்யும் என்பதை அறியாமல் அவர் குடித்து விட்டார் என்று கூறலாம். ஆனால் இன்று மனிதனும் எந்தப் பாவத்தையும் அறியாமல் செய்கிறதில்லை. ஒவ்வொரு பாவத்தையும் அவன் அறிந்துதான், துணிந்துதான் செய்கிறான். எந்தப் பாவமும் திட்டமிட்டு செய்வதுதான். ஒருவேளை அந்த குறிப்பிட்ட நாளிலே அதைக் குறித்து அவன் சிந்திக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் என்றோ ஒரு நாள் அதைக் குறித்து சிந்தித்த சிந்தனை அவனுடைய உள்ளத்தின் அடித்தளத்திலே இருக்கிறது. அருமையானவர்களே உங்கள் வீட்டிலேகூட மதுபானத்திற்கு அடிமையானவர்கள் இருக்கலாம். அவர்களுக்காக நீங்கள் ஜெபித்துக் கொண்டு இருக்கலாம். மதுபானமானது தனி மனிதனை மட்டுமல்ல, அது குடும்பத்தையே சீரழிக்கிறதாயிருக்கிறது. நீதிமொழிகளின் புத்தகத்திலே திராட்சரசம் குடிப்பது ராஜாக்களுக்கு தகுதியல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொறுப்பிலே இருக்கிறவர்கள் மதியிழந்து போகாமல் உண்மையாய் செயல்பட அவர்கள் மதுபானத்தைத் தவிர்க்க வேண்டும். நீங்களே தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் என்றும், ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார் என்பதையும் அறியாமல் இருக்கிறீர்களா என்று வேதம் சொல்கிறது. அருமையான சகோதரனே குடிக்கு அடிமையாயிருந்த எத்தனையோ பேர் நல்ல வாழ்க்கையைப் பெற்றிருக்கிறார்கள். உங்களை நம்பியிருக்கும் உங்கள் மனைவியை எண்ணிப்பாருங்கள். உங்களுக்குத் தேவன் கொடுத்திருக்கும் அருமையான பிள்ளைகளை சற்றே எண்ணிப்பாருங்கள். பிள்ளைகளுடைய வருங்காலம் ஆசீர்வதிக்கப்படவேண்டுமா? நீங்கள் அவர்களுக்கு மாதிரியாக இருக்க வேண்டும். இந்த பாவ பழக்கத்திலிருந்து உங்களுக்கு விடுதலை வேண்டும் என்று உண்மையாக நீங்கள் வாஞ்சிப்பீர்கள் என்றால் நிச்சயம் கர்த்தருக்கு அந்த விடுதலையைத் தர ஆயத்தமுள்ளவராயிருக்கிறார். உங்களால் முடியாது என்பதை

அவரிடத்தில் ஒத்துக்கொள்ளுங்கள். அவருடைய வார்த்தையையும் வல்லமையையும் விசுவாசியுங்கள். அவர்களுடைய பிள்ளைகள் கொடுக்கும் ஆலோசனைக்குக் கீழ்படியுங்கள். கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலேயும் பெரிய காரியங்களைச் செய்வார்.

ஆதியாகமம் 9 : 22 –24

நோவாவின் பாவத்தைக் குறித்து சிந்தித்தோம். இப்பொழுது நோவாவின் கோபத்தைக் குறித்துப் பார்க்கிறோம். தவறு செய்த மனிதன், தன்னுடைய தவறு வெளியே தெரிந்தவுடன் கோபப்படுகிறான். ஏன் இந்தக் கோபம்? அவனுடைய தவறை மறைப்பதற்காக. காயீனும் தனது சகோதரனைக் கொலை செய்தபோது தேவன் அவனைப் பார்த்து, "காயீனே உன் சகோதரன் எங்கே?" என்று கேட்டார். அப்பொழுது அவனுக்குள் கோபம் வந்தது. "நான் என்ன என் சகோதரனுக்குக் காவலாளியோ?" என்று கேட்டான். அருமையான சகோதரனே, சகோதரியே, இன்றும் இதுவே உண்மையானதாக இருக்கிறது. கானானுக்கு தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய அவலநிலையை பார்த்தது மட்டுமல்ல அதை விளம்பரப்படுத்துகிறான். இது நல்ல குணம் அல்ல. ஆனால் அவனுடைய சகோதரர்கள் அவனுடைய பாவ நிலையை வெளியே தெரியாமல் மூடுகிறார்கள். இதிலே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இருக்கிறது. பிறருடைய வீழ்ச்சிகளை நாம் அறிய வரும்போது பிறருடைய பாவங்களைக் குறித்து நமக்குத் தெரியவரும்பொழுது அதை மற்றவர்களுக்கு நாம் கூறுவது நல்ல பண்பல்ல.

அநேக வேளைகளிலே பலர் ஒரு ஜெபக்குறிப்பாக சொல்கிறேன் என்று பலருக்க இதைக் கூறுகிறார்கள். அருமையான சகோதரனே, நீங்கள் ஒரு விசுவாசியாகவோ, ஒரு ஊழியக்காரனாகவோ இருப்பீர்கள் என்று சொன்னால் மற்ற ஒருவருடைய பாவம் அல்லது தவறு உங்களுக்குத் தெரியவரும்போது அதைக் குறித்து தேவனிடம் மட்டுமே பேசுங்கள். எந்த மனிதனிடத்திலே நீங்கள் பேசுவதினாலேயும் அது அவர்களுக்கு உதவி செய்யப்போகிறதில்லை. ஆனால் உண்மையான கரிசனையோடு அவர்களுக்காக நீங்கள் ஜெபிப்பீர்கள் என்றால் தேவன் அவர்களுடைய பாவத்தை அவர்களே உணரச்செய்து வெற்றியின் வாழ்க்கைக்குள்ளே அவர்களை வழிநடத்துவார்.

மத்தேயு எழுதின சுவிசேஷம் 7ஆம் அதிகாரம் 1, 2ஆம் வசனங்களிலே நாம் வாசிப்பது என்ன? "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள், நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்" என்று வாசிக்கிறோம்.

அருமையானவர்களே, மற்றவர்களுடைய குறைகளைக், குற்றங்களைக் குறித்துக் கேள்விப்படும்பொழுது அல்லது கவனிக்கும்பொகுது நம்முடைய குற்றங்கள் நமக்கு

www.Radio882.com

ஞாபகத்திற்கு வரவேண்டும். அப்பொழுது நாம் மேலும் மேலும் கர்த்தருக்குப் பிரியமான பிள்ளைகளாய் வாழ நம்மை அர்ப்பணிப்போம். அநேகருடைய வாழ்க்கையிலே பிள்ளைகள் தவறும்போது, தாங்கள் இளைஞர்களாயிருந்தபோது செய்த தவறு அவர்கள் ஞாபகத்திற்கு வரலாம். அப்படிப்பட்ட வேளைகளிலே பிள்ளைகளை அன்போடும் பொறுமையோடும் கர்த்தருக்குள்ளே வழிநடத்த நம்மை அர்ப்பணிக்க வேண்டும். பிறருடைய தவறுகளை நாம் மன்னித்து மறக்க வேண்டும். ஆனால் மற்றவர்களுடைய நல்ல குணங்களை நாம் தொடர்ந்து எடுத்துச் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்.

ஆதியாகமம் 9 : 25 – 29

நோவா தெளிந்து எழுந்தபோது, கானான் சபிக்கப்பட்டவன் என்று சொன்னானேயொழிய காம் சபிக்கப்பட்டவன் என்று சொல்லவில்லை. அருமையான வர்களே, கானான் எந்த வகையிலே இந்த பிரச்சனையிலே ஈடுபட்டான் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால் இங்கே கானான் சபிக்கப்பட்டவனாகக் காணப்படுகிறான். அருமையானவர்களே, தேவன் ஏன் நோவாவின் பாவத்தைக் குறித்து எழுதியிருக்கிறார்? ஆதியாகமப் புத்தகத்தை ஒரு மனிதன் எழுதியிருப்பான் என்றால் இரண்டு காரியத்தை அவன் செய்திருப்பான். ஒன்று நோவாவின் பாவத்தை அவன் மூடியிருப்பான். அதைக் கூறாமலே விட்டுவிட்டிருப்பான். ஏனென்றால் நோவாவை ஒரு வீரனாக காட்டுவதற்காக. அல்லது நோவாவின் பாவத்தைக் குறித்து மிகப் பெரிதாகப் பேசி அவன் நோவாவை இழிவு படுத்தியிருப்பான்.

ஆனால் அருமையானவர்களே, தேவன் தம்முடைய சித்தத்திற்காக தம்முடைய திட்டப்படி அதை வேதத்திலே எழுதி வைத்திருக்கிறார். முதலாவதாக ஏற்கெனவே நான் கூறியதுபோல, மோசேயின் காலத்திலேயும், யோசுவாவின் காலத்திலேயும் கானானுக்குள்ளே பிரவேசிக்கப்போகிற இஸ்ரவேல் ஜனங்களை உற்சாகப்படுத்துவதற்காக இது எழுதப்பட்டிருக்கலாம். அதாவது கானான் மேலே தேவன் ஒரு சாபத்தைக் கூறியிருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்துகொள்வதற்காக, அந்த சந்ததியினர் மீது தனது நியாயத்தீர்ப்பைக் கூறியிருக்கிறார் என்பதை அறிவதற்காக. தேவனுடைய இந்த வார்த்தைகள் எல்லாம் நிறைவேறியது என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டு மென்றால் பழைய ஏற்பாட்டையும், பழங்கால சரித்திரங்களையும் வாசிக்க வேண்டும். இந்தக் கானானியர்கள் அப்படியே மறைந்து போனார்கள். அதுமட்டுமல்ல, நோவாவின் பாவத்தைக் குறித்து எழுதுவதற்கான மற்றுமொரு காரணம் ரோமர் 15ஆம் அதிகாரம் 4ஆம் வசனத்திலே என்ன வாசிக்கிறோம்?

"தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளையெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது."

ஆம் அருமையானவர்களே, மாம்சத்தின் பலவீனத்தைக் குறித்து நாம் அறிந்துகொள்வதற்காக எழுதப்பட்டிருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே கூறியிருக்கிறார். "ஆவி உற்சாகமுள்ளது: ஆனால் மாம்சம் பெலவீனமானது." கலாத்தியர் 2ஆம் அதிகாரம் 16ஆம் வசனத்திலே நாம் வாசிப்பது என்ன? "நியாயப்பிரமாணத்தின் கிரியையினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே!" எனவே மனிதனுடைய மாம்சத்தின் பலவீனத்தை வெளிப்படுத்தும்படியாக இந்த சம்பவத்தை எழுதியிருக்கிறார். நோவாவின் தவறான காரியத்தை மூடிமறைக்க வேண்டியதில்லை. உண்மை என்ன? வெறித்துப்போகும் அளவு நோவா குடித்திருந்தான்.

அருமையான சகோதரனே, ஒருவேளை நீங்கள் குடிக்கு அடிமையாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் உங்கள் மாம்சத்தின் விருப்பங்களுக்கு, அடிமையாக இருக்கிறீர்களா? அது வெளியே யாருக்கும் தெரியாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் மாம்சத்திலே தேவனை துக்கப்படுத்திக் கொண்டு இருக்கலாம். இன்று மனிதர்கள் சந்திர மண்டலத்திற்கும், மற்ற கிரகங்களுக்கும் போவதற்கு எவ்வளவு செலவு செய்கிறார்கள். ஆனால் மனிதன் மனிதனாக இந்த உலகத்திலே வாழ எடுக்க வேண்டிய முயற்சிகளை எடுக்கிறதில்லை. ஆனால் அருமையான சகோதரனே, சகோதரியே, இந்த உலகத்திலே நாம் எப்படி வாழவேண்டும் என்பதற்கு தேவன் நமக்குப் பயிற்சி கொடுப்பதைக் குறித்து கரிசனை உள்ளவராக இருக்கிறார்.

ஒரு காரியத்தை நாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். நோவா தனது இரட்சிப்பை இழந்துபோகவில்லை. அருமையானவர்களே, நீங்களும் இதைப் புரிந்திருப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன். அவன் செய்தது உண்மையாகவே தவறான காரியம்தான். பாவம்தான். அதற்கு நாம் சாக்குப்போக்குச் சொல்லவில்லை. அது அவன் மாம்சத்தின் பலவீனம் என்றாலும் அவன் மீட்கப்பட்ட மனிதனாகவே இருந்தான்.

ஆதியாகமம் 10

இங்கே சேம் காம் யாப்பேத் என்பவர்களுடைய வம்ச வரலாற்றை நாம் வாசிக்கிறோம். ஜலப்பிரளயத்திற்குப் பின்பு அவர்களுக்குக் குமாரர் பிறந்தார்கள். யாப்பேத்தின் குமாரரைக் குறித்து 2ஆம் வசனம் முதல் 5ஆம் வசனம் வரை நாம் வாசிக்கிறோம். காமுடைய குமாரரைக் குறித்து 6ஆம் வசனம் முதல் 20ஆம் வசனம் வரை வாசிக்கிறோம். சேமுடைய சந்ததியைக் குறித்து 21ஆம் வசனம் முதல் 32ஆம் வசனம் வரை நாம் பார்க்கிறோம். இந்த அதிகாரம் வம்ச வரலாறுகளின் அதிகாரம். இங்கே உலகத்தின் தேசங்களின் ஆரம்பங்களைக் குறித்தே பார்க்கிறோம். இதை சிந்திப்பதற்கு குறைவான நேரங்களே நாம் செலவு செய்வதினாலே இது முக்கியமல்ல என்று நாம் எண்ணிவிடக் கூடாது.

www.Radio882.com

மனிதனைக் குறித்த சம்பவங்களைக் கற்றுக்கொள்வதைக் குறித்து விருப்பம் உள்ளவர்களாய் இருந்தால், அதிகமாகக் கற்றுக்கொள்ளலாம். ஆழமாக இதிலிருந்து பல காரியங்களை நாம் அறிந்துகொள்ளலாம். நோவாவின் சந்ததியைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிற பகுதிகளை நாம் கவனித்தால், வேதத்தின் பல பகுதிகளிலே இதே வண்ணமாய் தேவன் சொல்லியிருப்பதை நீங்கள் புரிந்துகொள்ளமுடியும். அதாவது புறக்கணிக்கப்பட்ட குடும்பங்களைக் குறித்து முதலாவதே ஒரு சில வரிகளிலே சொல்லிவிட்டு அப்படியே அவர்களை விட்டுவிடுகிறார். பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்ததியைக் குறித்தும், எப்படி தொடர்ந்து அவர்களுடைய சந்ததி இயேசு கிறிஸ்து வரைக்கும் கடந்து செல்கிறது என்பதையும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஆதியாகமம் 10 : 2

மனித இயலை ஆழமாகக் கற்றுக்கொண்ட ஹெச். எஸ். மில்லர், இந்த மாகோகின் வம்சத்திலேதான் சீரியர், ஸ்லாவர், ரஷ்யர்கள், பல்கேரியர்கள், பொகிமினியர்கள் போலர்கள், ஸ்லோவாக்கியர்கள், குரோஷியர்கள் வந்தார்கள் என்று சொல்கிறார். அது மட்டுமல்ல மாதாய் வம்சத்திலிருந்துதான் இந்தியர்கள், ஈரானியர்கள், மேதியர்கள், பெர்சியர்கள், ஆப்கானியர்கள், கர்டர்கள் வந்தார்கள் என்று குறிப்பிடுகிறார். அதுமட்டுமல்ல, யாவான் என்கிறவனுடைய வம்சத்திலேதான் கிரேக்கர், ரோமர், பிரஞ்சு மக்கள், ஸ்பானிய மக்கள், போர்ச்சுகீசு மக்கள், இத்தாலிய மக்கள் வந்ததாகவும், தீராஸ் என்பவனுடைய வம்சத்திலேதான் திரேசியர்கள், ட்யூட்டர்கள், ஜெர்மன் மக்கள், ஐரோப்பியர்கள், மற்றும் ஆங்கிலேயர்கள் வந்ததாகக் குறிப்பிடுகிறார்.

ஆதியாகமம் 10 : 6, 7

இங்கே நாம் வாசிப்பதுபோல காம் கானானைத் தவிர வேறு சில குமாரர்களைப் பெற்றவனாகவும் இருந்தான். ஆனால் நோவா சபித்தபொழுது கானானைக் குறித்து மட்டும்தான் சாபம் கூறினான். ஏன் மற்றவர்கள் மேலே அவன் சொல்லவில்லை என்பது நமக்குத் தெரியவில்லை. கானான் மக்கள் இனத்திலிருந்துதான் பொய்னீசியர்கள், ஹிப்டைஸ், ஜெபூசைட்ஸ், அமோரைட்ஸ் போன்ற மக்கள் இனம் வந்தது. காமின் குமாரனான கூஷ் மூலமாக ஆப்ரிக்க தேசத்தைச் சேர்ந்தவர்கள், எத்தியோப்பியர்கள், எகிப்தியர்கள், லிபியாவில் உள்ளவர்கள் வந்தார்கள். இப்பொழுது கூஷைக் குறித்து நாம் மேலும் சில காரியங்களைப் பார்கிறோம்.

ஆதியாகமம் 10 : 8, 9

பூமியிலே அன்று வாழ்ந்த மக்களிலே கூஷ் மிகவும் பெரிய பராக்கிரமசாலியாயிருந்தான். உலகத்தையே அவன் ஆள விரும்பினான். அதற்காக முயற்சிகளை அவன் எடுத்தான். அருமையானவர்களே, இவன் கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரனாயிருந்தான் என்று சொல்லும்போது ஏதோ ஆப்ரிக்கக் காடுகளிலே சிறப்பாக இவன் வேட்டையாடினான் என்பது பொருளல்ல. பொதுவாக வாலிபர்கள் துப்பாக்கி அல்லது வேறு ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வேட்டைக்குச் செல்லும்பொழுது

www.Radio882.com

ஒரு சின்ன சிட்டுக் குருவியை அடித்துவிட்டால் கூட நிம்ரோத்தைப் போல இவன் பெரிய வீரன் என்று சொல்வார்கள். ஆனால் அப்படியல்ல, பிரியமானவர்களே, நிம்ரோத் ஆட்களை ஆதாயம் செய்கிறவனாய் இருந்திருக்க வேண்டும். இதைக் குறித்துத்தான் இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்று ஒரு வேத அறிஞர் கூறுகிறார்.

சிநேயார் தேசத்திலுள்ள மிகச் சிறந்த பட்டணங்களைக் கட்டினவன் இந்த நிம்ரோத்தான். நிம்ரோத்தைக் குறித்த சரித்திரத்தை நீங்கள் உலகத்திலுள்ள மற்ற சரித்திர புத்தகங்களிலேயும் வாசிக்கலாம். இரண்டு பாபிலோன்கள் என்ற பெயரிலே அலெக்ஸாண்டார் ஹிஸ்லாப் என்பவர் எழுதிய புத்தகத்திலே ஒரு பின்னணியத்தை நமக்குத் தருகிறார். எப்படி பாபேல் கோபுரத்தைக் கட்டுவதற்கு நிம்ரோத் காரணமானவனாயிருந்தான் என்பதை அவர் விவரிக்கிறார். ஜலப்பிரளயத்திற்குப் பிறகு நிம்ரோத்தே மக்கள் அனைவரையும் ஒன்றுகூட்டும் திறமை பெற்றவனாயிருந்தான். அவர்களை ஒரு தேசமாக அவர்களுக்கு இவன் ஒரு ஆளுநராக மாறும்படியாக மக்களை ஒன்று திரட்டினான். இவன் ஒரு கலக்காரன். இவன்தான் பாபேலை நிறுவியவன். அதாவது, மக்களின் இருதயத்தை கொள்ளைக் கொண்டவன், வேட்டையாடினவன். நிம்ரோத் எந்த சட்ட திட்டங்களுக்கும் கீழ்படியாதவன். இவன் வரப்போகிற அந்திக் கிறிஸ்துவுக்கு நிழலாயிருக்கிறான் என்று சொல்லலாம். எனவே அருமையான சகோதரனே, சகோதரியே, இந்த காமின் வம்சத்திலிருந்துதான் முதல் நாகரிகம் உருவானது என்று சொல்லலாம். இதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும். ஆப்பிரிக்க மக்களே கலாச்சாரத்தை முதலாவது ஏற்படுத்தியவர் என்றால் ஒருவேளை உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். உலகத்திலே தோன்றிய முதல் இரண்டு நாகரிகங்களுக்கும் அவர்களே காரணமாயிருந்தார்கள். நிம்ரோத் காமின் வம்சத்திலே வந்தவன்.

பத்தாவது அதிகாரத்திலே எழுபது வம்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவற்றிலே யாப்பேத்தின் வம்சமாக 14ஐப் பார்க்கிறோம். காமுடைய வம்சமாக 30 வம்சங்களைப் பார்க்கிறோம். தேசங்கள் அங்கிருந்து உருவாகின்றன. இப்படி இந்த தேசங்கள் எல்லாம் வந்தன என்று தேவன் நமக்கு விளக்கிக் காட்டுகிறார். ஆதி நாட்களிலே கருப்பு இன மக்களான காமின் வம்சத்தினரே முக்கியமானவர்களாய், பிரதானமானவர்களாய் நாகரீகத்தை உருவாக்குகிறவர்களாய் காணப்பட்டார்கள். ஆனால் பின்னான காலங்களிலே சேமுடைய வம்சத்தினர் தாவீது, சாலமோனின் நாட்களிலே சிறப்பான காரியங்களைச் செய்ய மேலெழுந்தார்கள். சேமின் வம்சத்திலேதான் சீரியர்கள், லிபியர்கள், அல்மேனியர்கள் மற்றும் அரேபியர்கள் வந்தார்கள். 26ஆம் வசனத்திலே நாம் பார்க்கிற யொக்தான் வம்சத்திலே வந்தவர்கள். இந்த வம்சத்தில் வந்தவர்கள் தொடர்ந்து விருத்தி அடைந்தார்கள்.

அருமையானவர்களே, காமின் வம்சத்தினரோ, சேமின் வம்சத்தினரோ, யாப்பேத்தின் வம்சத்தினரோ யாரானாலும் சரி உலகத்தை ஆட்சி செய்ய முடியாதவர்களாகவே இருக்கிறார்கள். இதைத்தான் இந்நாட்களிலேயும் தேவன் நமக்குக் காண்பித்துக் கொண்டிருக்கிறார்.

www.Radio882.com

ஆதியாகமம் 10 : 21

நோவாவின் மகனான சேமுடைய வரலாற்றை நாம் பார்க்கிறோம். நோவாவின் குடும்பத்திலே, இவன்தான் கடைசி மகன். ஆதியாகமம் 10 : 1ஆம் வசனத்திலே நோவாவின் குமாரராகிய என்று ஆரம்பிக்கும்பொழுது, சேம், காம், யாப்பேத் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், முதலாவது யாப்பேதைக் குறித்தும், பின்னர் காமுடைய சந்ததிக்குறித்தும், இறுதியாக சேமுடைய சந்ததியைக்குறித்தும் நாம் வாசிக்கிறோம்.

ஆதியாகமம் 10 : 25

பூமி பகுக்கப்பட்டது என்று சொல்லப்பட்ட வார்த்தைக்குப் பலவிதமான கருத்துக்களைக் கூறுகிறார்கள். பௌதிகப்பிரகாரமாக பூமி மாற்றங்களை அடைந்தது என்று சொல்கிறார்கள். ஆனால் அருமையான நண்பரே, பாபேல் கோபுரத்தைக் குறித்து, தொடர்ந்து எழுதப்போவதை மனதிலே வைத்தவராக இங்கே மோசே இந்த வார்த்தைகளை எழுதுகிறார். ஏனென்றால் பாபேல் கோபுரத்தின் நிகழ்ச்சியைத் தொடர்ந்துதான் மக்களுடைய பிரிவுகள் உண்டானது.

ஆதியாகமம் 10 : 32

ஆதியாகமம் 10ஆம் அதிகாரம் வேதாகமத்திலே ஒரு முக்கியமான அதிகாரம். தேவன் தண்ணீராலே அழித்தப் பின்னர் நோவாவின் சந்ததி, அவனுடைய பிள்ளைகளான சேம், காம், யாப்பேத் மூலமாக எவ்வாறு வெவ்வேறு ஜாதிகளாகப் பிரிகின்றன என்பதை நாம் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 10 : 30

ஒவ்வொரு சந்ததியினரும் இந்தப் பகுதி எங்களுக்கு, அந்தப் பகுதி எங்களுக்கு என்று பிரித்துக்கொள்கிறார்கள். நிலப்பகுதி அதிகமாகவும் மக்கள் எண்ணிக்கை குறைவாகவும் இருக்கும்பொழுது தங்களுக்குள்ளே அதைப் பிரித்துக்கொள்ளும்பொழுது எந்த பிரச்சனையும் இல்லாமல் இருந்தது. ஆனால் இன்றைய நிலையை சற்றே எண்ணிப்பாருங்கள்! ஒரு தகப்பனாருடைய சொத்தை பிரிக்கும்பொழுது, அல்லது நிலங்களை பிரிக்கும்பொழுது எத்தனை சண்டைகள், சச்சரவுகள் இல்லையா? இந்த உலகத்திலே நாம் ஒன்றையும் கொண்டு வந்ததும் இல்லை, ஒன்றையும் கொண்டுபோகப் போவதுமில்லை, இருந்தாலும் நித்தியம் வரை நம்மோடு வராத உலகப் பொருளான நிலங்களுக்காக, தோட்டங்களுக்காக வீடுகளுக்காக சண்டை செய்கிற குடும்பங்கள்தான் எத்தனை இல்லையா? அருமையான சகோதரனே, சகோதரியே, நித்தியத்திற்கு உங்களால் எடுத்துச்செல்லமுடியாத காரியங்களுக்காக அன்பையும், உறவுகளையும் நீங்கள் முறித்துக்கொள்வது தவறு. முறைப்படி உங்களுக்கு வருகிறதாயிருந்தாலும், நீங்கள் அதை விட்டுக்கொடுக்கும்பொழுது தேவன் அதைவிட அதிகமாக உங்களுக்குத் தருவார் என்பதை நீங்கள் மறந்துபோகவேண்டாம்.

ஆதியாகமம் 11

ஆதியாகமம் 11 : 1

அந்நாட்களிலே அவர்கள் என்ன மொழியிலே பேசிக்கொண்டிருந்தார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. "டெக்சஸ்" மாநிலத்திலே வாழ்ந்த ஒரு சகோதரன் ஒரு ஊழியரிடத்திலே போய் அந்நாட்களிலே மக்கள் "டெக்சஸ்" மொழிதான் பேசிக்கொண்டிருந்தார்கள் என்று கூறினானாம். இன்று கூட அநேகர் தங்கள் தங்கள் மொழிகளைத்தான் பரலோக மொழி என்று அழைத்துக்கொள்வதும், தங்கள் மொழியே, பரலோகத்திலே பேசப்படும் என்று கூறுவதையும் நீங்கள் கேட்டிருக்கலாம். ஆனால் அந்நாட்களிலே மக்கள் பேசியது எந்த மொழி என்பது நமக்குத் தெரியாது. வெர்னன் மகி என்ற தேவனுடைய மனிதர் சொல்லும்பொழுது, அந்நாட்களிலே அவர்கள் என்ன மொழியை பேசிக்கொண்டிருந்தார்களோ, அந்த மொழியைத்தான் நாம் பரலோகத்திலே பேசுவோம் என்று சொல்லுகிறார். அதுமட்டுமல்ல, இக்காலத்திலே காணப்படும் எல்லா மொழிகளைக் காட்டிலும் அது சிறந்த மொழியாக இருக்கும் என்றும் கூறுகிறார்.

ஆதியாகமம் 11 : 2

கவனித்தீர்களா? மனிதன் கிழக்கே இருந்து மேற்கு நோக்கி பயணப்பட ஆரம்பிக்கிறான். அங்கே அவர்கள் ஒரு சமபூமியைப் பார்க்கிறார்கள். இதுதான் டைகரீஸ், யூப்பரடிஸ் நதிகளின் இடைப்பட்டுள்ள பகுதியாகும்.

ஆதியாகமம் 11 : 3

அந்த பகுதியிலே எந்த விதமான கற்களும் இல்லை. எனவே அவர்கள் செங்கலைச் செய்ய ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் செங்கலைச் செய்தார்கள் என்று கூறும்பொழுதே அவர்கள் கட்ட ஆரம்பிக்கும் கட்டடத்தின் தன்மை எவ்வளவு குறைவானதாக இருந்தது என்பது நமக்குத் தெரியவருகிறது. இன்றும் செங்கலானது கட்டடம் கட்ட எல்லாரும் பயன்படுத்தும் ஒரு பொருளாயிருக்கிறது இருந்தாலும் அந்த இடத்திலே அந்த சூழ்நிலையிலே கற்கள் இல்லாததினாலே அவர்களுக்கு செங்கல் தேவையானதாக இருந்தது.

ஆதியாகமம் 11 : 4

எத்தனை முறை அவர்கள் நாம், நமக்கு என்று சொல்லிக்கொள்கிறார்கள், பாருங்கள். நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் ஒரு சிகரமுள்ள ஒரு கோபுரத்தைக் கட்டி, நமக்குப் பேர் உண்டாக்கப்பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். எல்லாம் நமக்கு நமக்கு நமக்கு என்று சொல்லி, தவறான ஒரு காரணத்தினாலே அந்தக் கோபுரத்தைக் கட்ட ஆரம்பிக்கிறார்கள். மக்கள் எல்லாரும் அவ்வப்பொழுது ஒன்றுகூடி காரியங்களைச் செய்வதற்காக, அந்த இடத்தை ஒருவேளை கட்டவேண்டுமென்று நினைத்திருக்கலாம். இந்நாட்களிலே நாம் கூட்டங்களுக்கு அரங்கங்களைக் கட்டுகிறோம் இல்லையா? அதைப்போல மக்கள் இணைந்து கூடும் ஒரு இடமாக அவர்கள் திட்டமிட்டிருக்கலாம். இந்த பாபேல் கோபுரமானது சுற்றி வளைந்து

www.Radio882.com

மேல்நோக்கிச் செல்லுகிற ஒரு கோபுரமாய் இருந்திருக்கிறது. ஏனென்றால் டைகரீஸ், யூப்பரடிஸ்சமவெளிப்பகுதியிலே இப்படிப்பட்ட பல கோபுரங்களின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆபிரகாம் வாழ்ந்த கல்தேயர்களின் ஊர் எனப்படும் இடத்திலேயே இப்படிப்பட்ட ஒரு கோபுரம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதுவும் செங்கலினாலேயே கட்டப்பட்டிருந்தது. உறுதியான கட்டடமாக மேலே ஏறிப்போவதற்கு கோபுரத்தைச் சுற்றி நடைபாதைப்போன்ற ஒரு பகுதியும் கட்டப்பட்டிருந்தது. கோபுரத்தின் உச்சியிலே ஒரு பலிபீடம் காணப்பட்டது. சிலக்குறிப்பிட்ட காலங்களிலே அந்த பலிபீடத்திலே நரபலி செலுத்தப்பட்டிருக்கிறது, நெருப்பைப்போல் சிவப்பாய் அது சூடேற்றப்பட்டப்பொழுது மனிதர்களோ, பிள்ளைகளோ அங்கே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவே பாபேல் கோபுரத்தைப் போன்ற கோபுரங்களின் பிற்கால சரித்திரமாயிருக்கிறது. ஆனால் பாபேல் கோபுரம் கட்டப்பட்டபொழுது சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு எதிராக மனுக்குலம் எதிர்த்தது அல்லது கலகம் செய்தது என்றுச் சொல்லலாம். இந்த இயக்கத்தை தலைமை தாங்கி நடத்தியது நிம்ரோத் என்று நாம் புரிந்துகொள்ளுகிறோம். எனவே நிம்ரோத்தான் இந்த பாபேல் கோபுரத்தையும் கட்டியிருக்கவேண்டும். ஏனென்றால் தேவனுக்கு எதிராக தனக்கென்று இந்த உலகத்திலே ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கான ஒரு இடமாக அவன் அதைத் தெரிந்தெடுத்தான். உலகத்தை ஆளவேண்டும் என்ற தனது வாஞ்சையையும், தனது கனவையும் நிறைவேற்ற அவனுக்கு இரண்டு முக்கியமான அம்சங்கள் தேவைப்பட்டதாயிருந்தது. முதலாவதாக மக்கள் இணைந்து ஒன்று கூடும் ஒரு தலைமையகம் அவனுக்குத் தேவையாக இருந்தது. அதுமட்டுமல்ல ஒரு தலைநகரமும் தேவையாக இருந்தது. அப்பொழுதுதான் மக்கள் எந்த ஒரு காரியத்திற்கும் கட்டளையைப் பெற்றுக் கொள்வதற்கும் அந்த இடத்தை நோக்கிப் பார்ப்பார்கள். இந்த காரணத்திற்காகவே அவன் பாபேல் நகரத்தைக் கட்டினான். உலகத்தை ஆளும் தனது கனவை நிறைவேற்ற அவனுக்குத் தேவையாயிருந்த ஒன்று நிறைவேறிவிட்டது.

இரண்டாவதாக மக்கள் கூடி வந்து நிற்கவும், அதில் இருந்து அவன் மக்களோடு பேசவும் தக்கதாக ஒரு இடம் தேவைப்பட்டது. பூமியிலே ஒரு குறிப்பிட்ட இடம் என்பது மட்டுமல்ல, மனதிலே மக்களுக்கு அப்படிப்பட்ட ஒரு இடம் தேவைப்பட்டது. விளையாட்டிலே பார்ப்பீர்கள் என்றால், வெவ்வேறு நிறத்திலே குழுக்கள் பிரிக்கப்படுகிறது. அந்த குழுவிற்கான கொடியை ஏந்திச்செல்லும்பொழுது எல்லாரும் அந்தக் கொடிக்குப்பின் செல்லுகிறார்கள். அது இந்தக் கொடிக்காக நான் எதையும் செய்ய அர்ப்பணிக்கிறேன் என்று சொல்லுவதுபோல ஒரு மனநிலையை உருவாக்குகிறது. அதுமட்டுமல்ல ஒரு நினைவு ஸ்தம்பமும் தேவையானதாக இருக்கிறது. அந்நாட்களிலே ரஷ்யாவிலே லெனின் அவர்களின் கல்லறையின் அருகிலேதான் உபதேசக் கூட்டங்கள் நடைபெற்றன. அதைப்போல நிம்ரோத்தின் காலத்திலே பாபேல் கோபுரத்தின் அருகிலே நடைபெற்றிருக்கும். அங்கே அவர்கள் சொல்வது என்ன? நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். நமக்கு ஒரு நகரத்தைக் கட்டுவோம் என்று கூறுகிறார்கள். இது தேவனுக்கு விரோதமான அளவுக்கதிகமான ஒரு ஆசையாயிருக்கிறது.

www.Radio882.com

அடுத்ததாக பாபேல் கோபுரம் எது அல்ல என்பதையும் நாம் சற்று சிந்திக்க வேண்டும். உயரமாக தண்ணீர் வரும்பொழுது ஏறி, தங்களைத் தப்பித்துக்கொள்வதற்காக கட்டப்பட்ட ஒரு கட்டடம் அது அல்ல. சில வேத வல்லுநர்கள் சொல்வதுபோல, வெள்ளம் வந்தால் மக்கள் ஏறி நிற்பதற்காக அது கட்டப்பட்டது அல்ல. இந்த கோபுரமானது தேவனுக்கு விரோதமாக மனிதன் கொண்டிருந்த வைராக்கியமான, எதிர்த்து நின்று கலகம் செய்யும் மனப்பக்குவத்தையே வெளிப்படுத்துக்கிறது.

அருமையானவர்களே! தேவன் மனிதனுக்குக் கொடுத்த கட்டளை என்ன? நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரம்பி அதைக் கீழ்ப்படுத்திக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் இங்கே மனிதனுடைய செயல் எப்படித் தெரிகிறது? நீர் சொல்லுகிறதுபோல நாங்கள் செய்யப்பொகிறது இல்லை. நாங்கள் பல இடங்களிலே கடந்துபோய் பூமியை ஆளப்போகிறது இல்லை. நாங்கள் அனைவரும் ஒன்றுகூடியே இருக்கப்போகிறோம். உமக்கும் எங்களுக்கும் எந்த உறவும் வேண்டாம் என்று சொல்வதுபோல இருக்கிறது. பாபேல் கோபுரம் தேவனுக்கு விரோதமானதாய் இருந்தது.

அடுத்ததாக பாபேல் கோபுரம் ஒரு சமயச்சடங்கின் அடையாளமுமாய் இருக்கிறது. அது மேல் நோக்கிச் சொல்லுகின்ற ஒரு கோபுரமாய் இருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ள யூப்பரட்டீஸ், டைகரீஸ் நதி சமவெளியிலே பல இப்படிப்பட்ட கோபுரங்கள் காணப்பட்டன. இந்த இடங்களிலேதான் மக்கள் தங்களை உருவாக்கியவரைத் தொழுதுகொள்ளாமல், தங்களுக்கென்று சில காரியங்களை உருவாக்கி அதைத் தொழுதுகொண்டிருந்தார்கள். சில கோபுரங்கள் வட்ட வடிவத்திலேயும், சில கோபுரங்கள் சதுர வடிவத்திலேயும் இருந்தது. ஆனால் எல்லா கோபுரங்களிலேயும் மேல் நோக்கிச் செல்லுவதற்கான பாதைகள் அமைக்கப்பட்டிருந்தது. மேலேச் சென்ற மக்கள் தேவன் உருவாக்கிய சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் வணங்கினார்கள். சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் அவர்கள் கண்கள் காணும் வரை வெள்ளம் வராது என்று எண்ணினார்கள். வெள்ளத்தை அனுப்பிய கடவுள் தரக்குறைவானவர் என்று எண்ணினார்கள். இப்பொழுது பாபேல் கோபுரத்தைக் குறித்து தேவன் என்னச் சொல்லுகிறார் என்பதைக் கவனியுங்கள்.

ஆதியாகமம் 11 : 5, 6

கவனித்தீர்களா? மக்கள் அனைவரும் ஒரே மொழியைப் பேசி வந்ததினாலே அவர்களிடத்திலேயே எந்த வேறுபாடும் இல்லை? அவர்கள் ஒன்று கூடி தங்களுடைய அறிவையும், தங்களுக்குத் தெரிந்த காரியங்களையும் ஒருவரோடு ஒருவர் பகிர்ந்துகொள்ளக்கூடியவர்களாய் இருந்தார்கள். அவர்கள் என்ன நினைத்தார்கள். தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். வெள்ளத்தின் மூலமாக ஒரு பெரிய அழிவு உண்டாயிருந்தாலும், விழுந்துபோன நிலைமையிலே இருந்த மனிதன் மனந்திரும்பவில்லை. அதற்குப் பதிலாக மேலும் மேலும் அவன் தேவனை விட்டு தூரம் போகிறவனாகக் காணப்படுகிறான். இப்படிப்பட்ட கலகத்தை தேவன் பார்த்தும், பாராதவர் போல இருக்கப்போவதுமில்லை. ஏன் தெரியுமா? அது தேவனாகிய கர்த்தருக்கு விரோதமான ஒரு கலகம்.

www.Radio882.com

தேவன் தண்டித்தும் அந்த தண்டனையைக் கருத்திலே கொள்ளாமல் மேலும் மேலும் தேவனுக்கு விரோதமான செயல்களைச் செய்து கொண்டிருக்கிறவர்களைக் குறித்து தேவன் பார்த்தும் பாராதவர் போல இருப்பதில்லை. ஒரு பாதுகாவலின் சுவரை தேவனே எழுப்பப் போகிறார். ஒரு தடையை அவர் உண்டாக்கப் போகிறார். இந்த காரியம் தேவையானதாக இருக்கிறது. ஏனென்றால் மனிதன் எதையும் செய்யக்கூடிய வலிமைப் பெற்றவனாகக் காணப்படுகிறான். அவனும் சந்திரனுக்குப் போக முடியும். அவன் வானத்திலே ஒரு பறவையைப் போல விமானத்திலே பறக்க முடியும். பூமியை விட்டு, ஐந்து மைல்களுக்கு மேலே பறக்கும் ஒரு மனிதனுக்கும் அருமையான ஆகாரம் கொடுக்கப்படுகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த யாரிடத்திலே இதைக் கூறினாலும் அவர்களால் இதை நம்பமுடியாது. இக்காலத்திலே வாழுகின்ற மனிதனும் நம்பமுடியாத காரியங்களை வரப்போகும் காலத்திலே மனிதன் செய்யப்போகிறான். ஏனென்றால் அவ்வளவு திறமையாக தேவன் மனிதனைப் படைத்திருக்கிறார். ஒரே மொழி பேசுகிறவனாக மனிதன் கூடிவரும்பொழுது தேவனுக்கு விரோதமாக அவன் எதையெல்லாம் செய்ய முடியும் என்று பார்த்தோம். அங்கே தேவன் என்ன சொல்கிறார் கவனியுங்கள்.

ஆதியாகமம் 11 : 7 – 9

இப்பொழுது மனிதனானவன் பூமியின் மீதெங்கும் சிதறடிக்கப்படுகிறான். தேவனுக்கு விரோதமான கலகத்திலே அத்தனைபேரும் இணைந்து காணப்பட்டார்கள். ஆனால் இப்பொழுது ஒருவர் சொல்லுவதை ஒருவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. சீனாவின் அந்த நெடுஞ்சுவரைவிட, மொழி வேறுபாடு என்பது மிகப்பெரிய ஒரு தடை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். பெர்லின் நகரத்துக் கோட்டையை விட இது பெரியது. இன்றும் மொழி வேறுபாடே மக்களை எளிதாக பிரிக்கிறது. இரண்டு தேசங்களுக்கு இடையிலே போடப்பட்டிருக்கும் தடைகளை விடவும், கடல் தடுக்கும் தடையை விடவும் அது வலிமையானது. மொழியானது, கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சிப் பெறுகிறது என்று பலர் கூறுவார்கள். ஆனால் தேவன் அங்கே தலையிட்டபடியினாலே அவர்கள் கட்டடம் கட்டிக் கொண்டு இருக்கும் அந்த வேளையிலேதானே ஒருவரையொருவர் புரிந்துகொள்ளாதபடிச் செய்தார். எனவே, திடீரென்று கட்டிடவேலையானது நின்று போனது. அங்கே என்ன நடைபெற்றிருக்கும். செங்கலை கொண்டு வா என்றால் ஒருவன் சாந்தை கொண்டு வந்திருப்பான். நிலக்கீலை கொண்டுவா என்றால் வேறு யாராவது ஆட்களைக் கூட்டிக்கொண்டு வந்திருப்பார்கள். இப்படி அங்கே சர்வமும் குழப்பமான ஒரு நிலைமைக்கு வந்தது. எனவே கூடியிருந்த மக்கள் அனைவரும் பாபேலை விட்டு வெவ்வேறு பக்கங்களிலே சிதற ஆரம்பித்தார்கள். இது தேவன் செய்த அற்புதங்களிலே ஒன்று என்பதை நாம் மறந்து போகக் கூடாது. வித்தியாச வித்தியாசமான மொழிகளிலே அந்த நேரத்திலே, அவர்கள் பேச ஆரம்பித்தார்கள், கேட்க ஆரம்பித்தார்கள். வெவ்வேறு மொழிகளைப் பேசினார்கள், மற்றவர்கள் அவர்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அருமையானவர்களே! உங்களிடத்திலே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். இது மறைவான ஒரு ஆசீர்வாதமா? அல்லது இது மனுகுலத்தின் மேலே வந்த ஒரு சாபமா?

www.Radio882.com

தேவனை விட்டுத் தூரமாகும்படி அவர்கள் வளர்ச்சிப் பெற்றது தவறு. எனவே, இது அவர்களுக்கு எதிராக வந்த ஒரு நியாயத்தீர்ப்பு. நூற்றாண்டுகளாக மனுக்குலம் பிரிக்கப்பட்டதாகவே காணப்பட்டது. இது அவர்களுடைய முன்னேற்றத்திற்கு ஒரு தடைதான். ஆனால் இக்காலத்திலே நாம் பார்க்கிறதுபோல, வானொலி, தொலைக்காட்சி, விமானப் பயணம் இவை போன்ற காரணங்களினாலே இந்த தடைகள் அப்புறப்படுத்தப்படுகிறது. எரிகோவின் கோட்டை இடிந்து விழுந்தது போல அங்கே மொழி என்ற கோட்டை உடைகிறது. எனவேதான் தேவன் மீண்டுமாக நியாயந்தீர்க்கும்படியாக கடந்து வருகிறார் என்று நாம் உணர்ந்துகொள்ளலாம். வெவ்வேறு மொழிகளிலே அவர்கள் பேசிய இந்த நிகழ்ச்சியை புதிய ஏற்பாட்டிலே நாம் வாசிக்கிற பெந்தேகோஸ்தே நாளோடு நாம் ஒத்துப்பார்ப்போம்.

அந்த நாளிலேயும் ஜனங்கள் வெவ்வேறு பாஷைகளைப் பேசினார்கள். ஆனால் வெவ்வேறு மொழிகளிலே தேவனுடைய மகத்துவத்தை, சுவிஷேசத்தை அவர்கள் பேசினார்கள். அதுமட்டுமல்ல, இதைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றவர்கள் தங்கள் தங்கள் மொழிகளிலே இவர்கள் பேசுகிறதைக் கேட்டுப் புரிந்துகொண்டார்கள். அங்கே புரியாத மொழிகளை அவர்கள் பேசவில்லை. பெந்தேகோஸ்தே நாளன்று பாபேல் கோபுரத்திற்கான பதிலை தேவன் கொடுக்கிறார். இங்கே மனுக்குலத்திற்கு அவர் சொல்வதென்ன? உங்கள் ஒவ்வொருவருக்காகவும் நான் செய்தியையும் நற்செய்தியையும் வைத்திருக்கிறேன். உங்கள் ஒவ்வொருவருடைய மொழியிலேயும் நான் இந்த சுவிசேஷம் என்னும் நற்செய்தியை கொண்டு வருகிறேன் என்று கூறுகிறார்.

ஆம், இதையே தேவன் செய்தார். எனவே, பல்வேறு மொழிகளிலே வேதபுத்தகம் மொழிபெயர்த்துக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் நூற்றுக்கணக்கான மொழிகளிலே மொழிபெயர்ப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஏனென்றால் நற்செய்தியானது அனைத்து மனுக்குலத்திற்கும் உரியது. காரணம் என்ன? மனுக்குலம் அனைத்தும் கர்த்தரை அறிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது மனுக்குலத்திற்கு ஒரு இரட்சிப்பின் மார்க்கம் இருக்கிறது. அவனே தன் சொந்த இரட்சிப்பிற்கான முயற்சியினை இப்பொழுது செய்யத் தேவையில்லை தேவனுடைய செய்தியைக் கேட்டு, அவரிடத்திலே திரும்பினாலே போதும். ஆம், அருமையான சகோதரனே, சகோதரியே, நற்செய்தி உங்களுக்கு உரியது. நீங்கள் யாராக இருந்தாலும், எந்த நிலைமையிலே இருந்தாலும் என்ன வயதுள்ளவர்களாயிருந்தாலும், நற்செய்தி உங்களுக்குரியது. உலகத்திலே உள்ள அனைத்து மனுக்குலத்திற்கும் உரியது நற்செய்தி. எனவேதான் இன்று TWR இந்தியாவிலே 101 மொழிப்பேசும் மக்கள் மத்தியிலே பணி செய்கிறது.

வெளிப்படுத்தின விசேஷம் 7 : 9 : “இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.”

ஒவ்வொரு மொழி பேசுகிறவர்களின் மத்தியிலிருந்தும் தேவனை விசுவாசிக்கிறவர்கள் ஒருநாள் அவர்முன் நிற்பார்கள்.

www.Radio882.com

சரி, இப்பொழுது சேமுடைய சந்ததியைக் குறித்து தொடர்ந்து நாம் பார்ப்போம்.

ஆதியாகமம் 11 : 10

இந்த வசனம் முதல் தொடர்ந்து சேமுடைய சந்ததி சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதியாகமம் 11 : 24, 25

இங்கே தேராகின் வம்சம் சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். ஏன் தேராகின் வம்சத்தை நாம் கவனிக்க வேண்டும்?

ஆதியாகமம் 11 : 26

ஆபிரகாம் என்று நாம் அறிந்திருக்கிற ஆபிராமின் சந்ததியைக் குறித்து இங்கே பார்க்கப்போகிறோம். நோவாவின் குமாரனை, சேமுடைய சந்ததியை சிந்திக்கத் துவங்கினோம். ஏனென்றால் இவனுடைய சந்ததியைக் குறித்தே வேதப்புத்தகம் முழுவதிலும் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் சிலுவை வரை இதைக்குறித்தே நாம் பார்க்கிறோம். இவை எல்லாவற்றையும் தேவனே அடிப்படையாக எழுதி வைத்திருக்கிறார். மனிதன் பாவத்திலிருக்கிறான் என்பதை தேவன் அவனுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். காயின் ஆபேல் சரித்திரத்திலே காயின் தனது பாவத்தை ஒத்துக்கொள்ளவில்லை என்று வாசிக்கிறோம். ஜீவனத்தின் பெருமை அவனுக்கிருந்தது. தேவன் பெருவெள்ளத்தினாலே மனுக்குலத்தை அழித்தபொழுது மாம்சத்தின் இச்சைக்கடுத்த பாவம் இருந்தது.

தேவன் தங்களுக்குத் தேவை என்பதை உணராமலிருந்தார்கள். தேவனுடைய சத்தத்திற்குக் காதுகேளாதவர்கள் போல் இருந்தார்கள். பாவத்திலும், அக்கிரமத்திலும் மரித்துப் போயிருந்தார்கள். நோவாவின் மூலமாக தேவன் அவர்களுக்கு ஒரு அழைப்பைக் கொடுத்தார். ஆனால் அவர்கள் அதை எதிர்த்து மாம்சத்தின் பாவங்களிலே ஜீவித்தார்கள். பாபேல் கோபுரத்தின் அருகிலே சுய சித்தம் என்னும் பாவத்திலே தேவனுக்கு விரோதமாய்ச் செயல்பட்டார்கள்.

உங்கள் வாழ்க்கையிலேயும் தேவனுக்கு விரோதமான ஒரு கோபுரத்தை நீங்கள் கட்டிக்கொண்டிருக்கிறீர்களா? தேவனுக்கு விரோதமாக கலகம் செய்து கொண்டிருக்கிறீர்களா?

இது மனிதனுடைய இயற்கை சுபாவமாயிருக்கிறது. உங்கள் விருப்பப்படி, உங்கள் நன்மைக்காக, என்று 'நான்' 'எனக்கு', என்ற சுய எண்ணங்களை, சுய விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவும். நாம் நம்முடைய என்ற ஒரு கூட்டமாக நீங்கள் எதிர்த்து நிற்கிறீர்களா? சற்றே எண்ணிப் பாருங்கள்.

குமார் மிகவும் குறும்பு செய்கிறவன். அவனுடைய குறும்பு அதிகமானதினாலே காதைப்பிடித்து இழுத்துக்கொண்டுபோய் வீட்டின் அறையிலே மூலையிலே ஒரு இருக்கையைப் போட்டு, அதிலே உட்கார வைத்து சுவரைப் பார்த்து உட்கார்ந்துகொண்டே இரு என்று சொல்லிவிட்டு குடும்பத்திலே உள்ள எல்லாரையும் அவனுடைய தாய் அழைத்துக் கொண்டு முன் அறைக்கு வந்தார்கள். சிறிது நேரம் ஆனது, அவனை உட்கார வைத்திருந்த அறையிலிருந்து ஏதோ சத்தம் வந்தது. உடனே அவனுடைய தாயார், "குமார் நீ

www.Radio882.com

எழுந்துவிட்டாயா?" என்று கேட்டார்கள். அதற்கு அவன், "இல்லையம்மா, நான் உட்கார்ந்துகொண்டுதான் இருக்கிறேன்." ஆனால் என் உள்ளத்திற்குள்ளே நான் இன்னமும் எழுந்து நின்று கொண்டுதான் இருக்கிறேன் என்று கூறினான்.

ஆம், அருமையானவர்களே இதுதான் மனிதனுடைய சுபாவம். நம்முடைய வாழ்க்கையிலே எந்த காரியத்திலேயாவது நாம் தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்து கொண்டிருக்கிறோமா என்பதை சற்றே எண்ணிப்பார்ப்போம். நம்முடைய கலகங்கள் அதிகமாகும்பொழுது தேவன் நமக்கு எதிராக செயல்படுவார் என்று இன்று நாம் கற்றுக்கொண்ட வேதப்பகுதி நமக்குத் தெளிவாய்ச் சொல்கிறது. தேவன் அவ்வாறு செயல்படும் முன்னர் இன்றே நம்மைத் தாழ்த்தி அவருடைய கரத்திலே நம்மை அர்ப்பணித்து ஆண்டவரே உமக்கு விரோதமாகக் கலகம் செய்யாமல், உமக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்யாமல், இனி நான் உமக்குப் பிரியமானதைச் செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன் என்று சொல்வோமா?

அப்பொழுது அவர் பாவமன்னிப்பை நமக்குக் கொடுக்கிறது மட்டுமல்லாமல் அவரோடுக்கூட நெருக்கமான உறவையும் தருகிறவராயிருக்கிறார்.

அந்த மகிழ்ச்சியான உறவைப் பெற்றுக்கொள்ள இன்றே அவரண்டை பரிபூரணமாய்த் திரும்புவோமா?

ஆதியாகமம் 11 : 27 – 31

இங்கே நாம் வாசிப்பது போல சேமுடைய வம்சத்திலேதான் நாகோர் வருகிறார். நாகோரின் குமாரர்தான் தேராகு. தேராகுவின் குமாரன்தான் ஆபிராம். 27ஆம் வசனம் முதல் தேராகின் வம்ச வரலாறு என்று வாசித்தோம். இவர்கள் ஆரான் என்ற ஜென்ம பூமியிலே ஊர் என்கிற கல்தேயரின் பட்டணத்திலே வசித்து வந்தார்கள். ஆபிராமுடைய குடும்பத்திலே ஆபிராம், நாகோர் ஆரான் என்பவர்களைப் பார்க்கிறோம். ஆரான் லோத்தைப் பெற்றபின் அவனுடைய தகப்பனாகிய தேராகு மரிக்குமன்னதாகவே மரித்துப் போய்விடுகிறான். எனவே லோத்து தகப்பனாருடைய சகோதரர்களால் பராமரிக்கப்படுகிறான். ஆரான் என்ற வார்த்தைக்கு பிந்துதர் அல்லது காலந்தாழ்த்துதல் என்று பொருளாகும். ஆபிராமுடைய மனைவி சாராய். ஆபிராமுடைய சகோதரனாகிய நாகோரின் மனைவியின் பெயர் மில்க்காள். சாராய்க்குக் குழந்தை பாக்கியம் இல்லை. ஆபிராமுடைய தகப்பனாகிய தேராகு ஆரான், ஆபிராம், அவர்களுடைய மனைவிமார் மற்றும் லோத்து இவர்களெல்லாரையும் கூட்டிக்கொண்டு ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தை விட்டு கானான் தேசத்திற்குப் போக புறப்பட்டான். ஆனால் அவர்கள் ஆரான் என்ற இடத்திற்கு வந்தபொழுது அங்கே இருந்துவிட்டார்கள்.

ஆதியாகமம் 11 : 32

ஆபிராமுடைய தகப்பனார் அங்கே மரித்துப்போய்விடுகிறார்.

இப்படிப்பட்ட நேரத்திலே என்ன நடக்கிறது என்பதைக் குறித்துதான் 12ஆம் அதிகாரத்திலே நாம் பார்க்கப்போகிறோம். அங்கே ஆபிராமுடைய அழைப்பைக்குறித்தும், ஆபிராம் அதற்கு எப்படி பதில்சொன்னான் என்பதைக்குறித்தும் பார்க்கிறோம். ஏற்கனவே, நாம் சிந்தித்ததுபோல

www.Radio882.com

ஆதியாகமம் முதலாம் அதிகாரம் முதல் 11 அதிகாரங்கள் வரை ஒரு பிரிவாகவும் 12ஆம் அதிகாரம் முதல் மற்றொரு பிரிவாகவும் ஆரம்பமாகிறது. இங்கே அந்த சூழ்நிலை முற்றிலும் வேறுபட்ட ஒரு சூழ்நிலையாக இருக்கிறது. இவ்வளவு காலம் துரிதமாக பல சந்ததிகளையும் ஆங்காங்கே நடைபெற்ற முக்கியமான சம்பவங்களையும் நாம் சிந்தித்தோம். இனி நாம் குறிப்பிட்ட மனிதருடைய வாழ்க்கையைச் சிந்திக்கப்போகிறோம். எல்லாருடைய வாழக்கையும் சிறப்பானது என்று சொல்ல முடியாது. ஆனால், அனைவருடைய வாழ்க்கையும் மிக முக்கியமானவை. ஆதியாகமத்திலே குறிப்பாக நான்கு பேரை குறித்து நாம் சிந்திக்கப்போகிறோம் முதல் 11 அதிகாரங்களிலே நான்கு சிறப்பான மகத்துவமான நிகழ்ச்சிகளை நாம் சிந்தித்தோம். ஒன்று சிருஷ்டிப்பு, இரண்டாவது தேவன் மனிதனை படைத்த சம்பவம். மூன்றாவது பெரிய வெள்ளம். நான்காவது பாபேல் கோபுரம். இந்த எல்லா நிகழ்வுகளிலேயும் மனுக்குலம் என்ற கூட்டத்தோடு தேவன் இடைபடுவதை பார்க்கிறோம். ஆதாமுக்கும், ஆபிராமுக்கும் தவிர தேவன் யாருக்கும் தன்னைக் காண்பித்ததில்லை. முழுமையான மனுக்குலத்துடன் தேவன் செயல்பட்டார். 12ஆம் அதிகாரத்திலே ஒரு பெரும் மாற்றத்தைப் பார்க்கிறோம்.

இனி நான்கு தனி நபர்களை நாம் சிந்திக்கப்போகிறோம். தேவன் நிகழ்வுகளின் மூலமாக இடைபடுகிறவராக அல்ல, தனி மனிதனிடத்தில் அவர் இடைபடுகிறவராக, அந்த மனிதன் மூலமாக ஒரு தேசத்தையும் உருவாக்குவதையும் நாம் பார்க்கிறோம் ஆதியாகமம் 12ஆம் அதிகாரம் முதல் 23ஆம் அதிகாரம் வரை விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமைக் குறித்துப் பார்க்கிறோம். தொடர்ந்து 24 முதல் 26 வரை ஈசாக்கைக் குறித்தும், 27 முதல் 36 வரை யாக்கோபைக் குறித்தும், ஆதியாகமம் 37ஆம் அதிகாரம் முதல் 50வது அதிகாரம் வரை யோசேப்பின் பாடுகளைக் குறித்தும் அவன் மகிமையடைவதைக் குறித்தும் பார்க்கப்போகிறோம்.

வேத வசனங்களை நாம் புரிந்து கொள்வதற்கு இந்த நான்கு முற்பிதாக்களின் வாழ்க்கையும் மிக மிக முக்கியமானது. ஒரு சந்ததியோடு கூட தேவன் செயல்படுவதில்லை இங்கே தேவன் வெளிப்படுத்துகிறார். ஏதேன் தோட்டத்திலே ஆதாம் ஏவாளின் பாவத்தைத் தொடர்ந்து காயின் செய்த பாவத்தை நாம் வாசிக்கிறோம். அவனுடைய பாவம் என்ன? பெருமை. அவன் தேவனுக்குக் கொண்டு வந்த காணிக்கையைக்குறித்து உள்ளத்திலே பெருமை உள்ளவனாகக் காணப்பட்டான். இதுதான் அவன் சகோதரனுடைய காணிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டபொழுது அவனுக்குக் கோபத்தை உண்டுபண்ண காரணமாயிருந்தது. இந்த பெருமையானது அவனது சொந்த சகோதரனையே கொலை செய்ய அவனை வழிநடத்தினது. அடுத்ததாக மாம்ச இச்சையின் காரணமாகவே தேவன் பெரிய வெள்ளத்தை அனுப்பினார். மனிதனுடைய செயல்கள் மட்டுமல்ல அவனுடைய எண்ணங்களிலேயும் அவன் மாம்சத்தைத் திருப்பதிப்படுத்தக்கூடிய காரணத்தையே அவன் சிந்தித்துக்கொண்டிருந்தான். அந்த மனுக்குலத்தை அழிக்க தேவன் பெரு வெள்ளத்தைக் கொண்டுவர சித்தமானார். அதைச் செய்து முடித்தார். ஏனென்றால் அந்நாட்களிலே விசுவாசியான ஒரே ஒரு மனிதனைத்தான் தேவன் கண்டார். அடுத்த சந்ததியிலே பார்ப்போம் என்று தேவன் காத்திருந்திருப்பார் என்றால் மனுக்குலம் அனைத்தையுமே அவர் அழிக்கவேண்டியதிருந்திருக்கும். உலகத்தோடும் உலக

மக்களோடும் தேவன் மிகப்பொறுமையாகவே இருந்தார். 969 ஆண்டுகள் அவர் காத்திருந்தார். மெத்துசலாவின் வாழ்நாள் முழுவதும் அவர் காத்திருந்தார். எந்த ஒரு மனிதனும் தன்னுடைய இருதயத்தை மாற்றிக்கொள்வதற்கு 969 ஆண்டுகள் போதும் என்று நீங்களும் கூறுவீர்கள். ஆனால் மக்களோ தேவனிடத்திலே திரும்புவதற்குப் பதிலாக அவருக்கு விரோதமாக வெளிப்படையாக கலகத்திலே ஈடுபட ஆரம்பித்தார்கள். ஜலப்பிரளயத்தினாலே அவ்வளவு பெரிய துன்பம் வந்தபோதிலும், மக்கள் தேவனைத் தேடவில்லை. அவர்கள் என்ன செய்தார்கள். பாபேலின் கோபுரத்தைக் கட்டினார்கள். இன்றும் அநேகருடைய வாழ்க்கையிலே தேவன் எத்தனையோ தண்டனைகளை அனுப்பினபிறகும் அவர்களுடைய பாவத்தைவிட்டுவிட அவர்களுக்கு மனதில்லை. பாபேல் கோபுரத்தின் நிகழ்வுக்குப் பின்னர் தேவன் கூட்டமான ஜனங்களைக் கவனிப்பதை விட்டுவிட்டு, தனிமனிதனைத் தெரிந்துகொள்ளச் சித்தமானார். அந்த தனிமனிதன் மூலமாக ஒரு தேசத்தை உருவாக்கத் திட்டமிட்டார். அந்த தேசத்து மக்களுக்கு தேவன் தன்னை வெளிப்படுத்தவும், அந்த சந்ததி மூலமாக இந்த உலகத்திற்கு ஒரு இரட்சகரை அனுப்பவும் அவர் சித்தமானார். அந்நாட்களிலே இதுவே அவருக்கு ஒரு சிறந்த வழியாகக் காணப்பட்டது. தேவன் எப்பொழுதுமே சிறந்த ஒரு காரியத்தைத்தான் செய்வார். இதைக்குறித்து நாம் அவரைத் திட்டமாக நம்பலாம். உங்கள் வாழ்க்கையிலே பல காரியங்களுக்கு காலத்தாமதம் ஆகிறது என்றோ, எவ்வளவு நாள் நான் காத்திருக்கிறேன் என்றோ, நீங்கள் கலங்கத் தேவையில்லை. உண்மையாகவே நீங்கள் கர்த்தருக்குக் காத்திருப்பீர்கள் என்றால் வெட்கப்பட்டுப்போவதில்லை.

தேவன் ஆபிரகாமைத் தெரிந்துகொள்ளும் பொழுது விசுவாசமுள்ள ஒரு மனிதனை அவர் தெரிந்துகொண்டார். ஆபிராமைக்குறித்து யார் கற்றுக்கொண்டாலும் அவனை அழைக்கும்பொழுது அவர் சிறந்தவராகவே காணப்படுகிறார். இந்த பூமியிலே வாழ்ந்த மனிதருக்குள் எல்லாம் இவர் சிறந்தவர் என்று சொல்லலாம். இந்த நாட்களிலேயும் சிறப்பான மனிதர்களை எப்படி நாம் கண்டுகொள்வது, அந்த மனிதன் பேர் பெற்றவராக இருக்கவேண்டும், ஆம், ஆபிராம் அந்நாட்களின் உலகத்திலேயே பேர் பெற்றவனாக இருந்தான். வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் எல்லாம் இருக்கும் இந்தக் காலத்திலேயும், ஆபிராமைக்குறித்துதான் அதிகமான மக்கள் அறிந்திருப்பார்கள். ஒரு ராஜ்யத்தின் தலைவரைக்குறித்தோ, ஒரு விளையாட்டு வீரனைக்குறித்தோ, ஒரு நடிகனைக் குறித்தோ அறிந்திருப்பதைவிட ஆபிராமைக்குறித்துதான் பலர் அறிந்திருக்கிறார்கள். இந்த உலகத்திலே இன்று காணப்படுகிற சமயங்களிலும் கூட, மூன்று சமயங்கள் ஆபிராமை பின்னோக்கிப் பார்க்கிறது. ஒன்று யூத சமயம், இரண்டாவதாக இஸ்லாம் சமயம், மூன்றாவதாக கிறிஸ்தவ சமயம். எத்தனையோ செய்தித்தாட்களிலே முதல் பக்கத்திலே வருகிற பெயர்களை நீங்கள் அறிந்திருப்பதை விட ஆசியாவிலேயும், ஆப்பிரிக்க கண்டத்திலேயும் எண்ணற்ற மக்கள் ஆபிராமைக் குறித்து அறிந்திருக்கிறார்கள். ஆம், ஒரு மனிதன் சிறந்தவன் என்றால் அவன் பேர்பெற்றவனாக இருப்பான். எல்லாருக்கும் அறிமுகமானவனாகவும் இருப்பான். அதுதான் ஆபிரகாம்.

இரண்டாவதாக ஒரு சிறந்த மனிதன் என்று சொல்லும்பொழுது அவன் சிறப்பான குணநலன்களை உடையவனாய் இருப்பான். தாராளமனதுள்ளவனாய் இருப்பான்.

ஆபிராமைப் பார்க்கிலும் தாராள மனதுள்ள யாரையாவது உங்களுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட யாராவது இந்த உலகத்திலே இருப்பார்கள் என்று எண்ணிப்பார்க்க முடியுமா? முடியாது இல்லையா? ஆபிரகாமின் சகோதரனுடைய மகனான லோத்துவின் வேலைக்காரர்களுக்கும், ஆபிரகாமின் வேலைக்காரர்களுக்கும் ஒரு முறை பிரச்சனை வந்தபொழுது லோத்து எதைத் தெரிந்துகொள்ளுவானோ அதை விட்டுவிட்டு மற்றதை ஆபிரகாம் தெரிந்துகொள்வேன் என்று விட்டுக்கொடுத்தான். இந்த உலகத்திலே வியாபார துறையிலே இருக்கிற யாராவது இப்படிப்பட்ட ஒரு காரியத்தைச் செய்வார்களா? ஆனால் ஆபிரகாம் மிகவும் பரந்த மனதுள்ளவன். சோதோம் கொமோரா ராஜாவினிடத்திலே அவன் பேசிய காரியம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? பாதரட்சையாக கட்டும் செருப்புக்குப் பயன்படுத்தும் ஒரு சிறு வாரைக்கூட நான் எடுத்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்லுகின்றான். ஏனென்றால் அவன் எப்பொழுதும் தேவாதி தேவனையே நோக்கிக்கொண்டிருக்கிற ஒரு மனிதன்.

சிறப்பான மனிதனுக்கான மூன்றாவது அடையாளம் என்னவென்றால், அந்த மனிதன் ஒரு சிறப்பான காலக்கட்டத்திலே வாழ்ந்தவனாயிருக்கவேண்டும். சிறப்பான காலக்கட்டத்திலே வாழும் ஒரு சிறந்த மனிதன் பேர்பெற்றவனாகிறான்.

ஆபிரகாமுடைய வாழ்க்கையைப் பொறுத்தமட்டிலேயும் இதுவே உண்மை. நாம் பார்த்த இந்த மூன்றுக் காரியங்களைக் குறித்து உலகமும் இன்று ஏற்றுக்கொள்ளும். ஆனால், நான்காவதாக நான் சொல்லப்போகும் ஒருக்காரியத்தை உலகம் ஒத்துக்கொள்ளாது. அருமையானவர்களே, இந்த உலகத்திலே சிறந்த ஒரு மனிதன் இருக்கவேண்டுமென்றால் அவன் சிறந்த விசுவாச மனிதனாய் இருக்கவேண்டும். எல்லா சிறப்பான மனிதர்களும்; கிறிஸ்துவை அறியாதவர்களும் கூட ஏதோ ஒரு குறிப்பிட்டக்காரியத்திலே நம்பிக்கையுள்ளவர்களாகக் காணப்படுவார்கள். தேவனே கூறியிருக்கிறார்.

ஆபிரகாம் ஒரு சிறந்த விசுவாசி. வேதத்திலே பல இடங்களிலே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் ஆபிரகாமுடைய வாழ்க்கையைப் பார்க்கும்போது ஏழு முறை தேவன் ஆபிரகாமுக்குக் காட்சிக் கொடுக்கிறார். ஒவ்வொரு முறையும் அவனுடைய விசுவாசத்தை வளரச்செய்யும்படியாய் அவ்வாறுச் செய்தார். இவ்வாறு நான் கூறுவதினாலே அவன் பரிபூரணமானவன், எந்த குறைவும் இல்லாதவன் என்று கூறிவிடமுடியாது. பல சமயங்களிலே ஆபிராமும் தன்னுடைய வாழ்க்கையிலே தவறியிருக்கிறான். தேவன் நான்கு பரிட்சைகளை அவருக்கு வைத்தார். நான்கிலேயும் அவர் தோல்வியுற்றார். ஆனாலும் சீமோன் பேதுருவைப்போல எழுந்து தேவனோடு தனக்கு இருந்த உறவைப் புதுப்பித்துக்கொண்டார்.

ஆதியாகமம் 12ஆம் அதிகாரம் முதல் மூன்று வசனங்களிலேயும் தேவன் ஆபிராமுக்குக் கொடுக்கிற மூன்று வாக்குறுதிகளை நாம் பார்க்கிறோம். இது வேத புத்தகத்தின் மிக முக்கியமான ஒரு பகுதி. இந்த வாக்குறுதிகளை விவரமாகச் சொல்லுவதுதான் வேதத்தின் மற்ற பகுதிகள். கவனியுங்கள் வாசிக்கிறேன்.

ஆதியாகமம் 12

ஆதியாகமம் 12 : 1 – 3

முதல் வாக்குத்தத்தம் நிலத்தைக் குறித்தது. உனக்குக் கொடுக்கப்போகிற ஒரு தேசத்தைக் காண்பிக்கிறேன் என்று சொல்லுகிறார். இரண்டாவதாக உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்கிறார். மூன்றாவதாக பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். அருமையானவர்களே ஒருவேளை தேவன் கொடுத்த இந்த மூன்று வாக்குறுதிகளையும் நிறைவேற்றினாரா என்று நீங்கள் கேட்கலாம். ஆம், குறிப்பிட்ட ஒரு ஜாதியாக இந்த உலகத்திலே நீண்ட காலம் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிற சந்ததி என்றால் அது ஆபிரகாமுடைய சந்ததிதான். எல்லா மனுக்குலத்திற்கும் ஆபிரகாம் ஆசீர்வாதமானவனாக இருக்கிறானா? ஆம், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக ஆபிரகாம் சகல உலகத்திற்கும் ஆசீர்வாதமானவனானான். தேவன் கொடுத்த முதல் வாக்குறதி அதாவது ஆபிரகாமுக்குப் கொடுக்கப்போறேன் என்றுச் சொன்ன தேசத்தை இன்னமும் கொடுக்கவில்லை. சொல்லப்போனால் ஒரு பெருவிரல் நிலத்தளவே அவர்கள் வைத்திருக்கிறார்களேயன்றி, அவர்கள் தேவன் வாக்குப்படி முழுமையையும் இன்றைக்குப் பெற்றுக்கொள்ளவில்லை. தேவன் ஏற்கனவே கூறியிருக்கிறார். அவர்கள் கீழ்ப்படிய முடியாதவர்களாய் இருந்தால் அந்த தேசத்திலே குடியிருக்க முடியாது என்றுச் சொன்னர். எனவே அவர்கள் தேவனை விட்டு தூரம் போனபடியினாலே அங்கிருந்து அவரே அவர்களைத் துரத்திவிட்டு விட்டார். தேவன் நல்ல வாக்குறுதிகளைக் கொடுக்கவில்லை என்று சொல்லமுடியாது. அவர் கூறியதை அவர் செய்கிறார். நாள் ஒன்று வரும். அன்று இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரையும் அவருடைய தேசத்திலே அவர் வைக்கப்போகிறார். அந்நாட்களிலே ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குக்கொடுத்த அத்தனை நிலப்பரப்பையும் அவர்கள் உடையவர்களாயிருப்பார்கள். ஆபிரகாமின் சந்ததியினர் உச்சகட்டத்திலே இருக்கும்பொழுது கூட முப்பதாயிரம் சதுரமையில்களை உடையவர்களாய் தான் இருந்தார்கள். ஆனால் தேவன் அவர்களுக்குக் கொடுத்தது, அவைமட்டுமல்ல, 300 ஆயிரம் சதுர மையில் ஆகும்.

தேவன் கொடுத்த மூன்று வாக்குத்தத்தின் அடிப்படையிலே ஆபிராம் என்ன செய்தார்? முதல் வசனத்திலே கர்த்தர் ஆபிராமை நோக்கி, உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப் போ என்றுச் சொன்னார். கல்தேயருடைய தேசமாகிய ஊர் என்னும் இடத்திலிருந்து தேவன் அவனை அழைத்தார். இதைக்குறித்து அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் 7ஆம் அதிகாரம் 2 முதல், " அதற்கு அவன் சகோதரரே, பிதாக்களே, கேளுங்கள், நம்முடைய பிதாவாகிய ஆபிராம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு முன்னமே மெசொப்பொத்தாமியா நாட்டிலே இருக்கும்போது மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமாகி, நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார். அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தைவிட்டப் புறப்பட்டு, காரானூரிலே வாசம்பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை அழைத்துக்கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார்."

www.Radio882.com

ஆபிராம் தேவனுக்குக் கீழ்படிந்து, வீட்டை விட்டு, எல்லா வியாபாரங்களை விட்டு, அந்நாட்களிலே உயர்ந்த நாகரீகத்தைக் கொண்ட அந்த ஊரை விட்டு எங்கே போகிறான் என்பதை அறியாதவனாகப் புறப்பட்டு வந்தான். இருந்தாலும், இது முழுமையான கீழ்ப்படிதல் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், அவன் குடும்பத்திலே ஒரு பகுதியையும் தன்னோடு கூட்டிக்கொண்டு வருகின்றான். அங்கே தேவன் அவரை அழைத்துக்கொண்டு வரவேண்டாம் என்று கூறியிருக்கிறார். அவனுடைய தேசத்தைவிட்டு, அவனுடைய உறவினரைவிட்டு, ஏன் வரவேண்டும் என்று தேவன் கூறினார். இதற்கான விடையை யோசுவாவின் புத்தகத்திலே நாம் பார்க்கிறோம். யோசுவா 24ஆம் அதிகாரம் 2ஆம் வசனத்தைப் பாருங்கள், "அப்பொழுது யோசுவா சகல ஜனங்களையும் நோக்கி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், பூர்வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிராமுக்கும், நாகோருக்கும், தகப்பனான தேராகு என்பவன் நதிக்கு அப்புறத்திலே குடியிருந்தபோது, அவர்கள் வேறே தேவர்களை சேவித்தார்கள்." ஆம், ஆபிரகாமும் ஒரு காலத்திலே விக்கிரக வணக்கம் செய்கிறவனாக இருந்தான். தேவன் மனுக்குலத்தை மீட்கும்படியாக இவ்வாறு செயல்பட துவங்கினார்.

ஆதியாகமம் 12 : 4

கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான். லோத்தும் அவனோடே கூட போனான். ஆபிராம், ஆரானை விட்டுப் புறப்பட்டபோது, 75 வயதுள்ளவனாயிருந்தான். தேவனுடைய கட்டளைக்குக் கீழ்படிந்து கானானை நோக்கிப் புறப்பட்டுப் போகிறான். ஆனால், லோத்தும் கூடச் செல்லுகிறான். இப்பொழுதும் முழுமையான கீழ்ப்படிதல் அங்கே இல்லை.

ஆதியாகமம் 12 : 5

ஆபிராம் தன் மனைவியாகிய சாராயையும், தன் சகோதரனுடைய குமாரனாகிய லோத்துதையும் தாங்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்தெல்லாவற்றையும் ஆரானிலேயும் சவதரித்த ஜனங்களையும் கூட்டிக்கொண்டு அவர்கள் கானான் தேசத்திற்குப் புறப்பட்டுப்போய், கானான் தேசத்தில் சேர்ந்தார்கள்.

ஆபிராம் தனது மனைவியாகிய சாராயை அழைத்துச் சென்றான். அது சரியானதுதான். ஆனால், தனது சகோதரனின் குமாரனாகிய லோத்தையும், அங்கே சவதரித்த ஜனங்கூட்டத்தையும் கொண்டு போகிறான். ஆரானிலே, ஆபிராம் தங்கியிருந்த காலங்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அவனைப் பிந்தச் செய்தது. மெசபத்தோமியாவிலே இருக்கும்பொழுது அவனுக்குத் தரிசனமான கர்த்தர், ஆரானிலே அவன் பின்தங்கி இருக்கும்பொழுது, காலத்தை தாழ்த்திக் கொண்டிருந்தபொழுது அவனோடு இடைபடவில்லை. அவனுக்குக் காட்சிக் கொடுக்கவில்லை. மீண்டுமாக லோத்துவையும் தன்னிடத்திலிருந்து அனுப்பிவிட்ட பின்னரே, தேவனை அவன் சந்திக்கிறான்.

ஆதியாகமம் 12 : 6

ஆபிராம் அந்த தேசத்திலே சுற்றித்திரிந்து சீகேம், என்னும் இடத்துக்குச் சமீபமான மோரே என்னும் சமபூமிமட்டும் வந்தான்; அக்காலத்திலே கானானியர் அத்தேசத்தில் இருந்தார்கள்.

www.Radio882.com

கானானியர் மோவாபின் குமாரனான காமின் மகனான கானானின் சந்ததி. மற்றும் ஒரு முக்கியமான குறிப்பை இங்கே நாம் பார்க்க வேண்டும். கல்தேயர் ஊர் என்னும் நாகரிகமற்ற ஒரு இடத்திலிருந்து பாலும் தேனும் ஓடுகிற ஒரு தேசத்திற்குப் புறப்பட்டுவந்தான் என்று நினைக்கிறார்கள். கானானுக்கு வந்தது, ஆபிராமுக்கு நல்லது என்று சிலர் யோசிக்கலாம். ஆனால், வேதம் நமக்கு அவ்வாறுச் சொல்லவில்லை. அகழ்வாராய்ச்சி நமக்குக் கற்றுக்கொடுப்பதும், கல்தேயரின் ஊர் என்னும் இடமானது கலாச்சாரத்திலே மிகவும் வளர்ச்சிப்பெற்ற ஒரு இடமாயிருந்திருக்கிறது. ஒருவேளை ஆபிராமும் சாராயும், தன் வீட்டிலே குளிப்பதற்கான ஒரு தொட்டியைக்கூட உடையவர்களாயிருந்திருக்கலாம். ஊர் என்பது பேறுபெற்ற செல்வச் செழிப்பு நிறைந்த ஒரு நகரம். அதையெல்லாம் விட்டுவிட்டுத்தான் கானானுக்கு ஆபிராம் வந்தார். அக்காலங்களிலே கானானியர்கள் அங்கே இருந்தார்கள். அவர்கள் கலாச்சார வளர்ச்சி பெறவில்லை. அவர்கள் காட்டுமிராண்டிக்களாகவும், தேவனை அறியாதவர்களாகவும் இருந்தார்கள். இந்த மக்களை முன்னேற்றுவிப்பதற்காக ஆபிராம் கானானுக்கு வரவில்லை. தேவனுடையக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஆபிராம் கானானுக்கு வந்தார்.

இரண்டாவது முறை கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமானபோது ஆபிராம் ஒரு பலிபீடத்தைக் கட்டினான். ஆனால் காலம் தாழ்த்துதல் என்று பொருள் தரும் ஆரானிலே அவன் தங்கியிருந்தபொழுது தேவன் அவனுக்குக் காட்சி கொடுக்கவில்லை. அருமையான சகோதரனே, சகோதரியே, நீங்களும் நானும் வேத்தை ஒழுங்காக வாசித்தாலும் பலமுறை அதன் மூலமாக தேவனுடைய சத்தத்தை நாம் கேட்க முடிகிறதில்லை. காரணம் என்ன தெரியுமா? ஏற்கெனவே தேவன் நமக்குக் கொடுத்த வெளிச்சத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்காததுதான். நாம் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது மேலும் மேலுமான ஆசீர்வாதத்தை அவர் நமக்குக் கொடுப்பார். ஆபிராமுடைய வாழ்க்கையின் அனுபவமும் இதுதான். ஆரானைவிட்டு அவன் புறப்பட்டு தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து செயல்படத் துவங்கும்வரை தேவன் அவனோடு பேசவில்லை. அவனுக்குத் தரிசனம் கொடுக்கவில்லை. அப்படி அவன் கீழ்படிந்து புறப்பட்டு வந்தபோது தேவன் அவனுக்குத் தரிசனமானார். அங்கே ஆபிராம் ஒரு பலிபீடத்தைக் கட்டினான். ஆபிராமை ஒரு பலிபீடம் கட்டும் மனிதனாக தொடர்ந்து நாம் பார்க்கப்போகிறோம்.

ஆதியாகமம் 12 : 8

தேவனுக்குக் கீழ்படிந்துப் புறப்பட்டுப்போன ஆபிராம் அங்கே போய்ச் சேர்ந்தபோது இரண்டு காரியங்களைச் செய்கிறான். முதலாவது ஒரு கூடாரத்தைப் போட்டுக்கொண்டான். இது எப்படியென்றால் புதிய ஒரு இடத்திற்குப்போய் ஒரு வீட்டை வாங்கி அதற்குள்ளே குடியிருப்பதைப்போல. அந்தக் கூடாரத்திலேதான் அவன் தங்கியிருந்தான். இரண்டாவதாக ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறான். அது தேவனுக்கு அவன் கொடுக்கும் ஒரு சாட்சி. எங்கெங்கு ஆபிராம் சென்றானோ, அங்கெல்லாம் அவனைப் பார்க்கும்பொழுது இவன் கர்த்தரைத் தொழுது கொள்கிறவன் என்று இவனைக் குறித்து மற்றவர்கள் அறிந்து கொள்வார்கள்.

அருமையான சகோதரனே, சகோதரியே, நீங்கள் தங்கியிருக்கும் தெருவிலே உங்களுடைய சாட்சி எப்படிப்பட்டதாயிருக்கிறது? சாட்சியாயிருக்கவேண்டும் என்பதற்காக வீட்டின்

முன்னால் ஒற்றைத்தாள் பிரதியை வைக்கவேண்டும் என்பதல்ல. இயேசு இரட்சிக்கிறார் என்று உங்கள் வாகனத்திலே ஒரு வசனம் எழுதினால்தான் சாட்சி என்பது அல்ல. சிலர் அப்படிப்பட்ட வாசகங்களை ஒட்டியே அரசாங்கத்தின் பாதை விதிகளை மீறி நடப்பார்கள். அது சாட்சி அல்ல. ஆபிராம் அமைதியாக தேவனைத் தொழுது கொண்டான். எனவே சுற்றியிருந்த கானானியர்களும் இவன் தேவனைத் தொழுதுகொள்ளுகிற மனிதன் என்பதை அறிந்து கொண்டார்கள். நம்முடைய வீடுகளிலே பாடல்களைப் பாடி, குடும்ப ஜெபம் செய்யும்போது தெருவிலே செல்கிறவர்கள் இவர்கள் கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் என்பதை அறிந்து கொள்ள முடியும். நம்முடைய வீட்டைக் கடந்து யாராவது சென்றால் உள்ளேயிருந்து வருகிற பாடல் சத்தம் எதுவாயிருக்கிறது? தெருவிலே நம்முடைய உறவுகள் சாட்சியுள்ளதாயிருக்கிறதா?

ஆதியாகமம் 12 : 9

ஆதியாகமம் 12ஆம் அதிகாரம் 1ஆம் வசனம் முதல் 9ஆம் வசனம் வரை மிக அழகான பகுதி என்று சொல்லலாம். ஆனால் 10ஆம் வசனம் முதல் 20ஆம் வசனம் வரை ஒரு துக்கமான பகுதிக்குள்ளே நாம் கடந்து செல்கிறோம். தேவன் வாக்குத்தத்தம் பண்ணின கானான் தேசத்திலே ஆபிராம் தங்கியிருந்தபொழுது அது ஒரு ஆசீர்வாதமான தேசம். அங்கேயிருந்து அவனை புறப்பட்டுப் போகும்படி தேவன் சொல்லவில்லை. ஆனால் அந்த தேசத்திலே ஒரு பஞ்சம் உண்டாயிற்று. ஒரு நாள் காலையிலே அவன் விழித்து தன்னுடைய கூடாரத்தின் திரையை விலக்கி வெளியே எட்டிப்பார்த்தபோது அநேகர் எகிப்தை நோக்கிப் புறப்பட்டுப் போய்க்கொண்டு இருந்திருக்கலாம். அவர்களைப் பார்த்த ஆபிராம் சாராயைப் பார்த்து, 'சாராய் எல்லாரும் எகிப்திற்குப் போகிறார்கள்: இங்கே நமக்குப் பஞ்சமாயிருக்கிறது. வர வர பஞ்சம் கொடிதாகிறது. நாமும் எகிப்திற்குப் போவதைக் குறித்து சிந்திக்க வேண்டும்' என்று கூறியிருக்கலாம். அதற்குப் பதிலாக சாராயும், "ஆபிராம் நீங்கள் என்னுடைய கணவர். நீங்கள் எதை செய்ய விரும்புகிறீர்களோ நான் உங்கள் மனைவியாக உங்களோடு வருகிறேன்" என்று தான் அவள் கூறியிருந்திருக்க வேண்டும்.

ஒருவேளை வட பகுதியிலிருந்து ஆபிராம் தங்கியிருந்த இடத்தைத் தாண்டி செல்லும் அநேகரை ஆபிராம் சந்தித்திருக்கலாம். வடக்கே பஞ்சம் கொஞ்சம் கொடிதாயிருக்கிறது. அது கொஞ்சம் கொஞ்சமாக தெற்குபக்கம் வருகிறது என்பதைக் கேள்விப்பட்டிருக்கலாம். இப்படிப்பட்ட வேளையிலேதான் எகிப்திற்குச் செல்ல வேண்டும் என்று ஆபிராம் தீர்மானம் செய்தான்.

இந்த இடத்திலே ஒரு காரியத்தை கவனிக்க வேண்டும். அவன் இவ்வாறு புறப்பட்டுப் போகப் வேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொல்லவில்லை. கடந்த முறை தேவன் அவன் தரிசனத்திலே அவனை சந்தித்தபோது அவனிடத்திலே என்ன சொன்னார், ஞாபகம் இருக்கிறதா? 7ஆம் வசனத்திலே, "உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன்" என்றார். அது மட்டுமல்ல நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து உன் பெயரை பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாயிருப்பாய் என்று கூறியிருந்தார். ஆனால் ஆபிராம் தேவனை இப்பொழுது விசுவாசிக்கவில்லை.

ஆதியாகமம் 12 : 10

வேதப் புத்தகத்திலே நாம் பார்க்கிறதுபோல எகிப்து என்பது உலகத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஆபிராம் எகிப்திற்குப் புறப்பட்டுப் போனான். அருமையானவர்களே,

இன்றைய உலகமும் கிறிஸ்தவர்களை எப்படி கவர்ந்து இழுக்கிறது என்பது ஆச்சரியமானதாயிருக்கிறது. அநேகர் இப்படிப்பட்ட காரியங்களுக்கும் விளக்கம் அளிக்கிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது என்ன? “ஐயா, ஞாயிற்றுக்கிழமை மாலையிலே ஆராதனைக்கு வர முடியாது. ஏனென்றால் திங்கள்கிழமை காலையிலேயே எழும்பி நான் வேலைக்குச் செல்ல வேண்டும்.” எல்லாரும்தான் திங்கள்கிழமை காலையிலே வேலைக்குச் செல்லவேண்டும். ஆனால் இப்படி கூறுகிற சிலர் வாரத்து நாட்களிலே மாலையிலே ஒரு கல்யாண வீட்டிற்கோ, விருந்திற்கோ சென்றுவிட்டு அல்லது வெகுநேரம் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு அல்லது விழித்திருந்து தேவையில்லாத காரியங்களை மணிக்கணக்காகப் பேசிவிட்டு நித்திரைக்குச் செல்கிறார்கள். அப்படிப்பட்ட வேளையிலே காலையிலே எழுந்து வேலைக்குப் போகவேண்டும் என்பதைக் குறித்து அவர்கள் யோசிக்கிறதில்லை.

ஆம் அருமையானவர்களே, இன்றைக்கு உலகமானது கிறிஸ்தவர்களை அதிகமாக கவர்ந்திழுக்கிறது. அவர்களும், அதற்கு ஒத்துப்போய் கிறிஸ்துவுக்குச் சாக்குப்போக்கு சொல்கிறவர்களாக இருக்கிறார்கள். ஒருவேளை எகிப்தை நோக்கிப் போகிற ஆபிராமைப் பார்த்து, பேசி கொஞ்சம் பொறுங்கள் ஆபிராம். நீங்கள் தவறான திசையிலே போய்க்கொண்டு இருக்கிறீர்கள். நீங்கள் இந்த தேசத்திலே அல்லவா தங்கியிருக்க வேண்டும்? என்று கேட்பீர்கள் என்றால் ஒரு சரியான காரணத்தையே ஆபிராம் கூறியிருப்பார். என்ன சொல்லியிருப்பார் என்று நினைக்கிறீர்கள். “சகோதரனே, பாருங்கள். என்னுடைய ஆடுகள் எல்லாம் மெலிந்து கொண்டு போகின்றன. இங்கே அவைகள் மேய்வதற்கான நல்ல புல்வெளிகள் இல்லை. எகிப்திலே அதற்குச் செழிப்பான புல்வெளிகள் இருக்கின்றன. எனவே நாங்கள் அங்கு போகிறோம்” என்று சொல்லியிருப்பார். ஆம் எகிப்திற்குத்தான் அவர்கள் புறப்பட்டுப்போனார்கள்.

கர்த்தர் ஆபிராமிடத்திலே இந்த தேசம் உனக்கும் உன் சந்ததிக்கும் என்று கூறினாரே அப்படியென்றால் இப்பொழுது கர்த்தர் என்னை கைவிட்டுவிட்டாரா? கடவுள் கொடுத்த வாக்கு உண்மை என்றால், இப்போது இப்படி நடக்குமா? உண்மையிலேயே நான் தேவ சித்தத்திற்கு அடியிலேதான் இருக்கிறேன் என்றால் இப்படியிருப்பேனா? கானான் தேசத்திலேயும் பஞ்சம் வருமா என்று அவன் எண்ணியிருக்க வேண்டும். ஆபிராம் எகிப்திற்குப் போவதற்கு சாராய் ஒத்துக்கொண்டாள். ஆனால் தேவன் அதை ஒத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இங்கே ஏசாயா 31 : 1ஐ நாம் பார்க்க வேண்டும்.

சகாயமடையும்படி இஸ்ரவேலருடைய பரிசுத்தரை நோக்காமலும், கர்த்தரைத் தேடாமலும், எகிப்துக்குப்போய், குதிரைகள் மேல் நம்பிக்கைவைத்து, இரதங்கள் அநேகமாயிருப்பதினால் அவைகளை நாடி, குதிரைவீரர் மகா பெலசாலிகளாயிருப்பதினால் அவர்களை நம்பிக்கொண்டிருக்கிறவர்களுக்கு ஐயோ!

அருமையான சகோதரனே, கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை அறிந்த பின்னரும் நீங்கள் கர்த்தர் மேல் நம்பிக்கை வைக்காமல் உலகம் உங்களுக்கு உதவி செய்யும் என்று நீங்கள் நம்பிக்கொண்டு இருக்கிறீர்களா? விசுவாச வாழ்க்கைக்கு வந்த பின்னரும், ஒருவேளை முழு

நேர ஊழியத்திற்கு வந்த பின்னரும் கையிலே பணம் இல்லாமல் போகலாம். ஆனால் அதற்காக அவிசுவாசிகளிடம் நாம் போகலாமா? அவர்கள் ஐசுவரியவான்களாக இருந்தாலும் அப்படி நாம் போவது சரியல்ல. ஊழியத்திற்கும் பொருளாதாரம் தேவைதான். விசுவாச குடும்பத்தினர்தான் அவர்களைத் தாங்க வேண்டும். கர்த்தருடைய ஊழியத்திற்காக அவிசுவாசிகளை நாடித்தேடி போவது சரியல்ல. இப்படி ஒரு தவறு செய்த ஆபிராம் அதைத் தொடர்ந்து அடுத்த தவற்றுக்குள்ளேயும் கடந்து செல்கிறான்.

ஆதியாகமம் 12 : 11, 12

அருமையானவர்களே, கடந்த நூற்றாண்டிலே சவக்கடலுக்கு அருகிலே சற்று உயரமான இடத்திலே இருந்த சில குகைகளிலே பானையினுள் வைக்கப்பட்ட பழங்கால சுருள்கள் கண்டெடுக்கப்பட்டன. ஆடு மேய்க்கப்போன ஒரு சிறுவன் அங்கிருந்த உயரமான குகைகளுக்குள்ளே தூர இருந்து கல் எறிந்த பொழுது ஒரு குகைக்குள்ளே இருந்த கல் பானையை உடைத்தது போன்ற சத்தத்தைக் கேட்டபடியனாலே அங்கே ஏறிப்போய் அந்த சுருள்கள் கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றைக் கண்டவுடன், வேதத்திற்குப் புறம்பாக ஆராய்ச்சி செய்கிறவர்கள் வேத வசனத்திற்கு எதிராக சில தடயங்களைக் கண்டுபிடித்ததாக நினைத்தார்கள். ஆனால் அதற்கு மாறாக வேத வசனங்களை உறுதிப்படுத்தும் எழுத்துக்களையே அவர்கள் கண்டார்கள். அவற்றுள் ஒன்றிலே ஆதியாகமம் 12, 13, 14, 15ஆம் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. குறிப்பாக அது இந்த நான்கு அதிகாரங்களின் விளக்கவுரையாக அமைந்திருந்தது. அதிலும் ஆபிராமின் மனைவியாகிய சாராயின் அழகு மிக விவரமாக எழுதப்பட்டிருந்தது.

எனவே இந்த வேத வசனங்கள் எல்லாம் உண்மை என்பதை மற்றும் ஒரு முறை அது உறுதி செய்கிறதாகவே இருந்தது. அதுமட்டுமல்ல தேவன் ஆபிரகாமினிடத்திலே ஆதியாகமம் 13 : 17ஆம் வசனத்திலே சொல்லியதுபோல "நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ அம்மட்டும் நடந்து திரி, அதை உனக்குத் தருவேன்" என்று கூறிய வசனத்தின் விளக்கமும் கொடுக்கப்பட்டு இருந்தது. அதிலே இந்த கானான் தேசமானது எவ்வளவு செழிப்பானதாக இருந்தது என்பது விவரிக்கப்பட்டு இருக்கிறது. அவ்வப்பொழுது பஞ்சம் வந்தாலும் அந்த தேசம் செழிப்பானதாகவே இருந்திருக்கிறது. ஆனால் அங்கிருந்து புறப்பட்டு எகிப்து நோக்கிச்சென்ற ஆபிரகாம் ஒரு பிரச்சனையை உள்ளத்திலே உணருகிறான்.

ஆதியாகமம் 12 : 13

அருமையானவர்களே, இது ஒரு பாதிப்பொய் என்று சொல்லலாம். பாதிப்பொய் என்பது பல சமயங்களிலே முழுப்பொய்யை விடவும் பயங்கரமானதாக இருக்கிறது. இது கூறப்பட்டதின் நோக்கம் மற்றவர்களை ஏமாற்றுவதற்காக, ஆபிரகாமுக்கு இருந்த பயம் உண்மையானதுதான். ஏனென்றால் சாராயினுடைய அழகின் நிமித்தமாக பார்வோன் அவளை எடுத்துக்கொண்டான்.

நாம் எஸ்தரின் புத்தகத்திலே வாசிக்கிறதுபோல தேசத்தில் அழகான பெண்ணை பொதுவாக அந்த தேசத்தை ஆளும் அரசன் எடுத்துக்கொள்வது வழக்கமாக இருந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, அப்படி மனைவியாக்கிக்கொள்ளும் முன்பாக ஆயத்த நாட்கள்

கொடுக்கப்பட்டிருந்தது. அப்படி சாராய் அந்த பார்வோனுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டுக் கொண்டிருந்த நாட்களிலேதான் கர்த்தர் பார்வோனையும் அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார்.

ஆதியாகமம் 12 : 18 – 20

அப்பொழுது பார்வோன் ஆபிராமை அழைத்து, "நீ எனக்கு ஏன் இப்படி செய்தாய்? இவள் உன் மனைவி என்று நீ எனக்கு அறிவியாமல் போனதென்ன? இவளை உன் சகோதரி என்று நீ சொல்லவேண்டியது என்ன? இவளை நான் எனக்கு மனைவியாக்கிக் கொண்டிருப்பேனே. இதோ உன் மனைவி. இவளை அழைத்துக் கொண்டுபோ" என்று சொன்னான். பார்வோன் அவனைக் குறித்து தன் மனுஷருக்குக் கட்டளை கொடுத்தான். அவர்களால் அவனையும் அவன் மனைவியையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அனுப்பிவிட்டார்கள்.

அருமையான சகோதரனே, சகோதரியே, இந்த இடத்திலே கவனித்தீர்களா? தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக நின்று செயல்பட ஆரம்பிக்கிறார். ஆனாலும் எகிப்திலே இருந்த நாட்களிலே தேவன் அவனுக்கு தரிசனம் அருளவில்லை. ஆண்டவருக்குப் பிரியம் இல்லாத காரியங்களை நாம் செய்துவரும் நாட்களிலே, நம்மோடு கூட அவர் வசனத்தின் மூலமாகவும் பேசப்போவதில்லை. என்றாலும் நம் இஷ்டம்போல அவர் நம்மை விட்டுவிடாமல் அவர் நம்மை அவருடைய பிள்ளையாக தெரிந்தெடுத்ததின் நிமித்தமாக, சூழ்நிலைகளுக்கு மேலாக கிரியை செய்து நம்மைத் தப்புவிக்கிறவராயுமிருக்கிறார். அதற்காக நாம் கிருபையை அலட்சியம் செய்யவேண்டும் என்பதல்ல. கிருபையை உணர்ந்து மனம் திரும்பவே நம்மை அழைக்கிறார்.

ஆதியாகமம் 13

இங்கே ஆபிராம் எகிப்தை விட்டு மீண்டுமாக லோத்துவோடு கூட சேர்ந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமிக்கு வருகிறான். இந்த அதிகாரத்திலே நாம் பார்க்கிறதுபோல லோத்து ஆபிராமை விட்டுப் பிரிந்து சோதோம் கொமோராவிற்கு நேராகப் போய்விட்டான். அப்பொழுது தேவன் ஆபிராமுக்கு மூன்றுமுறை தரிசனமாகிறார். ஆபிராம் எகிப்து தேசத்தில் இருக்கும்பொழுதும், லோத்துவை தன்னோடே வைத்துக்கொண்டு இருந்தபொழுதும், தேவன் அவனுக்குத் தரிசனமாகவில்லை. எகிப்து தேசத்தைவிட்டு கானானுக்குள்ளே வந்தபிறகு, லோத்துவையும், அவனைவிட்டு அகற்றிவிட்டபிறகு தேவன் அவனுக்குத் தரிசனமாகிறார்.

அருமையான சகோதரனே, சகோதரியே, அவருடைய பிள்ளைகள், தனித்து அவரிடத்திலே வரும்பொழுதே அவர் அநேகக் காரியங்களைக் கற்றுக்கொடுக்கிறவராய் இருக்கிறார். அவர் அழைக்காத இடத்திற்கு நாம் செல்லும்போது, நம்முடைய ஐக்கியம் உலகப் பொருட்கள் மேலே ஆசை வைத்திருக்கிறவர்களுடன் இருக்கும்பொழுது, தேவன் நமக்குக் காட்சி கொடுக்கிறதில்லை. நம்மோடு பேசுகிறதில்லை. அங்கே நடப்பது என்ன?

ஆதியாகமம் 13 : 1, 2

இந்த வசனங்களிலே நாம் பார்க்கிறதுபோல ஆபிராம் அந்நாட்களிலே மிகவும் செல்வ செழிப்பு பெற்ற ஒரு மனிதனாயிருந்தான்.

ஆதியாகமம் 13 : 3, 4

இங்கே வாசிப்பதுபோல ஆபிராம் எருசலேமுக்கும் வடக்காகக் கடந்து சென்றுவிட்டான். எகிப்திலிருந்து கானானின் தென் பகுதிக்குள்ளே நுழைந்து எருசலேமையும் தாண்டி பெத்தேலுக்கு அருகிலே வந்துவிட்டான். ஆபிராம் இடறி விழுந்த ஒரு மனிதனாக இருந்தாலும் மீண்டுமாக தேவனிடத்திலே திரும்பி விட்டான். மனம்போல் சென்ற மைந்தனாக இருந்தாலும் சரி அநேக தூரம் சென்ற ஆபிரகாமுக்கானாலும் சரி திரும்பி வந்து தேவனோடு தொடர்புகொள்ள ஒரு பலிபீடம் ஆயத்தமாய் இருக்கிறது.

இந்நாட்களிலும் எந்த ஒரு சகோதரனோ, சகோதரியோ தேவனைவிட்டு பின்வாங்கிப் போனாலும் கிருபையின் காலத்தில் இருக்கிற நாம் ஆண்டவர் பக்கமாக மீண்டும் மனம் திரும்ப முடியும். அருமையான சகோதரனே, சகோதரியே, நீங்கள் தேவனோடு நடக்கிறவர்களாக இருக்கிறீர்களா? அல்லது ஏதோ ஒரு காரியத்திலே என்றோ ஒரு நாள் பின்வாங்கிப்போனதினாலே சோர்வோடும் துக்கத்தோடும் தேவனைவிட்டுத் தூரமாயிருக்கிறேன் என்று மட்டும் எண்ணிக் கொண்டு இருக்கிறீர்களா? பிதாவாகிய தேவனுடைய கரம் எப்பொழுதும் விரிக்கப்பட்டதாக, உங்களை அரவணைக்க ஆயத்தமானதாக இருக்கிறது. நீங்கள் மனம் வைத்தால் மீண்டுமாக அவரண்டை திரும்பிச் செல்லலாம். அதற்கு ஒரு நாளும் ஒரு நேரமும் வரவேண்டும் என்றல்ல. இன்றே இப்பொழுதே உங்கள் தவறுகளைக் குறித்து பாவங்களைக் குறித்து மனஸ்தாபப்பட்டு மன்னிப்புக்கேட்டு அவரண்டையிலே கிட்டிச் சேரலாம்.

ஆதியாகமம் 13 : 5

எகிப்திலிருந்த காலங்களிலேயும், லோத்து சிறப்பாகவே செயல்பட்டு அதிகமான ஆடுமாடுகளைப் பெற்றவனாயிருந்திருந்தான்.

ஆதியாகமம் 13 : 6, 7

தேவனுடைய வார்த்தை நம்மோடு பேச நாம் அனுமதி கொடுப்போமென்றால் அது மிக அற்புதமானதாக இருக்கும். அருமையானவர்களே, இந்த இடத்தில் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். எகிப்திற்குப் போன ஆபிராம் அவனுக்கு அதிகமான துக்கத்தை உண்டுபண்ணக்கூடிய இரண்டு காரியங்களை அங்கே பெற்றுக்கொண்டு விட்டான். ஒன்று அதிகமான செல்வம். அடுத்தது ஆகார் என்னும் பெயருள்ள ஒரு அடிமைப்பெண். அவளைக் குறித்து இன்னும் பின்னாலே அதிகமாகப் பார்க்கப்போகிறோம். இங்கே அவனுக்கு இருந்த செல்வச்செழிப்பு எப்படி பிரச்சனை உண்டுபண்ணியது என்று பார்க்கிறோம். இரண்டு பேருடைய ஆஸ்தியும் மிகுதியாயிருந்தபடியாலே அவர்கள் ஒருமித்து வாசம் பண்ண ஏதுவில்லாமல் போயிற்று என்று வாசிக்கிறோம். அதுமட்டுமல்ல 7ஆம் வசனத்தின் கடைசியிலே கானானியரும், பெரிசியரும் அத்தேசத்திலே குடியிருந்தார்கள் என்று வாசிக்கிறோம். ஆபிராமுடைய மந்தை மேய்ப்பருக்கும், லோத்துவினுடைய மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாகிறது. எனவே இறுதியாக ஆபிராமுக்கும், லோத்துவிற்கும் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. ஒருவேளை அங்கிருந்த கானானியர்கள் பெரிசியரிடத்திலே பார்த்தீர்களா? அவர்கள் இரண்டு பேரும் சண்டையிடுகிறார்கள் என்று அவரைக் குறித்து பேசியிருக்கலாம். அதுமட்டுமல்ல, ஆபிராம்

www.Radio882.com

கானானுக்குள்ளே வந்து தேவனுக்கு பலிபீடத்தைக் கட்டித் தொழுதுகொண்டபோது அவனைக் குறித்து அவர்கள் உயர்வாக எண்ணியிருந்தார்கள். எவ்வளவு அருமையான மனிதன்! எவ்வளவு உண்மையான மனிதன்! எப்படிக் கடவுளைத் தேடுகிறான் என்று பேசியிருப்பார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் குடும்பத்திற்குள்ளே எவ்வளவு புகைச்சல் என்று பேசியிருப்பார்கள். ஏனென்றால் ஆபிராமும் லோத்துவும் அவ்வளவு பெரிய செல்வச்செழிப்பு வாய்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்களுடைய குடியிருப்பு மற்றவர்களுடைய கண்களை நிச்சயமாகவே உருத்துகிறதாயிருந்திருக்கும்.

அருமையான சகோதரனே, சகோதரியே, இன்றும் பல பட்டணங்களிலே வெவ்வேறு திருச்சபைகளுக்கிடையே போட்டிகளும், பொறாமைகளும், சண்டைகளும், பகைகளும் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். ஏன் தனி ஒரு சபைக்குள்ளே இத்தனை போட்டிகள் பொறாமைகள்? இது கர்த்தரை அறியாத மக்களுக்கு இடையூராக காணப்படுகிறது என்பதை நாம் மறந்துபோகக்கூடாது. இதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை என்றால் எனக்கு அது வேண்டாம் என்றுதான் கூறுவார்களே ஒழிய இயேசுவைக் குறித்து நாம் அவர்களுக்குப் பிரசங்கித்தாலும் அவர்கள் ஏற்றுக்கொள்ள மனம் வராது. இயேசு கிறிஸ்து என்ன சொன்னார்? ஞாபகம் இருக்கிறதா? யோவான் 13 : 35 : "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள் என்றார்."

அருமையான, சகோதரனே, சகோதரியே, நம்முடைய திருச்சபையிலே அன்பும் ஐக்கியமும் உண்டாவதற்கு நாம் காரணர்களாயிருக்கிறோமா? அல்லது பகையும், போட்டியும், பொறாமையும், சண்டை சச்சரவுகளும் உருவாகுவதற்கு நாம் காரணமாயிருக்கிறோமா? சற்றே எண்ணிப் பார்ப்போம். அவருடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிறவர்கள் ஒருவரோடு ஒருவர் ஐக்கியமுள்ளவர்களாக, அன்புள்ளவர்களாக இருக்கவே ஆண்டவர் எதிர்பார்க்கிறார். அப்படியிருக்கும்பொழுது மற்றவர்கள் அவரை விசுவாசிக்க முன்வருவார்கள். இயேசு கிறிஸ்து ஜெபித்த ஜெபம் ஒன்றை யோவான் 17ல் வாசிக்கிறோம். அதில் 21ஆம் வசனத்திலேயும் அவர் இவ்வண்ணமாய் அவர் ஜெபிக்கிறார், “அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும் பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிப்பதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்” என்று ஜெபிக்கிறார். அப்படியென்றால் திருச்சபையிலேயும், விசுவாசிகளின் மத்தியிலேயும், ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பங்களிலேயும், அன்பும் ஒற்றுமையும் ஐக்கியமும் எவ்வாறு முக்கியமானது என்பதை உணருகிறீர்களா? நம்மைச் சுற்றியிருக்கிற கர்த்தரை அறியாதவர்களுக்கு நாம் முன்மாதிரியாயிருக்கிறோமா? அல்லது கர்த்தரை அவர்கள் அறிந்துகொள்வதற்கு நாம் இடையூராக இருக்கிறோமா?

ஒரு குடும்பத்திலே ஒரு கணவனும் மனைவியும் இருந்தார்கள் மனைவியுடைய சகோதரியும் அவர்களோடு வாழும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இந்த இரண்டு சகோதரிகளும், வெவ்வேறு திருச்சபைகளைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொருமுறை சாப்பிட உட்காரும்பொழுதும் தங்கள் தங்கள் சபைகளைக் குறித்தக் காரியங்களை அவர்கள் பேசுவார்கள். ஒரு சகோதரியின்

www.Radio882.com

கணவர் அவர்களோடு வாழ்ந்தபடியினாலே அவர் இவர்கள் சண்டைகளைக் கவனித்துக் கொண்டு இருப்பார். அவருடைய மனைவி எவ்வளவோ கூறியபிறகும் அவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தன்னுடைய வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கவில்லை. மாறாக மத்தியானத்திலே வெளியே போய்விட்டு இரவிலே வரும்போது குடித்தவராக வருவார். காரணம் என்ன? இந்த இரண்டு சகோதரிகளும் ஒருவரோடொருவர் அன்புள்ளவர்களாக இணைந்து கர்த்தரின் நாமத்திற்கு மகிமையாக சாட்சியாக வாழ்வதற்கு பதிலாக சண்டையிட்டுக் கொண்டே இருந்தனர். கர்த்தரை அறிந்திருக்கிறேன் என்று சொல்கிற நீங்களும் இன்னொருவர் கர்த்தரை விசுவாசிப்பதற்கு இடையூராக இருக்கிறீர்களா?

ஆதியாகமம் 13 : 8, 9

இங்கே நாம் வாசிக்கிறதுபோல ஆபிராம்தான் அந்த பிரிவை உண்டுபண்ணுகிறான். இப்படிப்போனால்தான் பிரச்சனை வராது என்பதைக் குறித்து ஒரு பெரிய மனிதன் லோத்திற்குச் சொல்லவேண்டியிருந்தது. அதுமட்டுமல்ல ஆபிராம் லோத்தைப் பார்த்து, நீ முதலாவது எதைத் தெரிந்துகொள்கிறாயோ அங்கே செல். நீ விட்டுவிடுவதை நான் தெரிந்துகொள்கிறேன் என்று மனமுவந்து சொல்லுகிறான். இங்கே ஆபிரகாமுடைய விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மையைக் குறித்து நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட குணம் நம்மிலே எத்தனை பேருக்கு இருக்கிறது? எப்போதும் எனக்கு, என்னுடைய குடும்பத்திற்கு என்று தெரிந்து கொள்ளும் சமுதாயத்திலே வாழ்கிற நாம் மற்றவர்களோடு காரியங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டிய நேரம் வரும்பொழுது மற்றவர்கள் சிறப்பான காரியங்களை முதலாவது தெரிந்துகொள்ள அனுமதிக்கும் மனபக்குவம் நமக்கு உண்டா? அல்லது அதிகாரம் நமக்கு இருப்பதினாலே, வயதிலே மூத்திருப்பதினாலே சிறந்த காரியங்களை முதலாவது நாம் தெரிந்துகொண்டு குறைவான காரியங்களை மற்றவர்களுக்கு நாம் கொடுக்கிறோமா? இந்த பெருந்தன்மை இல்லாததினாலேதான் இன்று அநேகக் குடும்பங்களிலே சண்டைகளும் சச்சரவுகளும், வழக்கு மன்றங்களிலே வழக்குகளும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

ஆதியாகமம் 13 : 10

நாம் வாசித்த இந்த வசனத்தின்படி அந்த நாட்களிலே சோதோம், கொமோரா பட்டணங்கள் இருந்த பகுதியானது மிகவும் செழிப்பானதாகவும், அழகு நிறைந்ததாகவும் காணப்பட்டது. எனவே தூரத்திலிருந்து அதை நோக்கிப் பார்த்த லோத்து அங்கே செல்லவேண்டும் என்று அதைத் தெரிந்து கொண்டு புறப்பட்டுப்போக ஆயத்தமாகிறான்.

ஆதியாகமம் 13 : 11 – 12

அருமையாளவர்களே, இது மிகவும் ஆர்வம் தரக்கூடிய ஒரு பகுதி. ஆபிராமோடு இருந்த நாட்களிலே ஒருவேளை அதிகாலை வேளைகளிலே, லோத்து கூடாரத்தை விட்டு சற்றே வெளியே வந்து தனது மனைவியைப் பார்த்து "அதோ, தூரத்திலே பார்த்தாயா? அந்த இடம் எவ்வளவு அழகானதாய் இருக்கிறது?" என்று கூறியிருப்பான். எல்லாம் எப்பொழும் பச்சைப்பசேல் என்று இருக்கிறதே, என்று சிந்தித்திருப்பான். ஒரு தீர்மானம் எடுத்து லோத்து பிரிந்து செல்லவேண்டிய வேளை வந்தபொழுது, அவன் எந்தத் திசையைத் தெரிந்து

கொண்டான் தெரியுமா? எந்த ஒரு மனிதனும் திடீரென்று விழுந்துபோவதில்லை. சில காலமாகவே அதைக் குறித்ததான எண்ணம் அவனுடைய உள்ளத்திலே வந்து, திட்டங்கள் தீட்டிய பின்னர்தான் அவன் விழுந்து போகிறான்.

முதலாவதாக, அவன் தனது கூடாரத்தின் திரையை விலக்கிப் பார்த்து, அதிகாலையிலேயே அது எவ்வளவு அழகான இடம் என்று சிந்தித்திருக்கலாம். தொடர்ந்து நடந்தது என்ன? 12ஆம் வசனத்தின் இறுதியிலே நாம் பார்க்கிறது போல, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான். அருமையானவர்களே அதுதான் ஆரம்பம்.

லோத்து கண்களை ஏறெடுத்துப் பார்த்தான். யோர்தானுக்கு அருகான சமபூமியிலே வாசம் பண்ணினான். பின்னர் சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான். லோத்துவின் வாழ்க்கையிலே அவன் செய்த பெரிய தவறு இதுதான். ஆனால் லோத்து அறிந்து கொள்ளாத ஒரு காரியம் இருந்தது. அது என்ன தெரியுமா?

ஆதியாகமம் 13 : 13

தொடர்ந்து நாம் படிக்கப் போகிற பகுதியிலே லோத்துவிற்கும் அவன் மனைவிக்கும், குடும்பத்திற்கும் என்ன நடந்தது என்பதைக் குறித்து சிந்திக்கப்போகிறோம்.

ஆதியாகமம் 13: 14

லோத்து ஆபிராமை விட்டு கடந்து சென்ற பின்னர், தேவன் மூன்றாவது முறையாக இங்கே ஆபிராமுக்குத் தரிசனமாகிறார். இங்கு கர்த்தர் ஆபிராமைப் பார்த்து என்ன சொல்கிறார்? ஆபிராமே உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். இதுதான் கர்த்தர் ஆபிராமுக்குக் கொடுக்கப்போகிற தேசம். தொடர்ந்து ஆபிராமுக்குக் கர்த்தர் காட்சியளிக்கும்பொழுதும், பின்னான காலங்களிலே ஆபிராமின் சந்ததியினருக்கு அவர் காட்சி கொடுக்கும்பொழுதும் தேவன் வாக்குக் கொடுத்த இந்த தேசத்திற்கு சுற்றி வேலி போட்டார் என்று சொல்லலாம். தேவன் ஆபிராமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் கொடுக்கப்போகிற தேசத்தைக் குறித்து, குறிப்பாகத் தெளிவாகக் கூறிவிட்டார்.

அருமையான சகோதரனே, சகோதரியே, இந்த இடத்திலே மற்றுமொரு காரியத்தையும் நாம் சிந்திக்க வேண்டும். ஆபிராமுக்கு இந்த தேசத்தை வாக்கு பண்ணினது போல நம் ஒவ்வொருவருக்கும் அவர் ஒரு ஸ்தலத்தை வாக்குப் பண்ணியிருக்கிறார். அதுவும் உண்மையான ஒரு இடம், எங்கோ இருக்கப்போகும் ஒரு அழகான இடம் என்று சொல்ல முடியாது; கர்த்தருடைய வார்த்தை கூறுகிறதுபோல அது நிச்சயமாக ஒரு குறிப்பிட்ட அழகான இடம். வெளிப்படுத்தின விசேஷத்திலே தேவன் அதைக் குறித்து மிகத் தெளிவாகச் சொல்கிறார். அதைச் சுற்றி ஒரு வேலியை அவர் நியமித்திருக்கிறார். எனவே நாம் ஒன்றைத் தெளிவாக அறிந்து கொள்ளமுடியும். ஏதோ எழுத்து வடிவத்திலுள்ள காரியங்களைக் குறித்து கர்த்தர் சொல்லவில்லை, உண்மையான காரியத்தைக் குறித்து உண்மையாகவே ஒரு இடத்தைக் குறித்துச் சொல்கிறார் என்பதை அறிந்து கொள்ளலாம்.

ஆதியாகமம் 13 : 15 –16

ஆபிராமுக்காகக் கர்த்தர் செய்கிற காரியத்தைக் கவனித்தீர்களா? அந்த தேசத்திற்கு பெயர்ப்பலகை வைத்து இதுதான் ஆபிராம், இது உன்னுடைய இடம் என்று சொல்கிறார்.

www.Radio882.com

அதுமட்டுமல்ல ஆபிராமுக்குக் கிடைக்கப்போகிற ஒரு பெரிய சந்ததியைக் குறித்தும் அவர் சொல்கிறார். அதை எண்ணமுடியாது என்றும் சொல்கிறார்.

ஆதியாகமம் 13 : 17

சவக்கடலின் அருகே கண்டெடுக்கப்பட்ட சுருள்களிலே ஒன்று ஆபிராமே அதைக்குறித்துச் சொல்வது போல எழுதப்பட்டிருக்கிறது. அந்த நாட்களிலே அந்த தேசம் அவ்வளவு அழகான ஒரு இடமாய் இருந்திருக்கிறது.

ஆதியாகமம் 13 : 18

மனிதன் சந்திர மண்டலத்திலே தனது காலடிகளைப் பதித்தான். ஒரு சிறியக் கொடியைப் பறக்கவிட்டு, அதிலே நாங்கள் சமாதானத்துடன் வந்தோம் என்று எழுதப்பட்டு இருந்தது. அங்கே அவர்கள் ஒரு கர்த்தருடைய வார்த்தையை வைத்துவிட்டு வரவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது? ஆபிராமுடைய எண்ணத்திற்கும், இன்று நாம் வாழ்கிற காலத்திலே வாழும் மனிதனுடைய எண்ணத்திற்கும் உள்ள வேறுபாடு தெரிகிறது.

அருமையானவர்களே, ஆபிராமுக்கு முக்கியமானது கர்த்தருக்கென்று அவன் கட்டிய பலிபீடம். ஆம், அதைத்தான் அவன் கட்டினான். சரி மம்ரேயின் சமபூமியிலே அவன் சேர்ந்து குடியிருந்தான் என்று வாசிக்கிறோம். மம்ரே என்பதற்கு செல்வச்செழிப்பு என்று ஒரு பொருளுண்டு. எபிரோன் என்பதற்கு தொடர்பு என்று பொருளாகும். அது வசிப்பதற்கு ஒரு அருமையான இடம். இன்றும் அந்த இடத்திலே ஆபிராம் வசித்த இடத்திற்கு அருகிலுள்ள மரம் என்றும், அவனுடைய கிணறு என்றும் கூறப்படும் இடங்களைப் பார்க்கக் கூடியதாய் இருக்கிறது. இவை எபிரோனுக்கும் மம்ரேய்க்கும் மத்தியிலே இருக்கிறது. அங்குதான் ஆபிராம் வசித்து வந்தான். செல்வச் செழிப்பான இடம் தேவனோடு கூட நல்ல தொடர்பு கொண்டிருந்த ஒரு இடம். இங்கேதான் பல்லாண்டு காலமாக ஆபிராம் தங்கியிருந்தார், அங்கேதான் அவன் அடக்கம் பண்ணப்பட்டான்.

ஆதியாகமம் 14

இந்த 14ஆம் அதிகாரத்திலேதான் முதல் யுத்தத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம். இந்த யுத்தத்திலேதான் ஆபிரகாம் சென்று லோத்துவை விடுவித்துக் கொண்டு வருகிறான். அதுமட்டுமல்ல முதல் ஆசாரியனான மெல்கிசேதேக்கை நாம் பார்க்கிறோம். மெல்கிசேதேக் ஆபிராமை ஆசீர்வதித்தார் என்று வாசிக்கிறோம். இந்த இரண்டு முக்கியமான காரியங்களைத்தான் இந்த அதிகாரத்திலே நாம் வாசிக்கிறோம்.

இதுவும் மிக முக்கியமான ஒரு அதிகாரம். நாம் கற்றுவரும் சரித்திரத் தொடரிலே இது சம்பந்தம் இல்லாதது போலத் தெரிகிறது. இது விடப்பட்டிருந்தால் கூட ஒன்றுமில்லை என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அருமையானவர்களே, இதிலே ஒரு தொடர்ச்சி அடங்கியிருக்கிறது. இதுவும் ஆதியாகமத்திலே உள்ள முக்கியமான அதிகாரங்களிலே ஒன்று.

ஆதியாகமம் 14 : 1-2

இது ஒரு சரித்திர பதிவேடாக இங்கேக் காணப்படுகிறது. முதல் 11 வசனங்களிலே நாம்

www.Radio882.com

பார்க்கிறது போல கிழக்கிலுள்ள இராஜாக்கள், சோதோம் கொமோரா ராஜாக்களை முறியடிக்கிறார்கள். சில காலங்களுக்கு முன்பு வரை வேதத்தைக் குறைசொல்ல விரும்புகிறவர்கள் இந்தப் பெயர்கள் எல்லாம் ஆதிகாலத்திலே சரித்திரங்களிலே நாம் பார்க்கிறப் பெயர்கள் போல அல்ல என்று கூறிக் கொண்டு இருந்தார்கள். ஆனால் பின்னான காலங்களிலே இந்தப் பெயர்களை உடைய நினைவு ஸ்தம்பங்களும், எழுத்துக்களும் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

அம்ராப்பேல் என்பவர்தான் அமுரபி என்று சொல்லப்படுகிற மற்ற சரித்திரப் புத்தகங்கள் கூறும் அரசனாய் இருந்திருக்கிறார். எனவே இந்த சரித்திரப் பகுதியும் முக்கியமானதுதான். இங்கே ஒரு யுத்தத்தைப் பார்க்கிறோம். வேத புத்தகத்திலேயே கூறப்பட்டுள்ள முதல் யுத்தம் இதுதான்.

ஆதிகாலத்திலேயே ஒருவர்மேல் ஒருவர் போர்புரியும் பழக்கமுள்ளவர்களாய் இருந்திருக்கிறார்கள். இதுதான் முதல் யுத்தமாக எழுதப்பட்டிருந்தாலும், இதுதான் உலகத்திலே நடந்த முதல் யுத்தம் என்று நாம் சொல்லமுடியாது. ஏன் இது எழுதப்பட்டிருக்கிறதென்றால் ஆபிராமும் அவனுடைய சகோதரரின் மகனான லோத்துவும் இந்த சம்வத்திலே பங்குபெறுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

ஆதியாகமம் 14 : 3 -4

கிழக்கிலுள்ள அரசர்கள் சோதோம் கொமோராவின் மேலே யுத்தம் செய்வதற்கான காரணம், அவர்கள் செய்த கலகம். இந்த இராஜாக்கள் ஏற்கனவே யுத்தம் செய்திருக்கிறார்கள். ஏனென்றால் கிழக்கத்திய இந்த இராஜாக்கள் ஏற்கனவே இந்த சமவெளிப் பட்டணங்களிலே குடியிருந்தவர்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் கலகம் செய்துவிட்டார்கள்.

ஆதியாகமம் 14 : 5 -11

இங்கே கிழக்கத்திய இராஜாக்கள் எப்படி சோதோம் கொமோரா இராஜாக்களை மேற்கொண்டார்கள் என்பதை நாம் வாசிக்கிறோம்.

ஆதியாகமம் 14 : 12

கிழக்கிலிருந்து யுத்தத்திற்கு வந்த இராஜாக்கள், சோதோம் கொமோராவை விட்டு மீண்டுமாக அவர்கள் கைப்பற்றிய அடிமைகளோடு புறப்பட்டுச் சென்றபோது, சவக்கடலின் மேற்கு பகுதி வழியாக கடந்து சென்றார்கள். இது எபிரோன் மம்ரே பகுதிகளுக்கு அருகாமையில் இருந்ததுதான். அங்கேதான் ஆபிரகாம் வசித்துக் கொண்டிருந்தான். ஆபிரகாம் இருந்ததாகச் சொல்லப்படுகிற அந்த இடத்திலிருந்து கீழே பார்த்தால் அங்கே நடப்பதை உங்களாலும் இன்றும் காணமுடியும். எனவே ஆபிராமுக்கு செய்தி வந்தபொழுது உடனடியாக அந்த எதிரிகளை பின்பற்றிச் செல்ல முடிந்தது.

ஆதியாகமம் 14 : 13

ஆபிராம் தன்னோடே உடன்படிக்கை செய்திருந்த மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலே இருந்தான் என்று

www.Radio882.com

வாசிக்கிறோம். எனவே அவன் உடன்படிக்கை பண்ணியிருந்த ஒரு கூட்ட ஜனங்கள் அங்கே இருந்தார்கள். இவர்கள்தான் ஆபிராமோடே இருந்த மனிதர்கள். பிரச்சனைகள் வந்தபொழுது, எதிரிகள் வந்தபொழுது இவர்கள் அவர்களுக்கு எதிராக இணைந்து நின்றிருந்தார்கள்.

ஆதியாகமம் 14 : 14

ஆபிராமுடைய வலுவை இந்த வசனம் நமக்குக் காட்டுகிறது. இத்தனை வேலைக்காரர்கள் அவனுக்கு இருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆபிரகாம் வீட்டிலே இருந்த ஜனங்கள் மட்டும் 318 பேர். அதாவது இந்த 318 பேரும் ஆயுதம் தாங்கி யுத்தம் செய்யக்கூடியவர்கள். அப்படியென்றால் மற்ற பெண்களும் பிள்ளைகளும் வயதானவர்களும் எத்தனைபேர் இருந்திருப்பார்கள் என்று சற்றே எண்ணிப் பாருங்கள். இவர்கள் அத்தனைபேரையும் கொண்டு ஆபிரகாம் செய்தது என்ன? அநேக ஆடுமாடுகளை வளர்த்து வந்திருக்கிறான். அது மட்டுமல்ல, நாம் இங்கே வாசிக்கிறதுபோல தான் என்னும் ஊர்மட்டும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றான்.

ஆதியாகமம் 14 : 15

இது உண்மையாகவே மிக அதிகமான தூரந்தான். ஆபிராம் செய்தது என்ன? தனது வேலைக்காரர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்தான், ஒரு கூட்டம் அவர்களைப் பின்தொடர்ந்து அவர்கள்மேல் யுத்தம் செய்ய முனைந்தபொழுது, அவர்கள் ஆபிராமின் ஒரு கூட்டத்தினை எதிர்த்து, யுத்தம் செய்ய திரும்பிய பொழுது, மறுகூட்டத்தினர் அவர்களின் முதுகு பக்கத்திலிருந்து ஓடி வந்து, அவர்களைத் தாக்கி இவ்வாறாக அவர்களை வெற்றி பெற்றார்கள். பலர் பல திசையிலெ களைந்து ஓடும்படியாக அவர்களை முறியடித்தார்கள். அப்படிச் செய்யும்பொழுதுதான் அவர்கள் எடுத்துச் சென்ற பொருட்களையும் சிறைபிடித்த மனிதர்களையும் விட்டு விட்டு ஓடினார்கள்.

ஆதியாகமம் 14 : 16

பெண்களையும், மற்ற மனிதர்களையும் அடிமைகளாகப் பிடித்துச் சென்று இருக்கிறார்கள். ஆபிராம் மிகப் பெரிய ஒரு காரியத்தைச் செய்தான். காரணம் என்ன? ஆபிராமின் சகோதரனுடைய மகனான லோத்துவும் அந்தக் கூட்டத்திலே இருந்தான். இந்த காரணத்தினாலேயே இது எல்லாம் இங்கு எழுதப்பட்டும் இருக்கிறது. ஆபிராமின் வாழ்க்கையின் ஒரு பகுதி இது. எனவே இது முக்கியமானது.

ஆதியாகமம் 14 : 17

சோதோமின் ராஜா ஆபிராமை சந்திக்கப் புறப்பட்டுப் போகிறான். ஆனால் அங்கே வேறு ஒருவர் புறப்பட்டு வந்து ஆபிராமை சந்திக்கிறார். அப்படி அவன் சந்தித்ததும் நல்ல காரியம்தான், ஏனென்றால், சோதோமின் இராஜா ஆபிராமுக்கு முன்னாலே ஒரு பெரிய சோதனையை வைக்கப்போகிறான்.

ஆதியாகமம் 14 : 18 – 19

இந்தப் பகுதியை வாசிக்கும்பொழுது எனக்கு அநேகக் கேள்விகள் எழும்புகின்றன. உங்களுக்கும் அப்படித்தான் இருக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன். சரி, இந்த

www.Radio882.com

மெல்கிசேதேக்கு என்ற மனிதன் எங்கே இருந்து வருகிறான்? திடீரென்று வந்து, இந்த வசனத்திலே அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்து ஆபிராமை ஆசீர்வதிக்கிறான். அதுமட்டுமல்ல, வந்த வண்ணமாகவே அவன் சென்றுவிடுகிறான். அவன் எங்கே இருந்து வந்தான் என்பது ஒரு ஆச்சரியமான காரியம். எங்கே கடந்து சென்றான் என்பதும் ஆச்சரியமான காரியம். அதுமட்டுமல்ல, அவனுடைய தொழில் என்ன என்பதும் நமக்குத் தெரியவில்லை.

இங்கே நாம் வாசிப்பது போல அவன் சாலேமின் ராஜா என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல உன்னதமான தேவனுடைய ஆசாரியனாக இருந்தான் என்றும் வாசிக்கிறோம். இப்பொழுது மற்றமொரு கேள்வி எழும்புகிறது. உன்னதமான தேவனைக் குறித்து அவனுக்கு எப்படித் தெரியும்? எங்கேயோ அவன் அவரைக் குறித்து அறிந்திருக்கிறான். எல்எலோகிம் என்பவர் உன்னதமான தேவன், வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர், ஜீவிக்கிற தேவன், ஆதியாகமம் முதலாம் அதிகாரத்திலே நாம் பார்த்த தேவன். அவர் நோவாவின் தேவன். ஏனோக்கின் தேவன். எனவே அவர் அங்கே உண்டாயிருந்த ஏதோ ஒரு கடவுள் அல்ல. இதைக் குறித்துச் சொல்லும் வேத அறிஞர்கள் ஒவ்வொருவரும் ஒரே தெய்வத்தை வழிபடும் பழக்கம் இருந்த நாட்கள் அது என்று சொல்கிறார்கள். சமயங்களின் தோற்றம் என்ற புத்தகத்தை எழுதியிருக்கிற டாக்டர். சாமுவேல் சமீர் என்பவர் சொல்லும்பொழுது, பல தெய்வங்களை வழிபடும் பழக்கம் வருவதற்கு முன்னதாகவே ஒரே தேவனை வணங்கும் பழக்கம் இருந்திருக்கிறது என்று சொல்கிறார். ஜீவிக்கும் உண்மையான தேவனைக் குறித்து அனைவரும் அறிந்தவர்களாய் இருந்தார்கள் என்று குறிப்பிடுகிறார்.

இந்த இடத்திலே ரோமர் முதலாம் அதிகாரம் 21ஆம் வசனத்தையும் நாம் வாசிக்க வேண்டும்.

ரோமர் 1 : 21

“அவர்கள் தேவனை அறிந்தும் அவரை தேவன் என்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலும் இருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.”

தொடர்ந்து இந்த வசனங்களை நீங்கள் வாசித்துப் பார்த்தீர்களென்றால் எப்படி மனிதர்கள் சிருஷ்டிகரைத் தொழுவதற்குப் பதிலாக சிருஷ்டியைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஆனாலும் ஆபிராமுடைய அந்த நாட்களிலேயும் உன்னதமான தேவனுடைய ஆசாரியன் என்று ஒருவன் இருந்திருக்கிறான். அவனுக்கு ஜீவிக்கிற உண்மையான தெய்வத்தைக் குறித்த அறிவு இருந்திருக்கிறது.

மெல்கிசேதேக்கு ஜீவிக்கிற உண்மையுள்ள தேவனின் ஆசாரியனாய் இருந்தான் என்று வாசிக்கிறோம். அவன் அங்கே வெளியே வந்து, அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து ஆபிராமை சந்திக்கிறான்.

அருமையான சகோதரனே, சகோதரியே, ஞாபகத்திற்கு வருகிறதா? இதுதான் கர்த்தருடைய இராப்போஜனத்திலேயும் பயன்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள். இவைகளை

www.Radio882.com

ஆபிராமுக்குக் கொண்டுவருவதற்கு மனதிலே என்ன எண்ணினானோ நமக்குத் தெரியாது. மெல்கிசேதேக்குக்கு எவ்வளவு காரியம் தெரியுமோ, அதுவும் நமக்குத் தெரியவில்லை. இந்த மெல்கிசேதேக்கைக் குறித்து வேதப் புத்தகத்திலே மூன்று இடங்களில் நாம் வாசிக்கிறோம். ஆதியாகமத்திலே இந்தப் பகுதியிலே மட்டுமல்ல சங்கீதம் 110 : 4லேயும், அவனைக் குறித்து வாசிக்கிறோம். இந்த வசனம் இயேசு கிறிஸ்துவை முன்னறிவிக்கும் ஒரு தீர்க்கதரிசன வசனம்.

"நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராய் இருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமல் இருப்பார்." அதுமட்டுமல்ல எபிரேயருக்கு எழுதின நிருபத்திலேயும் பலமுறை மெல்கிசேதேக்கைக் குறித்து வாசிக்கிறோம். எபிரேயர் நிருபத்திலே நாம் வாசித்தப் பிறகுதான் ஏன் ஆதியிலே அவருடைய பூர்வீகத்தைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை என்பது நமக்குத் தெரிகிறது.

அவனுடைய பெற்றோரைக் குறித்து நமக்குத் தெரியாது. ஆதியாகமப் புத்தகம் குடும்பங்களின் வரலாறுகளைக் குறித்து கூறுவதாய் இருந்தாலும், மெல்கிசேதேக்கின் பூர்வத்தைக் குறித்து எதுவும் சொல்லவில்லை. எந்த ஒரு முக்கியமான மனிதரைக் குறித்துச் சொன்னாலும், யாருடைய மகன் என்றுச் சொல்லப்பட்டிருக்கும். ஆனால் மெல்கிசேதேக்கைக் குறித்துச் சொல்லும்பொழுது அவ்வாறு சொல்லப்படவில்லை. எபிரேய ஆக்கியோன் மிகத் தெளிவாக இதை விவரிக்கிறார் என்று சொல்லலாம். அதாவது மெல்கிசேதேக்கின் தகப்பனைக் குறித்தோ, தாயைக்குறித்தோ, ஆரம்பத்தைக் குறித்தோ, முடிவு நாட்களைக் குறித்தோ எதுவும் சொல்லாததற்கு காரணம் கிறிஸ்துவின் பிரதான ஆசாரியரின் பணியை உள்ளடக்கிய ஒரு சம்பவமாய் அது இருக்கிறது.

மெல்கிசேதேக்கு செய்த சேவையிலே இயேசு கிறிஸ்துவும் தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்ததுவும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே நமக்காக பிரவேசித்ததுவும், ஆரோனைப்போல அவர் ஒரு பிரதான ஆசாரியராய் இருப்பதைக் குறித்தும் விளக்கம் கொடுக்கிறது. ஆனால் அவருடைய தன்மையைக் குறித்துச் சொல்லும் பொழுது நம்முடைய கர்த்தர் எந்த ஆரம்பமும் முடிவும் இல்லாதவர். அவருடைய ஆசாரியப் பணியானது மெல்கிசேதேக்கின் முறைமையின்படி தொடர்கிறது. இராஜாதி இராஜாவாக கிறிஸ்து ஆபிரகாமின் குமாரராய் இருக்கிறார். அவர் தாவீதின் குமாரன். இதைத்தான் மத்தேயு எழுதின சுவிசேஷம் நமக்குத் தெரியப்படுத்துகிறது. ஆனால் யோவான் சுவிசேஷத்திலே நாம் பார்ப்பது என்ன? ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது; அந்த வார்த்தை தேவனாய் இருந்தது. அதுமட்டுமல்ல 14ஆம் வசனத்திலே அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார் என்று பார்க்கிறோம்.

அவருக்கு எந்த ஆரம்பமும் கிடையாது; எந்த முடிவும் கிடையாது. அவர் நித்தியமான தேவன். அவர் பரலோகத்திலிருந்து மகிமையிலிருந்து வந்தவர். அந்த வார்த்தை மாம்சமானது. அவருடைய மகிமையை நாம் காணும்படியாக நமக்குள்ளே அவர் வாசம் பண்ணினார்.

அருமையான சகோதரனே, சகோதரியே, மெல்கிசேதேக்கிலே நாம் கிறிஸ்துவைப் பார்க்கிறோம். மெல்கிசேதேக்கு ஆபிராமுக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டு வந்தான். ஏன்

மெல்கிசேதேக்கு இதைச் செய்தான் என்பது இப்போது புரிகிறது. ஏனென்றால் வேத வசனம் என்ன சொல்கிறது? 1 கொரிந்தியர் 11 :26, "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தை புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள்."

அப்படியென்றால் மெல்கிசேதேக்கு கிறிஸ்துவின் மரணத்தை எதிர்பார்க்கிறவனாய் அங்கே காணப்படுகிறான். அந்தக் காரணத்தினாலேயே அவனை ஆசீர்வதித்து வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக என்று ஆசீர்வதிக்கிறான்.

உன்னதமான தேவன், அவர்தான் எல்எலோகிம். சிருஷ்டிகர். இந்த மெல்கிசேதேக்கு தான் அந்நாட்களிலே உலகத்திலே இருந்த பிரதான ஆசாரியன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இன்றைய நாளின் மகா உன்னதமான பிரதான ஆசாரியராய் இருக்கிறார். ஆரானின் வம்சத்திலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிரதான ஆசாரியராக இல்லை. மெல்கிசேதேக்கின் முறைமையின்படியே அவர் பிரதான ஆசாரியராய் இருக்கிறார் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆரோன் இஸ்ரவேலுக்கு மட்டும் பிரதான ஆசாரியன். ஆசாரிப்புக் கூடாரத்திற்கு மட்டும் அவன் பிரதான ஆசாரியன். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மெல்கிசேதேக்கின் முறைமையின்படி உலகம் அனைத்துக்கும் இன்றும் ஆசாரியராய் இருக்கிறார்.

ஆதியாகமம் 14: 20

இந்த ஆதியாகமப் புத்தகத்திலேயே ஆபிராம் மெல்கிசேதேக்கிற்கு தசம பாகம் கொடுப்பதைக் குறித்து நாம் வாசிக்கிறோம். இப்படி உன்னதமான தேவனுடைய ஆசாரியனாய் இருந்த மெல்கிசேதேக்குக்கு தசம பாகம் கொடுக்க வேண்டுமென்று அவனுக்குச் சொன்னது யார்? நிச்சயமாக அது தேவன் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்திய ஒரு சத்தியமாகத்தான் இருக்கவேண்டும். எத்தனையோ காரியங்களை அவனுக்குக் கற்றுக் கொடுத்தார். பலிபீடம் கட்டுவதற்கு, மேலும் அவருடைய வார்த்தையை அறிந்து அதற்கு கீழ்ப்படிவதற்கு, அதைப் போல இந்த உண்மையையும் வெளிப்படுத்தியதினாலே ஆபிராம் அதற்குக் கீழ்படிந்தான்.

ஆதியாகமம் 14 : 21

அருமையானவர்களே, இது ஒரு சோதனை. அந்தக் காலங்களிலே, ஹமுரபி என்ற அரசனின் சட்டத்தின்படி, யுத்தத்திலே சென்று அடிமைகளை விடுவித்துக் கொண்டு வந்த ஆபிராம் அதற்கான கூலியை பெற்றுக்கொள்ளவும், அப்படி விடுவித்துக் கொண்டுவந்த ஜனங்களைத் தனக்காக வைத்துக் கொள்ளவும் உரிமை படைத்தவனாகவே இருந்தான்.

ஆனால் சோதோமின் ராஜா மிகத் தந்திரமாக ஆபிராமிடத்திலே பேசுகிறான். அவன் என்ன சொல்கிறான்? ஜனங்களை எனக்குத் தாரும் பொருட்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான் இது ஆபிராமுக்கு வந்த ஒரு சோதனை என்றே சொல்லலாம். ஏனென்றால் இவ்வாறு சோதோமின் இராஜாவின் கரத்திலே அவன் பொருள்களை எடுத்துக் கொள்வான் என்றால் அதற்குப் பின்னர் யாராவது ஆபிராம் உண்மையாகவே செல்வச்செழிப்பு வாய்ந்த மனிதன்,

www.Radio882.com

கடவுள் அவனை ஆசீர்வதித்திருக்கிறார் என்று சொல்லும்பொழுது, சோதோமின் ராஜா குறுக்கிட்டு கடவுள் அவனை ஆசீர்வதிக்கவில்லை. நான்தான் அவனுக்கு இவைகள் எல்லாவற்றையும் கொடுத்தேன் என்று சொல்லக்கூடும். நான்தான் அவனை செல்வந்தன் ஆக்கினேன் என்று கூறக்கூடும். இதை அறிந்தவனாகவே ஆபிராம் என்ன பதில் சொல்கிறான் பாருங்கள்.

ஆதியாகமம் 14 : 22

ஆபிராம் தொடர்ந்து மெல்கிசேதேக்கின் ஆசீர்வாதத்தின் பிரசன்னத்திலே இருக்கிறான் என்று சொல்லலாம். மெல்கிசேதேக்கை சந்தித்தது நல்ல ஒரு காரியம்.

அருமையான நண்பனே, எந்த ஒரு சோதனைக்கு முன்னதாகவும் தேவன் நம்மை ஆயத்தம் செய்கிறவராய் இருக்கிறார். 1 கொரிந்தியர் 10 : 13லே நாம் வாசிப்பதென்ன?

"மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல், வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்."

ஆபிராமையும் அந்த சோதனையை சந்திப்பதற்கு ஏற்கனவே அவர் ஆயத்தம் செய்துவிட்டார். ஆபிராம், லோத்தையும், ஜனங்களையும் காப்பாற்றும்படி புறப்பட்டுச் செல்லும்பொழுது ஒருவேளை தேவனிடத்திலே ஒரு பொருத்தனை செய்திருக்கலாம். ஆண்டவரே, இப்போது அந்த யுத்தத்திலே அகப்பட்டிருக்கிறவர்களைக் காப்பாற்ற நான் செல்கிறேன்; அப்படி நான் செயல்படும்பொழுது எனக்கு அநேகப் பொருள்கள் அதன்மூலமாய் கிடைக்கும். ஆனால் அந்தப் பொருள்கள் எனக்கு முக்கியமானதல்ல; லோத்தையும் அவன் குடும்பத்தையும் நான் காப்பாற்ற வேண்டும் என்று தேவனோடு அவன் பொருத்தனை செய்திருக்கலாம்.

இதனாலேயே இந்த செயலிலே ஈடுபட தேவன் ஆபிரகாமுக்கு அனுமதி கொடுத்திருப்பார். இதைத்தான் ஒரு சாட்சியாக சோதோமின் இராஜாவினிடத்திலே ஆபிராம் அறிக்கையிடுகிறான். ஒருவேளை ஆபிரகாம் சோதோம் ராஜாவைப் பார்த்து, நான் ஜீவிக்கிற கர்த்தரைத் தொழுது கொள்கிறவன்; எந்த ஒரு பொருளையும் நான் எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று அவருக்கு பொருத்தனை செய்திருக்கிறேன். நீர் என்னை செல்வந்தனாக மாற்ற முடியாது. ஒரு சரட்டையாவது, பாதரட்சையின் வாரையாவது நீர் எனக்குக் கொடுக்கமுடியாது. அப்படி நீர் செய்வீரென்றால் நீரே என்னைப் பணக்காரனாக்கினீர் என்று சொல்லக்கூடும். நான் செல்வந்தனாக வேண்டுமென்றால் தேவனே அதை எனக்குக் செய்யவேண்டும் என்று சாட்சியாக கூறியிருக்கவேண்டும்.

ஆதியாகமம் 14 : 24

தன்னோடு வந்த மற்றவர்கள் இந்த யுத்தத்திற்குப் போய் வந்ததினாலே கிடைக்கும் பொருட்களிலே பங்கு எடுத்துக் கொள்ளலாம், ஆனால் எனக்கு வேண்டாம் என்று கூறுகிறான். என்னோடு வந்த இளைஞர்கள் சாப்பிட்டது அவர்களுக்கான கூலியாக இருக்கட்டும், ஆனால்

என்னைப் பொருத்தமட்டிலே நீர் எனக்கு எதையும் கொடுக்க முடியாது என்று தீர்க்கமாகக் கூறிவிட்டான்.

விசுவாசிகளான ஒவ்வொருவரும் ஒரு பெரிய பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். உலகப் பொருட்கள் மீது நாம் அன்போ, ஆசையோ, பாசமோ, நேசமோ வைக்கக்கூடாது. உலகத்திலே ஒரு பொருளை வாங்குவதற்காகவோ, அது நமக்குத் தேவை என்பதற்காகவோ, தேவனுடைய திட்டத்தை மீறி நாம் செயல்படக்கூடாது என்ற உறுதியான தீர்மானம் எப்பொழுதும் நம்முடைய உள்ளத்திலே இருக்கவேண்டும். அப்பொழுதுதான் தவறுதலாக வரும் எந்த வருமானத்தையும் வேண்டாம் என்று சொல்லக்கூடிய மனதைரியம் நமக்கு உண்டாயிருக்கும். எப்பொழுதும் அதை வாங்க வேண்டும், இதை வாங்கவேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்ந்து கொண்டு இருப்போமென்றால், அதற்கானப் பணத்தைத் தவறுதலான வழியிலே கண்டுபிடிப்பதற்கும் பிசாசு நம்மை வழிநடத்துவான் என்பதைக் குறித்து ஜாக்கிரதை உள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

ஆதியாகமம் 15

முதல் பகுதியிலே தேவன், ஆபிரகாமுக்குக் கேடகமும், மகாபெரிய பலனுமாய் இருக்கிறேன் என்று சொல்வதைப் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 15 : 1

இந்த இடத்திலேதான் 4வது முறையாகக் கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகிறார். தேவன் ஆபிராமை கொஞ்சம் கொஞ்சமாகத் தன் அருகிலே சேர்த்து வளர்ந்து வரும் ஒரு விசுவாசியாக வழிநடத்துகிறார். இங்கே கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமானதற்கான காரணம் ஒரு விசுவாச எட்டுவைத்து, அந்த யுத்தத்திற்குச் சென்று, லோத்தையும் குடும்பத்தையும் மீட்டு வந்தாலும், அதற்குப் பரிசாக பொருட்கள் எதுவும் தனக்கு வேண்டாம் என்று சோதோம் அரசனிடத்திலே சொன்னபடியினாலே அந்த விசுவாசத்தைப் பார்த்து தேவன் மீண்டுமாக ஆபிராமுக்கு தரிசனமாகிறார்.

அவர் இங்கே சொல்கிறது என்ன? ஆபிராமே நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும் உனக்கு மகாபெரிய பலனுமாய் இருக்கிறேன் என்கிறார்.

எத்தனை அருமையான வார்த்தைகள் இல்லையா! இந்த வேதப் பகுதியிலே நாம் வாசிக்காத ஒரு காரியம் நடந்து இருக்கலாமோ, என்று எண்ணத் தோன்றுகிறது. இதற்கு முந்திய அதிகாரத்தில் நாம் வாசித்த யுத்தத்திலே ஆபிராம் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையிலே மிகவும் ஆபத்தான ஒரு நிலைமைக்கு அவன் சென்றிருக்கலாம். ஒருவேளை காயப்பட்டிருக்கலாம். இனி நான் பிழைப்பேனோ? என்று கூட அவன் பயந்திருக்கலாம். அந்த வேளையில்தான் ஆண்டவர் அவனுடைய உள்ளத்திலே, ஆபிராமே நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமாய் இருக்கிறேன். நானே உனது கேடகம் என்று தேவன் நினைவுப்படுத்தியிருக்கலாம்.

அதுமட்டுமல்ல, உனக்குக் கிடைத்த அந்தப் பொருட்களையெல்லாம் மிக மேலான எண்ணத்தோடு நீ திரும்பக் கொடுத்துவிட்டாய். நானே உனக்கு பெரிய வெகுமதியாய்

www.Radio882.com

இருக்கிறேன்; நான் உனக்கு இன்னமும் பெரிய பங்கை கொடுக்க விரும்புகிறேன் என்று கூறியிருக்க வேண்டும்.

அருமையானவர்களே, இன்றும் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கும், எல்லா காரியங்களுக்கும் தம்மையே நோக்கிப் பார்க்கிறவர்களுக்கும் தேவன் கொடுக்கக்கூடிய காரியங்கள் மிகப் பெரியது; உன்னதமானது. பொய்யான, மாய்மாலமான பயபக்தியும், மாய்மாலமான வாழ்க்கையும் உள்ளவர்களாக அல்ல. திறந்த மனம் உள்ளவர்களாக, உண்மை உள்ளவர்களாக, வாழ ஆண்டவர் நம்மை அழைத்திருக்கிறார். ஆபிராம் ஏதோ சாதுவாக ஒரு பரிசுத்தவான் போல வேடம் அணியவில்லை. நடைமுறை வாழ்க்கை வாழ்கிறவனாக, சாதாரண ஒரு மனிதனைப் போல எல்லா காரியங்களிலேயும் ஈடுபடுகிறவனாக இருந்தான். ஆனால் அதே வேளையிலே ஆபிராம் எல்லாக் காரியங்களுக்கும் கர்த்தரையே நம்புகிறவனாகக் காணப்பட்டான். அதனால்தான் ஆண்டவரிடம் இவ்வாறு கூறுகிறான்.

ஆதியாகமம் 15 : 2 – 3

இங்கே ஆபிராம் கர்த்தரிடத்திலே கூறுவதென்ன? எனக்கு மேலும் மேலும் செல்வங்கள் வேண்டாம். அது எனக்குத் தேவையில்லை. நான் குழந்தையில்லாதவனாய் இருக்கிறேன் என்பதே என் உள்ளத்தில் இருக்கிறது. எனக்கு ஒரு குமாரன் வேண்டும். ஆண்டவரே, உன்னை நான் பெரிய ஜாதியாக்குவேன் என்று கூறினீரே, உன் சந்ததி எண்ணிமுடியாது என்று சொன்னீரே, ஆனால் இப்பொழுது எனக்கு ஒரு பிள்ளைக்கூட இல்லையே என்று கூறுகிறான்.

அந்த நாட்களின் சட்டப்படி, அதாவது ஹமுரபியின் சட்டப்படி எலியேசர் அதாவது ஆபிராம் வீட்டின் விசாரணைக்காரனாய் இருக்கிறவனே ஆபிராமின் சுதந்திரவாளி ஆவான்.

ஆதியாகமம் 15 : 4

நாம் நடைமுறை வாழ்க்கையிலே தேவனோடு உறவு உள்ளவர்களாய் இருக்கும்பொழுது, தேவனும் நம்மோடு கூட நடைமுறை காரியங்களிலே உண்மை உள்ளவராய் இருக்கிறார். அவர் என்ன சொல்கிறார்? ஆபிரகாமே நான் உனக்கு ஒரு குமாரனைக் கொடுக்கபோகிறேன் என்று மிகத் தெளிவாகச் சொல்கிறார். தொடர்ந்து என்ன செய்கிறார் பாருங்கள்.

ஆதியாகமம் 15 : 5

இது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு காரியம் பிரியமானவர்களே. முதலாவது கடற்கரை மணலைப் போல உன் சந்ததி எண்ண முடியாததாய் இருக்கும் என்று சொன்னார். இப்பொழுது வானத்து நட்சத்திரங்களைப் போல உன்னுடைய சந்ததி எண்ணக் கூடாததாய் இருக்கும் என்கிறார்.

ஒருவேளை ஒரு நாலாயிரம் நட்சத்திரங்களை அவன் காணக்கூடியதாய் இருந்தாலும் உண்மையிலேயே அதே பகுதியில் அவன் கண்களால் காணமுடியாத இன்னும் ஐம்பதாயிரம் நட்சத்திரங்கள் இருக்கும். ஆபிரகாம் தனது சந்ததியை எண்ண முடியவில்லை.

இன்றைக்கும் அவனுடைய சந்ததி எண்ண முடியாததாகவே இருக்கிறது. உண்மையாகவே ஆபிராமுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். ஒன்று மாம்சத்தினால் வந்த

www.Radio882.com

வித்து; அதுதான் இஸ்ரவேல் தேசம்; யூத ஜனங்கள். இரண்டாவதாக ஆவிக்குரிய வித்து அதுதான் திருச்சபை. திருச்சபை எப்படி ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாக முடியும்? விசுவாசத்தினாலேதான்.

அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியர் 3ஆம் அதிகாரம் 29ஆம் வசனத்திலே சொல்லும்பொழுது, 'இயேசு கிறிஸ்துவின் மேலே வைத்த விசுவாசத்தினாலே, அவர்களும் ஆபிரகாமின் புத்திரராய் இருக்கிறார்கள்' என்று சொல்கிறார்.

இயற்கையான சந்ததியின்படி அல்ல; ஆவிக்குரிய வித்தாகிய விசுவாசத்தினாலே அவர்களும் ஆபிரகாமின் சந்ததிகளானார்கள்.

ஆதியாகமம் 15 : 6

வேதப் புத்தகத்திலேயே இது ஒரு உன்னதமான வாக்கியம். அவன் கர்த்தரை விசுவாசித்தான். இதன் பொருள் என்ன? கர்த்தர் இந்தக் காரியங்களை செய் என்று சொன்னபொழுது, ஆமென் கர்த்தாவே, என்று கூறியிருப்பான். நான் இத்தகையக் காரியங்களை உனக்குச் செய்வேன் என்று கர்த்தர் சொன்னபொழுது, நான் விசுவாசிக்கிறேன் என்று கூறியிருப்பான்.

அந்தக் காரியமே ஆபிரகாமுக்கு நீதியாக எண்ணப்பட்டது. அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலும் ரோம திருச்சபைக்கு எழுதும்பொழுது இதைக் குறித்து எழுதுகிறார். ரோமர் 4ஆம் அதிகாரம் முதல் 5 வசனங்களை சற்றே கவனியுங்கள்.

"அப்படியானால், நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் மாம்சத்தின்படி என்னத்தைக் கண்டடைந்தான் என்று சொல்லுவோம்? ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில் மேன்மை பாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு; ஆகிலும் தேவனுக்கு முன்பாக மேன்மை பாராட்ட ஏதுவில்லை.

வேத வாக்கியம் என்ன சொல்கிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்கிறது. கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும். "

ஆதியாகமம் 15 : 5

நீங்களே உங்கள் இரட்சிப்பிற்காக வேலை செய்கிறவர்களாய் இருந்தால், தேவன் உங்களுக்கு அதைக் கொடுக்கக் கடமைப்பட்டவர் ஆகிவிடுவார். ஆனால் எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே தேவன் என்னையும் உங்களையும் கிருபையினால் மட்டுமே இரட்சிக்கிறார். இரட்சிப்பதற்கு வேறு எந்த ஒரு வழியையும் அவர் ஏற்படுத்தவில்லை. நீங்கள் இன்று இரட்சிக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்று சொன்னால், நீங்கள் தேவனை விசுவாசித்தீர்கள். இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டீர்கள். தேவன் உங்களுக்காக ஆயத்தம் பண்ணின இரட்சிப்பை நீங்கள் விசுவாசித்தீர்கள். எனவே இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றிருக்கிறீர்கள்.

ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம்

www.Radio882.com

வைக்கிறவனாய் இருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும். எந்த ஒரு பாவியும் விசுவாசத்தின் மூலமாக இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளமுடியும். ஆபிராம் தேவனை விசுவாசித்தான். தேவன் கூறிய காரியங்களை அப்படியே ஏற்றுக் கொண்டான்.

இப்படித்தான் நீங்களும் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள். தேவன் உங்களுக்காக எதை செய்து முடித்தாரோ, அதை நீங்கள் விசுவாசத்தினாலே ஏற்றுக் கொண்டு இருக்கிறீர்கள். இயேசு கிறிஸ்து உங்களுடைய பாவத்திற்கான தண்டனையை சிலுவையில் சுமந்து, மரித்து, உயிரோடு எழுந்தார் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். இவ்வாறு நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதினாலே தேவன் உங்களை நீதிமான் என்று அழைக்கிறார். இதே சத்தியத்தைத்தான் கலாத்தியர் 3ஆம் அதிகாரத்திலேயும் அப்போஸ்தலராகிய பவுல் சொல்கிறார். கலாத்தியர் 3 : 6 – 9

“அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்க நீதியாக எண்ணப்பட்டது. ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக: மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு, உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது. அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.” அருமையானவர்களே, ஆபிரகாம் உண்மையுள்ளவனாக காணப்பட்டபடியினாலே, அவன் விசுவாசத்திற்குள்ளே வரவில்லை. ஆபிரகாமின் விசுவாசமே அவனை தேவனுக்குள் உண்மையுள்ளவனாக இருக்கச் செய்தது. தேவனை விசுவாசித்தபடியினாலே அவன் மீட்கப்பட்டான். இதுதான் நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான ஒரு சத்தியம்.

எனக்கருமையான சகோதரனே, சகோதரியே, நீங்கள் கர்த்தருக்கென்று உண்மையுள்ளவர்களாக, நீதியான காரியங்களை மட்டும் செய்கிறீர்கள் என்றால் இரட்சிக்கப்பட முடியாது. உங்களுக்காக மரித்து உயிர்த்த இயேசுவை உங்கள் இரட்சகரென்று விசுவாசிக்கும்பொழுது அந்த விசுவாசமே உங்களை நீதிமான்களாக்கும். அதுமட்டுமல்ல, அவருக்கு உண்மையுள்ளவர்களாய் வாழ வேண்டுமென்ற வாஞ்சையைக் கொடுத்து, தூய ஆவியின் பெலத்தினாலே அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ உங்களுக்கு துணை செய்கிறதாய் இருக்கும். எனவே விசுவாசமே முக்கியமானது.

ஆதியாகமம் 15 : 7 – 8

மீண்டுமாக ஆபிரகாமை ஒரு சாதாரண நடைமுறை மனிதன் என்று சொல்லலாம். உண்மையான காரியங்களை செயல்படுத்துவதைக் குறித்து, அவன் நம்பிக்கை உள்ளவனாய் இருக்கிறான். நாமும் அதையே செய்யவேண்டும்.

நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையிலேயும் ஒரு உண்மையான நடைமுறைக்கு ஏற்றவிதமாய் நம்முடைய வாழ்க்கை இருக்கவேண்டும். இன்று அநேகர் திருச்சபை என்ற விளையாட்டு விளையாடுகிறார்கள். ஆனால் ஆபிரகாம் நடைமுறை மனிதனாய் இருந்தான். ஒரு காரியத்தை அறிந்துகொள்ள விரும்பினான். திட்டவட்டமாக அதை அறிந்து கொள்ள, எழுத்து வடிவிலே தனக்கு வேண்டும் என்பதுபோல, அவன் கேட்கிறான்.

www.Radio882.com

இன்றைய நடைமுறைப்படி கூறவேண்டுமென்றால் தேவன் ஆபிரகாமைப் பார்த்து, சரி நீ நீதிமன்றத்திற்கு வா; சரியான ஒரு வழக்கறிஞர் மூலமாக இந்த உடன்படிக்கையை நாம் உறுதி செய்து கொள்வோம் என்று சொல்லியிருப்பார். ஆனால் அன்று வாழ்ந்த அந்த காலத்திலே அவர் எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சரியாகச் சொன்னார்.

ஆதியாகமம் 15 : 9 -10

இங்கே நாம் பார்க்கிறது போல ஒரு பலியை ஆயத்தம் பண்ணும்படியாக தேவன் ஆபிராமுக்குச் சொன்னார். தேவன் கூறியபடியே ஆபிராம் செய்தான். அந்த நாட்களிலே யாராவது ஒருவருக்கொருவர் உடன்படிக்கை செய்வார்கள் என்றால், இதுதான் அவர்கள் செய்கிற வழக்கம். ஒரு ஆட்டை ஒருவரிடத்திலிருந்து மற்றவர் வாங்குவேன் என்று சொல்வாரென்றால், இப்படிப்பட்ட ஒரு பலியை ஆயத்தப்படுத்துவார்கள். துண்டிக்கப்பட்ட மிருகங்களை இந்தப் பக்கம் ஒரு பகுதியும், அந்தப் பக்கம் ஒரு பகுதியுமாக வைத்து நடுவில் உள்ள பாதையிலே இருவரும் கரம் கோர்த்து நடப்பார்கள். இந்த நாளிலே எப்படி நாம் ஒரு பத்திரத்திலே கையெழுத்திட்டு அதை பதிவு செய்கிறோமோ, அதற்கு இணையானதுதான் அது. எனவே தேவனும் அந்த நாட்களின் வழக்கத்தின்படி செயல்படும்படியாக ஆபிராமை வழிநடத்துகிறார். எரேமியா 34 : 18ல் "என் முகத்துக்கு முன் பண்ணின உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றாமல், என் உடன்படிக்கையை மீறின மனுஷரை நான் துண்டங்களின் நடுவாக கடந்து போகும்படி அவர்களை இரண்டாகத் துண்டித்த கன்றுக்குட்டியைப் போல ஆக்குவேன்."

அந்த நாட்களின் முறை என்ன? பலிக்காக ஒரு மிருகத்தை வெட்டுவது போல, மத்தியிலே வெட்டி அதன்பின் அவர்கள் தங்கள் உடன்படிக்கையை செய்வார்கள். இதைப்போலத்தான் ஆபிராமும் தேவனுடைய கட்டளையின்படி பலியை ஆயத்தப்படுத்தினான்.

ஆதியாகமம் 15 : 11

இது இயற்கையான ஒரு காட்சிதான், இல்லையா? ஆபிராம் எல்லாவற்றையும் ஆயத்தம் பண்ணினபொழுது கர்த்தருக்காகக் காத்திருந்த வேளையிலே வானத்துப் பறவைகள், மாமிசப் பட்சியான பறவைகள் இறங்கின. அங்கு உட்கார்ந்து ஆபிராம் அவைகளை விரட்டிக் கொண்டிருக்கிறான். அங்கே நீங்கள் நின்று இந்த சடங்காச்சாரங்களை எல்லாம் பார்த்துக் கொண்டு இருப்பீர்களென்றால், நீங்கள் ஆபிராமைப் பார்த்து என்ன சொல்லியிருப்பீர்கள்? "ஆபிராமே உடன்படிக்கை செய்கிறவர் எங்கே? அவர் வரவில்லை. அவர் தாமதிக்கிறாரே" என்று சொல்லியிருப்பீர்கள். அதற்கு ஆபிராம் என்ன கூறியிருப்பான் தெரியுமா? இல்லை, இல்லை அவர் அப்படி தாமதிக்கிறவர் அல்ல. எல்லாவற்றையும் ஆயத்தமாக வை நான் வருவேன் என்று திட்டமாய் சொல்லியிருக்கிறார். நிச்சயமாக இந்த உடன்படிக்கையைச் செய்ய அவர் வருவார் என்று கூறியிருப்பான். நடந்தது என்ன? பாருங்கள்.

ஆதியாகமம் 15 : 12

ஆபிராம் நித்திரை மயக்கமடைந்தவனாய் அங்கே தூங்கிவிடுகிறான். தேவன் அவனோடு உடன்படிக்கை செய்யவேண்டிய நேரத்திலே அவனுக்கு நித்திரையைக் கொடுத்து காரிருள்

www.Radio882.com

அவனை மூடிக்கொள்ளும்படியாய் செய்கிறார். காரணம் என்ன? அந்த பலிகளுக்கு நடுவாக அவர் கடந்து செல்லப் போகிறார். ஏனென்றால் அவனுக்கு அவர் வாக்குப்பண்ணுகிறார். இங்கே ஆபிராம் அந்த பலிகளுக்கு நடுவாகக் கடந்து செல்ல வேண்டியதில்லை. ஏனென்றால், அவன் எந்தவிதமான வாக்குறுதியையும் தேவனுக்குக் கொடுக்கப் போவதில்லை. தேவனே அவனுக்கு நான் இதைச் செய்வேன் என்று வாக்குப் பண்ணுகிறார்.

தேவன் கூறியதை ஆபிராம் விசுவாசித்தான்; அவ்வளவுதான். அருமையான சகோதரனே, சகோதரியே, இதே காரியம்தான் 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகவும் நடைபெற்றது. தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

இயேசு கிறிஸ்து பலிபீடத்தில் எனக்காகவும், உங்களுக்காகவும், சிலுவையிலே மரித்தார். நானும் நீங்களும் பாவத்தினாலே திமிர்வாதம் உள்ளவர்களாய் இருக்கிறோம். நாம் எதையுமே வாக்குப்பண்ண முடியாதவர்களாய் இருக்கிறோம். ஆனால் தேவன் மேலே நாம் விசுவாசம் வைக்கும்பொழுது நமக்கு இரட்சிப்பைத் தருவேன், என்று சொல்லி அவரே அந்தப் புதிய உடன்படிக்கையை நம்மோடு ஏற்படுத்திக் கொண்டார்.

அன்றும் ஆபிராம் எந்தவிதமான வாக்குறுதியும் கொடுக்கவில்லை. தேவன் ஒருவேளை ஆபிராமைப் பார்த்து, "ஆபிராமே இந்த ஜெபத்தை ஒவ்வொரு நாள் இரவிலேயும் நீ செய்ய வேண்டும். அப்பொழுது நான் இதைச் செய்வேன்" என்று கூறியிருப்பாரென்றால், ஒருவேளை ஆபிராம் ஒருநாள் இரவிலே ஜெபிக்க மறந்திருந்தாலும், அந்த உடன்படிக்கை முறிவடைந்துவிடும். அப்பொழுது தேவன் வாக்குப்பண்ணியதை அவர் ஆபிராமுக்குச் செய்யத் தேவையில்லை. ஆனால் தேவாதி தேவனோ, தமது பகுதியைத்தான் செய்வேன் என்று கூறினார். மனிதர்களாகிய நம்மைப் பார்த்து அவர் கூறுகிற ஒரே ஒரு காரியம், "மகனே, மகளே, நீ என்னை விசுவாசி" என்று மட்டுமே சொல்கிறார்.

நீங்களும் தேவனை விசுவாசிக்க வேண்டும். அவர் உங்களுக்காக செய்து முடித்ததையும் விசுவாசிக்க வேண்டும். அப்படி நீங்கள் விசுவாசிப்பதே உங்களுக்கு இரட்சிப்பு ஆகும். ஒரே ஒரு உண்மை சம்பவத்தைச் சொல்லி நான் கடந்து செல்கிறேன்.

கிராமப் பகுதியிலிருந்து வாலிபன் ஒருவனை பட்டணத்திற்குக் குடும்பத்தார் அனுப்பி வைத்தார்கள். அங்கே சென்றவன் கடவுளை மறுதலிக்கிறவனாகவும், ஒரு அவிசுவாசியாகவும் திரும்பி வந்தான். அவன் வீட்டிற்கு வந்தபொழுது அவனுடைய நிலையைப் பார்த்த தாயார் அன்பாக அவனருகிலே உட்கார்ந்து, தேவனுடைய அன்பைக் குறித்தும் இரட்சிப்பின் முக்கியத்துவத்தைக் குறித்தும், தனது சொந்த இரட்சிப்பைக் குறித்தும் பகிர்ந்து கொண்டார்கள். அவன் எல்லாவற்றையும் அலட்சியம் பண்ணினான். மேலும் ஒரு நாள் அவனுக்கு உணவு பரிமாறும்பொழுது தேவனுடைய அன்பைக் குறித்துச் சொன்னார்கள். அப்பொழுது அவன், "இவ்வளவு பெரிய உலகத்தையும் குறித்து அக்கறைப்பட்டுக் கொண்டிருக்கிற கடவுள் உங்களுடைய இந்த சின்ன ஆத்துமாவைக் குறித்து அக்கறைப் பட்டுக்கொள்வார் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா?" என்று ஒரு கேள்வியைக் கேட்டான்.

அமைதியாக உணவைப் பரிமாறிவிட்டு அமர்ந்த தாயார், சற்று நேரம் கழித்து "மகனே நீ சொன்னதைக் குறித்து நான் யோசித்துக் கொண்டிருந்தேன். நீ சொல்வது ஒருவேளை சரியாக இருக்கலாம். என்னுடைய இந்தச் சின்ன ஆத்துமா பெரிதான ஒரு காரியம் அல்ல. தேவனுடைய அண்ட சராசரங்களைப் பார்க்கும்பொழுதும் அவர் இந்த சின்ன ஆத்துமாவை இழந்து போகமாட்டார். ஆனால் அவர் என்னை இரட்சிக்கவில்லையென்றால், நான் இழந்து போவதைவிட, பெரிய காரியத்தை அவர் இழந்துவிடப் போகிறார். நான் எனது ஆத்துமாவை மட்டும்தான் இழந்து போவேன். ஆனால் அவர் தனது வாக்குறுதியை காப்பாற்றவில்லை என்ற பெரிய ஒரு இழி சொல்லுக்கு ஆளாகிவிடுவார். ஏனென்றால் அவர் எனது ஆத்துமாவையும் இரட்சிப்பேன் என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். யோவான் 3 : 16லே அதை நான் வாசித்திருக்கிறேன் என்று அந்த தாயார் கூறினார்களாம்.

ஆம், அருமையான சகோதரனே, சகோதரியே, நீங்களோ நானோ தேவனுக்கு எந்த ஒரு உறுதியையும் செய்யவில்லை. அவருக்கு இதைச் செய்வோம் என்று நாம் உடன்படிக்கை பண்ணவில்லை. தேவனே நம்மோடு கூட இந்த புதிய உடன்படிக்கையை பண்ணியிருக்கிறார். அவருடைய சொந்த குமாரனாகிய இயேசு கிறிஸ்து சிலுவையிலே பலியாக அர்ப்பணிக்கப்பட்ட தினாலே அந்த பலியின் முன்னிலையிலே அவர் என்னையும் உங்களையும் பாவமற கழுவி சுத்தரிகரிப்பேன் என்று வாக்குப்பண்ணி இருக்கிறார்.

அவர் கொடுக்கும் பாவ மன்னிப்பையும், இரட்சிப்பையும், நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்ள நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள். அப்பொழுது நீங்களும் உங்கள் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். எந்த ஒரு ஊருக்கும் நீங்கள் பிரயாணம் செய்ய அவர் உங்களை கேட்கவில்லை. இவ்வளவு தொகை எனக்குக் காணிக்கை கொடுத்தால்தான் உன்னை இரட்சிப்பேன் என்று சொல்லவில்லை. நீங்கள் இருக்கிற இடத்தில் அவரை நோக்கிப் பார்த்து உங்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து இயேசுவே என்னுடைய பாவத்திற்கான தண்டனையை நீர் சிலுவையிலே சுமந்ததை நான் நம்புகிறேன். என்னுடைய உள்ளத்திலே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், எனக்குப் பாவ மன்னிப்பின் நிச்சயத்தைத் தாரும். நான் உம்முடைய பிள்ளை என்ற உறுதியை எனக்கு தாரும். நீர் கொடுத்த வாக்குதத்தத்தை நீர் காத்துக் கொள்வீர் என்று நான் விசுவாசிக்கிறேன். உம்மை என் இரட்சகராக ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்லுங்கள்.

அப்பொழுது நீங்கள் அவருடைய பிள்ளைகள் ஆவீர்கள் என்று வேத வசனம் சொல்கிறது. அவருடைய நாமத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொள்கிறவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகள் ஆகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

ஆதியாகமம் 15 : 13

வேதப் புத்தகத்திலே நாம் வாசிக்கிறது போல எபிரேய ஜனங்கள் தங்கள் தேசத்தை விட்டு மூன்று முறை வெளியே விரட்டப்படுவார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி அவர்கள் செல்வதிலே இதுதான் முதல் முறை. அவர்கள் மீண்டுமாகத் திரும்ப வருவார்கள் என்றும்

கூறப்பட்டிருக்கிறது. அவ்வண்ணமாகவே அவர்கள் திரும்ப வந்தார்கள். இரண்டாம் முறையாக பாபிலோனுக்கு சிறை பிடித்துக் கொண்டு போகப்பட்டார்கள். அப்பொழுதும் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைப்படி திரும்பி வந்தார்கள். கிறிஸ்துவுக்குப் பின் 70-வது ஆண்டிலே எருசலேம் பாழாக்கப்பட்டது. 3-வது முறையாக எபிரேய ஜனங்கள் சிதறடிக்கப்பட்டார்கள். அதற்குப்பின் அவர்கள் இங்கே வந்து சேரவில்லை. இப்பொழுது அவர்கள் இஸ்ரவேல் தேசத்திலே தங்கி இருப்பதினாலே வேத வசனம் நிறைவடைந்துவிட்டது என்று கூற முடியாது. ஆனால் கர்த்தருடைய வார்த்தையின்படி இன்னும் ஒரு நாளிலே அவர்கள் அத்தனை பேரும் அங்கே வந்து சேர்வார்கள்.

ஆதியாகமம் 15 : 14

இந்த வார்த்தைகளிலே சொல்லப்பட்டிருக்கிறது போலவே அவர்கள் பொருட்களோடே வெளியே வந்தார்கள். ஆனால் அந்தக் காட்சியைக் காண ஆபிராம் உயிரோடு இருக்கப்போவதில்லை.

ஆதியாகமம் 15 : 15

இங்கு கர்த்தர் ஆபிராமுக்குச் சொல்வது என்ன? நான் எமோரியரையும் நேசிப்பதினாலே, இப்பொழுது உன்னை இந்த தேசத்திலே வைக்க முடியாது. அவர்கள் என்னிடமாகத் திரும்புவதற்காக நான் சற்று நேரம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார். எனவேதான் இந்த எமோரியர்களுக்கு தேவன் 400 ஆண்டுகளைக் கொடுத்தார். அது நீண்ட ஒரு காலம்தான் இல்லையா? அவர்கள் அவரிடமாகத் திரும்புவார்களா என்று பார்த்தார். அப்படி அவரிடத்திலே திரும்பிய ஒரே ஒரு கானானிய பெண்மணிதான் ராகாப் என்னும் வேசி. அவள் கர்த்தரிடமாகத் திரும்பினாள். அவரை விசுவாசித்தாள்.

அருமையான சகோதரனே, சகோதரியே, இன்றும் கர்த்தர் உன்னைப் பார்த்து கேட்கும் ஒரே ஒரு காரியம், மகனே! மகளே! நீ என்னை விசுவாசிக்க மாட்டாயா? எமோரியர்களுக்கு 400 ஆண்டுகாலம் கொடுத்தார். ஆனால் அவர்கள் எல்லாரும் அவரை விசுவாசிக்கவில்லை. ஒரு பெண் மட்டுமே அவரை விசுவாசித்தாள். எனக்கும் உங்களுக்கும் ஆண்டவர் எத்தனையோ ஆண்டுகளைக் கொடுத்துவிட்டார். எத்தனையோ சாட்சிகளைக் காட்டிவிட்டார். எத்தனையோ அற்புதங்களை நாம் அனுபவித்து விட்டோம். இன்னமும் நம்முடைய விசுவாசம் குறைவுபட்டதாய் இருக்குமென்றால் அவர் நம்மைக் குறித்தும் துக்கப்படுவார்.

இன்று நீங்கள் கர்த்தரை நம்புவதற்கு பதிலாக வேறு எந்த மனிதனையாவது, பணத்தையாவது, நம்பிக் கொண்டிருப்பீர்கள் என்று சொன்னால் இன்றே ஆண்டவரே நான் இவைகள் எல்லாவற்றையும் விட நான் உம்மை விசுவாசிக்கிறேன். உம்மை நம்புகிறேன். உம்முடைய கரத்திலேயே நான் என் ஆசீர்வாதங்களை எதிர்பார்க்கிறேன் என்று சொல்வோமா?

ஆதியாகமம் 15 : 17

இங்கே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று உங்களுக்கு ஞாபகத்திலிருக்கிறதா? தேவன் ஆபிராமோடு ஒரு உடன்படிக்கை செய்யும்படியாகத் தீர்மானம் செய்து, அக்கால வழக்கத்தின்படி 3 வயது கடாரியையும், 3 வயது வெள்ளாட்டையும், 3 வயது ஆட்டுக்கடாவையும்

பாதிப் பாதியாக துண்டித்து இரண்டையும் ஒவ்வொரு பக்கமாக வைத்து, ஆபிராம் தேவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறான். அக்கினியும், ஜுவாலையும் இயேசு கிறிஸ்துவை குறித்துப் பேசுகிறது. அக்கினி என்று சொல்லும்பொழுது வரப்போகிற நியாயத்தீர்ப்பை அது குறிக்கிறது. ஜுவாலிக்கிற ஒளியானது அவரே உலகின் ஒளி என்பதை வெளிப்படுத்துகிறது.

ஆதியாகமம் 15 : 18 – 21

இந்த வேளையிலே மற்றுமொரு காரியத்தையும் நாம் நினைவிலே கொண்டுவர வேண்டும். ஆபிராம் என்ன செய்வதாக வாக்குக் கொடுத்தான்? ஒன்றும் கொடுக்கவில்லை. அவன் செய்த ஒன்றே ஒன்று தேவனை விசுவாசித்தான்.

அருமையான சகோதரனே, சகோதரியே, நீங்களும் தேவனை விசுவாசிக்கும்பொழுது தமது கிருபையினாலே அவர் உங்களையும் இரட்சிக்கிறார். உங்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவை மரத்திலே செய்து முடித்ததை நீங்கள் விசுவாசிப்பீர்களென்றால் அந்த விசுவாசத்தின் பலனை உங்கள் வாழ்க்கையிலே இன்றும் என்றென்றும் நீங்கள் அனுபவிப்பீர்கள்.

ஆதியாகமம் 16

இங்கே சாராய் ஆபிராமுக்குக் கொடுத்த ஆலோசனையைக் குறித்தும், தொடர்ந்து ஆகார் வீட்டை விட்டு ஓடுவதைக் குறித்தும் ஆபிராமுக்கு வந்த ஒரு சோதனையைக் குறித்தும் பார்க்கிறோம்.

அருமையானவர்களே, இந்த அதிகாரமே வேதத்தில் இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்குமென்று எண்ணத் தோன்றுகிறது. 15வது அதிகாரத்திலே உன்னதமான உயரத்துக்குச் சென்ற ஆபிரகாம் பரிபூரணமானவன் அல்ல என்பது தெரிகிறது. சாராயினுடைய ஆலோசனையை எடுத்துக் கொண்ட ஆபிராமைக் குறித்து சிந்திக்கும் பொழுது எகிப்திய பெண்ணாகிய ஆகாரை தனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டதின் நிமித்தமாக, தனது விசுவாசத்திலே அவன் பின்வாங்கிப் போனானோ? என்று எண்ணத் தோன்றுகிறது. இங்கே சாராய், ஆபிராம் இரண்டு பேருடைய அவிசுவாசத்தையும் நாம் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல இஸ்மவேல் பிறந்ததையும் நாம் வாசிக்கிறோம்.

உன்னதமான 15ஆம் அதிகாரத்தைத் தொடர்ந்து, இந்தத் தாழ்வானப் பகுதிக்கும் நாம் கடந்து வரவேண்டியதிருக்கிறது. பாருங்கள் சாராய் என்ன கூறுகிறாள்.

ஆதியாகமம் 16 : 1

அருமையானவர்களே, ஆபிராம் எகிப்திலே இருந்த நாட்களிலே அவனுக்குத் தொல்லை தந்த இரண்டு காரியங்களை அங்கேப் பெற்றுக்கொண்டான். ஒன்று செல்வம், அடுத்தது எகிப்திய அடிமைப்பெண்.

ஆதியாகமம் 16 : 2

அருமையானவர்களே, அந்த நாளிலே சாராய் கொடுத்த ஆலோசனை, அந்த நாட்களின் வழக்கமாய் இருந்தது. ஒரு மனைவி பிள்ளை பெற்றுக்கொள்ள முடியவில்லையென்றால், மறுமனையாட்டிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஆபிராம் இப்படிச் செய்ததினாலே தேவன்

இதை சரி என்றுச் சொல்கிறார் என்று எண்ணிவிடாதிருங்கள். தேவன் இதை ஏற்றுக்கொள்ளவே இல்லை. இது சாராயின் ஆலோசனை. ஆபிராம் சாராளுக்கு செவி கொடுத்துவிட்டான்.

குடும்பத்தலைவன் என்ற பொறுப்பை அவன் விட்டுக்கொடுத்தது போல சாராயின் ஆலோசனைக்கு சரி என்று சொல்லிவிட்டான்.

ஆதியாகமம் 16 : 3

இங்கே அந்த எகிப்திய அடிமைப் பெண் மறுமனையாட்டியாகிறாள். இது தேவனுடைய சித்தப்படி நடக்கவில்லை. ஆகார் மூலமாய் ஆபிராமுக்குக் கிடைக்கும் சந்ததியை தேவன் ஏற்றுக் கொள்ளப் போகிறதில்லை. ஏன் அவர் ஏற்றுக் கொள்ளமாட்டார்? அது தவறான பாதை. எனவே அருமையானவர்களே, ஆபிராம் செய்ததை தேவன் ஏற்றுக்கொண்டார் என்று ஒருபொழுதும் கூறக்கூடாது. இது ஒரு சரித்திர உண்மையாய் இருப்பதினாலே, இது இங்கே சொல்லப்பட்டிருக் கிறதே ஒழிய தேவன் இந்த வழக்கத்தை ஏற்றுக்கொண்டதினாலே இது சொல்லப்பட்டிருக்கிறது என்ற எண்ணிவிடக்கூடாது.

ஆதியாகமம் 16 : 4

நடந்தது என்ன பார்த்தீர்களா? அவள் கர்ப்பம் தரித்ததனாலே சாராயை தாழ்வாக, குறைவாக எண்ண ஆரம்பித்தாள். அவள் அப்படி எண்ணினாள் என்பது எப்படித் தெரியும்? அவளுடைய வார்த்தைகளிலேயும், அவளுடைய செயல்களிலேயும் அது வெளிப்பட்டு இருக்கும். விளைவு என்ன?

ஆதியாகமம் 16 : 5

அருமையானவர்களே, இந்த வசனத்தை அப்படியே நாம் கடந்து போய்விடக்கூடாது. ஆபிராமின் அந்த செயலை தேவன் ஏற்றுக்கொண்டுவிட்டார் என்று சொல்லக்கூடாது. அது தவறு என்பதை தேவன் கூறுகிறார். இப்பொழுதுதான் சாராய் தான் செய்த தவறை உணர்கிறாள். அவள் சொல்வது என்ன? எனக்கு நேரிட்ட அநியாயம் உமது மேல் சுமரும் என்கிறாள். ஆம் அவள்தான் அநியாயம் செய்தது. அதை தேவன் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போகிறதில்லை. இது வயதான ஆபிராமுக்கு இருதயத்தை உடைக்கும் ஒரு காரியமாகவே இருந்தது. ஆனால் கவனித்தீர்களா? ஆபிராமும் சாராயும் தேவனை விசுவாசிக்க வேண்டியபடி விசுவாசிக்கவில்லை.

இந்த வேளையிலே இந்த காலக்கட்டத்திலே ஆபிராம் 85 வயதுள்ளவனாய் இருக்கிறான். சாராய்க்கும் 75 வயது இருந்திருக்கும். இப்படிப்பட்ட வயதான நிலைமையிலே தங்களுக்கு குழந்தையே பிறக்காது என்ற முடிவுக்கு இரண்டுபேரும் வந்திருப்பார்கள். இதை உணர்ந்தவளாக சாராய் இதுதான் தேவனுடைய வழியாய் ஒருவேளை இருக்கலாம், ஏனென்றால் அந்த நாட்களின் வழக்கம் இதுவாகத் தானே இருக்கிறது என்று எண்ணியிருக்க வேண்டும்.

அருமையானவர்களே, அது அந்த நாட்களின் வழக்கமாய் இருந்தது. ஆனால் தேவன் செயல்படும் விதத்திற்கு மாறானதாக இருந்தது. வேதத்திலே இந்த காரியம்

சொல்லப்பட்டிருப்பதினாலே இதை தேவன் ஏற்றுக் கொண்டுவிட்டார், இது சரியான ஒரு பழக்கம் என்று நாம் எண்ணிவிடக்கூடாது.

இந்த சரித்திரப்பகுதியில் இருந்து நமது வாழ்க்கைக்கான ஒழுக்கத்தை நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. கல்தேயருடைய ஊர் என்னும் இடத்திலே ஆபிராமும் சாராயும் வளர்ந்து வந்தவர்கள். அவர்களைச் சுற்றி வாழ்ந்த மக்கள் மத்தியிலே இது அவர்கள் பழக்கமாய் இருந்தது. அவர்கள் ஒழுக்கக்கேடான காரியத்தை செய்தார்கள் என்று சொல்வதை விட அவர்கள் தேவனை விசுவாசியாமல் போனார்கள் என்பதே சரி. சாராயின் ஆலோசனைப்படி ஆகாரை மனைவியாக ஆபிராம் எடுத்துக் கொண்டது, ஒரு பாவம்தான். தேவனும் அதை ஒரு பாவமாகவே எண்ணித்தான் செயல்பட்டார். ஆனால் இந்த நாட்களிலே நாம் இந்தப் பகுதியிலே ஆபிராம் ஆகாரை எடுத்துக் கொண்டது போல யாரும் மறுமனையாட்டியை சேர்த்துக் கொள்ளக்கூடாது. அது பாவம் என்று சொல்கிறோம்.

அதே வேளையிலே ஆபிராமின் அவிசுவாசத்தைக் குறித்து அதிகமாக சிந்திக்க மறந்து விடுகிறோம். அருமையானவர்களே, அவிசுவாசம்தான் மிகப் பெரிய பாவம், இந்த இடத்திலே.

ஆதியாகமம் 16 : 6

ஆம், ஆகார் வீட்டைவிட்டு ஓடினாள். இப்படி அவள் ஓடுவது அவளுடைய ஜீவனுக்கும், குழந்தையின் ஜீவனுக்கும் கேடானதுதான். மரணத்தைக்கூட சந்திக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

ஆதியாகமம் 16 : 7

கர்த்தருடைய தூதனானவர் என்று பழைய ஏற்பாட்டிலே நாம் பார்க்கிற ஒவ்வொரு பகுதியிலேயும் இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வரும் முன்னர் கர்த்தருடைய தூதனானவர் என்று அழைக்கப்படுகிறார் என்று நாம் விசுவாசிக்கலாம்.

தொலைந்து போனவர்களைத் தேடுவது அவருடைய குணநலன். வீட்டைவிட்டு தூரமாய் ஓடிக்கொண்டிருக்கிற ஆகாரைக் குறித்தும் தேவன் அக்கறை உள்ளவராக அவளைத் தேடிச் செல்கிறார்.

அருமையான சகோதரியே, எனக்கு யார் இருக்கிறார்கள், என்னை யார் கவனிப்பார்கள், எனக்கு விளைவிக்கப்பட்ட துன்பத்தை நான் எப்படித் தாங்க முடியும், இந்த உலகத்தைவிட்டே நான் ஓடிவிடவேண்டும் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறீர்களா? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்கள் மேலும் கரிசனை உள்ளவராய் இருக்கிறார். அவரண்டை வாருங்கள். உங்கள் பிரச்சனை எதுவாக இருந்தாலும் அதற்கு அவர் ஒரு ஆலோசனையையும், ஒரு வழிநடத்துதலையும் நிச்சயமாய்க் கொடுப்பார். ஆனால் அவரை விசுவாசிக்கும் விசுவாசத்தோடு அவரண்டை வரவேண்டும்.

ஆதியாகமம் 16 : 8 – 10

இந்தக் காட்சியை அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்திலே எழுதும்பொழுது ஒரு உதாரணம் போல பயன்படுத்தியிருக்கிறார். ஆகாரைக் குறித்தும் அவளுடைய மகனாகிய இஸ்மவேலைக் குறித்தும் சொல்லும்பொழுது சீனாய் மலையிலே

www.Radio882.com

கொடுக்கப்பட்ட கற்பனைகளுக்கு ஒப்பிட்டுச் சொல்கிறார். சட்டப்படியானது, சட்டத்தின் அடிமைத் தனத்திற்கு உட்பட்டது என்பதாகச் சொல்கிறார். சாராயைக் குறித்துச் சொல்லும்பொழுது விடுதலை பெற்றவளாகக் கூறுகிறார். அவர் குறிப்பிடுகிற சத்தியம் என்னவென்றால், ஆபிராமுக்கு சொந்தமானவள் சாராய்தான். அவளே அவனுடைய மனைவி. ஆனால் இன்றைய ஜனங்களிலே அனேகர், வேறு ஒன்று தங்களுக்கு வேண்டுமென்று எண்ணுகிறார்கள். கட்டளைகளுக்குக் கீழே செல்லவேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, விசுவாசிகளாக நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிறோம். திருச்சபையானது கிறிஸ்துவுக்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கற்புள்ள கன்னிகையாக ஒரு நாளிலே கிறிஸ்துவின் மணவாட்டியாய் இருக்கும்படியாய் அவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்.

இங்கே அவர் சொல்வதின் கருத்து என்ன? நீங்கள் கட்டளைகளுக்கு, கற்பனைகளுக்கு கீழே செல்லவேண்டிய அவசியம் இல்லை. எனக்கும் உங்களுக்கும் இந்த கற்பனைகள் கட்டளைகள் தேவையில்லை. அது ஆகாரைப் போல இருக்கிறது. இதைத்தான் பவுல் கலாத்தியருக்க விளக்கிக் காட்டுகிறார்.

சரி இப்படி வீட்டிற்குத் திரும்பப் போகவேண்டிய சூழ்நிலை துக்கமானதுதான். ஏற்கனவே அந்த பிரச்சனையினாலேதான் அவள் வெளியே வந்தாள். ஆனால் அதைவிட அதிகமான துக்கத்தை பின்னால் ஆபிராம் அனுபவிக்கப் போகிறார். தேவனுடைய தூதனானவர் சொன்னதுபோல ஆகார் திரும்ப வருகிறாள், குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். அந்தக் குழந்தையும் ஆபிராமின் குமாரனாகவே இருக்கிறான்.

ஆதியாகமம் 16 : 11 – 12

அருமையானவர்களே, மத்திய கிழக்குப் பகுதியின் சரித்திரமாக இந்த வசனத்தை நாலாயிரம் ஆண்டுகள் காலத்திலே நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா? இன்றும் அங்கே என்ன நடைபெறுகிறது? இஸ்மவேலின் வம்சம் வந்தவர்கள் தேவனுடைய வார்த்தைபடியே வாழ்கிறார்கள். அவர்கள் ஆபிராமின் குமாரர் என்று தங்களைக் குறித்துச் சொல்வார்கள். அதே வேளையிலே அவர்கள் இஸ்மவேலின் சந்ததியாகவே இருக்கிறார்கள். இஸ்மவேல் மூலமாகவே ஆபிராமுக்கு அவர்கள் உறவினர்கள்.

ஆதியாகமம் 16 : 13 – 14

அருமையானவர்களே, ஆகார் மேலே கர்த்தர் எவ்வளவு கிருபையாய் இருந்தார் என்று சற்றே கவனித்துப் பாருங்கள். அவள் செய்த காரியம் அவளுடைய பாவம் அல்ல. எனவே மிகக் கிருபை பொருந்தினவராக தேவன் அவளோடு இடைபடுகிறார். காணாமல் போகிறவர்களைத் தேடும் குணநலன் உள்ள கிறிஸ்துவே இங்கே கர்த்தருடைய தூதராக ஆகாரைக் குறித்து அக்கறை கொள்கிறார்.

ஆம், பிரியமானவர்களே, அவர் அப்படிப்பட்ட ஒரு மேய்ப்பர்தான். துக்கத்தோடும், கவலையோடும் மரணத்தை நோக்கி ஓடிச் சென்ற அவளுக்கு அவரே ஆதாரமாகி ஆறுதல் சொல்லி வழிநடத்துகிறார். கவனித்தீர்களா? ஆகார் தன்னுடனே பேசின கர்த்தருக்கு நீர் என்னை

www.Radio882.com

காண்கிற தேவன் என்று பெயரிடுகிறாள். இதற்கு முன் இதை அறியாதவளாக, முதல்முறையாக இப்படிப்பட்ட ஒரு தேவனை அவள் சந்திக்கிறாள்.

தேவனைக் குறித்த மிகக் குறைவான எண்ணம் உள்ளவர்கள்தான், எகிப்திய ஜனங்கள். அவள் சொன்னது என்ன? என்னைக் காண்கிறவரை நானும் இவ்விடத்தில் கண்டடேன் அல்லவா? என்று சொல்லித்தான் நீர் என்னை காண்கிற தேவன் என்று சொல்கிறாள். தேவன் தன்னை கண்டார் என்பதைக் குறித்து உணர்ச்சி பொங்க அவள் பேசுகிறாள்.

ஏற்கனவே தேவனைக் குறித்த உயர்ந்த எண்ணம் நமக்கு இருக்கிறபடியினாலே, இந்த சம்பவம் நம்மை அவ்வளவாக அசைக்கிறதில்லை. நாமும் கூட ஒருவேளை ஆகாரை போலதான் தேவனைக் குறித்து குறைந்த அறிவுள்ளவர்களாக இருக்கலாம். இவ்வளவு மகத்துவமான தேவனைக் குறித்து குறைந்த அறிவுள்ள மனிதர்களாகிய நாம் புரிந்து கொள்வது கஷ்டமானதுதான்.

காலம் காலமாக யுகம் யுகமாக நித்தியம் வரை நாம் செய்யவேண்டிய ஒரு காரியம் தேவனை அறிந்துகொள்வது. அதற்காக ஒரு மனிதன் கற்றுக்கொள்ள முயற்சிப்பது சிறந்தது. தேவனை அறிந்து கொள்ள வேண்டியபடி ஒரு மனிதன் அறிந்து கொள்ளும்பொழுது நித்தியம் வரை அவனுடைய நிலை உயர்கிறதாய் இருக்கிறது.

ஆதியாகமம் 16 : 15 – 16

எழுபத்தி ஐந்து வயதிலே தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஊர் என்னும் கல்தேயருடைய தேசத்தைவிட்டு வெளியே வந்த ஆபிராம், கடந்த பத்து வருடங்களாகக் கானானிலும், எகிப்திலும் மீண்டும் கானானிலும் வாழ்ந்து வந்தான். பலமுறை தேவன் தரிசனமாகி அவனுடைய சந்ததியைக் குறித்து வாக்குப்பண்ணினார். ஆனாலும் சாராய் சொன்ன ஆலோசனையை எடுத்துக் கொண்டு விசுவாசத்திலே குறைந்துபோய், ஆகாரை மனைவியாக்கி அத்தனை வேதனைகளையும் அனுபவித்தான்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, தேவன் உங்களை எந்த காரியத்திற்காவது தனது நேரத்திற்காகக் காத்திருக்கும்படியாக இந்நாட்களிலே அழைத்திருப்பார் என்று சொன்னால், மற்றவர்கள் செய்கிறார்கள், சுற்றியுள்ள எல்லாரும் ஆலோசனை சொல்கிறார்கள் என்று தவறான முடிவிற்கோ, தவறான பாதைக்கோ சென்று விடாதபடி உங்களைக் கர்த்தருக்குள்ளே காத்துக் கொள்ளுங்கள்.

ஒருவேளை உங்கள் வேலைக்காக நீங்கள் காத்திருக்கிற ஒரு காரியமாக இருக்கலாம் அல்லது உங்கள் வாழ்கைத் துணைக்காக நீங்கள் காத்திருக்கும் காலமாக இருக்கலாம், அல்லது உங்கள் பிள்ளைகளுடைய எதிர்காலத்தைக் குறித்து நீங்கள் காத்திருக்க வேண்டிய காலமாக இருக்கலாம். காத்திருக்கும் காலங்களிலே காத்திருக்கும் கிருபைக்காக ஜெபியுங்கள். ஆண்டவரே, தவறான பாதையிலே நாங்கள் வழிநடந்து விடாதபடி என்னைக் காத்துக்கொள்ளும் என்று ஜெபியுங்கள். உம்முடைய பாதையைத் தெளிவாக நாங்கள் அறிந்து கொள்ளும்வரை செயல்படாமல் இருக்க எங்களுக்கு உதவிசெய்யும் என்று ஜெபியுங்கள். கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிச்சயமாக ஏற்ற நேரத்திலே நிறைவேற்றுவார். ஏனென்றால், அவர் எல்லாவற்றையும் அதின் அதின் காலத்திலே நேர்த்தியாய் செய்கிறவர்.

ஆதியாகமம் 17

நாம் ஆதியாகமம் 17ஆம் அதிகாரத்திலிருந்து சில வசனங்களை தியானிக்கப் போகிறோம். அதற்கு முன்னதாக தேவன் ஆபிராமுக்குக் கொடுத்த ஏழு தரிசனங்களைக் குறித்து சற்றே சிந்திப்போம். இந்த ஏழு தரிசனத்திலே ஐந்து தரிசனங்களைக் குறித்து ஏற்கனவே நாம் சிந்தித்து விட்டோம்.

ஆபிராமுடைய வாழ்க்கையிலேயும் சில தோல்விகள் காணப்பட்டன. அதே வேளையிலே வெற்றிகளும் காணப்பட்டன. சொல்லப்போனால் ஆபிராமுக்கு தேவன் ஏழு பரீட்சைகளைக் கொடுத்தார் என்று சொல்லலாம்.

முதலாவதாக கல்தேயரின் தேசத்தில் உள்ள ஊர் என்னும் இடத்திலிருந்து ஆபிராமை தேவன் வெளியே அழைத்தார். அவனுடைய வீட்டை விட்டு விட்டு வரும்படியாகக் கர்த்தர் சொன்னபொழுது அரைகுறையாய் அதற்குக் கீழ்ப்படிந்தான். அவனுடைய விசுவாசமானது பெலவீனமானதும் பரிபூரணம் அடையாததுமாய் இருந்தது என்றாலும் அந்த இடத்தை விட்டு அவன் புறப்பட்டுவிட்டான். தொடர்ந்து ஆபிராம் கானான் தேசத்திற்கு வந்தான். அங்கே தேவன் அவனை ஆசீர்வதித்தார்.

இரண்டாவதாக கானானிலே ஒரு பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது கானானிலிருந்து எகிப்தை நோக்கி ஆபிராம் போனான். அங்கே அவனுக்கு அதிகமான செல்வம் கிடைத்தது. ஆகார் அங்கேதான் அவனுடைய குடும்பத்தோடு இணைந்தாள். ஆனாலும் இரண்டுமே இவனுக்கு பிரச்சனையாக இருந்தது.

மூன்றாவதாக ஆபிராமுக்குப் பொருள்கள் கொடுக்கப்பட்டன. அது உண்மையான ஒரு சோதனை. இன்றைக்கு செல்வமும், பொருட்களும் தான் அனேகருக்கு இடையூராய் இருக்கின்றன. அப்படிப்பட்ட வேளையிலேயும், ஆபிராம் கர்த்தரை மறந்து போகவில்லை. தன்னுடைய சகோதரனின் மகனான லோத்துவினிடத்திலே மிக தாராளமனம் உடையவனாய் இருந்தான். அவர்களுக்கு வந்த செல்வ செழிப்போ அவர்கள் இரண்டு பேரும் பிரிந்து செல்வதற்கான காரியத்தை வகுத்தது. அதைத் தொடர்ந்து தேவன் ஆபிராமுக்குத் தரிசனமானார்.

நான்காவதாக கிழக்கத்திய இராஜாக்களை முறியடித்தபொழுது, அந்த சூழ்நிலையிலே அவனுக்கு ஒரு மதிப்பும், மரியாதையும், வல்லமையும் காணப்பட்டது. அதுவும் ஒரு உண்மையான சோதனையே, ஏனென்றால் ஆபிராம் அங்கே ஒரு வெற்றிபெற்ற மனிதனாகக் காணப்பட்டான்.

இப்பொழுதுதான் மெல்கிசேதேக்கு ஆபிராமை சந்திக்கிறார். இந்த சந்திப்பே ஆபிராமை இந்த சூழ்நிலைக்கு பெலப்படுத்துகிறது என்று சொல்லலாம். எனவே யுத்தத்திலே கிடைத்தப் பொருட்களை தனக்கு வேண்டாம் என்று சொல்ல முடிந்தது. அதற்குப் பின்னர் ஆபிராமுக்கு தேவன் தரிசனமாகி, அவனை உற்சாகப்படுத்தினார்.

ஐந்தாவதாக சாராய்க்கு ஒரு மகன் கொடுப்பதை தேவன் பிந்திப் போட்டார். ஆபிராம் பொறுமை இழந்தவனாய் காணப்பட்டான். சாராய் கூறியதைக் கேட்டு தேவனுடைய சித்தத்திற்கு

www.Radio882.com

வெளியே புறப்பட்டுப் போய் ஆகாரைத் தன்னுடைய மனைவியாக்கிக் கொண்டான். இதன் விளைவாக இஸ்மவேல் பிறந்தான். இப்பொழுதும் அரபு நாட்டைச் சேர்ந்தவர்கள் இஸ்ரவேல் மக்கள் மீது எரிச்சலோடு இருக்கிறார்கள். அது ஆயிரம் வருட அரசாட்சி வரை அப்படித்தான் இருக்கும்.

ஆபிராமின் ஆறாவது தரிசனமானது சோதோம், கொமோரா பட்டணம் அழிக்கப்படும் பொழுதும், ஏழாவது சோதனையானது அவருடைய ஒரே மகனான ஈசாக்கை பலியிடும்படியாக கர்த்தர் கூறும்பொழுதும் ஆபிராமுக்குக் கிடைத்தது.

சரி, இப்பொழுது நாம் ஆதியாகமம் 17ஆம் அதிகாரத்திற்கு வருவோம். இங்கே ஆபிராமுக்கு தேவன் ஒரு புதிய பெயரைக் கொடுக்கிறார். ஆதியாகமம் 17ஆம் அதிகாரம், ஆதியாகமப் புத்தகத்திலேயே உன்னதமான ஒரு அதிகாரம் என்று அநேகர் சொல்கிறார்கள். இங்கே தேவன் ஆபிராமோடு ஓர் உடன்படிக்கை செய்து, அவனுக்கு ஒரு குமாரனை கொடுக்கப்போவதைக் குறித்த வாக்குத்தத்தத்தை உறுதிப்படுத்துகிறார். இஸ்மவேல் வாக்குப்பண்ணப்பட்ட புத்திரன் அல்ல என்பதை ஆபிராம் அறிந்து கொள்ளத்தக்கதாக தேவன் வழிநடத்துகிறார்.

ஒரு விதத்திலே இந்தப் புத்தகம்தான் ஆதியாகமப் புத்தகத்திலே ஒரு முக்கிய அதிகாரம். அதுமட்டுமல்ல, முழு வேதப் புத்தகத்திற்கும் இதுவே முக்கியமான அதிகாரம் என்று சொல்லலாம். தேவன் ஆபிராமோடு உடன்படிக்கை செய்து ஒரு வித்தைக் குறித்தும், ஒரு தேசத்தைக் குறித்தும் வாக்குப்பண்ணுவதை நாம் பார்க்கிறோம். புதிய ஒரு பெயரோடு தேவன் ஆபிராமுக்கு தரிசனமாகிறார். அதுதான் "எல்ஷடாய்" சர்வ வல்லயுள்ள தேவன். அதுமட்டுமல்ல ஆபிராமுக்கும் ஒரு புது பெயரைக் கொடுக்கிறார். இதுவரை ஆபிராமுடைய பெயர் ஆபிராம். இப்பொழுது அதை ஆபிரகாம் என்று மாற்றுகிறார். ஆபிராம் என்றால் உன்னதமான தகப்பன் என்று பொருள். ஆபிரகாம் என்றால் கணக்கற்ற மக்களுக்கு தகப்பன் என்று பொருள்.

இந்த அதிகாரத்திலே மிகத் தெளிவாக நாம் பார்க்கும் காரியம் என்னவென்றால், இஸ்மவேல் தேவன் ஆபிராமுக்குக் கொடுத்த வாக்குதத்தப் புத்திரன் அல்ல என்பதுதான்.

ஆதியாகமம் 17 : 1

இஸ்மவேல் பிறந்தபொழுது எண்பத்து ஆறு வயது. இப்பொழுது பதிநான்கு வருடங்களுக்குப் பிறகு தேவன் ஆபிராமுக்குத் தரிசனமாகிறார். தரிசனமாகி என்ன சொல்கிறார்? “நான் சர்வ வல்லமையுள்ள தேவன், நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாய் இரு”, என்கிறார்.

ஆதியாகமம் 17 : 2

இந்த ஒரு அதிகாரத்திலே 13 முறை உடன்படிக்கை என்ற வார்த்தையை நாம் பார்க்கிறோம். இந்த 27 வசனங்களுக்குள்ளே 13 முறை உடன்படிக்கையைக் குறித்து கூறப்பட்டிருக்கிறது என்றால், உண்மையாகவே தேவன் உடன்படிக்கை குறித்துதான் பேசிக் கொண்டிருக்கிறார். இந்த இடத்திலே தேவன் தரிசனமாவது ஐந்தாவது முறை ஆபிராமுக்கு அவர் கொடுக்கும் தரிசனம்.

www.Radio882.com

இப்பொழுது தேவன் ஆபிராமுடன் உடன்படிக்கை செய்யும்படியாக மட்டுமல்ல அவனுக்கு ஒரு குமாரனைக் கொடுப்பேன் என்ற வாக்குத்தத்தத்தை மீண்டும் உறுதிப்படுத்தும்படியாக தரிசனமாகிறார். இப்படியாகக் கூறுவதன் மூலமாக இஸ்மவேல் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட சந்ததி அல்ல என்பது தெளிவாகிறது.

அப்போஸ்தலராகிய பரிசுத்த பவுல் ரோமர் 4ஆம் அதிகாரம் 19ஆம் வசனத்திலே இவ்விதமாய் சொல்லி இருக்கிறார். "அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்."

சாராளின் கர்ப்பத்தைக் குறித்து ஒருவர் சொல்லும்பொழுது அது ஒரு கல்லறை என்று சொல்கிறார். இப்படிப்பட்ட மரணத்திலிருந்து ஒரு ஜீவன் வருகிறது. ஈசாக்கு பிறந்தான். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 4ஆம் அதிகாரத்தின் இறுதி வாக்கியத்திலே இவ்வண்ணமாக இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லி முடிக்கிறார். "அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்."

மரணத்திலிருந்து ஜீவன், இப்படிப்பட்ட வாக்குத்தத்தத்தையே கர்த்தர் ஆபிராமுக்கு அன்று கொடுத்தார். அப்போது ஆபிராமுக்கு வயது தொண்ணூற்றொன்பது. அப்படியென்றால் சாராளுக்கு வயது எண்பத்தி ஒன்பது. ஈசாக்கு பிறந்தபொழுது ஆபிராமுக்கு நூறு வயது, சாராவுக்கு தொண்ணூறு வயது.

ஆதியாகமம் 17 : 3 -4

இப்பொழுது கர்த்தர் ஆபிராமிடத்திலே அவன் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவான் என்று சொல்கிறார். அருமையானவர்களே, இந்த உலகத்தில் வாழ்ந்த மனிதர்களில் எல்லாம் இந்த ஆபிராமுக்குத்தான் அத்தனை அதிகமான பிள்ளைகள் பிறந்திருப்பார்கள் என்று சொல்லலாம். சற்றே எண்ணிப்பாருங்கள். கடந்த நான்காயிரம் ஆண்டுகளாக இஸ்மவேல் வம்சத்திலும், ஈசாக்கின் வம்சத்திலும், எத்தனை கோடி ஜனங்கள், எவ்வளவு பெரிய குடும்பம்! அதுமட்டுமல்ல, ஆபிராமுக்கு ஆவிக்குரிய சந்ததியும் ஒன்று உண்டு. இயேசு கிறிஸ்துவிலே விசுவாசம் வைக்கிற ஒவ்வொருவரும் ஆபிராமின் பிள்ளைகள் என்றே அழைக்கப்படுகிறோம்.

ரோமர் 4ஆம் அதிகாரம் 16ஆம் வசனத்திலே ஆபிராமைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்பொழுது "நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படி வருகிறது" என்று சொல்கிறார்.

இப்படிக் கூறும்பொழுது எல்லா விசுவாசிகளும் அதாவது இஸ்ரவேலிலே உள்ள விசுவாசிகளும், அரேபியர்களிலே உள்ள விசுவாசிகளும் இதிலே அடங்கியிருக்கிறார்கள். எனவேதான் நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய் என்று சொல்லியிருக்கிறார்.

www.Radio882.com

ஆதியாகமம் 17 : 5

ஆபிராம் என்றால் உன்னதமான தகப்பன் அல்லது உயர்வான தகப்பன் அல்லது உயர்த்தப்பட்ட தகப்பன். ஆனால் ஆபிரகாம் என்றால் திரளான ஜாதிகளுக்கு தகப்பன். அருமையானவர்களே, வேத பண்டிதர் ஒருவர் கற்பனையான ஒரு சம்பவத்தை சற்றே சிந்தித்து எழுதி இருக்கிறார். அதை உங்களோடு நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒரு நாள் காலையிலே ஆபிராமும், சாராயும் எழுந்து, தங்கள் கூடாரத்தைச் சுற்றி, வேலை செய்து கொண்டிருக்கும்பொழுது, தூரத்திலே சில வியாபாரிகள் கடந்து வருவதை கவனித்தார்கள்.

காணப்பட்ட நீரூற்றண்டையிலே வந்து தங்கள் ஒட்டகங்களுக்கும் அங்கே தண்ணீர் பெற்றுக் கொள்ளலாமா என்பதை அறிந்து கொள்ளும்படியாக வந்தார்கள். அவர்களைப் போய் ஆபிராம் சந்திக்கிறார். அருமையானவர்களே, அந்த காலங்களிலே விருந்தோம்பலில் பெயர் பெற்ற அநேகர் இருந்திருக்கிறார்கள்.

நாம் பல சமயங்களில் குகைகளிலே வாழ்ந்த மனிதர்களைக் குறித்துப் பேசுகிறோம். எவ்வளவு பயங்கரமானவர்கள் அவர்கள் என்று சொல்கிறோம். ஆனால் உண்மை என்ன தெரியுமா? மனிதர்கள் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குப் போகும்பொழுது, அவர்கள் செல்லும் வழிகளிலே முன் பின் அறியாத அநேகர் அப்படிப்பட்டவர்களை உபசரித்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நீங்கள் எந்த ஒரு பட்டணத்திற்குச் சென்றாலும், உங்களை முன் பின் அறியாத யாராவது உபசரிக்கிறார்களா? அப்படி வெகு சிலரே இருக்கிறார்கள்.

1972ஆம் ஆண்டிலே முதல் முறையாக நான் பெங்களூர் பட்டணத்திற்கு சென்றபொழுது, இரவு மிகவும் பிந்திப் போய் சேர்ந்தேன். என்னுடைய கரத்திலே முகவரி இருந்தாலும், அவ்வளவு பிந்திய இரவிலே நான் அங்கே போய் சேரமுடியாது என்பதை அறிந்து என்னோடு பேருந்திலே வந்த ஒருவர் தன்னுடைய வீட்டிலே குடும்பத்தினர் யாரும் இல்லை என்றும், தன்னோடு வந்து தங்கிவிட்டு அடுத்தநாள் காலையிலே புறப்பட்டுப் போனால் நல்லது என்றும் கூறினார்.

தேவனே ஒரு தேவ தூதனை அனுப்பியது போல அந்த இரவு இருந்தது. இப்படி உலகத்திலே மிகச் சிலரையே நாம் சந்திக்கிறோம். கிறிஸ்தவ விசுவாசிகள் என்று கூறினாலும் இப்படி அன்னியர்களை குடும்பங்களிலே ஏற்றுக் கொள்கிறவர்கள், மிகச் சிலரே. ஏனென்றால், நம்முடைய கலாச்சாரம் அந்த அளவிற்கு மாறிப்போய் விட்டது. உபசரிப்பிலே மிகவும் குறைவாய் காணப்படுகிறோம்.

சரி ஆபிராமின் நாட்களுக்குச் செல்வோம். அந்த வழிப்போக்கர்களை சந்திக்கப் போன ஆபிராம் அவர்களோடு என்ன பேசுகிறான் என்று கவனியுங்கள். "அருமையானவர்களே, தேவையான மட்டும் உங்கள் ஒட்டகங்களுக்கு தண்ணீர் எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் ஒட்டகங்களுக்கும் நான் இறை கொடுக்கிறேன். நீங்கள் சற்று தங்கியிருந்து சென்றாலென்ன?" என்று ஆபிராம் கேட்க, "இல்லை, இல்லை நாங்கள் அவசரமாக வியாபாரம் தொடர்பாக

எகிப்திற்கு போய் கொண்டிருக்கிறோம். சீக்கிரமாய் நாங்கள் போய் திரும்ப வேண்டும்" என்று ஒருவர் சொல்கிறார்.

அப்படியிருக்கும்போது அங்கிருந்த ஒரு மனிதன் "என்னுடைய பெயர் அல்லா" என்கிறார், மற்றொருவன் "என்னுடைய பெயர் அலிபாபா" என்கிறான். "ஐயா உங்களுடைய பெயர் என்ன?" என்று கேட்டபொழுது, "நான் உன்னதமான தகப்பன்" என்று சொல்கிறான். உடனே அந்த மனிதன், "உங்களுக்கு மகனா? மகளா?" என்று கேட்டபொழுது, "எனக்கு பிள்ளைகளே இல்லை" என்றான் ஆபிராம். உடனே அவன் சிரித்துக் கொண்டவனாக, "குழந்தையே இல்லாத பொழுது உங்களுடைய பெயர் ஆபிராமா? எப்படி இந்த உலகத்திலே பிள்ளைகளே இல்லாத உங்களை நீங்கள் தகப்பன் என்று அழைக்கிறீர்கள்?" என்று கேட்டுவிட்டு சிரித்தவர்களாக பாலைவனத்தில் தொடர்ந்து அவர்கள் பயணப்பட்டார்கள்.

ஆறு மாதங்கள் கழித்து, மீண்டுமாக அவர்கள் திரும்பி வந்தார்கள். இப்பொழுதும் ஆபிரகாம் அவர்களை சந்திக்கும்படியாகப் புறப்பட்டுப் போகிறான். மீண்டுமாக அவனைப் பார்த்த உடனே, "என்ன உன்னதமான தகப்பனாரே எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். அப்பொழுது, "என்னுடைய பெயர் உன்னதமான தகப்பன் அல்ல, திரளான ஜாதிகளுக்கு தகப்பன்" என்று கூறுகிறான். உடனே வியாபாரிகள், "அப்படியென்றால் இரட்டைக் குழந்தைகளா?" என்று கேட்கிறார்கள். "இல்லை இல்லை இன்னமும் எனக்குக் குழந்தை பிறக்கவில்லை," என்று சொன்னபொழுது அத்தனை பேரும் இது என்ன வேடிக்கையாய் இருக்கிறது என்று சிரித்துக் கொண்டே கடந்து சென்றுவிட்டார்கள்.

அருமையானவர்களே, இங்கே குழந்தை பிறப்பதற்கு முன்னதாக, தகப்பன் என்று அழைக்கப்பட்ட ஒரு மனிதனைப் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல, ஆபிரகாம் உண்மையாகவே ஆபிரகாமாய் இருந்தான், திரளான ஜாதிகளுக்கு விசுவாசத்தினாலே தகப்பனாய் இருந்தான். அதாவது நாலாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று நானும் நீங்களும் இருக்கிற இந்தக் காலத்திலே உண்மையாகவே தேவன் அதை செய்து முடித்துவிட்டார். ஆபிரகாம் இப்பொழுதும் திரளான ஜாதிகளுக்கு தகப்பன்.

ஆதியாகமம் 17 : 6 - 7

தேவன் ஆபிரகாமோடு இப்படிப்பட்ட ஒரு உடன்படிக்கை செய்கிறார். நித்திய உடன்படிக்கை என்று வாசிக்கிறோம். நித்திய உடன்படிக்கை என்றால் இன்றும் அது உண்மையானதா? ஆம் நிச்சயமாக. கிறிஸ்துவை நாம் விசுவாசிப்போம் என்றால் நமக்கும் நித்திய ஜீவனை தேவன் வாக்குப்பண்ணி இருக்கிறார். அதுதான் தேவன் செய்கிற உடன்படிக்கை.

ஆதியாகமம் 17 : 8

தேவன் தாம் என்ன செய்வேன் என்பதை சொல்கிறார். நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான் தேசம் முழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார்.

www.Radio882.com

அருமையானவர்களே, இந்த ஜனங்களோடு தேவன் செய்த உடன்படிக்கை, நித்திய உடன்படிக்கை, அது எளிதாக முறிக்கப்படாதது. முடிவடைந்து போகும் ஒரு உடன்படிக்கையும் அல்ல. அந்த கானான் தேசத்தை தொண்ணூற்று ஒன்பது வருடங்களுக்காக அவர் ஒத்திக்கு விடவில்லை. நித்திய உடன்படிக்கையாக நித்திய சுதந்திரமாகக் கொடுக்கிறார். எபிரேய மக்கள் மூன்று முறை அந்த தேசத்திலே இருந்தார்கள். குறிப்பிட்ட நிபந்தனையின் பேரிலேயே அவர்கள் அந்த இடத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள்.

முதலாவதாக தேவன் அவர்களை எகிப்திற்கு அனுப்பிவிட்டார். அங்கே போய் அவர்கள் பலுகிப் பெருகியுள்ளார்கள். சுமார் 70 பேர் அடங்கிய ஒரு குடும்பமாக அங்கே சென்றார்கள். சுமார் 1½ லட்சம் மக்களாகத் திரும்பினார்கள். மீண்டுமாக பாபிலோனிய சிறையிருப்பிற்குள்ளாக அவர்கள் பிடித்துச் செல்லப்பட்டார்கள். ஏனென்றால் அவர்கள் தேவனுக்கு சாட்சியாய் இருப்பதை விட்டுவிட்டு விக்கிரக வணக்கத்திற்குத் திரும்பினார்கள். அதுமட்டுமல்ல கிறிஸ்துவுக்குப் பின் 70வது ஆண்டிலேயும் மேசியாவை அவர்கள் புறக்கணித்த படியினாலே சிதறடிக்கப்பட்டார்கள். இன்னமும் அவர்கள் திரும்பிவரவில்லை. அவர்கள் மூன்று முறை தேசத்தைவிட்டு வெளியேற்றப்படுவார்கள் என்றும், மூன்று முறை திரும்ப வருவார்கள் என்றும் தேவன் ஏற்கனவே முன்னறிவித்து இருக்கிறார். இரண்டு முறை அவர்கள் திரும்ப வந்திருக்கிறார்கள். இன்னும் ஒருமுறை அவர்கள் முழுமையாக அங்கே திரும்ப வருவார்கள். அதற்குபின் அந்த தேசத்தை விட்டு அவர்கள் வெளியே போகப் போவதில்லை.

தேவன் அவர்களைத் திரும்ப கொண்டுவரும்பொழுதுதான் ஆயிர வருட அரசாட்சி ஆரம்பமாகும்.

ஆதியாகமம் 17 : 9 – 11

உடன்படிக்கையின் அடையாளம்தான் விருத்தசேதனம். உடன்படிக்கையின் அங்கத்தினர்கள் ஆவதற்காக இஸ்ரவேல் ஜனங்கள் விருத்தசேதனம் செய்யவில்லை. தேவனோடு அவர்களுக்க உடன்படிக்கை இருந்ததினாலே அதற்கு அடையாளமாக அவ்வாறு விருத்தசேதனம் செய்தார்கள்.

அருமையானவர்களே, இன்றைய நாட்களிலே விசுவாசிகளின் வாழ்க்கையிலே நற்செயல்கள் எந்த இடத்திலே இருக்கிறதோ அதேப் போலத்தான் அந்த நாளிலே விருத்தசேதனம் இருந்தது. இரட்சிக்கப்படுவதற்காக நீங்கள் நல்ல காரியங்களை செய்வதில்லை. நீ இரட்சிக்கப்பட்டு இருப்பதினாலே நல்ல காரியங்களைச் செய்கிறவர்களாய் இருப்பீர்கள். இதுதான் உலகத்திலே ஒரு வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறதாய் இருக்கிறது. அவருடைய பிள்ளைகள் ஆவதற்காக நாம் நன்மைகளையும் தான தர்மங்களையும் பண்ணுவது இல்லை. நாம் அவருடைய பிள்ளைகளாய் இருப்பதினாலே நன்மை செய்கிறவர்களாய் இருக்க வேண்டும்.

அருமையான சகோதரனே, சகோதரியே, உங்கள் வாழ்க்கையிலே கடவுள் உங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஏதாவது நன்மைகளை செய்து கடவுளை பிரியப்படுத்த முயற்சி செய்கிறீர்களா? அல்லது இயேசுகிறிஸ்து என்னுடைய தண்டனையை சிலுவையிலே ஏற்றுக் கொண்டார் என்பதை விசுவாசித்து அவருடைய பிள்ளையாக ஆனபடியினாலே

www.Radio882.com

அவருடைய அன்பினாலே உந்தித் தள்ளப்பட்டு நல்ல காரியங்களை செய்ய வேண்டும் என்று உங்களை அர்ப்பணித்திருக்கிறீர்களா? சற்று எண்ணிப்பாருங்கள்.

ஆதியாகமம் 17 : 12

அருமையானவர்களே, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு எவ்வளவு தெள்ளத் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது என்பதை எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? பாலகனாக பிறந்த பொழுது எல்லா கட்டளைகளும் கைக்கொள்ளப்பட்டன. அவர் ஆபிரகாமின் குமாரனாகப் பிறந்தார் என்பது சொல்லப்பட்டிருக்கிறது. தாவீதின் மைந்தனாகப் பிறந்தார் என்பதும் கூறப்பட்டிருக்கிறது. ஆபிரகாம் வம்ச வழியிலே அவர் பிறந்ததினாலே எட்டாவது நாளிலே விருத்தசேதனம் பண்ணப்பட்டார்.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் கலாத்தியர் 4ஆம் அதிகாரம் 5ஆம் வசனத்திலே."ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை, தேவன் அனுப்பினார்" என்று குறிப்பிடுகிறார்.

ஆதியாகமம் 17 : 13

மீண்டுமாக விருத்தசேதனம் உடன்படிக்கையின் அடையாளம் என்பதைப் பார்க்கிறோம். உடன்படிக்கை செய்து கொள்வதற்காக அப்படிச் செய்வேண்டியதில்லை. ஏற்கனவே தேவன் அவர்களோடு ஒரு உடன்படிக்கை செய்துவிட்டார். அருமையானவர்களே, இன்றும் அநேகர் இதைக் குறித்து தவறான எண்ணம் கொண்டவர்களாய் இருக்கிறார்கள். ஒரு திருச்சபையிலே சேர்ந்தால் ஞானஸ்நானம் பெற்றால் அவர்கள் இரட்சிக்கப்டுவார்கள் என்று நினைக்கிறார்கள், இல்லை இரட்சிப்பைப் பெற்று கொள்வதற்காக இவைகளை நீங்கள் செய்யமுடியாது. நீங்கள் இரட்சிக்கப்பட்டவர்களானால் திருமுழுக்கு பெற்று திருச்சபையின் அங்கமாகச் சேரமுடியும்.

குதிரை வண்டியை குதிரைக்குப் பின்னால்தான் வைக்க வேண்டுமே ஒழிய குதிரைக்கு முன்னால் வைக்க முடியாது. அநேகர் குதிரைக்கு முன்னாலே குதிரை வண்டியை வைக்கிறார்கள்.

ஆதியாகமம் 17 : 14

உண்மை என்ன? கீழ்ப்படியாதவர்கள் இருந்தார்கள். குறிப்பாக எகிப்தை விட்டு அவர்கள் வெளியே வந்தபொழுது அத்தனை பேருமே கீழ்ப்படியாமல் போனார்கள். இவ்வண்ணமாய் கீழ்ப்படியாமல் போகும்பொழுது அவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்பது தேவ நியதி. ஆனால் இந்த உடன்படிக்கையைப் பொறுத்த மட்டிலேயும் தனிமனிதனோ, ஒரு குழுவினரோ தேவன் ஆபிரகாமோடு செய்த இந்த உடன்படிக்கையை அழித்துப் போடமுடியாது. இது நித்திய உடன்படிக்கை. உடன்படிக்கையை மீறினவனே அழிக்கப்படவேண்டும், உடன்படிக்கை அல்ல. உடன்படிக்கை உறுதியாகவே இருந்தது. எனவேதான் இது ஒரு மகத்தான உடன்படிக்கை.

ஆதியாகமம் 17 : 15 – 16

சாராய் என்று இருந்த பெயரை இப்பொழுது கர்த்தர் சாராள் என்று மாற்றுகிறார். வயதான நிலைமையிலே இருந்த ஆபிரகாம் திரளான ஜாதிகளுக்கு தகப்பன் என்று அழைக்கப்படுவான் என்றால் சாராளும் ஜாதிகளுக்கு தாய் என்று அழைக்கப்படுவாள்.

www.Radio882.com

ஆதியாகமம் 17 : 17

வயதான ஆபிரகாம் அங்கே சிரிக்கிறான். இது அவிசுவாசத்தின் நகைப்பு அல்ல, உள்ளம் மகிழ்வினாலே ஏற்பட்ட நகைப்பாக இருந்திருக்க வேணடும்.

உங்களுக்கும் இப்படிப்பட்ட அனுபவங்கள் ஏற்பட்டு இருக்கும் என்று நான் நினைக்கிறேன். நம்முடைய வாழ்க்கையிலேயும் தேவன் அவ்வப்பொழுது செய்கிற காரியங்களை நாம் நினைக்கும்பொழுது, நம்மை அறியாமலேயே நாம் சிரிக்கிறோம் இல்லையா? அதைக் குறித்து நகைப்பதைத் தவிர வேறு ஒன்றும் நம்மால் செய்யமுடியாது.

ஆபிரகாம் சாராளின் இந்த நிலைமையைக் குறித்து ரோமர் 4ஆம் அதிகாரம் 17 முதல் 23ஆம் வசனங்கள் வரை அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் என்ன எழுதியிருக்கிறார் என்பதை சற்றே வாசித்துப் பாருங்கள்.

ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், தேவனுடைய அந்த அற்புதத்தைக் குறித்து மனம் மகிழ்ந்து போனான். என்றாலும் உடனடியாக ஆபிரகாமின் உள்ளத்திலே ஒரு எண்ணம் வருகிறது. அவன் குடும்பத்தில் உள்ள சிறுவனான இஸ்மவேலைக் குறித்துத்தான் அந்த எண்ணம்.

ஆதியாகமம் 17 : 18

ஆண்டவரே, என்னுடைய வீட்டிலே வளருகிறானே அந்த சிறுவன் இஸ்மவேல் என்று கூறி நெருக்கமான உறவில் இருக்கும் இஸ்மவேலை நினைவு படுத்துகிறான். சில காலங்களுக்குப் பின்னர், இஸ்மவேல் வீட்டை விட்டு அனுப்பப்பட்டபொழுது, ஆபிரகாம் வயதுடையவனாய் இருந்தான். அதற்குப் பின்னர், இஸ்மவேலை ஆபிரகாம் பார்த்ததாகத் தெரியவில்லை.

அருமையானவர்களே, இஸ்மவேலைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஆனால் அவனும் ஆபிரகாமின் குமாரன். ஆபிரகாம் தன் மகனை நேசித்தான். அவனை வீட்டைவிட்டு அனுப்ப வேண்டிய நேரத்திலே நிச்சயமாக அது உள்ளத்தை உடைக்கும் ஒரு சம்பவமாகவே இருந்திருக்க வேண்டும். ஆகாரை தனக்கு மனைவியாக எடுத்துக் கொண்டது தான் செய்த எவ்வளவு பெரிய தவறு என்று அடிக்கடி ஆபிரகாம் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். இந்த பாவமானது ஆபிரகாமை மட்டும் பாதிக்கவில்லை. ஆபிரகாம் பாவம் செய்ததினாலே ஆரம்பம் முதலே கானானிலே பிரச்சனைகள்தான். சின்னப் பாவம்தானே, எப்படியாவது அதை விட்டுவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? இல்லை. கலாத்தியர் 6 : 7, "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்."

விதைத்ததைப் போன்ற ஒன்றை அல்ல, விதைத்ததையே அறுப்பான். எனவேதான் இஸ்மவேல் உமக்கு முன்பாக பிழைத்திருப்பானாக என்று தேவனை நோக்கி கேட்கிறார்.

ஆதியாகமம் 17 : 19

தேவன் இவ்வாறு சொல்வதற்குக் காரணமென்ன? நான் இஸ்மவேலை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை, அது தவறானது என்று தெளிவாய் சொல்கிறார். வேதத்திலே

எழுதப்பட்டிருப்பதினாலே பலதார மணம் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியது, தேவன் அதை ஏற்றுக் கொள்கிறார் என்று எண்ணிவிடக்கூடாது.

தேவன் தாம் கொடுத்த வாக்குறுதியிலே உறுதியாய் இருக்கிறார். ஏற்கனவே தாம் கொடுத்த அந்த வாக்குறுதியிலே அவர் எள்ளளவும் விலகவும் இல்லை. அவர் வேண்டாம் என்று ஒதுக்கிப் போடவும் இல்லை. தாம் செய்வேன் என்று சொன்ன அதே காரியத்தை அவர் செய்யப் போகிறார்.

இந்த வசனத்திலே ஈசாக்கு ஏற்கனவே பிறந்துவிட்டது போல அவர் பேசுகிறார். வருகிற வருடத்திலே என்று சொல்லி குறிப்பிட்ட காலத்தைக் குறித்து கூறுகிறார். ஆனாலும் அது இன்னமும் நடைபெறவில்லை. ஆனால் இனி நடைபெறப் போகிறது.

ஆதியாகமம் 17 : 22

தேவனின் வார்த்தைகளிலே சொல்வதென்றால், ஆபிரகாம் நீ இனி அமைதியாக இரு போதும், தேவன் இதை ஏற்கனவே தீர்மானித்து விட்டார்.

அருமையானவர்களே, நம்முடைய வாழ்க்கையிலே கூட சில காரியங்களைக் குறித்து ஆண்டவரிடத்தில் ஜெபிப்பதை நாம் நிறுத்தி இருப்போம். ஏனென்றால் ஏற்கனவே நாம் அதைக் குறித்து எவ்வளவோ ஜெபித்து விட்டோம். இனி அதற்கு மேல் நாம் ஜெபிப்பதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால் அவர் நமக்கு தரப்போகிறார் என்ற நிச்சயம் நமக்குள்ளே கடந்து வந்திருக்கும். ஆனால் இன்னும் சிலர் ஆண்டவர் கொடுப்பார் என்ற நிச்சயத்தைப் பெற்ற பின்னரும் கூட தொடர்ந்து தேவனிடத்தில் அதைக் குறித்து முறையிட்டுக் கொண்டே இருப்பார்கள். தேவன் கொடுத்த விடை அவர்கள் கேட்ட காரியம் அவர்களுக்குக் கொடுக்கப்பட மாட்டாது, என்ற விடையாய் இருந்தாலும் தொடர்ந்து கேட்பார்கள். இஸ்மவேலைக் குறித்துக் கூட நீ இனி ஜெபிக்க வேண்டாம். ஏனென்றால் வருகிற வருஷத்தில் நான் அதைக் கொடுக்கப் போகிறேன், என்று தெளிவாய் கூறிவிட்டார்.

அருமையான சகோதரனே, சகோதரியே, தேவன் இல்லை, வேண்டாம், முடியாது என்று சொன்ன காரியங்களுக்காக நீங்கள் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கிற ஒருவராய் இருக்கிறீர்களா? அப்படி என்றால் அவ்வாறு நீங்கள் ஜெபிப்பதினாலே எந்த பயனும் ஏற்படப் போவதில்லை, என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

அதுமட்டுமல்ல, ஆண்டவரிடத்திலே நீங்கள் கேட்டு உங்களுக்கு தருவேன் என்று வாக்குக்கொடுத்த ஏதாவது காரியத்தைக் குறித்தும் திரும்ப திரும்ப அவரைத் தொந்தரவு பண்ணுவது போல நீங்கள் ஜெபித்துக் கொண்டு இருக்கவும் அவர் சொல்லவில்லை. அவர் கொடுக்கப் போகிறேன் என்று சொன்ன காரியத்தைக் குறித்து நீங்கள் நன்றியோடு அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள். ஆபிரகாம் ஜெபித்த ஜெபத்திற்கு தேவன் பதிலளித்தார்.

இருந்தாலும் அவருடைய உடன்படிக்கையை பொறுத்த மட்டிலேயும் அதை இஸ்மவேலோடு செய்யவில்லை, ஈசாக்கோடே அவர் செய்தார்.

எனவே தேவனுடைய மனதை மாற்ற ஆபிரகாம் அதைக் குறித்துப் பேச வேண்டியதில்லை. அருமையானவர்களே, இன்றும் சிலர் தேவன் கேட்க விரும்பாத அல்லது

விடை கொடுக்க விரும்பாத காரியத்தைக் குறித்தும் தொடர்ந்து தேவனை தொந்தரவு செய்து கொண்டே இருப்பார்கள். எதையுமே நாம் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அதற்கு பதிலளிப்பேன் என்று அவர் சொல்லியிருக்கிறார். வேத வசனங்களிலே அவருடைய சித்தம் என்ன என்பதை நாம் அறிந்திருக்கிறோம். எனவே அதின் அடிப்படையிலே நாம் ஜெபிக்கும்பொழுது ஆண்டவர் நிச்சயமாய் பதில் கொடுக்கிறவராய் இருக்கிறார்.

ஆதியாகமம் 17 : 23 – 27

ஏற்கனவே இதைக்குறித்து நாம் பார்த்தோம். தேவன் ஆபிரகாமோடே செய்த உடன்படிக்கைக்கு அடையாளம்தான் விருத்தசேதனம். இஸ்மவேல் ஏன் இதில் சேர்த்துக்கொள்ளப்பட்டான் என்று சிலர் கேட்கலாம். ஏன் தெரியுமா ? தேவன் இஸ்மவேலையும் ஆசீர்வதித்து அவனையும் அதிகமாக பலுகவும், பெருகவும் பண்ணுவேன் என்று கூறினார் அல்லவா? அந்தக் காரணத்தினால்தான்.

ஆனாலும் தேவன் ஆபிரகாமுக்குக் கூறிய வாக்குத்தத்தத்தின் மகன் அவன் அல்ல, தேவன் பயன்படுத்தப்போகும் தேசத்தின் தகப்பன் அவனல்ல, அவனுடைய வழியிலே மேசியா தோன்றப் போவதில்லை. ஈசாக்கைக் குறித்து தேவன் எதை முன்குறித்தாரோ எதை முன்னறிவித்தாரோ, அதையே அவர் செயல்படுத்தப் போகிறார்.

இப்போது நாம் 18ஆம் அதிகாரத்திற்குள்ளே பிரவேசிக்கப் போகிறோம். புதிய ஏற்பாட்டை நீங்கள் கற்றுக் கொள்ளும் வரை ஆதியாகமம் 18ஆம் அதிகாரமும், 19ஆம் அதிகாரமும் ஏன் வேதப் புத்தகத்திலே சேர்க்கப்பட்டு இருக்கிறது என்ற கேள்வியோடே இருப்பீர்கள். ஏனென்றால் இது ஆபிரகாமின் வாழ்க்கை வரலாறில் இருந்து விலகிச் செல்கிறதே என்று யோசிக்கலாம். இந்த அதிகாரங்களிலே சோதோம், கொமோரா பட்டணங்களின் அழிவைக் குறித்து நாம் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 18

18ஆம் அதிகாரம் ஒரு நீண்ட அதிகாரமாய் செல்கிறது. இதிலே சோதோம், கொமோரா பட்டணங்களின் நியாயத்தீர்ப்பைக் குறித்து தேவன் ஆபிரகாமுக்கு சொல்வதையும், அந்த பட்டணங்களுக்காக ஆபிரகாம் தேவனிடத்திலே விண்ணப்பம் செய்வதையும் பார்க்கிறோம். இது ஒரு உதாரணத்தைப் போல இருக்கிறது.

தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கையிலே தேவனோடு நெருங்கி ஜீவிக்கும் வாழ்க்கைக்கு அடையாளமாய் இருக்கிறது. ஆனால் 19ஆம் அதிகாரத்திலே சோதோம், கொமோரா பட்டணத்திலே லோத்துவின் வாழ்க்கையைக் குறித்து நாம் பார்க்கப் போகிறோம். ஒரு வெடித்து சிதறிய வாழ்க்கை என்று சொல்லலாம். இதற்கெல்லாம் காரணம் ஒரு நாளிலே அவன் செய்த தீர்மானம். துரதிர்ஷ்டவசமாக, இன்றும் நாம் இப்படிப்பட்ட இரண்டு விதமான மக்கள் கூட்டத்தையும் கிறிஸ்தவ சமுதாயத்தில் பார்க்கிறோம்.

ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை வாழும் ஒரு கூட்டம், வெடித்து சிதறிய வாழ்க்கையுள்ள மறுகூட்டம். கிறிஸ்துவை அறிந்தவர்களுடைய வாழ்க்கையிலேயும், உடைந்து போன வாழ்க்கைகளை நாம் பார்க்கிறோம். தேவனுடைய சித்தத்தை விட்டு அவர்கள் வெளியே போய்

www.Radio882.com

விட்டார்கள். அவர்கள் தேவனுடைய இரட்சிப்பை இழந்து போனார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் மற்ற எல்லா காரியங்களையும் அவர்கள் இழந்து போய் விட்டார்கள்.

1 கொரிந்தியர் 3ஆம் அதிகாரம் 15ஆம் வசனத்தைப் பாருங்கள்.

"ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான் ; அவனோ இரட்சிக்கப்படுவான் ; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்."

இப்பொழுது நாம் 18ஆம் அதிகாரத்திற்குள்ளே கடந்து செல்வோம்.

ஆதியாகமம் 18 : 1

இப்போது ஆபிரகாம் மம்ரேயின் சமபூமியிலே தங்கியிருந்தான். இப்போது வயது முதிர்ந்தவனாக 99 வயது நிரம்பியவனாய் இருக்கிறான். வெயில் அதிகமாக இருக்கிறது. எனவே வெளியில் எங்கும் செல்லாமல் கூடார வாசலில் உட்கார்ந்திருக்கிறான்.

ஆதியாகமம் 18 : 2

அருமையானவர்களே, ஆபிரகாமுடைய வாழ்க்கையில் காணப்பட்ட விருந்தோம்பலைக் கவனித்தீர்களா? கடந்த அதிகாரத்தைப் படிக்கும்போது எகிப்திற்குப் போன வியாபாரிகளுக்கு ஆபிரகாம் உபசரணை செய்தான் என்று ஒரு சம்பவத்தை சிந்தித்தோம். ஒரு வேளை அது கற்பனையாக இருந்தாலும் ஆபிரகாமுடைய குணம் அப்படித்தான் இருக்கிறது. இங்கேயும் முன்பின் தெரியாத மூன்று பேரைக் கண்டவுடனே கூடார வாசலிலிருந்து அவர்களுக்கு எதிரே ஓடிச்சென்று, தரைமட்டும் குனிந்து, அவர்களை வாழ்த்துகிறான்.

ஆதியாகமம் 18 : 3, 4

முன்பின் அறியாத ஒருவரைப் பார்த்து உங்கள் கால்களைக் கழுவி மரத்தடியில் சாய்ந்திருங்கள் என்று சொல்வது விநோதமான ஒரு காரியமாய் இருக்கிறது இல்லையா?

இந்த நாட்களிலே நாம் யாரையும் பார்த்து அவ்வாறு கூறுகிறதில்லை. ஆனால் இது பழங்காலத்தில் இருக்கிற ஒரு வழக்கமாய் இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கிரது போல மேல் வீட்டு அறையிலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீஷர்களுடைய கால்களைக் கழுவினார். ஆனால் அதிலேயும் ஒரு பெரிய ஆவிக்குரிய செய்தி அடங்கியிருந்தது. இங்கே ஆபிரகாம் அந்த வழிப்போக்கர்களைப் பார்த்து உங்கள் கால்களைக் கழுவுங்கள் என்று சொல்கிறான். இப்பொழுதும் சில இடங்களிலே வீடுகளுக்குள்ளே செல்லும் முன்பதாக வெளியே இருந்து வந்தவுடன் செருப்பைக் கழற்றி விட்டு, கால்களைக் கழுவி வீட்டிற்குள்ளே போகும் பழக்கம் இருக்கிறது. பாதரட்சைகளைக் கழற்றி, கால்களைக்கழுவி விட்டு அமர்ந்திருப்பது ஒரு வீட்டிற்குள்ளே அமர்ந்திருப்பது போன்ற ஒரு உணர்வை உண்டுபண்ணுகிறதாய் இருக்கும். ஆபிரகாம் இந்த மூவரையும் நன்றாக உபசரிக்கிறான். தொடர்ந்து என்ன செய்தான் பாருங்கள்.

ஆதியாகமம் 18 : 5 - 8

இது எவ்வளவு அருமையான உபசரணை இல்லையா ? அருமையான ஒரு விருந்தை ஆயத்தம் செய்கிறான். ஒரு இளம் கன்றைப் பிடித்து வேலைக்காரனிடம் கொடுத்து சமைக்கச்

சொல்கிறான். வெண்ணெய், பால் எல்லாவற்றையும் கொண்டு வைத்து அந்த விருந்தினர்களை உபசரிக்கிறான். இவர்கள் ராஜாக்களின் வரிசையில் வந்த விருந்தினராய் இருக்கிறார்கள்.

எபிரெயர் 13ஆம் அதிகாரம் 2ஆம் வசனத்தைப் பாருங்கள்.

"அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள் ; அதினாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு" என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆம் அதுதான் ஆபிரகாம். அவன் உபசரணை செய்யும் மனிதர்கள் யாரென்று அவனுக்குத் தெரியாது.

ஆதியாகமம் 18 : 9.

பல கலாச்சாரங்களிலே வீட்டிற்கு வரும் விருந்தினர்களை உபசரிக்க பெண்கள் வெளியே வருகிறது இல்லை. குறிப்பாக அந்நாட்களிலே அது உறுதியான ஒரு பழக்கமாய் இருந்தது. ஆனால் அவர்கள் ஆபிரகாமின் மனைவியாகிய சாராளைக் குறித்து விசாரிக்கிறார்கள்.

ஆதியாகமம் 18 : 10

எந்த பெண்ணுக்கும் இருக்கும் ஆவலைப் போலத்தான் சாராளும் வந்தவர்கள் என்ன பேசிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை கவனித்துக்கொண்டு இருக்கிறாள். தன்னைக்குறித்து விசாரிப்பதையும், தன்னைக் குறித்து சொல்லப்பட்ட காரியத்தையும் அவள் கூடாரத்தின் உள்ளிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறாள். இப்பொழுதுதான் ஆபிரகாமும், சாராளும் தாங்கள் அறியாமலேயே தேவதூதர்களை உபசரிக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்கிறார்கள்.

ஆதியாகமம் 18 : 11, 12

இங்கே சாராளின் கேள்வி என்ன? நான் ஒரு குமாரனைப் பெற்றுக்கொள்வது, கூடிய ஒரு காரியமா என்ற எண்ணத்துடன் அவள் நகைக்கிறாள். இது எப்படிப்பட்ட நகைப்பு? இது உண்மையாவது என்றால் பெரிய காரியமல்லவா என்ற ஒரு நகைப்புத் தான் அது.

அருமையானவர்களே, நம்மில் அநேகருக்கு இப்படிப்பட்ட அனுபவம் இருக்கலாம். சில குறிப்பிட்ட சம்பவங்களிலே தேவன் நமக்கு மிக நல்லவராகக் காணப்பட்ட பொழுது நாமும் இவ்வண்ணமாய் நகைத்திருக்கலாம். சில வேளைகளிலே இந்த ஆசீர்வாதத்திற்கெல்லாம் நான் தகுதியே இல்லையே என்று நாம் எண்ணியிருப்போம். ஆண்டவர் எனக்கு இப்படிச் செய்கிறாரே என்று நாம் வியந்திருப்போம். மகிழ்ந்திருப்போம், நகைத்திருப்போம். எனக்கு இப்படி நடக்க முடியாது என்று நாம் வியந்திருப்போம். அதைப் போலத் தான் சாராளும் நகைக்கிறாள்.

ஆதியாகமம் 18 : 13 - 15

தேவனுடைய கேள்வியினாலே சாராள் பயந்து போனாள். என்றாலும் உள்ளத்தின் உணர்வுகளை வெளிப்படுத்துவதைக் குறித்து அவளால் அதை தவிர்க்க முடியவில்லை. ஆதியாகமம் 18 : 16.

ஆபிரகாமுடைய வீட்டிற்கு ஒரு கோட்டைச் சுவரோ ஒரு முன் கதவோ இல்லை. எனவே அவனுடைய கூடாரத்தை விட்டு சற்று அப்புறம் வரைக்கும் அவர்களுக்கு வழிவிட்டனுப்பும்படி அவர்களோடு நடந்து சென்றான். ஆபிரகாம் வசித்த இடத்திலிருந்து சோதோம், கொமோராவை

www.Radio882.com

நோக்கி அவர்கள் புறப்பட்டு நடந்து போகிறார்கள். அங்கே இருந்து சோதோம், கொமோரா பட்டணங்களைப் பார்க்கக் கூடியவர்களாக இருந்தார்கள். தெளிவான சில சீதோஷண நிலையின் காலங்களில் மிகத் தொலைவு வரை அங்கே சென்று வந்த சிலர் சொல்வதென்ன? எருசலேமில் இருந்து பெத்லகேமைப் பார்க்க முடியும் என்கிறார்கள். சமாரியாவின் அழிவு இருக்கும் இடத்திலிருந்து எருசலேமைப் பார்க்க முடியும். மத்திய தரைக் கடலைப் பார்க்க முடியும். கலிலேயா கடலைப் பார்க்க முடியும். அந்த தேசத்தின் பல இடங்களிலிருந்து எர்மோன் மலையைப் பார்க்க முடியும்.

இங்கே ஆபிரகாம் தன் வீட்டிற்கு வந்த விருந்தாளிகளோடு, சற்று தூரம் நடந்து போகிறான். அவர்கள் அங்கே பார்க்கும் பொழுது தூரத்திலே சோதோம்,கொமோரா பட்டணங்களைப் பார்க்கக் கூடியவர்களாய் இருந்தார்கள். அந்த நாட்களிலே அது மிகவும் அதிகமாகக் கேளிக்கைகள் நடக்கும் இடமாய் இருந்தது. எனவே அது அழகான இடமாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

ஆதியாகமம் 18 : 17, 18

இந்த நேரம் வரை கர்த்தர் தன்னை வெளிப்படுத்தவில்லை. சோதோம், கொமோராவுக்குப் புறப்பட்டுச் செல்கிறவர்களாகவே அவர்கள் காணப்பட்டார்கள். அவர் அதை அழிக்கும்படியாகப் போகிறார். எனவேதான் நான் செய்யப் போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ என்று கூறுகிறார். ஏன் அதை தேவன் ஆபிரகாமுக்கு மறைக்க மாட்டார்? வரும் நாட்களிலே ஆபிரகாம் மிகப்பெரிய தாக்கத்தை உண்டுபண்ணும் ஒருவராகப் போகிறார். அவர் பலத்த ஜாதி ஆகப் போவதாலும், ஏராளமான ஜனங்கள் அவருடைய சந்ததியிலே வரப் போவதாலும் தேவன் அதை மறைக்க விரும்பவில்லை.

ஆம் அருமையான சகோதரனே, சகோதரியே, இன்று வரை ஆபிரகாமுடைய சந்ததி நம்மையும் தாக்கத்துக்குள்ளே ஏற்படுத்துகிறது. இதை நாம் தவிர்க்கவே முடியாது.

ஆதியாகமம் 18 : 19

தேவன் சொல்வதை கவனித்தீர்களா? நான் இதை ஆபிரகாமுக்கு வெளிப்படுத்துவேன், இதை நான் மறைக்கப் போவதில்லை. நான் மறைப்பேனென்றால் ஆபிரகாம் என்னைக் குறித்து தவறான ஒரு எண்ணம் கொண்டுவிடக் கூடும். ஏனென்றால் ஆபிரகாம் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின் வரும் தனது வீட்டாருக்கும் நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்துக் கொள்ளுங்கள் என்று கட்டளையிடுவான்.

அருமையான சகோதரனே, சகோதரியே, இன்றைக்கு எத்தனை பெற்றோர் தங்கள் பிள்ளைகள், தன்னுடைய பேரப்பிள்ளைகள் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடு வாழ வேண்டும், கர்த்தரை நேசிக்கிறவர்களாய் வாழ வேண்டும், கர்த்தருடைய ஊழியத்திலே ஈடுபாடு கொண்டவர்களாய் வாழ வேண்டும் என்று வாஞ்சிக்கிறோம். அநேகர் தங்களுடைய, பிள்ளைகள் உலகத்தில் பெயரெடுக்க வேண்டும், பணம் சம்பாதிக்க வேண்டும், உயர்ந்த பதவியிலே இறுக்க வேண்டும் என்றுதான் எண்ணுகிறார்கள்.

ஆனால் இவை எல்லாவற்றையும் விட நம்முடைய பிள்ளைகள் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்திலேயும், கர்த்தரை நேசிக்கிற அன்பிலேயும் வளர்வதே சிறந்த ஒரு காரியம்.

அப்படிப்பட்ட காரியத்தைக் குறித்து ஆபிரகாம் கருத்துள்ளவனாய் அதைக் குறித்துப் போதிப்பான் என்று தேவன் ஆபிரகாமைக் குறித்து முன்னதாகவே அறிந்தவராய் பேசுகிறார். நீங்கள் ஒருவேளை உங்கள் பிள்ளைகளுடைய ஒழுக்கத்தைக் குறித்து, பழக்க வழக்கங்களைக் குறித்து கருத்தற்றவர்களாய் இருப்பீர்கள் என்றால், அருமையானவர்களே அதைக் குறித்து நீங்கள் கருத்து உள்ளவர்களாய் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டியதும், அவர்களுக்கு முன்மாதிரியாய் இருக்க வேண்டியதும், அவர்களுக்கு ஆலோசனை சொல்ல வேண்டியதும் உங்களுடைய கடமை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

ஆதியாகமம் 18 : 20, 21

அருமையானவர்களே, தேவன் எந்த ஒரு காரியத்தையும் அவசரப்பட்டு, தீவிரித்து செய்கிறதில்லை. தேவன் அந்த நகரங்களை அழிக்கப் போவதைக் குறித்து ஆபிரகாமுக்குச் சொன்னது நல்ல ஒரு காரியம். ஏனென்றால் அப்படிச் சொல்லாமல் இருந்திருப்பாரென்றால், தேவனைக் குறித்த ஒரு தவறான எண்ணம் ஆபிரகாமுக்கு உண்டாயிருந்திருக்கும். தனக்கு வேண்டியவர்கள் அங்கே இருந்தபடியினாலே அவர்களை குறித்து இரக்கமில்லாமல் தேவன் தண்டிக்கிறவராய் இருந்தார் என்று ஆபிரகாம் எண்ணியிருக்கக்கூடும். எனவே அந்தப் பட்டணங்களை தேவன் அழிக்கப் போகிறார் என்பதைக் குறித்து ஆபிரகாம் தன்னுடைய மனதிலே அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தேவன் அதை அறிவிக்கிறார். அந்த நேரத்திலே தேவனைக் குறித்து ஆபிரகாம் அறிந்ததை விட தேவன் இவ்வாறு தனது சித்தத்தை வெளிப்படுத்திய பிறகு அதிகமாய் அறிந்து கொண்டான் என்று சொல்லலாம். தேவன் ஆபிரகாமுக்கு அதை சொன்னது நல்ல ஒரு காரியம் ஏனென்றால் தேவனைக் குறித்தும் சோதோம் கொமோராவைக் குறித்தும் ஆபிரகாம் தவறான எண்ணம் உள்ளவனாகத்தான் இருந்திருக்கிறான். அவன் பல காரியங்களைக் குறித்து இப்படித் தவறான எண்ணம் கொண்டவனாய் தான் இருந்தான்.

எனவேதான் எனக்குப் பிரியமான சகோதரனே, சகோதரியே, தேவன் தம்மைக் குறித்து அடிக்கடி நமக்கு வெளிப்படுத்தித் தான் யார் என்பதை காட்டிக் கொண்டே இருக்கிறார். அதுமட்டுமல்ல நமக்கு அவர் தெரியப்படுத்தாத அநேகக் காரியங்களும் உண்டு. என்றாலும் சாதாரண மனிதர்கள் கூட தன்னை அறிந்து கொள்ளும் அளவிற்கு அவர் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறார்.

எனவே எந்த ஒரு மனிதனும் தனது வாழ்க்கையிலே எனக்கு கடவுளைத் தெரியாது, என்னைப் படைத்தவரை நான் அறியவில்லை என்று சொல்ல முடியாது.

ஆதியாகமம் 18 : 22, 23.

சோதோம் கொமோராவின் அழிவைக் குறித்து கேள்விப்பட்ட உடனே ஆபிரகாமின் மனதிலே வந்த முதல் காரியம் என்ன என்பதைக் கவனித்தீர்களா? ஆம், லோத்துவைக் குறித்த எண்ணம்தான் வந்தது. ஏற்கனவே ஒரு முறை லோத்துவையும் அவன் குடும்பத்தையும் அவன்

www.Radio882.com

காப்பாற்றி இருக்கிறான். இப்பொழுது மீண்டுமாக லோத்து ஒரு ஆபத்திலே இருக்கிறான். லோத்துக்கும் தேவனுக்கும் இடையிலே உண்டான உறவைக்குறித்து ஆபிரகாம் பலமுறை வியந்திருப்பான் என்று நினைக்கிறேன். ஆனால் ஆபிரகாம் இரட்சிப்பைப் பெற்றவன் என்ற விசுவாசம் அவனுக்குள்ளே இருந்திருக்கும். எனவேதான் கர்த்தரிடத்திலே துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ என்று கேட்கிறான். காரணம் என்ன? லோத்து தேவனைக்குறித்து அநேகருக்கு சொல்லி, அந்தப் பட்டணத்திலே அவர்களை விசுவாசிகளாய் ஆக்கியிருப்பான் என்று ஆபிரகாம் எண்ணினான். எனவே நீதிமான்களும் அங்கே இருக்கும்பொழுது எப்படி தேவன் பட்டணத்தை அழிக்கப் போகிறேன் என்று சொல்கிறார் என்பதைக் குறித்து கேட்கிறான். என்ன ஒரு அருமையான காட்சி பார்த்தீர்களா?

ஆதியாகமம் 18 : 24

ஆபிரகாம் ஐம்பது முதல் ஆரம்பிக்கிறான். ஆண்டவரே ஐம்பது நீதிமான்கள் மட்டும் இருந்தாலும் அந்த பட்டணத்தை நீர் அழித்து விடுவீரோ என்று கேட்கிறான்.

ஆதியாகமம் 18 : 25, 26

ஆம், அருமையானவர்களே இன்றும் அநேகர் கேட்கிற கேள்விதான் இது. உலகத்தின் நியாயாதிபதியானவர் சரியானதைச் செய்யாமல் இருப்பாரோ? அதற்கான ஒரு விடையும் இருக்கிறது. வேதத்தின் மீதிப் பகுதிகள் சர்வலோக நியாயாதிபதி எப்பொழுதுமே நீதி செய்வார் என்பதைக் காட்டுகிறது.

ஆம், அருமையானவர்களே, தேவன் எப்பொழுதும் செய்வதும் சரியான காரியமாகவே இருக்கும். அவர் செய்வது சரியல்ல என்று நீங்கள் எண்ணுவீர்கள் என்றால் பிரச்சனை தேவனிடத்தில் இல்லை. உங்களுடைய வாழ்க்கையிலேயும், உங்கள் எண்ணத்திலேயும் தான் அந்தப் பிரச்சனை இருக்கிறது. நீங்கள் தவறான காரியத்தை எண்ணிக் கொண்டு இருக்கிறீர்கள். எல்லா உண்மையும் உங்களுக்குத் தெரியாது, எல்லா விபரங்களும் உங்களுக்குத் தெரியாது. எல்லா விபரங்களும் உங்களுக்குத் தெரியுமென்றால் சர்வலோக நியாயாதிபதி நீதியையே செய்கிறார் என்பதை அறிந்து கொள்வீர்கள். அநேக வேளைகளில் நாம் தவறான காரியத்தை எண்ணுகிறோம். தேவன் சரியானதையே எண்ணுகிறார். சரியானதையே செய்கிறவராய் இருக்கிறார்.

அருமையான சகோதரனே, சகோதரியே, தேவன் செய்யும் காரியங்களைக்குறித்து உங்களுக்குக் கேள்விக்குறி இருக்கிறதா? தொடர்ந்து வேத வசனங்களை நீங்கள் வாசியுங்கள், கவனியுங்கள், படியுங்கள். தேவன் எப்பொழுதுமே சரியான காரியத்தைச் செய்வார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். உங்கள் வாழ்க்கையின் சூழ்நிலைகள் உங்களுக்கு ஒருவேளை கேள்விக்குறியை எழுப்பலாம். ஆனால் தேவன் ஒருபொழுதும் தவறான தீர்மானம் செய்கிறதில்லை. தவறான செயல்களிலே அவர் ஈடுபடுகிறதில்லை. லோத்துவைக் குறித்த எதிர்பார்ப்பே என்னையும் உங்களையும் குறித்து தேவன் வைத்திருக்கிறார். நாம் வசிக்கும் இடத்திலே, வேலை செய்யும் இடத்திலே, நம் மூலமாக மற்றவர்கள் கிறிஸ்துவின் அன்பை அறிந்து அவருடைய நீதியினாலே மூடப்பட்டு இருப்பார்கள் என்று ஆண்டவரும் எதிர்பார்க்கிறார். நம்முடைய வார்த்தையிலே, வாழ்க்கையிலே நாம் சாட்சியாய் இருக்கிறோமா?

www.Radio882.com

ஆண்டவருடைய அன்பை குறித்து நமக்கு அருகிலே இருக்கிறவர்களோடு நாம் பகிர்ந்து கொண்டிருக்கிறோமா? நம்முடைய குடும்பத்தில் உள்ள எல்லாரும் கர்த்தரை அறிந்தவர்களாய் இருக்கிறார்களா? சற்றே எண்ணிப் பார்ப்போம்.

அருமையான சகோதரனே, சகோதரியே, நீங்கள் பிறந்த இடம் ஒன்று, வளர்ந்த இடம் ஒன்று, இன்று எங்கோ இருக்கிறீர்கள் என்றால் தேவன் ஒரு நோக்கத்தோடு உங்களை வைத்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். யாரைக் குறித்துப் பாரத்தை உங்கள் உள்ளத்திலே கர்த்தர் கொடுக்கிறாரோ? அவர்களுக்காகக் கருத்தோடு நீங்கள் ஜெபியுங்கள். அவர்களைச் சந்தித்து பேசுங்கள். தேவனுடைய அன்பை அவர்கள் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவி செய்யுங்கள். தேவன் எப்பொழுதுமே காரியங்களைச் சரியாய் செய்கிறவர் என்ற எண்ணத்தோடு அவருக்கு நன்றி செலுத்துங்கள். இந்தப் பகுதியிலே நாம் வாசிக்கிறது போல நம்மிடத்திலேயும் தேவன் இரகசியங்களை வெளிப்படுத்தும் அளவு நாம் தேவனோடு ஆபிரகாமைப் போல நெருங்கியத் தொடர்புள்ளவர்களாய், உறவுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

அருமையான சகோதரனே, சகோதரியே, என்னுடைய வாழ்க்கையிலே எப்படி எப்படியெல்லாமோ நடக்கிறது, இது கர்த்தரால் சரி செய்யப்பட முடியுமா என்ற கேள்விக் குறியோடு ஒரு வேளை நீங்கள் இருக்கலாம். ஒரு வேளை குழந்தை பாக்கியம் இல்லாததினாலே நீங்கள் கலங்கிப் போய் இருக்கலாம். இந்த வேதப் பகுதியிலே நாம் வாசிப்பது என்ன? கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? நீங்களும் விசுவாசித்தீர்கள் என்றால் ஒரு உற்பத்தி கால திட்டத்திலே உங்கள் குடும்பத்திலேயும், ஒரு குழந்தை செல்வத்தைக் கொடுக்க கர்த்தர் ஆவலுள்ளவராய் இருக்கிறார். நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்.

ஆதியாகமம் 18 : 26

பிரியமானவர்களே இந்த வசனத்தை கவனித்தீர்களா? ஐம்பது நீதிமான்களைக் கண்டால் அழிக்க மாட்டேன் என்று சொல்லவில்லை, இரட்சிப்பேன் என்று சொன்னார். இதுதான் ஆண்டவருடைய அன்பு.

இந்த உலகத்தில் இன்றும் பாவத்தில் வாழ்கின்ற மக்களை அழிக்க வேண்டும் என்பது ஆண்டவருடைய விருப்பம் அல்ல. அவர் ஒவ்வொருவரையும் இரட்சிக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறார். இந்த வார்த்தைகளைக் கேட்ட ஆபிரகாம் மீண்டுமாக அதைக்குறித்து சிந்தனை செய்கிறான்.

ஆதியாகமம் 18 : 27, 28

வேறு வார்த்தைகளிலே சொல்ல வேண்டுமென்றால், ஆபிரகாம் கேட்பது என்ன? ஆண்டவரே, அங்கே ஒருவேளை நாற்பத்தைந்து நீதிமான்கள்தான் இருக்கலாம், அப்படியென்றாலும் நீர் பட்டணத்தை அழிப்பீரோ என்று கேட்கிறான். அதற்கு கர்த்தர் அங்கே நாற்பத்தி ஐந்து நீதிமான்களைக் கண்டாலும் நான் அழிக்கமாட்டேன் என்கிறார். கர்த்தருடைய வார்த்தைகள் ஆபிரகாமுக்கு ஒரு தைரியத்தைக் கொடுத்தது. உடனே அவன் தொடர்ந்து வருகிற வசனங்களில் நாம் பார்ப்பது போல ஆண்டவரே 40 நீதிமான்கள்தான் இருந்தால், என்று கேட்கிறான். 40 நீதிமான்கள் இருந்தாலும் நான் அதை அழிப்பதில்லை என்கிறார் கர்த்தர்.

www.Radio882.com

மீண்டுமாக ஆண்டவரே 30 நீதிமான்களைக் கண்டால், என்று கேட்கிறான். அதற்குக் கர்த்தர் 30 நீதிமான்களைக் கண்டாலும் நான் அதை அழிப்பதில்லை என்று சொன்னார். 31ஆம் வசனத்திற்கு வரும்பொழுது, ஆண்டவரே நான் பேசத் துணிந்தேன் என்று மீண்டும் கூறி 20 நீதிமான்கள் அங்கே காணப்பட்டால் அழிப்பீரோ என்று கேட்கிறான். அதற்கு அவர் 20 நீதிமான்கள் இருந்தாலும் நான் அதை அழிப்பதில்லை என்கிறார்.

திரும்பத் திரும்ப இவ்வாறு கேட்டபடியினாலே கர்த்தர் கோபப்படுவாரோ என்ற எண்ணம் கொண்டவனாக, மீண்டுமாய் ஆபிரகாம் கர்த்தரைப் பார்த்து, ஆண்டவருக்கு கோபம் வராதிருப்பதாக, நான் இன்னும் இந்த ஒரு விசை மாத்திரம் பேசுகிறேன். 10 நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர் 10 நீதிமான்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார்.

ஆதியாகமம் 18 : 33

இப்பொழுது நமக்கு ஒரு கேள்வி எழும்புகிறது. 10 எண்ணிக்கைக்குக் கீழே ஏன் ஆபிரகாம் கேட்கவில்லை? ஏனென்றால் லோத்துகூட கர்த்தரைவிட்டு தூரமாய் போயிருப்பானோ என்ற பயம் ஆபிரகாமுக்குள்ளே வந்திருக்கும். இது அவனுடைய இருதயத்தை அதிகமாய் உலுக்கியிருக்கும். எனவே அதற்குக் கீழே எண்ணிக்கையைக் குறைத்துக் கேட்க அவனால் முடியவில்லை.

ஒருவேளை ஆண்டவரே ஒரே ஒரு நீதிமான் இருந்தால் நகரத்தை அழிப்பீரோ என்று கேட்டு இருந்தாலும், தேவன் என்ன சொல்லியிருப்பார் தெரியுமா? ஒரே ஒரு நீதிமான் இருந்தால் அவனை அந்த நகரத்தை விட்டு நான் வெளியே அழைத்த பிறகுதான் நகரத்தை அழிப்பேன், ஏனென்றால் நான் அந்த ஒரு நீதிமானை அந்த நகரத்தோடு அழிக்க மாட்டேன் என்றுதான் கூறியிருப்பார்.

இது எப்படி உங்களுக்குத் தெரியும்? என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் அருமையானவர்களே, தேவன் அவ்வாறுதான் செய்ததை இங்கே நாம் பார்க்கிறோம். அங்கே ஒரே ஒரு நீதிமான் காணப்படுகிறான். ஆபிரகாமால் அதை நம்பமுடியவில்லை. ஆனால் தேவனுக்கு அது தெரியும். எனவேதான் லோத்துவைப் பார்த்து: பட்டணத்தை விட்டு வெளியே போ, நீ வெளியே போகும் வரை நான் இதை அழிக்க முடியாது என்று கூறுவதை நாம் பார்க்கிறோம்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, இந்த நேரத்தில் மற்றும் ஒரு உண்மையையும் உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன். திருச்சபையானது உலகத்தைவிட்டு எடுக்கப்படும் முன்னதாக மகா உபத்திரவ காலம் வராது. திருச்சபை மகா உபத்திரகாலத்திற்குள்ளே கடந்து செல்ல முடியாது. ஏனென்றால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய தண்டனையை அனுபவித்து விட்டார். மகா உபத்திரவ காலம் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் ஒரு பகுதியாகும். எனவேதான் திருச்சபை அதாவது விசுவாசிகளின் கூட்டம் அந்தப் பாடுகளின் வழியாக கடந்து செல்லாது. அந்தப் பெரிய சத்தியத்தை வெளிப்படுத்தும் ஒரு உண்மைதான் இந்த சோதோம் கொமோரா சம்பவம்.

www.Radio882.com

சோதோம் கொமோரா உலகத்தைக் காண்பிக்கும் ஒரு படம். இன்றைக்கு உலகம் எப்படி பாவத்திலே சீரழிந்து கொண்டிருக்கிறதோ அதே போலத்தான் அன்று அந்த நகரம் இருந்தது. இப்படி கூறுவதாலே தேவன் நாளைக்கே வரமுடியாது என்று நான் கூறவில்லை.

அவர் இன்றைக்கும் வரலாம், நாளைக்கும் வரலாம். ஆனால் இந்த சம்பவத்தில் நாம் பார்ப்பதுபோல விசுவாசிகளை மத்திய வானத்திலே அவர் தன்னோடு அழைத்த பின்னர்தான் மகா உபத்திரவ காலம் நியாயத்தீர்ப்பு உலகத்திற்கு ஆரம்பமாகும்.

மத்திய வானத்தில் அவரை சந்திப்பதற்கு நீங்கள் ஆயத்தமாய் இருக்கிறீர்களா? அதற்கான தகுதியை நாம் எப்படி பெற்றுக் கொள்கிறோம். நம்முடைய பாவத்திற்கான தண்டனையை இயேசு சிலுவையிலே சுமந்து தீர்த்தார். அவருடைய நீதியினாலே நாம் நீதிமான் ஆக்கப்படுகிறோம் என்பதை விசுவாசித்து ஏற்றுக் கொள்கிறவர்கள் கிறிஸ்துவின் வருகையிலே பங்கடைவார்கள்.

அதிகாரம் 19

சரி இப்பொழுது நாம் 19ஆம் அதிகாரத்திற்குள்ளே கடந்து செல்கிறோம். 18ஆம் அதிகாரத்திலே தேவனோடு நமக்குக் கிடைக்கக்கூடிய ஒரு ஆசீர்வாதமான உறவைக் குறித்து நாம் சிந்தித்தோம். இப்பொழுது அங்கே காட்சி மாறுகிறது. ஆபிரகாம் தங்கியிருந்த மம்ரேயின் சமவெளியில் உள்ள எப்ரோனைவிட்டு லோத்து வசித்த சோதோம் பட்டணத்திற்குப் போகிறோம். இந்த அதிகாரத்திலே நாம் பார்க்கிறது போல லோத்து தனது மனைவியுடனும், இரண்டு பிள்ளைகளுடனும், சோதோமை விட்டு வெளியே வருகிறான். அப்பொழுது சோதோம் கொமோரா அழிக்கப்படுகிறது. ஆனால் லோத்துவின் மனைவி திரும்பிப் பார்த்து உப்புத்தூணாகிறாள். பின்னர் லோத்து தன் குமாரத்திகளோடு செய்த பாவத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம்.

19ஆம் அதிகாரத்திலே ஒரு உடைந்து நொறுங்கிப்போன வாழ்க்கையைப் பார்க்கிறோம். அருமையானவர்களே மறந்து போகக்கூடாது. இந்த லோத்து ஒரு நீதிமானான மனிதன்தான். ஆதியாகமப் புத்தகத்தில் உள்ள இந்த சம்பவத்தை மட்டும் நாம் வாசிப்போம் என்று சொன்னால் அவன் நீதிமான் என்பதை நாம் நம்ப முடியாது. ஆனால் 2 பேதுரு 2ஆம் அதிகாரம் 8ஆம் வசனத்திலே பேதுரு கூறியிருக்கிற சத்தியம் லோத்தைக்குறித்து நமக்கு உண்மையைத் தெளிவுபடுத்துகிறது. 2 பேதுரு 2 : 9, "நாள்தோறும் அவர்களுடைய அக்கிரம கிரியைகளைக் கண்டு, கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க."

லோத்து சோதோமில் வசித்தது உண்மைதான். ஆனால் அங்கே அவன் மகிழ்ச்சியாக இல்லை. சோதோமுக்குள்ளே அவன் புறப்பட்டுப் போன நாள் உண்மையாகவே ஒரு மிகப் பரிதாபமான நாள். ஏனென்றால் லோத்து தனது குடும்பத்தையும் இழந்து போனான். அந்த முழு சம்பவத்தை நீங்கள் வாசிக்கும்பொழுது எப்படி முழு குடும்பத்தையும் இழந்து போனான் என்ற பரிதாபமான சம்பவத்தை நீங்கள் பார்க்கலாம்.

அருமையானவர்களே, இன்று கூட அநேக தனி மனிதர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாய் இருக்கலாம். ஆனால் அவர்கள் வாழ்க்கைத் தரத்தின் நிலையினாலோ அல்லது அவர்கள்

www.Radio882.com

வசிக்கும் இடத்தினாலேயோ அவர்களுடைய குடும்பத்தை அவர்கள் இழந்து போகிறார்கள். ஒரு நீதிமானாக தங்கள் குடும்பத்திலே கொடுக்கக்கூடிய தாக்கத்தை இழந்து போகிறார்கள். ஏன் இறுதியாக சாட்சியையுமே இழந்து போகிறவர்களாய் இருக்கிறார்கள்.

திருச்சபையிலே போதகராய் இருந்ததினாலே இப்படிப்பட்ட அநேகக் கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையை நானும் பார்த்திருக்கிறேன்.

ஒருமுறை ஒரு வாலிபன் தனது போதகரிடத்திலே, "ஐயா ! இந்த கிறிஸ்தவ சமயமே வெறும் போலியானது. என்னுடைய தகப்பனாருடைய மரணத்திற்கு பிறகு நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிடப் போகிறோம்" என்று கூறினானாம். ஒருவேளை அவன் தனது குடும்பத்தைக் குறித்துக் கூறினாலும் அவனுடைய தகப்பனார் எவ்வளவு உண்மையற்ற ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையை அவர்களுக்கு முன் வைத்திருக்கிறார் என்பது புரிந்து கொள்ளக் கூடியதாய் இருக்கிறது.

நாம் பார்க்கிறது போல அந்த குடும்பத்தின் தலைவன் கர்த்தரை அறிந்த ஒருவராய் இருந்தாலும் தனது மகனை இழந்து போனார். மற்ற இடங்களிலேயும் அவர் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை இழந்து போனார். ஆனால் அருமையான சகோதரனே, சகோதரியே, அந்த தகப்பனாருடைய இரட்சிப்பைக் குறித்து கேள்வி கேட்க முடியாது. அந்த மனிதர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒருவர் தான். ஆனால் அதை அவருடைய வாழ்க்கையில் வெளிப்படுத்தவில்லை.

அதே போலத்தான் லோத்துவினுடைய வாழ்க்கையிலேயும். அவன் நீதிமானாய் இருந்தாலும், அவனுடைய குடும்பத்தை அவனால் இரட்சிக்க முடியவில்லை. ஒருவேளை சோதோம் பட்டணத்துக்குள்ளே கடந்து செல்லாதவர்களாய் இருந்திருந்தால் அவனுடைய வாழ்க்கை வித்தியாசமானதாக இருந்திருக்கும்.

ஆம், அருமையான சகோதரனே, சகோதரியே, நாம் எங்கே வசிக்கிறோம்? யாரோடே அதிகமாய் பழகுகிறோம்? நம்முடைய பிள்ளைகளுடைய பழக்க வழக்கங்கள் யாருடன் அதிகமாய் இருக்கிறது என்பது எல்லாவற்றையும் நாம் கவனிக்க வேண்டும். இல்லையென்றால் நாம் இரட்சிக்கப்பட்டு இருந்தாலும் நம்முடைய குடும்பத்திலே மனைவியை பிள்ளைகளை நாம் விசுவாச வாழ்க்கையை விட்டு இழந்து போவதற்கான வாய்ப்பிருக்கிறது.

ஆதியாகமம் 19 : 1

அருமையானவர்களே 2 தூதர்களும் சோதோமிலே நியாயத்தீர்ப்பை அறிவிப்பதற்காகப் புறப்பட்டுப் போகிறார்கள். இப்போது லோத்து சோதோமின் வாசலிலே அமர்ந்திருக்கிறான். அந்நாட்களிலே பொதுவாக இப்படி ஒரு பட்டணத்தின் வாசலிலே நியாயாதிபதிகள்தான் உட்கார்ந்திருப்பார்கள். இந்த லோத்து சோதோம் பட்டணத்திற்குள்ளே கடந்து சென்றது மட்டுமல்ல, அங்கே உள்ள அரசியலிலேயும் இவன் தலையிட்டவனாய் காணப்படுகிறான். ஒரு நீதிமான் எப்படி அநியாயம் செய்கிறவர்களோடு இணைந்தான் என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருக்கிறது என்றாலும் தனது குடும்பத்தோடு இருக்கும் நாட்களிலே கற்றுக் கொண்ட அந்நியர்களை உபசரிக்கும் பழக்கத்தை மறவாதவனாக இருந்திருக்கிறான்.

முன்பின் தெரியாத இந்த தூதர்களை எப்படி ஆபிரகாம் வரேவற்றானோ, அதே போல இவனும் வரவேற்கிறான்.

ஆதியாகமம் 19 : 2

இவர்கள் வெகுதூரம் நடந்து வந்ததினாலே கால்களிலெல்லாம் அழுக்கு படிந்திருக்கும். என்னதான் ஆபிரகாம் வீட்டிலே அவர்கள் கால்களைக் கழுவியிருந்தாலும், மீண்டுமாக அந்த சமவெளியிலே நடந்து வந்தபொழுது அவர்கள் கால்கள் அழுக்காகி இருக்கும். லோத்து விருந்தோம்பலில் சிறந்தவனாய் இருந்தபடியினாலே இவர்களை தனது வீட்டிற்கு அழைக்கிறான். நாங்கள் தெருவிலேதான் தங்குவோம் என்று முதலாவது அவர்கள் கூறினாலும், பின்னர் லோத்துவின் வீட்டிற்குள்ளே வந்தார்கள்.

ஆதியாகமம் 19 : 3

இப்பொழுது இந்த மனிதர்களுக்கு மற்றுமொரு விருந்து கிடைக்கிறது. ஆபிரகாமோடு ஒரு விருந்தை அனுபவித்தார்கள். இப்பொழுது லோத்துவின் வீட்டில் ஒரு விருந்து சாப்பிடுகிறார்கள். அவர்கள் தாங்கள் வீதியிலே இராத்தங்குவோம் என்று சொன்ன பொழுது ஒரு உண்மை வெளிப்படுகிறது. ஏனென்றால் லோத்து உடனே என்ன சொல்கிறான், அவர்களை மிகவும் வருந்திக் கேட்டுக் கொண்டான் என்று வாசிக்கிறோம்.

ஒருவேளை அவன் நீங்கள் இந்த பட்டணத்திலே இப்படி வெளியில் தங்கக்கூடாது. இது மிகவும் ஆபத்தானது உங்கள் உயிருக்கே ஆபத்தாக முடியும் என்று சொல்லியிருக்கலாம். இன்றும் அநேகப் பட்டணங்கள் இவ்வாறு ஆபத்து நிறைந்ததாக காணப்படுகிறது. இரவிலே ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னர் வீதிகளிலே செல்வதோ, தனியாக செல்வதோ ஆபத்தானதாய் இருக்கிறது. தனியாக வீடுகளிலே இருப்பவர்கள் கூட இன்றைக்கு கொலை செய்யப்படுவதை நாம் பார்க்கிறோம்.

சோதோம் கொமோரா பட்டணத்திலே அன்று எப்படி இருந்ததோ அப்படித்தான் இன்றும் அநேகப் பட்டணங்களிலே இருக்கிறது. அப்படி வருந்திக் கேட்டுக் கொண்ட பின்னர்தான் அவர்கள் உள்ளே வந்தார்கள்.

ஆதியாகமம் 19 : 4, 5

இந்த பயங்கரமான சூழ்நிலை அந்த பட்டணத்தின் கீழ்த்தரமான குணநலனை வெளிப்படுத்துகிறது. இன்று வரை அந்தப் பாவத்தைக் குறித்து சொல்லும்போது, சோதோமின் பாவம் என்றே அழைக்கப்படுகிரது.

ஆண்கள் ஆண்களோடே தவறான உறவு கொள்வதை அந்த பட்டணத்தின் வழக்கமாக வைத்திருக்கிறார்கள். இன்றைக்கும் இப்படிப்பட்ட பாவ பழக்க வழக்கத்தையும் சில திருச்சபைகளிலேயும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதுதான் பரிதாபமான ஒரு நிலைமை. இது பயங்கரமான பாவம். சோதோமின் தெருக்களிலே முதலாவது லோத்து சென்றபோது அங்கே இருந்த அழகான தெருக்களையும், கட்டிடங்களையும் மட்டுமே அவனுடைய கண்கள் கண்டன. இந்தப் பாவத்திலே வாழ்கிற மக்களை அவன் அறிந்து கொள்ளவில்லை. ஆனால் உள்ளே

www.Radio882.com

போய் குடியிருந்தபொழுதுதான், இது இத்தனை அசுத்தமான ஒரு பட்டணம் என்பதை அறிந்து கொண்டான். அந்தப் பட்டணத்தின் பாவம் அவ்வளவு பெரிதாய் இருந்தபடியினாலே, தேவன் அதை நியாயம் தீர்க்க தீர்மானம் செய்தார். அந்தப் பட்டணத்தை அவர் அழிக்கப் போகிறார்.

இந்தப் பகுதியை வாசிக்கிற நாம் ஒரு தெளிவான சத்தியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அருமையான சகோதரனே, சகோதரியே, இன்று பாவத்தைக்குறித்து மிக வித்தியாசமான கருத்து நிலவி வருகிறது. பாவத்தைப் பாவம் என்று வெறுத்து ஒதுக்காமல் சிலத் திருச்சபைகள் அப்படிப்பட்ட பாவங்களையும், அது ஒன்றும் பெரிய தவறு இல்லை என்று எடுத்துக் கொள்கிறார்கள். ஆணை ஆண் திருமணம் செய்வதும், பெண்ணைப் பெண் திருமணம் செய்வதும் ஏற்றுக்கொள்ளப்படுவதாய் இருக்கிறது. இது எத்தனை அசுத்தமான காரியம் என்பதை அறியாமல் ஒரு கூட்ட மக்கள் அவர்கள் பின்னாலேயும் செல்கிறார்கள்.

ஆனால் தேவன் இப்படிப்பட்ட கூட்டங்களை ஏற்றுக் கொள்ளப் போகிறதில்லை. சிலர் தாங்கள் கடவுளுடைய பிள்ளைகளாகவும் இருந்து கொண்டு, பாவத்திலேயும் தொடரலாம் என்று நினைக்கிறார்கள். அது முடியாது என்று தேவன் தெளிவாய் சொல்கிறார். இதற்கு சோதோம் ஒரு எடுத்துக்காட்டு. ரோமர் 6ஆம் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களையும் சற்று கவனமாய் வாசியுங்கள்.

“ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே.

பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?”

நான் கிறிஸ்தவனாய் இருந்துகொண்டே, சில பாவங்களை நான் செய்துகொண்டே இருக்கலாம் என்று எண்ணுவது மிகப் பெரிய ஒரு தவறு. பாவத்தைப் பாவம் என்று வெறுத்து ஒதுக்க வேண்டும். ஆனால் சோதோம் மக்கள் அதை எளிதாக எடுத்துக்கொண்டார்கள்.

எனவேதான் சோதோம் கொமோரா பட்டணத்தை தேவன் அழித்தார்.

ஆதியாகமப் புத்தகத்திலே தேவனைக் குறித்த மிகக் குறைந்த அறிவே நமக்கு இருக்கிறது, இப்பொழுது நாம் கடவுளைக்குறித்து மிக அறிந்திருக்கிறோம் என்று சொல்ல வேண்டாம். இதைக் குறித்து நீங்கள் வாக்குவாதம் செய்வதும் தவறு. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பாவிகளை சேர்த்துக் கொண்டார். உண்மைதான். ஆனால் அவர்களோடு அவர் இடைப்பட்டபொழுது அவர்களுடைய வாழ்க்கையை அவர் மாற்றியமைத்தார்.

விபச்சாரத்திலே இருந்த பெண், அதற்கு பிறகு அப்படிப்பட்ட தொழிலை செய்யவில்லை. தேவனிடத்திலே அவள் வந்தபொழுது அவளுடைய வாழ்க்கை மாற்றம் பெற்றது. அதேபோலத்தான் மற்ற பாவிகளுடைய வாழ்க்கையிலேயும் அவர்கள் மாற்றம் பெற்றார்கள். சகேயு இயேசுவண்டை வந்தான். இயேசு சகேயு வீட்டிற்குச் சென்றார். அவனுடைய வாழ்க்கை மாற்றம் பெற்றது.

அருமையான சகோதரனே, சகோதரியே, நீங்களும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவண்டை வருவீர்கள் என்றால் உங்களுடைய வாழ்க்கை மாற்றம் பெறும். பாவத்தைச்

சுட்டிக்காட்டிச் சொல்லும்பொழுது சிலருக்கு அது உறுத்துகிறதாய் இருக்கிறது. ஏன் இதைக் குறித்து அடிக்கடி பேசவேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

சோதோம் கொமோரா பட்டணத்திலே என்ன நடந்ததோ, அதுதான் இப்பொழுதும் நடைபெறப் போகிறது.

ஆதியாகமம் 19: 6, 7

சோதோம் பட்டணத்து மக்கள் லோத்துவின் வீட்டு வாசலிலே நிற்கிறார்கள். தங்களுடைய தவறான ஆசைக்கு பயன்யடுத்தும் படியாக அந்த விருந்தாளிகளைக் கேட்கிறார்கள். ஆனால் லோத்து வெளியே வந்து, அவர்களைப் பார்த்து, இந்த அக்கிரமம் செய்ய வேண்டாம் என்று சொல்கிறான்.

ஆம் லோத்து அவர்களுடைய வழக்கத்தை அக்கிரமம் என்று சரியாகப் பார்த்தான். கடந்த பல காலங்களாக சோதோம் பட்டணத்திலே அவன் இருந்தாலும், அவனைப்
பொருத்தமட்டிலேயும் அது ஒரு புது ஒழுக்கமாய் இருந்தது. அதாவது ஒழுக்கக்கேடான பாவமாய் இருந்தது. ஆதியாகமம் 19 : 8

அந்நியர்களை ஒருவன் உபசரித்துக்கொண்டு இருப்பானென்றால், அவனே அவர்களுக்கு பொறுப்பாளி ஆகிறான். தனது விருந்தினர்களைப் பாதுகாக்க அவன் எப்படிப்பட்ட தியாகத்தை செய்ய முன்வருகிறான் பார்த்தீர்களா?

ஆதியாகமம் 19 : 9.

சோதோம் பட்டணத்து மக்கள் லோத்துவைப் பார்த்து என்ன கூறுகிறார்கள் பார்த்தீர்களா? பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது என்கிறார்கள். அவன் அங்கே இருந்த நியாயாதிபதிகளிலே ஒருவனாய் இருந்தான், என்பது இங்கேயும் வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால் அவர்கள் அவனை மதிக்கவில்லை என்பதும் தெரிகிறது.

ஆதியாகமம் 19 : 10, 11

லோத்துவின் வீட்டிற்கு வந்த விருந்தாளிகள் இவ்வாறு செய்யாமல் இருந்திருப்பார்களென்றால், லோத்துவையும் விருந்தாளிகளையும் அவர்கள் அழித்து இருப்பார்கள். இதுதான் அந்த சோதோம் மக்களின் எண்ணம்.

ஆதியாகமம் 19 : 12 - 14

அருமையானவர்களே இப்பொழுது மிகவும் பரிதாபமான ஒரு நிலைமையிலே லோத்து காணப்படுகிறான். எத்தனையோ ஆண்டுகளாக இந்தப் பட்டணத்திலே இருந்திருக்கிறான். இங்கே காணப்படுகிற காரியங்களைக் குறித்து பொறுத்துக் கொள்ளுகிறவனாக அவன் வாழ்ந்துவிட்டான். பாவத்தைக் குறித்து சகிப்புத்தன்மை இருப்பது, கேடான முடிவிற்கு நம்மை வழிநடத்தும். இது கேடு, இது பாவம், இது அக்கிரமம் என்று கூறினாலும் தொடர்ந்து அங்கேதான் வாழ்ந்து கொண்டு இருந்திருக்கிறான். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே பிள்ளைகள் வளர்ந்து வருவதை கவனித்திருக்கிறான்.

www.Radio882.com

இப்பொழுது பட்டணத்தை விட்டு வெளியே புறப்பட்டு போகும்படியாக தேவனிடத்திலிருந்து லோத்துவுக்கு செய்தி கிடைத்த பொழுது அவனுடைய குமாரத்திகள் திருமணம் செய்யப் போகிற எதிர்கால மருமக்களிடத்திலே போய் கூறியிருக்கிறான். ஆனால் அதைக் குறித்து அவர்கள் ஏளனம் செய்துவிடுகிறார்கள்.

அந்தப் பட்டணத்திலே அவர்களில் ஒருவனாக இவ்வளவு காலம் லோத்து வாழ்ந்திருந்த படியினாலே, இவ்வளவு காலம் எந்த ஒரு வித்தியாசமான காரியத்தையும் தைரியமாய் அவன் பேசாமல் இருந்த படியினாலே இப்பொழுது அவன் கொடுக்கிற எச்சரிப்பை வேடிக்கையாக எடுத்துக் கொள்கிறார்கள்.

தேவனுடைய சித்தத்துக்கு மாறாக லோத்து இந்தப் பட்டணத்திலே குடியிருந்திருக்கிறான். கர்த்தருக்காக ஒரு சாட்சியாக அவன் இல்லை. அந்தப் பட்டணத்திலே ஒருவரைக்கூட கர்த்தருக்காக அவன் ஆதாயப்படுத்தவில்லை.

அருமையான சகோதரனே, சகோதரியே, அவர்களுடைய தரத்திற்கு நீங்கள் இறங்கிப் போய்விட்டால் யாரையும் நீங்கள் ஆதாயப்படுத்த முடியாது. அவர்கள் செய்கிற தவறுகளிலே நீங்கள் ஒத்துப் போவீர்கள் என்று சொன்னால் தவறை தவறு என்று வாய் திறந்து கூறாமல் அமைதியாக இருப்பீர்கள். அதனால் உங்களுக்கும் அவர்கள் செய்கிற பாவத்திற்கு சம்மதம் என்றே எண்ணிக் கொள்வார்கள். அருமையான சகோதரனே, சகோதரியே, நீங்கள் வேலை செய்கிற இடத்திலேயோ, நீங்கள் வசிக்கிற இடத்திலேயோ, மக்கள் பாவமான காரியத்தை வெளியரங்கமாய்ச் செய்யும் பொழுது அது தவறு என்று நீங்கள் உள்ளத்திலே உணர்ந்தால் மட்டும் போதாது, அதைக் குறித்து நீங்கள் பேசவேண்டும். இது தேவன் விரும்புகிற ஒரு காரியமல்ல, நீங்கள் தவறு செய்கிறீர்கள் என்பதைக் கூற வேண்டும். தேவனுடைய பிரமாணங்களையும், கட்டளைகளையும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இன்று சில திருச்சபைகளிலேயும் தவறான காரியத்தை உலகத்தோடு ஒத்துப்போகும் காரியங்களை பலர் செய்தாலும் அந்த பாவத்தைக் குறித்த எச்சரிப்பின் ஒலி கொடுக்கிற ஒரு சிலரை ஆண்டவர் ஆங்காங்கே வைத்திருக்கிறார். அவர்களுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நாம் பாவத்தோடு ஒத்துப் போகிறவர்களாய் இருந்தால் மற்றவர்களை நாம் ஆதாயப்படுத்த முடியாது.

லோத்து யாரையுமே ஆதாயப்படுத்தவில்லை.

லோத்து யாரையுமே ஆதாயப்படுத்தாத ஒரு நிலைமையைப் பார்க்கும்பொழுது ஆபிரகாம் எண்ணியது போலத்தான் நமக்கும் எண்ணத் தோன்றுகிறது. ஆனால் பேதுரு என்ன சொல்கிறார் என்பதை மீண்டும் ஒருமுறை கவனிப்போம். 2 பேதுரு 2 : 6, 7, 8 ஆம் வசனங்கள்.

“சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப் போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து; அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காம விகார நடக்கையால் வருத்தப்பட்டு; நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க;”

www.Radio882.com

சோதோமிலே லோத்து வாழ்ந்திருந்தாலும், அந்த சூழ்நிலையை அவன் அனுபவிக்கவில்லை என்றுதான் தெரிகிறது. சுற்றி நடந்த பாவம் அவனுடைய இருதயத்தை நொறுக்கியது. இப்பொழுது நகரத்தை விட்டு புறப்பட்டு செல்லும்பொழுது தனது மனைவியையும், பிள்ளைகளையும் தவிர வேறு ஒருவரையும் அவனோடு கூட வெளியே அழைத்துச் செல்ல முடியாதவனாய் காணப்படுகிறான்.

எனக்கருமையான சகோதரனே, சகோதரியே, நீங்கள் வாழும் இடத்திலே உங்களைச் சுற்றி மக்கள் பாவத்தைத் தண்ணீர் போல பருகிக்கொண்டு இருப்பார்கள் என்றாலும், அப்படிப்பட்ட சூழ்நிலையிலே நீங்கள் தேவனுக்கு சாட்சியாய் வாழ ஆண்டவர் உங்களை எதிர்பார்க்கிறார்.

சூழ்நிலைகளைக் குறித்து ஜெபித்து சமயம் கிடைக்கும்பொழுது பாவத்தைப் பாவமென்று தைரியமாக எதிர்த்து நிற்க தேவன் உங்களை எதிர்பார்க்கிறார். உங்கள் பிள்ளைகள் உங்கள் சந்ததி அப்படிப்பட்ட உலையிலே அழிந்துபோகாதபடி ஒருவேளை நீங்கள் இருக்கும் இடத்தை மாற்றவேண்டியது இருக்கலாம். ஒரு நல்ல கிறிஸ்தவ ஐக்கியமும் பரிசுத்த முன்மாதிரிகள் காணப்படும் இடத்திற்கு நீங்கள் கடந்து செல்ல வேண்டியவர்களாய் இருக்கலாம்.

எனக்குத் தெரிந்த எத்தனையோ பேர் தாங்கள் செய்யும் பணியிலே அநேகப் பாவங்களுக்கு உள்ளாக வேண்டியதிருக்கிறது என்பதினாலே தொழிலை மாற்றி இருக்கிறார்கள். நீங்கள் ஊரோடு ஒத்துப் போகிறவர்களாய் இருக்கிறீர்களா? அல்லது கிறிஸ்துவுக்கு சாட்சியாய் இருக்கிறீர்களா?

நாம் ஆதியாகமம் 19ஆம் அதிகாரத்தின் முதல் பகுதியை சிந்தித்தோம். சோசோம் கொமோராப் பட்டணங்களின் பாவம் மிகவும் கொடிதாய் இருந்தபடியினாலே தேவனுடைய நியாயத்தீர்ப்பு தீர்மானிக்கப்பட்டது. அங்கேயிருந்த லோத்து என்னும் நீதிமானை பட்டணத்தைவிட்டு வெளியே கொண்டுவந்து அதற்குப் பின் பட்டணத்தை அழிக்கும்படியாக தேவன் தமது தூதர்களை அனுப்பினார். அவர்கள் லோத்தை பட்டணத்து வாசலிலே சந்தித்தார்கள். அவர்கள் வீட்டிற்கு வரும்படியாக லோத்து அவர்களை வருந்திக் கேட்டுக் கொண்டான். வீட்டிற்குள்ளே சென்ற பொழுது சோதோம் பட்டணத்தின் மக்கள் பாவமான எண்ணத்தோடுகூட இந்தப் புதிய இரண்டு புருரையும் வெளியே வரும்படியாக வற்புறுத்தினார்கள். இறுதியாக லோத்துவை அவர்கள் அதிகமாய் நெருங்கி வந்தபடியினாலே அந்த புருர்கள் தங்கள் கைகளை வெளியே நீட்டி லோத்தை வீட்டினுள்ளே இழுத்துக் கொண்டார்கள்.

பட்டணத்து மக்களுக்கு குருட்டாட்டம் பிடிக்கப் பண்ணின படியினாலே, அவர்கள் வாசலைத் தேடி அலுத்து புறப்பட்டுப் போய்விட்டார்கள். வோத்துவின் இரண்டு குமாரத்திகளையும் திருமணம் செய்யக் காத்திருந்த மருமகன்மாரும், லோத்துவின் எச்சரிப்பின் சத்தத்தை அசட்டைபண்ணினார்கள், பரியாசம் பண்ணினார்கள்.

இன்று நாம் ஆதியாகமம் 19ஆம் அதிகாரம் 15 வசனம் முதல் சிந்திக்கப் போகிறோம். கவனியுங்கள் 15, 16ஆம் வசனங்களை வாசிக்கிறேன்.

ஆதியாகமம் 19 : 15, 16

"கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக் கொண்டுபோ என்று சொல்லி, அவனைத் துரிதப்படுத்தினார்கள்.

அவன் தாமதித்துக்கொண்டிருக்கும் போது, கர்த்தர் அவன் மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள்."

லோத்துவின் சூழ்நிலை எப்படிப்பட்டதாய் இருந்தாலும், இங்கே தேவனுடைய மனிதனாக காணப்படுகிறான். லோத்துவைக் குறித்து ஆதியாகமப் புத்தகத்திலே மட்டும் நாம் வாசிக்கிறவர்களாய் இருப்போம் என்றால் லோத்துவை ஒரு இரட்சிக்கப்பட்ட மனிதன் என்று நாம் விசுவாசிக்க முடியாது. ஆனால் 2 பேதுரு 2ஆம் அதிகாரம் 6 முதல் 8 வசனங்களிலே லோத்துவைக் குறித்து நாம் வாசிக்கும் காரியங்கள் லோத்துவை ஒரு விசுவாசியாக ஒரு நீதிமானாக நமக்கு வெளிப்படுத்துகிறது.

லோத்து ஆபிரகாமைப் பின்பற்றி, தேவனை விசுவாசித்து, அவருக்கு பலிகளை செலுத்தினபடியினாலே, அவனும் நீதிமானாக்கப்பட்டு இருந்தான். தேவன் லோத்துவின் மேலே இரக்கம் கொள்ள சித்தமானார். இந்த வேளையிலேயும் லோத்து தேவனை விசுவாசிக்கிறான், ஆனபடியினாலேதான் பட்டணத்தை விட்டு வெளியே புறப்பட ஆயத்தமாகிறான். இருந்தாலும் அவனுடைய புறப்படுதல் தாமதமாவது போல தெரிந்ததினாலே அவன் மேலே தேவன் இரக்கம் கொண்டு, அந்த தூதர்களைக் கொண்டு, அவனையும், மனைவியையும், பிள்ளைகளையும் கரத்தைப்பிடித்து பட்டணத்திற்கு வெளியே இழுத்துக் கொண்டு போகச் செய்கிறார்.

ஆதியாகமம் 19 : 17 - 19

அவர்களை வெளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்.

அதற்கு லோத்து: அப்படியல்ல ஆண்டவரே,

உமக்கு கண்களில் உமது அடியேனுக்குக் கிருபைகிடைத்ததே; என் பிராணனைக் காக்கத் தேவரீர் எனக்குச் செய்த கிருபையைப் பெரிதாக விளங்கப்பண்ணினீர்; மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது, தீங்கு என்னைத் தொடரும், நான் மரித்துப்போவேன்.

கவனித்தீர்களா? பிரியமானவர்களே லோத்தும் கூட பட்டணத்தை விட்டு வெகுதூரம் போக விருப்பம் இல்லாதவனாய் காணப்படுகிறான். அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ, சமபூமியில் நில்லாதே என்று தேவன் கட்டளையிட்டாலும், என்னால் மலைக்கு ஓடிப்போக முடியாது; நான் மரித்துப்போவேன் என்று கூறுகிறான்.

www.Radio882.com

ஆதியாகமம் 19 : 20 - 23

“அதோ, அந்த ஊர் இருக்கிறதே; நான் அதற்கு ஓடிப்போகத் தக்கதாய் அது கிட்ட இருக்கிறது, சின்னதுமாய் இருக்கிறது; என் பிராணன் பிழைக்க நான் அங்கே ஓடிப்போகட்டும், அது சின்ன ஊர்தானே என்றான்.”

அந்த சின்ன ஊருக்குதான் லோத்து போனான். கவனித்தீர்களா, சோதோமைவிட்டு அவன் வெளியே வந்தாலும், பரிபூரணமாக சுத்தமானவனாக இல்லை,

நடந்தது என்ன?

ஆதியாகமம் 19 : 24, 25

“அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின்மேலும், கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி,

அந்தப் பட்டணங்களையும், அந்த சமபூமியனைத்தையும் அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப் போட்டார்.”

தொடர்ந்து வருகிற வசனங்களில் இரண்டு காரியங்கள் நமக்குச் சொல்லப்பட்டு இருக்கின்றன. ஒன்று லோத்துவின் மனைவியைக் குறித்தது. அடுத்தது, அவனுடைய பிள்ளைகளைக் குறித்தது. ஆதியாகமம் 19 : 26

“அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள்.”

இந்த வசனமானது அநேக வேளைகளிலே தவறாகப் புரிந்து கொள்ளப்படும் ஒரு வசனமாக இருக்கிறது. லோத்துவின் மனைவி ஏன் திரும்பிப் பார்த்தாள்? இதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். முதலாவதாக அவள் திரும்பிப் பார்த்ததின் நோக்கம், சோதோமைவிட்டு வெளியேவர அவளுக்கு விருப்பமில்லை. ஏனென்றால் அவள் சோதோமை நேசித்தாள். லோத்துவை நேசித்தாள். ஆனால் சோதோமில் இருந்த லோத்துவைத் தான் அவள் அதிகமாக நேசித்தாள். எனவே சோதோமை விட்டுவிட அவளுக்கு மனதில்லை.

ஒரு வேளை அங்கேயிருந்த பெண்கள் கூட்டத்திலே, ஏதாவது குழுக்களிலே, அவள் முக்கியமான ஒரு அங்கத்தினராய் இருந்திருக்கலாம். சோதோமின் பெண்களோடு ஐக்கியம் வைத்துக்கொள்வதிலே அவள் விருப்பம் உள்ளவனாய் இருந்திருக்க வேண்டும். சொல்லப்போனால் அவளுடைய இருதயம் சோதோமிலே இருந்தது, சரீரம் வெளியே நடந்து வந்தது.

இங்கே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு மிக முக்கியமான பாடம் நமக்கு இருக்கிறது. இன்றும் அநேக கிறிஸ்தவர்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் வருகையைக் குறித்து அதைப்பார்க்க மிக வாஞ்சை உள்ளவர்கள் போல பேசுவார்கள். ஆனால் அவர்களுடைய வாழ்க்கையைப் பார்த்தால் அதற்கும் அவர்களுடைய வாழ்க்கைக்கும் சம்பந்தம் இல்லாததாய்க் காணப்படும். ஞாயிற்றுக்கிழமை காலை வேளைகளிலே அவர்களுடைய அருமையான வீடுகளைவிட்டு அவர்களை வெளியே வரவைப்பது மிகக் கடுமையான ஒரு காரியமாக

www.Radio882.com

இருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை மாலை வேளைகளில் அவர்களை வீட்டைவிட்டு வெளியே வரவைக்க முடியாது.

ஏனென்றால் அத்தனை அதிகமாக அவர்களுடைய தொலைக்காட்சியையும், அந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் வாஞ்சிக்கிறவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து வரும்பொழுது நீங்கள் உங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளை விட்டுதான் வரவேண்டும். உங்கள் அழகான, அருமையான, செல்வச் செழிப்பான வீடுகளை விட்டு வெளியே வரத்தான் செய்ய வேண்டும். எல்லாவற்றையும் விட்டுவிட்டுதான் நாம் கடந்து செல்லவேண்டும்.

அருமையான சகோதரனே, சகோதரியே ஒரு நேரடியான கேள்வியை உங்கள் முன்னால் நான் வைக்க விரும்பிகிறேன். நீங்கள் விரும்புகிற இந்தப் பொருட்களை எல்லாம் விட்டுவிட்டுச் செல்லும் பொழுது உங்களுடைய இருதயம் உடைகிறதாய் இருக்கிறதா? நம்மில் அநேகர் இந்த உலகத்தையும் அதன் பொருட்களையும் விட்டுவிட்டுச் செல்ல விருப்பம் அற்றவர்களாய்க் காணப்படுகிறோம்.

நம்முடைய அழகான வீடுகளிலேயும், அருமையான தோட்டங்களிலேயும், துறவுகளிலேயும் தொடர்ந்து என்றென்றும் தங்கத்தான் விரும்புகிறோம். நம்முடைய நண்பர்களையும் குடும்பத்தின் அங்கத்தினர்களையும் விட்டுச்செல்ல நமக்கு மனதில்லை.

ஒருவேளை கர்த்தருடைய ஊழியங்களில் ஈடுபட்டு இருக்கிறவர்கள் கூட தொடர்ந்து இந்த ஊழியத்தை நாம் செய்து கொண்டே இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் அருமையானவர்களே நாம் ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்கும் பொழுது அவர் நம்மை மத்திய வானத்தில அழைக்கும் பொழுது இந்த உலகத்திலே எதையும் விட்டுவிட்டுச் செல்ல நாம் ஆயத்தமுள்ளவர்களாகவே காணப்படுவோம்.

அன்று லோத்துவின் மனைவி சோதோமை விட்டுவிட்டுச் செல்ல மனமற்றவளாய் இருந்தாள். லோத்துவின் மனைவி சோதோமை பின்னாலே திரும்பிப் பார்த்ததற்கான இரண்டாவது காரணம் என்ன தெரியுமா? அவள் தேவனைப் பரிபூரணமாக நம்பவில்லை. தேவன் சொன்னது என்ன? உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே, என்று தெளிவாய்ச் சொன்னார். லோத்து தேவனுடைய இந்த வார்த்தைகளை விசுவாசித்தான். ஆனால் லோத்துவின் மனைவி அதை விசுவாசிக்கவில்லை. அவள் ஒரு விசுவாசி அல்ல. எனவே அவள் பட்டணத்தை விட்டு வெளியே வரமுடியவில்லை, அவள் பின்னிட்டுப் பார்த்து உப்புத் தூண் ஆனாள்.

அருமையானவர்களே, லோத்துவின் குமாரத்திகளைக் குறித்து 31 முதல் 38 வசனங்களிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அதைக் குறித்து நாம் சிந்திக்கப் போவதில்லை. அது ஒரு பரிதாபமான சம்பவம். லோத்து சோதோமுக்குள்ளே சென்றதே நல்ல காரியமல்ல. அவனுடைய சொந்த ஆத்துமாவைத் தவிர மற்றெல்லாவற்றையும் இழந்து போனான்.

இன்றும் தங்கள் ஆத்துமாக்களை மட்டும் இரட்சிப்பிற்குள்ளே கொண்டு வந்து தங்கள் குடும்பத்தையும் தங்களைச் சுற்றி இருக்கிற யாரையுமே இரட்சிப்பிற்குள்ளே வழிநடத்தாத

www.Radio882.com

எத்தனையோ மனிதர்களுக்கு முன்னோடியாய் லோத்து காணப்படுகிறான். நம்மை நாமே நியாயம் தீர்க்கவில்லை என்றால், தேவன் நம்மை நியாயந்தீர்ப்பார்.

எனவேதான் நாம் இராப்போஜன ஆராதனை வேளைகளிலே நம்மை நாமே நிதானித்து அறிந்து கொள்ளும்படியாய், நம்மை ஆராய்ந்து பார்க்கும்படியாய் நமக்கு சமயம் கொடுக்கப்படுகிறது. லோத்து தன்னைத்தானே தன்னுடைய வாழ்க்கையைச் சுற்றி உள்ள காரியங்களை ஆராய்ந்து கொள்ளாமல் இருந்துவிட்டான்.

தொடர்ந்து நாம் ஆபிரகாமைக் குறித்து சற்றே கவனிப்போம்.

ஆதியாகமம் 19 : 27, 28

"விடியற்காலத்தில் ஆபிரகாம் எழுந்து, தான் கர்த்தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போய்,

சோதோம் கொமோரா பட்டணங்களின் திசையையும், சமபூமியாகிய தேசம் முழுவதையும் நோக்கிப் பார்த்தான்; அந்தப் பூமியின் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று".

அருமையானவர்களே அந்தக் காலை வேளையிலே சோதோமை ஏறிட்டுப் பார்த்த ஆபிரகாம் உள்ளம் உடைந்தவனாய் இருப்பான் என்று நினைக்கிறேன். லோத்து அந்த அழிவிலிருந்து தப்பியதைக் குறித்து ஆபிரகாமுக்குத் தெரியுமோ, தெரியவில்லையோ நமக்குத் தெரியவில்லை. ஒருவேளை இதைக் குறித்து பின்னான காலங்களிலே அவன் அறிந்திருக்கக்கூடும். ஒருவேளை அந்தக் காலை வேளையிலே லோத்துவைக் குறித்து நினைத்து அவன் வேதனைப் பட்டிருக்கலாம். ஆனால் அப்படி துக்கப்படுவதிலே தன்னுடைய நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கவில்லை.

சோதோம் கொமோரா பட்டணங்கள் மீது நியாயத்தீர்ப்பு வந்த போது, அந்த நியாயத் தீர்ப்பானது அவனை அசைக்கவில்லை. ஏனென்றால் சோதோமின் காரியங்களை, உலகத்தின் காரியங்களை அவன் நேசிக்கவில்லை. 1 யோவான் 2ஆம் அதிகாரம் 15ஆம் வசனத்தை சற்றே பாருங்கள்.

"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும், அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால், அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை."

ஒரு தேவனுடைய ஊழியர் சோதோமை சுற்றிப்பார்க்கச் செல்லுதல் என்று ஒரு செய்தி கொடுப்பார். முதலாவதாக லோத்துவின் கண்களுக்கு சோதோம் எப்படி இருந்தது, என்பதை அவர் தியானிக்கும் படியாய் செய்வார். ஏனென்றால் லோத்து சோதோமைக் குறித்து ஒரு தவறான கண்ணோட்டம் உடையவனாய் காணப்பட்டான். இரண்டாவதாக திருமதி லோத்துவின் கண்ணோட்டத்தில் சோதோமைக் குறித்து சிந்திப்போமென்றால், அவள் சோதோமை நேசிக்கும் ஒரு பெண்ணாய் மாறினாள். மூன்றாவதாக சோதோமை ஆபிரகாமின் கண்கள் வழியாக நாம் கண்டோம் என்று சொன்னால் அது வித்தியாசமானதாய் இருக்கிறது. ஆபிரகாம் எதையும் அங்கே இழக்கவில்லை. இறுதியாக தேவனுடைய பார்வையிலே சோதோமை நாம் கவனிப்பது சிறந்தது.

அருமையானவர்களே இன்று மிக துக்ககரமான ஒரு காரியம் என்னவென்றால் சோதோமின் பாவம் சமுதாயத்திலே திருச்சபையிலே காணப்பட்டாலும் தேவன் பார்க்கும் வண்ணமாக அதை இன்று மக்கள் பார்ப்பதில்லை. ஆண்கள் ஆண்களுடனும், பெண்கள் பெண்களுடனும் தவறான உறவு வைத்துக் கொள்வதைக் குறித்து தேவன் அருவறுக்கிறார். வெறுக்கிறார். அந்தப் பாவத்தை பாவம் என்று சொல்வதற்குப் பதிலாக இன்று அநேகர் அதற்கு விளக்கம் கொடுப்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

லோத்து அதைப் பார்க்கும் பொழுது அவன் செய்த காரியம் என்ன தெரியுமா? ஆதியாகமம் 19ஆம் அதிகாரம் 7ஆம் வசனத்திலே சொல்லும் பொழுது,

சகோதரரே, இந்த அக்கிரமம் செய்ய வேண்டாம், என்று சொல்கிறான். அக்கிரமத்தை அக்கிரமம் என்று லோத்து அறிந்திருந்தான். அதைக் குறித்து வாய்திறந்து பேசினான். பாவத்திற்கு விளக்கம் கொடுக்கும் சிலர் இது அவர்களுடைய பெலவீனம் என்று சொல்கிறார்கள். இதைப் போலத்தான் பல பாவங்களை இன்று சொல்கிறார்கள். குடிப்பழக்கத்திற்கு அடிமையாய் இருப்பவர்களைக் குறித்தும் அது அவர்களுடைய பெலவீனம் என்று சொல்கிறார்கள். இல்லை பிரியமானவர்களே, குடிக்கும்பொழுது பாவம் செய்கிறோம். தயவுகூர்ந்து இன்று நீங்கள் ரோமர் முதலாவது அதிகாரம் 18 முதல் 32 வசனங்களை நேரமெடுத்து வாசித்துப் பாருங்கள்.

தேவன் பாவத்திற்கு விளக்கம் கொடுக்கவில்லை. பாவத்தை பாவமென்று அழைக்கிறார். ஆதியாகமம் 19ஆம் அதிகாரம் இக்காலத்து மக்களுக்கு ஒரு முக்கியமான வேத பகுதியாகும்.

உங்களுடைய வாழ்க்கையிலே ஏதாவது ஒரு பாவத்திற்கு நீங்கள் விளக்கம் கொடுத்து இது என்னுடைய பெலவீனம், இது ஒன்றிலே நான் வெளியே வரமுடியவில்லை, இது ஒன்று இருந்தாலும் நான் ஆண்டவரை நேசிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருப்பீர்கள் என்றாலும் அது சரியானது அல்ல.

அன்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னிடம் வந்த ஒரு மனிதனைப் பார்த்து உன்னிடத்தில் ஒரு குறை உண்டு என்றுச் சொன்னார். ஆனால் அந்தக் குறையைச் சரிசெய்து கொள்ள விரும்பாத அவன் துக்கத்தோடு திரும்பிப்போனான் என்று வாசிக்கிறோம். உங்கள் வாழ்க்கையிலும் காணப்படுகிற ஏதாவது ஒரு பாவத்தைக் குறித்து, நீங்கள் பெலவீனம்தான் என்று எண்ணிக் கொண்டிருக்கிற காரியத்தைக் குறித்து ஆண்டவர் உங்களோடு பேசிக்கொண்டு இருப்பாரென்றால் அந்தக் காரியத்திலேயும், உங்களுக்குப் பரிபூரண விடுதலையையும் வெற்றியும் கொடுக்க அவர் கிருபை நிறைந்தவராய் வல்லமை உள்ளவராய் இருக்கிறார். நீங்கள் அவரை விசுவாசித்து வாஞ்சையோடு அவரைத் தேடும்பொழுது, அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்படியும்பொழுது, ஜாக்கிரதையாய் இருக்கும்பொழுது, ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கையை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். இப்பொழுது ஆதியாகமம் 20ஆம் அதிகாரத்திற்குள்ளே நாம் கடந்து வருகிறோம்.

அருமையானவர்களே, ஆதியாகமம் 20ஆம் அதிகாரத்தை நாம் வாசிக்கும் பொழுது இது தேவைதானா என்கிற எண்ணம் நமக்கு வருகிறது. ஏனென்றால் ஏற்கனவே நான்கு கால்கள் இருக்கும் ஒரு மாட்டிற்கு இன்னும் ஒரு கால் இருப்பது போலத் தெரிகிறது. இதை

www.Radio882.com

விட்டிருக்கலாமே என்று சொல்லி நீங்கள் நினைக்கலாம். ஏனென்றால் ஆபிரகாம் ஏற்கனவே செய்த ஒரு தவறை மீண்டுமாக செய்வதைப் பார்க்கிறோம்.

ஆபிரகாம் எகிப்திற்குச் செல்லும்பொழுது தனது மனைவி சாராவை சகோதரி என்று அழைத்தான் அல்லவா? அதே காரியத்தை அதே தவறை மீண்டுமாக இன்னொரு சூழ்நிலையிலே செய்கிறான். ஆனால் இந்த சம்பவம் மீண்டுமாக இங்கே கூறப்பட்டிருக்கிறதற்கான முக்கியமானக் காரணம் என்ன தெரியுமா? ஆபிரகாமும் சாராளும் இந்தப் பாவத்தை பரிபூரணமாக விட்ட பின்னர்தான் ஈசாக்கு என்ற ஆசீர்வாதத்தை அவர்கள் பெற்றுக்கொள்ள முடிகிறது.

அருமையான சகோதரனே, சகோதரியே, உங்களுடைய வாழ்க்கையிலேயும் குறிப்பிட்ட ஆசீர்வாதங்களுக்காக நீங்கள் காத்திருப்பீர்கள் என்றால், உங்கள் வாழ்க்கையிலேயும் உங்கள் குடும்ப வாழ்க்கையிலேயும், இன்னமும் நீங்கள் பரிபூரணமாய் வெறுத்து ஒதுக்கிவிட வேண்டிய பாவங்கள் ஏதாவது தொடர்ந்து உங்களைப் பின்பற்றி வந்துகொண்டு இருக்கிறதா என்பதை எண்ணிப்பாருங்கள். அந்தப் பாவத்தைக் குறித்து உங்கள் பிள்ளைகளுக்குத் தெரியாமல் இருக்கலாம், உங்கள் அண்டை வீட்டுக்காரர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம், ஆனால் கணவனும் மனைவியுமாக நீங்கள் மட்டும் அறிந்தும், பாவம் என்று தெரிந்தும், பரிபூரணமாய் அதைவிட்டு வெளியே வராமல் இருப்பீர்கள் என்று சொன்னால், இந்த நாளிலே அதைக் குறித்து பேசி நீங்கள் ஒரு முடிவுக்கு வர ஆண்டவர் உங்களை அழைக்கிறார்.

ஆதியாகமம் 20

ஆதியாகமம் 20 : 1, 2

"ஆபிரகாம் அவ்விடம் விட்டு, தென் தேசத்திற்குப் பிரயாணம்பண்ணி, காதேசுக்கும் சூருக்கும் நடுவாகக் குடியேறி, கேராரிலே தங்கினான்.

அங்கே ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளைத் தன் சகோதரி என்று சொன்னதினாலே, கேராரின் ராஜாவாகிய அபிமெலேக்கு ஆள் அனுப்பிச் சாராளை அழைப்பித்தான்.

இது மிகவும் ஆர்வம் தரக்கூடிய ஒரு பகுதியாய் இருக்கிறது. அருமையானவர்களே சாராள் அழகாய் இருந்தாள் என்று நினைக்கிறீர்களா? இந்த நேரத்திலே அவளுக்கு வயது தொண்ணூறு. அந்த வயோதிய நிலைமையிலேயும் அவள் அழகாய் இருந்திருக்கிறாள்.

தொண்ணூறு வயதிலே காணப்படும் இன்று வாழும் எத்தனைப் பெண்களை இந்தக் குழுவிலே நாம் சேர்க்க முடியும்? இப்பொழுது ஆபிரகாம் மிகவும் தென்புறமாக பிரயாணப்பட்டுப் போகிறான். காதேசு என்கிற இடத்திற்கு வருகிறான். ஞாபகம் இருக்கிறதா? பின்னால் ஒரு காலத்திலே இந்த இடத்திலே வந்த இஸ்ரவேல் ஜனங்கள்தான் உள்ளே பிரவேசிக்க மறுத்தார்கள்.

ஆபிரகாம் கேரார் வரை சென்றான். அங்கேதான் சாராளைக் குறித்துப் பொய் சொல்கிறான். அருமையானவர்களே, குறிப்பாக ஆபிரகாமின் அறிக்கையை நாம் கவனிக்க

www.Radio882.com

வேண்டும். அதுதான் இந்த அதிகாரத்திலே மிக முக்கியமானதாய் மாறுகிறது. ஆபிரகாமும், சாராளும் தங்களுடைய வாழ்க்கையிலே காணப்பட்ட அந்தப் பாவத்தைக் குறித்து தேவனோடு ஒப்புறவு ஆகாதவரை ஈசாக்கை அவர்கள் பெற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் அவர்களுடைய வாழ்க்கையிலே அந்த பாவம் பல காலமாய்த் தொடர்ந்து வருகிறது.

ஆதியாகமம் 20 : 11

"அதற்கு ஆபிரகாம்: இவ்விடத்தில் தேவபயம் இல்லையென்றும், என் மனைவியினிமித்தம் என்னைக் கொன்றுபோடுவார்கள் என்றும் நான் நினைத்தேன்".

தேவன் இந்த சம்பவத்தில் தலையிட்ட படியினாலே ஆபிரகாமின் மனைவியை அழைத்துச் சென்ற அபிமலேக்கு அதிர்ச்சியுற்ற நிலைமையிலே இருக்கும் பொழுது ஆபிரகாம் அவனோடு பேசுகிறான்.

இங்கே நாம் பார்க்கிறது போல ஆபிரகாம் தேவனை நம்பவில்லை. தேவபயம் இல்லாத ஒரு இடத்திற்குப் போகிறேன் என்பதை அவன் உணர்ந்திருக்கிறான். ஆனால் அவன் கண்ட காட்சி என்ன? சரி எது, தவறு எது என்பதை மிகத் தெளிவாக அறிந்திருந்த அபிமெலேக்கு மிக உயர்வான ஒரு எண்ணம் வைத்திருந்தான். சொல்லப் போனால் அவன் தேவனை அறிந்தவன் என்றே சொல்லலாம்.

இப்பொழுது அபிமெலேக்கோடு கூட ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது ஆபிரகாம் மிகச் சிறந்தவனாகத் தெரியவில்லை.

!ஆதியாகமம் 20 : 12

"அவள் என் சகோதரி என்பதும் மெய்தான்; அவள் என் தகப்பனுக்குக் குமாரத்தி, என் தாய்க்குக் குமாரத்தியல்ல; அவள் எனக்கு மனைவியானாள்." ஆபிரகாம் இப்பொழுது விளக்கிச் சொல்கிறான். அவன் சொன்னதில் பாதிதான் உண்மை. ஏனென்றால், சாராள் ஆபிரகாமின் தகப்பனுடைய குமாரத்தி, எனவே அவள் அவனுக்கு சகோதரியுமாயும் இருக்கிறாள்.

ஆதியாகமம் 20 : 13

"என் தகப்பன் வீட்டைவிட்டு தேவன் என்னை தேசாந்தரியாய்த் திரியும்படி செய்தபோது, நான் அவளை நோக்கி: நாம் போகும் இடமெங்கும், நீ என்னை சகோதரன் என்று சொல்வது நீ எனக்குச் செய்யவேண்டிய தயை என்று அவளிடத்தில் சொல்லியிருந்தேன் என்றான்".

அருமையானவர்களே, ஆபிரகாம் தேவன் மேலே பரிபூரணமான நம்பிக்கை இல்லாதவனாய்க் காணப்படுகிறான். எனவே புறப்படும் பொழுதே அவனுடைய மனைவியின் நிமித்தமாக அவன் கொல்லப்படக்கூடிய எந்த சூழ்நிலையிலேயும், அவளைத் தன் சகோதரி என்றுச் சொல்வதாக அவர்கள் இரண்டு பேருக்குள்ளேயும் ஒரு ஒப்பந்தம் இருந்திருக்கிறது. இவ்வாறு கூறுவதினாலே ஆபிரகாம் கொலை செய்யப்பட மாட்டான் என்று நினைத்தார்கள். இதைத்தான் எகிப்திலேயும், அவர்கள் செயல்படுத்தினார்கள். இங்கேயும் அதே காரியத்தைச் செய்தார்கள். ஆனால் எனக்கருமையான சகோதரனே சகோதரியே ஆபிரகாமுடைய

ஜெபத்தைக் கர்த்தர் கேட்டு, ஒரு குமாரனை அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்றால், இந்த பாவத்தைக் குறித்து அவர்கள் தீவிரமாகச் செயல்பட வேண்டும். இந்தப் பாவம் அவர்களுடைய வாழ்க்கையை விட்டு பரிபூரணமாக எடுத்துப் போடப்படாதவரை ஈசாக்கை அவர்கள் பெற்றெடுக்க முடியாது.

இதைக் கேட்டுக் கொண்டிருக்கிற அருமையான சகோதரனே, சகோதரியே, இன்றும் கிறிஸ்துவை அறிந்த எத்தனை குடும்பங்களிலே தங்கள் வாழ்க்கையிலே காணப்படுகிற பாவத்தைக் குறித்து தாங்களே நியாயத்தீர்ப்பு செய்யாமல் இருக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் அநேக ஆசீர்வாதங்களை அவர்கள் இழந்து போகிறார்கள்.

திருச்சபைகளிலே ஊழியங்களிலே பொறுப்பிலே இருக்கிறவர்களும் இப்படித் தங்கள் தங்கள் வாழ்க்கையில் உள்ள பாவத்தைக் குறித்து அவர்களே செயல்பட்டு மனம் திரும்புவார்கள் என்றால், இன்று ஒரு பெரிய உயிர் மீட்சியை நாம் பெற்றுக்கொள்ள முடியும். பாவம் களைந்து போடப்படாதவரை ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியாது.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல், 1 கொரிந்தியர் 11ஆம் அதிகாரம் 28 முதல் 32 வரை கூறுகிற காரியங்களை சற்றே கவனியுங்கள்,

“எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக் கடவன்.

என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்.

இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.

நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.

நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாத படிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்.”

திருச்சபையிலிருந்தும், அநேக விசுவாசிகளுடைய வாழ்க்கையிலிருந்தும் ஆசீர்வாதமானது தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதின் காரணம், அவர்கள் வாழ்க்கையிலே காணப்படுகிற பாவத்தைக் குறித்து செயல்பட வேண்டிய விதமாய் செயல்படாமல் இருப்பதால்தான்.

சரி, நீங்கள் அதிகமாய் ஜெபிக்கிற தேடுகிற ஆசீர்வாதம் உங்கள் வாழ்க்கையிலே இன்னமும் நீங்கள் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு ஒரு காரணம் நீங்கள் விட்டுவிடாத ஒரு பாவமாய் இருக்கலாம்.

ஒருவேளை அது வெளிப்பார்வைக்கு முழு பொய்யாகத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் பாதி பொய்யும், பொய்தான். அல்லது வேறு எந்த பாவத்தினாலேயும் உங்கள்

வாழ்க்கையிலே உள்ள ஆசீர்வாதம் தடைபட்டுக் கொண்டிருக்குமென்றால், ஆண்டவர் அதை இப்பொழுது உங்களுக்கு நினைவு படுத்துவாரென்றால், கணவனும் மனைவியுமாக சேர்ந்து ஆண்டவருடைய பாதத்திலே நீங்கள் தனித்து வந்து அதை அறிக்கை செய்து அந்தப் பாவத்திலிருந்து விடுதலை பெற இன்றே செயல்படுவீர்களா? அப்படி நீங்கள் செய்வீர்களென்றால் பல காலமாய் தடைபட்டு இருக்கிற அந்த ஆசீர்வாதத்தை இந்த ஆண்டிலே கர்த்தர் உங்களுக்கு நிச்சயமாய் தருவார்.

ஆதியாகமம் 21 ஆம் அதிகாரத்திலே மூன்று சம்பவங்களை நாம் பார்க்கிறோம். முதலாவது ஈசாக்கு பிறப்பதைக்குறித்துப் பார்க்கிறோம். இரண்டாவதாக ஆகாரும் இஸ்மவேலும் வீட்டைவிட்டு அனுப்பப்படுவதைக் குறித்து பார்க்கிறோம். மூன்றாவதாக அபிமெலேக்கும், ஆபிரகாமும் பெயெர்செபாவிலே சந்திப்பதைக் குறித்து வாசிக்கிறோம்.

கடந்த அதிகாரத்திலே தெளிவான தீர்மானம் எடுக்க வேண்டிய ஒரு பாவத்தைக் குறித்து நாம் சிந்தித்தோம். அந்த பாவம் அறித்கையிடப் படாதவரை வாக்குப்பண்ணப்பட்ட ஈசாக்கு ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் கொடுக்கப்படவில்லை, என்று பார்த்தோம்.

20ஆம் அதிகாரம் 18ஆம் வசனத்திலே ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக் கொண்டான் என்று வாசிக்கிறோம். தன்னுடைய இருதயத்திலே தான் செய்த தவறைக் குறித்து உண்மையாகவே வருந்தி தேவனிடத்தில் அவன் மன்னிப்பு கேட்டிருக்க வேண்டும். ஆனபடியினாலே அவனுடைய ஜெபத்தைக் கேட்ட தேவன் அபிமெலேக்கையும் அவனது மனைவியையும், அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கி பிள்ளை பெறும்படியாக அனுக்கிரகம் பண்ணினார், என்று வாசிக்கிறோம்.

ஆம் அருமையானவர்களே நம்முடைய வாழ்க்கையிலேயும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதம் பிந்திப் போகிறதென்றால், அதற்கு ஒரு காரணம் நாம் இன்னமும் நாம் அறிக்கையிடாத விட்டுவிடாத பாவங்கள் இருக்கலாம்.

ஆதியாகமம் 21

ஆதியாகமம் 21 : 1, 2

நீங்கள் நன்றாக கவனித்துப் பார்த்தீர்களென்றால், ஈசாக்கின் பிறப்பிற்கும், இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்கும் பல ஒற்றுமைகளை நீங்கள் பார்க்க முடியும். அதாவது கிறிஸ்து உலகத்திலே தோன்றும் முன்னதாக, ஒரு பெரிய உண்மையை மனுகுலத்திற்குக் காண்பிக்கும்படியாக, ஈசாக்கின் பிறப்பு இவ்வாறு அமைந்தது என்று நான் விசுவாசிக்கிறேன்.

இந்த இரண்டு வசனங்களையும் கவனித்து பார்த்தீர்களென்றால், தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள், என்று வாசிக்கிறோம். இந்த இடத்திலே அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் கலாத்தியர் 4ஆம் அதிகாரம் 5ஆம் வசனத்திலே எழுதி இருக்கிறதையும் நாம் வாசிக்க வேண்டும்.

காலம் நிறைவேறின போது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்.

www.Radio882.com

இப்பொழுது அந்த ஒருமைப்பாடு தெரிகிறதா? அடுத்ததாக 21ஆம் அதிகாரம் 3 முதல் 7 வசனங்களைப் பாருங்கள்.

இந்த வசனங்களிலே குறிப்பிடத்தக்க சத்தியங்கள் உண்டு. முதலாவதாக ஈசாக்கின் பிறப்பு ஒரு அற்புதமான பிறப்பு. இயற்கைக்கு முரணான ஒரு காரியம். ரோமர் 4ஆவது அதிகாரத்திலே இதைக் குறித்து 19ஆம் வசனத்திலே என்ன சொல்கிறார், பாருங்கள்.

“அவன் விசுவாசத்திலே பெலவீனமாய் இருக்கவில்லை; அவன் ஏறக்குறைய, நூறுவயதுள்ளவனாய் இருக்கும்போது தன் சரீரம் செத்துப் போனதையும் எண்ணாதிருந்தான்.”

எண்ணாதிருந்தான் என்று சொல்லும் பொழுது, இந்த இயற்கையான அடிப்படை உண்மைகளையெல்லாம் அவன் கணக்கிலே எடுக்கவில்லை. அப்படியென்றால் எதை கணக்கிலெடுத்தான். தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவர் என்பதை அவன் கணக்கில் எடுத்தான்.

செத்துப்போன கர்ப்பத்திலிருந்து தேவன் உயிரை உண்டாக்குகிறார். இது அற்புதமான ஒரு பிறப்பு. இயேசு கிறிஸ்துவை மரியாளுடைய வயிற்றிலே தோன்றப்பண்ணும் பொழுது, அப்பொழுதுதான் தேவன் ஒரு அற்புதமான பிறப்பை செய்யவில்லை, இந்த சம்பவத்தை ஏற்றுக்கொள்ளும் படியாக ஏற்கனவே மனிதனை அவர் அன்றே ஆயத்தப்படுத்திவிட்டார். ஈசாக்கின் பிறப்பின் சமயத்திலே மரித்துப் போன ஒரு கர்ப்பத்திலிருந்து ஒரு குழந்தையை தேவன் உண்டாக்கிவிட்டார். அதுமட்டுமல்ல தேவன் ஆபிரகாமோடும், சாராளோடும் இடைபட வேண்டியது இருந்தது. ஏனென்றால் அவர்களால் இந்த குழந்தை பிறப்பிலே எதையுமே செய்ய முடியாது என்பதை அவர்கள் உணரவேண்டியது இருந்தது. ஆபிரகாம் நூறுவயதுள்ளவனாய் இருந்தான். சாராள் தொண்ணூறு வயதுள்ளவளாய் இருந்தாள்.

வேறு வார்த்தைகளிலே சொல்ல வேண்டுமென்றால், ஈசாக்கு பிறப்பிற்கு ஆபிரகாமோ, சாராளோ எந்த ஒரு காரியத்தையும் செய்யவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆதியாகமம் 21 : 8

குழந்தையான ஈசாக்கு சில காலம் எல்லாக் குழந்தைகளையும் போல பால் குடித்தான். ஆனால் ஒரு குறிப்பிட்ட நாள் வந்தது, அப்பொழுது பிள்ளை வளர்ந்து பால் மறந்தது என்று வாசிக்கிறோம். இந்த இடத்திலேயும் நமக்கு ஒரு பாடம் இருக்கிறது. தொட்டிலில் இருக்கும் குழந்தைக்காக ஒரு தாய் பால் பாட்டிலைக் கழுவி, ஆயத்தப் படுத்தும் பொழுது குழந்தையின் முழு சரீரம் வேலை செய்கிறது. கால்களையும், கைகளையும் மேலே தூக்கி கீழே அடித்து உரத்த குரலிலே சத்தமிடுகிறது. ஏன்? அந்தப் பால் அந்த குழந்தைக்கு வேண்டுமாம். 1 பேதுரு 2ஆம் அதிகாரம் 2ஆம் வசனத்திலே, தேவன் என்ன சொல்கிறார். ஞாபகம் இருக்கிறதா?

“நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய, களங்கமில்லாத ஞானப் பாலின்மேல் வாஞ்சையாய் இருங்கள்.”

புதிதாக கிறிஸ்தவ வாழ்க்கையிலே பிறந்தவர்கள் கர்த்தருடைய வசனத்தின் மேலே

வாஞ்சை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஆனால் ஒரு குறிப்பிட்ட நாள் வரும்பொழுது, ஒரு விசுவாசியாக வளருவதற்காக திடமான உணவை உட்கொள்ளுகிறவர்களாகவும், மாற வேண்டும். சங்கீதம் 23, சங்கீதம் 91, மத்தேயு 5ஆம் அதிகாரம் என்று வாசித்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு முழு வேதத்தையும் கற்றுக் கொள்ளும் நாள் வரவேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கையிலே வளர்ச்சி காணப்படும். எல்லா காலங்களிலேயும் குழந்தையாகவே இருக்கக் கூடாது.

நம்முடைய வீடுகளிலே குழந்தை பிறக்கும் பொழுது அந்தந்த வயதிலே, அந்தந்த வளர்ச்சி இருக்கிறதா என்பதை நாம் எதிர்பார்த்து காத்திருக்கிறோம். அப்படி இல்லையென்றால் நாம் கவலைப் படுகிறோம், இல்லையா? பாருங்கள் எபிரேயர் 5ஆம் அதிகாரம் 13, 14ம் வசனங்களிலே ஆண்டவர் நமக்கு என்ன கற்றுக் கொடுக்கிறார்.

“பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்.

பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.”

ஆம் அருமையான சகோதரனே, சகோதரியே நீங்கள் கிறிஸ்துவ வாழ்க்கையிலே வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கிறீர்களா? கிறிஸ்தவ வாழ்க்கையிலே வளர்வது என்றால் என்ன என்பது குறித்த கேள்வி சிலருக்கு இருக்கிறது.

ஒவ்வொரு முறை கர்த்தருடைய வசனங்களை நாம் கற்றுக் கொள்ளும் பொழுதும் அவர் கற்றுக் கொடுக்கிற பாடங்களுக்கு தொடர்ந்து நாம் கீழ்ப்படிந்து கொண்டே செல்வதுதான் கர்த்தருக்குள்ளே வளருதல் என்பது. அப்படி நாம் செயல்படும்பொழுது அவரைக் குறித்த அறிவிலே வளருகிறோம். அவருடைய எதிர்பார்ப்புக்கு பிரியமானவர்களாய் வாழ்வதிலே வளருகிறோம். எனவே கிறிஸ்தவ வாழ்க்கையிலே வளருகிறோம்.

அடுத்ததாக ஆகாரையும், இஸ்மவேலையும் வீட்டைவிட்டு ஆபிரகாம் அனுப்ப வேண்டிய சூழ்நிலையைக் குறித்து நாம் பார்க்கப் போகிறோம்.

ஆதியாகமம் 21 : 9, 10

ஈசாக்கு சிறுவனாக இருந்த காலத்திலேயே இங்கே பிரச்சனை ஆரம்பமாகிறது. ஆகாரின் மகனான இஸ்மவேல் ஈசாக்கை பரியாசம் பண்ணுகிறான். கவனித்தீர்களா? இப்போது இஸ்மவேலின் குணநலன்கள் வெளிப்பட ஆரம்பிக்கிறது. இந்த நேரம் வரை மிக நல்ல பையனைப் போல அவன் இருந்தான். ஆனால் இப்பொழுது குடும்பத்திலே மற்றுமொரு பையன் பிறந்தபொழுது இஸ்மவேல் தனது உண்மையான நடத்தையைக் காட்ட ஆரம்பிக்கிறான்.

அருமையானவர்களே, இது ஒரு ஆவிக்குறிய சத்தியத்தையும் நமக்குக் காட்டுகிறது. ஒவ்வொரு விசுவாசிகளுடைய வாழ்க்கையிலேயும் இரண்டு தன்மைகள் அல்லது இரண்டு

இயற்கை சுபாவங்கள் இருக்கின்றன. நீங்கள் மனம் திரும்பி இரட்சிப்பின் அனுபவத்திற்குள்ளே கடந்து வரும்வரை உங்களுடைய பழைய சுபாவம் உங்களை ஆண்டு வழிநடத்துகிறதாய் இருக்கிறது. நீங்கள் எதைச் செய்ய நினைக்கிறீர்களோ, அதை செய்கிறீர்கள். இயற்கையாக எது உங்களுடைய எண்ணத்தில் தோன்றுகிறதோ, அதைச் செய்கிறீர்கள். ஆனால் இயற்கையாகவே நீங்கள் செய்வது எல்லாமே நல்ல காரியங்களாய் இருக்காது. ஆனால் நீங்கள் மறுபடியும் பிறக்கும்பொழுது ஒரு புதிய சுபாவத்தைப் பெற்றுக்கொள்கிறீர்கள். இந்தப் புதிய சுபாவத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளும்பொழுது, இப்போதுதான் பிரச்சனை உண்டாகிறது. இதைக் குறித்துதான் அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 7ஆம் அதிகாரத்திலே பழைய மனுனுக்கும் புதிய மனுனுக்கும் இடையிலே உண்டாகிற யுத்தத்தைக் குறித்து எழுதியிருக்கிறார்.

ரோமர் 7 : 19

"ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்."

புதிய சுபாவம் அல்லது புதிய மனுன் செய்ய விரும்பாததை பழைய மனுன் செய்ய விரும்புகிறான். அப்படியென்றால் பழைய சுபாவம் அதிகாரத்தில் இருக்கிறது அல்லது கட்டுப்படுத்துகிறது என்று சொல்லலாம். எந்த சுபாவத்திற்கு நீங்கள் கீழ்ப்படிந்து எதை செயல்படுத்த வேண்டும் என்பதைக் குறித்து நீங்கள் தீர்மானிக்க வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். தேவனுக்கு உங்களை அர்ப்பணிப்பதைக் குறித்து ஒரு தெளிவான தீர்மானத்திற்குள்ளே நீங்கள் கட்டாயம் கடந்து வர வேண்டும். பரிசுத்த ஆவியானவர் உங்கள் வாழ்க்கைக்குள்ளே வந்து உங்களைக் கட்டுப்படுத்த அனுமதிக்க வேண்டும். இல்லையென்றால் உங்களுடைய மாம்சம் உங்களைக் கட்டுப்படுத்தி வழிநடத்தும் நிலைமைக்கு நீங்கள் போக வேண்டும். தேவனுடைய பிள்ளைகளுக்கு மூன்றாவது என்று ஒரு வழியோ, வாய்ப்போ, மார்க்கமோ இல்லை.

இப்பொழுது அடிமைப்பெண்ணின் மகன் நிச்சயமாக வீட்டைவிட்டு அனுப்பப்பட வேண்டும். பழைய சுபாவம் வெளியேற்றப்பட வேண்டும்.

ஆதியாகமம் 21 : 11

ஈசாக்கு எப்படி ஆபிரகாமின் மகனோ, அதுபோல இஸ்மவேலும் ஆபிரகாமின் மகன்தான். புதிதாய்ப் பிறந்த ஈசாக்கிற்கு தன்னைக் குறித்து எதுவுமே தெரியாது; ஆனால் இந்த இளைஞனான இஸ்மவேலுக்கு அவன் பிறந்து பல ஆண்டுகள் ஆனபடியினாலே அவன் ஆபிரகாமோடு நெருக்கமுள்ளவனாய் இருக்கிறான். எனவே அவனை வீட்டைவிட்டு அனுப்பி விடுவது ஆபிரகாமுக்கு மனவருத்தமானதாய் இருக்கிறது.

அருமையானவர்களே, ஏற்கனவே சொன்ன ஒரு குறிப்பை மீண்டும் நான் கூற விரும்புகிறேன். ஆபிரகாமும் சாராளும் ஆகாரை ஆபிரகாமுக்கு மனைவியாக எடுத்துக் கொண்ட காரியத்தை தேவன் ஏற்றுக் கொள்ளவே இல்லை. எனவே இஸ்மவேலையும் தேவன் ஏற்றுக் கொள்ள முடியாது. அது பாவம். இவ்வளவு நடந்துவிட்டது, இனி அவனையும்

குமாரனாக ஏற்றுக் கொள்வோம் என்று தேவன் செயல்பட வேண்டியதில்லை. இது ஆபிரகாமுக்கு மன வருத்தமாய் இருந்தது. எனவே பிரச்சனையை தீர்ப்பதற்காக ஆபிரகாம் இஸ்மவேலை வீட்டைவிட்டு அனுப்பிவிட வேண்டியதாய் இருந்தது.

இப்படி பரியாசம் பண்ணிக் கொண்டிருக்கும் இஸ்மவேலை ஏற்றுக்கொள்ள சாராளுக்கும் மனதில்லை. எனக்கருமையான சகோதரனே, சகோதரியே, ஒரு விசுவாசியாக நீங்கள் இரண்டு குணநலனும் உள்ளவர்களாய் தொடர்ந்து வாழ முடியாது. நீங்கள் திட்டவட்டமான ஒரு தீர்மானம் எடுத்துத்தான் ஆக வேண்டும்.

யாக்கோபு முதலாம் அதிகாரம் 8ஆம் வசனத்திலே யாக்கோபு என்ன சொல்கிறார்.

"இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்."

இது அநேக கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையிலே காணப்படும் நிலையில்லாதத் தன்மையைக் குறித்தும் வெளிப்படுத்துகிறது. உலகத்தோடு ஒத்துப் போகவும் விரும்புகிறார்கள், தேவனுடைய பிள்ளைகளாகவும் வாழ விரும்புகிறார்கள். இரண்டையும் செய்ய முற்படுவது முடியாத காரியம். கிரேக்க தேசத்திலே ஒரு போட்டி நடைபெறுமாம். 2 குதிரைகளை ஒன்றோடு ஒன்று இணைத்துக் கட்டி அந்தக் குதிரைகளை ஓட்டிச் செல்கிறவன் ஒரு காலை ஒரு குதிரை மேலேயும், மற்றொரு காலை மற்றொரு குதிரை மேலேயும் வைத்து நின்றுகொண்டு இந்த போட்டியிலே அவன் கலந்து கொள்ள வேண்டும். இரண்டு குதிரைகளும் ஒன்றாக இருப்பது வரைக்கும் எல்லாம் சரியாகப் போகும். அதன்பின் நீங்களே கற்பனை செய்து பாருங்கள்.

உங்களுக்குள்ளும் இரண்டு விதமான தன்மைகள் இருக்கின்றன. ஒன்று கருப்பு குதிரை, மற்றொன்று வெள்ளைக் குதிரை. அவை இரண்டும் இணைந்து போக முடியுமென்றால் பரவாயில்லை. ஆனால் அப்படி செயல்படவே முடியாது. வெள்ளைக் குதிரை ஒரு திசையிலேயும், கருப்பு குதிரை மற்றொரு திசையிலேயும்தான் போகும். அப்படிச் செல்லும்பொழுது, எந்தக் குதிரையின் மேலே நீங்கள் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதைக் குறித்து ஒவ்வொரு நாளும் உங்கள் மனதிலே நீங்கள் தீர்மானிக்க வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். பழைய சுபாவத்திலேயே நீங்கள் வாழப்போகிறீர்களா? அல்லது புதிய சுபாவத்திலே நீங்கள் வாழப்போகிறீர்களா? எனவேதான் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று பரிசுத்த பவுல் தெளிவாய் எழுதுகிறார். ரோமர் 6ஆம் அதிகாரம் 13ஆம் வசனம்.

"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்."

நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதைக் குறித்து இந்த வசனம் தெளிவாகத் திரும்பத்திரும்ப மூன்றுமுறை சொல்கிறது. இன்னொரு வசனத்தையும் இந்த இடத்திலே நாம் வாசிக்க வேண்டும். ரோமர் 8: 3, 4 வசனங்கள்,

"அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின்

www.Radio882.com

சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்."

நியாயப்பிரமாணமானது மனிதனை கட்டுப்படுத்த முயற்சிசெய்து, மனிதனின் பழைய சுபாவத்தைக் கட்டுப்படுத்த முயற்சிசெய்து தோல்வி கண்டுவிட்டது. இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் புதிய சுபாவத்திற்கு வலிமை கொடுத்து நியாயப்பிரமாணம் செய்யமுடியாததை செய்யக்கூடியவர்களாய் நம்மை மாற்றுகிறது.

சரி நாம் வாசித்தது போல, இஸ்மவேலின் குணநலன் வெளியே தெரிய ஆரம்பிக்கிறது. இதே சுபாவம்தான் அந்த தேசத்து மக்களுடைய வாழ்க்கையிலேயும் வெளிப்படுத்தப்படுவதை நாம் பார்க்கப் போகிறோம். இஸ்மவேலின் சந்ததி ஈசாக்கின் சந்ததிக்கு எதிரானதாகவே காணப்படுகிறது.

எத்தனையோ நூற்றாண்டுகளாக இதுதான் உண்மையானதாய் இருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னது போல இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்கு ஈசாக்கின் பிறப்பு ஒரு நிழலாய் இருக்கிறது. திடீரென்று சொல்லி ஒரு கன்னிகை கர்ப்பமாவதைக் குறித்து மனுகுலத்திற்கு தேவன் செயல்படவில்லை, பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே பல அற்புதமான பிறப்புகளின் மூலமாக மக்களுடைய இருதயத்தைக் கர்த்தர் ஆயத்தப்படுத்திவிட்டார்.

யோவான்ஸ்நானனின் பிறப்பும் இந்த வரிசையிலே சேரும், சிம்சோனின் பிறப்பு, ஈசாக்கின் பிறப்பு அத்தனையுமே அற்புதமான பிறப்புகள்தான். இந்த ஈசாக்கின் பிறப்பைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்தும் உண்டான ஒற்றுமைகளை நாம் சற்றே கவனிப்போமா? மொத்தம் 9 குறிப்புகள் இருக்கின்றன.

ஈசாக்கின் பிறப்பும், இயேசு கிறிஸ்துவின் பிறப்பும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது. கல்தேயருடைய பட்டணமாகிய ஊரிலிருந்து 25 ஆண்டுகளுக்கு முன்னதாக தேவன் ஆபிரகாமை அழைக்கும் பொழுது, உனக்கும் சாராளுக்கும் ஒரு குமாரனைக் கொடுக்கப் போகிறேன், என்று சொன்னார். இந்த வாக்குத்தத்தத்தைக் கொடுத்து 25 ஆண்டுகள் கடந்த பின்னர், வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார்.

இஸ்ரவேல் தேசத்தைப் பார்த்து ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், என்றும் கூறினார். அன்று பெத்லகேமிலே இயேசுபாலன் பிறந்த பொழுது அந்த வாக்குத்தத்தம் நிறைவேறியது. அந்த தீர்க்கதரிசனம் நிறைவேறியது. எனவே முதலாவதாக இரண்டு பிறப்புக்களும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பிறப்புக்கள்.

இரண்டாவதாக இரண்டுபேருடைய பிறப்புகளுக்கும் வாக்குத்தத்தம் நிறைவேறுதலுக்கும் இடையே அதிக இடைவெளி இருந்தது என்று சொல்லலாம். ஈசாக்கு பிறப்பதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்னதாக ஈசாக்கின் பிறப்பு வாக்குபண்ணப்பட்டது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்தமட்டிலேயும் பல சந்ததிகளுக்கு முன்னதாகவே சொல்லப்பட்டது.

www.Radio882.com

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 1000 வருடங்களுக்கு முன்னதாகவே தாவீதின் வம்சத்திலே ஒருவர் வருகிறார் என்பது அறிவிக்கப்பட்டுவிட்டது. இது குறிப்பிடத்தக்க ஒரு ஒற்றுமை என்று சொல்லலாம்.

மூன்றாவதாக இந்த பிறப்பைக் குறித்த செய்தியானது சாராளுக்கும், மரியாளுக்கும் இது முடியாத காரியம் என்று எண்ணத் தோன்றியது. சோதோமுக்கு சென்ற தேவனுடைய ஊழியர்கள் ஆபிரகாமை சந்தித்தபொழுது ஈசாக்கின் பிறப்பைக் குறித்து அறிவித்தார்கள். இது முடியாத காரியமாகவே அவர்களுக்குத் தெரிந்தது. சாராள் நகைத்தாள் என்று வாசிக்கிறோம். இது எப்படி முடியும்? இது முடியாத காரியம் ஆயிற்றே என்று எண்ணினாள். கன்னிப்பிறப்பைக் குறித்த கேள்வியை முதலாவது எழுப்பியது யார்? மரியாள்தான். மரியாள், கிறிஸ்துவின் பிறப்பைக்குறித்து அறிவித்த பொழுது இது எப்படி ஆகும்? புருஷனை அறியேனே என்று சொன்னாள்.

சரி, நான்காவதாக ஈசாக்கும், இயேசு கிறிஸ்துவும் பிறப்பதற்கு முன்னதாகவே இரண்டு பேருக்கும் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் சொல்லப்பட்டது என்ன? பிறக்கப்போகும் மகனுக்கு ஈசாக்கு என்று பேரிடவேண்டும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பிலேயும், பிறப்பதற்கு முன்னதாகவே அவருக்கு இயேசு என்று பெயரிட வேண்டும் என்று தூதன் யோசேப்புக்குக் கட்டளையிட்டான், என்பதை மத்தேயு 1 : 21 லே வாசிக்கிறோம்.

ஐந்தாவதாக இரண்டுபேருடைய பிறப்பும் தேவன் குறித்த நேரத்திலே நடைபெற்றது. ஆதியாகமம் 21ஆம் அதிகாரம் 2ஆம் வசனத்தின்படியேயும், கலாத்தியர் 4ஆம் அதிகாரம் 5ஆம் வசனத்தின்படியேயும் குறிக்கப்பட்ட நேரத்திலே ஈசாக்கும் இயேசுகிறிஸ்துவும் பிறந்தார்கள்.

ஆறாவதாக இரண்டு பிறப்புக்களும் அற்புதமானவை, ஆச்சரியமானவை. ஈசாக்கின் பிறப்பு அற்புதமானது. அதைப்போல இயேசுகிறிஸ்துவும் எந்த மனிதனின் ஈடுபாடும் இல்லாமல், பங்கும் இல்லாமல் பிறந்தார்.

ஏழாவதாக இரண்டு குமாரர்களும் அவர்கள் தகப்பனாருக்கு மகிழ்ச்சியை கொடுத்தார்கள். ஈசாக்கு என்றால் நகைப்பு என்று பொருள். இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லும் பொழுது மத்தேயு 3ஆம் அதிகாரம் 17ஆம் வசனத்திலே நாம் வாசிப்பது போல,

இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இரண்டு குமாரர்களும் சந்தோத்தைக் கொடுத்தார்கள்.

எட்டாவதாக இரண்டு குமாரர்களும் தங்கள் தகப்பனாருக்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாய் இருந்தார்கள். மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவர்களாய் இருந்தார்கள். ஆதியாகமம் 22ஆம் அதிகாரத்திலே ஈசாக்கு தனது தகப்பனாருக்கு எப்படி கீழ்படிதல் உள்ளவராய் இருந்தார் என்பதைப் பார்க்கப் போகிறோம். ஈசாக்கை பலியிடச் சென்றபொழுது அவன் ஏதோ சிறு பாலகன் அல்ல, சுமார் 33 வயது ஆன ஒரு இளைஞனாய் இருந்தார். தன்னை மரணத்திற்கு ஒப்புக்கொடுப்பதற்கும் அவர் கீழ்ப்படிதல் உள்ளவராய் இருந்தார். அதேபோலத்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் எனக்காகவும், உங்களுக்காகவும் சிலுவையிலே

www.Radio882.com

அடிக்கப்படும்படியாக பிதாவினாலே ஒப்புக்கொடுக்கப்பட்டபொழுது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராய் இருந்தார் என்று பிலிப்பியரிலே வாசிக்கிறோம்.

ஒன்பதாவதாக ஈசாக்கின் அற்புதமான பிறப்பானது இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலின் ஒரு காட்சியாகவும் காணப்படுகிறது. ஞாபகம் இருக்கிறதா? ரோமர் 4ஆம் அதிகாரம் 19ஆம் வசனத்திலே வாசித்தோமல்லவா?

"அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப் போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்."

இப்பொழுது ரோமர் 4ஆம் அதிகாரத்திலேயே 25ஆம் வசனத்தையும் பாருங்கள்.

"அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்."

எனவே, ஈசாக்கு இயேசு கிறிஸ்துவின் நிழலாய் இருக்கிறார் என்று சொல்லலாம். இப்போது நாம் தேவன் ஆபிரகாமோடும்,அதே போல ஆகாரோடும் அவளுடைய குமாரனோடும் எப்படி கிருபையாய் இருக்கிறார் என்பதைப் பார்க்கப்போகிறோம்.

ஆதியாகமம் 21 : 12

தேவன் அங்கே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகன் ஈசாக்குதானே ஒழிய இஸ்மவேல் அல்ல என்பதை தெளிவாக எடுத்துக் கூறுகிறார்.

ஆதியாகமம் 21 : 14 – 21

இதோடுகூட வேத புத்தகத்திலே இஸ்மவேலின் வம்சத்தைக் குறித்து, நாம் சிந்திப்பதை நிறுத்திக் கொள்கிறோம். ஆனால் இஸ்மவேலுடைய சந்ததியான அரபு மக்கள் இன்றைக்கு அந்தப் பாலைவனப் பகுதியிலே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

தேவன் உங்களுடைய வாழ்க்கையிலேயும் வாக்குத்தத்தம் கொடுத்திருப்பாரென்றால், அதை நிச்சயமாக ஏற்ற காலத்திலே நிறைவேற்றுவார் என்பதை உங்கள் இருதயத்தின் ஆழத்திலே தெளிவாக எழுதிக்கொள்ளுங்கள். குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள் என்று வாசிக்கிறோம்.

நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலேயும் தேவன் வாக்குத்தத்தம் பண்ணி இருக்கிற ஆசீர்வாதங்களைக் குறித்த காலத்திலே தருவார்.

இரண்டாவதாக பழைய மனுனுக்கும் புதிய மனுனுக்கும் உள்ள போராட்டம் தொடர்ந்து உங்கள் வாழ்க்கையிலே நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது என்றால் நீங்கள் இன்னமும் எந்த சுபாவத்திற்குக் கீழ்ப்படிவது என்பதைக் குறித்து தீர்மானிக்கவில்லை என்பது தெளிவாகிறது. ஒவ்வொரு சூழ்நிலையிலேயும் ஒருவேளை கேள்விக்குறிகள், போராட்டமான எண்ணங்கள் வரலாம். ஆனால் ஒருமுறை நீங்கள் எடுக்கிற தீர்மானம், அடுத்தமுறை எடுக்கும் தீர்மானத்திற்கு உதவி செய்கிறதாய் இருக்கிறது என்பதை மறந்து போகக்கூடாது. பழைய

சுபாவத்திற்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுத்து அதன் எண்ணங்களுக்குக் கீழ்ப்படியும்பொழுது புதிய சுபாவத்தின் வலிமையை நீங்கள் அனுபவிக்க முடியாது. புதிய சுபாவத்திற்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுத்து தீர்மானம் எடுக்கும் பொழுது, பரிசுத்தாவியானவரின் வல்லமையை உங்கள் வாழ்க்கையிலே தொடர்ந்து நீங்கள் அதிகமாக உணர முடியும், அவருக்காக வாழ முடியும்.

நாம் ஆதியாகமம் 21ஆம் அதிகாரத்தின் முதல் பகுதியைப் பார்த்தோம். கர்த்தர் தாம் வாக்குபண்ணினபடியே ஆபிரகாமுக்கு ஈசாக்கை தந்தருளியதைக் குறித்தும், ஆகாரையும், இஸ்மவேலையும் ஆபிரகாம் வீட்டைவிட்டு அனுப்ப வேண்டிய சூழ்நிலை வந்த பொழுது கர்த்தருக்குக் கீழ்படிந்து அவன் செயல்பட்டதைக் குறித்தும், இஸ்மவேலையும் கர்த்தர் ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்று ஆகாருக்கு வாக்குக் கொடுத்ததைக் குறித்தும் நாம் சிந்தித்தோம்.

ஆதியாகமம் 21ஆம் அதிகாரம் 22ஆம் வசனம் முதல் அபிமெலேக்கும், ஆபிரகாமும் ஒருவரை ஒருவர் சந்தித்து ஆணையிட்டுக் கொள்வதைக் குறித்துப் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 21: 22, 23

இந்த அபிமெலேக்கை ஆதியாகமம் 20ஆம் அதிகாரத்திலே நாம் முதலாவது சந்தித்தோம். கேராரில் ராஜாவாக இருந்த இவன் ஆபிரகாமின் மனைவியாகிய சாராளை தனக்கு மனைவியாக எடுத்துக் கொள்ள முனைந்தபொழுது, தேவன் தலையிட்டு அவளை விடுவித்தார்.

ஆபிரகாம் பொய் சொன்னதை அபிமெலேக்கு அறிந்து கொண்டான். அதே வேளையிலே இங்கே நாம் வாசித்ததுபோல ஆபிரகாம் செய்கிற எல்லாக் காரியங்களிலேயும் தேவன் அவனோடு இருக்கிறார் என்பதையும் அபிமெலேக்குக் கண்டான். எனவே இப்படிச் செல்வச் செழிப்போடு வளர்ந்து வருகிற ஆபிரகாமால் எதிர்காலத்திலே தனக்காவது தன் பிள்ளைகளுக்காவது தன் பேரப்பிள்ளைகளுக்காவது கெடுதி எதுவும் வந்துவிடக்கூடாது என்பதை எண்ணினவனாக, நீ யாருக்கும் வஞ்சனை செய்யாமல், நீ எனக்கும் நீ தங்கியிருக்கிற இந்த தேசத்துக்கும் தயவு செய்வேன் என்று தேவன் பேரிலே ஆணையிட்டுக் கொடு, என்றான். தொடர்ந்து 24 முதல் 31 வசனம் வரை நாம் பார்பபப்போமென்றால், இருவரும் ஒருவருக்கொருவர் ஆணையிட்டுக் கொள்கிறார்கள். இதனால் இருவருக்கும் இடையிலே நல்ல ஒரு உறவு உண்டாகிறது.

அவர்கள் நண்பர்களாகிவிட்டார்கள். இப்பொழுது ஆதியாகமம் 21ஆம் அதிகாரம் 32, 33ஆம் வசனங்களைப் பாருங்கள்,

அருமையானவர்களே கவனித்தீர்களா? ஆபிரகாம் எந்த இடத்திற்குப் போனாலும், அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி தேவனுடைய நாமத்தை தொழுது கொள்ளும் பழக்கம் உள்ளவனாக இருக்கிறான். நம்முடைய வாழ்க்கையை நாம் சற்றே சிந்தித்துப் பார்ப்போமா? நம்முடைய வீடுகளிலே அனுதினமும் எழுந்து காலையிலே வேதம் வாசிக்கிறோம், ஜெபிக்கிறோம், நம்முடைய கடமைகளைச் செய்கிறோம்.

ஆனால், வேறு இடங்களுக்குப் போகும் போதும் கர்த்தரோடு நம்முடைய தொடர்பைக் குறித்து, நாம் வெட்கப்படாமல் வேதம் வாசித்து ஜெபிக்கிறவர்களாய் இருக்கிறோமா என்பதை

எண்ணிப் பார்க்க வேண்டும். வெளியே கடைகளுக்கு உணவருந்தப் போகிறோம். வீட்டிலே ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி அதை உட்கொள்வது போலவே வெளியே நாம் செய்கிறோமா? நம்முடைய வேலையின் நிமித்தமாகவோ, அல்லது குடும்பத்தில் ஏதோ விசேத்தினாலோ வெளியே வேறொரு இடத்திற்குச் செல்கிறோம். அங்கே போகும் பொழுது நம்முடைய வேத வாசிப்பு நம்முடைய ஜெபம் ஆண்டவரோடு நம்முடைய உறவு அந்த நாளிலே காக்கப்பட்டதாய் இருக்கிறதா அல்லது இழந்து போனவர்களாய் காணப்படுகிறோமா?

சிலர் வேலை ஸ்தலங்களுக்கு செல்லும்பொழுது தாங்கள் கிறிஸ்துவை அறிந்தவர்கள், தேவனைத் தொழுது கொள்கிறவர்கள் என்பதை மறந்து போகிறார்கள். ஆனால் இன்னும் சில விசுவாசிகள் வேலை ஸ்தலத்திற்குச் சென்றாலும் தங்கள் வேலைகளுக்குள்ளே கடந்து செல்லும் முன்னதாக இருக்கையிலே அமர்ந்து சில நிமிடங்கள் தேவனை நோக்கி ஜெபித்து, ஞானத்தையும், ஆலோசனையையும், பெலனையும் கேட்டு சாட்சியாகப் பணி செய்கிறார்கள்.

அருமையானவர்களே இந்த ஆபிரகாம் சென்ற இடங்களிலெல்லாம் தேவனுடைய நாமத்தைத் தொழுது கொள்வதைக் குறித்து வெட்கப்படவில்லை. ஏனென்றால் ஆபிரகாம் தேவனை நேசித்தான், அவரை விசுவாசித்தான்.

நம்முடைய வாழ்க்கையிலேயும் அப்படிப்பட்ட ஒரு தீர்மானம் செய்வோமா ?

ஆதியாகமம் 21 : 34

தேவன் வாக்குக் கொடுத்த பூமியிலே ஆபிரகாம் ஒவ்வொரு இடமாகக் குடிபெயர்ந்து அங்குமிங்குமாகப் பிரயாணம் செய்துகொண்டிருந்ததை நாம் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 22ஆம் அதிகாரத்தில் ஈசாக்கை ஆபிரகாம் பலியிடும்படியாக தேவன் கட்டளையிடுவதை நாம் பார்க்கிறோம். இந்த வேதப்பகுதியிலே வேதத்திலுள்ள மற்றுமொரு உன்னதமான கருத்தை நாம் கற்றுக் கொள்கிறோம். சொல்லப்போனால் ஆதியாகமப் புத்தகத்திலேயே மிக முக்கியமான பகுதிக்கு நாம் வந்திருக்கிறோம்.

ஆதியாகமம் 22ஆம் அதிகாரத்தில் ஆபிரகாம் தனது மகனாகிய ஈசாக்கை கர்த்தருக்காய் பலியிடும்படியாக சென்ற சம்பவம் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் ஆபிரகாமைப் பார்த்து அவனுடைய மகனாகிய ஈசாக்கை தனக்கு பலியிடும்படியாகச் சொல்கிறார். ஆனால் கடைசி நேரத்திலே அதைத் தடுத்து நிறுத்துகிறார். ஏனென்றால் ஆபிரகாம் தனக்காக எதையுமே செய்யத் தயங்குவதில்லை என்பதை கவனிக்கிறார்.

இந்த அதிகாரத்திலேதான் தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த இறுதியான ஏழாவது தரிசனத்தைக் குறித்துப் பார்க்கிறோம். இதற்கு மேலாக தேவன் ஆபிரகாமிடத்திலே எதையுமே கேட்க முடியவில்லை. ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த ஒரு உன்னதமான சோதனை. வேதப் புத்தகத்தில் உள்ள 10 முக்கியமான அதிகாரங்களைத் தேர்ந்தெடுங்கள் என்று உங்களுக்குச் சொல்லப்பட்டால், நிச்சயமாக இந்த அதிகாரத்தை நீங்கள் தெரிவு செய்வீர்கள். அதற்கு ஒரு காரணம் இங்கே தான் மனிதனை பலியிடுவதைக்குறித்து முதல் செய்தியை வாசிக்கிறோம். மனிதனை பலியிடுவதே தவறு என்பதை மனிதனுக்கு தெளிவுபடுத்துவதற்காக தேவன் செய்த திட்டமாய் இது இருக்கிறது. அதுமட்டுமல்ல பாவிகளை இரட்சிப்பதற்காக ஒரு ஜீவன் கொடுக்கப்பட வேண்டும் என்பதை தேவன் வெளிப்படுத்துகிறார்.

www.Radio882.com

மனிதர்களின் பாவத்திற்காக மரணத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய எந்த ஒரு மனிதனும் மனித சமுதாயத்திலே இல்லை. தேவனுடைய குமாரன் ஒருவரே அதற்குத் தகுதி பெற்றவராய் இருக்கிறார். ஈசாக்கு பலியிடப்படுவதைத் தடுத்தார், ஆனால் தனது சொந்த குமாரன் நமக்காக பலியாவதை அவர் தடுக்கவில்லை என்று அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலும் ஒரு இடத்திலே கூறியிருக்கிறார். ஆதியாகமம் 22ஆவது அதிகாரத்தை சங்கீதம் 22 டோடும் ஏசாயா 53 றோடும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஈசாக்கின் பிறப்பிலே மட்டுமல்ல ஈசாக்கின் பலியிடும் இந்த சம்பவத்திலேயும் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இந்த சம்பவத்தை சுட்டிக்காட்டி யாக்கோபு எழுதும்பொழுது வேதத்தின் மற்ற பகுதிகளுக்கு எதிராகக் கூறப்படுவது போல இது காணப்படுகிறது. யாக்கோபு 2ஆம் அதிகாரம் 21ஆம் வசனத்தைப் பாருங்கள்.

“நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தின போது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்?” என்று குறிப்பிடுகிறார். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 4ஆம் அதிகாரம் முதல் 24 வசனங்களில் என்னச் சொல்கிறார், பாருங்கள்.

“அப்படியானால், நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் மாம்சத்தின்படி என்னத்தைக் கண்டடைந்தான் என்று சொல்லுவோம்?

ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில் மேன்மை பாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு; ஆகிலும் தேவனுக்கு முன்பாக மேன்மை பாராட்ட ஏதுமில்லை.

வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தின். அது அவனுக்கு நீதியாய் எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது.

கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபை என்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும்.”

இரண்டு பகுதிகளையும் விசுவாசித்தோம். யார் சொல்வது சரி? யாக்கோபு சொல்வது சரியா ? அல்லது பவுல் அப்போஸ்தலர் சொல்வது சரியா ?

அருமையானவர்களே, இரண்டு பேர் சொல்வதும் சரிதான். முதலாவதாக இரண்டு பேரும் ஒரே காரியத்தைக் குறித்துத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதாவது விசுவாசத்தைக் குறித்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். யாக்கோபு விசுவாசத்தினால் உண்டான கிரியையைக் குறித்து சொல்கிறாரே ஒழிய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதைக் குறித்து அவர் சொல்லவில்லை. அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுவதைக் குறித்துச் சொல்கிறார். அதாவது ஆதியாகமம் 15ஆம் அதிகாரத்தைக் குறித்து அவர் சொல்கிறார்.

அந்த காலக்கட்டத்திலே தேவன் ஒருவரே அவனுடைய இருதயத்தை அறிந்தவராய் இருந்தார். தேவனை ஆபிரகாம் விசுவாசித்ததை தேவன் கண்டார். ஆபிரகாம் தனது நீதிக்காக தேவனையே விசுவாசிக்கிறவராய் இருந்தார். ஆபிரகாம் பலமுறை வீழ்ச்சியுற்றதை நாம்

வாசிக்கிறோம். ஒருவேளை அவனைச் சுற்றியிருந்து அவனைக் கவனித்துக் கொண்டிருந்தவர்கள் கூட ஆபிரகாமைப் பார்த்தால் நீதிமானாக தெரியவில்லையே என்றுதான் சொல்லியிருப்பார்கள். ஆனால் தனது சொந்த குமாரனாகிய ஈசாக்கை பலியிடும்படியாக அவன் அழைத்துச் சென்றபொழுது கடின இருதயமான பெலிஸ்தியர்கள் கூட ஆபிரகாம் தனது விசுவாசத்தைச் செயலிலே காட்டிவிட்டான் என்றுதான் சொல்லியிருப்பார்கள்.

யாக்கோபு என்ன சொல்கிறார் என்றால் ஆபிரகாம் கிரியையினாலே நீதிமானாக்கப்பட்டான் என்று சொல்கிறார். எப்பொழுது அவர் நீதிமானாக்கப்பட்டார்? இப்பொழுது ஈசாக்கை பலியிடும்பொழுது ஒரு கேள்வி எழும்பக்கூடியதாய் இருக்கிறது. உண்மையாகவே ஆபிரகாம் ஈசாக்கை பலிபீடத்திலே பலியிட்டாரா? அதற்கு விடை இல்லை என்றுதான் சொல்வோம். ஆனால் அப்படி செய்ய அவர் ஆயத்தமாய் இருந்தார். அதையும் செய்ய ஆயத்தமாய் இருந்த அந்த மன நிலைமையைக் குறித்து தான் யாக்கோபு எழுதியிருக்கிறார்.

அதாவது ஆபிரகாம் விசுவாசத்தினாலே செயல்பட்டான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறார். எனவே நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். யாக்கோபு 22ஆம் அதிகாரத்திலே வாசிக்கிற ஆபிரகாமின் விசுவாசத்தினால் உண்டான கிரியைகளை சுட்டிக் காட்டுகிறார். அதே வேளையிலே ரோமர் 4ஆம் அதிகாரத்திலே பவுல் அப்போஸ்தலன் சொல்லும்பொழுது ஆபிரகாமுடைய இருதயத்திலே இருந்த விசுவாசத்தைக் குறித்து ஆதியாகமம் 15ஆம் அதிகாரத்திலே பார்க்கிற ஆபிரகாமைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறார்.

அருமையானவர்களே, நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எந்த நல்ல காரியத்தையும் செய்ய முடியாது, ஆனால் நாம் விசுவாசிக்கும்பொழுது தேவன் அவருடைய நீதியை நமக்குத் தருகிறார். அது மட்டுமல்ல நாம் விசுவாசமுள்ளவர்களாய் இருக்கிறபடியினாலே சாட்சியான சில காரியங்களை செய்யத் துணிகிறோம். அதுதான் விசுவாசத்தின் கிரியை.

சரி, இப்பொழுது நாம் அந்த அதிகாரத்திலே சில வசனங்களை வாசிப்போம்.

ஆதியாகமம் 22

ஆதியாகமம் 22 : 1

சோதித்தார் என்று சொல்லப்பட்டிருப்பது கடினமான ஒரு வார்த்தைதான். உண்மையாக இது பரீட்சித்தார் என்று சொல்லலாம். யாக்கோபு தனது நிருபத்திலே சொல்லும்பொழுது தேவன் யாரையும் சோதிப்பதில்லை; யாரையும் பொல்லாங்கினாலே சோதிப்பதில்லை என்று கூறியிருக்கிறார். தேவன் சோதிக்கிறார் என்று சொன்னால், விசுவாசத்தை பரிசோதிக்கிறார் என்றுதான் பொருள்.

தேவன் ஆபிரகாமைப் பரிசோதித்தார்; ஒரு விநோதமான காரியத்தைச் செய்யும்படியாக அவனிடத்திலே கேட்கிறார்.

ஆதியாகமம் 22 : 2

இந்த அதிகாரம் முடிந்தவுடனேயே சாராளுக்கு 127 வயது ஆயிற்று ; அப்பொழுது அவள் மரித்துப் போகிறாள் என்று ஆதியாகமம் 23 : 1 லே பார்க்கிறோம். இதன்படி ஈசாக்கு சிறுவயதுள்ளவன் அல்ல. ஈசாக்கு பிறந்தபொழுது சாராளுக்கு 90 வயதாயிருந்தது. இப்பொழுது

127 லே அவள் மரித்துப் போகிறாள். அப்படியென்றால் 37 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இங்கே தேவன் என்ன சொல்கிறார் கவனியுங்கள். உன் புத்திரனும், உன் ஏகசுதனும், உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை இப்பொழுது நீ அழைத்துக்கொண்டு போ என்று சொல்கிறார்.

திருத்துவத்திலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து குமாரன் ஸ்தானத்தை எடுக்கிறார். இயேசு கிறிஸ்துவும் ஒரே பேரான குமாரன் என்று அழைக்கப்பட்டிருக்கிறார். இங்கே ஈசாக்கைக் குறித்துச் சொல்லும்பொழுது, உன் ஏகசுதனும், உன் நேச குமாரனும் என்று கூறுகிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பிதா என்னை நேசிக்கிறார் என்று கூறியிருக்கிறார்.

எங்கே கொண்டு போக வேண்டுமாம்? ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மோரியா எனும் இடத்திலேதான் பல ஆண்டுகளுக்குப் பிறகு தேவனுடைய ஆலயம் கட்டப்பட்டதென்றும், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு இங்கே தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையிலே பலியாக மரித்தார், அதாவது பட்டணத்திற்கு வெளியே மரித்தார் என்ற நம்பிக்கையும் அநேகருக்கு இருக்கிறது. கொல்கதாவும் எருசலேம் பட்டணமும் மிக தொலைவானவை அல்ல. இரண்டிற்கும் இடையிலே ஒரு தெரு மட்டுமே இருக்கிறது. மற்றபடி அது ஒரே மேட்டிலே அமைந்ததாகவே இருக்கிறது. இந்த இடம்தான் மோரியா என்று அழைக்கப்பட்டிருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அதே இடத்திலே தான் மரித்தார் என்று நாம் சொல்ல முடியாது. ஏனெனில் அது நமக்குத் தெரியாது. ஆனால் ஆபிரகாம் ஈசாக்கை பலியிடச் சென்ற அதே மலையிலேதான் என்று சொல்லலாம். தொடர்ந்து 22ம் அதிகாரம் 2ம் வசனத்தின் பின்பகுதியிலே தேவன் என்ன சொல்கிறார்.

ஆதியாகமம் 22 : 2

மோசேயின் கட்டளை வரும் வரை தகன பலி ஒன்றே ஒன்று தான் மக்கள் அறிந்த பலியாய் இருந்தது. அதற்குப் பிறகுதான் பாவ நிவாரண பலி, மற்ற பலிகள் கொடுக்கப்பட்டன. இங்கே தகனபலி என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து பேசுகிறது. ஏனென்றால் அவரே நமக்காகப் பலியானார். நரபலி என்று சொல்லப்படுவது நமக்குக் கேள்வியை எழுப்புகிறது. நரபலி தவறான காரியம் அல்லவா? ஆம், அது தவறான பலிதான். நீங்கள் ஒருவேளை மோரியா மலைக்குப் போய்க் கொண்டிருந்த ஆபிரகாமைப் பார்த்து பேசியிருப்பீர்கள் என்றால், "எங்கே போகிறீர்கள் ஆபிரகாம்? என்று கேட்டால் என்னுடைய மகனாகிய ஈசாக்கை நான் பலியிடப் போகிறேன் என்று சொல்லி இருப்பார். அது தவறானது இல்லையா என்று நீங்கள் கேட்டிருப்பீர்கள். அதற்கு ஆபிரகாம், "ஆமாம் அது தவறானது தான். நம்மைச் சுற்றி வாழுகிற புறஜாதியான மக்கள் இதை செய்கிறார்கள். பெலிஸ்தியர்கள் மோலாக்குக்கு இதைச் செய்கிறார்கள். ஆனால் அது தவறு என்று நான் அறிவேன்," என்று கூறியிருப்பார்.

"அப்படியென்றால் நீங்கள் ஏன் அப்படிப்பட்ட காரியத்தை செய்யப் போகிறீர்கள்?" என்று நீங்கள் கேட்டிருப்பீர்கள். அதற்கு அவர் சொல்லியிருந்திருக்கக்கூடிய ஒரே பதில் என்னவென்றால், "தேவன் எனக்குக் கட்டளையிட்டார்; அது ஒன்றுதான் எனக்குத் தெரியும் இது

எனக்குப் புரியவில்லை, நான் அவரோடு கூட நடந்து வருகிறேன். இதுவரை எனது வாழ்க்கையிலே அவர் என்னை கைவிட்டதில்லை. எந்தக் காரியத்தை அவர் செய்யச் சொன்னாலும் அது சிறப்பான ஒரு காரியமாகத்தான் இருக்கும். இதையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் நான் அவர் சொன்னபடியே செய்யப் போகிறேன். ஈசாக்கை அவர் மரித்தபின்னும் உயிரோடு எழுப்ப முடியும் என்று நான் விசுவாசிக்கிறேன்;" என்று கூறியிருப்பார்.

ஆதியாகமம் 22 : 3

கவனித்தீர்களா? ஆபிரகாம் தேவன் கூறியபடியே, தனது மகனாகிய ஆபிரகாமையும் பலிக்கான கட்டைகளையும் பிளந்து எடுத்துக் கொண்டு புறப்பட்டுப் போகிறார்.

ஆதியாகமம் 22 : 4

தேவன் கட்டளையிட்ட இடத்தை சென்றடைவதற்கு ஆபிரகாமுக்கு மூன்று நாட்கள் ஆயிற்று. மூன்றாவது நாள்தான் ஆபிரகாம் ஈசாக்கை உயிரோடே பெற்றுக் கொண்டார் என்று சொல்லலாம். ஏனென்றால் தேவனுடைய கட்டளையை பெற்றவுடனேயே பரிபூரணமாய் ஒப்புக் கொடுத்துவிட்டார். மூன்றாம் நாள்தான் அங்கே பலி செலுத்தச் செல்கிறார்கள். அன்றுதான் ஈசாக்கை அவர் திரும்பப் பெற்றுக் கொள்கிறார். ஈசாக்கு உயிரோடு எழுப்பப்பட்ட நாள் அந்த மூன்றாம் நாள் என்று கூட சொல்லலாம். இப்படிப்பட்ட ஒரு காட்சியைத்தான் இங்கே நாம் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 22 : 5

இப்பொழுது தகப்பனுக்கும் மகனுக்கும் இடையிலே தான் பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டிருந்த அந்த வேளையிலேயும், அந்த இருளான மூன்று மணி மத்தியான வேலையிலேயும், இயேசுவுக்கும் பிதாவுக்கும் இடையிலேதான் பரிமாற்றங்கள் நடைபெற்றன. மனிதனுக்கு அங்கே இடமில்லை. ஒருவரும் வேலை செய்யாத இராக்காலம் வந்தது. அந்த இறுதியான மூன்று மணி நேரங்களிலே சிலுவையாகிய பலி பீடத்திலே இயேசு இருக்கும் பொழுது உலகத்தின் பாவத்தை அங்கே தேவ ஆட்டுக்குட்டி சுமந்து தீர்த்தார்.

அப்பொழுதும் பரிமாற்றங்கள் பிதாவிற்கும், குமாரனுக்கும் இடையிலே மட்டும்தான் நடைபெற்றன. அந்த மூன்றுமணி நேரம் எந்த மனிதனுடைய ஈடுபாடும் அங்கே இல்லை. அதே காட்சியைத்தான் இங்கே பார்க்கிறோம். இங்கே ஆபிரகாமும் ஈசாக்கும் மட்டும் தனித்துப் போகிறார்கள்.

ஆதியாகமம் 22 : 6

ஆபிரகாம் கட்டைகளை எடுத்து, தன் மகனாகிய ஈசாக்கின் மேலே வைத்தான். ஞாபகமிருக்கிறதா? இயேசு கிறிஸ்துவும் சிலுவையை தன்மேலே சுமந்து கொண்டுதான் சென்றார். நெருப்பு என்பது நியாயத்தீர்ப்பை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. கத்தி பலியிடுவதைக் குறித்தும் நியாயம் தீர்ப்பதைக் குறித்தும் நமக்கு ஞாபகப்படுத்துகிறது.

ஆதியாகமம் 22 : 7, 8

இந்த வசனங்களுக்கெல்லாம் பின்னாலே 13ஆம் வசனத்திலே புதரிலே தன் கொம்புள் சிக்கிக் கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான் என்று வாசிக்கிறோம். அதை தன் குமாரனுக்குப் பதிலாக தகன பலியாக இட்டான் என்றும் வாசிக்கிறோம். ஆனால் 8ஆம் வசனத்திலே பார்க்கும்பொழுது தேவன் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றுதான் சொல்கிறார். ஆனால் இறுதியாக பலியிடப்பட்டது ஆட்டுக்கடா.

இவை இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது. நன்றாக கவனியுங்கள் இங்கே தேவன் தமக்கு தகன பலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்று சொல்கிறார். ஆனால் அந்த இடத்திலே அன்று பலியிடப்பட்டது ஆட்டுக்கடா. அப்படியென்றால் ஆட்டுக்குட்டியை தேவன் எப்பொழுது கண்டுகொண்டார்? யோவான் முதலாம் அதிகாரத்திலே 29ஆம் வசனத்திலே நாம் வாசிக்கிறதுபோல,

"மறுநாளிலே யோவான் இயேசுவை தன்னிடத்திலே வரக்கண்டு, இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றான்;" என்று வாசிக்கிறோம். ஆம் தேவனே தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார். சொல்லப்போனால் இங்கே ஆபிரகாம் தீர்க்கத்தரிசனமாக இதை உரைக்கிறார் என்று சொல்லலாம். தேவனுடைய கட்டளைளை ஆபிரகாம் புரிந்து கொள்ளாவிட்டாலும் தனது ஒரே மகனை தேவனுக்காக பலியிடும்படியாக பலிபீடத்திலே கிடத்துகிறார்.

ஆதியாகமம் 22 : 9

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் ஆபிரகாம் தனது பெலத்தினாலே தனது மகனுடைய கரங்களைக் கட்டி பலிபீடத்திலே அவனைக் கிடத்தும்படியாக ஈசாக்கு சிறுவன் அல்ல. 30 வயது தாண்டிய ஒரு வாலிபன் தன்னுடைய சுய பெலத்தினாலே அந்த சூழ்நிலையிலிருந்து தன்னை அவன் விடுவித்திருக்கக்கூடும். ஆனால் ஈசாக்கு கீழ்ப்படிதலினாலே இதைச் செய்கிறான். ஆம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பிதாவே என்னுடைய விருப்பப்படி அல்ல; உம்முடைய விருப்பப்படியே ஆகக்கடவது என்று சிலுவையிலே மரிக்க தன்னை அர்ப்பணித்தார்.

தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாக இயேசு சிலுவைக்குச் சென்றார். எத்தனை நிழலாட்டமான பகுதியிது கவனித்தீர்களா?

ஆதியாகமம் 22 : 10

இப்படிப்பட்ட ஒரு வேளையிலே நம்முடைய உள்ளத்திலே ஆபிரகாமைக் குறித்து எப்படி நினைத்திருப்போம்? ஆபிரகாமே நீ இதை செய்யத்தான் போகிறாயா? நீ இதைச் செய்யும்படியாக தேவன் அனுமதிக்கிறார் என்று நீ நினைக்கிறாயா? என்று நாம் புலம்பியிருப்போம். அதற்கு ஆபிரகாம் ஆம் நிச்சயமாக இது தவறு என்று நான் போதிக்கப்பட்டிருக்கிறேன். ஆனால் எனக்குப் புரியவில்லை; ஆனால் அதே நேரத்திலே தேவனுக்குக் கீழ்ப்படிய நான் கற்றுக்கொண்டிருக்கிறேன் என்று கூறியிருப்பார்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, உண்மையாகவே ஆபிரகாமுடைய வாழ்க்கையிலே இது மிகவும் இக்கட்டான ஒரு நேரம். திட்டவட்டமான நான்கு இக்கட்டான

www.Radio882.com

சூழ்நிலை வழியாக தேவன் ஆபிரகாமைக் கொண்டுவந்து இருக்கிறார். ஒவ்வொன்றுமே அவனுடைய ஆவிக்குறிய வாழ்க்கைக்கு அது ஏற்ற பயிற்சியாகவே இருந்திருக்கிறது. அவனுடைய இருதயத்திலே அது ஒரு கடினமான ஒரு காரியமாகவும் இருந்திருக்கிறது.

முதலாவதாக தன்னுடைய உறவினர்களை விட்டு, கல்தேயருடைய ஊர் என்னும் இடத்தைவிட்டு தேவன் வரும்படியாக கட்டளை கொடுத்தார். அந்த முழு கூட்டத்தையும்விட்டு அவன் தனியே வர வேண்டும். அதுதான் ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த முதல் பரீட்சை. ஆரம்பத்திலே அவன் சிறப்பாக அதைச் செய்யவில்லை. என்றாலும் சில காலங்களுக்குப் பிறகு இறுதியாக குடும்பத்தை விட்டு முழுமையாய் தனியே வந்தான்.

இரண்டாவதாக லோத்துவை விட்டும் அவன் தனித்து பிரிய வேண்டிய நிலை. ஆபிரகாம் லோத்தை நேசித்தான். ஆனால் லோத்துவை விட்டு அவன் பிரித்து எடுக்கப்படவேண்டிய நேரம் வந்தது. லோத்து சோதோமை நோக்கிப் போனான்.

மூன்றாவது ஆபிரகாமுக்கு வந்த சோதனை ஆகார் மூலமாய் தனக்குப் பிறந்த இஸ்மவேலையும் அவன் அனுப்பிவிட வேண்டிய நிலை. அப்போதுதான் தேவனைப் பார்த்து; ஆண்டவரே, இஸ்மவேல் உமக்கு முன்பாக பிழைப்பானாக, என்று ஆபிரகாம் தேவனிடத்திலே விண்ணப்பம் பண்ணினான்.

இப்போது இறுதியாக இந்த நான்காவது மகத்தான பரீட்சை நேரத்திலே அவனுக்கு தேவன் கொடுத்த அந்த ஏகசுதனை ஈசாக்கையும் பலிபீடத்திலே வைக்கும்படியாக, அவனையே விட்டுக் கொடுத்துவிடும்படியாக, தேவன் அவனிடத்திலே கேட்டார். தேவன் தன்னிடத்திலே கேட்டார் என்ற ஒரே காரணத்தினாலே எந்த ஒரு காரியத்தை அவன் புரிந்து கொள்ளாவிட்டாலும், அதற்கு சம்மதித்தான்.

காரணம் என்ன தெரியுமா? எபிரேயர் 11 : 18 ன் பின்பகுதியிலே “மரித்தோரிலிருந்தும் எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென்று எண்ணி; தனக்கு ஒரே பேரானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்” என்று வாசிக்கிறோம்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, உங்களுடைய வாழ்க்கையிலே நீங்கள் விட்டுவிட வேண்டிய காரியங்களை விட்டுவிடும் பொழுதுதான், தேவன் பரிபூரணமாக உங்களை ஆசீர்வதிக்க முடியும். உங்கள் மூலமாய் மற்றவர்களை ஆசீர்வதிக்க முடியும். எத்தனையோ காரியங்களை நீங்கள் விட்டுவிடுவதற்கு எத்தனையோ காலங்கள் எடுத்திருக்கலாம். ஆனால் இந்த குறிப்பிட்ட காலங்களிலே எதையாவது பலிபீடத்திலே வைக்கும்படியாக பரிபூரணமாக நீங்கள் விட்டுக் கொடுக்கும்படியாக ஆண்டவர் உங்களோடு பேசிக்கொண்டிருப்பார் என்று சொன்னால், உங்களால் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், அவருக்குக் கீழ்ப்படியுங்கள். அது ஒருவேளை உங்கள் வாழ்க்கையிலே விரும்பி நேசிக்கிற ஒரு பாவமாக இருக்கலாம். அது ஒரு மனிதனாய் இருக்கலாம்; அல்லது ஒரு மனுஷியாக இருக்கலாம், அல்லது செல்வமாக இருக்கலாம் அல்லது பொருளாக இருக்கலாம். ஒருவேளை தேவனே உங்களுக்கு விசேஷித்துக் கொடுத்த ஒரு காரியமாய் இருக்கலாம், எதுவாயிருந்தாலும் அதையும் பலிபீடத்திலே வைக்க ஆண்டவர் உங்களைப் பார்த்துக் கேட்கும்பொழுது நீங்கள் ஆயத்தமாய் இருக்கிறீர்களா?

அருமையானவர்களே, தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த நான்காவது பரிட்சையை நாம் பார்த்தோம். தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்திருந்த அந்த ஒரே பேரான குமாரனைத் தமக்காக பலியிடும்படியாகக் கொடுத்த கட்டளைக்குக் கீழ்படிந்து, பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கிக் குமாரனை பலிபீடத்தின் மேல் கிடத்தினான். அதுமட்டுமல்ல தன் குமாரனை வெட்டும்படிக்கு தன் கையை நீட்டி கத்தியை எடுத்தான் என்று வாசித்தோம்.

ஆதியாகமம் 22 : 11, 12

யாக்கோபு தனது நிருபத்திலே எழுதும்பொழுது, "நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்" என்று யாக்கோபு 2:21 லே கூறியிருக்கிறார். ஆனால் அருமையானவர்களே, கொஞ்சம் பொறுங்கள். ஆபிரகாம் ஈசாக்கை பலியிட்டானா? அவனுடைய சரீரத்திற்குள்ளே கத்தியை பாய்ச்சினான் என்று சொல்லப்பட்டிருக்கிறதா? இல்லை.

இப்பொழுது ஆபிரகாம் தேவனுக்குப் பயப்படுகிறவன் என்பதை தேவன் அறிந்திருக்கிறார். எப்படி அது அவருக்கு தெரியும்? ஆபிரகாமுடைய செயல்களினால்; அவருடைய கிரியைகளினால் முன்னதாக விசுவாசத்தினாலே ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டார். இப்பொழுது அவர் நீதிமானென்று தனது செயலிலும் காண்பித்துவிட்டார். அருமையான சகோதரனே சகோதரியே தேவன் உங்கள் இருதயத்தைப் பார்க்கிறார். அவர் மேலே உங்களுக்கு இருக்கிற நம்பிக்கை, அன்பு பயபக்தி எல்லாமே உண்மையானதா? இல்லையா? என்பது அவருக்குத் தெரியும். ஆனால் உங்கள் பக்கத்துவீட்டுக்காரர்களுக்கோ உங்கள் நண்பர்களுக்கோ அது தெரியாது.

உங்களுடைய செயல்களைத்தான் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். எனவே தான் யாக்கோபு கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்று சொல்கிறார்.

விசுவாசமானது ஏதாவது ஒரு செயலை நிகழ்விக்க வேண்டும். தேவன் ஆபிரகாமைப் பரிசோதித்தார். தேவன் அழைக்கும் எந்த மனிதனையும், தேவன் இரட்சிக்கும் எந்த மனிதனையும் அவர் பரிசோதிக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். தேவன் ஆபிரகாமையும் பரிசோதித்தார். இன்றும் தன்னுடைய பிள்ளைகளாய் இருக்கிறவர்களை அவர் சோதிக்கிறார். உங்களையும் என்னையும் அவர் சோதிக்கிறார். இந்த சோதனைகளெல்லாம் எதற்கென்றால் நம்முடைய விசுவாசத்தைப் பெலப்படுத்துவதற்கு நம்மை உறுதிபடுத்துவதற்கு அவருடைய கரங்களிலே நாம் பயனுள்ள பாத்திரங்களாக மாறும்படியாகத் தான்.

இப்பொழுது ஒரு உன்னதமான பரிட்சை ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டது. இதற்குப்பின்னர் அவனிடத்திலே தேவன் எதையும் கேட்கமுடியாது.

ஆதியாகமம் 22 : 13

ஏதேன் தோட்டத்திலிருந்து கல்வாரி சிலுவைவரை மனிதனுடைய பாவங்களுக்குப் பரிகாரமாக இந்த ஆட்டுக்கடாதான் பலியாகக் கொடுக்கப்பட்டு வந்தது.

இது எனக்காகவும் உங்களுக்காகவும் மரித்த இயேசு கிறிஸ்துவை முன்னறிவித்து வருகிறது. ஆனால் தேவனுடைய ஒரே பேரான குமாரன் உலகத்திலே வந்த பொழுது, எனக்காகவும் உங்களுக்காகவும் அவர் சிலுவையிலே மரித்தார்.

ரோமர் 8ஆம் அதிகாரம் 32ஆம் வசனத்திலே என்ன வாசிக்கிறோம்?

"தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம் எல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?"

சிலுவை மரத்தின் மேலேதான் தேவ ஆட்டுக்குட்டி உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்த்தது. இதை நாம் சிந்திக்க வேண்டியது மிக முக்கியமானது.

ஆதியாகமம் 22 : 14

பின்னொரு காலத்திலே சாலமோன் தேவாலயத்தைக் கட்டினார் என்று அநேகர் விசுவாசிக்கிற அந்த இடத்திற்கு யேகோவாயீரே என்று ஆபிரகாம் பேரிட்டார். கொல்கதா என்றால் கபால ஸ்தலம் என்று அர்த்தம். அதே மலையின் தொடர்ச்சியிலேதான் சாலொமோன் தேவ ஆலயத்தை கட்டினான். அங்கேதான் ஆபிரகாமின் குமாரன் பலிபீடத்திலே வைக்கப்பட்டான். அங்கேதான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் சிலுவையிலே அடிக்கப்பட்டார்.

இது உன்னதமான, அற்புதமான ஒரு காட்சி ஆகும். இந்த இடத்திற்கு யேகோவாயீரே என்று ஆபிரகாம் பேரிடுகிறார். இதன் பொருள் என்னவென்றால் கர்த்தருடைய பர்வத்திலே பார்த்துக்கொள்ளப்படும். இந்த இடத்திலேதான் ஆபிரகாமுடைய இடத்திலே தேவன் இடைப்பட்டார். சரி தொடர்ந்து தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை உறுதி செய்வதைக் குறித்து நாம் பார்க்கிறோம். இரண்டாவது முறையாக கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து கூப்பிடுகிறார்.

ஆதியாகமம் 22 : 15, 16

இங்கே நமக்கொரு கேள்வியிருக்கிறது. உண்மையாகவே ஆபிரகாம் அதைச் செய்தாரா? ஆபிரகாம் தன்னுடைய குமாரனை பலியிடவில்லை. ஆனால் தேவன் என்ன சொல்கிறார்? உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்த படியால், என்று சொல்கிறார்.

அருமையானவர்களே, ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்; அதுமட்டுமல்ல நாம் பார்க்கிறது போல தேவன் அறிந்திருக்கிறது போல உலகமே அறிந்துகொள்ளக் கூடிய வகையிலே தனது ஒரே மகனைக் கொடுக்க அவன் செயல்பட்டபடியினாலே அவனுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினான். எனவே அந்த காரியத்தை செய்து முடித்ததாகவே தேவன் கணக்கிலெடுக்கிறார். ஆபிரகாம் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டான். அதுமட்டும் அல்ல மனிதர்களுடைய கண்களுக்கு முன்பாக அவனுடைய செயலினாலும் அவன் நீதிமானாக்கப்பட்டான். தன்னுடைய இருதயத்திலே விசுவாசம் உண்டு என்பதை செயலிலே வெளிப்படுத்தினான். உன் ஏகசுதன் என்றும் பாராமல்; இதைத்தான் புதிய ஏற்பாட்டிற்கு வரும்பொழுது தேவனுடைய ஒரே பேரான குமாரன் இயேசு கிறிஸ்துவைக் குறித்து நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே தேவனும் தமது ஒரே பேரான குமாரனை நமக்காக ஒப்புக்கொடுத்தார். இந்த நிகழ்ச்சி மூலமாக யார் இரட்சிக்கப்பட வேண்டுமென்றாலும் இந்த இடத்திலே ஒரு மனிதன் அனுப்பப்படவேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறார்.

இந்த அதிகாரத்திலே இந்த ஒரு பெரிய சத்தியம் நமக்குக் கற்றுக்கொடுக்கப்படுகிறது. தேவனே பலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்று ஆபிரகாம் தீர்க்கதரிசனமாக முன்னுரைத்தான். எனவேதான் அங்கே அவர்கள் ஆட்டுக்கடாவை கண்டெடுத்து பலியிட்டார்கள். ஈசாக்கைப் பலியிடுவது தவறு என்பதினாலே தேவன் ஆபிரகாமின் கரத்தைத் தடுத்து நிறுத்தினார். ஆனாலும் 1900 ஆண்டுகளுக்குப் பின்னர், ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவை தேவன் ஒப்புக்கொடுத்தார். தேவன் ஆபிரகாமுடைய குமாரனைப் பலியிடாதபடி தடுத்து நிறுத்தினார். ஆனால் தமது சொந்தக் குமாரனை எனக்காகவும், உங்களுக்காகவும் அவர் விட்டுக்கொடுத்தார்.

ஆதியாகமம் 22 : 17, 18

உன் சந்ததிக்குள் என்று சொல்லும்பொழுது எதைக் குறித்து இங்கே கர்த்தர் பேசிக்கொண்டிருக்கிறார்? கலாத்தியர் 3ஆம் அதிகாரம் 16ஆம் வசனத்தைப் பார்ப்பீர்களென்றால், இதை எவ்வாறு அப்போஸ்தலனாகிய பவுல் விளக்கிக் காண்பித்தார் என்பதை நாம் கவனிக்கலாம். கலாத்தியர் 3 : 16,

“ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே.”

எனவே ஆதியாகமத்தில் தேவன் சொன்ன அந்த சந்ததி கிறிஸ்துவின் சந்ததியே என்று வேதமே நமக்குத் தெளிவுபடுத்துகிறது. கலாத்தியர் 3ஆம் அதிகாரம் 8ஆம் வசனத்திலே நாம் வாசித்துப் பார்த்தால், “மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறார் என்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்கு சுவிசேமாய் முன்னறிவித்தது.” தேவன் ஆபிரகாமுக்கு எப்பொழுது சுவிசேத்தைப் பிரசிங்கித்தார்? எப்பொழுது ஆபிரகாமின் மகனான ஈசாக்கை பலியிடும்படியாக அழைப்புக் கொடுத்தாரோ, அப்பொழுதுதான் தேவன் இந்த சுவிசேத்தை அவனுக்கு பிரசங்கித்தார்.

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும், அந்த சந்ததி கிறிஸ்துதான். இதுதான் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட சுவிசேம். பொதுவாக அநேக வேளைகளிலே அநேகர் கவனிக்காமல் கடந்து செல்கிற ஒரு சத்தியத்தை நான் சற்றே கவனிக்க விரும்புகிறேன். பல வேளைகளிலே ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, இன்னும் இந்த பழைய ஏற்பாட்டு மனிதர்கள் எல்லோரும் சிறந்த மனிதர்கள்தான் இருந்தாலும், நம்மைப் போல அவர்கள் மிக சுறுசுறுப்பானவர்கள் அல்ல, என்று நாம் எண்ணுகிறோம். நாம் அறிந்திருக்கிற அளவு அவர்களுக்கு தெரியாது என்று எண்ணுகிறோம். ஆனால் எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறித்தும், சுவிசேத்தைக் குறித்தும் எனக்கும் உங்களுக்கும் தெரிந்திருக்கிறதைவிட அதிகமாக ஆபிரகாமுக்கு தெரிந்திருக்கிறது என்று சொல்லலாம்.

www.Radio882.com

இதைக் குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே ஒருமுறை கூறியிருக்கிறார். கவனியுங்கள் யோவான் 8ஆம் அதிகாரம் 56ஆம் வசனம்,

"உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக்காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார்."

எனவே பிரியமானவர்களே, நாம் புரிந்திருக்கிறதை விட அதிகமாகவே ஆபிரகாம் தெரிந்திருப்பான். தேவன் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் இரட்சகர் மட்டும் அப்பொழுது வரவில்லை. ஆனால் அன்று ஆபிரகாம் ஈசாக்கை பலியாக செலுத்த சென்றபொழுது அது இயேசு கிறிஸ்துவின் மரணத்தையும் மூன்றாவது நாள் உயிர்தெழுதலையும் நிழலாட்டமாய் காட்டியது.

எனவேதான் அப்போஸ்தலராகிய பவுல் தேவன் ஆபிரகாமுக்கு சுவிசேமாய் சொன்னார் என்று கூறுகிறார். அதுமட்டுமல்ல நாம் 18ஆம் வசனத்தின் இறுதியிலே, "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று என் பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார், என்றார்."

ஆம் அருமையானவர்களே, இன்றைய நாளைப் பொருத்த மட்டிலேயும் சுவிசேமானது இயேசு கிறிஸ்துவைக் குறித்த நற்செய்தியானது உலகத்தின் எத்தனையோ பகுதிகளிலே பரவிவிட்டது. ஆனால் இன்னும் அவரைக்குறித்து கேள்விப்படாதவர்கள் இருக்கிறார்கள். நம்மோடு வசிக்கும் மக்கள் மத்தியிலேயும் அப்படிப்பட்ட மக்கள் இருக்கிறார்கள் என்றாலும் சகல தேசத்தாருக்கும் அந்த ஆசீர்வாதம் வந்துவிட்டது.

இன்றைக்கு தேசங்கள் பெற்றிருக்கிற ஆசீர்வாதம் இயேசு கிறிஸ்துவின் வழியாய் வந்திருக்கிறது. 18ஆம் வசனத்தின் ஆரம்பத்திலே என்ன சொல்கிறார்? "நீ என் சொல்லுக்கு கீழ்படிந்தபடியினால்" என்கிறார். கீழ்ப்படிதலானது ஆபிரகாமின் விசுவாசத்தில் சார்ந்திருந்தது. விசுவாசம் எப்பொழுதுமே ஒரு செயலுக்கு நேராய் நம்மை வழிநடத்துகிறதாய் இருக்கிறது. ஏனென்றால் கிரியை இல்லாத விசுவாசம் செத்தது. இப்பொழுது நாம் ஆபிரகாம் மீண்டுமாக பெயெர்செபாவிற்கு திரும்பி போவதைப் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 22 : 19, 20

என்று சொல்லி மில்க்காள் பெற்ற பிள்ளைகளைக் குறித்துத் தொடர்ந்து அவன் கூறுகிறான். எனவே இங்கே நாம் வாசித்தது போல ஆபிரகாமின் இந்த நான்காவது பரிட்சைக்குப் பிறகு அவன் பெயெர்செபாவிலே போய் குடியிருக்கிறான். இந்த வசனங்களிலே ஆபிரகாமின் குடும்பத்தின் சில காரியங்களை நாம் பார்க்கிறோம்.

ஆரானிலேயே ஆபிரகாம் தன்னுடைய சகோதரனாகிய நாகோரை விட்டுப் பிரிந்துவிட்டான். நாகோரின் சந்ததியைக் குறித்து வேதத்திலே நாம் கற்றுக் கொள்ளப் போவதில்லை. ஆனால் பின்னால் ஒரு குறிப்பிட்ட காலத்திலே ஆபிரகாமுடைய வாழ்க்கையோடு அது சம்மந்தப்படப்போகிறது. அதைக்குறித்து பின்னாலே நாம் பார்ப்போம். 21

முதல் 24 வரை நாம் பார்ப்போமென்றால், அங்கே நாகோருடைய பிள்ளைகளைக் குறித்து நாம் வாசிக்கிறோம்.

இப்பொழுது நாம் ஆதியாகமம் 23ஆம் அதிகாரத்திற்குள்ளே கடந்து செல்லப்போகிறோம். இங்கே சாராளுடைய மரணத்தைக் குறித்தும் அடக்கத்தைக் குறித்தும் வாசிக்கிறோம். இங்கே நாம் பார்க்கும்பொழுது சாராள் மரணமடைகிறாள். அவளை அடக்கம் செய்ய ஆபிரகாம் ஒரு குகையை வாங்குகிறார்.

ஆதியாகமம் 23

ஆதியாகமம் 23 : 1, 2

கவனித்தீர்களா? இப்பொழுது சாராளின் வயது 127. ஈசாக்கு பிறந்தபொழுது அவளுக்கு 90 வயது. அப்படியென்றுச் சொன்னால் சாராள் மரணமடையும் பொழுது ஈசாக்கு 37 வயதுடையவனாய் காணப்படுகிறான். கீரியாத்அர்பாவிலே சாராள் மரித்தாள். இது எபிரோனிலேதான் இருக்கிறது. தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த இடத்திலேயும் சாராளை அடக்கம் செய்ய ஒரு குகையை அவன் விலைக்கு வாங்க வேண்டியதிருந்தது. வேறு எங்காவது கொண்டுபோய் சாராளைப் புதைத்தால் என்ன? ஏன் இந்த இடத்திலே சாராளைப் புதைக்க வேண்டும். அந்த தேசத்தைக் குறித்து எதிர்காலத்திலே தனக்கிருந்த நம்பிக்கையினாலேதான் அவ்வாறு செய்தார் என்று சொல்லலாம். தொடர்ந்து வரும் வசனங்களிலே சில வாக்குவாதங்களைக் குறித்துப் பார்க்கிறோம்.

என்றாலும் இந்தப் பகுதியிலேயும், நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சத்தியங்கள் உண்டு. மூன்றாம் நான்காம் வசனங்களைப் பாருங்கள்,

ஆதியாகமம் 23 : 3, 4

அருமையானவர்களே, தேவன் வாக்குப்பண்ணின அவனுக்குச் சொந்தமான அந்த இடத்திலேயும், தன்னை ஒரு அந்நியனும், பரதேசியும் என்று அழைக்கிறான்.

ஆதியாகமம் 23 : 5, 6

ஏத்தின் புத்திரர் இங்கே ஆபிரகாமுக்கு மனமுவந்து கல்லறையைக் கொடுக்க முன்வருகிறார்கள். எந்த இடத்தை வேண்டுமென்றாலும் நீர் எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல அதை நாங்கள் உமக்குச் சந்தோமாகத் தருகிறோம் என்றும் சொல்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது? ஆபிரகாமினுடைய வாழ்க்கையானது ஏத்தின் புத்திரருடைய இருதயத்தைத் தொட்டிருக்கிறது.

ஆபிரகாமைக் குறித்து அவர்கள் சொல்லும்பொழுது நீர் மகா பிரபு என்று அழைக்கிறார்கள்.

ஆதியாகமம் 23 : 7, 8, 9

ஆபிரகாம் தெரிந்து கொண்டதுதான் மக்பேலா என்ற குகை; ஆனால் ஆபிரகாம் அந்த குகையை விலைகொடுத்து வாங்க விரும்பினான். எதையுமே இலவசமாகப் பெற்றுக்கொள்ள அவன் விரும்பவில்லை. வேறு வார்த்தைகளிலே சொல்ல வேண்டுமென்றால், தேவனே அந்த

www.Radio882.com

நிலத்தை அவனுக்குக் கொடுக்கும் வரை எது அவனுக்கு வேண்டுமோ அதை விலை கொடுத்து வாங்குவான். எனவே அவன் சாராளை அடக்கம் செய்ய ஒரு இடத்தை விலை கொடுத்து வாங்கினான்.

அருமையானவர்களே, மீண்டும் ஒரு கேள்வியை நான் எழுப்ப விரும்புகிறேன். அதாவது சாராளை ஏன் வேறு எங்கேயும் ஆபிரகாம் எடுத்துக் கொண்டு செல்லவில்லை? இது வாக்குத்தத்த பூமி; எனவே எதிர்காலத்தின் நிச்சயத்தை உணர்ந்தவனாய், அங்கே அடக்கம் செய்கிறான்.

வேத வசனங்களை நீங்கள் வாசித்துப் பார்க்கும்பொழுது தேவன் 2 நம்பிக்கைகளையும் 2 முக்கியமான நோக்கங்களையும் உடையவராய் இருக்கிறார் என்பது நமக்குத் தெரியவரும். அதாவது உலகப்பிரகாரமான ஒரு நோக்கம்; அடுத்தது பரலோகம் தொடர்பான ஒரு நோக்கம். இந்த பூமி தொடர்பாகவும் தேவன் ஒரு நோக்கம் வைத்திருக்கிறார். அது என்ன தெரியுமா? நீங்களும் நானும் வாழுகிற இந்த உலகம் நித்தியத்திற்குள்ளே கடந்து செல்கிறது. அதாவது ஒரு புதிய வானமும் ஒரு புதிய பூமியும் உண்டாக்கப்படப் போகிறது. ஆனால் ஒரு உலகம் உண்டு. அதிலே நித்திய நித்தியமாய் மனுகுலம் சஞ்சரிக்கப் போகிறது. இதுதான் தேவன் ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் கொடுத்த வாக்குத்தத்தம்.

இன்றைக்கு அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிற காரியங்கள் முடிந்தவுடனே இந்த பூமியை ஏதோ குப்பைக் கூடையிலே அவர் போட்டுவிடப் போகிறதில்லை. தேவன் இந்த பூமியைப் புதுப்பிக்கப் போகிறார். அந்தப் புதிய பூமியானது நித்தியத்திற்குள்ளே செல்லும்; அதிலே மக்கள் குடியிருப்பார்கள்; இது தான் ஆபிரகாமுடைய நம்பிக்கை.

இதே இடத்திலே தானே ஆபிரகாமும் அடக்கம் பண்ணப்பட விரும்பினான். ஏனென்றால் அப்பொழுதுதான் உயிர்த்தெழுதல் வரும்போது இருவரும் ஒரே இடத்திலே உயிர்த்தெழுவார்கள். அவனுக்குப் பின்னாலே எத்தனைபேர் வருவார்கள் என்பதையெல்லாம் கணக்கெடுக்கவில்லை. ஆனால் கோடானகோடிபேர் உயிர்த்தெழுவார்கள்.

இதுதான் அவனுடைய நம்பிக்கை. இது பூமிக்கடுத்த நம்பிக்கை. இது உண்மையாகும். புதிய ஏற்பாட்டிலே நாம் பார்க்கும் பொழுது மேல் வீட்டறையிலே உடைந்து போன உள்ளத்தோடு இருந்த சீர்களைப் பார்த்து இயேசு சொன்னதை யோவான் 14 : 1 முதல் 3 வரை பார்க்கலாம்.

“உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.”

www.Radio882.com

இங்கே இயேசு கிறிஸ்து புதிய எருசலேமைக் குறித்துப் பேசுகிறார். இந்த நாட்களிலேயும் அது ஆயத்தமாயிக்கொண்டிருக்கிறது. அந்த இடத்திற்கு தான் திருச்சபையானதும் செல்ல இருக்கிறது. புதிய எருசலேம்தான் நாம் நித்திய நித்தியமாய் தங்கப்போகிற ஸ்தலம். இந்தப் போதனையானது சீர்களுக்கு ஒரு புதிய போதனையாயிருக்கிறது.

இன்று வாழ்கிற அநேக கிறிஸ்தவர்களுக்கும் கூட இரு ஒரு புதிய போதனையாகவே இருக்கிறது. தேவன் ஆபிரகாமைப் பார்த்து இந்த உலகத்தைவிட்டுப் பரலோகத்திற்கு உன்னைக் கொண்டுசெல்வேன் என்று சொல்லவில்லை; அதற்கு பதிலாக "இந்த தேசத்தை உனக்குக் கொடுக்கப்போகிறேன்;" என்று மீண்டும் மீண்டும் கூறினார். ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். இந்த காரணத்தினாலேயே ஆபிரகாம் சாராளை இங்கே அடக்கம் செய்தான்.

இதுவே மரித்த அவனுடைய மக்களை அடக்கம் செய்யும் இடமாயிற்று. அவனும் அந்த இடத்திலேயே அடக்கம் செய்யப்பட விரும்பினான். அதே போலவே அங்கேயே அடக்கம் செய்யப்பட்டான். ஆபிரகாம் அடக்கம் செய்யப்பட்டது, எருசலேமுக்கு கிழக்கே சுமார் 20 மைல் தொலைவிலே எபிரோனிலே ஒரு இடமாகும்.

பழைய ஏற்பாட்டு விசுவாசிகளின் நம்பிக்கை வேறு; எனவேதான் இந்த அடக்கம் இத்தனை முக்கியமானதாக கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்போதுதான் ஆபிரகாம் இந்த குகையை வாங்குவதற்கான செயல்பாட்டிலே ஈடுபடுகிறான். ஆதியாகமம் 23 : 10 - 12

ஆபிரகாமையும் தாராள மனதுள்ள அந்த மக்களையும் குறிப்பாக இந்த எப்பெரோனையும் கவனியுங்கள். அந்நாட்களிலே அவ்வளவு பரந்த மனமுள்ளவர்களாய் அவர்கள் இருந்திருக்கிறார்கள். பல வேளைகளிலே அந்நாட்களிலே மக்கள் குகைகளிலே வாழ்ந்தார்கள். ஒருவரையொருவர் கம்புகளினாலே அடித்துக்கொல்ல விரும்பினார்கள் என்று நாம் நினைக்கிறோம்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு இன்னும் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களைக் குறித்து நாம் பார்க்கிறோம். இந்த அதிகாரத்திலே பார்க்கிற இந்த மக்களும் சிறந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். ஆனால் எனக்கருமையான சகோதரனே, சகோதரியே, இக்காலத்தில்தான் மக்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

எந்த ஒரு நாகரிகமும் அற்றவர்களாய் மக்கள் வாழுகிறார்கள். அதைத்தான் செய்தித்தாள்களிலே நாம் வாசிக்கிறோம்; தொலைக்காட்சிகளிலே நாம் பார்க்கிறோம். கொடூரமானவர்களையும், இரக்கமற்ற மனிதர்களாகவும் அப்படிப்பட்ட காரியங்களையே பார்க்க விரும்புகிறவர்களாயும் இருக்கிறார்கள். இன்றைய நம்முடைய வாழ்க்கையைப் பார்த்து அன்றைய பழைய ஏற்பாட்டு மனிதர்கள் பேச வேண்டுமென்றால், நம்மைக் குறித்து மோசமாகத்தான் பேசுவார்கள். ஆனால் அவர்கள் எவ்வளவு பரந்த மனம் உள்ளவர்களாய் சிறந்தவர்களாய் இருந்தார்கள் என்பது ஆச்சரியமானதாய் இருக்கிறது.

ஆபிரகாம் அத்தேசத்தாருக்கு வந்தனம் செய்தான் என்று வாசிக்கிறோம். 13ஆம் வசனத்திலே அந்த நிலத்தின் விலையைத் தருவேன் என்று சொல்கிறான். 15ஆம் வசனத்திலே

அந்த நிலம் 400 சேக்கல் நிறை வெள்ளிப்பெறும் என்று எப்பெரோன் கூறுகிறான். 16ஆம் வசனத்திலே 400 சேக்கல் நிறை வெள்ளியை நிறுத்துக் கொடுக்கிறான் ஆபிரகாம். இவ்வாறாக எல்லோருக்கும் முன்னர் மம்ரேக்கு எதிரே மக்பேலாவிலுள்ள அந்த நிலமும் பூமியும் குகையும் மரங்கள் எல்லாமே ஆபிரகாமுக்குச் சொந்தமாக உறுதிப்படுத்தப்பட்டது. எனவே அந்த இடத்திலே சாராளை ஆபிரகாம் அடக்கம் செய்தான்.

20ஆம் வசனத்திலே பார்க்கிறதுபோல இந்த நிலமும், குகையும் ஆபிரகாமுக்கு சொந்த கல்லறை பூமியாக உறுதிப்படுத்தப்பட்டது. இந்த இடத்திலேதான் எபிரோனிலே ஒரு மசூதி கட்டப்பட்டிருக்கிறது. உலகத்திலேயே ஒரு முக்கியமான மசூதி அது என்று சொல்லப்படுகிறது. காரணம் என்னவென்றால் அரேபியர்கள் அத்தனை பேரும் ஆபிரகாமை தங்களுடைய தகப்பனாகப் பார்க்கிறார்கள்.

பரிபூரணமாய் தேவனை விசுவாசித்துத் தன் சொந்த குமாரனையே பலியிட அர்ப்பணித்த ஆபிரகாமைப்பற்றி நாம் சிந்தித்தோம். அப்படி பரிபூரணமாய் அர்ப்பணிக்கும்பொழுது தேவன் அதை பொறுப்பெடுத்து ஒரு ஆட்டுக்கடாவைப் பலியிடும்படியாகக் கொடுத்தார் . அதுமட்டுமல்ல, ஈசாக்கின் இந்த பலிபீட நிகழ்ச்சியானது கிறிஸ்துவின் மரணத்திற்கும் உயிர்தெழுதலுக்கும் நிழலாய் இருக்கிறது என்பதை சிந்தித்துப் பார்த்தோம்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வாழ்கிற நாம் அவர் நமக்காகப் பாடுபட்டார், நமக்காக மரித்தார் என்பதை விசுவாசிக்க வேண்டும், ஆபிரகாம் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டது போல, இன்று வாழுகிற நானும் நீங்களும், விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட முடியும். ஆபிரகாமுக்கு நித்திய காலமாகக் கானான் தேசம் வாக்குப்பண்ணப்பட்டு இருக்கிறது. அதைப்போல இன்றைக்கு திருச்சபையிலே வாழ்கிற விசுவாசியாகிய எனக்கும், உங்களுக்கும் புதிய எருசலேம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. அங்கே நாம் அவருடன் வாழப்போகிறோம்.

அதற்கு நாம் எப்பொழுதும் ஆயத்தமாய் காணப்படும்படி நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்வோமா?

அதிகாரம் 24

இது முதல் ஆதியாகமத்தின் இரண்டு முக்கியமான பிரிவிலே 2வது பிரிவின் முக்கிய ஒரு பிரிவிற்குள்ளே கடந்து வருகிறோம். ஆதியாகமத்தின் முதல் பிரிவாகிய முதல் 11 அதிகாரங்களிலே நான்கு முக்கியமான நிகழ்ச்சிகளைப் பார்த்தோம், இல்லையா?

12ஆம் அதிகாரம் முதல் 50ஆம் அதிகாரம் வரை 2வது பெரிய பிரிவாகப் பிரிக்கப்படுகிறது. இதிலே 4 முக்கியமான மனிதர்களைக் குறித்து நாம் வாசிக்கிறோம். குறிப்பாக ஆதியாகமம் 12 முதல் 23 வரை ஆபிரகாமைக் குறித்து வாசிக்கிறோம். அவன் ஒரு விசுவாசி. இப்பொழுது 24ஆம் அதிகாரம் முதல் 26ஆம் அதிகாரம் வரை ஈசாக்கைக் குறித்து வாசிக்கிறோம். ஈசாக்கு ஆபிரகாமின் ஒரே பேரான நேச குமாரன்.

ஈசாக்குடைய வாழ்க்கையிலேயும் 3 முக்கியமான சம்பவங்களைப் பார்க்கிறோம். 2 காரியங்களைக்குறித்து ஏற்கனவே பார்த்துவிட்டோம். ஒன்று ஈசாக்கினுடைய பிறப்பு.

www.Radio882.com

இரண்டாவதாக ஆபிரகாம் ஈசாக்கை பலி பீடத்திலே கிடத்திய சம்பவம். மூன்றாவது ஈசாக்கைக் குறித்த முக்கியமான சம்பவம் அவனுக்கு ஒரு மனைவியைக் கண்டுபிடிப்பதைக் குறித்தது.

பொதுவாகவே ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலேயும் மூன்று முக்கியமான சம்பவங்கள் உண்டு என்று சொல்வார்கள். முதலாவது அவனுடைய பிறப்பு. இரண்டாவது அவனுடைய திருமணம். மூன்றாவது அவனுடைய மரணம். அந்த இரண்டாவது நிகழ்ச்சியைத் தவிர மற்ற இரண்டு நிகழ்ச்சிகளும் தவிர்க்கமுடியாதது. ஆனால் ஒருவேளை ஒரு மனிதன் திருமண வாழ்க்கையை தவிர்க்கலாம்.

சரி இப்பொழுது நாம் ஈசாக்குக்கு எப்படி ஒரு மணமகள் தெரிந்தெடுக்கப்பட்டாள் என்பதைக் குறித்து சிந்திக்கப் போகிறோம். நம்பிக்கைக்குப் பாத்திரமான தனது வேலைக்காரனை ஆபிரகாம் மெசொப்பொத்தாமியாவிலுள்ள ஆரான் என்னும் இடத்திற்கு அனுப்பி வைக்கிறான்.

எதற்காக? ஈசாக்கிற்கு ஒரு பெண்ணைக் கொண்டுவரும்படியாக. ரெபெக்காளைக் கண்டுபிடித்தினாலே அந்த வேலைக்காரன் கொடுக்கப்பட்ட பணியிலே வெற்றியோடு திரும்ப வருகிறான். இது ஒரு அருமையான அன்பின் சரித்திரம். சகோதரனே, நீங்கள் திருமணம் செய்து கொள்ளப் போகும், பெண்ணைக் குறித்து தேவன் அக்கரை உள்ளவராய் இருக்கிறார்.

சகோதரியே நீங்களும் உங்கள் வாழ்க்கையிலே கரம்பிடிக்கப் போகிற உங்களுடைய கணவனைக் குறித்து தேவன் அக்கறை உள்ளவராய் இருக்கிறார். மனிதனுக்கு தேவன் இரண்டு முக்கியமான பொறுப்புகளைக் கொடுத்திருக்கிறார். ஒன்று திருமணம், இரண்டாவது மனித அரசாங்கம். தன்னைத்தானே ஆட்சி செய்யும் பொறுப்பை தேவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கிறார்.

இவை உலகளவிலான இரண்டு முக்கியமான ஸ்தாபனங்கள். இந்தக் காரியங்கள் உடையும்போது சமுதாயம் உடைந்து நொருங்குகிறது. சமுதாயத்தின் முதுகெலும்பு குடும்பம் தான். இதை தேவன் அறிந்திருக்கிறார். எனவேதான் சமுதாயத்திற்கு பெலனும் உறுதியும் அளிக்கிற குடும்பத்தை தேவனே ஏற்படுத்தி வைத்தார். இது அரசாங்கத்திற்கும் பொருந்தும். அதாவது, மனிதனுடைய வாழ்க்கையைக் காப்பதற்காக மனிதனுடைய வாழ்க்கையை எடுக்கும் அதிகாரத்தைத் தேவனே அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறார். மனித வாழ்வு புனிதமானது.

ஏனென்றால் அவன் தேவனுடைய சிருஷ்டிப்பு. இதற்காகவே அப்படிப்பட்ட கட்டளைகளைத் தேவன் கொடுத்திருக்கிறார். அருமையானவர்களே, நீங்கள் திருமணம் செய்யாத ஒரு சகோதரனாய், ஒரு சகோதரியாய் இருப்பீர்களென்றால், உங்களுடைய திருமணத்தைக் குறித்து தேவன் அக்கரையுள்ளவராய் இருக்கிறார் என்பதை இந்த வேளையிலே நினைவூட்ட விரும்புகிறேன். மட்டுமல்ல உங்கள் குடும்ப உறவிலே தேவனையும் நீங்கள் இணைத்துச் செயல்படும்பொழுது அது மிகுந்த அற்புதமானதாய் இருக்கும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே இருந்தபொழுது தமது முதலாவது அற்புதத்தைக் கானாவூரிலே ஒரு திருமண வீட்டிலே தான் நிகழ்த்தினார். இயேசு கிறிஸ்து இந்த

உலகத்திலே இருந்தபொழுது, எத்தனை திருமண வீடுகளுக்குச் சென்றாரோ? நமக்கு தெரியாது. ஆனால் திட்டமாய் கானாவூரிலே இந்த திருமணத்திலே அவர் கலந்து கொண்டதை நாம் தெளிவாக வாசிக்கிறோம்.

கர்த்தருடைய வார்த்தைகளிலேயே மிகச் செழிப்பான ஒரு பகுதி இந்த ஆதியாகமம் 24ம் அதிகாரம். இது ஒரு அன்பின் சரித்திரத்தை விவரிக்கிறது. ஈசாக்குக்கு எப்படி பெண் தெரிந்தெடுக்கபட்டாள், என்பதைக் குறித்த விவரமான தெளிவான குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல ஒரு ஆவிக்குரிய காட்சியையும் இந்த பகுதியிலே நாம் கற்றுக் கொள்ளலாம்.

இந்த அதிகாரத்தை நாம் படிக்கும்பொழுது இரண்டு காரியங்களை நாம் ஆழமாய் நம்முடைய உள்ளத்திலே கற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நம்முடைய வாழ்க்கையிலே உள்ள ஒவ்வொரு சின்ன சின்ன காரியங்களிலேயும் தேவன் நம்மை வழிநடத்த விரும்புகிறார் என்பது ஒன்று. ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்பொழுதும் அவருடைய வழிநடத்துதலை நாம் பெற்றுக்கொள்வது சிறப்பானது. நம்மிலே சிலர், இது ஆதிகாலத்திலே நடைபெற்றது, இன்று அப்படி இருக்க முடியுமா என்று கேட்கலாம். ஆனால் இந்த சம்பவத்திலே வாசிக்கிற சரித்திரமானது உண்மையை தெளிவாக நமக்குக் காட்டுகிறது. ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்பொழுதும் ஆபிரகாமின் வேலைக்காரன் தேவனுடைய வழிநடத்துதலை அற்புதமாய் அனுபவிக்கிறான். ஒரு வேலைக்காரனுடைய வாழ்க்கையிலே தேவன் இவ்வண்ணமாய் கரம்பிடித்து நடத்தமுடியும் என்றால், இன்றைக்கு உங்களுடைய வாழ்க்கையிலேயும் அதே காரியங்களை அவரால் செய்ய முடியும்.

இந்த அதிகாரத்திலே நாம் கவனிக்க வேண்டிய 2வது சத்தியம் என்னவென்றால், நேரடியான முறையிலே ரெபெக்காள் அந்த மனிதனோடு சென்று ஈசாக்கின் மனைவியாக தன்னை அர்ப்பணித்த அந்த சம்பவம்.

ஆதியாகமம் 24

ஆதியாகமம் 24 : 1

இப்பொழுது ஆபிரகாமுக்கு மிக வயதாகிவிட்டது; ஆபிரகாமைக் கர்த்தர் எல்லாக் காரியங்களிலேயும் ஆசீர்வதித்து வந்திருக்கிறார். இப்பொழுது தனது மகனாகிய ஈசாக்குக்கு ஒரு பெண் கொள்ள வேண்டுமென்று ஆபிரகாம் விரும்புகிறான். ஆனால் விக்கிரக வணக்கம் செய்கின்ற தேவனை அறியாத கானானியர்கள் மத்தியிலே ஈசாக்குக்குப் பெண் கொள்ள விரும்பாமல், தனது சொந்த மக்கள் இருக்கும் இடத்திற்கு ஆபிரகாம் தனது வேலைக்காரனை அனுப்புகிறான்.

ஆதியாகமம் 24 : 2

இங்கே நாம் பார்ப்பது போல ஆபிரகாம் தன் வீட்டிலுள்ள வயதிலே மூத்த ஊழியக்காரனோடு பேசுகிறான். இந்த ஊழியக்காரன் எலியேசர் என்று நான் நினைக்கிறேன். இவன்தான் ஆபிரகாமின் வீட்டிலுள்ள எல்லாவற்றிக்கும் அதிகாரியாய் இருந்த ஒரு ஊழியக்காரன். இந்த ஊழியக்காரனைக் குறித்து ஏற்கனவே ஆபிரகாம் தேவனிடத்தில் ஒருமுறை பேசினார். ஞாபகம்

இருக்கிறதா? இல்லையென்றால் ஆதியாகமம் 15ஆம் அதிகாரம் 2ஆம், 3ஆம் வசனங்களை வாசித்து பாருங்கள்.

“அதற்கு ஆபிரகாம்: கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேன்; தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே என்றான். பின்னும் ஆபிரகாம்: தேவரீர் எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை; இதோ என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாய் இருக்கிறான் என்றான்.”

ஆம் அந்த வேலைக்காரன்தான், இந்த எலியேசர்.

ஆதியாகமம் 24 : 3

எனக்கு அருமையான பெரியவர்களே, உங்கள் குடும்பத்தில் திருமண வயதிலே உங்களுக்கு ஒரு மகனோ மகளோ இருப்பார்களென்றால், அவர்கள் கானானியர் மத்தியிலே பெண் எடுக்கக்கூடாது என்பதைக் குறித்து, கருத்தாய் ஜெபிக்க வேண்டும். ஏனென்றால் இந்த கானானியர்கள் எப்பொழுதும் நம்மைச்சுற்றி இருக்கிறவர்கள். அப்பபடிப்பட்டவர்களோடு நம்முடைய பிள்ளைகள் திருமணம் செய்து கொள்வதற்கான வாய்ப்பு அதிகமானதாய் இருக்கிறது. அவர்கள் அப்படி செய்வார்களென்றால், பிசாசானவனைத் தங்களுடைய மாமனாராகப் பெற்றுக் கொள்கிறார்கள். அவன் மூலமாய் தொடர்ந்து அவர்களுக்கு பிரச்சனை வரப்போகிறது.

ஆதியாகமம் 24 : 4 – 6

இவ்வாறுதான் முந்நாட்களிலே ஒருவருக்கொருவர் வாக்குக் கொடுத்துக்கொண்டார்கள். அவர்கள் வலது கையை உயர்த்திக்கொண்டு இடது கையை வேத புத்தகத்தின் மேலே வைத்து வாக்குக்கொடுக்கவில்லை. சொல்லப்போனால் அந்நாட்களிலே வேத புத்தகமே அவர்களுக்கு இல்லை. வேத புத்தகத்தின் மேலே கையை வைத்து நான் உண்மையைத் தான் சொல்கிறேன் என்று சத்தியம் பண்ணுவது சரியானதல்ல. அவன் பொய் சொல்ல வேண்டுமென்று நினைப்பானென்றால் இவ்வாறு கையை வைத்து வாக்குக்கொடுத்தப் பின்னும் அவன் பொய்தான் சொல்வான்.

அந்நாட்களிலே வாக்குக் கொடுக்கும்போது, யாருக்கு வாக்குக் கொடுக்கிறார்களோ, அவர்களின் தொடையின் கீழே கையை வைத்து வாக்குக் கொடுத்தார்கள். 5ஆம் வசனத்திலே நாம் பார்க்கிறது போல அவ்விடத்துப் பெண் என் பின்னே இந்த தேசத்துக்கு வர மனதில்லாதிருந்தால், நீ விட்டுவந்த தேசத்திற்கு தானே உம்முடைய குமாரனை மறுபடியும் அழைத்துப் போக வேண்டுமா? என்று கேட்டான். அதற்கு ஆபிரகாமின் பதில் என்ன?

நீ என் குமாரனை மறுபடியும் அங்கே அழைத்து கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று கூறுகிறார். அதாவது அங்கே அழைத்துக்கொண்டே போகக் கூடாது என்று சொல்கிறார்.

இதுதான் தேவன் என்னிடத்திலேயும் உங்களிடத்திலேயும் எதிர்பார்க்கிற காரியம். விட்டுவந்த காரியத்திற்கு திரும்ப செல்லக்கூடாது.

www.Radio882.com

ஆதியாகமம் 24 : 7

கவனித்தீர்களா? ஆபிரகாம் உண்மையாகவே ஒரு விசுவாச மனிதன். அதைத் திரும்பத்திரும்ப தனது வாழ்க்கையிலே செயல்படுத்திக் காட்டிக்கொண்டே இருக்கிறான். இங்கே மிகப் பெரிய ஒரு விசுவாச செயலை நாம் பார்க்கிறோம். வேலைக்காரனிடத்திலே என்ன சொல்கிறான்? தேவனாகிய கர்த்தர் எனக்கு ஆணையிட்டிருக்கிறார். அவரே தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார் என்று மிக உறுதியோடு சொல்கிறான்.

இருட்டிலே குதிக்கிறவராக ஆபிரகாம் இல்லை. அவருடைய விசுவாசம் கர்த்தர் கூறிய வார்த்தைகளிலே இருந்தது. அநேகர், "நான் தேவனை விசுவாசிக்கிறேன். அது எனக்கு நடக்கும்" என்று சொல்வார்கள். அது சரியானது. ஆனாலும் அவரை விசுவாசிப்பதோடு மட்டுமல்லாமல் அவருடைய வாக்குத்தத்தம் உங்கள் மனதிலே இருக்குமென்றால், அது மிகச் சிறந்தது.

ஆபிரகாம் ஒவ்வொரு முறையும் தேவன் தனக்கு வாக்குப்பண்ணும்படியாய் கேட்டார். எனவே தேவன் ஆபிரகாமோடு கூட ஒரு உடன்படிக்கை செய்திருந்தார். எனவேதான் ஆபிரகாம் விசுவாத்தோடு, "என் சந்ததி மூலமாக இந்த உலகத்தை தேவன் ஆசீர்வதிப்பேன் என்று வாக்குக்கொடுத்திருக்கிறார். நிச்சயமாகவே அவர் என் மகனாகிய ஈசாக்குக்கு ஒரு பெண்ணை வைத்திருக்கிறார். அதைக் குறித்து நீ திட்டமான எண்ணம் உள்ளவனாய் போகலாம்" என்று கூறுகிறான்.

நாமும் அறிவற்றவர்களாய் இருக்கவேண்டும் என்று அவசியமில்லை. விசுவாசம் என்பது முட்டாள்தனமானதல்ல. அது மற்றொன்றின் மேலே சார்ந்திருப்பது. எப்பொழுதுமே விசுவாசத்திற்கான ஒரு காரணம் இருக்கும். எனவேதான் இருட்டிலே குதிப்பதல்ல, என்று சொன்னேன். விசுவாசம் என்பது இது நடைபெறும், இது நடைபெறாது என்று பந்தயம் கெட்டுவது அல்ல. அது ஒரு சூதாட்டமல்ல. விசுவாசம் என்பது நிச்சயமான உறுதியான ஒரு காரியம். ஆபிரகாம் அப்படிப்பட்ட உறுதியோடு இருந்தான்

ஆதியாகமம் 24 : 8

ஆம். தனது மகனை அங்கே திரும்ப அழைத்து செல்லக்கூடாது என்பதைக் குறித்து ஆபிரகாம் உறுதியோடு இருந்தான். எனவேதான் பெண் இங்கே வர மறுத்துவிட்டால், நீ எனக்கு ஆணையிட்டுக் கொடுத்ததிலிருந்து விடுதலைபெற்றவனாய் இருக்கிறாய் என்று சொல்கிறான். இப்படி ஆபிரகாம் கூறுவதினாலே இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? தேவன் வேறு ஏதோ ஒரு வழி வைத்திருக்கிறார். அது என்ன என்று எனக்குத் தெரியாது.

ஆனால் தேவனை அறியாத எந்த ஒரு பெண்ணையும் என் மகன் திருமணம் செய்வது தேவனுக்கு விருப்பமில்லாதது, என்பதை மட்டும்தான் உறுதியாய் அறிந்திருக்கிறேன் என்று கூறுவது போல இருக்கிறது.

ஆம். அருமையானவர்களே, விசுவாசம் என்பது தேவனுடைய வார்த்தையின்படி செயல்படுவது. விசுவாசம் என்பது ஏதோ ஒன்றின் மேலே சார்ந்திருப்பது. தேவனுடைய

www.Radio882.com

வார்த்தையை நாம் விசுவாசிக்கும்படியாக அவர் விரும்புகிறார். நீங்கள் விசுவாசிப்பதாலே தேவன் அதைச் செய்ய வேண்டும் என்பது அல்ல. அப்படி தேவனைக் கட்டாயப் படுத்தலாம் என்று நினைப்பது அறிவீனம்.

உதாரணம் ஒன்றைச் சொல்கிறேன் கவனியுங்கள். தனது சரீரத்தில் கேன்சர் வியாதியோடு ஊழியர் ஒருவர் இருந்தார். வேறு யார் விரும்பியதை விடவும் அது அதிகமாய் குணமாகிவிட வேண்டும் என்று அவர் விரும்பினார். விசுவாசத்தினாலே பெற்றுக் கொள்ளக்கூடிய சுகத்தின் மேலே அவருக்கு நம்பிக்கை இருந்தது. "ஆண்டவரிடம் கட்டாயம் சுகம் வேண்டுமென்று கேட்டால், ஆண்டவர் கட்டாயம் தருவார்" என்று பலர் அவரிடத்திலே சொன்னார்கள். ஆனால் அவருடைய சித்தம் எது என்று அந்த ஊழியறுக்குத் தெரியாது. ஆனால் எதுவாக இருந்தாலுமு; அவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் விரும்பினேன், என்று எழுதியிருக்கிறார்.

நமது தேவைகளை நாம் அவரண்டை கொண்டுவர வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நமது ஜெபத்திற்கு எப்படி பதில் கொடுக்க வேண்டும் என்பதை அவரே தீர்மானிக்க நாம் விட்டுவிட வேண்டும். எனவே ஆபிரகாமும் கர்த்தர்மேலே நம்பிக்கை உள்ளவராய் இருந்தான். தேவனிடத்திலிருந்து எதையும் கட்டாயப்படுத்தி அவன் கேட்கவில்லை. இப்படி நீ ஈசாக்குக்குப் பெண்ணெடுக்க அங்கு செல்லும் பொழுது ஆண்டவர் அதை வாய்க்காவிட்டால், அவர் வேறு வழி வைத்திருப்பார் என்ற நம்பிக்கையிலேதான் ஆபிரகாம் இருந்தான்

ஆதியாகமம் 24 : 9

இப்பொழுது தனது எஜமானின் குமாரனுக்குப் பெண்ணைத் தெரிந்தெடுக்கும்படிப் போகிற இந்த ஊழியக்காரன் செய்வதை நன்றாக கவனியுங்கள்.

ஆதியாகமம் 24 : 10

பத்து ஒட்டகங்களைக் கொண்டு சென்றான் என்று சொன்னால், அந்த பத்து ஒட்டகங்களையும் ஓட்டிச் செல்வதற்கான வேலைக்காரர்களையும் கூட்டிக்கொண்டுதான் சென்றிருப்பான். தன் எஜமானுடைய சகலவித உச்சிதமான பொருள்களும் அவன் கையில் இருந்தன, என்று சொல்லும் பொழுது, ஆபிரகாமுடைய எல்லாப் பொருட்களுக்கும் அவனே பொறுப்பானவனாய் இருந்தான், என்பது தெரிகிறது.

ஆதியாகமம் 24 : 11

பெண்கள் தண்ணீர் எடுக்க வந்தார்கள் என்பது ஒருவேளை நமக்கு அவ்வளவு ஆச்சரியமான காரியமாய் தெரியாது. ஆனால் ஒட்டகங்களும் அவர்கள்தான் தண்ணீர் எடுத்து ஊற்றினார்கள் என்பது ஆச்சரியமானதாகத்தான் இருக்கிறது.

இன்று பெண்கள் செய்யும் வேலைகளைவிட அந்நாட்களிலே பெண்கள் அதிகமாக வேலை செய்திருக்கிறார்கள். அதாவது சரீர உழைப்பான வேலை. ஆடுகளுக்கு தண்ணீர் காட்டுவது, ஒட்டகங்களுக்கு தண்ணீர் காட்டுவது இது எல்லாவற்றோடுகூட அந்த மிருகங்களைப் பராமரிக்கும் பணியையும் அவர்கள்தான் செய்திருக்கிறார்கள். இங்கு எலிசேயர் ஏன்

காத்துக்கொண்டு இருக்கிறான் என்று சொன்னால், அந்த ஊரில் உள்ளவர்கள் தண்ணீர் எடுத்து, தங்கள் மிருகங்களுக்குக் கொடுக்கும் முன்னதாக, வெளி ஊரிலிருந்து வந்த இவன் அங்கே தனகு எஜமான் ஆபிரகாமைப் போலவே தண்ணீர் எடுக்கக்கூடாது என்பதினாலே காத்துக்கொண்டு இருக்கிறான். அதுமட்டுமல்ல, ஆபிரகாமின் இந்த ஊழியக்காரன் தேவனை சார்ந்தவராய் இருக்கிறான்.

ஆதியாகமம் 24 : 12 – 14

இங்கே ஆபிரகாமின் வேலைக்காரன் தேவன் சரியானபடி தன்னை வழிநடத்த வேண்டும் என்பதற்காக, கருத்தோடு ஜெபிக்கிறான். இப்பொழுது அவன் தெரிந்து கொள்ளப்போகிறான். அங்கே வந்த அந்த ஊர் பெண்களிலேயே மிகவும் அழகுள்ள பெண்ணைத்தான் அவன் தெரிந்து கொள்ளப்போகிறான்.

ஆம், ரெபெக்காள் உண்மையாகவே அழகுள்ள ஒரு பெண்தான். சிலர் அழகு என்றாலே பிசாசுக்குறியது என்று சொல்வார்கள். ஆம், பிசாசு அழகாய்தான் இருந்தான். ஏனென்றால் அவன் ஒளியின் தூதன். ஆனால் அவளிடம் பூரண அழகு இல்லை. தேவன் சிருஷ்டிகர், சூரிய அஸ்தமனம் எவ்வளவு அழகானதாய் இருக்கிறது. எத்தனை அழகான பூக்களை அவர் உண்டுப்பண்ணியிருக்கிறார். ஆம். பெண்களையும் அழகாக அவர் உண்டாக்கியிருக்கிறார்.

அழகில் எந்தத் தவறும் இல்லை. அந்த பட்டணத்திலிருந்து வெளியே வரப்போகிற பெண்களிலே மிகவும் அழகான பெண்ணைத்தான் இவன் தெரிந்தெடுக்கப் போகிறான். அப்படி செய்யவில்லை என்றால் இவன் ஒரு சரியான ஊழியக்காரன் அல்ல.

ஆதியாகமம் 24 : 15, 16

ரெபெக்காள் மிகவும் அழகானவள் என்று ஏற்கனவே சொன்னேன். அவள் மகா ரூபவதி என்று கர்த்தருடைய வேதமே சொல்லுகிறது. தேவனே அழகை உருவாக்கினார். தேவன் ஒரு அழகான பெண்ணை தனக்கென்று பயன்படுத்துவதும் தவறானதல்ல. ஆனால் இன்று அழகான பெண்களில் அநேகரை பிசாசானவனே பயன்படுத்திக் கொண்டிருக்கிறான்.

ஆதியாகமம் 24 : 17 - 19

அழகான பெண்களையும் கர்த்தர் தம்முடைய ஊழியத்துக்குப் பயன்படுத்தினால் நலமாயிருக்கும். அப்பொழுது அந்த தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்றான்.

ரெபெக்காள் அழகான பெண்மணி மட்டுமல்ல, கரிசனை உள்ளவரும், மிக மரியாதையோடு அந்நியரை உபசரிக்கிறவளுமாய் காணப்படுகிறாள். ஆபிரகாமும் பல சமயங்களிலே அந்நியரைக் கரிசனையோடு உபசரிப்பதை இந்த வேலைக்காரன் பார்த்திருக்கிறான். எனவேதான் அவர் குணத்திற்கு ஏற்ற, அந்நியர்களையும் நன்றாக உபசரிக்க ஒரு பெண்ணை அவன் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவன் தீர்மானித்தானோ என்னவோ நமக்குத் தெரியாது.

ஆதியாகமம் 24 : 20

அருமையானவர்களே சற்றே எண்ணிப்பாருங்கள், அங்கு எத்தனை ஒட்டகங்கள் இருந்தன. ஞாபகமிருக்கிறதா? பத்து ஒட்டகங்கள் இருந்தது இல்லையா? இந்த

www.Radio882.com

ஒட்டகங்ளெல்லாம் இதற்கு முன் எப்பொழுது தண்ணீர் குடித்ததோ, நமக்குத் தெரியாது. நீண்ட தூரம் செல்லும் காருக்குத் தண்ணீர் ஊற்றுவதுபோல கொஞ்சம் தண்ணீரல்ல. ஒவ்வொரு ஒட்டகமுமே 10 குடம் தண்ணீர் குடிக்கும் என்று சொல்வார்கள். அப்படியென்றால் ரெபெக்காள் அழகானவள் மட்டுமல்ல, கடினமான உழைப்புக்கு பயிற்றுவிக்கப்பட்டவளாயும் இருந்தாள்.

அவளுடைய பெற்றோர் அவளை நன்றாகப் பயிற்றுவித்திருந்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அருமையான பெற்றோரே உங்கள் பெண் பிள்ளைகள் கடினமான வேலைகளைச் செய்ய பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை சற்றே எண்ணிப்பாருங்கள். அருமையான சகோதரியே, திருமணத்திற்காகக் காத்திருக்கிற உங்களுடைய வாழ்க்கையிலே கடினமாக உழைப்பதற்கு நீங்கள் ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கிறீர்களா?

நீதிமொழிகள் 31ஆம் அதிகாரத்தை நீங்கள் வாசித்துப் பார்த்தால், குணசாலி என்று சொல்லப்பட்டிருக்கிற அந்த பெண்மணியும், ஒரு கடின உழைப்பாளியாய் இருந்தாள். பெண்கள் சுறுசுறுப்பு உள்ளவர்களாய் தங்கள் கணவருக்கும், குடும்பத்திற்கும் செய்யவேண்டிய உதவிகளைச் செய்ய ஆண்டவர் அவர்களைப் படைத்திருக்கிறார், என்பதை அறிந்தவர்களாய் இருக்க வேண்டும்.

ஆதியாகமம் 24 : 21

இங்கே எலியேசர் ஆச்சரியத்தினாலே அமைதியாய் நிற்கிறார். இதுதான் கர்த்தர் என்னை வழிநடத்திய பெண்ணா? தேவன் என்னை சரியாய் நடத்துகிறாரா? என்று எண்ணி, தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளும்படியாக மவுனமாய் இருக்கிறான்.

அவன் அவசரப்பட்டு எந்த ஒரு முடிவையும் எடுக்கவில்லை, திருமணகாரியத்திலே ஜெபத்தோடு பெண்ணைத் தேடும் பொழுது அவசரப்பட்டுத் தீர்மானங்கள் எடுக்காமல், ஆண்டவர் தெளிவாய் வழிநடத்தும் வரை, காத்திருப்பது மிக நல்லது. இன்று எத்தனையோ குடும்பங்கள் உடைந்து போவதற்கான ஒரு காரணம், கர்த்தருடைய சித்தத்தைத் தெளிவாய் அறிந்து கொள்ளும்வரை காத்து நில்லாமல், அவசரப்பட்டு திருமணங்களை ஒழுங்கு செய்வதுதான்.

இன்றும் அதை எத்தனை பெற்றோர் சொல்வதைக் கேட்கிறோம், இல்லையா? காத்திருக்கும்பொழுது பிந்திப்போவது போலத் தெரியலாம். ஆனால் கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டு போவதில்லை.

ஆதியாகமம் 24 : 22 – 25

இந்தப் பகுதியில் நாம் கற்றுக்கொண்டதென்ன? கர்த்தரை அறியாத ஒரு பெண்ணையோ, மாப்பிள்ளையையோ, நம்முடைய பிள்ளைகளுக்குத் தெரிந்து கொள்ளக்கூடாது; அவிசுவாசியுடன் அந்நியநுகத்திலே பிணைக்கப்படக் கூடாது என்று அப்போஸ்தலனாகிய பவுலும் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்.

இரண்டாவதாக ஜெபிக்கிற கர்த்தரை விசுவாசிக்கிற சரியான ஒரு ஊழியனை அனுப்பிதான் ஆபிரகாம் தன் மகனுக்காகப் பெண்ணைத் தெரிந்து கொள்ள அனுப்பினார்.

www.Radio882.com

இன்று நம்முடைய பிள்ளைகளுக்குப் பெண்ணைத் தெரிந்தெடுப்பதற்கு, எப்படிப்பட்டவரிடத்திலே நாம் எதிர்பார்க்கிறோம் என்று சற்றே எண்ணிப் பார்ப்போம்.

ஆபிரகாமின் குடும்ப பின்னனியத்தை நன்றாக அறிந்த அந்த வேலையாள், ஆபிரகாம் குடும்பத்திலுள்ள நல்ல குணங்கள் அடங்கியிருக்கிற, அந்நியரை உபசரிக்கும் ஒரு பெண்ணை தெரிந்தெடுப்பதைக் குறித்து கருத்துள்ளவனாய் இருந்தான். செல்வச் செழிப்பானவர்கள் யார் என்று அவன் தேடிப்போகவில்லை; அதிக சம்பளம் வாங்குகிற பெண் யாரென்று அவன் தேடிப்போகவில்லை; எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமோ அதற்கு முக்கியத்துவம் கொடுத்தான்.

நம்முடைய வாழ்க்கையிலேயும், நம்முடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையிலேயும், வாழ்க்கை துணைவர்களைத் தெரிந்தெடுக்கும் பொழுது தேவனுடைய சித்தப்படி, தேவன் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறாரோ? அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிற மணமகனையோ, மணமகளையோ தெரிவு செய்வதுதான் சிறந்தது. அதுமட்டுமல்ல கர்த்தருடைய வழிநடத்துதலுக்காக மிக ஜாக்கிரதையாக பொறுமையாக காத்திருந்து தெளிவான வழிநடத்துதலின் பேரிலே இந்தத் தீர்மானங்களைச் செய்ய அழைக்கப்படுகிறோம்.

ஆதியாகமம் 24 : 27

அருமையானவர்களே இது மிக உன்னதமான ஒரு வாக்கியம், எப்படி? கர்த்தர் என்னை வழிநடத்தினார் என்பதை அறிந்து அவன் அறிக்கையிடுகிறான். கர்த்தருடைய வழியிலே இருக்கிற பிள்ளைகளை கர்த்தர் அனுதினமும் வழிநடத்துவார். அதுமட்டுமல்ல தங்களைக் கர்த்தர் வழிநடத்த வேண்டுமென்று விரும்புகிறவர்களைக் கர்த்தர் வழிநடத்துவார்.

அருமையானவர்களே, இன்றும் கர்த்தருடைய வழிநடத்துதலுக்காக நீங்கள் காத்திருக்கும்பொழுது கர்த்தருடைய வழிநடத்துதல் கட்டாயம் தேவை என்று நீங்கள் வாஞ்சிக்கும் பொழுது, உங்களையும் கர்த்தர் வழிநடத்துவார். உங்கள் வேலை காரியமாய் இருந்தாலும் சரி, திருமண காரியங்களாயிருந்தாலும் சரி, கல்வி தொடர்பான காரியங்களாயிருந்தாலும் சரி, உங்கள் ஸ்தாபனத்திலே நீங்கள் செய்ய வேண்டிய காரியங்களாய் இருந்தாலும் சரி, உங்கள் பள்ளியிலே நீங்கள் எடுக்க வேண்டிய தீர்மானமாய் இருந்தாலும் சரி, நீங்கள் வாஞ்சிப்பீர்களென்றால், கர்த்தர் உங்களையும் இன்றும் வழிநடத்துகிறவராய் இருக்கிறார்.

ஆதியாகமம் 24 : 28, 29

அருமையானவர்களே, இப்பொழுது முதலே இந்த லாபானின் மேலே ஒரு கண்ணை நாம் வைத்துக் கொள்ள வேண்டும். லாபான் உலகப்பிரகாரமான பொருட்களினாலே கவரப்படக்கூடியவனாய் இருக்கிறான். என்ன நடக்கிறது பாருங்கள்?

ஆதியாகமம் 24 : 30

ரெபெக்காளுடைய வீட்டிற்கு தன்னை யாராவது அழைத்துக்கொண்டு போவார்கள் என்று சொல்லி, ஆபிரகாமின் வேலைக்காரன் அந்தத் தண்ணீர் துரவண்டை காத்து நின்றுகொண்டிருந்தான். யாரும் தன்னை அழைக்க வந்தால் அது வரவேற்பு என்பதை அவன்

புரிந்து கொள்ள முடியும். ரெபெக்காள் கைகளிலே காதுகளிலே அணிந்திருந்த அந்த நகைகளைப் பார்த்தவுடன், வந்திருக்கும் விருந்தினர் உண்மையாகவே செல்வச் செழிப்புள்ளவர் என்பதை அறிந்து கொள்கிறான். எந்த ஒரு வாய்ப்பையும் இந்த லாபான் இழந்து போக விரும்பவில்லை. எனவே துரவண்டையில் இருந்த அந்த மனிதனிடத்திற்கு ஓடி வருகிறான்.

ஆதியாகமம் 24 : 31

லாபான் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே என்று கூறுகிறான். லாபானும் சகலத்தையும் சிருஷ்டிக்கிற ஒரு தேவன் உண்டு என்பதை உணர்ந்து கொள்கிறான்.

ஆதியாகமம் 24 : 32

மீண்டுமாக இங்கே கால்களைக் கழுவும் ஒரு சம்பவத்தைப் பார்க்கிறோம். சற்றே எண்ணிப்பாருங்கள், அந்த ஊழியனோடு கூட இன்னும் அநேகர் வந்திருக்கிறார்கள். எனவே செல்வச்செழிப்போடு இங்கே உபசரணைப் பெறுகிறார்கள். லாபான் எல்லாவற்றையும் பொறுப்பெடுத்து செய்கிறான்.

இந்த இடத்திலே திருச்சபையைக் குறித்தும், கிறிஸ்துவைக் குறித்ததுமான ஒரு உறவின் நிழலாட்டத்ததை நாம் பார்க்கலாம். புதிய ஏறடபாட்டிலே திருச்சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாய் அழைக்கப்பட்டு இருக்கிறது. இவ்வாறுதான் திருச்சபையானது பரிசுத்த ஆவியானவராலே ஆதாயப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆபிரகாமின் ஊழியக்காரனைப் போல பரிசுத்த ஆவியானவர் வேறு ஒருவரைக் குறித்து பேசும்படியாய் வந்திருக்கிறார். கிறிஸ்துவின் காரியங்களை எடுத்துக் காண்பிக்கும் படியாய் வந்திருக்கிறார். எப்படி இந்த ஊழியக்காரன் ஈசாக்குக்காக பெண்ணை கொள்ள வந்திருக்கிறாரோ அதேபோல பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்கு மனவாட்டியான திருச்சபையைக் கொள்ள உலகத்திலே வந்திருக்கிறார்.

இது ஒரு அருமையான சரித்திரமாய் இருந்தாலும் இது இன்றைய திருச்சபையின் நிலைமையை நமக்கு விளக்குகிறது.

ஆதியாகமம் 24 : 33

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் லாபானிடத்திலே நான் வந்த காரியத்தைச் சொல்லும் முன்னர் புசிக்கமாட்டேன் என்று சொல்லிவிடுகிறான். ஆம், இதுதான் பரிசுத்த ஆவியானவருடைய பணியும். மற்றுமொருவரைக் குறித்துச் சொல்லும்படியாக அவர் வந்திருக்கிறார். தேவனைப் பொறுத்தமட்டிலே இது மிக முக்கியமான ஒரு பணிவிடை.

இந்த உலகத்திலே எத்தனையோ முக்கியமான பணிவிடைகள் உண்டு. அரசாங்கப்பணிகள், செய்தி சொல்லும் பணிகள், அநேக ஸ்தாபனங்கள், வாகனங்கள், ஆகாய விமான கம்பெனிகள் எல்லாம் முக்கியமானதுதான். ஆனால் இந்தப் பெரிய கம்பெனிகளினாலே தேவன் இந்த உலகத்தோடு கூட ஈடுபாடு கொண்டவராக இருக்கிறவரில்லை. பரலோகத்தை விட பங்கு சந்தை பெரிதானதல்ல. உலகத்திலுள்ள அத்தனை பேருக்கும் நற்செய்தி கொடுக்கப்பட வேண்டும் என்பதே தேவனைப் பொறுத்தமட்டிலேயும் பிரதானமானது.

www.Radio882.com

இந்த நற்செய்தியை மக்களுக்குக் கொடுப்பதற்காகத்தான் பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்திலே வந்திருக்கிறார். அதே போலத்தான் ஆபிரகாமுடைய ஊழியக்காரனும் வந்ததற்கான காரணத்தைச் சொல்லாமல் புசிக்கமாட்டேன் என்கிறான்.

ஆதியாகமம் 24 : 34

கவனித்தீர்களா? இந்த இடத்திலே கூட அந்த ஊழியக்காரனுடைய பெயர் கொடுக்கப்படவில்லை. இதே போலத்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் கூறினாரில்லையா? பரிசுத்த ஆவியானவர் வரும்பொழுது, அவர் தன்னைக் குறித்து அல்ல; என்னுடையதிலிருந்து எடுத்து உங்களுக்குக் கொடுப்பார் என்று சொல்கிறார்.

அருமையானவர்களே, பரிசுத்த ஆவியானவருடைய பெயர் என்ன? அவருக்குப் பெயரே இல்லை. ஏனென்றால் அவர் தன்னைக் குறித்துப் பேசும்படியாக வரவில்லை; கிறிஸ்துவைக் குறித்து பேசுவதற்காக அவர் வந்தார். அதேபோலத்தான் இங்கேயும் அவன் தன்னைக் குறித்து பேச வரவில்லை; எனவே அவனுடைய பெயரும் இங்கே கொடுக்கப்படவில்லை.

ஆதியாகமம் 24 : 35

வேலைக்காரன் ஈசாக்கின் தகப்பனுடைய வீட்டைக்குறித்துப் பேசுகிறான். இதேபோலத்தான் பரிசுத்த ஆவியானவரும் பிதாவின் வீட்டைக்குறித்து நம்மோடு பேசுகிறார். இந்த உலகத்திலே வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்தும் உணர்த்துகிறார். பாவம் நிறைந்த இந்த உலகத்தின் மேலே நியாயத்தீர்ப்பு வருகிறது என்பதை பரிசுத்த ஆவியானவர் அறிந்திருக்கிறார். மனிதன் பாவியாயிருப்பதினாலே தேவனை விட்டு தூரம் போனவனாய் காணப்படுகிறான்.

இயேசு கிறிஸ்துவைக் குறித்து அவர்கள் அறிந்திருக்கிறார்களோ இல்லையோ, கேள்விப்பட்டிருக்கிறார்களோ இல்லையோ எல்லாரும் பாவிகளாய் இருக்கிறார்கள். இதுதான் மனிதனுடைய நிலை இன்று.

பரிசுத்த ஆவியானவர் நம்மிடத்திலே வந்து, "இரட்சகர் ஒருவர் இருக்கிறார்; நியாயத்தீர்ப்பிலிருந்து அவர் உங்களை விடுவிக்க முடியும்; நமக்காக அவர் நீதியாக்கப்பட்டார்; எனவே அவரை விசுவாசிப்பதினாலே நாம் பரலோகத்திலே நிற்க முடியும்" என்று மற்றுமொருவரைக் குறித்துப் பேசுகிறார்.

"கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார்" என்று அந்த ஊழியக்காரன் சொல்கிறான்.

ஆம். எனக்கருமையான சகோதரனே, சகோதரியே பிதாவாகிய தேவன் எல்லா ஆடுமாடுகளினாலும், எல்லாப் பொருட்களினாலும் செல்வந்தராய் இருக்கிறார். மலைகளிலுள்ள ஆடுகள் எல்லாம் அவருடையது. அவரே நம்முடைய பரம பிதா.

ஆதியாகமம் 24 : 36

ஆம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான் எல்லாவற்றையும் சுதந்தரிக்கிறவர். நாம் அவரோடு உடன் சுதந்தரவாளிகளாய் இருக்கிறோம்.

www.Radio882.com

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் ஆபிரகாமுக்குப் பின்னர் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளப் போகிற தனது எஜமானின் மகனுக்கான ஒரு மணவாட்டியைப் பெற்றுக் கொள்வதைக் குறித்துப் பகிர்ந்து கொள்கிறான்.

ஆதியாகமம் 24 : 27

அருமையானவர்களே பரிசுத்த ஆவியானவர் பாவிகளை அழைக்கிறார். அதாவது மனம் திரும்பிய பாவிகளை அழைக்கிறார்; 1 பேதுரு முதலாம் அதிகாரம் 23ஆம் வசனம் பாருங்கள்,

"அழிவுள்ள வித்தினாலே அல்ல; என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே".

பேதுரு காலத்திலே பாவிகளாய் இருந்தவர்கள் கிறிஸ்து மேலே வைத்த விசுவாசத்தினாலே இப்பொழுது அவருடைய பிள்ளைகளாய் இருக்கிறார்கள். ஆம். "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புது சிருஷ்டியாய் இருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" என்று 2 கொரிந்தியர் 5:17 லே வாசிக்கிறோம்.

கானானியரைக் குறித்து சொல்லவில்லை. அவருடைய பிள்ளைகள் மறுரூபமாகவேண்டும் என்று சொல்கிறார்.

ஆதியாகமம் 24 : 38 – 49

இந்த குடும்பத்தின் சார்பாக பேசுகிறவன் லாபானாய் இருக்கிறான். இப்பொழுது அவன் என்ன சொல்கிறான் பாருங்கள்,

ஆதியாகமம் 24 : 50, 51

அவர்கள் சொல்லுவதென்ன? எங்களைப் பொறுத்தமட்டிலேயும் இது கர்த்தரால் வந்ததுதான். எனவே நீங்கள் ரெபெக்காளை அழைத்துச் செல்லலாம் என்று கூறுகிறார்கள்.

ஆதியாகமம் 24 : 52, 53

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பரிசுத்த ஆவியானவர், இவ்வாறுதான் கொடுக்கிறார். கிறிஸ்துவண்டை வரும்பொழுது நமக்கு உறுதியான பரிசுத்த ஆவியானவர் உண்டு. விசுவாசத்தினாலே நாம் நீதிமான்களாகப்பட்டிருப்பதினாலே தேவனிடத்திலே சமாதானம் பெற்றிருக்கிறோம். தேவனோடு தொடர்பு கொள்ளக் கூடியவர்களாய் இருக்கிறோம். தேவனுடைய சந்தோத்தைப் பெற்றவர்களாய் இருக்கிறோம். அதுமட்டுமல்ல நமக்கு ஒரு நம்பிக்கை உண்டு. ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் அந்த நம்பிக்கையை நமக்குத் தருகிறார். இதைக்குறித்து ரோமர் 5ஆம் அதிகாரம் 1 – 5 வசனங்களிலே நாம் வாசிக்கலாம்.

இன்றைக்கும் தேவன் விசுவாசிகளுக்குக் கொடுக்கும் இந்த ஆசீர்வாதங்களை நீங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆதியாகமம் 24 – 54, 55

ஆபிரகாமின் ஊழியக்காரன் அடுத்த நாள் காலையிலேயே நாங்கள் புறப்பட்டுப் போக வேண்டும் என்று சொல்கிறார். ஏனென்றால் அவர் அந்தப் பெரிய வேலையை முடித்துவிட்டார்.

www.Radio882.com

உடனே லாபான், "ஏன் இப்படி அவசரப்பட்டுப் போக வேண்டும்? அவளை நாங்கள் வழிவிட்டனுப்ப எங்களுக்கு பத்து நாளாகிலும் கொடுக்க வேண்டாமா? இதைக் குறித்து நாங்கள் அவளிடத்திலேயும், இன்னும் சற்றுப் பேச வேண்டாமா?" என்று கேட்கிறான்.

ஆதியாகமம் 24 : 56, 57

அருமையானவர்களே, இந்த வேதப்பகுதியிலே இது ஒரு முக்கியமான இடம். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய காரியங்களை தவறவிட்டுவிடக் கூடாது.

ஆதியாகமம் 24 : 58

இந்த சம்பவம் முழுவதையும் மற்றுமொருமுறை கவனமாய்ப் பார்ப்போம். இது கிழக்கத்திய நாட்டிலே முன்னான காலங்களிலே நடைபெற்ற ஒரு சம்பவம் இந்த சம்பவத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே மனிதன் இருக்கிறான். கிட்டத்தட்ட இன்றிலிருந்து நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாக என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் குடும்பத்தினர் ஒரு முன்பின் அறியாத ஒரு விருந்தாளியை உபசரிக்கிறார்கள். மிக மதிப்போடும் மரியாதையோடும் அந்த உபசரணை நடைபெறுகிறது.

அவனோடு வந்த ஒட்டகங்களுக்கு இறை கொடுக்கப்பட்டது. அவனோடு வந்த வேலைக்காரர்கள் கவனிக்கப்பட்டார்கள்; விருந்து வைத்தார்கள். ஆனாலும் வந்த வேலையை முடிக்காமல் விருந்தை உட்கொள்ள மாட்டேன் என்று சொன்னான். எனவே தான் வந்தக் காரணத்தைக் குறித்து சொல்கிறான். தனது எஜமானுடைய குமாரனுக்கு ஒரு பெண் கொள்ளும்படியாக வந்தான். அந்தக் குமாரனுடைய பெயர் ஈசாக்கு; பொன், வெள்ளி வெகுமதிகளையெல்லாம் இந்த ஊழியக்காரன் அவர்களுக்கு எடுத்துக் கொடுத்தவனாக ஆபிரகாம் மிக செல்வந்தர் என்று ஆபிரகாமுடைய செழிப்பைக் குறித்துப்பேசுகிறான்.

இவ்வாறு அவன் பேசிக்கொண்ட பொழுது ஒரு வேளைக் குடும்பத்திலுள்ள அத்தனை பேருமே ஒரு நெருப்பைச் சுற்றி உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்திருக்கலாம். இவர்கள் பேசிக்கொண்டிருந்த எல்லாக் காரியங்களையும் ரெபெக்காளும் கேட்டுக் கொண்டுதான் இருந்திருப்பாள்.

ஆபிரகாமைக் குறித்து அவன் விவரித்துச் சொல்கிறான். ஈசாக்கின் பிறப்பைக் குறித்தும் அவன் விவரித்துக் கூறி இருப்பான். ஈசாக்கின் அற்புதமான பிறப்பைக் குறித்தும் வாழ்க்கையைக் குறித்தும் கூறியிருப்பான். அதுமட்டுமல்ல ஒரு நாள் அவனை பலியிடும்படியாக தேவனுடைய கட்டளைக்குக் கீழ்படிந்து மோரியா மலைக்கு எடுத்துச் சென்றதைக் கூறியிருப்பான். எப்படி தேவன் அற்புதமாய் அவனைக் காத்தார் என்று கூறியிருப்பான். இறுதியாக எப்படி அந்த ஈசாக்குக்கு ஒரு பெண்ணை அழைத்து வரும்படியாக அவன் அங்கே அனுப்பப்பட்டான் என்பதையும் விவரித்துச் சொல்லியிருப்பான். அதுமட்டுமல்ல எப்படி கானானியரின் மத்தியிலே பெண் கொள்ளக் கூடாது என்று கூறியிருப்பதையும் அவனுடைய மனிதருக்கு ஒத்த சரியான ஒரு பெண்ணைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று அனுப்பி வைத்ததையும் கூறியிருப்பான்.

இது எல்லாவற்றையும் ரெபெக்காள் கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். இப்பொழுது அவர்கள் எல்லாரும் அவளை நோக்கிப் பார்க்கிறார்கள். இந்த நேரம் வரை அவளை யாரும் கவனிக்கவில்லை. இப்பொழுது எல்லாருடைய கண்களும் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. "ரெபெக்கா இதைக் குறித்து நீ என்ன நினைக்கிறாய்? இந்த மனிதனோடு போகிறாயா?" என்ற கேள்விக்கு அவள் சுற்றி வளைத்து பதில் சொல்லவில்லை. "சரி, நான் போகிறேன்" என்று உடனடியாக அவள் சொல்கிறாள்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னைப் பின்பற்றி வரும்படியாக அழைப்புக் கொடுத்த ஒவ்வொரு நேரத்திலேயும் பலர் உடனடியாக அவரைப் பின்பற்றும் தீர்மானத்தைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வலைகளை விட்டு விட்டு அவரைப் பின்பற்றி இருக்கிறார்கள். இரண்டொருமுறை சிலர் பின்வாங்கிப் போனார்கள். ஆனால் அவருடைய சீடர்கள் மிகத் தெள்ளத் தெளிவாக பரிபூரணமாய் எல்லாவற்றையும் விட்டு அவருக்குப்பின் சென்றிருக்கிறார்கள்.

இன்றைக்கும் பரிசுத்த ஆவியானவர் நம்மையும் அழைத்துக்கொண்டு இருக்கிறார். பரிசுத்த ஆவியானவரே இந்த ஊழியக்காரனைப் போலப் பணி செய்கிறார். பிதாவானவரும் பரிசுத்த ஆவியானவரும் குமாரனை இந்த உலகத்தில் நமக்காக மரிக்கும்படியாக அனுப்பிவைத்தார்கள். அந்த குமாரன் மீண்டுமாக பரலோகத்திற்குச் சென்ற பொழுது தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அனுப்பி வைத்தார்.

இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்திற்குள்ளே வந்திருக்கிறார். அவர் திருச்சபையாகிய மனவாட்டியை உலகத்தை விட்டு வெளியே அழைக்கிறார். மகனே, மகளே, இயேசுவே உனக்காக மரித்தார். அவரே உன்னை இரட்சிப்பார். நீங்கள் அவருடைய மீட்பைப் பெற்றுக் கொள்ளும்பொழுது நீங்கள் மற்றவரிடத்திலே போய் இந்த பரிசுத்த ஆவியானவருடைய அழைப்பை பகிர்ந்து கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராய் ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற அழைப்பை விடுக்க வேண்டும்.

இப்படி தூய ஆவியானவர் கொடுக்கும் அழைப்பிற்குக் கீழ்படிந்து செல்லும்பொழுது மறுபடியும் பிறந்த அனுபவத்தை மனிதர்கள் பெறுகிறார்கள். தேவனுடைய பிள்ளைகள் மணவாட்டியாகிய திருச்சபையின் அனுபவத்திற்குள்ளே வருகிறார்கள்.

அருமையான சகோதரனே, சகோதரியே, தூய ஆவியானவரின் அழைப்பிற்கு கீழ்படிவீர்களா? இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக நீங்கள் விசுவாசிக்க மாட்டீர்களா? இந்த காரியத்திலே நீங்கள் எடுக்க வேண்டிய தீர்மானத்தைக் குறித்து, சுற்றிவளைத்துப் பேசத் தேவையில்லை. ஒன்று நீங்கள் அவரை இரட்சகராக விசுவாசிக்க வேண்டும், இல்லையென்றால் இல்லை என்று சொல்ல வேண்டும், இதற்கு இடைப்பட்ட ஒரு நிலையை நீங்கள் வகிக்கமுடியாது.

ஊழியர் ஒருவர் ஒரு இடத்திலே கர்த்தருடைய வசனத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருந்த பொழுது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வீர்களா? என்று கேட்டார். ஒரு இளைஞன்

தன்னுடைய இருதயத்திலே தெளிவான ஒரு தீர்மானம் எடுத்தவனாய் தான் இருந்த இடத்தில் இருந்து எழுந்து, முன்னாலே வந்தான். அவன் அப்படி வந்தது கூட்டத்தில் உள்ள அநேகருடைய இருதயத்தைத் தொட்டது. அவன் தன்னுடைய தீர்மானத்தைக் குறித்து அத்தனை உறுதியும், தெளிவும் உள்ளவனாய் இருந்தான்.

ஆம். அருமையானவர்களே அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை செய்யத்தான் ஆண்டவர் உங்களுடைய வாழ்க்கையிலேயும் எதிர்பார்க்கிறார். அவர் உங்களை ஏற்றுக் கொள்வார். அவர் உங்களை ஏற்றுக் கொள்வதற்கு நீங்கள் செய்ய வேண்டிய ஒரே காரியம், இதுதான். ஆபிரகாமின் ஊழியக்காரன் ரெபெக்காளை பார்த்துக் கேட்டவுடனே எவ்வளவு மனமகிழ்ச்சியோடு தேவனைத் துதித்திருப்பான் இல்லையா?

ஆதியாகமம் 24 : 59, 60.

இந்த தீர்க்கதரிசனமானது நிறைவேறிவிட்டது. இன்றைக்கும் ஈசாக்கின் சந்ததியர் கோடாகோடியாய் பெருகினவர்களாய் இருக்கிறார்கள்.

ஆதியாகமம் 24 : 61

மிகத் தொலைதூரத்திலே இருக்கும் ஆபிரகாமுடைய குடும்பத்தை நோக்கிப் புறப்பட்டுப் போனார்கள். திரும்பி அவர்கள் எப்படி வந்தார்கள் என்பது குறித்த விபரங்கள் நமக்கு இல்லை. ஆனால் ஒட்டகத்தின் மேலே ஏறி அவ்வளவு தூரம் பிரயாணம் செய்யவேண்டுமென்றால் அது நிச்சயமாய் கடினமான ஒரு பயணம்தான்.

ஒட்டகத்தைப் பாலைவனக் கப்பல் என்று அழைக்கிறார்கள். இன்றும் கெய்ரோவிலிருந்து பிரமிடுகள் இருக்கும் இடத்திற்கு ஒட்டகம்தான் வாகனமாக பயன்படுத்தப்படுகிறது. பகலிலே நீண்ட தூரம் பாலைவனத்திலே பயணம் செய்து இரவிலேதான் அது இளைப்பாறும்படியாகத் தங்குகிறது. ரெபெக்காளும் ஆபிரகாமுடைய வேலைக்காரனும் இணைந்து போகும்பொழுதும் ஒட்டகங்களிலே போய் வழியிலே இரவிலே அவர்கள் ஆங்காங்கே தங்கியிருப்பார்கள். நித்திரைக்குச் செல்லும் முன்பதாக நெருப்பைச் சுற்றி உட்கார்ந்து அவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்பொழுது ரெபெக்காள் அந்த வேலைக்காரனிடம் ஈசாக்கைக் குறித்து இன்னமும் சொல்லுங்கள் என்று கேட்டிருப்பாள்.

அப்பொழுது நான் எதைக் குறித்து சொல்ல என்று கேட்டபொழுது, ஈசாக்குடைய பிறப்பு எப்படி நடைபெற்றது எப்படி, எப்பொழுது அவனுடைய தகப்பனார் அவனை பலியிடக் கொண்டு போனார், இதையெல்லாம் குறித்துச் சொல்லுங்கள் என்று அவள் கேட்டிருப்பாள்.

ஒவ்வொரு நாள் இரவு தங்கும்பொழுதும் அதைக் குறித்து அவள் கேட்டிருப்பாள். “நேற்றுத்தான் கூறினேனே” என்று அவன் சொல்லியிருப்பான். அதற்கு ரெபெக்காள், “சரி இன்னொரு முறை சொல்லுங்கள்” என்று கேட்டிருப்பாள். எனவே மீண்டும் மீண்டுமாக வேலைக்காரன் தன்னுடைய எஜமானின் மகனான ஈசாக்கைக் குறித்தும், அவனுடைய பிறப்பைக் குறித்தும், எப்படி பலிபீடத்திலே ஆண்டவர் அவனைக் காப்பாற்றினார் என்பதைக் குறித்தும் கூறியிருப்பான்.

இந்த உன்னதமான மனிதனை எப்பொழுது சந்திப்பேன் என்று சொல்லி அவள் எண்ணியவளாக நித்திரைக்குச் சென்றிருப்பாள். இவ்வாறாக நீண்ட தூரம் அவர்கள் பயணித்து, வாக்குத்தத்த பூமியை அடைந்தார்கள்.

ஆதியாகமம் 24 : 62, 63

எப்பிரோன், பேர்சபா என்ற இடங்களுக்கு அருகிலேதான் இது இருக்கிறது. அருமையான சகோதரனே, சகோதரியே, இந்த சரித்திரத்திலே மணவாட்டியைத் தேடி இயேசு கிறிஸ்து வரும் வருகையைக் குறித்தும் நாம் சிந்திக்கலாம். தேவன் நடுவானத்திலே வந்து நம்மை அழைக்கும்பொழுது, நாம் வானத்திலே அவரோடு எடுத்துக்கொள்ளப்படும்போது எவ்வளவு நன்றாக இருக்கும் சிலர், இப்படி அவர் திருச்சபையை சந்திக்க வரும்பொழுது, ஏற்கனவே மரணவாசலைக் கடந்தவர்களும், உயிரோடு எழுப்பப்பட்டு, அவரோடு சேர்ந்து வருவார்கள் என்று சொல்கிறார்கள். உயிரோடிருக்கும் விசுவாசிகளும் மரித்து உயிர்த்தவர்களோடு இணைந்து, நடுவானில் அவரை தரிசிப்பார்கள். வேறு சிலர் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? முன்னதாகவே மரணத்திற்குள்ளே சென்றவர்கள் உயிரோடு எழுப்பப்பட்டவர்களாக, இயேசு பிதாவின் வலது பாரிசத்திலே புறப்படும்பொழுதே அவரை தரிசிப்பார்கள் என்று சொல்கிறார்கள்.

ஆதியாகமம் 24 : 64, 65

அருமையானவர்களே, கிறிஸ்துவின் மணவாட்டியாகிய நாம் இயேசுவின் நீதியின் வஸ்திரத்தினாலே உடுத்தப்பட்டவர்களாய் இருக்கிறோம். அவர் நமக்காக நீதியானார். நம்முடைய பாவங்களுக்காக அவர் ஒப்புக்கொடுக்கப்பட்டார். நாம் தேவனுக்கு முன்பாக நிற்கும்படியாக, நம்மைத் தகுதிபடுத்தும் நீதியை நமக்கு கிடைக்கப்பண்ணும் பொருட்டு அவர் உயிரோடு எழுப்பப்பட்டார். தங்களை நோக்கிவரும் ஒரு மனிதனை ரெபெக்காள் பார்த்து, "அது யார்?" என்று கேட்க, ஊழியக்காரன், "அதுதான் ஈசாக்கு" என்று அறிமுகப்படுத்துகிறான்.

பிரயாணப்பட்டு வரும்பொழுது ஈசாக்கைக் குறித்து எல்லாக் காரியங்களையும் கேட்டு அறிந்து கொண்டவள், இப்பொழுது முகமுகமாய் சந்திக்கிறாள். இது நாம் இன்று வாழும் நமது நிலமைக்கு ஒத்ததாய் இருக்கிறது. இதை அப்போஸ்தலனாகிய பேதுரு எவ்வாறு கூறுகிறாரென்றால், 1 பேதுரு 1ஆம் அதிகாரம் 8ஆம் வசனம் பாருங்கள்.

"அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து",

ஆம். அருமையானவர்களே, அவர் வரும்பொழுது அவருடைய கரங்களிலேயும் விலாவிலேயும் நமக்காக அவர்பட்ட தழும்புகளினாலே நாம் அவரை அறிந்து கொள்ளக் கூடியவர்களாய் இருக்கிறோம்.

ஆதியாகமம் 24 : 66

அருமையானவர்களே, பரிசுத்த ஆவியானவர் இப்போது நம்முடைய வாழ்க்கையை முத்திரைபோட்டு இருக்கிறார். ஒரு நாள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வரும்பொழுது அவருடைய கரத்திலே நம்மை ஒப்புவிப்பார்.

www.Radio882.com

ஆதியாகமம் 24 : 67

அவன் அவளை நேசித்தான் என்று வாசிக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் திருச்சபையை நேசித்தபடியினாலே திருச்சபைக்காக தம்மையே அவர் பலியாகக் கொடுத்தார். அதுமட்டுமல்ல தாயினுடைய மரணத்திற்குப் பிறகு இப்பொழுது ஈசாக்கு ஆறுதலைப் பெறுகிறான். ஆம். அருமையானவர்களே, இதைப்போலத் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் நாம் தேவை. நமக்காக அவர் ஏங்கிக்கொண்டிருக்கிறார். நாம் அவருக்கு உண்மையுள்ளவர்களாய் இருந்து, எல்லா காரியங்களிலேயும் அவருக்கு கீழ்படிகிறவர்களாய் இருப்போமா? நாமல்ல அவரே நம்மைத் தெரிந்தெடுத்து இருக்கிறார். நம்முடைய முயற்சியினால் அல்ல, அவருடைய இரத்தத்தினாலே நம்முடைய மீட்பை சம்பாதித்திருக்கிறார். அவருக்கு ஈடாக, அவர் நமக்கு செய்த காரியங்களுக்கு பதிலாக நாம் என்னத்தைச் செலுத்த முடியும்?

எனவேதான் சங்கீதக்காரன் சொல்கிறான், "கர்த்தர் செய்த எல்லா உபகாரங்களுக் காகவும் நான் என்னத்தைச் செலுத்துவேன்; இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்." அருமையான சகோதரனே, சகோதரியே நீங்கள் இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டுவிட்டீர்களா? ஒவ்வொரு நாளும் ஆவியோடும், கருத்தோடும் தேவனை ஆராதிக்கிறீர்களா?

ஆதியாகமம் 25

இந்த அதிகாரத்திலே ஆபிரகாமுடைய மரணத்தைக் குறித்தும் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் பிறந்த இரட்டைப் பிள்ளைகளாகிய ஏசா, யாக்கோபைக் குறித்தும் பார்க்கப் போகிறோம்.

இந்த அதிகாரத்திலே இஸ்மவேலின் வம்ச வரலாற்றைக் குறித்தும், ஈசாக்கின் வம்ச வரலாற்றைக் குறித்தும் பார்க்கிறோம். அடுத்ததாக பிறப்புரிமை தொடர்பான ஒரு சம்பவத்தை வாசிக்கிறோம். எனவே இது ஒரு குறிப்பிடத்தக்க அதிகாரமாகும். ஆபிரகாமுடைய மரணத்தோடு கூட இந்த அதிகாரம் முடிவடைகிறது.

சொல்லப்போனால் 23வது அதிகாரத்திலேயே அவனுடைய சரித்திரம் முடிவடைந்துவிட்டது. ஏனென்றால் 24வது அதிகாரத்திலே ஈசாக்குக்கு பெண் பார்க்கச் சென்ற ஆபிரகாமுடைய ஊழியக்காரன் செய்த காரியங்களை நாம் சிந்தித்தோம்.

ஆதியாகமம் 25 : 1, 2

இங்கே நாம் பார்க்கும் வண்ணமாக ஆபிரகாமுக்கு இன்னும் அநேகப் பிள்ளைகள் இருக்கிறார்கள். சாராளின் மரணத்திற்குப் பிறகு இந்தக் குடும்பத்தை அவன் கட்டியிருக்க வேண்டும். சிலர் ஒருவேளை இந்தக் கேள்வி கேட்கலாம், அதாவது ஈசாக்கு பிறக்கும் சமயத்திலேயே குழந்தைகளைப் பெற்றெடுக்கக்கூடிய தகுதியை இழந்த ஒரு மனிதனாய் ஆபிரகாம் காணப்பட்டான் உண்மைதான், ஆனால் தேவன் அவனை ஆசீர்வதித்தார். இதன் விளைவாகவே அவன் ஈசாக்கை மட்டுமல்ல இன்னும் அநேகப் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டான்.

இங்கே நமக்கு முக்கியமான காரியம் என்னவென்றால், இங்கேதான் மேதானைக் குறித்தும், மீதியானைக் குறித்தும் நாம் பார்க்கிறோம். மற்ற பிள்ளைகள் மூலமாகவும் சந்ததிகள் பெருகினார்கள். ஆனால் அவர்களைக் குறித்து பின்னாலே நாம் சரியாக இனம்கண்டுகொள்ள முடியவில்லை.

ஏனென்றால் மீண்டுமாக அவர்கள் வேதத்திலே எந்தப் பகுதியிலேயும் காணப்படவில்லை. ஆனால் மீதியானைக் குறித்து நாம் பார்க்கிறோம். பின்னால் நாம் படிக்கும்பொழுது மோசே எப்படி மீதியானின் தேசத்திற்குள்ளே கடந்து சென்றான்; அங்கே ஒரு மனைவியைப் பெற்றுக் கொண்டான் என்பதைப் பார்க்கப் போகிறோம். ஞாபகத்திலே வைத்துக் கொள்ளுங்கள் இந்த மேதானும், மீதியானும் ஆபிரகாமின் சந்ததிகளாகவே இருக்கிறார்கள். ஆனாலும் தேவன் கூறியது என்ன? ஈசாக்கின் மூலமாகவே இந்த உலகத்தை ஆசீர்வதிக்கப் போகிறேன் என்று சொல்லியிருந்தார். எனவே ஆபிரகாமின் வித்து என்று சொல்லப்படுவது ஈசாக்குதானே ஒழிய இஸ்மவேலோ, மேதானோ, மீதியானியனோ இல்லை.

இவர்கள் எல்லாருமே வனாந்தரத்திலே ஆபிரகாமைப் போல ஆங்காங்கே பிரயாணம் செய்து குடியிருக்கிறார்களாகவே காணப்பட்டார்கள். நாடோடிகளாகவே இருந்தார்கள்.

ஆதியாகமம் 25 : 5 – 10

ஆபிரகாம் உயிரோடிருந்த ஆயுசு நாட்கள் நூற்று எழுபத்தைந்து வரும்.

கவனித்தீர்களா? இந்த அடக்க ஆராதனைக்கு இஸ்மவேலும் வருகிறான். ஏனென்றால் என்ன இருந்தாலும் ஆபிரகாம் அவனுடைய தகப்பன். எனவே ஈசாக்கும் இஸ்மவேலும் சேர்ந்து ஆபிரகாமை அடக்கம் செய்கிறார்கள். அதுமட்டுமல்ல ஈசாக்கு முதல் முறையாக ரெபெக்காளை சந்தித்த இடத்திற்குப் போய், அங்கே அவர்கள் வாழ்கிறார்கள்.

ஆதியாகமம் 25 : 11 – 18

இந்த வசனங்களிலே நாம் இஸ்மவேலின் சந்ததியைக் குறித்து வாசிக்கிறோம். சாராளின் அடிமைப் பெண்ணாகிய எகிப்து தேசத்தாளான ஆகார் மூலமாகப் பிறந்த இஸ்மவேலின் சந்ததி. தேவன் ஆதியாகமப் புத்தகத்திலே வம்ச வரலறுகளைக் குறித்து சொல்லும்பொழுது விட்டுவிடப் போகிற சந்ததியைக் குறித்து முதலாவது சொல்லிவிட்டு முக்கியமான சந்ததியைக் குறித்து பின்னாலே சொல்வதைப் பார்க்கலாம்.

அதைப் போலத்தான் இங்கேயும் முதலாவது இஸ்மவேலின் சந்ததியைக் குறித்து சொல்கிறார். இதற்குபின் இந்த மனிதர்களைக் குறித்து வேறு எங்குமே நாம் வேதத்திலே பார்க்கிறதில்லை. தொடர்ந்து கிறிஸ்துவரை தொடர்ந்து செல்லப்போகிற சந்ததியைக் குறித்து சொல்கிறார்.

ஆதியாகமம் 25 : 19

ஆபிரகாமின் குமாரனாகிய ஈகாக்குடைய வம்ச வரலாறு; ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்.

இந்த சந்ததியைத்தான் தொடர்ந்து நாம் பார்க்கப்போகிறோம். ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான். ஈசாக்கு யாக்கோபை பெற்றான். இதைத்தான் மத்தேயு எழுதின சுவிசேம் முதலாவது அதிகாரத்திலேயும் நாம் வாசிக்கிறோம்.

www.Radio882.com

இந்த ஒவ்வொரு ஆண்களுமே மற்ற பிள்ளைகளையும் பெற்றவர்களாய் இருந்தார்கள். ஆபிரகாமும் அநேக பிள்ளைகளைப் பெற்றிருந்தான். ஆனால் அவர்களுடைய சந்ததியெல்லாம் கூறப்படவில்லை. ஈசாக்குடைய சந்ததிதான் தொடர்ந்து கூறப்பட்டது. இனி இஸ்மவேலைக் குறித்தோ, மேதானைக்குறித்தோ, மீதியானைக் குறித்தோ நாம் மறந்து போகலாம்.

ஈசாக்கின் சந்ததியரை அவ்வப்பொழுது பின்னாலே அவர்கள் சந்திக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய வம்ச வழிகளை நாம் சிந்திக்கப் போகிறதில்லை.

ஆதியாகமம் 25 : 20, 21

இங்கே ஆர்வம் தரக்கூடிய ஒரு காரியம் என்னவென்றால் ரெபெக்காளும் சாராளைப் போலவே குழந்தை பெற்றெடுக்க முடியாதவளாய் இருந்தாள். ஆனால் அவளுக்காக ஈசாக்கு தேவனிடத்திலே ஜெபிக்கிறான். இப்பொழுது இரட்டைக் குழந்தைகளை அவள் கர்ப்பந்தரிக்கிறாள்.

ஆதியாகமம் 25 : 22

பிறப்பதற்கு முன்னதாகவே ஆரம்பமான இந்த இரண்டு மகன்களுக்கும் இடையிலான பிரச்சனை இன்றைக்கும் உலகத்திலே நடைபெறுகிற போராட்டத்தைக் குறிக்கிறதாய் இருக்கிறது. அதாவது ஒளிக்கும் இருளுக்குமான போராட்டம்; நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போராட்டம்; ஆவிக்கும் சரீரத்துக்கும் இடையிலான போராட்டம்.

தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருமே இந்தப் போராட்டத்தைக் குறித்து அறிந்தவர்களாய் இருக்கிறார்கள். இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுலும் ரோமர் 7ஆம் அதிகாரத்திலே தெளிவாய் எழுதியிருக்கிறார். அவளுக்குள்ளே நடைபெறுகிற இந்தப் போராட்டத்தைக் குறித்து ரெபெக்காள் ஒன்றுமே அறியாதவளாய் இருந்தாள். எனவே தேவனிடத்தில் போய் அதைக் குறித்து அவள் கேட்கிறாள்.

ஆதியாகமம் 25 : 23

இங்கே தேவன் தெளிவாக மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்று கூறிவிட்டார். இதை அவள் பரிபூரணமாக விசுவாசித்திருக்க வேண்டும். அதுமட்டுமல்ல இளையகுமாரனும் அதைப் பரிபூரணமாய் விசுவாசித்திருக்க வேண்டும். தொடர்ந்து என்ன நடக்கிறது பாருங்கள்.

ஆதியாகமம் 25 : 24, 25

ஏசா என்றால் சிவப்பு அல்லது மண் நிறமான என்று பொருளாகும். அவன் முதலாவது பிறந்தான். எனவே அவன் மூத்தவன் என்று அழைக்கப்படுகிறான். ஆனால் மூத்தவன் இளையவனைச் சேவிக்க வேண்டும்.

ஆதியாகமம் 25 : 26

கவனித்தீர்களா? ஈசாக்கும் ரெபெக்காளும் திருமணம் ஆகும் பொழுது அவர்களுக்கு நாற்பது வயது, இருபது ஆண்டுகள் கழித்துதான் இந்த குழந்தைகளைப் பெற்றெடுக்கிறாள். மூத்தவன் ஏசா, சிவந்தவன் என்று அவனை அழைக்கிறார்கள். யாக்கோபு ஏசாவின்

www.Radio882.com

குதிங்காலைப் பிடித்து கொண்டு வெளிப்பட்டான் என்று வாசித்தோம். எனவே அவனை யாக்கோபு என்று அழைத்தார்கள். முந்த முயன்றவன் என்று சொல்லலாம். மூத்தவனின் இடத்தை எடுத்துக்கொள்ள வருகிறான். ஆனால் ஏற்கனவே தேவன் அதை வாக்குப்பண்ணிவிட்டார்.

ஆதியாகமம் 25 : 27

அந்தக் குடும்பத்திலே வளர்ந்து வருகிற இந்த இரண்டு பையன்களையும் குறித்து பார்ப்போம். இவர்கள் ரெட்டைப்பிள்ளைகள். ஆனால் இவர்களைப்போல ஒருவருக்கொருவர் மாறானவர்களாக எந்த இரட்டையர்களையும் நாம் பார்க்கமுடியாது. கர்ப்பத்திலேயே அவர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள். வெளியே வந்த பிறகும் ஒருவருக்கு விரோதமாய் ஒருவர் செயல்படுகிறார்கள்.

இரண்டுபேருக்கும் எந்த ஒரு காரியத்தைக் குறித்தும் வித்தியாசமான கண்ணோட்டம் இருந்தது. வாழ்க்கையைக் குறித்து வித்தியாசமான அர்த்தமுள்ளவர்களாய் இருந்தார்கள். எந்த ஒரு காரியத்தைக் குறித்த அவர்கள் கருத்தும் வித்தியாசமானதாய் இருந்தது. அவர்களுடைய சிந்தனை வித்தியாசமானதாய் இருந்தது.

ஆரம்பகாலத்திலே சிவந்தவனான ஏசா யாக்கோபை விட மிக வசீகரமானவனாய் இருந்திருப்பான். ஆனால் எந்த ஒரு மனிதனையும் வெளியே நாம் பார்ப்பதை வைத்து மதிப்பிட முடியாது. உள்ளே என்ன நடக்கிறது என்பதை வைத்துத்தான் மதிப்பிடமுடியும்.

இதை ஏசாவினுடைய வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்கிறோம். பிள்ளைகள் பெரியவர்களானபோது என்று வாசிக்கிறோம். ஏசா தந்திரமான ஒரு வேட்டைக்காரன்.

வீட்டைவிட்டு வெளியே இருப்பவன். விளையாட்டு வீரனைப் போல என்று வைத்துக்கொள்ளுங்கள் வீட்டைவிட்டு வெளியே எல்லாக் காரியங்களிலேயும் துணிந்து செல்கிறவனாய் இருந்தான். சரீரப்பிரகாரமான செயல்பாடுகளிலே துணிந்து செயல்பட்டான். ஆனால் ஆவிக்குரிய காரியங்களைக்குறித்து எந்த அறிவோ, வாஞ்சையோ, தகுதியோ இல்லாதவனாய் வாழ்ந்தான்.

சரீரப்பிரகாரமானக் காரியங்களுக்கே வாழ்க்கையிலே முக்கியத்துவம் கொடுத்து வந்தான். இவன் மாம்சத்திற்கு நிழலாய் இருக்கிறான். யாக்கோபு சாதாரணமான மனிதன் அவனை எப்படிப்பட்ட ஒருவனாகவும் உருவாக்க முடியும். அவன் வீட்டிற்குள்ளே வளர்ந்து வந்தான். யாக்கோபு அம்மாபிள்ளை. எப்பொழுதும் முந்தானையைப் பிடித்துக் கொண்டே வீட்டிலே இருப்பவனைப் போல, ரெபெக்காள் என்ன சொன்னாளோ அதையே செய்கிறவனாய் இருந்தான்.

ஏசா அப்பா பிள்ளையாய் இருந்தான்.

ஆதியாகமம் 25 : 28

குடும்பத்திலே இங்கேதான் பிரச்சனை ஆரம்பமாகிறது. ஒரு பிள்ளையைத் தாயும், ஒரு பிள்ளையைத் தகப்பனாரும் விசேஷித்து நேசிக்கும்பொழுது, பிரச்சனைகள்தான். இன்று கூட

www.Radio882.com

உங்கள் குடும்பத்திலே, நீங்கள் அண்ணனுக்குத்தான் செல்லம் கொடுக்கிறீர்கள், நீங்கள் தங்கைக்கு தான் செல்லம் கொடுக்கிறீர்கள் என்று பிள்ளைகள் பெற்றோரைப் பார்த்துக் கூறுவதை நீங்கள் கவனித்திருக்கலாம்.

ஒரு குழந்தைமேல் தாயும், ஒரு குழந்தைமேல் தகப்பனும் பிரியமுள்ளவர்களாய் இருக்கும்பொழுது அங்கே பிரச்சனை உருவாகும். அந்தப் பிரச்சனைதான் இங்கே ஈசாக்கின் வீட்டிலேயும் ஆரம்பமாகிறது.

அருமையான சகோதரனே, சகோதரியே உங்கள் குடும்பத்திலே இப்படி நீங்கள் பிரித்து அன்பு கூறாதிருங்கள். எத்தனை பிள்ளைகள் இருந்தாலும் எல்லாருக்கும் ஒரே அன்பைக் கொடுங்கள். எந்தப் பிள்ளை சிறப்பான காரியத்தைச் செய்தாலும், உற்சாகப்படுத்துங்கள். இதுதான் சிறந்த ஒரு குடும்ப அமைப்பு.

வேட்டைக்கறியை சாப்பிட விருப்பமுள்ளவனாய் இருந்தபடியினாலே ஈசாக்கு ஏசாவை நேசித்தான். தான் சொன்ன எந்த காரியத்திற்கும் கீழ்ப்படிந்து செயல்பட்டபடியினாலே ரெபெக்காள் யாக்கோபை நேசித்தாள். ஏற்கனவே நாள் கூறியதுபோல் இந்த சிறு பிராயத்திலேயே யாக்கோபைக் காட்டிலும் ஏசா அழகானவனாய், வசீகரமானவனாய் காணப்பட்டான். ஒருவேளை ஒரு முழுமனிதனாக அவன் காணப்பட்டான்.

யாக்கோபு தந்திரமுள்ளவனாய் இருந்தான். எந்த ஒரு சூழ்நிலையிலேயும் திறமையானவனாய் இருக்க முயற்சியெடுத்தான் தன்னுடைய விருப்பம் நிறைவேறுவதற்காக யாரையும் மிதித்துக் கொண்டு முன்னாலே செல்வதைக் குறித்து அவன் கவலைப் படுகிறதில்லை. இதற்காகப் பின்னால் ஆண்டவர் அவனோடுகூட செயல்படுகிறார்.

வெளியே பார்க்கிறதற்கு மிக வசீகரமானவனாக ஏசா காணப்பட்டாலும், ஏசாவினுடைய உள்ளத்தின் ஆழத்திலே அவன் தேவனைக் குறித்த எந்த நாட்டமும் ஈடுபாடும் இல்லாதவனாய் இருந்திருக்கிறான். முழுக்க முழுக்க உலகமே அவனது வாழ்க்கையாய் இருந்திருக்கிறது. இன்றும் உலகமே முக்கியமென்று வாழ்கிற மனிதருக்கு இந்த ஏசா ஒரு மாதிரி.

ஏசா சரீரத்திற்காகவே வாழ்ந்துவருகிற ஒரு மனிதனாய் இருந்தான். ஆனால் யாக்கோபின் உள்ளத்திலே ஆவிக்குரிய காரியத்தைக் குறித்த ஒரு வாஞ்சை இருந்திருக்கிறது. அதற்கு மேலே இருந்த குப்பைக்கூளங்களையெல்லாம், தேய்த்து எடுப்பதற்கு தேவன் செயல்பட்டார். பல காலங்களுக்குப் பிறகு ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் தேவையில்லாத அநேக காரியங்களை தேவன் அவனைவிட்டு எடுத்துப் போடுவதை நாம் பார்க்கலாம்.

ஆதியாகம புத்தகத்திலே யாக்கோபுடைய வாழ்க்கை அதிக காலம் கடந்து செல்வதை நாம் பார்க்கிறோம்.

அவனுடைய வாழ்க்கையின் பின்னான பகுதியிலே ஆவிக்குரிய காரியங்களிலே சிறந்து விளங்குவதை நாம் பார்க்க முடியும்.

இப்பொழுது அவனுடைய வீட்டிலே நடந்த ஒரு சம்பவத்தை நாம் பார்க்கப் போகிறோம். தாயும் தகப்பனும் வெவ்வேறு பிள்ளைகளுக்கு செல்லம் கொடுக்கும்பொழுது பாரபட்சம்

www.Radio882.com

பார்க்கிறவர்களாய் இருக்கும்பொழுது உண்டாகக்கூடிய கஷ்டங்களையும், பிரச்சனைகளையும் குறித்து நாம் பார்க்கிறோம்.

இப்படிப்பட்ட ஒரு குடும்பம் மகிழ்ச்சியான குடும்பம் என்று அழைக்கப்பட முடியுமா? முடியவே முடியாது.

ஆதியாகமம் 25 : 29 – 32

இந்த சம்பவம் ஏசாவினுடைய உண்மைத்தன்மையை வெளிப்படுத்துகிறது. வயலிலிருந்து வருகிறான்; களைப்போடு வருகிறான்; இவன் சாகும் அளவிற்கு பசி நிறைந்தவனாக இல்லை. ஏனென்றால் ஆபிரகாமுடைய குடும்பத்திலே வந்த யாருமே பசியினால் சாகும் அளவிற்கான சூழ்நிலை இல்லை.

எப்பொழுதுமே அங்கே உணவு அவர்களுக்கு உண்டு. அவன் வந்த அந்த நேரத்திலே இந்த கூழைத்தவிர வேறு எதுவும் ஆயத்தமாகவில்லை. இதை யாக்கோபுதான் தயாரித்திருக்கிறான். வீட்டிற்குள்ளேயே வளர்ந்த யாக்கோபு நல்ல ஒரு சமையல்காரனாய் வளர்ந்திருக்கிறான். இப்போது யாக்கோபினிடத்திலே அந்த சிவப்பான கூழிலே நான் சாப்பிடக் கொஞ்சம் தா, நான் இளைத்திருக்கிறேன் என்று கேட்கிறான்.

ஏதோம் என்றாலும் சிவப்பு என்று பொருள். ஏசாவைப் போலவே மண் நிறமான என்றுச் சொல்லலாம். இந்த வாய்ப்பை யாக்கோபு எப்படி பயன்படுத்துகிறான் பாருங்கள். அவன் மிகவும் தந்திரக்காரனும் ஏமாற்றுகிறவனுமாய் இருந்தான். இப்பொழுது ஏசாவின் சேஷ்டபுத்திர பாகத்தைக் கேட்கிறான். அதைத் தந்தால் இதைத் தருவேன் என்று தந்திரமாக வாய்ப்பை பயன்படுத்துகிறான்.

சரி, இப்பொழுது நாம் இந்த சேஷ்ட புத்திரபாகம் என்றால் என்ன என்பதைக் குறித்தும் சற்றே அறிந்து கொள்வோம். இந்த சேஷ்ட புத்திரபாகத்தைப் பெற்றுக்கொள்கிறவனே குடும்பத்தின் தலைவனாயிருக்கிறான். அதாவது குடும்பத்தின் ஆசாரியனே இதைப் பெற்றுக்கொள்கிறான்.

இந்தக் குடும்பத்தைப் பொருத்தமட்டிலேயும் அதைப் பெற்றவனாய் இருக்கிறவனுடைய சந்ததியிலேயே இயேசு தோன்றப் போகிறார். இந்த சேஷ்ட புத்திரபாகத்தை ஏசா பெரிதாகவேக் கொள்ளவில்லை. அப்படி அவன் அதைக் குறித்து அக்கறைப்பட்டுக் கொள்ளவில்லை என்பதும் யாக்கோபுக்குத் தெரியும், ஏசா எந்த முக்கியத்துவத்தையும் அவன் சேஷ்டபுத்திர பாகத்திற்குக் கொடுக்கவில்லை. அவன் அந்தக் குடும்பத்திற்கு ஆசாரியனாய் வாழ விரும்பவில்லை.

அதைத்தான் அவனுடைய வாழ்க்கையிலேயே இறுதியாக எண்ணுகிறவனாய் காணப்பட்டான். இன்றும் அநேகருடைய வீடுகளிலே கிறிஸ்துவை அறிந்திருக்கிறவர்கள் கூட கிறிஸ்துவுக்காக எதையாவது செய்யும்படியாக அழைக்கப்பட்டால், ஐயய்யோ நான் ஒரு போதகன் இல்லை; என்னால் இதைச் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள்.

ஆம். பிரியமானவர்களே, இன்றைக்கு அநேகர் ஆவிக்குரிய காரியங்களிலே ஈடுபட விருப்பமற்றவர்களாய் இருக்கிறார்கள். ஆவிக்குரிய காரியங்களிலே அவர்கள் விருப்பம்

www.Radio882.com

உள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதை உலகத்திற்கு காட்டுவதற்கே வெட்கப்படுகிறவர்களாயும் இருக்கிறார்கள். இதுதான் ஏசா. சேஷ்ட புத்திரபாகத்தைப் பெற்றவன், என்பதை உலகத்திற்குக் காட்ட அவன் விரும்பவில்லை. அவனைப்பார்த்து யாராவது போதகரே என்று அழைத்திருப்பார்கள் என்றால் அது அவனை கேலி செய்தது போல அவனுக்கு இருந்திருக்கும்.

சேஷ்ட புத்திரபாகம் அவனுக்கு விருப்பமுள்ளதாக இல்லை. கிறிஸ்து தன்னுடைய சந்ததியிலே வரவேண்டும் என்பதைக்குறித்து அவன் அக்கறைப் பட்டவனாக இல்லை. ஆனால் யாக்கோபு இதைப் பார்க்கிறான். உன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை எனக்குத்தா; இந்தக் கூழை உனக்குக் கொடுக்கிறேன் என்று சொன்னான். “அந்த சேஷ்ட புத்திரபாகம் எனக்கு என்னத்திற்கு? அந்தப் பிறப்புரிமையைக் குறித்து நான் ஏன் அக்கறைப்பட்டுக்கொள்ளப் போகிறேன்? அதையெல்லாம் விட இந்தக் கூழ் எனக்கு மேலானது” என்று அவன் நினைத்தான்.

ஆம். ஆவிக்குரிய காரியத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காத ஏசா சேஷ்ட புத்திர பாகத்தை மதிப்பற்றது என்று எண்ணினான். அருமையானவர்களே, யாக்கோபு இங்கே செய்ததும் தவறானதுதான். ஏனென்றால் தேவன் ஏற்கனவே வாக்குப்பண்ணியிருக்கிறார். மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்று கூறியிருக்கிறார்.

தேவனுடைய நேரத்திலே யாக்கோபுக்கு இந்த சேஷ்ட புத்திரபாகம் வந்து சேரும். ஆனால் யாக்கோபு காத்திருக்க மனமற்றவனாய் இருந்தான். தேவன் வாக்குபண்ணினதை அவனே எடுத்துக் கொள்ள முயன்றான். அதை தந்திரமான முறையிலே எடுத்துக் கொள்கிறான். ஆனால் தேவனே அதை அவனுக்குக் கொடுக்கும்படியாய் காத்திருந்தால் மிக நன்றாய் இருந்திருக்கும். தனக்குத்தானே என்ன செய்துகொள்ளமுடியுமோ அதையே செய்வேன் என்று தன்னுடைய பாணியிலேயே அவன் சென்றான். தனக்குத்தானே உதவி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கும்பொழுது, தேவனை ஏறிட்டுப்பார்த்து அவர் செயல்படும்படியாக எதிர்பார்க்க வேண்டியதில்லை என்று எண்ணினான். தானே தனது காரியங்களை செய்ய முயற்சி செய்தான். முதலாவதாக சில காலங்களுக்கு அதை அவன் சிறப்பாகவே செய்தான்.

ஆனால் அவனுடைய வாழ்க்கையிலேயும் ஒருநாள் வந்தது. அவன் தூர இடத்திற்குக் கல்லூரிக்குச் செல்வது போல மாமனாகிய லாபான் வீட்டுக்குச் சென்றான். அங்கு லாபான் தான் கல்லூரியின் முதல்வராய் இருந்தான்.

இங்கே அவன் கடினமான முறையிலே சில பாடங்களை கற்றுக்கொள்ளப் போகிறான். அங்கேயும் தனது ஏமாற்றும் திறமையினாலே தந்திரத்தினாலே பல காரியங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறான்.

ஆதியாகமம் 25 : 33, 34

இந்தப் பகுதியிலே நாம் முக்கியமாய் கவனிக்க வேண்டிய வியம் என்னவென்றால் ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை அலட்சியம் பண்ணினான் என்பது அவன் விரும்பியபடி அவனுக்கு அப்பமும் கூழும் கிடைக்கிறது. அதை சாப்பிட்டுவிட்டு தனது பிறப்பு உரிமையான சேஷ்ட புத்திர பாகத்தை அற்பமென்று நினைத்து கொடுத்துவிட்டு, கடந்து சென்றுவிட்டான்.

ஆவிக்குரிய காரியங்கள் எதுவும் அவனுக்கு முக்கியமானதாக இல்லை. அருமையான சகோதரனே, சகோதரியே இன்றும் திருச்சபையில் இருக்கும் அநேகரும், ஆவிக்குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறதில்லை. வெளியே சடங்காச்சாரமான சரீரபிரகாரமான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆவிக்குரிய காரியங்களை அறிந்து கொள்வதற்கும், புரிந்து கொள்வதற்கும் அதை ஏற்றுக்கொள்ளுவதற்கும் தகுதியற்றவர்களாய் இருக்கிறார்கள்.

அருமையானவர்களே எத்தனை திருச்சபைகளிலே பண்டிகை நேரங்களிலே பிரச்சனை வந்து திருச்சபைகள் உடைந்து போய்க் கொண்டிருக்கின்றன? காரணம் என்ன? அப்படி சண்டையிடுகிறவர்களுக்கு ஆவிக்குரிய வாழ்க்கையைக் குறித்த எந்த அக்கறையும் இல்லை. வெளிப்படையான அலங்காரம், அசனம் என்று முக்கியமற்ற காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஆவிக்குரிய பண்புகளான அன்பையும், மன்னிப்பையும், பொறுமையையும் இழந்தவர்களாக திருச்சபைகளை நாசம் பண்ணுகிறார்கள்.

ஒரு மனிதன் ஆவிக்குரியவனாய் இருப்பானென்றால், பரிசுத்த ஆவியானவர் அவனுக்குக் கற்றுக்கொடுக்க முடியும், அவனை வழிநடத்த முடியும். ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து ஆழமாய் சிந்திக்க வேண்டிய காலங்களிலே அசட்டை செய்வோமென்றால், ஒரு காலத்திலே அதை வாஞ்சையோடு தேடினாலும் கண்டுகொள்ள முடியாத நிலைமைக்குப் போய்விடுவோம்.

எபிரேயர் 12 : 16, 17

“ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.

ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணமற்போனான்.”

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, அப்படிப்பட்ட நேரம் உங்கள் வாழ்க்கையிலே வரும் முன்னதாக ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து அக்கறையுள்ள வர்களாக வாழுங்கள். இந்தக் காலங்களிலே உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையிலே எந்தக் காரியங்களை மாற்றிக்கொள்ளும்படியாக ஆண்டவர் உங்களோடு பேசுகிறாரோ, அதற்குக் கீழ்ப்படிந்து செயல்பட உங்களை அர்ப்பணியுங்கள். இல்லையென்றால் நீங்கள் நெருக்கப்படும் இன்னொரு சூழ்நிலையிலே மனம்திரும்ப வாஞ்சித்தும் மனமாறுதலை பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலைமைக்குச் சென்றுவிடுவீர்கள்.

அருமையான பெற்றோரே, உங்கள் குடும்பங்களிலே பிள்ளைகளை பாரபட்சமில்லாமல் நேசிக்கத் தீர்மானம் பண்ணுங்கள். எந்தப் பிள்ளை தவறு செய்தாலும் தண்டனை கொடுங்கள். எந்தப் பிள்ளை சிறப்பான காரியத்தைச் செய்தாலும் உற்சாகப்படுத்துங்கள். உங்கள் குடும்பம் ஒரு சாட்சியான குடும்பமாக இருக்கட்டும்.

www.Radio882.com

ஆதியாகமம் 26

பிரியமானவர்களே ஆதியாகமம் 25ஆம் அதிகாரத்திலே ஆபிரகாமின் மரணத்தைக் குறித்தும், அடக்கத்தைக் குறித்தும், பிள்ளையில்லாமல் இருபது ஆண்டுகாலம் வாழ்க்கை வாழ்ந்த ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் ஆண்டவர் கொடுத்த இரட்டைக் குழந்தைகளைக் குறித்தும், அவர்களிலே மூத்தவன் ஆவிக்குரிய காரியத்தைக் குறித்து அக்கறையற்றவனாய் வாழ்ந்ததைக் குறித்தும், அதே நேரம் இளையவனான யாக்கோபு தேவனுடைய வாக்குத்தத்தத்தை ஆழமாய் சிந்தியாமல் சுய முயற்சியினாலே தந்திரமாய் காரியங்களைப் பெற்றுக்ககொள்ளத் துடிக்கிறவனாயும் காணப்பட்டான், என்று சிந்தித்தோம்.

ஆதியாகமம் 26ஆம் அதிகாரத்திலே ஈசாக்கினிடத்திலே தேவன் தமது உடன்படிக்கையை உறுதிபடுத்துகிறதைப் பார்க்கிறோம். மேலும் ஈசாக்கு ரெபெக்காளைக் குறித்து பொய் சொல்லுவதை வாசிக்கிறோம். பின்னர் ஈசாக்கு கேராரின் பள்ளத்தாக்கிலேயும், பெயெர்செபாவிலும் குடியிருப்பதைக் குறித்துப் பார்க்கிறோம். பல சமயங்களிலே ஆபிரகாமுடைய வாழ்க்கையைப் பார்க்கும்பொழுதும் யாக்கோபுடைய வாழ்க்கையைப் பார்க்கும் பொழுதும் ஈசாக்கின் இந்த பகுதி அவ்வளவு சிறப்பானதாக நமக்குத் தெரிகிறதில்லை. ஆனால் இந்த அதிகாரத்திலேதான் ஈசாக்கைக் குறித்து நாம் முழுமையாக வாசிக்கிறோம். அதே வேளை இது மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கும் ஒரு அதிகாரம் என்றும் சொல்லமுடியாது. கிணறுகள் வெட்டுகிறான் என்று நாம் நினைக்கலாம். ஆனால் இந்த அதிகாரத்திலே ஒரு சிறப்பான செய்தி நமக்கு இருக்கிறது.

இந்த செய்தியைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுலும் முக்கியமானதாய்க் கூறுகிறான். ரோமர் 15ஆம் அதிகாரம் 4ஆம் வசனம் என்ன சொல்கிறது பாருங்கள்,

"தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும் படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது."

இந்த அதிகாரம் பொறுமையை நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. நம்மிலே சிலருக்கு இந்தப் பொறுமைத் தேவையானதாய் இருக்கிறது, இல்லையா? ஆனால் அநேக வேளைகளிலே தேவனுக்குதான் நம்மீது பொறுமை வேண்டியதிருக்கிறது என்று எண்ணுகிறோம். தேவன் ஆபிரகாமைப் போல, யாக்கோபைப் போல, தாவீதைப் போல தீவிரமாகக் காரியங்களைச் செய்யும் அநேகரைப் பெற்றவராய் இருந்தார். அப்படிப்பட்டவர்களையும் தேவனால் பயன்படுத்த முடியும். ஆனாலும் ஈசாக்கினுடைய வாழ்க்கையிலிருந்து வரும் செய்தியும் நம்மிலே அநேகருக்குத் தேவை.

2 தீமோத்தேயு 3ஆம் அதிகாரம் 16,17ஆம் வசனங்களை வாசியுங்கள்

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,

அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."

இந்த சத்தியங்களை மனதிலே கொண்டவர்களாக இந்த அதிகாரத்திற்குள்ளே கடந்து செல்வோம். ஆபிரகாமின் நேச குமாரனாகிய ஈசாக்கோடுக் கூட தேவன் தமது உடன்படிக்கையை உறுதி செய்கிறார். அதற்குப் பின்னர் அவனது தகப்பனான ஆபிரகாம் செய்த அதே அவிசுவாசமான பாவத்திலே ஈசாக்கு விழுந்து போவதைப் பார்க்கிறோம். இறுதியாகக் கானானிலே அவன் கிணறுகளைத் தோண்டிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

இது மிக சுவாரஸ்யமான அதிகாரமாய் தெரியவில்லை என்றாலும், இங்கேயும் நமக்கு செய்தி உண்டு. எனவே நம்முடைய வாழ்க்கைக்கான அந்த செய்தியை இன்று நாம் தவறவிட்டுவிடாமல் கற்றுக்கொள்ள ஜெபத்தோடு தொடர்ந்து கவனிப்போம்.

ஆதியாகமம் 26 : 1

இந்த அதிகாரத்தில் நாம் வாசிக்கிறதுபோல இரண்டாவது பஞ்சத்தைக் குறித்து இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. முதலாவது முறை பஞ்சம் வந்தபொழுது ஞாபகம் இருக்கிறதா? ஆபிரகாமும் சாராளும் எகிப்துக்குப் போனார்கள்.

ஆதியாகமம் 26 : 2

ஏன் இந்தக் காரியத்தை தேவன் ஈசாக்குக்குச் சொல்ல வேண்டும்? ஏற்கனவே ஈசாக்கின் தகப்பனான ஆபிரகாம் இப்படி ஒரு பஞ்சம் வந்தபொழுது எகிப்திற்கு ஓடிப்போனான். இந்த சம்பவம் என்ன சொல்கிறது? தகப்பனைப் போல மகன் என்று சொல்கிறது. தகப்பனுடைய பாவம் மகனுடைய வாழ்க்கையிலேயும் தொடர்கிறது. Generation gap என்று சொல்கிறோம். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான ஒரு இடைவெளி இன்றைக்குக் காணப்படுகிறது என்று பேசிக்கொள்கிறோம். ஆனால் பாவம் என்பது தொடர்கிறதாய் இருக்கிறது.

ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்கு அது அப்படியே தவழ்ந்து செல்கிறது. அநேக சமயங்களிலே பெற்றொர் செய்த அதே தவறையே பிள்ளைகளும் செய்கிறவர்களாய் இருப்பார்கள். எனவேதான் இங்கே தேவன் இந்தப் பஞ்ச நேரத்திலே ஈசாக்கைப் பார்த்து தெளிவாக நீ எகிப்துக்கு போகாமல் நான் சொல்லும் தேசத்திலே குடியிரு என்று கட்டளையிடுகிறார்.

அடுத்த வசனங்களிலே பார்க்கும்பொழுது தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த அந்த உடன்படிக்கையை மீண்டுமாக உறுதிசெய்கிறார்.

ஆதியாகமம் 26 : 3, 4

தேவன் இங்கே ஈசாக்கினிடத்தில் என்ன சொல்கிறார்? எகிப்துக்குப் போகாதே; இந்த தேசத்தைவிட்டு நீ போகாதே; ஆபிரகாமோடு நான் கொடுத்த உடன்படிக்கையை உன்னோடு நான் உறுதிசெய்கிறேன், என்று சொல்லி மூன்று குறிப்புக்கள் அடங்கிய வாக்குத்தத்தத்தை

www.Radio882.com

மீண்டும் சொல்கிறார். முதலாவதாக நிலத்தைக் குறித்த வாக்குத்தத்தம், நான் உனக்கும் உன் சந்ததிக்கு இந்த தேசங்கள் யாவையும் தருவேன் என்கிறார்.

இரண்டாவதாக 5வது வசனத்தை நாம் வாசிக்கிறதுபோல உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போல பெருக பண்ணுவேன் என்று சொல்கிறார். மூன்றாவதாக உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று கூறுகிறார்.

ஆதியாகமம் 26 : 5

இந்தக் குறிப்பிட்ட நேரத்திலே மோசேயின் கட்டளைக் கொடுக்கப்படவில்லை. ஆபிரகாம் மோசேயின் கட்டளைகளுக்கும் கற்பனைகளுக்கும் கீழே வாழவில்லை. ஆனால் ஒரு முக்கியமான காரியம் என்னவென்றால், தேவன் ஒரு குறிப்பிட்ட காரியத்தை ஆபிரகாமிடத்திலே சொல்லியிருக்கிறார். அதை ஆபிரகாம் விசுவாசித்து அதை ஏற்றுக் கொண்டான். அதன்படி செயல்பட்டான்.

ஆபிரகாம் தன்னுடைய விசுவாசத்தைத் தனது செயலிலே வெளிப்படுத்தினான். ஆனால் இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் நான் விசுவாசிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த விசுவாசத்தை வாழ்க்கையிலே செயலிலே காட்டுகிறதில்லை. ஒருமுறை ஒரு பெண்மணி தனது போதகரிடத்திலே வந்து, ஐயா! நான் விசுவாசிக்கிறேன் ஆனால் நான் எதையுமே உணரமுடியவில்லையே என்று சொன்னார்களாம்.

ஒரு உதாரணம் சொல்கிறேன் கவனியுங்கள், நீங்கள் ஊழியத்திற்காக ஒரு தொகையை காணிக்கையாக ஒரு வங்கியிலே வைத்திருக்கிறீர்கள்; அதைப்போய் பெற்றுக்கொள்ளுங்கள் என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதைக்குறித்து செயல்படாமல் இருந்தால் இந்த பெண்ணைப் போலத்தான் இருப்போம்.

உங்களுடைய வார்த்தைகளை விசுவாசித்து உடனடியாக சென்று ஊழியத்திற்காக அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களாய் இருப்போமென்றால், நீங்கள் சொல்வதை விசுவாசிக்கிறவர்களாக, மட்டுமல்ல செயல்படுகிறவர்களாயும் இருப்போம். அதைப் போலத்தான் ஆண்டவர் சொல்கிறதைக் குறித்து நாம் விசுவாசிக்கிறவர்களாக மட்டுமல்ல அதற்குக் கீழ்ப்படிந்து செயல்படுகிறவர்களாக நாம் இருக்கவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். தேவன் அதை அவனுக்கு நீதியாக எண்ணினார். இப்பொழுது கர்த்தர் ஈசாக்கைப் பார்த்து, ஆபிரகாமைப் போல நீ விசுவாசித்து கீழ்ப்படிகிறவனாய் இருக்கவேண்டும் என்று சொல்லிக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்.

ஆதியாகமம் 26 : 6

இந்த கேரார் என்பது தென் பகுதியிலே இருக்கிறது. இந்தப் பகுதியின் தென் பகுதியிலே ஈசாக்கும் ஆபிரகாமும் வசித்திருக்கிறார்கள். ஆபிரகாம் இந்த தேசத்திற்குள்ளே வரும்போது வடக்கே சீகிம் வழியாக உள்ளே வந்தான். பின்னர் அந்த தேசத்தின் தென்பகுதியிலே எபிரோனின் தென்பகுதியிலே வசித்தான்.

ஆதியாகமம் 26 : 7

அருமையானவர்களே ஈசாக்கு தனது தகப்பனாரின் பாவத்தை திரும்பச் செய்கிறான். எகிப்துக்குப் போகாதே என்று தேவன் அவனை எச்சரித்தார்; அதனால் அவன் எகிப்திற்குப்

போகாமல் கேராரிலே போய் குடியேறினான். கேராரிலே மற்ற ஆண்கள் ரெபெக்காளை உற்று நோக்குவதை அவன் கவனித்திருக்கவேண்டும்.

எனவே, அவளிடத்தில் நீ என் மனைவி என்று சொல்லாதே; என்னை உன் சகோதரன் என்று சொல் என்று சொல்லிவைக்கிறான். ஆபிரகாமின் பாவத்திற்கும், ஈசாக்கின் பாவத்திற்கும் ஒரு வித்தியாசம் சொல்லவேண்டுமென்றால், ஆபிரகாம் சொன்னது அரைப் பொய்; ஈசாக்கு சொன்னது முழுப்பொய்.

ஆதியாகமம் 26 : 8

இரண்டுபேரும் உற்சாகத்தோடு சிரித்து, மகிழ்ந்து விளையாடிக்கொண்டிருக்கிற ஒரு காட்சியை அபிமெலேக்கு பார்க்கிறான். நடந்தது என்ன? பாருங்கள்.

ஆதியாகமம் 26 : 9, 10

இந்த மனிதர்கள் பாவம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை ஈசாக்கு ஏற்படுத்தினான் என்று சொல்லலாம். தொடர்ந்து அபிமெலேக்கு என்ன சொன்னான் பாருங்கள்,

ஆதியாகமம் 26 : 11

அபிமெலேக்கு ஈசாக்குக்கு நெருங்கிய ஒரு நண்பனாகிவிடுகிறான். ஆபிரகாம் அந்நிய மக்கள் மத்தியிலே மதிப்புப் பெற்றிருந்ததைப்போல் ஈசாக்கும் மதிப்பும் மரியாதையும் பெற்றவனாகிறான். தொடர்ந்து பாருங்கள்,

ஆதியாகமம் 26 : 12

கவனித்தீர்களா? கர்த்தர் அவனோடு இருந்தார். ஆபிரகாமை அழைத்தது முதல் தேவன் அவர்களுக்குக் கொடுத்த ஆசீர்வாதமான வாக்குத்தத்தம் அதுதான். பின்னான காலங்களிலே தேவன் அவர்களை அந்தத் தேசத்திலே வைக்கும் பொழுது, அவர்கள் கூடைகளையும், மாபிசையும் தொட்டிகளையும் ஆசீர்வதிப்பேன் என்று சொன்னார். அவர்கள் தேவனோடு வாழ்ந்த காலங்களிலே தேவன் இந்த ஆசீர்வாதத்தை அவனுடைய வாழ்க்கையிலே வாய்க்கப்பண்ணினார்.

அருமையானவர்களே, அந்த ஆசீர்வாதத்தை தேவன் நமக்குக் கொடுக்கவில்லை என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை தேவன் வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நமக்குத் தந்திருப்பதே இந்த காலத்திலே தேவன் நமக்குக் கொடுக்கிற ஆசீர்வாதம். அந்த ஆசீர்வாதத்திற்கான நிபந்தனையும் ஒன்றுதான். நாம் தேவனோடு வாழும்பொழுது நீங்கள் அனுமதிப்பீர்கள் என்றால் அபரிமிதமான ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை உங்களுக்குக் கொடுக்க அவர் ஆயத்தமுள்ளவராய் இருக்கிறார்.

இங்கே நாம் பார்க்கிறது போல தேவன் ஆபிரகாமை ஆசீர்வதிக்கிறார்.

ஆதியாகமம் 26 : 13

ஈசாக்கு மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்ற உண்மையை நாம் கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது. அவனுடைய வயல்கள் நூறத்தனையான பலனைக் கொடுத்தது. நம்மிலே

www.Radio882.com

சிலர், ஆபிரகாம் அபரிமிதமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தான், யாக்கோபு அபரிமிதமாக ஆசீர்வதிக்கப்பட்டான். ஆனால் ஈசாக்கு ஆசீர்வதிக்கப்படவில்லை என்று எண்ணலாம். இல்லை. அருமையானவர்களே, ஈசாக்கும் அபரிமிதமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தான்.

குறிப்பிடத்தக்க ஒரு காரியம் என்னவென்றால் ஈசாக்கு ஆபிரகாமோடு நெருக்கமாக கட்டப்பட்டவனாய் இருந்தான். ஆபிரகாமின் வாழ்க்கையிலே சந்தித்த அனுபவங்களும், ஈசாக்கின் பிறப்பும், ஈசாக்கின் வாழ்க்கையும் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டுத்தான் இருந்தது. ஈசாக்கு முக்கியமானவனாய் இருந்தாலும் பலிபீடத்திலே வைக்கப்பட்டான். அங்கேயும் ஈசாக்கையும் ஆபிரகாமையும்தான் நாம் சேர்த்து பார்க்கிறோம். இதெல்லாம் ஏன் இப்படி நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது? ஏற்கனவே நாம் பார்த்தது போல நமக்கு மாதிரியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிதாவாகிய தேவனுக்கும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் இடையிலான அந்த நெருக்கத்தை அது காண்பிக்கிறதாய் இருக்கிறது. யோவான் 14ஆம் அதிகாரம் 9ஆம் வசனத்தின் பின்பகுதியில் இயேசு என்ன சொன்னார்?

“என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்.”

அதுமட்டுமல்ல யோவான் 17 : 4 பாருங்கள். பின்பகுதி

“நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்.”

மேலும் யோவான் 5ஆம் அதிகாரம் 17ஆம் வசனம்,

“என்பிதா இதுவரைக்கும் கிரியை செய்துவருகிறார்; நானும் கிரியை செய்துவருகிறேன்.”

எனவேதான் ஆபிரகாமின் வாழ்க்கையும் ஈசாக்கின் வாழ்க்கையும் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டதாய் இருக்கிறது. இந்த அதிகாரத்திலே நாம் பார்ப்பது போல ஈசாக்கு தனது சொந்தக் காலிலே நிற்கிறான். இந்தக் காட்சிகள் அத்தனை கவர்ச்சிகரமானதாக இல்லை. ஆபிரகாமுடைய வாழ்க்கையிலே காணப்பட்ட அதே பாவம் இவனுடைய வாழ்க்கையிலேயும் காணப்பட்டது. என்றாலும் தேவனுடைய வார்த்தை அவன் மகா பெரியவனானான் என்றுத் தெளிவாய் சொல்கிறது.

ஆதியாகமம் 26 : 14

ஈசாக்கு ஆண்டவரிடத்திலே பெற்ற ஆசீர்வாதம், பெலிஸ்தியருடைய கண்களை உறுத்துகிறதாய் இருக்கிறது.

ஆதியாகமம் 26 : 15

ஆபிரகாம் வாழ்ந்த அந்த தேசத்திலே ஆபிரகாம் பல கிணறுகளைத் தோண்டியிருந்தான். இப்பொழுது அந்தக் கிணறுகள் அண்டை வரும்பொழுது அது ஈசாக்குக்குச் சொந்தமானதாகிறது. ஆனால் அவன் காலையிலே வெளியே போய்விட்டு மாலையிலே வந்து பார்த்தால் கிணறுகள் தூர்த்துப் போடப்பட்டிருந்தன. இது பெலிஸ்தியர்கள் செய்த காரியம் இந்த

www.Radio882.com

இடத்திலேதான் முதல் முறையாக பெலிஸ்தியர்களுடைய விரோதத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம்.

இந்த சம்பவங்களையெல்லாம் தொடர்ந்து தாவீதின் காலத்திலே அநேக யுத்தங்கள் நடைபெறுகிறதாய் இருந்தன.

ஆதியாகமம் 26 : 16

அந்தக் காலங்களிலே ஈசாக்கினுடைய முக்கியத்துவத்தைக் கவனித்தீர்களா? அவனால் அபிமெலேக்குக்கும் பிரச்சனைகள் வந்துவிடக்கூடாது என்று எண்ணினவனாக அபிமெலேக்கு அவனை அனுப்பிவிட சித்தமாகிறான்.

ஆதியாகமம் 26 : 17

ஈசாக்கின் மேலே அபிமெலேக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தான். இந்தப் பகுதியிலே அவன் வலிமை இழந்தவனைப் போலக் காணப்படுகிறான். ஆனால் உண்மையில் அப்படியில்லை. மீண்டுமாக தனது தகப்பனார் தங்கியிருந்த தேசத்திற்கு ஈசாக்கு திரும்ப வருகிறான்.

ஆதியாகமம் 26 : 18 – 20

அருமையானவர்களே, அங்கே நடைபெற்ற பிரச்சனைகளைக் குறித்து இங்கே பார்க்கிறோம். தண்ணீர் என்பது தேவனுடைய வார்த்தைக்கு அடையாளமானதாய் இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆழமாக தேவனுடைய வார்த்தையாகிய தண்ணீரை நாம் பருக வேண்டும். நம் தாகத்தை தணிப்பதற்கும், நம்மை சுத்தப்படுத்துவதற்கும் தண்ணீரை நாம் பயன்படுத்துகிறோம்.

அவர் பேசிய வார்த்தைகளினாலே நாம் சுத்தமாக்கப்பட்டு இருக்கிறோம் என்று இயேசு கூறுகிறார். நம்முடைய வாழ்க்கையிலே தண்ணீர் மிகவும் முக்கியமானது. தண்ணீரில்லாமல் நாம் வாழ முடியாது. பாலைவனமான பல இடங்களுக்கு மேலாக நாம் பறந்து செல்லும்பொழுது தண்ணீரே இல்லாத இடங்களை நாம் பார்க்கிறோம். ஆனால் ஒரே ஒரு இடத்திலே கொஞ்சம் பச்சைப்பசேல் என்று நமக்குத் தெரிகிறது; அங்கே என்ன நடைபெற்றது என்று நமக்கு ஆச்சரியமாய் இருக்கிறது.

தண்ணீர் மட்டுமே அந்தச் செழிப்பிற்கான விளக்கமாய் இருக்கிறது. எந்த ஒரு திருச்சபையிலேயும் தண்ணீரான கர்த்தருடைய வார்த்தையே மக்களுடைய வாழ்க்கையிலே வித்தியாசத்தைக் காண்பிக்கிறதாய் இருக்கிறது. வேதவசனங்களை படிக்கும் விசுவாசிகளுக்கும் வேதவசனங்களைப் படிக்காத விசுவாசிகளுக்கும் ஒரு வித்தியாசம் தெளிவாக காணப்படுகிறதாய் இருக்கிறது. அது ஒரு பெரிய வித்தியாசம். வேதவசனங்களைப் படிப்பதற்கு ஒரு போராட்டம் உண்டு. ஆனால் அதற்கான விலைக் கிரயத்தைச் செலுத்தும் பொழுது நாம் வேத வசனங்களைப் படிக்க முடியும்.

நீங்கள் வேதவசனத்தைப் படிப்பதைத் தவிர மற்ற எல்லா காரியங்களையும் செய்ய பிசாசானவன் உங்களை அனுமதிப்பான். ஆனால் வேத வசனங்களைத் தொடர்ச்சியாக

www.Radio882.com

கருத்தோடு நீங்கள் கற்றுக் கொள்வதைத் தடுக்க எல்லா முயற்சிகளையும் அவன் செய்வான்.

ஆதியாகமம் 26 : 21, 22

ரெகொபோத் என்றால் என்ன? கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார். இதற்கு முந்தைய காலம்வரை ஒரு துரவைத் தோண்டுவான்; அதை மற்றவர்கள் அவனிடத்திலிருந்து எடுத்துக்கொண்டார்கள். உடனே அங்கிருந்து அவன் வேறொரு இடத்திற்குச் செல்வான். மற்றுமொரு கிணறைத் தோண்டுவான் அதையும் எடுத்துக் கொண்டார்கள். இவ்வாறு அவன் தொடர்ந்து நகர்ந்து விலகிப் போய்க்கொண்டே இருந்தான். இந்த சம்பவம் நமக்கு எதை வெளிப்படுத்துகிறது? உண்மையாகவே ஈசாக்கு சமாதானத்தை விரும்புகிற, பொறுமை நிறைந்த ஒரு மனிதன் என்பதை வெளிப்படுத்துகிறது.

எனக்கருமையான சகோதரனே, அருமையான சகோதரியே, உலகத்திலே நாம் முயற்சி எடுத்து பெற்றுக்கொள்ளும் காரியங்களை மற்றவர்கள் எடுத்துக்கொள்ள முயற்சி செய்யும்பொழுதும் அதைக் குறித்து போராடாமல் இருக்க தேவன் எதிர்பார்க்கிறார். நாம் பொறுமையோடு இருக்கும்பொழுது நமக்கு தேவன் பெரிய காரியங்களைக் கொடுக்கிறவராய் இருக்கிறார்.

தாவீதினுடைய வாழ்க்கையிலே இப்படிப்பட்ட சம்பவம் நிகழ்ந்திருக்குமென்றால் அவன் அமைதியாய் இருந்திருக்கமாட்டான். சீமோன் பேதுருவினுடைய வாழ்க்கையிலே இது நடந்திருக்குமென்றாலும் அவன் அமைதியாய் விட்டுக்கொடுத்திருக்க மாட்டான். ஆனால் எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, உண்மை என்ன தெரியுமா? நாம் பொறுமையாய் இருக்கும்பொழுது நாம் விட்டுக்கொடுக்கும் பொழுது தேவன் நமக்கு அதைவிட சிறந்த காரியங்களைக் கொடுப்பார்.

மேலும் கூறவேண்டுமென்றால் வேத வசனங்ககளை நாம் வாஞ்சையோடு தேடும்பொழுது, அதைக் கற்றுக்கொள்வதற்கு எவ்வளவு தடைகள் வந்தாலும் அதற்காக நாம் சிறப்பான முயற்சி எடுக்கும்பொழுது, மற்ற காரியங்களை தியாகம் செய்து வேத வசனங்களுக்கு நம்முடைய வாழ்க்கையிலே நாம் இடம்கொடுக்கும் பொழுது அதினாலே நமக்குக் கிடைக்கிற ஆசீர்வாதம் மிகப்பெரியது.

இந்த அதிகாரத்தில் நாம் கற்றுக்கொண்ட சத்தியங்களை சற்றே நம் மனக்கண் முன்கொண்டுவருவோமா? ஆபிரகாமுடைய பாவம் அவனுடைய மகனைத் தொடர்ந்தது. தேவன் வேண்டாம் என்று சொல்கிற காரியத்தை நீங்கள் தேவனை விசுவாசியாமல் செய்வீர்களென்றால் அதேக் காரியங்களை உங்கள் பிள்ளைகளும் தேவனை விசுவாசியாமல் செயவ்வார்கள் என்பதை மறந்து போக வேண்டாம்.

விசுவாச வாழ்க்கையிலே நாம் நம் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாய் இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். ஒரு தகப்பனார் குடிப்பழக்கத்திற்கு அடிமையாய இருப்பாரென்று சொன்னால், மகனை குடிக்காதே என்று சொல்ல முடியாது. அல்லது ஒரு தகப்பனோ, தாயோ தொலைக்காட்சி பெட்டிகளுக்கும், தொடர் நிகழ்ச்சிகளுக்கும் அடிமைப்பட்டு கிடப்பார்கள் என்றால், பிள்ளைகளும் அப்படித்தான் இருப்பார்கள்.

www.Radio882.com

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, தேவனுக்குப் பிரியமில்லாத வகையிலே நீங்கள் நேரத்தையோ, பணத்தையோ, உங்கள் சரீர பெலத்தையோ செலவு செய்து கொண்டிருப்பீர்கள் என்றால், அதேப் பழக்க வழக்கங்கள் உங்கள் பிள்ளைகளையும் தொடரும் என்பதை உணர்ந்தவர்களாய் தேவனுடைய கரத்திலே உங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணிப்பீர்களா? ஈசாக்கைப் போல பொறுமையுள்ள ஒரு வாழ்க்கை வாழ நாம் தீர்மானிப்போமா?

ஆதியாகமம் 26 : 23, 24

இங்கே தேவன் ஈசாக்குக்குத் தரிசனமாகி, அவனை உற்சாகப்படுத்துகிறார். தேவன், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு இவர்களுக்கு தரிசனமாகியிருந்தார்; யோசேப்புக்கு தேவன் தரிசனமாகவில்லை.

ஆதியாகமம் 26 : 25

இங்கே மற்றுமொரு கிணறைத் தோண்டுகிறார்கள். ஈசாக்கு என்று எழுதினால் பக்கத்திலே நாம் ஒரு கிணறு படத்தை வரையலாம். ஆபிரகாம் என்று எழுதினால் பக்கத்தில் ஒரு பலிபீடத்தின் படத்தை வரையலாம். யாக்கோபு என்று எழுதினால் ஒரு கூடாரத்தின் படத்தை நாம் போடலாம். இதைக் குறித்தும் நாம் பின்னாலே பார்க்கப் போகிறோம்.

ஆதியாகமம் 26 : 26 – 33

கேராரின் மனிதர்களோடு உள்ள தொடர்பிலே ஈசாக்கு பெலவீனமானவனாகக் காணப்பட்டான். ஆனால் பெயெர்செபாவில், அங்கேயுள்ள அரசன் ஈசாக்கினிடத்திலே மெனெக்கெட்டு வந்து ஒரு உடன்படிக்கை பண்ணுகிறான். இதை நாம் பார்க்கும் பொழுது அந்த தேசத்திலே ஈசாக்கை ஒரு பெலவீனமான மனிதன் என்று சொல்லமுடியாது. அங்கே அவன் செல்வந்தனாகவும், பெரியவனாகவும் மற்றவர்களால் கருதப்பட்டான். காரணம் என்ன? கர்த்தர் அவனோடேகூட இருந்தார். யார் எந்தத் தொந்தரவு செய்தாலும் அதை நீடிய பொறுமையோடே சகித்துக் கொண்டான்.

ஆதியாகமம் 26 : 34, 35

இந்த அதிகாரத்திலே நாம் யாக்கோபுடைய உண்மையான நிறத்தைப் பார்க்கப் போகிறோம். அவனுடைய வாழ்க்கை எப்படி இருந்தது என்பதை விவரமாய் சிந்திக்கப் போகிறோம், இந்த அதிகாரத்திலே யாக்கோபும், ரெபெக்காளும் எப்படி தந்திரமாக ஏசாவுக்குரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதைப் பார்க்கப் போகிறோம்.

ஈசாக்கு ஏசாவுக்கு என்று வைத்திருந்த ஆசீர்வாதங்களை யாக்கோபு வாஞ்சித்தான். மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்று கர்த்தர் அவனது தாய்க்குக் கொடுத்திருந்த வாக்கை யாக்கோபு அறிந்தவனாய் இருந்தான். எனவே ஏற்கனவே அந்த ஆசீர்வாதங்களெல்லாம் அவனுக்குரியதுதான் என்றாலும் அவன் தேவனை விசுவாசிக்கவில்லை.

அவனுடைய தாய் ரெபெக்காளும் தேவனை விசுவாசிக்கவில்லை. அதுமட்டுமல்ல, தகப்பனாகிய ஈசாக்கும் அதை விசுவாசிக்கவில்லை. அப்படி விசுவாசித்திருப்பானென்றால்,

யாக்கோபை விட்டுவிட்டு ஏசாவை ஆசீர்வதிக்க அவனும் தீர்மானித்திருக்கமாட்டான். அவனுடைய உணர்வுகளையும் அவனுடைய பசியையும் அவன் பின்பற்றினானே ஒழிய, தேவனுடைய வார்த்தையைப் பொருட்படுத்தவில்லை.

குறிப்பாக, தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாய் செயல்பட்டான். அருமையானவர்களே, யாக்கோபு சேஷ்ட புத்திர பாகத்தைத் தந்திரமாக எடுத்துக்கொண்டது சரி என்று சொல்லமுடியாது. பொய்யையும் பித்தலாட்டத்தையும் பயன்படுத்திதான் அதைச் செய்தான்.

அது அவன் தவறான குணநலன் உள்ளவன் என்பதைக் காட்டுகிறது. ஆபிரகாமும் சாராளும் ஆகாரை மனைவியாக எடுத்துக்கொண்ட பொழுது, எப்படி தேவன் கடிந்து கொள்ளவில்லையோ அதுபோல, ஈசாக்கையும் கடிந்து கொள்ளவில்லை. தேவன் யாக்கோபுடைய தந்திரமான அந்த குணநலனை பயன்படுத்த முடியாது. ஏற்கனவே நீங்களும் நானும் அறிந்திருக்கிறது போல தேவன் ஒவ்வொரு மனிதருடைய வாழ்க்கையிலேயும் குறிப்பிட்ட விதத்திலே அவரே செயல்படுகிறவராய் இருக்கிறார். யாக்கோபு எப்படி ஏமாற்றினானோ அதைப்போலவே அதற்கான தண்டனையையும் அவன் அனுபவிக்கப் போகிறான். இதைக் குறித்தும் நாம் பின்னாலே பார்க்கப்போகிறோம்.

ஆதியாகமம் 26ஆம் அதிகாரம் ஏசாவுடைய வாழ்க்கையைக் குறித்து கூறப்பட்டு முடிவடைகிறது. அதாவது நாற்பது வயதாயிருக்கும் பொழுது இரண்டு ஏத்திய பெண்மணிகளை அவன் திருமணம் செய்தான். இது ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாய்தான் இருந்தது.

இப்பொழுதுதான் இந்த ஏத்தியப் பெண்ணையோ அல்லது பெலிஸ்தியர்களின் பெண்ணையோ இவன் திருமணம் செய்திருக்கக் கூடாது ஆரானிலே இவனுக்கு பெண் கொள்ளும்படியாய் இவன் அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்பதை யோசிக்கிறார்கள். ஏனென்றால் அங்கிருந்துதான் ஆபிரகாம் தன் மகனாகிய ஈசாக்குக்குப் பெண் எடுத்தான்.

தொடர்ந்து என்ன நடக்கிறது பாருங்கள்.

ஆதியாகமம் 27

ஆதியாகமம் 27 : 1 – 4

ஈசாக்கு ஒரு மிகப் பெரிய மனிதன் என்று நாம் பார்த்தோம். ஈசாக்குக்குப் பயந்ததினாலே அபிமெலேக்கும் பெலிஸ்தியர்களும் அவனிடத்திலே வந்து ஒப்பந்தம் பண்ணினார்கள், ஆணையிட்டுக் கொடுத்தார்கள் என்று நாம் வாசித்தோம். அவன் நீடிய பொறுமை உள்ளவனாகவும், சமாதானத்தை விரும்புகிறவனாகவும் காணப்பட்டாலும் முக்கியமாக, சக்தி வாய்ந்தவனாகக் காணப்பட்டான்; என்றாலும் இந்த இடத்திலே அவனுடைய சரீரப்பிரகாரமான பெலவீனத்தை அவன் வெளிப்படுத்துகிறான். ஈசாக்கினுடைய வாழ்நாளிலெல்லாம் ஏசா அவனுக்கு விருப்பமான மகனாய் இருந்திருக்கிறான். யாக்கோபுக்கோ அவனுடைய தாயாகிய ரெபெக்காள் அதிகமான அன்பு கொடுக்கிறவளாய் இருந்தாள். ஏசா வீட்டைவிட்டு வெளியே இருக்கிறவனாக, வேட்டையாடுகிறவனாக, மானோ; வேறு எந்த மிருகத்தையோ; வேட்டையாடி

கொண்டுவருகிறவனாய் இருந்தான். அதுமட்டுமல்ல சிறந்த முறையிலே வேட்டைக்கறி சமைக்கிறவனாகவும், தகப்பனார் அதை விரும்பி சாப்பிடுகிறவராயும் காணப்பட்டார்.

இப்பொழுது ஈசாக்கு மிகவும் வயது சென்றவனாகிவிட்டான். தனக்கு விருப்பமான மகனை ஆசீர்வதிக்க வேண்டும் என்று விரும்புகிறான். தேவன் ஏற்கனவே மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்று சொன்னது ஈசாக்குக்கும் நன்றாகத் தெரியும். ஆனாலும் அதைத்தாண்டி ஏசாவை ஆசீர்வதிக்க நினைத்தான். எனவே ஏசாவை அழைத்து வெளியே போய் தனக்கு வேட்டைக்கறி கொண்டுவந்து சமைத்துத் தரும்படி கேட்கிறான். அதற்குப் பிறகு, அவனை ஆசீர்வதிப்பேன் என்று அவன் கூறுகிறான்.

இந்த குடும்பத்தைக் குறித்த எல்லாக் காரியங்களையும் இந்தப் பகுதி நமக்குத் தெளிவாய்க் காட்டுகிறது. அருமையான சகோதரனே, சகோதரியே, ஒவ்வொரு குடும்பத்திலேயும் எழும்பிய பிரச்சனைகளை நீங்கள் கவனித்தீர்களா? ஆபிரகாமின் குடும்பத்திலே ஆகாரினாலே பிரச்சனை வந்தது. ஈசாக்கின் குடும்பத்திலே இந்த இரட்டைக் குழந்தைகளான ஏசா, யாக்கோபினாலே பிரச்சனைகளைப் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 27 : 5 – 8

கவனித்தீர்களா? ஈசாக்கு ஏசாவோடு பேசும்பொழுது ரெபெக்காள் அதை ஒட்டுக்கேட்டிருக்கிறாள். யாக்கோபு அவளுக்குப் பிரியமான மகன். எனவே ஒரு தந்திரமான திட்டம் தீட்டுகிறாள். இது தவறு. வேத புத்தகத்திலே இது கூறப்பட்டிருப்பதினாலே தேவன் இதை ஒத்துக் கொள்கிறார், இது சரியானது என்று சொல்லவே முடியாது. தேவன் சரித்திரத்தை நமக்கு எழுதிவைத்து இருக்கிறார். என்றாலும் தவறைத் தவறு என்று அவர் சொல்கிறார்.

இங்கே செய்யப்படுகிற காரியங்களை கவனித்துப் பார்த்தீர்களா? இங்கே செய்யப்படுகிற இதே காரியங்கள் யாக்கோபுக்கு மேலே பின்னர் ஒருமுறை செய்யப்படுகிறது. தொடர்ந்து ரெபெக்காள் என்ன சொல்கிறாள் பாருங்கள்.

ஆதியாகமம் 27 : 9 – 11

ஆம். ஏசா வீட்டைவிட்டு வெளியே எப்பொழுதும் செல்கிற ஒரு மனிதனாய் இருந்தாலும், சிவப்பானவனாய் இருந்தான், அதோடுகூட அவனுடைய சரீரமெல்லாம் ரோமம் நிறைந்ததாகவும் காணப்பட்டது.

ஆதியாகமம் 27 : 12

அருமையானவர்களே, யாக்கோபு இங்கே ஒரு எத்தனைப் போல, ஏமாற்றுகிறவனைப் போலக் காணப்படுகிறான் என்று சொல்ல முடியாது. அவன் உண்மையாகவே ஒரு எத்தன் தான். ஏமாற்றுக்காரன்தான்.

ஆதியாகமம் 27 : 13 – 17

இங்கே நாம் வாசிக்கிறது போல மிகத் தந்திரமாக ரோமமில்லாத தன் மகனாகிய யாக்கோபுக்கு ஆட்டுக்குட்டியின் ரோமம் உள்ள தோலைப் போர்த்துகிறாள். அதுமட்டுமல்ல ஏசாவினுடைய உடையை எடுத்து பயன்படுத்துகிறாள். ஏனென்றால் ஏசா அடிக்கடி வெளியே

செல்கிறவன்; வெயிலிலே அலைகிறவன்; அவனுடைய வியர்வை பட்ட உடைகள் அவனைப் போல காட்சியளிப்பதற்கு உதவியாய் இருக்கும் என்றுத் திட்டமிடுகிறாள்; செயல்படுகிறாள்.

ஆதியாகமம் 27 : 18 – 20

அருமையானவர்களே, மிக பயபக்தியாக ஆனால் மிகத் தவறான காரியத்தை யாக்கோபு செய்கிறான். இன்றைக்கும் பயபக்தியாக இருந்து அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசி மக்களை ஏமாற்றுகிறவர்கள் இருக்கிறார்கள். கர்த்தர் தங்களை வழிநடத்தினார் என்று சொல்வார்கள். கவனித்துப் பார்த்தால் அநேக வேளைகளிலே தேவன் அவர்களை வழக்கத்திற்கு மாறான காரியங்களைச் செய்ய வழிநடத்துவதுபோலக் காணப்படும்.

சில வேளைகளிலே சில கிறிஸ்துவை அறிந்தவர்களும் தாங்கள் எதுவும் செய்யலாம் என்று எண்ணிக்கொண்டு செயல்படுகிறார்கள். அதைக் குறித்துப் பயபக்தியோடு அவர்கள் ஜெபிப்பார்கள்; அதுவே தேவனுடைய சித்தம் என்றும் சொல்வார்கள்.

அருமையான சகோதரனே, சகோதரியே, நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஏமாற்றுகிற காரியங்களிலே எந்த விதமான தொடர்பும் இல்லாதவர். அவர் உண்மையுள்ளவர்; அவர் பரிசுத்தமுள்ளவர். உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் என்று கற்றுக் கொடுத்தவர். தவறான வழிகளிலே எந்த ஆதாயத்தை நாம் தேடினாலும் அது தவறுதான்.

அருமையான சகோதரனே, சகோதரியே, இந்த நாட்களிலே நாம் ஈடுபட்டிருக்கிற எந்த காரியத்திலாவது நாம் சட்டதிற்கு மாறான காரியங்களையோ; தேவனுக்கு விரோதமான காரியங்களையோ, செய்து கொண்டு இருப்போமென்று சொன்னால், அதைக் குறித்த உண்மையான காரியத்தை தேவனுடைய சமூகத்திலே அறிக்கையிட்டு, அதை விட்டு மனம்திரும்ப தேவன் நம்மை அழைக்கிறார்.

ஆதியாகமம் 27 : 21 – 27

அருமையானவர்களே, இப்பொழுது ஈசாக்கு செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் நாம் கவனித்துப்பார்த்தால், ஏதோ ஒரு சந்தேகம் அவனுடைய உள்ளத்திலே தட்டியிருக்கிறது என்பது நமக்குத் தெரிகிறது. என்றாலும் ஈசாக்கைக் குறித்து ரெபெக்காளுக்கு நன்றாகத் தெரியும், எனவே ஒவ்வொரு சின்ன காரியத்தையும் அவள் மிக கவனத்தோடு தந்திரமாகத் திட்டமிட்டுச் செயல்பட்டிருந்தாள்.

ஆதியாகமம் 27 : 28, 29

அருமையானவர்களே, ஈசாக்கு தான் பெற்றிருந்த ஆசீர்வாதங்களை இப்பொழுது தனது மகனுக்குக் கொடுக்கிறான். இங்கே ஆர்வம் தரக்கூடிய ஒரு காரியம் என்னவென்றால், அது ஏற்கனவே யாக்கோபுக்கு சொந்தமானதுதான். ஏனென்றால் தேவனாகிய கர்த்தர் அதைக் கூறிவிட்டார். ஏற்கனவே யாக்கோபை தேவன் ஆசீர்வதித்துவிட்டார்.

இப்பொழுது இங்கு நடைபெறுகிற ஏமாற்று வேலைகளை தேவன் அங்கீகரிக்கவும் இல்லை; அதன் மூலமாய் அவனுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கவும் இல்லை.

ஆதியாகமம் 27 : 30 – 33

ஒரு வேளை இதைக் கேட்கிற நீங்கள் வேட்டைக்கறிக்கும், சமைத்த ஆட்டுக்கறிக்கும் வித்தியாசம் தெரியாதா என்று கேட்கலாம். இதைக் குறித்த தனது அனுபவத்தை ஒரு போதகர் எழுதுகிறார். பல ஆண்டுகளுக்கு முன்னதாக வெளியே சென்று ஒரு மானை வேட்டையாடி வந்தார்கள். அவர்கள் திருச்சபையாக ஒரு ஐக்கிய விருந்தை ஏற்படுத்தினார்கள்.

அதிகமான எண்ணிக்கை இருந்தபடியினாலே இளம் ஆட்டையும் இந்தக் கறியோடு சேர்த்து சமைத்தார்கள். விருந்து மிகச் சிறப்பாக இருந்தது. ஐக்கிய நேரம் நன்றாக இருந்தது. யாருமே அந்த இரண்டு வகையான கறிகள் அங்கே சேர்க்கப்பட்டு இருக்கிறதென்பதைக் கண்டு கொள்ளவில்லை என்று எழுதுகிறார்.

ஆம். அருமையானவர்களே, வேட்டைக்கறியும் இளம் ஆட்டுக்குட்டியின் கறியும் ஒன்று போலவே இருக்கிறது. இப்பொழுது ஈசாக்கு தான் எப்படிப்பட்ட வலையிலே விழுந்துவிட்டான் என்பதை உணர்கிறான். தான் ஏமாற்றப்பட்டதை அவன் அறிந்து கொண்டான்.

ஆதியாகமம் 27 : 34 – 40

இவ்வாறு தன் சகோதரனால் ஏமாற்றப்பட்ட ஏசா சிந்திக்க ஆரம்பிக்கிறான்.

ஆதியாகமம் 27 : 41

ஏசாவின் எண்ணம் என்ன? தகப்பனாருக்கு வயதாகிவிட்டது. இனி அதிக காலம் வாழமாட்டார். சீக்கிரமாக அவர் மரித்துப் போவார். அப்பொழுது யாக்கோபை நான் கொன்று போடுவேன் என்று திட்டமிடுகிறான். இது அவனுடைய இருதயத்தின் எண்ணமாய் இருந்தாலும், இதைக் குறித்து அவன் மற்றவர்களிடத்திலேயும் பேசுகிறான்.

ஆதியாகமம் 27 : 42, 43

இங்கே மீண்டுமாக ரெபெக்காள் காரியங்களைத் தனது கரத்திலே எடுத்துச் செயல்பட ஆரம்பிக்கிறாள். என் மகனாகிய யாக்கோபே, நீ வீட்டைவிட்டுப் போய்விட வேண்டும், என்று சொல்கிறாள். இங்கே அவள் செய்கிற பாவத்திற்கான தண்டனையை அவள் அனுபவிக்க வேண்டும் என்பதை அவள் எண்ணிப்பார்க்கவில்லை.

அருமையானவர்களே தொடர்ந்து நாம் வாசிக்கிற பகுதியிலே அறிந்திருக்கிறபடி அதற்குப் பின் தன் மகனாகிய யாக்கோபை அவள் சந்திக்கவேயில்லை. அவள் சொல்லும் பொழுது கொஞ்ச காலம் போய்வா என்பது போல சொல்லுகிறாள். ஆனால் அவன் திரும்ப வருமுன்னதாக அவள் மரித்துவிடுகிறாள்.

ரெபெக்காளுக்கு விருப்பமான மகன் யாக்கோபு என்பதை நாம் அறிந்திருக்கிறோம். தனது சகோதரனாகிய லாபானுடைய வீட்டிற்குத் தன் மகனை அனுப்புகிறாள். அங்கே தான் யாக்கோபு தனது வாழ்க்கையிலே படிக்க வேண்டிய பாடங்களைப் படிக்கப் போகிறான். யாக்கோபுடைய மாமாவாகிய லாபான் அதை அவனுக்குக் கற்றுக் கொடுக்கப் போகிறான்.

யாக்கோபு தான் மிகுந்த திறமையானவன் என்று நினைத்தான். ஆனால் அவனுடைய மாமா அவனைவிட திறமையானவன் என்பதை அறிந்துகொள்ளப் போகிறான். அப்படி நெருக்கப்படும் பொழுதுதான் அவன் தேவனை நோக்கி கதறப் போகிறான்.

ஆதியாகமம் 27 : 44, 45

கவனித்தீர்களா? சில நாட்களுக்காகத்தான் நான் உன்னை அனுப்புகிறேன் என்று சொல்கிறாள். சில நாட்கள் என்பது இருபது வருடங்கள் ஆனது. இந்த இடைப்பட்ட காலத்திலே அவள் மரித்துப் போய்விட்டாள். மீண்டுமாக தனது விருப்பமான மகனை அவள் காணவேயில்லை.

அந்த சூழ்நிலையை சற்றே எண்ணிப்பாருங்கள். நடந்த எல்லாக் காரியங்களையும் அறிந்த ஏசா தனது தாயை அதற்குப்பின் கவனித்திருக்கமாட்டான்; அவளோடு பேசியிருக்கமாட்டான்; ஏற்கனவே அவனுடைய மனைவிகளும் அவளுக்கு நோவு உண்டாக்கினார்கள்; என்று நாம் வாசித்தோம்.

ஆதியாகமம் 27 : 46

தேவனை அறியாத பெண்களை ஏசா திருமணம் செய்தான். எனவே அதனால் ரெபெக்காள் ஏற்கனவே வீட்டிலே பிரச்சனையை அனுபவித்துவிட்டாள். யாக்கோபும் இங்கே தங்கியிருந்தால் அவனும் இங்கே உள்ள பெண்ணை திருமணம் செய்வான். எனவே இந்த சூழ்நிலையை பயன்படுத்தி ஏசாவிடத்திலிருந்து காக்கும்படியாக ஈசாக்கினிடத்திலே அனுமதி பெற்று யாக்கோபை தன் சகோதரன் வீட்டிற்கு அனுப்பத் தீர்மானித்தாள். உண்மையாகவே யாக்கோபு இங்கே தங்கியிருப்பான் என்றால், ஏசா அவனைக் கொலைசெய்ய முயற்சித்து இருப்பான். ஆனால் நடந்தது என்ன? ரெபெக்காள் முதலாவது மரித்தாள்; தகப்பனாகிய ஈசாக்கினுடைய அடக்கத்திற்கு முன்னதாக யாக்கோபு திரும்ப வந்து விடுகிறான்.

ஆனால் தன்னை அதிகமாய் நேசித்த தன் தாயை அதற்குப்பின் அவன் பார்க்கவில்லை. அருமையான சகோதரனே, சகோதரியே தேவன் ஏற்கனவே யாக்கோபை ஆசீர்வதிப்பேன் என்று வாக்குக்கொடுத்த பின்னரும் அதை விசுவாசியாமல் ரெபெக்காளும், யாக்கோபும் தந்திரங்களைக் கையாண்டார்கள். உங்களுக்கு ஆண்டவர் வாக்குத்தத்தம் எதையாவது கொடுத்திருப்பாரென்றால் ஏற்ற வேளையிலே தேவன் அதைச் செய்யும்படியாக, அவருடைய பலத்த கரத்திற்குள்ளே ஸ்தோத்திரத்தோடு காத்திருக்க உங்களை அர்ப்பணிப்பீர்களா?

ஆதியாகமம் 27ஆம் அதிகாரத்திலே யாக்கோபு தனது சகோதரனை ஏமாற்றுகிறான். தாயின் உதவியோடு சகோதரனை ஏமாற்றி சேஷ்ட புத்திர பாகத்தையும் தகப்பனாருடைய ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டான் என்று நாம் சிந்தித்தோம். இன்று சிலர் தங்கள் தாய் சிறுவயதிலே தங்களை நேசிக்கவில்லை. எனவே இப்படிப்பட்ட கீழ்த்தரமான காரியத்தை செய்கிறான் என்று சொல்வார்கள்.

ஆனால் அருமையானவர்களே, யாக்கோபு அப்படிச் சொல்லமுடியாது. யாக்கோபு தாயால் அதிகமாக நேசிக்கப்பட்டு கெடுக்கப்பட்ட பையன் என்று கூட சொல்லலாம். தவறான ஒரு காரியத்தைச் செய்யும் படியாய் தூண்டியபொழுது அதை அவன் செய்தான். சேஷ்ட புத்திர பாகத்தை எடுத்துக் கொண்டான். உண்மையாகவே தகப்பனாருடைய ஆசீர்வாதம் அவனுக்குத் தேவையில்லை. ஆபிரகாம் ஈசாக்குக்கு எந்த ஆசீர்வாதத்தையும் கொடுக்கவில்லை. தேவன் அதை கொடுத்தார். அதுபோலத்தான் யாக்கோபுக்கும் ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார்.

யாக்கோபுடைய ஏமாற்றுவேலை தேவையற்றது மட்டுமல்ல. இதைக்குறித்து தேவன் அவனோடு செயல்படப் போகிறார். சகோதர விரோத சூழ்நிலையிலே செய்ய வேண்டிய காரியத்தை ரெபெக்காள் திட்டம் பண்ணுகிறாள். ஏசாவினுடைய பகையிலிருந்து யாக்கோபைக் காத்துக் கொள்ளும்படியாக யாக்கோபை அனுப்பிவிட வேண்டும் என்று ஈசாக்கிடம் அவள் சொல்லவில்லை.

தன்னுடைய குடும்பத்தண்டைப் போய் அவனுக்கென்று ஒரு பெண்ணைக் கொள்ளுவதற்காக அனுப்புவது போல ஈசாக்கினிடத்திலே கூறுகிறாள். ஆதியாகமம் 28ஆம் அதிகாரத்திலே யாக்கோபு வீட்டைவிட்டு புறப்பட்டுப் போவதை நாம் பார்க்கிறோம். பெத்தேல் என்னும் இடத்திலே தேவன் யாக்கோபுக்கு தரிசனமாகிறார். தரிசனமாகி ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீண்டுமாய் உறுதிப்படுத்துகிறார்.

ஆதியாகமம் 28

ஆதியாகமம் 28 : 1

பழைய ஏற்பாடு முழுவதிலுமே தேவபக்தி உள்ளவர்கள், தேவனை அறியாதவர்களை திருமணம் செய்யக்கூடாது என்பதைக் குறித்து மீண்டும் மீண்டும் தேவன் வலியுறுத்துகிறார். எனவேதான் ஆதியாகமம் 6ஆம் அதிகாரத்திலே தேவகுமாரர் மனு குமாரத்திகளை சௌந்தரியமுள்ளவர்கள் என்று கண்டு தங்களுக்கு பெண்களைத் தெரிந்து கொண்டார்கள் என்று வாசிக்கிறோம்.

அதாவது தேவபயம் உள்ளவர்கள் காயீனின் வம்சத்திலே பெண் எடுத்தார்கள், இதன் விளைவாகவே இறுதியிலே தேவன் பெருவெள்ளத்தை அனுப்பி நியாயம்தீர்த்தார். ஒரே ஒரு நீதிமான் காக்கப்பட்டான். தேவபயம் உள்ள ஒருவர் தேவனை அறியாத தேவனை நேசிக்காத ஒருவரோடு திருமணம் செய்யும்பொழுது, இறுதியாக கடவுளற்ற நிலைமைக்குச் சென்றுவிடுகிறார்கள்.

அருமையானவர்களே இதை ஒரு எச்சரிப்பாகவே நான் கூறுகிறேன். நாம் வாழும் இந்த நாட்களிலே வயதான போதகரிடத்திலிருந்து இளைஞர்கள் ஆலோசனையைப் பெற்றுக்கொள்கிறதில்லை.

இந்தக் குடும்ப உறவுகளைக் குறித்து இன்று அநேக போதகர்கள் அதிகமாக கற்றிருக்கிறார்கள். அநேகக் குடும்பங்களை கவனித்திருக்கிறார்கள். பல குடும்பங்கள் முழுவதுமாய் தேவனைவிட்டு தூரமாகத்தான் சென்றிருக்கின்றன. ஒரு இளைஞனோ, ஒரு பெண்ணோ தாங்கள் திருமணம் செய்து கொள்வதற்கான சரியான ஒரு நபரை சந்தித்துவிட்டோம் என்று சொல்வார்கள். ஆனால் அவர்கள் கிறிஸ்துவை அறியாதவர்களாய் இருப்பார்கள். இருந்தாலும் தாங்கள் சந்தித்த அதே நபரைத் திருமணம் செய்வார்கள்.

ஏனென்றால் திருமணத்திற்குப் பின்னர் எப்படியாவது நான் ஆண்டவருக்குள்ளே வழிநடத்திவிடுவேன் என்று சொல்வார்கள். எனக்கருமையான சகோதரனே, சகோதரியே, திருமணத்திற்கு முன்னால் அவர்களை கிறிஸ்துவை அறியும் அறிவுக்குள்ளாக நீங்கள் நடத்தவில்லையென்றால், திருமணத்திற்குப் பின்னும் அவர்களை நடத்தமுடியாது. ஒருவேளை

www.Radio882.com

இந்தக் திருமணத்திற்காக மாய்மாலமாக நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறேன் என்று உங்களை ஏமாற்றி, அவர்கள் வரலாம். ஆனால் திருமணத்திற்குப் பின் நான் ஆத்தும ஆதாயம் செய்வேன் என்று சொல்வது அறியாமையே. தேவனுடைய பிள்ளைகள் தேவனை அறியாதவர்களோடுத் திருமண உறவிலே இணைக்கப்படக்கூடாது என்று தேவன் சொல்லியிருக்கிறார். என்ன ஆனாலும் இறுதியில் துக்கத்திலேதான் அப்படிப்பட்ட திருமணங்கள் போய் முடியும். அதற்கு சாட்சியாக நூற்றுக்கணக்கான குடும்பங்களை நாம் பார்க்கிறோம்.

நீங்கள் ஒரு விசுவாசியாக இருந்து, ஒரு அவிசுவாசக் குடும்பத்துடன் திருமண உறவு கொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டிருப்பீர்கள் என்றால், இன்றே அதை நீங்கள் கைவிட்டுவிடுவது நல்லது. 2 கொரிந்தியர் 6ஆம் அதிகாரம் 14 ஆம் வசனத்தைப் பாருங்கள்.

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?"

தேவன் இதைத் திட்டமும் தெளிவுமாய் வெறுக்கிறார்.

ஆதியாகமம் 28 : 2 - 4

இப்பொழுதுதான் யாக்கோபு ஆபிரகாமின் ஆசீர்வாதத்தை தேவன் தனக்குத் தந்திருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளுகிறான். ஆபிரகாமுக்குக் கொடுத்த ஆசீர்வாதத்தை யாக்கோபுக்கு தேவன் கொடுத்திருக்கிறார்.

ஆபிரகாமின் இந்த குடும்பத்திற்கு நாம் கொடுக்கக்கூடிய பெயர் சீரியர்கள் என்பதுதான். ஆபிரகாம் முதலாவது வாழ்ந்த இடத்திலே வாழ்ந்த மக்களுக்கு வேத வசனம் இந்தப் பெயரைத்தான் சொல்கிறது. சில வேளைகளிலே ஆபிரகாம் ஒரு யூதனா என்ற கேள்வி நமக்கு வருகிறது. அவன் ஒரு இஸ்ரவேலனா? என்ற கேள்வி எழும்புகிறது. இல்லை உண்மையாக இல்லை.

யாக்கோபினுடைய பெயர் இஸ்ரவேல் என்று மாற்றப்படும் வரை எந்த ஒரு இஸ்ரவேலனும் இல்லை. யாக்கோபின் 12 குமாரர்கள் இஸ்ரவேலர்கள். இந்த சந்ததி ஆபிரகாமிலிருந்து வருகிறது. ஆபிரகாமே இந்த சந்ததிக்குத் தகப்பன். ஆபிரகாமை மீதியானியன் என்று நாம் அழைக்க முடியாது. ஆனாலும் மீதியானியர்களுக்கு ஆபிரகாமே தகப்பன்.

ஆதியாகமம் 28 : 6 - 9

இஸ்மவேலின் சந்ததியைக் குறித்து நாம் தொடர்ச்சியாகப் பார்க்கப் போவதில்லை. அவ்வப்பொழுது இஸ்மவேலின் சந்ததியை நாம் பார்ப்போம் என்று ஏற்கனவே கூறியது உங்களுக்கு ஞாபகத்திலே இருக்கலாம். இங்கே நாம் வாசிக்கக் கேட்டது போல ஏசா, இஸ்மவேலின் குமாரத்திகளிலேயும் ஒரு பெண்ணை விவாகம் செய்கிறான்.

இது அவனுடைய தகப்பனாரை மகிழ்ச்சிப்படுத்தும் என்று நினைத்தான். அவனுக்கு இருந்த ஆவிக்குரிய அறிவு எவ்வளவு குறைவானதாய் இருந்தது என்பதை கவனித்தீர்களா? இஸ்மவேலர்கள் கானானியர்களை போல, பெலிஸ்தியர்களைப் போல புறக்கணிக்கப்பட்ட வம்சத்தினர் என்பதை அவன் அறியவில்லை.

www.Radio882.com

ஆதியாகமம் 28 : 10, 11

பிரயாணப்பட்டு வருகிற யாக்கோபு தங்கிய இடத்தின் பெயர்தான், பெத்தேல். அது தேவனுடைய வீடு எனப்படும். இந்த பெத்தேல் எருசலேமிலிருந்து 12 மைல் தூரம் வடக்கே இருக்கிறது. யாக்கோபு விட்டுவந்த அவனுடைய வீடு 25 லிருந்து 35 மைல் எருசலேமிற்கு தெற்கே இருக்கிறது. கிட்டத்தட்ட முதல் நாளிலேயே 40 மைல் தூரம் யாக்கோபு கடந்து சென்றுவிட்டான். ஏன் இவ்வளவு வேகமாகச் செல்கிறான்? ஏசாவின் கைக்குத் தப்பிப்போய்க் கொண்டிருக்கிறான். அவனைவிட்டு எவ்வளவு சீக்கிரமாக எவ்வளவு தொலைவு செல்லமுடியுமோ, அவ்வளவு வேகமாக செல்கிறான். ஏசாவை விட்டு எவ்வளவு தூரமாகச் செல்கிறானோ, அவ்வளவு தூரமாய் தன்னுடைய வீட்டை விட்டே அவன் போகிறான்.

அருமையானவர்களே அன்று இரவிலே அவன் என்ன நினைத்திருப்பான் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? மிகவும் ஒரு தனிமையை உணர்ந்திருப்பான் இல்லையா? நிச்சயமாய் அப்படித்தான் உணர்ந்திருப்பான். வீட்டு எண்ணமே அவனைச் சுற்றி சுற்றி வந்திருக்கும். வேத வசனங்களிலே எழுதப்பட்டிருக்கிறதின்படி யாக்கோபு வீட்டை விட்டு தூரமாய்ப் போகும் முதல் நாள், முதல் இரவு அதுதான்.

நீங்கள் உங்கள் வீட்டைவிட்டு வெளியிடத்திலே முதன்முறையாக தங்கவேண்டிய சூழ்நிலை வந்தது, உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கிறதா? முதன்முறையாக நீங்கள் வீட்டைவிட்டு ஒருவேளை ஒரு மைல் தூரம் போயிருந்தாலும், அது ஐந்து மைல் தொலைவு போல தெரிந்திருக்கும்.

இப்பொழுது நீங்கள் அதே இடத்திற்கு செல்வீர்கள் என்றால் இவ்வளவு பக்கத்தில் இருக்கிறதா என்று நீங்கள் நினைப்பீர்கள். முதல் முறையாக கல்லூரிப் படிப்பிற்காக வீட்டைவிட்டுப் போன நீங்கள் அந்த இரவிலே எப்படி உங்கள் வீட்டைக்குறித்து சிந்தித்தீர்கள் என்பதை சற்றே எண்ணிப்பாருங்கள். அதே போலத்தான் யாக்கோபும் அந்த இரவிலே வீட்டின் எண்ணத்தோடு படுத்துக் கொண்டிருந்திருப்பான்.

முதல் முறையாக ரெபெக்காளைவிட்டுத் தனியாக அவன் புறப்பட்டுப் போகிறான். இங்கே என்ன நடக்கிறது பாருங்கள், அங்கேயிருந்த கற்களிலே ஒன்றை எடுத்து தலையனையாக வைத்துப் படுத்துக்கொள்கிறான். பெத்தேல் என்கிற இந்த இடம் பாறைகளால் நிறைந்த ஒரு இடம். கடல் மட்டத்தைவிட 1200 அடி உயரமான ஒரு இடம். அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கையிலே உன்னதமான ஒரு இடம் இது என்று சொல்லலாம்.

ஆதியாகமம் 28 : 12, 13

யாக்கோபு அந்த இரவிலே அந்த சொப்பனத்தைப் பெற்றுக்கொள்கிறான். ஆபிரகாமுக்கு தேவன் இந்த கானானுக்குள் வந்த பிறகு முதன்முறையாக தரிசனமாகும் பொழுதும் இரவிலேதான் தரிசனமானார்.

ஆதியாகமம் 28 : 14

அருமையானவர்களே, முதன்முறையாக தேவன் ஆபிரகாமுக்கு எதைக் கொடுத்தாரோ, அதே காரியத்தைத் தான் இப்பொழுது யாக்கோபுக்கும் கொடுக்கிறார். இதை ஈசாக்கினிடத்திலே

www.Radio882.com

அவர் கூறியிருக்கிறார். மீண்டுமாக யாக்கோபினிடத்திலே உறுதிப்படுத்துகிறார். தான் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிச்சயமாக நிறைவேற்றுவேன் என்பதைக் கூறுகிறார்.

ஆதியாகமம் 28 : 15

ஒரு நெருக்கடியான ஒரு சூழ்நிலையிலே வீட்டைவிட்டுத் துரிதமாக வெளியே வந்து, தனித்து தனிமை உணர்வோடு படுத்திருக்கும் யாக்கோபுக்கு, இது மிகவும் ஆறுதலான ஒரு செய்தியாக இருந்தது. தூரமான தேசத்திற்கு அவன் போய்க்கொண்டிருக்கிறான். அந்தப் பிரயாணத்தின் முதல் இரவிலேயே யாக்கோபே நான் உன்னோடே இருந்து நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து இந்த தேசத்திற்கு உன்னைத் திரும்பிவரப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்கிறார்.

நாம் ஏற்கனவே வாசித்தது போல அங்கே அவன் கண்ட சொப்பனம் என்ன? ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது. அதன் நுனி வானத்தை எட்டியிருந்தது. அதிலே தூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள். இந்த ஏணியின் பொருள் என்ன? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாத்தான்வேலை அழைக்கும்பொழுது இதை விளக்கிச் சொல்கிறார். யோவான் முதலாம் அதிகாரம் 45 முதல் 51 வசனங்களிலே இதை நாம் பார்க்கலாம். இயேசு கிறிஸ்துவைக் குறித்து நாத்தான்வேல் கேள்விப்பட்டபொழுது மிகவும் வேடிக்கையாக நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா என்று கேட்டான்.

இயேசு கிறிஸ்து இவனோடு கூட இடைபட்டார். அவனைக் குறித்து அவனிடத்திலேயே இயேசு கிறிஸ்து கூறியபொழுது நீர் என்னை எப்படி அறிவீர் என்று கேட்டான். அதற்கு இயேசு என்னச் சொன்னார் ஞாபகமிருக்கிறதா? பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே நீ அத்திமரத்தின் கீழ் இருக்கும்பொழுது உன்னைக் கண்டேன் என்றார். உடனடியாக நாத்தான்வேல் நீர் தேவனுடைய குமாரன் நீர் இஸ்ரவேலின் இராஜா என்றான்.

ஆரம்பத்திலே வித்தியாசமானவனாகக் காணப்பட்டாலும் இயேசு கிறிஸ்து அவனைக் குறித்து சொன்னவுடனே அவர் தேவனுடைய குமாரன் என்பதை அறிந்துகொள்கிறான். யோவான் முதலாம் அதிகாரம் 50, 51 ஆம் வசனங்களைப் பாருங்கள்.

"இயேசு அவனுக்குப் பிரதியுத்திரமாக: அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்; இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார்.

பின்னும் அவர் அவனை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."

அருமையானவர்களே, இந்த ஏணி என்ன? இயேசு கிறிஸ்துதான் அந்த ஏணி. தேவதூதர்கள் அங்கே அவருக்குப் பணிவிடை செய்கிறார்கள். அவருடைய கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்படிகிறார்கள். அந்த ஏணியின் மேல்பக்கத்திலிருந்து இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லப்படப்போகிற சத்தத்தை நாத்தான்வேல் கேட்கப் போகிறான்.

www.Radio882.com

இன்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாகத்தான் தேவன் மனுக்குலத்தோடு பேசிக் கொண்டிருக்கிறார். நாம் பிதாவாகிய தேவனிடத்தில் நேரடியாக வரமுடியாது. நாம் பிதாவாகிய தேவனிடத்திலே நேரடியாக வரமுடியாது. நாம் தேவனை கிறிஸ்துவின் மூலமாகவே அறிந்து கொள்கிறோம். கிறிஸ்துவின் மூலமாகவே தேவனண்டை கிட்டிச் சேர்கிறோம். யோவான் 14ஆம் அதிகாரம் 6ஆம் வசனத்திலே

“நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.” என்று இயேசு கூறியிருக்கிறார். ஆம். இயேசு கிறிஸ்துவே அந்த ஏணி. நாம் அவர் மேலே ஏறக்கூடிய ஏணியல்ல. அவரை நம்பக்கூடிய ஒரு ஏணி. இந்த சத்தியமானது முதலாவதாக யாக்கோபுக்குதான் கொடுக்கப்பட்டது. நாத்தான்வேலிடத்திலே இயேசு கிறிஸ்து சொல்லும் பொழுதும் இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார். ஆனால் அது யாக்கோபு அல்ல. நாத்தான்வேல் வேடிக்கையாகப் பேசுகிறான். ஆனால் அவன் யாக்கோபைப் போல ஒரு தந்திரக்காரன் அல்ல. ஆனால் இந்த மனிதனாகிய யாக்கோபு தேவன் செயல்படப்போகும் ஒரு மனிதன். தேவன் அவனுக்கு இந்த அருமையான வாக்குத்தத்தத்தைக் கொடுத்துவிட்டார். ஆனால் யாக்கோபு இன்னமும் கற்றுக் கொள்ள வேண்டியதிருக்கிறது.

எனக்கருமையான சகோதரனே, சகோதரியே, நம்முடைய வாழ்க்கையும் அப்படித்தானே இருக்கிறது. தேவன் நமக்கு இன்னும் அநேகக் காரியங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டியதிருக்கிறது. தேவன், தாம் நேசிக்கிற தம்முடைய ஒவ்வொரு பிள்ளைகளையும் சிட்சிக்கிறார், கண்டிக்கிறார். ஆபிரகாமுடைய வாழ்க்கையிலே அதை செய்தார். ஈசாக்குடைய வாழ்க்கையிலே அவர் செய்தார். இப்பொழுது அவர் யாக்கோபினுடைய வாழ்க்கையிலேயும் அதைச் செய்யப்போகிறார்.

இவ்வளவு நேரம் வரை யாக்கோபு என்னவெல்லாம் நினைத்தானோ, அதெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒரு ஊழியர் இதைக் குறித்துச் சொல்லும்பொழுது, அவருடைய திருச்சபையிலே இருந்த ஒரு கணவனும் மனைவியும் ஒரு குறிப்பிட்ட நேரம்வரை தங்கள் இஷ்டம் போல இருந்ததாகவும் மாய்மாலக்காரர்களாக இருந்ததாகவும், அவர்கள் குடும்பத்திலே இரண்டு வயது மகன் மரித்த பின்னர்தான். அவர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தனிப்பட்ட முறையிலே தங்கள் இரட்சகராகக் கண்டு கொண்டார்கள், என்று எழுதிவைத்திருக்கிறார்.

ஆம். இன்றும் அநேக கிறிஸ்தவர்கள் தேவனோடு தனிப்பட்ட எந்த உறவும் இல்லாதவர்களாக சடங்காச்சார கிறிஸ்தவர்களாக இருப்பதை நாம் பார்க்கக்கூடும். சிலருடைய வாழ்க்கையிலே ஆண்டவர் அவர்களை உலுக்கிய பின்னர்தான் உண்மையாகவே அவர்கள் தேவனண்டை வருவார்கள். நம்மை தேவன் ஒழுக்கப்படுத்த வேண்டியதும் கண்டிக்க வேண்டியதும் அவசியமாய் இருக்கிறது.

யாக்கோபு இன்னும் அநேக ஆண்டுகளாக அநேக காரியங்களை கற்றுக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறான்.

www.Radio882.com

ஆதியாகமம் 28 : 16, 17

அருமையானவர்களே, கவனித்தீர்களா இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாய் இருக்கிறது. சில ஊழியர்கள் ஆலய பிரதிஷ்டை நேரத்திலே இந்த வசனத்தை பயன்படுத்துவார்கள். ஆம். பிரியமானவர்களே யாக்கோபைப் போல பாவத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற மனிதர்களுக்கு அது பயங்கரமான இடம். தேவனை விட்டு தூரம் ஓட விரும்புகிறவர்களுக்கு அது பயங்கரமான இடம். அதே வேளையிலே தேவனை சந்திக்க வாஞ்சையுள்ள பாவிகளுக்கு அது சந்தோமான ஒரு இடம். தேவனோடு முகத்திற்கு முகம் அவர்கள் சந்திக்கும் இடம்.

யாக்கோபு அவனுடைய வீட்டைவிட்டு ஓடும்பொழுது தேவனைக் குறித்து குறைந்த அறிவுள்ளவனாய் இருந்தான். வீட்டைவிட்டு தூரமாக ஓடும்பொழுது தேவனை விட்டும் தூரமாக நான் ஓடுகிறேன் என்று எண்ணினான். ஆனால் தேவனை பின்னாலே அவன் வீட்டிலே விட்டுவிட்டு வரவில்லை, என்பதைக் கண்டுகொள்கிறான்.

எனவேதான் இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல என்று சொல்கிறான்.

ஆதியாகமம் 28 : 18, 19

அருமையானவர்களே யாக்கோபை சற்றே கவனியுங்கள். யாக்கோபு கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்கள் அதிகமாய் இருந்தன. அதற்கு ஒரு வெளிப்படையான அடையாளத்தைக் கவனியுங்கள்.

ஆதியாகமம் 28 : 20, 21.

இங்கே அவன் என்ன செய்கிறான்? தேவனோடு ஒரு வியாபாரம் செய்ய முயற்சி செய்கிறான். ஆண்டவரே நீர் எனக்கு இதையெல்லாம் செய்தீர் என்றால் நீர் என்னுடைய தேவனாய் இருப்பீர் என்று அவரோடு வியாபாரம் பண்ணுகிறான். ஏற்கனவே தேவன், நான் உன்னோடே இருந்து நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து இந்த தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப் பண்ணுவேன், நான் உனக்குச் சொன்னதை செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்று கூறியிருக்கிறார். ஆனாலும் தேவனிடத்திலே திரும்பி அவன் வியாபாரம் செய்ய முயற்சிக்கிறான்.

ஆண்டவரே இதை நீர் செய்வீரென்றால் நீர் எனக்கு தேவனாய் இருப்பீர் என்கிறான். தேவன் நம்மோடு கூட வியாபாரம் செய்ய விரும்புகிறதில்லை. யாக்கோபோடும் கூட அவர் வியாபாரம் செய்ய விரும்புகிறதில்லை. அப்படி தேவன் செய்வாரென்று சொன்னால் அவன் மீண்டுமாக திரும்ப அந்த தேசத்திற்கு வந்து சேர்ந்திருக்க மாட்டான். தம்முடைய கிருபையினாலும் தம்முடைய இரக்கத்தினாலுமே தேவன் யாக்கோபை மீண்டுமாய் தன் தேசத்திற்கு திரும்பிவரப் பண்ணினார். ஆனால் மீண்டுமாக அவன் பெத்தேலுக்குத் திரும்ப வரும்பொழுது ஞானவானாகத் திரும்ப வருகிறான். எதற்காக அவன் பெத்தேலுக்குத் திரும்ப வந்தான். தெரியுமா? தேவனுடைய இரக்கத்திற்காகவும் அவருடைய கிருபைக்காகவும் தேவனைத் தொழுதுகொள்வதற்காக வந்தான். அத்தனை ஆண்டுகாலமாக தொடர்ந்து தேவன் அவன் மேல் இரக்கமுள்ளவராய் இருந்தார். இன்றும் அநேகர் தேவனிடத்தில் கூறுவதென்ன?

www.Radio882.com

ஆண்டவரே! நீர் எனக்காக இதை இதையெல்லாம் செய்வீரென்றால் நான் உம்மைச் சேவிப்பேன் என்று சொல்லுவார்கள்.

இப்படிப்பட்ட எந்த வியாபாரப் பேச்சையும் தேவனோடு நீங்கள் பேசவேண்டாம். அவர் உங்களுக்கு இரக்கத்தையும் கிருபையையும் அதிகம் அதிகமாய் தந்துகொண்டிருக்கிறார். இன்னமும் அவர் தருவார். நீங்கள் உண்மையாகவே அவரை நேசிப்பீர்கள் என்று சொன்னால், உண்மையாகவே அவருக்குச் சேவை செய்ய, அவரைப் பணிந்து கொள்ள விரும்புவீர்கள் என்று சொன்னால், அன்பின் அடையாளமாக அவரே உங்களுக்கு கிருபையையும் இரக்கத்தையும் தருவார்.

ஒரு சிறு குழந்தையின் மேலே ஒரு தாய் எப்படி கிருபையும் இரக்கமும் உள்ளவளாய் இருப்பாளோ, அதேபோல தேவன் உங்கள் மேலும் இரக்கமும் கிருபையும் உள்ளவராய் இருப்பார்.

ஆதியாகமம் 28 : 22

ஆம். தன் தலையின் கீழ் வைத்திருந்த அந்தக் கல்லை எடுத்து, அதைக் தூணாக நிறுத்தி, அதின்மேல் எண்ணெய் வார்த்து இந்தக்கல் தேவனுக்கு வீடாகும் என்று சொல்கிறான். மீண்டுமாக தேவனிடத்தில் நீர் எல்லாவற்றையும் எனக்குச் செய்தால் நான் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லி பொருத்தனை பண்ணுகிறான்.

இன்றும் நம்மில் அநேகர், ஆண்டவரே நீர் எனக்கு இதைச் செய்தால் அதற்கு நான் இவ்வளவு ரூபாய் காணிக்கைக் கொடுப்பேன் என்று தேவனிடத்திலே பேரம் பேசுகிறோம். அருமையானவர்களே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேலே நீங்கள் விசுவாசம் வைப்பதின் மூலமாக பிதாவாகிய தேவனின் பிள்ளைகளாக வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

இந்த அதிகாரத்திலே நாம் கற்றுக் கொள்கிற பாடம் என்ன? நீங்கள் தேவனைவிட்டு தூரமாய் ஓட முடியாது. யாக்கோபு வீட்டைவிட்டு ஓடினான். ஆனால் தேவன் அவனோடேயே சென்றார் என்பதை அவன் கண்டுகொள்கிறான். அவன் தனித்துப் படுத்திருந்த பொழுது தேவன் அவனுக்குத் தரிசனமாகி அவனுடைய வாழ்க்கையிலே செய்யப்போகிற காரியங்களைக் குறித்து வாக்குக்கொடுத்தார்.

இன்றைக்கும் நீங்கள் வீட்டைவிட்டு எங்கோ ஒரு இடத்திலே தூரமாகப் போய் தனித்து நீங்கள் படுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், அங்கேயும் உங்கள் தேவன் உங்களோடு இருக்கிறார் என்பதை மறந்துபோக வேண்டாம். உங்களுக்கு இன்று ஏற்கனவே தேவன் வாக்குப்பண்ணின ஆசீர்வாதங்களை நிச்சயமாக அவர் உங்களுக்குத் தருவார் என்பதில் சந்தேகமே இல்லை. நீங்கள் விசுவாசத்தில் குறைந்து போனதினாலே உங்களுக்கு அவர் வாக்குப்பண்ணியதைக் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறவர் அல்ல. அவர் உங்களோடு இருந்து நீங்கள் போகிற இடத்திலெல்லாம் உங்களைக் காத்து உங்களைத் திரும்பிவரப்பண்ணுவார்.

ஏனென்றால் அவர் சொன்னதைச் செய்யாமல் இருப்பவர் அல்ல. யாக்கோபு தேவனோடு வியாபாரம் பேசியது போல நம்மிலே ஒருவரும் வியாபாரம் பேசாமல் இருக்க வேண்டும்.

www.Radio882.com

ஆண்டவரே நீர் இதை இதையெல்லாம் எனக்குச் செய்தால் நான் இதை இதையெல்லாம் உமக்குச் செய்வேன் என்று சொல்லாமல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மிலே அன்புள்ளவராய், ஏற்கனவே நமக்காக நம்முடைய ஜீவனையே கொடுத்தவர் என்பதை விசுவாசித்து, உள்ளத்தின் ஆழத்திலிருந்து நம்முடைய அன்பை மட்டும் நாம் அவருக்கு வெளிப்படுத்திக் கொண்டே இருப்போமென்று சொன்னால், நம்முடைய வாழ்க்கையிலே அவர் வைத்திருக்கிற திட்டங்களையும் நோக்கங்களையும் அவருடைய நாம மகிமைக்காக அந்தந்தக் காலக்கட்டங்களிலே நிறைவேற்றுவார்.

அவர் பொய்சொல்ல மனிதனல்ல. தாம் சொன்னதை நிச்சயமாய் செய்வார். ஆண்டவரிடத்திலே இதையெல்லாம் எனக்குச் செய்தால் நான் இதைத் தருவேன் என்று சொல்வதைவிட ஆண்டவரே என்னையே உமக்குக் கொடுக்கிறேன். எனக்கு நீர் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களை நான் உமக்கும், உம்முடைய ஊழியத்திற்கும், உம்முடைய திருச்சபைக்கும் கொடுக்கிறேன், நீரே தொடர்ந்து என்னை வழிநடத்தும் என்ற விசுவாசத்தோடு நம்மையும் நமக்குள்ளதையும் கர்த்தருக்கு நாம் கொடுக்கும்பொழுது ஆண்டவர் அதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறவராய் நம்மை நித்தமும் அவர் வழிநடத்த ஆவலுள்ளவராய் இருக்கிறார்.

ஆதியாகமம் 29

இந்த அதிகாரத்திற்கு தலைப்பு வாக்கியமாக கலாத்தியர் 6ஆம் அதிகாரம் 7,8 வசனங்களை எழுத விரும்புகிறேன்.

“மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.”

இந்த அதிகாரத்தின் ஆரம்பத்திலே தான் செய்த தவறுகளுக்கானத் தண்டனையை யாக்கோபு அனுபவிக்கத் துவங்குவதைப் பார்க்கிறோம். கலாத்தியர் நிருபத்திலே நாம் வாசித்த வசனங்கள் கிறிஸ்தவர்களுக்காகவே எழுதப்பட்டு இருக்கிறது. ஆனாலும் எல்லா காலக்கட்டத்திலும் அதை ஒரு உலகச் சட்டமாக தேவன் கொடுப்பதாகவும் நாம் புரிந்து கொள்ளலாம். வாழ்க்கையின் எந்தப் பகுதியிலேயும் அந்த வசனம் உண்மையானதாய் இருக்கிறது. மனுஷன் எதை விதைப்பானோ, அதையே அறுப்பான். நெல்லை விதைத்தால் நெல்லை அறுப்போம். பஞ்சை விதைத்தால் பஞ்சை அறுப்போம். இந்த வசனத்திற்கான உதாரணங்கள் வேதத்தின் பல பகுதிகளிலே நாம் காணக்கூடியதாய் இருக்கிறது.

உதாரணமாக பார்வோன் எபிரேயர்களின் ஆண் குழந்தைகளைக் கொலை செய்தான். ஆனால் வேளை ஒன்று வந்தது. சங்காரத்தூதன் பார்வோனின் மகனையும் கொன்றான். தவறான குற்றச்சாட்டினாலே ஆகாப் நாபோத்தின் தோட்டத்தை எடுத்துக் கொள்வதற்காக அவனைக் கொலை செய்தான். அவனுடைய இரத்தத்தை நாய்கள் நக்கினது.

தேவன் எலியா தீர்க்கதரிசியை ஆகாபினிடத்திலே அனுப்பினார். நாபோத்தின் இரத்தத்தை நாய்கள் நக்கினது. அதைப்போல ஆகாபே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும்

என்றார். அது அப்படியே நிறைவேறியது. தாவீதுடைய வாழ்க்கையிலேயும் இதே காரியம் நடைபெற்றதை நாம் அறிந்திருக்கிறோம். விபச்சாரம் செய்தான்; உரியாவைக் கொலை செய்தான். தேவன் அவனுடைய பாவத்தை மன்னித்தார். என்றாலும் தாவீது எதை விதைத்தானோ அதை அறுத்தான்.

தாவீதினுடைய குமாரத்தி கற்பழிக்கப்பட்டாள். அதுமட்டுமல்ல, அவனுடைய மகன் கொலைசெய்யப்பட்டான். தேவனுடைய இந்த சட்டத்தின் முக்கியத்துவத்தை அப்போஸ்தல னாகிய பரிசுத்த பவுலும் உணர்ந்தவராய் இருந்தார். ஸ்தேவான் கல்லெறியப்படுவதற்கு சவுல் சம்மதித்திருந்தார். பின்னான காலங்களிலே லீஸ்திராப் பட்டணங்களிலே ஊழியத்திற்குச் சென்ற பொழுது பவுலையும் கல்லெறிந்து செத்தவர் போல ஊருக்கு வெளியேப் போட்டுவிட்டார்கள்.

யாக்கோபுடைய வாழ்க்கையிலேயும் இந்த விதியானது மிகச் சரியாகச் செயல்படுவதை நாம் பார்க்க முடியும். தந்திரமாகச் சூழ்ச்சி செய்து காரியங்களைப் பெற்றுக்கொண்டவன், மாயையைத் தனது வாழ்க்கையிலே பழக்கப்படுத்தியிருந்தவன், தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக எந்தத் தவறானக் காரியத்தையும் துணிந்து செய்கிறவன், அவனது தந்திரத்தைக் குறித்து ஒருவேளை அவன் பெருமைப்பட்டு இருக்கலாம். இருந்தாலும் யாக்கோபுவும் தான் எதை விதைத்தானோ அதையே அறுத்தான்.

இந்த ஆதியாகமம் 29ஆம் அதிகாரத்திற்கு நாம் வரும்பொழுது யாக்கோபு பெத்தேலை விட்டு வந்து ஆரானிலே வந்து சேர்கிறான்.

ஆதியாகமம் 29 : 1 – 3

அந்த நாட்டிலே தண்ணீருக்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவத்தை நாம் இங்குப் பார்க்கிறோம். இன்றைக்கும் தண்ணீர் மிக முக்கியமான அடிப்படையான ஒரு பொருள். ஏனென்றால் தண்ணீர் தட்டுப்பாடு இன்னும் பல இடங்களிலே இருக்கிறது. எனவே அது பாதுகாக்கப்பட வேண்டும். அது சுத்தமாகக் காக்கப்பட வேண்டும்.

இதற்காகத்தான் பகல்வேளையிலே கிணறானது மூடிவைக்கப்பட்டதாய் இருந்தது. ஆட்டுமந்தைக்கும் மனிதர்களுக்கும் தேவைப்பட்டபொழுது தண்ணீர் எடுத்துக் கொள்ளப்பட்டது. மீண்டுமாகக் கிணறு மூடிவைக்கப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு காட்சியின் சூழ்நிலையிலே யாக்கோபு அங்கே போய் சேருகிறான். கிணற்றின் மேலே வைக்கப்பட்டு இருந்த கல்லானது அகற்றப்படவில்லை. பாருங்கள் என்ன சொல்கிறான்,

ஆதியாகமம் 29 : 4, 5

அங்கே நின்ற மேய்ப்பருக்கு லாபானைத் தெரியும், ஆனால் யாக்கோபுக்கு லாபானைக் குறித்துத் தெரியாது. லாபான் யார் என்பதை இனிதான் காணப்போகிறான்.

ஆதியாகமம் 29 : 6, 7

கவனித்தீர்களா? முதல் முறையாக புதிய ஒரு இடத்திற்கு வருகிறான். இப்படி வந்து கொண்டு அவர்கள் எப்பொழுது ஆட்டிற்குத் தண்ணீர் காட்ட வேண்டும்; எப்பொழுது அதை மேய விடவேண்டும் என்று சொல்லிக்கொடுக்கிறான். இது அவனுடைய குணத்தை மேலும் நமக்கு வெளிப்படுத்துகிறது.

www.Radio882.com

ஆதியாகமம் 29 : 8

யாக்கோபு தனது தகப்பன் வீட்டிலே அவர்களுக்கென்று வைக்கப்பட்டிருந்த துரவுகளிலே தண்ணீர் காட்டி ஆடுகளைத் திரும்பத்திரும்ப மேய விடுவதை கவனித்திருக்கலாம். ஆனால் இங்கே பெரிய ஒரு ஊரிலே அநேகருடைய மந்தைகள் இருப்பதினாலே அவர்களுடைய பழக்கம் அறியாதவனாய் இருந்தான். சரியான சூழ்நிலையை, சரியானபடி அறிந்து கொள்ளாமல் அவசரப்பட்டுப் பேசுவது யாக்கோபுடைய அறிவீனத்தை வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது.

நம்முடைய வாழ்க்கையிலேயும் எந்த ஒரு காரியத்தையும் பரிபூரணமாய் அறிந்துகொள்ளாமல் பேச முற்படுவோமென்றால் நமக்கிருக்கிற கொஞ்ச அறிவைக் கொண்டுதான் நாம் அந்த சூழ்நிலையை மதிப்பிடுவோமே ஒழிய நம்முடைய மதிப்பீடு சரியான மதிப்பீடாய் இருக்காது. தொடர்ந்து அங்கே என்ன நடக்கிறது பாருங்கள்,

ஆதியாகமம் 29 : 9

ராகேல் ஆடு மேய்க்கிற ஒரு பெண்மணி. இந்த நாட்களைப் போல அந்த நாட்களிலேயும் பெண்கள் ஆடுகளை மேய்க்கச் சென்றிருக்கிறார்கள்.

ஆதியாகமம் 29 : 10

லாபானின் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டவேண்டும் என்று அவனுக்கு யார் சொன்னார்களோ தெரியவில்லை. ஆனால் அந்த ஆடுகளைக் கண்டவுடனே, மாமாவின் மகளைக் கண்டவுடனே, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுகிறான். நன்றாக கவனித்துப் பார்த்தீர்கள் என்றால் யாருடைய சட்டத்திட்டங்களையும் அல்ல, தன்னுடைய சொந்த சட்டத்திட்டங்களுக்குக் கீழ்ப்படிகிறவனாய் இருந்தான். யாக்கோபுடைய வாழ்க்கையிலே அவனே சட்டத்திட்டங்களை ஏற்படுத்திக் கொள்கிறான். இது அவனுடைய வாழ்க்கையின் முதல் பகுதி. யாக்கோபு இன்னமும் அநேக பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. அவனுக்குப் பாடம் கற்றுக் கொடுத்ததிலே ஒருவர் அவனுடைய மாமா லாபான்.

ஆதியாகமம் 29 : 11

இந்த வசனம் ஒரு வினோதமான வசனமாகவேத் தெரிகிறது. மாமாவின் மகளை முத்தம் செய்கிறவன் ஏன் அழவேண்டும்? ஒருவேளை இவன் வீட்டைவிட்டு மிக நெடுந்தொலைவு பயணம் செய்து வந்திருக்கிறான்; தன்னந்தனியாக வந்திருக்கிறான்; இதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். பெத்தேலிலிருந்து அவன் புறப்பட்டு கலிலேயா கடல்வரை வந்து மீண்டுமாக சிரியாவுக்கு அவன் வந்து சேரவேண்டும். வழியிலே அதிகமான பாலைவனமானப் பகுதி உண்டு. எல்லாவற்றையும் தாண்டி வந்திருக்கிறான். வழியிலே அவன் பல அனுபவங்களைப் பெற்றிருந்திருக்கலாம். வந்தவுடனேயே அவன் கண்ட மனிதர்களிடத்திலே மிகச் சாதாரணமாகப் பலநாள் பழகியவனைப்போலப் பேசுகிறான். அவர்களிடத்தில் பல கேள்விகளைக் கேட்கிறான். யாரும் எதுவும் கூறாமல் மாமாவின் ஆடுகள் வந்தபொழுது கிணற்றின் கல்லைப் புரட்டித் தண்ணீர் காட்டுகிறான். எனவே, அவன் மாமாவின் மகளை முத்தம் செய்து வாழ்த்தியப் பொழுது, தன் குடும்பத்தில் ஒரு அங்கத்தினரைக் கண்ட அந்த உணர்ச்சிப் பெருக்கில் அவன் அழுதிருக்கலாம்.

இது ஒன்றே இந்தப் பகுதிக்கு நாம் கொடுக்கக்கூடிய விளக்கம்.

www.Radio882.com

ஆதியாகமம் 29 : 12

மூல மொழியிலே இந்த வசனம் எப்படி இருக்கிறதென்றால் அவள் தகப்பனுடைய சகோதரன் என்று கூறுவதாக இருக்கிறது. ஆங்கில மொழி பெயர்ப்பிலே அவ்வாறு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஏனென்றால் அந்நாட்களிலே இந்நாட்களைப் போல உறவு முறைகளைக் கூறுகிறதில்லை. எப்படிப்பட்ட உறறவினராய் இருந்தாலும் அவனுடைய சகோதரர் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழர் கலாச்சாரத்திலே மாமன், மருமகன் என்ற உறவுகளெல்லாம் ஏற்கனவே இருந்தபடியினாலே அந்த சரியான உறவை சொல்லும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்திலே her father's brother என்று கூறப்பட்டுள்ளது.

ஆதியாகமம் 29 : 13

தன் காரியங்களை எல்லாம் விவரமாய்ச் சொன்னான் என்று வாசிக்கிறோம். லாபானிடம் சொல்வதற்கு அநேகக் காரியங்கள் யாக்கோபின் மனதிலே இருந்தது. இரவிலே அவனோடு விருந்து உட்கொள்ளும்போது எல்லாரும் மிக ஆர்வத்தோடு கேட்கத்தக்கதாக எப்படி தனது சகோதரனுடைய சேஷ்ட புத்திரபாகத்தைத் தந்திரமாய் தான் எடுத்துக்கொண்டேன் என்பதைக் குறித்தும், தகப்பனாருடைய ஆசீர்வாதங்களையும் எப்படி தந்திரமாகத் திறமையாகப் பெற்றுக்கொண்டேன் என்பதையும் அவன் கூறியிருப்பான். அதுமட்டுமல்ல முதல் இரவிலே தனியாக அவன் படுத்திருந்தபொழுது பெத்தேலிலே என்ன நடைபெற்றது என்பதையும் அவன் நிச்சயமாய் அறிவித்திருப்பான்.

நம்மிலே சிலர் இவ்வாறு நம்முடைய வாழ்க்கையின் அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கிறவர்களாய் இருக்கிறோம். யாக்கோபும் அவ்வாறு தன் மனதில் உள்ள எல்லாக் காரியங்களையும், தன் வாழ்க்கையிலே நடந்த எல்லா காரியங்களையும் தன்னுடைய முதல் சந்திப்பிலேயே லாபானிடம் விவரமாக எடுத்துச் சொல்கிறான்.

ஆதியாகமம் 29 : 14

யாக்கோபு சொன்ன எல்லா காரியங்களையும் கேட்டவுடனே தனது சகோதரியின் மகன்தான் என்பதைக் குறித்து உறுதி வந்தது. எனவே நீ இங்கே தங்கியிரு என்று சந்தோத்தோடு தனது வீட்டிலே அவனை ஏற்றுக் கொண்டான். சுமார் ஒரு மாத காலம் ஆகிவிட்டது. அங்கே என்ன நடைபெற்றது என்பதை சற்றே கவனியுங்கள். யாக்கோபு அந்தக் குடும்பத்தில் ஒருவனாக வேலைகளிலே ஈடுபட்டிருக்கிறான். தூர இடத்திலிருந்து மாமா வீட்டிற்கு வந்தவன், வெறுமனே உட்கார்ந்து சாப்பிட்டுத் தூங்காமல் குடும்பத்திலே மற்றவர்கள் வேலை செய்கிற வேலைகளிலே தானாகவே ஈடுபாடு கொள்ள ஆரம்பித்தான். சிலருக்கு அது இயற்கையாகவே வருகிறது. உறவினர்களுடைய வீட்டிலேயோ, நண்பர்களுடைய வீட்டிலேயோ போய் தங்கி இருக்கும் பொழுது அவர்கள் சொல்லாமலேயே அவர்களுடைய வீடுகளை சுத்தம் செய்வதிலேயோ, தண்ணீர் எடுத்துக் கொடுப்பதிலேயோ, தானாக உதவி செய்வார்கள்.

ஆனால் சிலருடைய வாழ்க்கையிலே அந்த பழக்கமில்லாமல் வீணாக தங்கள் நேரத்தைக் கழித்துக் கொண்டும் இருப்பார்கள். யாக்கோபுவின் இந்த குணத்தை நாம் பாராட்ட வேண்டும். யாக்கோபு மாமாவின் வீட்டிலே அவர்களுடைய வேலைகளிலே ஈடுபாடு கொண்டது

www.Radio882.com

மட்டுமல்ல ராகேலின் பேரிலே பிரியப்பட்டான் என்றும் வாசிக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே ஒருவேளை ஒருநாள் காலையிலே காலை உணவிற்காக எல்லாரும் உட்கார்ந்திருக்கும்பொழுது லாபான் தனது சகோதரியின் மகனிடத்திலே பேச ஆரம்பிக்கிறான்.

ஆதியாகமம் 29 : 15

லாபான் தந்திரமுள்ளவன். வேலையைக் குறித்து யாருமே எந்த வார்த்தையும் சொல்லவில்லை, குறிப்பாக யாக்கோபு அதைக் குறித்துப் பேசவில்லை, இருந்தாலும் லாபான் தந்திரமாக நீ எனக்கு சும்மா வேலை செய்ய வேண்டாம்; உனக்கு நான் சம்பளம் தருகிறேன் என்று கூறுகிறான். தங்குவதற்கும் சாப்பிடுவதற்கும் ஏதாவது பதிலுக்குப் பெற்றுக் கொள்ளாமல் லாபான் யாரையும் தங்கவிடுவது இல்லை போலும்.

இப்பொழுது தனது மருமகனோடேயே ஒரு வியாபார நோக்கமான பேச்சு பேசுகிறான்.

ஆதியாகமம் 29 : 16

இந்த வசனத்திலே தான் முதன்முறையாக நாம் லேயாளைக் குறித்து வாசிக்கிறோம். யாக்கோபு தனது இளைய மகளான ராகேலோடு நன்றாகப் பேசுவதையும் அவள் மேல் அவனுக்கு விருப்பம் இருப்பது போல் நடந்து கொள்வதையும் லாபான் கவனித்திருக்க வேண்டும்.

மூத்தவள் லேயாள்; இரண்டாவது குமாரத்திதான் ராகேல்.

ஆதியாகமம் 29 : 17

இந்த வசனத்திலே நாம் பார்ப்பது போல ராகேல் மிக அழகான ஒரு பெண்மணியாய் இருந்திருக்கிறாள். லேயாள் கூச்சப்பார்வை உள்ளவளாய் இருந்தாள் என்று சொல்லும்பொழுது அவள் அழகானவளாக இல்லை என்று வேறு வார்த்தைகளிலே கூறப்பட்டிருக்கிறது.

ஆதியாகமம் 29 : 18

ராகேலைக் குறித்த எண்ணம் யாக்கோபினுடைய மனதிலே இருந்திருக்கிறது. எனவே அந்தக் காலை உணவு நேரத்திலே யாக்கோபு ஏதாவது வேலை செய்ய வேண்டும் என்று சொல்லும்பொழுது ஏற்கனவே ராகேலின் காரியம் அவனுடைய மனதிலே இருந்திருக்கிறது.

இப்படி அவன் இருப்பது லாபானுக்கும் தெரியும். எனவே யாக்கோபு இவ்வாறு பதில் கூறியதினாலே லாபான் அதிர்ச்சி அடைந்திருக்க மாட்டான். எனவே யாக்கோபு ராகேலைத் திருமணம் செய்து கொள்வதற்காக ஏழு ஆண்டுகள் லாபானுக்கு வேலை செய்கிறேன் என்று சொல்கிறான். லாபானின் தந்திரமான பதிலைப் பாருங்கள்.

ஆதியாகமம் 29 : 19

ஏற்கனவே இதை யாக்கோபு கேட்பான் என்பதை அறிந்திருக்க லாபான் உடனடியாக அந்தப் பேரத்தை ஏற்றுக் கொள்ளுகிறான். நாம் வாசிக்கப் போகிற அடுத்த வசனம் யாக்கோபைக் குறித்த ஒரு அழகான காரியத்தைச் சொல்லுகிறது. யாக்கோபினுடைய இளமைப் பருவம் அது. எனவே ராகேலுக்காக எதையுமே செய்ய அவன் ஆயத்தமுள்ளவனாய் இருக்கிறான்.

www.Radio882.com

ஆதியாகமம் 29 : 20

சற்றே எண்ணிப்பாருங்கள். லாபான் சொன்ன எல்லா வேலையையும் எந்த மாறுத்தரவும் சொல்லாமல் யாக்கோபு செய்து கொண்டிருக்கிறான். கடினமாக உழைக்கிறான். வெளியே குளிரிலே போய் உழைக்கிறான். வெயிலிலே உழைக்கிறான். பகல் முழுவதும் கடினமாய் வேலை செய்துவிட்டு மாலையிலே தான் அவளை அவன் சந்திப்பான். அத்தனை அதிகமாக அவன் அவளை நேசித்தான். எனவே அந்த ஏழு வருடங்கள் அவனுக்குக் கொஞ்ச நாட்களாகத் தெரிந்தது.

நம்முடைய வாழ்க்கையிலேயும் கூட இப்படிப்பட்ட அன்பினாலே கடினமான உழைப்பு, கடினமான உழைப்பாய்த் தெரியாத காலங்களை நாம் கவனித்திருக்கலாம். பிள்ளைகள் மேலே வைத்திருக்கிற அன்பினாலே, எத்தனை பெற்றோர் இரவு பகல் என்று பாராமல், கடினமாக உழைக்கிறார்கள்.

ஆதியாகமம் 29 : 21, 22

இப்பொழுது கவனியுங்கள் லாபான் என்ன செய்கிறான்.

ஆதியாகமம் 29 : 23 – 26

அந்நாட்களிலே திருமண வைபவங்களிலே பெண்களுடைய முகம் மூடப்பட்டிருக்கும். அவள் யாரென்று வெளியிலிருந்து பார்த்து அடையாளம் கண்டுகொள்ள முடியாத அளவு அவளுடைய முகம் மறைக்கப்பட்டிருக்கும். தனக்குக் கொடுக்கப்பட்ட பெண் யார் என்பதை அடுத்த நாள் காலைவரை அவன் கண்டுகொள்ளவில்லை. அது ராகேல் அல்ல. லேயாளாய் இருந்தாள். அந்த நேரத்திலேயே தான் ஏமாற்றப்பட்டுவிட்டேன் என்பதை அவன் முதல் முறையாக உணருகிறான்.

ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஏசாவைப் போல நாடகமாடியது ஒருவேளை அவனுக்கு நினைவிலே வந்திருக்கலாம். யாக்கோபு தகப்பனாரை ஏமாற்றினான். இந்த காரணத்திற்காகவே அவனுடைய தாய் தகப்பனாரை விட்டு அவன் வரவேண்டியதிருந்தது.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, இப்படிப்பட்ட ஏமாற்று வேலைகளை தேவன் ஏற்றுக்கொள்கிறவர் அல்ல. மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான். ஏழு ஆண்டுகளுக்கு முன்னதாக இளையவனான யாக்கோபு மூத்தவன் என்று சொல்லி ஏமாற்றினான். இங்கே இளையவள் என்று எண்ணி மூத்தவளை அவன் பெற்றுக்கொள்கிறான்.

யாக்கோபைப் பொருத்தமட்டிலேயும் லாபான் ஏதோ பெரிய ஒரு தவறு செய்துவிட்டது போல எண்ணியிருப்பான். ஆனால் லாபான் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவே இல்லை. இப்படிப்பட்ட காரியங்களிலே அவன் மிகவும் சிறந்தவன் போலும். அநேக ஒப்பந்தங்களிலே சிறிய எழுத்திலே குறிப்பு என்று சொல்லி சில காரியங்கள் போடப்பட்டிருக்கும். அதை அநேக நேரத்திலே மனிதர்கள் பார்க்கிறதில்லை. ஒப்பந்தத்திலே பிரச்சனைகள் ஏற்படும்பொழுதுதான் அது அவர்களுடைய கண்களுக்குச் சுட்டிக்காட்டப்படும்.

இங்கு என்ன சொல்லுகிறான்? மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது இவ்விடத்து வழக்கம் அல்ல என்று கூறிவிட்டான்.

www.Radio882.com

ஆதியாகமம் 29 : 27

கவனித்தீர்களா? லாபான் நல்ல ஒரு வியாபாரியாய் செயல்படுகிறான். பாவம் யாக்கோபு. அவன் படிக்க வேண்டிய பாடத்தைப் படித்துக் கொள்ளுகிறான். அதுமட்டுமல்ல யாக்கோபு பெரிய ஒரு தவறுக்குள்ளேயும் ஆளாகிறான். இரண்டு மனைவிகளை அவன் சேர்த்துக் கொண்டிருக்கவேக் கூடாது.

இதனால் அவனுக்குப் பிரச்சனைகள் பல வரும் என்பது அவனுக்குத் தெரியவில்லை.

ஆதியாகமம் 29 : 28

கவனித்தீர்களா? முதலாவது யாக்கோபு ஒத்துக்கொண்டதுபோல இரண்டு மடங்கு காலம், அதாவது, 14 வருடங்கள் தனக்காக வேலை செய்யும்படியாக வைத்துவிட்டான். ஒரு பெண்ணுக்காக ஏழு ஆண்டு வேலை செய்வதென்பதே நீண்ட காலம். ஆனால் இவன் 14 ஆண்டுகள் வேலை செய்தான். இவ்வாறு செயல்பட்டதினாலே இரண்டு மனைவிகளைப் பெற்றுக் கொண்டவனாக மாறிவிட்டான்.

அருமையானவர்களே இது வேத புத்தகத்திலே எழுதப்பட்டிருப்பதினாலே பலதார மணத்தை தேவன் ஏற்றுக் கொள்கிறார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. பிசாசானவன் பொய் சொன்னதை தேவன் ஏற்றுக் கொள்ளவில்லை.

தாவீது பாவம் செய்ததை தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்காக தேவன் அவனைத் தண்டித்தார். இத்தகைய நிகழ்ச்சிகள் எல்லாமே வேதபுத்தகத்திலே எழுதப்பட்டு இருக்கிறது. ஆம். யாக்கோபு இரண்டு பெண்களுக்குக் கணவனானான். இது எப்படி நடந்தது எனபதைத் தான் நாம் கவனித்தோம்.

இந்த நேரத்திலும் யாக்கோபு அவனுடைய குடும்பத்திலே அநேகப் பிரச்சனைகளை சந்திக்கிறான். இது எல்லாமே முன்பு அவன் செய்த காரியங்கள், திரும்ப அவனுக்கு நேரிடுகிறது போலவே இருக்கிறது.

ஆதியாகமம் 29 : 31, 32

தன் கணவர் தன்னைவிட ராகேலை அதிகமாய் நேசிக்கிறார் என்பது லேயாளுக்கு வேதனையான ஒரு காரியமாய் இருந்தது. ஆனால் இப்பொழுது, ரூபனை அவள் பெற்றெடுத்தபொழுது அவளுடைய இருதயத்திலே மகிழ்ச்சி வந்தது. இப்பொழுதாவது என்னுடைய கணவர் என் மேல் அன்பாய் இருப்பாரே, என்று எண்ணுகிறாள்.

ரூபன் யாக்கோபின் மூத்த மகன். ஆனாலும் இயேசு கிறிஸ்து தோன்றும் வம்சம் அவன் வழியிலே வரவில்லை. ஆனால் லேயாளின் நான்காவது மகனான யூதாவின் மூலமாகவே வந்தது. யூதாதான் இராஜவம்சம். தாவீது அந்த வழியிலே தோன்றினவன்தான். பின்னான காலங்களிலே இயேசு கிறிஸ்துவும் சரீரப்பிரகாரமாக யூதாவின் வம்சத்திலேதான் தோன்றினார்.

ரூபன் மூத்த மகனாய் இருந்தாலும் அவன் தனது பாவத்தினாலே பெரியதொரு பாக்கியத்தை இழந்து போனான். லேவி ஆசாரிய வம்சத்தின் தகப்பன். யாக்கோபுடைய மிகச் சிறந்த குமாரர்களின் தாய் லேயாளாய் இருந்தாள்.

எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே இந்த நிகழ்ச்சியிலே நாம் சிந்தித்தது என்ன? மனுன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான். யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவை

www.Radio882.com

ஏமாற்றினான். தகப்பனாரை ஏமாற்றினான். அவனுடைய வாழ்க்கையிலே நடந்தது என்ன? காலங்கள் கடந்து சென்றாலும் அவன் ஏமாற்றப்படுகிறான்.

நம்முடைய வாழ்க்கையிலேயும் நம்முடைய ஒவ்வொரு செயலைக் குறித்தும் நாம் கவனம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். நாம் எதை மற்றவர்களுக்குச் செய்கிறோமோ, அதே காரியம் நம்முடைய வாழ்க்கையிலே நமக்குச் செய்யப்படும், இன்று நம்முடைய வாழ்க்கையிலே நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற எந்த காரியங்களாவது தேவனுக்குப் பிரியமில்லாத காரியமாய் இருக்குமென்று சொன்னால், இன்றே அதற்கொரு முற்றுப்புள்ளி வைத்து ஆண்டவருடைய கரத்திலே பரிபூரணமாய் ஒப்புக்கொடுத்து விடுவோமா?

ஆதியாகமம் 30

யாக்கோபிற்கு மற்ற பிள்ளைகள் பிறப்பதைக் குறித்து, யோசேப்பின் பிறப்பபைக் குறித்து யாக்கோபு தன் மாமனான லாபானை விட்டு புறப்பட ஆயத்தமாவதைக் குறித்துப் பார்க்கப் போகிறோம். யாக்கோபின் பாவத்திற்கும் மேலாக தேவன் தொடர்ந்து கிரியை செய்வதை நாம் பார்க்கலாம். யாக்கோபு லாபானை விட்டுப் புறப்பட்டுப் போவதைக் குறித்து, ஏக்கமுள்ளவனாய் காணப்படுகிறான்.

ஆதியாகமம் 30 : 1

கவனித்தீர்களா? அந்த நாட்களிலே ஒரு பெண்ணுக்குக் குழந்தைகள் இல்லையென்று சொன்னால், அது அவளுக்கு மிகக் கொடூரமான காரியமாய் இருந்தது. ஏனென்றால் சமுதாயம் அத்தனைக் குறைவாக அவர்களைப் பார்த்தது. எவ்வளவுக்கு அதிகமான பிள்ளைகளை ஒரு பெண் பெற்றெடுக்கிறாளோ, அவ்வளவுக்கு சமுதாயத்தில் அவளுக்கு மதிப்பு அதிகம்.

ஆதியாகமம் 30 : 2, 3

யாக்கோபும், ராகேலும் அந்தக் காலத்தின் பழக்கத்திற்கு உட்படுகிறார்கள். ஞாபகம் இருக்கிறதா? சாராள் தனது வேலைக்காரியாகிய ஆகாரை ஆபிரகாமுக்குக் கொடுத்தாள். அதை தேவன் ஏற்றுக் கொள்ளவில்லை. இதையும் தேவன் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. ஆபிரகாமுடைய குடும்பத்திலே ஏற்கனவே அந்த காரணத்தினாலே எத்தனை துக்கம் நடைபெற்றது? அதே பிரச்சனை இப்பொழுது இங்கே வருகிறது.

ஆதியாகமம் 30 : 4 – 21

இங்கே யாக்கோபுக்குப் பிறந்த பிள்ளைகளைக் குறித்து நாம் வாசிக்கிறோம்.

ஆதியாகமம் 30 : 22– 24

யோசேப்புதான் எகிப்திற்குப் போகப்போகிறான். இதனைக் குறித்து ஆதியாகமத்தின் பின்பகுதியிலே நாம் கற்றுக் கொள்ளப் போகிறோம். இவன் குறிப்பிடத்தக்க ஒரு மனிதன். அதற்குப் பின்னர் ராகேலுக்கு பென்யமீன் பிறக்கிறான். யாக்கோபின் பிள்ளைகளான பன்னிரண்டு பேரின் வழியாகத்தான், இஸ்ரவேல் தேசம் பின்னால் உருவெடுக்கிறது.

ஆதியாகமம் 30 : 25, 26

இப்பொழுது யாக்கோபு குடும்பத்தோடுகூட லாபானை விட்டுப் புறப்பட்டுப் போக நினைக்கிறான். அதைக் குறித்து பேசுகிறான். ஆனால் யாக்கோபைக் கொண்டு எவ்வளவோ லாபம் பெற்ற லாபான் தொடர்ந்து என்னப் பேசுகிறான் பாருங்கள்.

www.Radio882.com

ஆதியாகமம் 30 : 27

இது ஒரு சுவாரஸ்யமானக் காரியமாய் இருக்கிறது. ஈசாக்குக் கேராரிலே அபிமெலேக்கு அரசனோடு இருந்த பொழுது தேவன் அபிமெலேக்கை ஆசீர்வதித்தார்.

இப்பொழுது மாமனான லாபான் யாக்கோபு தன்னோடு இருப்பதினாலே தேவன் தன்னை ஆசீர்வதிக்கிறார் என்பதை அறிந்து கொள்கிறான். எனவே தான் நீ புறப்பட்டுப் போக வேண்டாம்; நான் உன் சம்பளத்தை வேண்டுமென்றால் கூட்டித் தருகிறேன் என்று சொல்லுகிறான்.

ஆதியாகமம் 30 : 28

இவ்வளவு காலத்திற்குள்ளாக யாக்கோபு லாபானை நன்றாகவே அறிந்து கொண்டான். எந்த ஒரு ஒப்பந்தத்திலேயும் ஏதாவது ஒரு பிடி இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். ஒவ்வொரு முறையும் அவனே வெற்றி பெறுவான் என்பதை அறிந்திருக்கான். யாக்கோபு திட்டவட்டமாக இந்தமுறை வீட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்று தீர்மானிக்கிறான்.

ஆதியாகமம் 30 : 29, 30.

யாக்கோபு சொல்கிற குற்றச்சாட்டுகளை சற்றே கவனியுங்கள். இவ்வளவு காலம் உமக்கு ஊழியம் செய்ததினாலே எனக்கு என்ன கிடைத்தது? இரண்டு மனைவிமாரும், அவர்களுடைய வேலைக்காரப் பெண்களும் வீடு நிறைய பிள்ளைகளும்தான் கிடைத்தார்கள் என்பது போலப் பேசுகிறான்.

இதற்குள்ளாக அங்கே பதினோறு பையன்கள் பிறந்துவிட்டார்கள். இப்பொழுது அவர்களுக்காக இவன் என்ன செய்யப்போகிறான்? எப்படி அவர்களுக்கு உணவு கொடுக்கப்போகிறான்? தேவன் உம்மை ஆசீர்வதித்தார், உண்மைதான், இனி நான் என் குடும்பத்துக்கு சம்பாத்தியம் பண்ணவேண்டாமா? என்று கேட்கிறான்.

ஆதியாகமம் 30 : 31, 32.

வரியோ, கோடோ, புள்ளியோ இல்லாதது எல்லாம் லாபானைச் சேரும். புள்ளியோ, வரியோ, கோடோ இருந்தால் அது யாக்கோபுக்குத் தான் சேரும் என்று தீர்மானம் செய்கிறான். இதுவே என் சம்பளமாக இருக்கட்டும் என்று சொல்லிவிடுகிறான். இதைக்கேட்ட லாபானுக்கு இது நல்ல ஒரு பேரம் போல தெரிந்தது.

ஆதியாகமம் 30 : 33 – 35

யாக்கோபுக்குச் சம்பளமாகச் சொல்லப்பட்ட எல்லா வித்தியாசமான நிறமுள்ள ஆடுகளையெல்லாம் தனியாகப் பிரித்து விட்டார்கள். ஏனென்றால் இப்பொழுது மற்ற ஆடுகளோடு இவை சேர முடியாது. அப்படிச் சேர்ந்தால் அப்படிப்பட்ட ஆடுகள் மேலும் குட்டி போடும். எனவே இரண்டுபேருடைய ஆடுகளையும் தனித்தனியாக தெளிவாகப் பிரித்துக் கொண்டார்கள்.

ஆதியாகமம் 30 : 36 – 39

இந்த வேதப் பகுதியைக் குறித்து அநேகர் அநேக விதமாய்ச் சொல்கிறார்கள்; இது மூட நம்பிக்கை என்று சொல்கிறவர்கள் உண்டு. இது கிழவிகளுடைய பேச்சு; இது வேதத்திலேயே

www.Radio882.com

இருந்திருக்கத் தேவையில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் வேதப் புத்தகத்திலே குறிப்பிடப்பட்டிருப்பது சரியானது என்று நான் நினைக்கிறேன். ஆடுகள் கருத்தறிப்பதைக் குறித்தும், அந்த சூழ்நிலைக்கும் அதற்கும் தொடர்புண்டு என்பதைக் குறித்தும் கூறுகிறவர்கள் உண்டு. ஆனால் இங்கே முக்கியமானக் குறிப்பு என்னவென்றால், லாபானும் யாக்கோபுமே இந்தக் கட்டைகளினாலேதான் அப்படிப்பட்ட குட்டியை ஆடுகள் போடுகிறது என்று எண்ணினார்கள். இதுதான் முக்கிறமான காரியம். இதை நீங்கள் நம்புகிறீர்களோ இல்லையோ, ஆனால் இங்கே யாக்கோபு தந்திரமாய் செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். யாக்கோபு ஒரு தந்திரக்காரன். அவனைவிட லாபான் அதிக தந்திரக்காரனாய் தெரிகிறான். எனவே லாபானை மேற்கொள்ள இவன் முயற்சி எடுக்கிறான். இதன் தொடர்ச்சி என்ன என்பதைக் குறித்து நாம் அடுத்த அதிகாரத்திலே பார்ப்போம். யாக்கோபுடைய பிள்ளைகளை வரிசைப் படுத்துவீர்களென்றால் லேயாள் மூலமாக ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன். இத்தனைப் பையன்களுக்குப் பிறகு ஏழாவதாக தீனாள் பிறக்கிறாள். ராகேலுடைய பணிப்பெண் பில்காள் மூலமாக தாண், நப்தலி ஆகிய பிள்ளைகள் பிறக்கிறார்கள். லேயாளின் வேலைக்காரியான சில்பாள் மூலமாக காத், ஆசேர் ஆகிய இரண்டு குமாரர்களைப் பெற்றுக் கொள்கிறான். பின்னர் ராகேல் மூலமாக யோசேப்பையும், பென்யெமீனையும் பெற்றெடுக்கிறான்.

இப்பொழுது அந்த வீட்டிலே 12 குமாரர்களும், ஒரு குமாரத்தியும் இருக்கிறார்கள். அடுத்த அதிகாரத்திலே நாம் பார்க்கும் பொழுது ஆரானைவிட்டு எழுந்து தேவன் ஆபிரகாமுக்கு, ஈசாக்குக்கு, யாக்கோபுக்கு வாக்கு பண்ணிய தேசமாகிய கானான் தேசத்துக்குப் போகும் படியாக அழைக்கிறார். லாபானுடைய வீட்டு சூழலிலே யாக்கோபுடைய பிள்ளைகள் வளருவதை தேவன் விரும்பவில்லை என்று எண்ணுகிறேன். அவர்களை அங்கேயிருந்து புறப்பட்டு வெளியே வரும்படியாக தேவன் அழைக்கிறார்.

www.Radio882.com

ஆதியாகமம் 31

இங்கே நாம் என்னப் பார்க்கிறோம்? எந்த ஒரு காரியத்தையும் லாபானிடத்திலே சொல்லாமலேயே யாக்கோபு குடும்பத்துடன் வீட்டைவிட்டு வெளியே வருகிறான். பிரிவு உபச்சார விழா எதுவும் அங்கே நடத்தவில்லை. லாபான் அவர்களைப் பின் தொடர்ந்து போய் ஒரு இடத்திலே பிடித்துக் கொள்கிறான். இறுதியாக யாக்கோபும் லாபானும் மற்றுமொரு ஒப்பந்தம் செய்கிறார்கள். இந்த முறை ஒருவரை ஒருவர் ஏமாற்றவோ, ஒருவரை ஒருவர் காயப்படுத்தவோ கூடாது என்பது போல அந்தத் தீர்மானம் இருக்கிறது.

பின்னர் சரியான உறவு முறையிலே ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து செல்கிறார்கள். நாம் இங்கே பார்க்கிறது போல அந்த இடத்தை விட்டே யாக்கோபை தேவன் வெளியே கொண்டுவரத் தீர்மானிக்கிறார். வளர்ந்து வரும் யாக்கோபின் குடும்பத்திற்கு லாபானின் வீட்டுச் சூழ்நிலை சரியானது அல்ல என்பதை தேவன் உணர்ந்தார். ஏனென்றால் இந்த 12 பிள்ளைகளும்தான் இஸ்ரவேலின் 12 கோத்திரங்களின் பிதாக்களாய் இருக்கப் போகிறார்கள்.

எனவே இப்படிப்பட்ட சூழலிலிருந்து அவர்களை விடுவித்து ஆபிரகாமின் தேசத்திற்கு அவர்களைக் கொண்டுபோக தேவன் தீர்மானித்தார். பல வழிகளிலே பாவத்திலே வாழ்ந்த ஒரு மனிதனைக் குறித்து சிந்திக்கிறோம். அப்படிப்பட்ட மனிதனையும் தேவன் கைவிட்டுவிடவில்லை என்பதை நாம் வாசிக்கிறோம். இந்தப் பகுதி பாவிகளாகிய நமக்கு உற்சாகம் தரக்கூடியதாய் இருக்கிறது.

இந்த சரித்திரத்தை வாசிக்கும் போது நானும் நீங்களும் கர்த்தருக்குள்ளே நம்மை திடப்படுத்திக் கொள்ளலாம்.

தேவனிடத்திலே நாம் திரும்பத்திரும்ப சேரும்பொழுது ஆண்டவர் எவ்வளவு காலமானாலும் நம்மை கைவிட்டுவிடுகிறவர் அல்ல. எப்பொழுது நீங்கள் திரும்ப அவரிடத்திலே சென்றாலும் அவர் உங்களை ஏற்றுக் கொள்வார். யாக்கோபைப் போன்ற ஒரு மனிதனை தேவன் எடுத்து இவ்வளவு தூரம் கொண்டு வந்திருக்கும்பொழுது நிச்சயமாய் உங்களையும் ஏற்றுக் கொள்வார்.

யாக்கோபு லாபான் வீட்டிற்கு வந்து சுமார் 20 ஆண்டுகள் ஆகியிருக்கும். லாபான் அநேகப் பாடங்களை அவனுக்கு சொல்லிக் கொடுத்தான். யாக்கோபு கடினமானப் பாதை வழியாக நடந்து வந்தான். தன் மேல் விழுந்த பாரங்களையெல்லாம் எண்ணிப்பார்க்கும்பொழுது, கடினமான தனது சூழ்நிலையை உணர்ந்துகொள்கிறான். இருந்தாலும் தனது மாமனாகிய லாபானோடு கூட செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி ஆடுகளை வளர்க்கிறான். இப்பொழுது லாபானுக்குக் கிடைக்கும் ஆட்டுக்குட்டிகளை விட அவனுக்கு அதிகமான குட்டிகள் கிடைக்கின்றன. இது லாபானுக்குத் தெரியவில்லை.

www.Radio882.com

லாபானுடைய குமாரர்களுக்கும் இது தெரியவில்லை.

ஆதியாகமம் 31 : 1, 2

இதே வேளையிலே யாக்கோபுக்கு என்ன நடக்கிறது பாருங்கள்.

ஆதியாகமம் 31 : 3, 4

அங்கேயிருந்து புறப்படும்படியாக தேவன் யாக்கோபுக்குச் சொன்னார். இப்பொழுது அவர்கள் புறப்படுவதற்கு ஆயத்தமாகிறார்கள். எனவே வெளியே மந்தை இருக்கும் இடத்திற்கு லேயாளையும் ராகேலையும் வரச் சொல்கிறான். காரணம் இந்தக் காரியத்தைக் குறித்து வீட்டின் உள்ளே வைத்துப் பேசிக் கொண்டிருக்க முடியாது. வேலைக்காரனோ வேறு யாராவது கேட்டால் அவனுக்கு ஆபத்து என்பதை அறிகிறான்.

ஆதியாகமம் 31 : 5, 6

அருமையானவர்களே, யாக்கோபு சொல்லும் இந்த வார்த்தைகளை நாமும் ஆமோதிப்போம். உண்மையாகவே இவ்வளவு காலம் கடினமாக உழைத்திருக்கிறான். சொல்லப்போனால் லாபானுக்கும் இதற்கான பாராட்டுதலை நாம் கொடுக்க வேண்டும். லாபான் தன்னிடத்திலே வேலை செய்த எந்த ஒரு மனிதனிடத்திலேயும் கொடுக்கும் சம்பளத்திற்கு ஏற்ற அளவு வேலை வாங்கிவிடுவான்.

ஆதியாகமம் 31 : 7

கவனித்தீர்களா? இந்த 20 ஆண்டு காலத்திற்குள்ளாக 10 முறை லாபான் சம்பளத்தை மாற்றி மாற்றிப் பேசியிருக்கிறான். இப்படி மாற்றி மாற்றி லாபான் தன்னை மேற்கொண்டதினாலே என்ன செய்ய ஏது செய்ய என்று திகைத்துக் கொண்டிருந்தபொழுதுதான் தேவன் தலையிடுகிறார்.

ஆதியாகமம் 31 : 8, 9

லாபானும் அவனுடைய குமாரர்களும் பொறாமைப்படும் அளவு கர்த்தர் யாக்கோபை ஆசீர்வதித்திருக்கிறார் என்று யாக்கோபு ராகேலிடத்திலேயும், லேயாளிடத்திலேயும் விவரித்துச் சொல்கிறான். சொல்லப்போனால் இப்பொழுது லாபானும், அவன் குமாரரும் அவனை வெறுத்தார்கள் என்று கூறலாம். அந்த இடத்தை விட்டு தாங்கள் ஏன் புறப்பட்டு செல்லவேண்டும் என்ற உண்மையான காரியத்தை அவர்களுக்கு சொல்லுகிறான்.

ஆதியாகமம் 31 : 11, 12

கடந்த அதிகாரத்திலே இந்த புள்ளியும், வரியும், கோடுமானக் குட்டிகளை ஆடுகள் போடுவதைக் குறித்து நாம் சிந்தித்த பொழுது ஒரு வேளை உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ற திருப்தியான பதிலை நான் கொடுக்கவில்லை என்று நீங்கள் யோசித்திருக்கலாம். இங்கே நாம் வாசிப்பதென்ன? கர்த்தரே அதைச் செய்வேன் என்று சொல்கிறார். இயற்கையான வழக்கங்களை நாம் தேடத் தேவையில்லை. ஒருவேளை தேவன் அவற்றை பயன்படுத்தி

www.Radio882.com

இருப்பார். ஆனால் தேவனே அதைச் செய்தார். லாபான் உனக்குச் செய்ததை நான் கவனித்து நான் உன்னை ஆசீர்வதித்தேன் என்று கர்த்தர் சொல்கிறார். அதுதான் முக்கியமானது.

ஆதியாகமம் 31 : 13

நானே பெத்தேலின் தேவன் என்று வீட்டைவிட்டு யாக்கோபு ஓடிவந்த பொழுது அவனுக்கு தரிசனமானக் கர்த்தர் தம்மை அறிமுகப்படுத்தகிறார். இப்பொழுதும் நீ எழுந்து இந்த தேசத்தை விட்டுப் புறப்பட்டு உன்னுடைய உறவினர்கள் இருக்கும் தேசத்திற்குப் போ என்கிறார்.

ஏன் தேவன் ஆரானை விட்டு யாக்கோபு புறப்பட வேண்டும் என்று கூறினார் என்றால், வளர்ந்து வருகிற பதினோரு குமாரர்கள் அவனோடு இருக்கிறார்கள். அவர்கள் கற்றுக் கொள்ளத் தேவையில்லாத சில காரியங்களை அந்தச் சூழ்நிலையிலே ஏற்கனவே கற்றுக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். விக்கிரகங்களை வணங்கும் வழக்கமுள்ள அந்த சமுதாயத்தை விட்டு தேவன் ஆபிரகாமை எப்படி அழைத்தாரோ, அதேபோல இப்பொழுது யாக்கோபையும் அவனுடைய குமாரர்களையும் வெளியே அழைக்கிறார்.

ஆதியாகமம் 31 : 14, 15

பெண் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டிய காரியத்தை லாபான் கொடுக்காமல், அதையும் விற்று தான் எடுத்துக் கொண்டான் என்று பிள்ளைகளே அவனைக்குறித்துப் பேசுகிறார்கள். ஆம், அருமையானவர்களே லாபான் நம்பப்பட முடியாதவன். இன்றைக்கும் கிறிஸ்துவை அறிந்திருக்கிற அநேகர் கூட தங்கள் சொந்த பணத்தையும், மற்றவர்களுடைய பணத்தையும் தவறுதலாகக் கையாளுகிறதை நாம், பார்க்கிறோம். ஒரு தனி மனிதனைக் குறித்த ஒரு சிறந்த பரீட்சை இது. அநேகக் கிறிஸ்தவர்களும் ஏன் கிறிஸ்தவ தலைவர்களும் கூட மிகத் தவறுதலான முறைகளிலே பணத்தைக் கையாளுகிறார்கள்.

ஆதியாகமம் 31 : 16

உண்மையாகவே இந்தப் பெண்களைப் புகழ வேண்டும். தங்கள் கணவர் என்ன நினைக்கிறாரோ அதையெல்லாம் செய்யும்படியாக அனுமதிக் கொடுக்கிறார்கள். அவனோடு கூட நிற்கிறார்கள். ஏனென்றால் தங்கள் தகப்பன் தங்களையும் கொள்ளையிட்டுவிட்டான், என்று அவர்கள் உணர்கிறார்கள்.

ஆதியாகமம் 31 : 17 – 19

தன் தகப்பனையும் தாயையும் விட்டு அவன் வரும்பொழுது திருட்டுத்தனமாகப் புறப்பட்டான். அதே போல இப்பொழுதும் மாமனை விட்டுப் போகும்பொழுதும் திருட்டுத்தனமாய் புறப்படுகிறான். ஆனால் முழுவதுமாக அவனுடைய தவறு என்று நாம்

www.Radio882.com

சொல்ல முடியாது. ஏற்கனவே இதற்கான எல்லா ஆயத்தங்களையும் அவன் செய்து விட்டான். தன் மிருக ஜீவன்களையும் வேலைக்காரரையும் புறப்பட்டுச் செல்வதற்கு ஆயத்தப்படுத்தி வைத்திருந்தான்.

அவர்களுடைய வீட்டிலே அவர்கள் விக்கிரக வணக்கம் செய்கிறவர்களாய் இருந்தார்கள். ராகேல் திருட்டுத்தனமாய் சில விக்கிரகங்களை எடுத்துக் கொள்கிறாள். தேவன் அந்தச் சூழ்நிலையிலே யாக்கோபின் பிள்ளைகள் வளர்க்கப்படுவதை விரும்பவில்லை. எனவேதான் வெளியே அழைக்கிறார். ஆனால் ராகேல் தன் தகப்பனுடைய சொரூபங்களிலே சிலவற்றை திருடிக் கொண்டு வருகிறாள்.

அவள் தப்பான எண்ணம் கொண்டவளாய் இருக்கிறாள். யாக்கோபு சிறுவனாக தன் வீட்டை விட்டு ஓடும் பொழுது தேவனை விட்டும் ஓடுகிறேன் என்று நினைத்துத் தான் ஓடினான். ஆனால் தேவன் பெத்தேலிலே அவனைச் சந்தித்தார். அப்பொழுது தான் தேவனை விட்டு ஓடிவிட முடியாது என்பதை அவன் அறிந்து கொண்டான்.

அருமையானவர்களே, பல ஆண்டுகளுக்குப் பின்னர் தாவீது இந்த சத்தியத்தைக் குறித்து தெளிவாய் எழுதி வைத்திருக்கிறான்.

சங்கீதம் 139 : 7, 8 வசனங்களைப் பாருங்கள்.

உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன் ? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன் ?

நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர் ; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்.

தொடர்ந்து 9ஆம் 10ஆம் வசனங்களையும் நாம் பார்க்க வேண்டும்.

நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப்பிடிக்கும்.

அருமையான சகோதரனே சகோதரியே நீங்கள் நிலவுக்குப் போனாலும் தேவனை விட்டு தூரமாய் ஓட முடியாது. அந்நாட்களிலே லாபான் தனது ஆடுகளுக்கு மயிர் கத்தரிப்பதற்காகச் சென்றிருந்தான். ஒருவேளை தன்னுடைய வீட்டை விட்டு சில மைல் தூரமான இடத்திலே போய் மயிர் கத்தரிக்கத் தன் ஆடுகளை எடுத்துச் சென்றிருப்பான். அவ்வாறு லாபான் வெளியே சென்றிருந்தபொழுது யாக்கோபு குடும்பத்தோடு வெளியேறுகிறான்.

ஆதியாகமம் 31 : 20, 21

யோர்தான் நதிக்குக் கிழக்கே இருக்கும் கீலேயாத் மலை அவர்கள் கண்களுக்குத் தெரிகிறது. அவ்வளவு தூரம் அவர்கள் வந்து விட்டார்கள்.

ஆதியாகமம் 31 : 22, 23

உண்மையாகவே யாக்கோபு சென்ற வேகத்தை விட மிகத் துரிதமாக லாபான் வந்து யாக்கோபை சந்திக்கிறான். யாக்கோபை பொருத்தமட்டிலேயும் லாபான் வருவது நன்மைக்கானதல்ல. ஏனென்றால் அவனைக் கொல்லும் அளவிற்கு அவன் கோபம் நிறைந்தவனாய் இருந்தான். ஆனால் தேவன் தலையிட்டார்.

ஆதியாகமம் 31 : 24

வேறு வார்த்தைகளிலே சொல்ல வேண்டுமென்றால் லாபானே நீ யாக்கோபை சந்திக்கப் போகிறாய் ; நீ என்ன வார்த்தைகள் பேசப் போகிறாய் ; என்ன செயல்களை செய்யப் போகிறாய் என்பதைக்குறித்து கவனமாயிரு, எச்சரிக்கையாயிரு என்று ஆண்டவர் எச்சரிக்கிறார்.

யாக்கோபு எவ்வளவு எத்தனாக இருந்தாலும் தேவன் அற்புதமாய் அவனுக்கு உதவி செய்கிறார். நம்முடைய வாழ்க்கையிலேயும் கூட நாம் தேவனை விட்டு எவ்வளவோ தூரமாய்ப் போயிருந்தாலும், எத்தனை முறை பின்வாங்கியிருந்தாலும், மீண்டுமாக நம்மையும் ஏற்றுக் கொள்ள அவர் ஆயத்தமாயிருக்கிறார்.

ஆண்டவர் உங்களை ஏற்கனவே அழைத்திருக்கிறார். உங்களைப் பிரித்தெடுத்திருக்கிறார். இரட்சிப்பின் சந்தோசத்தை நீங்கள் ஒரு நாளிலே அனுபவித்திருக்கிறீர்கள் என்பது உண்மையானால், இன்று நீங்கள் எந்த இடத்திலே இருக்கிறீர்கள் என்பதை சற்றே எண்ணிப் பாருங்கள். அவரை விட்டு நீங்கள் தூரமாய் இருந்தாலும் கூட நீங்கள் மனம் திரும்புவீர்கள் என்றால், அவரோடு கூட பழைய உறவை நீங்கள் உருவாக்கிக் கொள்ள முடியும். அவர் உங்களோடு கூட பேச முடியும். உங்கள் சத்தத்தை அவர் கேட்க முடியும்.

தேவன் ஏற்றுக் கொள்ள முடியாத அளவு எந்த ஒரு மனிதனும் பாவியல்ல. ஏனென்றால் எவ்வளவு அதிகமான பாவங்களைச் செய்திருந்தாலும் அப்படிப்பட்ட மனிதர்களையும் தேவன் மன்னிக்கிறார். தம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொள்கிறார்.

லாபான் எத்தனை முறையோ யாக்கோபை ஏமாற்றினான். ஆனாலும் கர்த்தர் அவனோடே கூட இருந்தபடியினாலே அவனுடைய சகல முயற்சிகளையும் ஆசீர்வதித்தார். நீங்கள் வேலை செய்கிற இடத்திலே அல்லது உங்கள் வியாபாரத்திலே மற்றவர்கள் உங்களை மேற்கொள்கிறார்கள் என்ற பயத்தோடு இருக்கிறீர்களா? கர்த்தர் உங்களோடு இருக்கிறார் என்றால் யார் உங்களுக்கு எதிராக என்ன செய்தாலும், அது ஒன்றுமே வாய்க்காதே போகும் என்பதை மனதிலே வைத்துக் கொள்ளுங்கள். கர்த்தர் மேல் உங்கள் நம்பிக்கையை வைத்து எல்லா காரியங்களையும் அவரிடத்திலே அறிக்கை செய்யுங்கள். அவருடைய வசனத்தின் ஆலோசனைக்குக் கீழ்ப்படியுங்கள். யாக்கோபை பாதுகாத்த தேவன் உங்களையும் பாதுகாத்துக் கொள்ளுவார்.

www.Radio882.com

ஆதியாகமம் 31 : 25

லாபானை சற்றே கவனியுங்கள். அவனும் தந்திரமான ஒரு மனிதன்தான். கோபத்தோடும் எரிச்சலோடும்தான் அவன் புறப்பட்டு வருகிறான். தனக்குரிய சொத்து எல்லாவற்றையும் யாக்கோபு எடுத்துக் கொண்டு போகிறான் என்பது போல அவன் வருகிறான். சொல்லவேண்டுமென்றால் யாக்கோபைக்கூட கொலை செய்துவிட்டு தன்னுடைய பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு போய்விட வேண்டும் என்ற எண்ணத்தோடு அவன் வருகிறான்.

ஆதியாகமம் 31 : 26, 27

அவனுடைய வார்த்தைகளை கவனித்தீர்களா? ஒரு அருமையான பிரிவு உபசார விழாவை அவனுடைய குடும்பத்திற்குக் கொடுக்காமல் யாக்கோபு அவர்களை அழைத்து வந்தது போன்ற ஒரு குற்ற உணர்வு அவனுக்கு ஏற்படும்படியாகப் பேசுகிறான். இவ்வாறு அவன் சொன்னானே ஒழிய அப்படிப்பட்ட காரியங்களைச் செய்திருக்க மாட்டான். மேலும் அவன் சொல்வதைக் கேலுங்கள். குடும்ப உணர்ச்சிகளை எழுப்பும் காரியங்களை அவன் சொல்கிறான்.

ஆதியாகமம் 31:28

அவனுடைய வார்த்தைகளை கவனித்தீர்களா? என் பிள்ளைகள் என்று அவனுடைய பேரப்பிள்ளைகளைக் கூறுகிறான். உலக சரித்திரத்தைப் பொருத்தமட்டிலேயும் இந்த பிள்ளைகள் மிகவும் குறிப்பிடத்தக்க பிள்ளைகள்.

ஆதியாகமம் 31 : 29

தொடர்ந்து பேசப்பேச அவன் உள்ளத்தின் ஆழத்தின் நினைவுகள் வார்த்தைகளாக வெளியே வர ஆரம்பிக்கின்றன. அவன் உண்மையாகவே தீமை செய்யும் நோக்கத்தோடுதான் புறப்பட்டு வந்தான் என்றும், தேவனே யாக்கோபுக்குத் தீமை எதுவும் லாபான் செய்யக்கூடாது என்று தடுத்து நிறுத்தினார் என்றும் கூறுகிறான்.

ஆதியாகமம் 31 : 30

இப்பொழுது தனது வீட்டிலே திருடுபோன அந்த சொரூபங்களைக் குறித்து கேட்கிறான். உண்மையாகவே ராகேல் சொரூபங்களைக் திருடி வந்தது யாக்கோபுக்குத் தெரியாது. லாபானின் கேள்விக்கு பதில் சொல்லும்பொழுது, லாபானிடத்தில் சொல்லிக்கொள்ளாமல் வந்ததைக் குறித்து தான் அவன் பேசுகிறான்.

ஆதியாகமம் 31 : 31

அருமையானவர்களே தனது மனைவிகளையும் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு எளிதிலே லாபானுடைய வீட்டைவிட்டு வரமுடியாது என்பதை யாக்கோபு அறிந்திருந்தான். எனவேதான் அவ்வாறு கூறுகிறான்.

www.Radio882.com

ஆதியாகமம் 31 : 32

லாபான் வீட்டிலிருந்து எதையுமே தன்னுடைய மனைவியோ பிள்ளைகளோ யாரும் திருடியிருக்க மாட்டார்கள் என்று யாக்கோபு நினைத்தான். யாக்கோபு லாபானுடைய வார்த்தையை நம்பினது போலத் தெரியவில்லை. ஆனால் லாபானும் யாக்கோபை நம்பினான் என்று நீங்கள் நினைப்பீர்கள் என்றால் அது தவறு. இரண்டு பேருக்கும் ஒருவர் மேல் ஒருவர் நம்பிக்கையில்லை. எத்தனை பரிதாபமான சூழ்நிலை இல்லையா? இருபது ஆண்டுகள் கூட இருந்திருக்கிறார்கள்.

ஆதியாகமம் 31 : 33 – 35

உண்மையாகவே தன்னுடைய பிள்ளைகளில் யாரிடத்திலாவது அவைகள் இருக்குமென்று லாபான் எண்ணினான். ராகேல் லாபானின் மகள் அல்லவா; அவளும் தந்திரமாக அதை எடுத்து ஒட்டகத்தின்மேல் உட்காருவதற்காக பயன்படுத்தும் அந்தச் சேணத்தின் கீழ் வைத்து, அதின் மேலே உட்கார்ந்துகொண்டாள். அவளுடைய சரீரத்திலே அன்றைக்கு சுகமில்லை, ஆனபடியினாலேதான் அவருக்கு மரியாதை செலுத்தும் படியாக எழுந்திருக்கவில்லை என்றும் கூறுகிறாள். ஆனால் உண்மையாகவே அதை மறைத்து வைத்திருக்கும்படியாகவே அவ்வாறு செய்தாள்.

இந்தக் குடும்பத்தின் உண்மையான நிலைமையை எவ்வளவுத் தெளிவாகப் பார்க்கிறோம் இல்லையா? அந்த சுரூபங்கள் நாம் நினைப்பதைவிட அந்தக் குடும்பத்தினருக்கு மிகவும் முக்கியமானவைகளாக இருந்திருக்கும். யாருடைய கரத்திலே அவைகள் இருக்கிறதோ அவர்களே குடும்பத்திற்கு பொறுப்பாளியாய் இருக்கிறார்கள். அப்படியென்றால் லாபான் வைத்திருந்த அத்தனையுமே யாக்கோபு பெற்றுக் கொள்ளப் போகிறான் என்ற அர்த்தத்திலே அவள் எடுத்துக்கொள்கிறாள்.

இந்த எண்ணமும் லாபானுக்குள்ளே இருந்தபடியினாலேதான் இத்தனைக் கோபத்தோடு அவைகளை அவன் தேடிக் கொண்டு வருகிறான். தனக்குண்டான எல்லாவற்றையும் யாக்கோபு பெற்றுக்கொள்வதை லாபான் விரும்பவில்லை. ஏற்கனவே அளவுக்கு அதிகமாக யாக்கோபு பெற்றுக்கொண்டுவிட்டான் என்று எண்ணிக்கொண்டிருக்கிறான். அந்த சுரூபங்களை அவர்களால் கண்டுபிடிக்க முடியாமல் போனவுடனே யாக்கோபுக்குள்ளே ஒரு நம்பிக்கை வருகிறது. சரி அந்த சுரூபங்கள் தங்களுடைய கூடாரங்களிலே எங்குமே இல்லை என்று எண்ணுகிறான். எனவே தனது மாமனை அவன் கடிந்துகொள்கிறான். ஆதியாகமம் 31 : 36, 37

இப்பொழுது யாக்கோபின் சத்தம் உயருகிறது. இத்தனை காலம் அவன் கற்றுக் கொண்ட காரியத்தினாலே இப்பொழுது உறுதியாடுப் பேசத் துணிகிறான்.

ஆதியாகமம் 31 : 38

கவனித்தீர்களா? லாபானுக்கு உண்டாயிருந்த மந்தையின் கடாக்களைக் கூட தான் தின்னவில்லை என்று சொல்கிறான். எல்லாவற்றிற்காகவும் அவன் வேலை செய்தான்; அவன் செலுத்தித்தீர்த்தான்.

ஆதியாகமம் 31 : 39

அந்த நாட்களிலே எந்த ஹூஜவிற்ஷெழிஜஉள ளீலிதுஸ்ரீழிஜதீயும் கிடையாது. வேறு ஏதாவது மிருகம் ஆடுகளைக் கொன்றுவிட்டால் அல்லது பகலிலோ, இரவிலோ களவு போய்விட்டால் அதற்காகவும் யாக்கோபு கொடுத்துத் தீர்த்தான். இதைப் பார்க்கும்பொழுது லாபான் எவ்வளவு கடினமான எஜமான் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஆதியாகமம் 31 : 40

யாக்கோபுக்குக் கோடை விடுமுறை கூட கிடையாது. குளிர் அதிகமாய் இருந்தாலும், அந்த மந்தைகளோடேயே அவன் தங்கவேண்டும். பல இரவுகளிலே மந்தைக்குப் பாதுகாவலாக அவன் இருக்க வேண்டும்.

ஆதியாகமம் 31 : 41

இதுதான் யாக்கோபுக்கு நடந்த காரியம். யாக்கோபு தந்திரமான ஒரு மனிதன்தான். தன்னுடைய பாவத்துக்காக அவனுக்குத் தண்டனை இல்லையென்று அவன் நினைத்தான். ஆனால் தேவன் யாக்கோபை அப்படி விட்டுவிடவில்லை. ஏனென்றால் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி மனுன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தான் வீட்டில் இருக்கும்போதே தேவனுக்கென்று பரிபூரணமாய் தன்னை ஒப்புக்கொடுத்ததை யாக்கோபு மறுத்தான். எனவே லாபானுக்கு அடிமையாக இருக்கும்படி அவனுக்கு நேரிட்டது. மதிப்போடு வந்து ஒரு மனைவியைப் பெற்றுக்கொள்ளும்படியாய் வந்தான். முதலாவது பிறந்தவனின் மதிப்பை சேஷ்டபுத்திர பாகத்தைக் குறித்து தேவன் மதிக்கிறவராய் இருக்கிறார். எனவே யாக்கோபை லாபானின் வீட்டிலே ஒரு வேலைக்காரனாய் வைத்தார். யாக்கோபு தனது தகப்பனை ஏமாற்றினான். எனவே அவனுடைய மாமனால் ஏமாற்றப்பட்டான்.

இளையவனாய் இருந்துகொண்டே அவன் மூத்தவனுக்கு உரிய காரியங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பினான். ஆனால் மூத்தவனைப் போல இருந்த இடத்திலே இளையவனைப் போல வாங்கிக்கட்டினான். தனது சகோதரனை ஏமாற்றி சேஷ்ட புத்திர பாகத்தை எடுத்துக்கொண்டான். தகப்பனாரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள தாயோடு சேர்ந்து ஏமாற்று வேலை செய்தான். பின்னான காலங்களிலே அதே யாக்கோபின் குமாரர்களே அவனை ஏமாற்றிவிடுவதை நாம் பார்க்கப் போகிறோம்.

ஒரு ஆட்டைக்கொன்று யோசேப்பின் பலவர்ண அங்கியை அதிலே துவைத்து யாக்கோபுக்கு அதிகப் பிரியமான மகனான யோசேப்பு மரித்துப் போனான் என்று பொய்

சொன்னார்கள். மனுன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான்.

ஆதியாகமம் 31 : 42

நீதிமன்றத்திலே தன்னுடைய நேரம் வரும்பொழுது தனக்குரிய காரியங்களைப் பேசுவது போல கூறவேண்டிய காரியங்களை எல்லாம் கூறிவிட்டான். இப்பொழுது லாபானை விட்டு நிரந்தரமாய் பிரிந்து செல்லப் போகிறான். ஒரு ஒப்பந்தத்தோடு ஒருவரிடத்திலிருந்து ஒருவர் பிரிந்து செல்கிறார்கள்.

ஆதியாகமம் 31 : 43 – 47

இரண்டுபேருமே ஒப்பந்தத்திற்கு சம்மதிக்கிறார்கள். யாக்கோபு ஒரு கல்லை எடுத்து அதைத் தூணாக நிறுத்துகிறான். மேலும் கற்களை குவியலாகவும் சேர்க்கிறார்கள்; அந்தக் குவியலின் மேலே உட்கார்ந்து உணவு சாப்பிடுகிறார்கள்; லாபான் அந்த இடத்திற்கு ஜெகர்சகதூதா என்று பேரிட்டான்; யாக்கோபு அதற்குக் கலயெத் என்று பேரிட்டான்.

ஆதியாகமம் 31 : 48, 49

இங்கே கர்த்தர் எனக்கும் உனக்கும் நடுநின்று கண்காணிக்கக்கடவர் என்பது ஒரு ஆசீர்வாதமான வார்த்தையல்ல. இதன் பொருள் என்னவென்றால், இனி நீ என்னிடத்திலிருந்து திருடாதபடி கர்த்தருடைய கண்கள் உன்மேல் இருக்கிறது என்று சொல்வதுதான் அது. இவ்வாறு கூறிக்கொண்ட பிறகு ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து போகிறார்கள்.

இந்த கற்குவியலே அவர்கள் இரண்டுபேருக்கும் நடுவாக இருக்கிறது. அந்த இடத்திற்கு பெயர்தான் மிஸ்பா. எனவே இதைத் தாண்டி ஒருவர் பின்னாலே ஒருவர் இனி வரப்போவதில்லை, என்பதைத் தீர்க்கமாக தீர்மானித்துவிட்டார்கள்.

ஆதியாகமம் 31 : 50 – 55

ஆதியாகமம் 32ஆம் அதிகாரம் யாக்கோபின் வாழ்க்கையிலே ஒரு உன்னதமான நிலமையை நமக்குக் காண்பிக்கிறது. இங்கே யாக்கோபு மனம் திரும்பினான் என்று சொல்லமுடியாது. அவன் மாம்சீகத்திலேயே வாழ்ந்து கொண்டிருந்தாலும் அவன் தேவனுடைய மனிதனாய் இருக்கிறான். இந்த காரணத்தினால்தான் நாம் எந்த ஒரு கிறிஸ்தவனையும் நியாயந்தீர்க்க முடியாது என்று சொல்கிறோம்.

இன்று அநேக கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையைப் பார்த்தால் அவர்கள் கிறிஸ்தவர்களைப் போலத் தெரியாது. ஆனால் தங்களுடைய வாழ்க்கையிலே அதைக் குறித்து உறுதியானவர்களாய் காணப்படுகிறார்கள். அவர்கள் உண்மையாகவே கடவுளுடைய பிள்ளைகளா, இல்லையா என்பது தேவனுடைய கரத்திலே இருக்கிறது. ஆனால் கிறிஸ்துவை அறிந்தவர்களைப் போல அவர்கள் செயல்படுகிறதில்லை.

www.Radio882.com

கிறிஸ்துவின் பிள்ளைகள் என்பதற்கான அடையாளத்தை அவர்கள் காட்டுகிறதில்லை. யாக்கோபும் தேவனோடு நடந்தான் என்பதை நாம் கூறமுடியவில்லை. என்றாலும் தேவன் அவனிடத்திலே தரிசனமாகிக் கூறியக் காரியங்களுக்கு அவன் கீழ்ப்படிந்து செயல்படுகிறான். தேவனுடைய உன்னதமான சாட்சியாய் இருக்கவேண்டியவன், சாட்சியற்றவனாய் இருக்கிறான். ஆனால் அவ்வாறே தன்னுடைய வாழ்க்கையிலே அவன் தொடர முடியாது. எனவே தேவன் அவனோடு செயல்படப்போகிறார். உண்மையைச் சொல்லவேண்டுமென்றால் தேவன் அவனைப் பிடிப்பதற்காக அவனை முடமாக்கினார். அவர் அவனை ஒழுக்கப்படுத்த வேண்டியதிருந்தது.

எபிரேயர் 12ஆம் அதிகாரம் 6ஆம் வசனத்திலே நாம் வாசிப்பது என்ன?

கர்த்தர் எவனிடத்தில் அன்புகூறுகிறாரோ, அவனை அவர் சிட்சிக்கிறார் என்று பார்க்கிறோம். அதுதான் அவருடைய முறை. லோத்துவும் கடவுளுடைய பிள்ளையைப் போல ஒரு சாட்சியான வாழ்க்கை வாழவில்லை. ஆனால் அவன் ஆண்டவருடைய பிள்ளையாய் இருந்திருக்கிறான். 2 பேதுரு 2வது அதிகாரம் 7,8 ஆம் வசனங்களிலே நாம் பார்க்கும் பொழுது லோத்து மற்றவர்களுடைய பொல்லாப்பினிமித்தம் தன்னுடைய இருதயத்திலே குத்தப்பட்டவனாய்தான் வாழ்ந்தான் என்று வாசிக்கிறோம்.

லோத்துவும் நெருப்பிலே போட்டு எடுக்கப்பட்டான் என்று சொல்லலாம். சோதோம்கொமோராவின் மேலே வந்த நெருப்பிற்கு அவன் தப்பினான். என்றாலும் தேவன் அவனை சோதனையின் வழியாய் கடந்துவரப் பண்ணினார் என்று சொல்லலாம். அதுதான் யாக்கோபின் அனுபவமும் கூட. லாபான் என்னும் மாமன் மூலமாக படிக்க வேண்டியப் பாடங்களை அவன் படித்தான். இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அவன் தேர்ச்சி பெற்றவனாய் வெளியே வருகிறான். பத்து முறை லாபான் யாக்கோபின் சம்பளத்தை மாற்றினான். சொல்லப் போனால் ஒவ்வொரு இரண்டு வருத்திற்கு மத்தியிலேயும் அவன் மாற்றியிருப்பான். ஒவ்வொரு முறை ஒப்பந்தம் செய்யும் பொழுதும் யாக்கோபுக்கு அது பாதகமாகவே முடிவடையும்படியாய் இருந்தது. அதுதான் அவனுடைய அனுபவம்.

இப்பொழுது தேவன் யாக்கோபோடே இடைப்படப் போகிறதை நாம் வாசிக்கப் போகிறோம். ஏனென்றால் தேவனுக்கு அவன் பிரதிநிதியாய் இருக்கும்படியாக அவன் அழைக்கப்பட்டிருக்கிறான். தேவன் அவனோடு செயல்பட்டு தொடர்ந்து அவனோடு அவர் செய்யப் போகிற காரியங்களை நாம் பார்க்கப் போகிறோம்.

ஆதியாகமம் 32ஆம் அதிகாரத்திற்கு ஏசாயா 40ஆம் அதிகாரம் 29ஆம் வசனத்தைக் கருத்து வசனமாக நாம் சொல்லலாம். ஏனென்றால் அது தான் யாக்கோபின் அனுபவம். ஏசாயா 40 : 29, சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்.

www.Radio882.com

தேவனுடைய உண்மையான சாட்சியாய் இருக்கும்படியாக அவருடைய பணியிலே பயனுள்ள கனி கொடுக்கும் ஒருவனாய் இருக்கும்படியாக தேவனே அவனோடு நேரடியாக இடைபடுகிறார்.

ஆதியாகமம் 32

ஆதியாகமம் 32 : 1 – 5

யாக்கோபு இன்னமும் தந்திரமுள்ளவனாய் இருக்கிறான். கவனித்தீர்களா? அந்தப் பழக்கத்தை அவனால் விட்டுவிட முடியவில்லை. லாபானுடைய வீட்டிலே அவன் எத்தனையோ பாடங்களைக் கற்றிருந்தாலும் அவன் வாழ்க்கையிலே மாற்றம் இல்லை.

இப்பொழுது தன் தகப்பன் தேசத்தை நோக்கித் திரும்புகிறான். இருபது ஆண்டுகளுக்கு முன்பாக வீட்டை விட்டு வரும்பொழுது ஏசாவின் மனநிலை எப்படி இருந்தது, என்பதை எண்ணிப் பார்க்கிறான். ஏனென்றால் ஏசா அவனைக் கொல்ல வேண்டுமென்று தீர்மானம் பண்ணியிருந்தான். இப்பொழுது தனது வேலைக்காரர்களை முன்னாலே அனுப்பி நீங்கள் என் ஆண்டவனாகிய ஏசாவினிடத்தில் போய், என்று ஏசாவை உயர்த்திக் கூறுகிறான். தன்னைக் குறித்து அவன் சொல்லும்பொழுது உம்முடைய தாசனாகிய யாக்கோபு என்று சொல்லச் சொன்னான் .

இதற்கு முன்னர் யாக்கோபு இவ்விதமாகப் பேசியதில்லை. சேஷ்ட புத்திர பாகத்திற்காக சகோதரனை ஏமாற்றினான். ஆசீர்வாதங்களையும் களவாய் எடுத்துக்கொண்டான். ஒரு கெட்ட மனிதனாகவே செயல்பட்டு வந்தான். இப்பொழுது அவனுடைய பேச்சு வித்தியாசமானதாய் இருக்கிறது.

லாபானுடைய வீட்டிலே பெற்ற அனுபவங்களினாலே சில காரியங்களை கற்றுக் கொண்டான் என்று சொல்லலாம்.

என் ஆண்டவனாகிய ஏசா என்றும், உம்முடைய தாசனாகிய யாக்கோபு என்றும் சொல்கிறான்.

ஆதியாகமம் 32 : 6

இந்தச் செய்தி யாக்கோபை மிகவும் பயத்திற்குள்ளாக ஆக்கி விட்டது. இப்படி அவன் நானூறு பேரோடு வருவதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. ஒருவேளை யாக்கோபு போய்வந்த வேலைக்காரர்களைப் பார்த்து ; அவர் கசப்பான வார்த்தைகள் எதையும் சொன்னாரா ? கோபமான வார்த்தைகளை எதுவும் சொன்னாரா ? என்று மாறி மாறி கேட்டிருப்பான். ஒருவேளை ஒரு வேலைக்காரன், இல்லை உம்மை பார்ப்பதைக் குறித்து அவர் மகிழ்ச்சியோடுதான் வந்து கொண்டிருக்கிறார் என்று கூறியிருப்பான்.

ஏசா மகிழ்ச்சியோடு காணப்படுவது யாக்கோபுக்கு ஆறுதலைத் தரவில்லை. ஒருவேளை தன் மேலே பழியை தீர்த்துக் கொள்ள நேரம் வந்து விட்டது என்பதனாலே ஏசா

www.Radio882.com

மகிழ்ச்சியாய் இருந்திருப்பான் என்று அவன் நினைக்கிறான். என்ன இருந்தாலும் யாக்கோபு மனநிலை குழம்பியவனாகக் காணப்படுகிறான்.

ஆதியாகமம் 32 : 7, 8

தந்திரமானவர்களுடைய எண்ணம் எப்பொழுதும் தந்திரமாகவே இருக்கும். கெட்டக் காரியத்தை அவன் யோசிக்கிறான். இப்படி நடந்துவிடுமோ, அப்படி நடந்து விடுமோ என்று சிந்திக்கிறான். ஏசா தன்னைப் பார்க்க வருகிறானே, அப்படியென்றால் ஒரு பகுதியையாவது நான் தப்புவித்துக் கொள்ளலாம் என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கிறான்.

இப்பொழுது யாக்கோபு வேறு என்ன செய்கிறான், பாருங்கள். தேவனை நோக்கிக் கூப்பிடுகிறான்.

ஆதியாகமம் 32 : 9, 10.

இப்பொழுது யாக்கோபு பயத்தின் மத்தியிலே தேவனை நோக்கிக் கூப்பிடுகிறான். எந்த உறவிலே கூப்பிடுகிறான்? தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனே, தகப்பனாகிய ஈசாக்கின் தேவனே என்று கூப்பிடுகிறான்.

அருமையானவர்களே, இப்பொழுது யாக்கோபினுடைய வாழ்க்கையிலே சில மாற்றத்தை நாம் பார்க்க முடிகிறது. இப்பொழுதுதான் முதல் முதலாவதாக அடியேனுக்குத் தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும், எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல என்று சொல்கிறான்.

முதல் முறையாக தன்னுடைய பாவ வாழ்க்கையை தேவனுடைய சமூகத்திலே யாக்கோபு ஒத்துக் கொள்கிறான். எத்தனையோ கிறிஸ்தவர்களும் கூட தங்களுடைய வாழ்க்கையிலே தாங்கள் பாவிகள் என்பதை ஒத்துக் கொள்கிறதில்லை. அது உங்களுக்குத் தெரியுமா? சிலர், நானெல்லாம் பாவியல்ல, நான் எந்தப் பாவமுமே செய்கிறதில்லை என்று சொல்லுவார்கள். இல்லை அருமையானவர்களே, நாம் எல்லாரும் பாவிகள்தான். தேவனுடைய கிருபையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். இந்த உலகத்திலே ஜீவனோடு நாம் வாழும் காலம் வரை பழைய மனு சுபாவம் நமக்குள்ளேதான் இருக்கப் போகிறது. இந்தக் காரணத்தினாலே நாம் பரலோகத்திற்குச் செல்ல தகுதியுள்ளவர்கள் அல்ல. அந்த சுபாவத்தோடு நம்மை தேவன் பரலோகத்திற்குள்ளே அனுமதிக்கப் போவதும் இல்லை. இந்தக் காரணத்தினாலேதான் தேவன் ஒரு புதிய சுபாவத்தை நமக்குள்ளே தரவேண்டியதிருக்கிறது. பழைய மனு சுபாவம் சரி செய்யப்பட முடியாதது.

இப்பொழுதுதான் யாக்கோபு தான் எதற்கும் தகுதி உள்ளவன் அல்ல என்பதைக் கூறுகிறான். இப்படிப்பட்ட மன நிலைமையோடு தேவனைத் தேடுகிற ஒவ்வொரு மனிதனையும் தேவன் கண்டு கொள்வார். தாங்கள் ஒன்றுமில்லை, தாங்கள் பாவிகள்

என்பதை அறிக்கையிடுகிறவர்களோடு தேவன் உரையாடுவார்.

இப்பொழுது யாக்கோபு சொல்கிற காரியமென்ன? நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்து போனேன். இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே தேவன் தான் நேசிக்கிற பிள்ளைகளுடைய வாழ்க்கையிலே கடினமான சூழ்நிலைகளை அனுமதிக்கிறார். காரணம் என்னவென்றால், அவருடைய இருதயத்திலே உண்மையாகவே ஒரு மாற்றம் ஏற்பட அவர் எதிர்பார்க்கிறார். இன்று உங்களுடைய வாழ்க்கையிலே நீங்கள் பாடுகள் நெருக்கங்கள் கஷ்டங்கள் வழியாகக் கடந்து வந்து கொண்டிருப்பீர்கள் என்று சொன்னால், இன்றைக்கே நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள்.

நீங்கள் ஒன்றுமில்லை என்பதை அறிக்கை செய்யுங்கள். உங்கள் பாவங்களை ஒவ்வொன்றாய் ஒத்துக் கொள்ளுங்கள். உங்கள் இருதயத்தை நீங்கள் உணர்ந்து கொள்வீர்களென்றால், உங்களோடும் அவர் தொடர்ந்து பேசுவார். நீங்கள் செய்ய வேண்டியதை உங்களுடைய வாழ்க்கையிலே உங்களுக்குக் கற்றுத் தருவார்.

ஆதியாகமம் 32 : 11, 12

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே இன்றும் நம்மில் அநேகருடைய வாழ்க்கையிலே இப்படிப்பட்ட சூழ்நிலையை நாம் சந்திக்கிறோம். ஒருவேளை நீங்கள் கூட இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே இருக்கலாம். தேவன் நமக்கு எதிர்காலத்திலே ஆசீர்வாதங்களைக் குறித்து வாக்குபண்ணியிருப்பார் என்றாலும் இப்பொழுது நாம் இருக்கிற சூழ்நிலையைப் பார்த்தால் அவருடைய வாக்குத்தத்தம் நிறைவேறாது என்பது போலத் தோன்றச் செய்கிறது.

நம்மை கலங்கப் பண்ணும் காரியங்கள், நம்மை துக்கப்படுத்தும் காரியங்கள், நமக்கெதிராக பொங்கி வருவதை நாம் கவனிக்கிறோம். இப்படிப்பட்ட வேளையிலே நாம் செய்ய வேண்டிய ஒரு முக்கியமான காரியம், மறுபடியும் நம்மைத் தாழ்த்தி ஆண்டவருடைய சமூகத்திலே, ஆண்டவரே, நான் ஒன்றுமில்லை என்றும், கடந்த காலங்களிலே நாம் பெற்றுக்கொண்ட நன்மைகள் எல்லாவற்றிற்கும் காரணம் தேவனுடைய கிருபைதான் என்பதையும் நாம் உள்ளத்தின் ஆழத்திலே உணர்ந்து, உதடுகளினாலே தேவனிடத்திலே அறிக்கை செய்ய வேண்டும்.

ஆனால் இன்று அநேகர் தேவன் அவர்களை எப்படிப்பட்ட சூழ்நிலையிலே கொண்டுவந்திருந்தாலும் உலகத்தையும், மற்றவர்களையும், சூழ்நிலைகளையும் குறை சொல்லிக் கொண்டு தேவனைத் தேடாதபடி கடந்து செல்வதினாலே அவர்கள் துன்பத்திற்கு மேலே துன்பத்தை அனுபவிக்கிறவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் நம்மைத் தாழ்த்தி ஆண்டவருடைய முகத்தை நோக்கிப் பார்ப்போமென்றால், ஆண்டவர் நமக்கு உதவி

www.Radio882.com

செய்ய வல்லமை உள்ளவராய் இருக்கிறார்.

தேவன் தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார் என்று வேத புத்தகம் சொல்கிறது. உங்களுடைய வாழ்க்கையிலேயும் நீங்கள் உங்களைத் தாழ்த்துவீர்களென்றால் ஆண்டவருடைய கிருபையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இங்கேயும் யாக்கோபு உண்மையாகவே தேவனை நோக்கி அழுகிறான். தேவனைப் பார்த்து அவன் ஜெபிக்கும்பொழுது, என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாயிருக்கிறவரே என்றுதான் ஆரம்பிக்கிறான். என்றாலும் என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும் என்று தனது பயத்தை வெளியரங்கமாய் அறிக்கையிடுகிறான். அந்த இரவு அவனுக்கு மிக துக்கமான ஒரு இரவுதான். அவனுடைய வாழ்க்கையிலே தானும் தன் குடும்பமும் ஜீவன் தப்ப வேண்டுமென்ற ஒரே ஒரு வாஞ்சையைத் தவிர வேறு எந்த வாஞ்சையும் அந்த இரவிலே அவனுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

ஆதியாகமம் 32 : 13 – 15

யாக்கோபு தனது ஆடுகளை லாபான் எடுத்துக்கொண்டபொழுது மிகவும் எரிச்சலாகவும், கோபமாகவும் சம்பளத்தை மாற்றுவதைக் குறித்துப் பேசினான். இப்பொழுது மிக தாராள மனதுடையவனாய் தன் சகோதரனுக்காக இத்தனை அதிகமான மிருக ஜீவன்களைப் பிரித்தெடுக்கிறான்.

ஆதியாகமம் 32 : 16

அருமையானவர்களே இது யாக்கோபின் மற்றும் ஒரு தந்திரம். மிக உன்னதமான வெகுமதிகளை முதலாவது தன் சகோதரனுக்கு அனுப்புகிறான். முதலாவது செல்லும் இருநூறு வெள்ளாடுகளையும், இருபது வெள்ளாட்டுக் கடாக்களையும் பார்த்தவுடனே அதை ஓட்டிச் சென்ற வேலையாட்களைப் பார்த்து இது என்ன? என்று கேட்பான். அப்பொழுது அந்த வேலைக்காரன் ஏசாவைப் பார்த்து: இது உமது சகோதரனாகிய யாக்கோபு உமக்கு அனுப்பிய வெகுமதி என்று கூறுவான். அப்பொழுது ஏசா அந்த வெகுமதியைப் பெற்றுக் கொண்டு யாக்கோபை சந்திக்கும்படியாக எதிர்கொண்டு மீண்டும் வருவான். சிறிது தூரம் அவன் வந்த பிறகு இருநூறு செம்மறி ஆடுகளையும் இருபது ஆட்டுக்கடாக்களையும் பார்ப்பான். அப்பொழுது நீங்கள் எங்கே போகிறீர்கள்? என்று வேலைக்காரர்களைப் பார்த்துக் கேட்பான். அப்பொழுது அந்த வேலைக்காரர்கள் யாக்கோபு என்னும் எங்கள் எஜமான் அவருடைய சகோதரனாகிய ஏசா என்பவருக்கு அனுப்பியிருக்கிற வெகுமதியைக் கொண்டு செல்கிறோம், என்று சொல்வார்கள். உடனே ஏசா, நான்தான் ஏசா என்னை நம்புங்கள் என்று சொல்வான். இவ்வாறாக தொடர்ந்து ஒவ்வொரு மந்தையாக அவன் சந்தித்து, சந்தித்து யாக்கோபை உண்மையாகவே சந்திக்கும் நேரம் வரும்பொழுது அவனுடைய இருதயம் மென்மையாகிவிடும் என்ற

www.Radio882.com

எண்ணத்திலேதான் யாக்கோபு இத்தனை ஆயத்தங்களையும், பரிவாரங்களையும் திட்டமிட்டுச் செயல்படுகிறான்.

யாக்கோபு தேவனிடத்திலே ஜெபித்து தேவனுக்கு நினைப்பூட்டினான். என்ன சொல்லியிருப்பான் என்று நினைக்கிறீர்கள்? நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து இந்த தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப் பண்ணுவேன், நான் உனக்கு சொன்னதை செய்யுமளவும் உன்னை கைவிடுவதில்லை என்று சொன்னீரே, உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப் போல பெருகப்பண்ணுவேன். என்று சொன்னீரே, என்று ஜெபிக்கிறான்.

ஆனால், உண்மையாக அவன் தேவனை விசுவாசித்தானா? இல்லை. யாக்கோபுக்கு இருந்த விசுவாசத்தை விட அவனுடைய மனதிலே எழும்பிய தந்திரங்கள் அதிகமானதாய் இருந்தன. எனவே தனது சகோதரனாகிய ஏசா தன்னைக் கொன்று போடாதபடி சில திட்டங்களை வகுத்து அவனுக்கு வெகுமதிகளை அனுப்புகிறான்.

அருமையான சகோதரனே சகோதரியே ஆபத்தான வேளைகளிலே ஆண்டவருடைய வாக்குத்தத்தங்களை நினைவு கூர்ந்தாலும், அவரை விசுவாசிப்பதைவிட தந்திரமான முயற்சிகளிலே நீங்கள் ஈடுபடுவீர்கள் என்றால் அது சரியானதல்ல. தேவனை மட்டும் நம்பி இருங்கள். எல்லா முயற்சிகளையும் நாம் விட்டுவிட்டு, அவருக்காக காத்திருக்கும்பொழுது அவர் செயல்படுவார். கர்த்தர் நிச்சயம் உங்களுக்கு விடுதலையைத் தருவார். எந்த ஆபத்தைக் குறித்து பயப்படுகிறீர்களோ, அந்த ஆபத்து உங்களுக்கு நேரிடாது.

நம்மில் அநேகர் நம்முடைய பாரங்களையும், கவலைகளையும் ஆண்டவரிடத்திலே கொண்டு போகிறோம். அவர் முன்னாலே வைக்கிறோம், அவ்வளவுதான். ஜெபித்து முடித்த உடனேயே, அந்தப் பாரத்தை மீண்டுமாக நம்முடைய தோள்களிலே சுமக்க ஆரம்பித்துவிடுகிறோம். ஆனால் நாம் பரிபூரணமாக விசுவாசிக்கிறதில்லை. அவரை நம்ப வேண்டிய அளவு அவரை நம்புகிறதில்லை.

ஆதியாகமம் 32 : 17 – 20

எனவே, நான் ஏற்கனவே கூறியதுபோல யாக்கோபின் திட்டம் இதுதான். ஏசா ஒவ்வொரு மந்தைகளையும் பார்க்கும்பொழுது அந்த வேலைக்காரர்கள் ஒவ்வொருவரும் இது ஏசாவாகிய அவருடைய சகோதரனுக்கு அனுப்பப்படுகிற வெகுமதி, அவர் பின்னாலே வருகிறார், என்று சொல்ல வேண்டும். அப்பொழுது அவனுடைய இருதயம் சாந்தப்படுத்தப்படும் என்று திட்டமிட்டுச் செயல்படுகிறான்.

ஆதியாகமம் 32 : 21 – 23

அருமையானவர்களே, யாக்கோபு தன்னுடைய வாழ்க்கையிலே ஒரு உன்னதமான

அனுபவத்தை இந்த இரவிலே பெற்றுக் கொள்கிறான். யாக்போக்கு என்கிற ஆற்றின் அடுத்தப் பகுதி மிகவும் தனிமையான ஒரு இடமாகும். அது மிகவும் பாலைவனமான ஒரு பகுதி; இரண்டு குன்றுகளுக்கு இடையிலான பகுதி அது; மலைப்பாங்கான பிரதேசமாகவும் அது இருக்கிறது. அந்த இரவிலே யாக்கோபு அந்த இடத்திற்கு வந்து சேர்ந்திருந்தான். அன்று யாக்கோபு ஒரு மகிழ்ச்சியான மனிதனாக இல்லை. சந்தேகங்களும், பயங்களும் நிறைந்தவனாய் இருக்கிறான்.

எதை விதைத்தானோ, அதை அறுக்கும் சூழ்நிலையிலே இருக்கிறான். ஏசாவுக்கு வெகுமதியை அனுப்பி வைத்தான். தேவனாகிய கர்த்தர் யாக்கோபைப் பார்த்து, சேஷ்ட புத்திர பாகத்தை நீ அவனிடத்திலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. தகப்பனாருடைய ஆசீர்வாதத்தைத் தவறான முறையிலே பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறவில்லை.

தேவன் ஏற்கனவே அவனுக்கென்று ஆசீர்வாதங்களைத் தீர்மானித்துவிட்டார். அந்த இரவிலே தனக்குண்டான எல்லாவற்றையும் நதிக்கு அப்புறத்திலே அனுப்பிவிட்டு, யாக்கோபு தனித்திருக்கிறான். ஏனென்றால் ஒருவேளை அவன் நினைக்கும் நேரத்தைவிட முன்னதாக ஏசா வந்து அவனை சந்தித்தாலும் அவனை மட்டுமே கொன்று போடுவானே ஒழிய அவனுடைய குடும்பம் தப்பித்துக் கொள்ளும் என்று எண்ணுகிறான். எனவே யாக்கோபு தனித்திருக்கிறான்.

ஆதியாகமம் 32 : 24

இந்த வேதப் பகுதியைக் குறித்து பலர் பலவிதமாய் விளக்கம் கொடுக்கலாம். யாக்கோபு ஒரு புருஷனோடே மல்யுத்தம் செய்தான் என்று சொல்வார்கள். அந்த இரவிலே யாக்கோபு யாருடனும் சண்டை செய்வதற்கு ஆயத்தமாக இல்லை. அவனுடைய முதுகுக்கு பின்னாலே மாமனாகிய லாபான் இருக்கிறான். யாக்கோபைக் குறித்து ஒரு பொழுதும் நன்மையான காரியத்தை சிந்திக்காதவன் அவன். யாக்கோபுக்கு எதிராக ஏசா எதிரே வந்து கொண்டிருக்கிறான். இந்த இரண்டு பேரோடேயும் யுத்தம் செய்து ஜெயிக்கக்கூடிய மனநிலையோ, தகுதியோ அவனுக்குக் கிடையாது. கடினமான ஒரு இடத்திற்கும் பாறைக்கும் இடையிலே அவன் மாட்டிக் கொண்டான். எந்தப் பக்கத்திலே திரும்ப வேண்டுமென்று அவனுக்குத் தெரியவில்லை. அப்படியென்றால், மற்றுமொரு எதிரியோடுப் போராட அவன் ஆயத்தமாயிருக்கிறான் என்று நினைக்கிறீர்களா? இல்லை. வீஷ்துள என்று சொல்லப்படும் ஒரு பத்திரிக்கையிலே மல்யுத்தம் செய்பவர்களைக் குறித்து எழுதிய ஒருவர், மல்யுத்தம் செய்த யாக்கோபுக்கு யாரும் வாக்களிக்கவில்லை, என்று எழுதியிருந்தார்.

இதை வாசித்த ஒரு மனிதன் அந்த பத்திரிக்கைக்கு கடிதம் எழுதி மல்யுத்த வீரனான யாக்கோபைக் குறித்து எங்களுக்கு எழுதுங்கள், என்று கேட்டு எழுதியிருந்தார். காரணம்

என்ன தெரியுமா? யாக்கோபைக் குறித்து அவர் கேள்விப்பட்டதில்லை, வேதப் புத்தகத்தையே வாசித்ததில்லை. அதுமட்டுமல்ல, யாக்கோபு மல்யுத்தம் செய்யவுமில்லை. அந்த இரவிலே அவன் தனித்திருந்தான், ஏனென்றால் அவன் தனியாக இருக்க விரும்பினான். யாரோடும் யுத்தம் செய்ய அவன் ஆயத்தமாக இல்லை. சரி, அப்படியென்றால் இங்கே ஒரு கேள்வி எழும்புகிறது. அந்த இரவிலே யாக்கோபோடு போராடியது யார்? இதைக் குறித்து பலர் பலவிதமானக் கருத்துகளைச் சொல்லலாம். ஆனால் அன்று யாக்கோபோடு போராடியது இந்த உலகத்திலே மனிதனாக தோன்றுமுன், இருந்த கிறிஸ்துவே.

இதைக் குறித்த ஒரு வெளிப்பாடு நமக்கு ஓசியா தீர்க்கத்தரிசனப் புத்தகத்திலே இருக்கிறது. ஓசியா 12ஆம் அதிகாரம் முதல் 5 வசனங்களை கவனமாகப் பாருங்கள்.

எப்பிராயீம் காற்றை மேய்ந்து, கொண்டற்காற்றைப் பின்தொடருகிறான்; அவன் நாள்தோறும் பொய்யையும் கேட்டையும் வர்த்திக்கப்பண்ணி, அசீரியரோடே உடன்படிக்கை பண்ணுகிறான்; எகிப்துக்கு எண்ணெய் கொண்டுபோகப்படுகிறது.

யூதாவோடும் கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; அவர் யாக்கோபை அவன் வழிகளுக்குத்தக்கதாக விசாரிக்கப்போகிறார்; அவன் கிரியைகளுக்குத்தக்கதாக அவனுக்கு நீதியைச் சரிக்கட்டுவார்.

அவன் தாயின் கர்ப்பத்திலே தன் சகோதரனுடைய குதிகாலைப் பிடித்தான்; தன் பெலத்தினால் தேவனோடே போராடினான்.

அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான், அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான்; பெத்தேலிலே அவர் அவனைக் கண்டு சந்தித்து, அவ்விடத்திலும் நம்மோடே பேசினார்.

கர்த்தராகிய அவர் சேனைகளின் தேவன்; யேகோவா என்பது அவருடைய நாமசங்கீர்த்தனம்.

எனவே பிரியமானவர்களே அது யேகோவாதான். கிறிஸ்துவாக இந்த உலகத்திலே வரும்முன் அவர் செய்த ஒரு மகத்துவமான செயல்.

ஆதியாகமம் 32 : 25

யாக்கோபு எளிதாக விட்டுவிடுகிறவனாக இல்லை, எப்பொழுதுமே அதுதான் அவனுடைய குணநலன். தன்னோடு போராடினவரோடு தொடர்ந்து போராடுகிறான். இறுதியாக அவனோடு போராடினவர் அவனுடைய தொடைச் சந்தைத் தொட்டார். அது சுளுக்கிற்று;

ஆதியாகமம் 32 : 26

இப்பொழுது என்ன நடந்தது? யாக்கோபு அவரை விடுவதாக இல்லை, அவன்

www.Radio882.com

போராடவும் இல்லை, தன்னோடு போராடினவரைப் பிடித்துக் கொண்டிருக்கிறான். தேவனோடு போராடுவதினாலோ, எதிர்ப்பதினாலோ, எதையுமே பெற்றுக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொள்கிறான். தேவனோடு ஒத்துச் செல்ல வேண்டுமென்றால், அவருக்கு அர்ப்பணித்து அவரை எப்பொழுதும் பற்றிக் கொள்ள வேண்டும். ஆபிரகாம் இதைக் கற்றிருந்தன, எனவேதான் தேவன் கூறிய காரியங்களுக்கு ஆபிரகாம் சரி ஆண்டவரே என்று சொல்லியிருந்தான்.

ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது; ஆபிரகாம் தன்னுடைய வாழ்க்கையிலே பரிபூரணமாக தேவனை சார்ந்து கொண்டான். எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, அப்படிப்பட்ட நிலைமைக்கு நீங்கள் எப்பொழுது வருவீர்கள்? எப்பொழுது நீங்கள் பரிபூரணமாகக் கர்த்தரையே எல்லாக் காரியங்களுக்கும் நம்புவீர்கள்? எப்பொழுது எல்லா சூழ்நிலையிலேயும் அவரையே பற்றிக் கொண்டிருக்கப்போகிறீர்கள்? உங்களுக்கு உதவி செய்ய அவர் காத்துக் கொண்டிருக்கிறார்.

ஆதியாகமம் 32 : 27, 28

அருமையானவர்களே இனி அவன் யாக்கோபு என்று அழைக்கப்படப் போவதில்லை, யாக்கோபு என்றால் எத்தன் என்று பொருள். ஆனால் இனி அவனுடைய பெயர் இஸ்ரவேல். காரணம் என்ன? தேவனோடும் மனிதனோடும் போராடி மேற்கொண்டான். இனிமேல் இந்த இஸ்ரவேலின் குணநலன்கள், இந்த மனிதனுடைய வாழ்க்கையிலே வெளிப்படும்.

ஆதியாகமம் 32 : 29, 30

தன்னோடு போராடியவர் தேவனே என்பதை உணர்ந்தவனாக அவருக்குத் தன்னை அர்ப்பணித்தான்; அப்படி அவன் தன்னை அர்ப்பணித்தபொழுது தேவன் அவனை ஆசீர்வதிக்கிறார். அவனுடைய வாழ்க்கையையே மாற்றியமைக்கிறார்.

அருமையான சகோதரனே, சகோதரியே, இன்று உங்களோடு போராடிக் கொண்டிருப்பது தேவன் என்பதை நீங்கள் அறிவீர்களா? அப்படியென்றால் உங்கள் வாழ்க்கையை அவருக்கு அர்ப்பணியுங்கள்.

ஆதியாகமம் 32 : 31, 32

தேவன் யாக்கோபைப் பிடிப்பதற்காக அவனை முடமாக்க வேண்டியதிருந்தது. ஆனால் தேவன் அதைச் செய்தார். முதலாவதாக இவன் விட்டுக் கொடுக்கிறவனாக இல்லை. அவனுக்கு ஒருசில பிடிமுறைகள் தெரிந்திருக்கும், அதைக்கொண்டு வென்றுவிடலாம் என்று எண்ணினான். ஆனால் சற்று நேரத்திலே தான் மேற்கொள்ள முடியாது என்பதை அவன் உணர்ந்துகொண்டான். என்றாலும் அவன் தன்னைப் பரிபூரணமாக விட்டுக்கொடுக்கவில்லை. எனவே தேவன் என்ன செய்தார்? அவருடைய

www.Radio882.com

வலிமையினாலே யாக்கோபைத் தொட்டார். தேவனுடைய சத்தத்தைக் கேட்டு அவருடைய தொடுதலை உணர்ந்து இருதயத்தை ஒப்புக்கொடுக்க வேண்டியதுதான் நம்முடைய பொறுப்பு.

தேவன் எப்படி செயல்பட்டார் என்று கவனித்தீர்களா?

யாக்கோபுடைய தொடைச் சந்தைத் தொட்டார், தேவனுடைய ஒரு விரலின் தொடுதலினாலே மனிதன் உதவியற்றவனாகிறான். தேவன் அவனுடைய தோளைப்பிடித்து அவனைக் கீழேத் தள்ளவில்லை. தொடை சந்தைத்தான் தொட்டார். எனவே யாக்கோபு தொடர்ந்து அவரைப் பிடித்துக் கொண்டிருக்கிறான். அப்பொழுதுதான் அவர் சொல்கிறார், நான் போகட்டும், பொழுது விடிகிறது. அப்பொழுது யாக்கோபு, இல்லை, உம்முடைய ஆசீர்வாதம் எனக்கு வேண்டும் என்கிறான்.

தேவனில்லாமல், அவருடைய ஆசீர்வாதம் இல்லாமல் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணர்ந்து அவனை ஒப்புக்கொடுக்கிறான். உடனடியாகவே அவனுடைய வாழ்க்கையிலே ஒருவேளை மாற்றத்தைக் காணமுடியாது. அநேகக் காரியங்களை நாம் செய்வது நம்முடைய பழக்கமாயிருக்கிறது. எனவே பலமுறை இந்த மனிதனும் பின்வாங்கினான், ஆனால் இப்பொழுது தன்னுடைய வாழ்க்கையிலே ஒரு வித்தியாசத்தை அவன் காண ஆரம்பிக்கிறான். யாக்கோபைக் குறித்து கற்று முடிக்கும் முன்பதாக எப்படி அவன் தேவனுடைய மனிதனாய் இருந்தான் என்பதை நாம் பார்க்கப் போகிறோம்.

முதலாவது அவனுடைய தகப்பன் வீட்டிலே யாக்கோபைப் பார்த்தோம். பின்னாலே ஆரானிலே அவனை நாம் பார்த்தோம், அங்கே எல்லாம் அவன் மாம்சீக மனிதனாய் இருந்தான். இங்கே பெனியேல் வரும்பொழுது யாப்போக்கே நதியண்டையிலே போராடுகிற ஒரு யாக்கோபை பார்க்கிறோம். இதற்குப் பின்னால் எகிப்திற்குச் செல்லும் வரை ஒரு விசுவாச மனிதனாக அவனை நாம் பார்க்கலாம்.

முதலாவது மாம்சீகமான மனிதன். போராடிக் கொண்டு, சண்டையிட்டுக் கொண்டிருந்தவன். இறுதியிலே விசுவாச மனிதனாய் மாறினான். புதிய ஏற்பாட்டிலேயும் தரிசு பட்டணத்தைச் சேர்ந்த சவுல் தனது வாழ்க்கையிலேயுள்ள போராட்டத்தைக் குறித்து ரோமர் 7ஆம் அதிகாரத்திலே எழுதியிருக்கிறார். அவருடைய வாழ்க்கையிலே மூன்று காலக்கட்டங்கள் இருந்தன, அவன் மனம் திருந்திய பொழுது முழுமையாக ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை வாழலாம் என்று எண்ணினான். இன்றும் அநேகக் கிறிஸ்தவர்கள் இந்தத் தவறைச் செய்கிறார்கள். இரட்சிக்கப்பட்ட உடனேயே பரிபூரணமாகக் கிறிஸ்துவைப் போல வாழலாம் என்று எண்ணுகிறார்கள். அது எளிது என்று எண்ணுகிறார்கள். இல்லை, பிரியமானவர்களே, அதுதான் கடினமானப் பகுதி. இந்த இடத்திலேதான் அப்போஸ்தலனாகிய பவுலும் தனது போராட்டத்தைக் குறித்து ரோமர் 7ஆம் அதிகாரம்

www.Radio882.com

19ஆம் வசனத்திலே எழுதியிருக்கிறார்.

நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன் என்கிறார்.

பழைய சுபாவத்திலே நன்மை எதுவும் இல்லை என்பதைக் கண்டுகொண்டது மட்டுமல்ல, புதிய சுபாவத்திலேயும் எந்த பெலனும் வல்லமையும் இல்லை என்பதும் கண்டுகொண்டார், இறுதியாக அவருடைய கூக்குரலை ரோமர் 7 : 24 லிலே வாசிக்கிறோம்.

நிர்ப்பந்தமான மனுன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?

அதைத் தொடர்ந்து ஒரு காரியம் நடைபெறுகிறது. 25ஆம் வசனத்திலே என்ன சொல்கிறார் பாருங்கள்,

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

அருமையான சகோதரனே, சகோதரியே, அவர் மூலமாகவே எல்லாக் காரியங்களையும் நாம் சிந்திக்க வேண்டும். ஏனென்றால் அங்கேதான் நமக்கு உதவி இருக்கிறது. அவர் மூலமாகவே நமக்கு உதவி வரப்போகிறது.

ரோமர் 7 : 25இன் பின்பகுதி பாருங்கள்.

ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்.

எல்லாருடைய வாழ்க்கையிலேயும் இதுதான் உண்மை. பிரியமானவர்களே, பழைய சுபாவம் நமக்குள்ளே இருக்கிறது. தேவனை பிரியப்படுத்தக் கூடிய எந்த காரியத்தையும் அதால் செய்ய முடியாது. சொல்லப்போனால் அது தேவனுக்கு எதிராக செயல்படத் துடிக்கிறது. ரோமர் 8ஆம் அதிகாரம் 7ஆம், 8ஆம் வசனம் பாருங்கள்,

எப்படியென்றால், மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது.

மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்.

நம் மாம்ச சரீரத்திலே நாம் தேவனைப் பிரியப்படுத்த முடியாது, இறுதியாக தூய ஆவியானவருக்கு விட்டுக் கொடுப்பதினாலே கிடைக்கும் வெற்றியை அப்போஸ்தலனாகிய பவுல் கண்டுகொண்டார். நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்க்கையிலே செயல்படுத்த முடிகிறது.

எப்படி ஒருவர் அதைச் செய்யமுடியும்? பரிபூரணமாக அவருக்கு நம்மையே நாம் அடிமைகளாக ஒப்புக்கொடுக்கும்வரை அதைச் செய்யமுடியாது; ஒப்புக்கொடுத்தல் என்று சொல்வதென்றால், மறுபடியும் பிறந்த மனிதராகிய நாம் நம்முடைய வாழ்க்கையின் எல்லா

www.Radio882.com

காரியங்களையும் தேவனுடைய சித்தத்திற்கு என்று ஒப்புக்கொடுப்பது. அதைத்தான் யாக்கோபு செய்தான். யாக்கோபு வெற்றி கண்டான்.

போராடியதினாலே யாக்கோபு வெற்றியைப் பெற்றுக்கொள்ளவில்லை. விட்டுக் கொடுத்ததினாலே அவன் வெற்றியைப் பெற்றுக் கொண்டான். யாக்கோபுடைய வாழ்க்கையிலே இது ஏன் நடந்தது?

1 கொரிந்தியர் 10 : 11 பாருங்கள்.

இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.

அருமையான சகோதரனே, சகோதரியே இன்றும் நீங்கள் தேவனோடு போராடிக் கொண்டு இருப்பீர்கள் என்றால், போராடுவதை நிறுத்திவிட்டு ஆண்டவரே என்னாலே முடியாது, நீர் என்னை ஆசீர்வதியும், நீர் உம்முடைய தூய ஆவியின் வல்லமையை எனக்குத் தாரும், உமக்குப் பிரியமானதையே விரும்ப, உமக்கு பிரியமானதைச் செய்ய உம்முடைய தூய ஆவியின் பெலனைத் தாரும் என்று கேளுங்கள். நிச்சயமாக அவர் உங்களுடைய வாழ்க்கையை மாற்றி அமைக்க ஆவல் உள்ளவராய் இருக்கிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பிறகும் ஏன் எனக்கு இந்த சோதனை என்ற கேள்விக்குறியோடு இருக்கும் சகோதரனே, சகோதரியே, பழைய மனுன் மரணபரியந்தம் நமக்குள்ளேதான் இருப்பான். ஆனால் உங்களுக்குள்ளே கொடுக்கப்பட்டிருக்கிற அந்தப் புதிய மனுன் தேவனை சார்ந்து கொள்ளும்பொழுது, பரிசுத்த ஆவியானவரின் பெலனைப் பெற்றுக்கொள்ளும்பொழுது, வெற்றியோடு வாழ அவர் உங்களை வழிநடத்துகிறவராய் இருக்கிறார்.

ஏசாவும் யாக்கோபும் ஒருவரை ஒருவர் சந்திப்பதைக் குறித்து இந்தப் பகுதியிலே வாசிக்கிறோம். இந்த நேரம் முதல் யாக்கோபின் வாழ்க்கையிலே ஒரு மாற்றத்தை நாம் காணப்போகிறோம். இந்த அதிகாரத்தை நாம் படிக்கும்பொழுது புதிய ஒரு மனிதனை நாம் சந்திக்கிறோமோ என்று நமக்கு எண்ணத் தோன்றும்.

ஆம். பிரியமானவர்களே யாக்கோபு என்ற இஸ்ரவேல் இப்பொழுது ஒரு புதிய மனிதன் தான்.

ஆதியாகமம் 33

ஆதியாகமம் 33 : 1

இப்பொழுது அவன் செய்வது என்ன? தன்னுடைய குடும்பத்தை எப்படியாவது பாதுகாத்து விட வேண்டுமென்று எல்லாரையும் தனித்தனியாகப் பிரித்து வைக்கிறான்.

ஆதியாகமம் 33 : 2, 3

www.Radio882.com

அருமையானவர்களே, யாக்கோபு சகோதரனாகிய ஏசாவை சந்திக்கும் நிகழ்ச்சியை ஒரு படமாக எடுத்திருப்பார்கள் என்றால் நன்றாக இருந்திருக்கும், இல்லையா? ஒரு மைல் தூரத்திற்கு அப்பால் இருக்கும்பொழுதே அவன் குனிந்து குனிந்து வணங்க ஆரம்பித்திருப்பான். தலையிலே தலைப்பாகைக் கட்டிக்கொண்டு வந்திருப்பான் என்றால், அதையெல்லாம் எடுத்து இடுப்பிலே கட்டியிருந்திருப்பான். ஏசா ஏன் 400 மனிதர்களோடே வருகிறான்? அவன் நண்பனாக வருகிறானா? எதிரியாக வருகிறானா? என்பது தெரியாது.

ஆதியாகமம் 33 : 4

இரண்டுபேரும் இரட்டைப் பிள்ளைகள், சகோதரர்கள். யாக்கோபைக் கொலை செய்ய வேண்டும் என்றிருந்த ஏசாவும் இப்பொழுது தேவனால் தொடப்பட்டவனாக மனம் மாறிய அன்போடு சகோதரனை சந்திக்கிறான்.

ஆதியாகமம் 33 : 5 – 7

இப்பொழுது யாக்கோபு தனது குடும்பத்தை ஒவ்வொருவராக அறிமுகப்படுத்துகிறான்.

ஆதியாகமம் 33 : 8

அருமையானவர்களே, கவனித்தீர்களா? இப்பொழுது தன்னுடைய உள்ளத்தில் உள்ளதை உள்ளபடி அவன் சொல்கிறான். உள்ளத்திலே ஒன்று வைத்துக் கொண்டு வாயிலே ஒன்று பேசவில்லை. தனக்கு ஏசாவின் தயவு வேண்டுமென்று தான் அனுப்பிவைத்த வெகுமதிகளைக் குறித்துச் சொல்கிறான். அது வேலை செய்தது என்றும் நினைக்கிறான். ஆனால் உண்மையாகவே அது தேவையில்லை. காரணம் என்ன? ஏசா என்ன சொல்கிறான் பாருங்கள்,

ஆதியாகமம் 33 : 9

யாக்கோபே இதையெல்லாம் நீ எனக்கு அனுப்பத் தேவையில்லை. எனக்கு ஏற்கனவே தேவையானது இருக்கிறது என்று கூறிவிடுகிறான்.

ஆதியாகமம் 33 : 10, 11

இந்த சம்பவத்தை வாசிக்கும்பொழுது உங்களிலே எத்தனைபேர் நகைத்தீர்களோ எனக்குத் தெரியாது; உண்மையாகவே எனக்கு அதிக சிரிப்பு வந்தது. இந்த நேரம் வரை ஒவ்வொருவரும் மற்றவர்களுடையதை எப்படியாவது எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். குறிப்பாக யாக்கோபை பொறுத்தமட்டிலேயும் அது மிக உண்மை. இப்பொழுது யாக்கோபு ஒரு புதிய மனிதனாகச் செயல்படுகிறான். தனது சகோதரனாகிய ஏசா தான் கொடுக்கும் வெகுமதிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறான். எனக்கு ஏற்கனவே நிறைய இருக்கிறது எனக்கு வேண்டாம் என்று சொன்னாலும், என் காணிக்கையை ஏற்றுக் கொள்ளும் என்று சொல்லி அவனை

www.Radio882.com

வருந்திக் கேட்டுக் கொண்டான் என்று வாசிக்கிறோம்.

அருமையானவர்களே, இப்பொழுது நம்புகிறீர்களா? யாக்கோபுடைய வாழ்க்கையிலே ஏதோ, நடைபெற்றிருக்கிறது. இந்த இடத்திலே யாக்கோபினுடைய வாழ்க்கை புதிய ஏற்பாட்டிலுள்ள சகேயுவை நமக்கு நினைவுப்படுத்துகிறது இல்லையா? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவனை மரத்திலிருந்து இறங்கி வரும்படியாக அழைத்து, அவனுடைய வீட்டிற்கு நேராக அவனோடு தங்கச்செல்லும்படியாய் நடந்து போய்க்கொண்டிருக்கும்பொழுதே சகேயுவினுடைய உள்ளத்திலே ஏதோ நடைபெற்றது. அவன் மரத்திலே ஏறும்பொழுது எப்படிப்பட்ட மனிதனாக இருந்தானோ இப்பொழுது அப்படிப்பட்ட மனிதனாக இல்லை. மக்களுடைய பணத்தைத் திருடும் வரி வசூலிக்கும் அதிகாரியாக அவன் இப்பொழுது இல்லை. இப்பொழுது எல்லாவற்றையும் திரும்பக் கொடுக்க நினைக்கிறான்.

தவறான வழியிலே அவன் எடுத்துக் கொண்டதை மட்டுமல்ல, தனக்கு உண்டானதிலும் மற்றவர்களுக்கு நான்கத்தனையாய் கொடுக்க விரும்புகிறான். எவ்வளவு பெரிய ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது இல்லையா? இயேசு கிறிஸ்து யாருடைய வீட்டிலே வந்திருக்கிறார் என்பது அவர்களுடைய வாழ்க்கை மூலமாகவேத் தெரியும்.

உங்கள் உள்ளங்களிலேயும், உங்கள் இல்லங்களிலேயும் இயேசு கிறிஸ்து வந்துவிட்டார் என்று சொன்னால் உங்கள் நடைமுறை வாழ்க்கையிலேயே மாற்றம் தெரியும்.

இங்கே உண்மையாகவே யாக்கோபினுடைய உள்ளத்திலே ஏதோ மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. முன்னொரு காலத்திலே ஒரு நேரக் கூழுக்காக சேஷ்ட புத்திர பாகத்தையே விலைக்கு வாங்கினவன், இருநூற்றி இருபது வெள்ளாடுகளையும், இருநூற்றி இருபது செம்மறி ஆடுகளையும் முப்பது ஒட்டகங்களையும் அதன் குட்டிகளையும், நாற்பது கடாரிகளையும், பத்து காளைகளையும், இருபது கோளிகை கழுதைகளையும் பத்து கழுதை குட்டிகளையும் மனமுவந்து கொடுக்கிறான். இறுதியாக ஏசா அதை ஏற்றுக் கொள்கிறான். அந்நாட்களிலே யாராவது வெகுமதி கொடுத்து அதை வேண்டாம் என்றுச் சொன்னால் அது முறையாகாது. அது அவர்களைப் புண்படுத்தியது போல ஆகிவிடும். எனவே கடைசியாக ஏசா அதை ஏற்றுக் கொள்கிறான்.

ஆதியாகமம் 33 : 12

நீ நமது தேசத்திற்குத் திரும்பி வந்திருக்கிறபடியினால், நான் உனக்கு முன்னாலே போகிறேன். வழிகாட்டியாக பாதுகாவலாக நான் முன்னாலே செல்கிறேன் என்கிறான். அதற்கு யாக்கோபு என்ன சொல்கிறான் பாருங்கள்.

ஆதியாகமம் 33 : 13

நான் எனது குடும்பத்தோடு வருகிறேன், சிறுபிள்ளைகள் இருக்கிறார்கள், ஆட்டுக்

குட்டிகளெல்லாம் இருக்கின்றன. எனவே நாங்கள் வேகமாக வரமுடியாது. நீ முன்னாலே போ, நான் பின்னாலே வருகிறேன் என்று சொல்கிறான்.

ஆதியாகமம் 33 : 14

யாக்கோபு கூறுவதென்ன? நீங்கள் துரிதமாக நடப்பது போல என்னுடைய பிள்ளைகளோ, மந்தையோ வேகமாக வரமுடியாது. அவர்களுக்குத் தக்கதாக நான் அவர்களை நடத்திக் கொண்டுவருகிறேன். நீர் உமது அடியானுக்கு முன்னே போம் என்று சொல்கிறான்.

ஆதியாகமம் 33 : 15, 16

ஏசா ஏதோமியரின் தேசமான சேயீரிலே தங்கி இருந்தான். உபாகமம் 2ஆம் அதிகாரம் 5ஆம் வசனத்திலே நாம் பார்க்கிறது போல, தகப்பனாருடைய மரணத்திற்குப் பிறகு சேயீரின் மலையிலே அவன் தங்கியிருந்தான். அந்தப்பகுதியை தேவன் ஏசாவின் சந்ததியினருக்குக் கொடுத்தார்.

ஆதியாகமம் 33 : 17

அருமையானவர்களே, இங்கே என்ன நடைபெற்றது என்பதை நாம் ஆழமாகக் கற்றுக் கொள்ளாமல் வேகமாகக் கடந்து சென்றுவிடக்கூடாது. யாக்கோபுடைய வாழ்க்கையை நாம் பார்ப்போமென்றால், அங்கே மிகப் பெரிய ஒரு மாற்றம் நடைபெற்றிருக்கிறது. தனது சகோதரனாகிய ஏசாவை சாந்தப்படுத்துவதற்காகத் தந்திரமாக அவன் அனுப்பிய வெகுமதி ஒன்றும் வேலைசெய்யவில்லை. ஏனென்றால் ஏற்கனவே ஏசாவின் இருதயத்தை தேவன் ஆயத்தப்படுத்திவிட்டார். சந்தோமாய் தனது சகோதரனை சந்திக்கும்படியாகக் கர்த்தர் அவனை வழிநடத்தினார். அதுமட்டுமல்ல தீமை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு யாக்கோபின் பின்னாலே வந்த லாபானிடத்திலேயும் தேவன் பேசி எந்தக் கெடுதியையும் செய்யக் கூடாது என்று சொல்லி விட்டார்.

இப்பொழுது அவனுக்கு முன்னும் பின்னும் சமாதானம் நிலவுகிறது. யாக்கோபு கொடுத்த எந்த வெகுமதியும் ஏசாவுக்குத் தேவையில்லை, ஏனென்றால் அவனுக்கே அதிகமான செல்வம் இருக்கிறது. யாக்கோபு கட்டாயப்படுத்தின படியினாலேதான் அந்த வெகுமதிகளை அவன் ஏற்றுக் கொள்கிறான். இரண்டு சகோதரர்களுமே இப்பொழுது உண்மையாகவே ஒருவரை ஒருவர் மன்னித்து பரந்த மனமுள்ளவர்களாய் காணப்படுகிறார்கள். இந்த சூழ்நிலையைக் குறித்து நாம் எந்த விதத்திலேயும் சந்தேகப்பட வேண்டியதில்லை. ஏசாவும் செல்வந்தனாய் இருக்கிறான். தனது சேஷ்ட புத்திர பாகத்தை மிகப்பெரிய ஒரு காரியமாய் அவன் எண்ணவில்லை. எனவே யாக்கோபின் மேலே இருந்த கோபம் போய்விட்டது.

அருமையான சகோதரனே, அருமையான சகோதரியே, ஒருவனுடைய வழிகள்

www.Radio882.com

கர்த்தருக்குப் பிரியமானதாய் இருந்தால் அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானம் ஆகும்படி செய்வார் என்று நாம் வாசிக்கிறோம். உங்களுக்கு எதிராகப் பலர் பலவிதமாய் பேசுகிறார்கள், செயல்படுகிறார்கள் என்ற எண்ணத்தோடு இன்றைக்கு இருக்கிறீர்களா? உங்கள் வாழ்க்கையை நீங்கள் ஆராய்ந்து பாருங்கள். உங்கள் வாழ்க்கையிலே விட்டுவிடவேண்டிய காரியங்கள், கற்றுக் கொள்ளவேண்டிய காரியங்கள், மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டிய காரியங்களைக் குறித்து தேவன் உங்களோடு பேசுவாரென்றால் அவருடைய சித்தத்திற்கு உங்களுடைய வாழ்க்கையைப் பரிபூரணமாய் அர்ப்பணியுங்கள். உங்களுடைய வாழ்க்கை தேவனுக்குப் பிரியமாயிருந்தால் உங்களுடைய சத்துருக்களும் நிச்சயமாக உங்களோடு சமாதானம் ஆவார்கள். யாக்கோபின் மேலே இப்பொழுது சூரியன் பிரகாசிக்கிறது என்று சொல்லலாம். லாபான் சமாதானத்தோடு திரும்பிப் போய்விட்டான். ஏசா மனமகிழ்ச்சியோடு சகோதரனை ஏற்றுக்கொண்டுவிட்டான். கர்த்தரே இவை எல்லாவற்றையும் நடப்பித்தார். யாக்கோபினுடைய சொந்த செயல்பாட்டிற்கும் தந்திரத்திற்கும் தேவன் அவனை விட்டுவிட்டிருப்பார் என்றால் ஒரு பயங்கரமான யுத்தத்திலே அவன் மரித்திருப்பான். சீக்கிரமாக யாக்கோபு தனது வாழ்க்கையைப் பின்னாலேத் திரும்பிப்பார்த்து, தேவனுடைய கரம் அவனுடைய வாழ்க்கையிலே எப்படி செயல்பட்டிருக்கிறது என்பதைக் கண்டு, தேவனை மகிமைப் படுத்தப் போகிறான். என்றாலும் அவன் விதைத்தது எல்லாம் இன்னமும் விளைந்து முடியவில்லை. பிரச்சனை அங்கே அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. ஏசா சேயீருக்குப் போய்விடுகிறான். மீண்டுமாக ஒருவரை ஒருவர் சந்திப்போம் என்று சொல்லி விடைபெற்றுக் கொள்கிறார்கள்.

ஈசாக்கின் அடக்க ஆராதனையிலே மீண்டுமாக அவர்கள் சந்திப்பார்கள்.

ஆதியாகமம் 33 : 18, 19

இந்தப் பகுதியைக் கற்றுக் கொள்ளும்பொழுது ஒருவேளை அவன் பெத்தேலுக்குப் போகாமல் இங்கே சாலேம் என்னும் சீகேமினுடைய பட்டணத்திற்கு அருகே கூடாரம் போட்டுவிட்டானே என்று சொல்லலாம். யாக்கோபு நொண்டி, நொண்டி வந்தபடியினாலே ஆவிக்குரிய வாழ்க்கையிலேயும் கொஞ்சம் கொஞ்சமாகவே கற்றுக்கொள்கிறான்.

ஆதியாகமம் 33 : 20

ஆவிக்குரிய வாழ்க்கையிலே நடக்கத் துவங்கி இருக்கும் இந்த மனிதனுடைய வாழ்க்கையிலே காணப்படுகிற ஒரு வளர்ச்சியை இது நமக்குக் காட்டுகிறது.

அருமையானவர்களே, யாக்கோபு தான் தேவனுக்கு வாக்குக்கொடுத்தபடியே பெத்தேலை நோக்கித்தான் போய்க்கொண்டிருக்கிறான். ஆனால் இன்னமும் அங்கே அவன் சென்றடையவில்லை. 33ஆம் அதிகாரத்திலே நாம் கடந்து வந்த சில வசனங்களை ஒரு முறை கூட பார்ப்போம். வசனம் 10 இல் உம்முடைய கண்களில்

எனக்குத் தயவு கிடைத்ததேயானால், என் வெகுமதியை என் கையிலிருந்து ஏற்றுக்கொள்ளும் என்று வாசிக்கிறோம்.

அருமையான சகோதரனே, சகோதரியே, நம்முடைய வாழ்க்கையிலே நாம் தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்வதோடு கூட மனுருடைய தயவையும் பெற்றுக் கொள்வது அவசியமானதாய் இருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து நாம் வாசிக்கும் பொழுது லூக்கா 2ஆம் அதிகாரம் 52ஆம் வசனத்திலே,

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.

நம்முடைய வாழ்க்கையிலேயும் நாம் மற்றவர்களிடத்திலே தயவை பெற்றுக் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோம். அதே நேரத்திலே மற்றவர்களுக்கு தயவு காண்பிக்க வேண்டியவர்களாயும் இருக்கிறோம். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் கலாத்தியர் 5ஆம் அதிகாரத்திலே ஆவியின் கனியைக் குறித்து சொல்லும்பொழுது ஆவியின் கனியோ அன்பு, சந்தோம். சமாதானம், நீடிய பொறுமை, தயவு என்று சொல்கிறார்.

நம்மைப் பார்க்கிறவர்கள், நம்மோடு பழகுகிறவர்கள், நம்மோடு இடைபடுகிறவர்கள், நமக்குக் கீழே வேலை செய்கிறவர்கள் அல்லது நம்முடைய அதிகாரிகள் நம்முடைய வாழ்க்கையிலே நாம் தயவுள்ளவர்கள் என்று கண்டுகொள்ள முடியுமா?

நாம் பார்த்த இந்த வேதப் பகுதியிலே யாக்கோபுக்கு ஏசாவின் தயவு தேவையானதாய் இருக்கிறது. இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக என்னதான் ஒருவர்மேல் ஒருவர் பகையோடு பிரிந்து சென்றாலும், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து, தேவன் யாக்கோபுக்கும் அவன் சந்ததிக்கும் கொடுப்பேன் என்று சொன்ன வாக்குத்தத்தப் பூமியைப் பெற்றுக்கொள்வதற்கு அங்கு கடந்து சென்றபொழுது சகோதரனாகிய ஏசா தயவோடு யாக்கோபை ஏற்றுக்கொண்டதைக் குறித்து நாம் வாசிக்கிறோம்.

அருமையான சகோதரனே சகோதரியே, யாக்கோபு அனுப்பிய வெகுமதியினாலே ஏசாவின் இருதயம் மாற்றப்பட்டு இருக்கிறது என்று யாக்கோபு நினைப்பானென்றால் அவன் செய்வது தவறு. தேவனே ஏசாவினுடைய இருதயத்தை மாற்றி அமைத்து யாக்கோபுக்குத் தயவு காட்டும்படியாய் செய்தார் என்று நாம் திட்டமாய் சொல்லலாம். ஏசாவையும் தேவன் ஆசீர்வதித்தார் என்று ஏசாவின் வார்த்தைகளிலேயே நாம் அறிந்து கொள்கிறோம்.

இரண்டாவதாக இந்த அதிகாரத்திலே நாம் நம்முடைய நினைவிலே ஆழமாய் வைக்க வேண்டிய மற்றுமொரு காரியம், நமக்கு விரோதமாய் யார் துரோகம் பண்ணியிருந்தாலும், நமக்குரியதை எடுத்துக் கொண்டவர்களாய் இருந்தாலும், அவர்களையும் மனமுவந்து நாம் மன்னிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சிலரை இந்த உலகத்திலே நாம் மன்னித்து விடுகிறோம். ஆனால் நாம் மறந்து போகிறதில்லை. மீண்டுமாக அவருடைய முகத்தை

www.Radio882.com

பார்க்கும்போதோ, அவருடைய பெயரை வேறு யாராவது சொல்லும்பொழுதோ அவர்கள் செய்த துரோகம் நம்முடைய உள்ளத்திலே நினைவுக்கு வந்து நம்மை வேதனைப்படுத்துகிறது. அப்படிப்பட்ட எண்ணங்களில் இருந்தும் நாம் விடுதலை பெற்றவர்களாய் வாழும்பொழுதே உண்மையான சமாதானம் சந்தோம் உள்ளவர்களாய் வாழ முடியும்.

அப்படி யாரைக் குறித்த பாரமாவது இன்னமும் நம்முடைய உள்ளத்திலே இருக்கும் என்றால் இந்த நாளிலே தானே ஏசா தன்னை ஏமாற்றிய தன் சகோதரனை முழு இருதயத்தோடு மன்னித்து அவனை அன்போடு வரவேற்றது போல நாமும் வரவேற்கத்தக்கதாக மற்றவர்களை மன்னிக்க நாம் தீர்மானம் செய்வோமா? யாக்கோபும் தனது தாத்தாவாகிய ஆபிரகாமைப் போல தான் வசிப்பதற்கான இடத்தைக் கூட பணம் கொடுத்து வாங்குகிறான்.

உலகத்திலே நாம் முக்கியமான பொறுப்பிகளிலே இருந்தாலும் அல்லது செல்வச் செழிப்புள்ளவர்களாய் இருந்தாலும், மற்றவர்களுடைய மதிப்பைப் பெற்ற ஒரு நிலைமையில் இருந்தாலும் நமக்கு பயன்படுத்துவதற்கு என்று வாங்கும் காரியங்களை சரியான விலை கொடுத்து வாங்குவதே சிறந்தது. மற்றவர்களுடைய இடத்தை அதற்கான விலை கிரயம் கொடுக்காமல் நாம் எடுத்தக் கொள்வது சரியான ஒரு குணம் அல்ல.

தான் கூடாரம் போட்ட வெளியின் நிலத்தைச் சீகேமின் தகப்பனாகிய ஏமோரின் புத்திரர் கையிலே நூறு வெள்ளிக் காசுக்குக் கொண்டு, என்று வாசிக்கிறோம்.

ஒருவேளை ஆலயம் கட்டுவதற்காக நாம் இடத்தை வாங்கினாலும் கூட அதற்கான விலை கிரயத்தையும் செலுத்துவதுதான் முறையானக் காரியம். இங்கே யாக்கோபுவும் தான் வாங்கிய நிலத்திலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி அவன் ஏல்எல்லோகே இஸ்ரவேல் என்று பேரிட்டான்.

நம்முடைய வாழ்க்கையிலேயும் கர்த்தரைத் தொழுது கொள்வதைக் குறித்து நாம் அக்கறை உள்ளவர்களாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் ஆண்டவருடைய சமூகத்திலே வந்து நாம் தனித்து, அவருடைய தன்மைளைச் சொல்லி, அவரை வாழ்த்தி, புகழ்ந்து, அவரை மகிமைப்படுத்தி, அவரைத் தொழுது கொள்ள வேண்டும். அல்லது புதிய ஒரு வீட்டிற்குள்ளே கடந்து செல்கிறோம் என்றால் வெறும் பிரதிஷ்டை வைபவம் என்று வைபவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், ஆண்டவரைத் துதிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து நாம் புதிய வீட்டிற்குள்ளே கடந்து செல்வதும் சிறந்த ஒரு காரியம்.

ஆதியாகமம் : 34

யாக்கோபு தனது மாமனாகிய லாபானின் வீட்டிலிருந்து குடும்பத்தோடு, தன் மந்தைகளோடு புறப்பட்டு வருகிறான்; ஏசாவை சந்திக்கிறான்; என்றாலும் ஏசாவோடு கூட

செல்லாமல் நான் பின்னாலே வருகிறேன் நீ முன்னாலே போ, என்று சொல்லி அனுப்பிவிடுகிறான். பதான் அராமிலிருந்து வந்தபின் கானான் தேசத்திலிருக்கிற சாலேம் என்னும் சீகேமுடைய பட்டணத்திற்கு அருகே பட்டணத்துக்கு எதிராகக் கூடாரம் போட்டு அங்கே தங்கிவிடுகிறான். இப்படி யாக்கோபு இங்கே சாலேமிலே தங்கியது ஒரு தவறான தீர்மானம்.

யாக்கோபினுடைய குடும்பத்திலே வீணான ஒரு பிரச்சனையை இங்கே விலைக்கு வாங்குகிறார்கள். சீகேம் என்னும் மனிதனாலே யாக்கோபுக்கு லேயாள் பெற்ற மகளான தீனாள் தீட்டுப்படுகிறாள். தீனாளின் சகோதரர்களான, சிமியோனும், லேவியும் அந்த ஊர் மக்களை வெட்டிப்போடுகிறார்கள். இது நியாயப்படுத்த முடியாதது. இது யாக்கோபின் குடும்பத்திலே ஒரு கருப்புப்புள்ளியை வைக்கிறது.

ஆரானை விட்டு, தன் மாமன் வீட்டைவிட்டு அவன் புறப்பட்டாலும் இன்னமும் வெகுதூரம் கடந்து செல்லவில்லை என்பதை இது காட்டுகிறது. இந்த சூழ்நிலையை எல்லாம் விட்டுச் சீக்கிரமாக அவன் கானானுக்குப் போக வேண்டும் என்று தேவன் துரிதப்படுத்துகிறார்.

பிரியமானவர்களே, ஆதியாகமப் புத்தகத்தை நாம் வாசிக்கும்பொழுது, தேவன் இரண்டு முக்கியமான காரியங்களை நமக்குக் காட்டுவதற்காக அதிக நேரம் செலவு செய்கிறார். முதலாவதாக சரியான ஒரு சந்ததியைக் குறித்து நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரு விசுவாசி ஒரு விசுவாசியைத் தான் திருமணம் செய்ய வேண்டும் என்பதைக் குறித்து தேவன் அக்கறை உள்ளவராய் இருக்கிறார். ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியை ஒருபொழுதும் திருமணம் செய்யக்கூடாது. ஏனென்றால் கடவுளுக்கு பயப்படும் பயம் உள்ள சந்ததி தொடர்ந்து செல்ல வேண்டியதைக் குறித்து தேவன் கருத்துள்ளவராய் இருக்கிறார்.

இரண்டாவதாக ஒரு மனிதன் இருக்கும் சூழல் அல்லது சூழ்நிலை மிக முக்கியமானது என்பதைக் காட்ட விரும்புகிறார். குறிப்பாக இதை யாக்கோபின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக் கொள்கிறோம். ஒரு பெரிய குடும்பம் அவனுக்கு இருந்தது. 12 குமாரர்களும், ஒரு குமாரத்தியும் இருந்தார்கள். இங்கே ஒரே ஒரு குமாரத்தியைக் குறித்து மட்டும் நாம் வாசிக்கிறோம். ஏனென்றால் இந்த சம்பவம் அவளைக் குறித்தது மட்டும்தான்.

ஆதியாகமப் புத்தகத்தைப் புரிந்து கொள்வதற்கு இன்னொரு காரியத்தையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதாவது குடும்பங்களிலே பிரச்சனைகள் வருகின்றன. ஆபிரகாமின் குடும்பத்திலேயும் பிரச்சனைகளும் வேதனைகளும் வந்தன. ஈசாக்கின் குடும்பத்திலேயும் பிரச்சனைகளும் வேதனைகளும் வந்தன. ஏனென்றால் ஈசாக்கு ஏசாவை அதிகமாக நேசித்தான். ரெபெக்காள் யாக்கோபை அதிகமாக நேசித்தாள். இது குடும்பத்திலே பிரச்சனையை உண்டுபண்ணியது. இப்பொழுது இன்னும் அதிகமான

பிரச்சனைகளைக் குறித்து யாக்கோபுவின் குடும்பத்திலே நாம் பார்க்கிறோம்.

சில காலம் என்றுதான் சாலேமிலே யாக்கோபு கூடாரம் போட்டான். ஆனால் அங்கே மிகப் பெரிய வேதனையான ஒரு காரியம் நடைபெறுகிறது. சொல்லப்போனால் ஆதியாகமம் 34ஆம் அதிகாரம் மிகக் கவலைக்கிடமான ஒரு அதிகாரம். யாக்கோபினுடைய இருதயம் எவ்வளவு உடைந்திருக்கும் என்பதை சற்றே எண்ணிப்பாருங்கள்.

சாலேமிலே வந்து தங்கியவுடன் யாக்கோபு ஒரு பலிபீடத்தைக் கட்டினான். அவ்வாறு அவன் செய்ததினாலே தேவனாகிய கர்த்தருக்கு ஒரு சாட்சியை அங்கே வைத்தான். ஏனென்றால் அவனுடைய வாழ்க்கையிலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வளர்ச்சியானது மெதுவான வளர்ச்சிதான். யாக்கோபினுடைய வாழ்க்கையும் நமக்கு ஒரு மாதிரி.

கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் உடனடியாக தம்முடைய வாழ்க்கையிலே பரிபூரண மாற்றங்களைக் காண முடியவில்லையே என்று சோர்ந்து போய்விடக்கூடாது. ஒரே இரவிலே அப்படி வாழ்க்கைகள் மாறுகிறதில்லை. குழந்தைகளாக அல்ல, முதிர்ச்சியடைந்தவர்களாக தேவன் நம்மைத் தம்முடைய குடும்பத்திலே தத்து எடுத்துக்கொள்கிறார்.

இப்பொழுது ஆவிக்குரிய சத்தியங்களை நாம் புரிந்து கொள்கிறோம். ஏனென்றால் பரிசுத்த ஆவியானவரே நமக்கு கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். என்றாலும் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியானது மெதுவான வளர்ச்சியாய் இருக்கிறது. வேதத்தில் உள்ள சத்தியங்களை நாம் கற்றுக் கொள்கிறோம். என்றாலும் நம்முடைய வாழ்க்கையிலே அநேக வேளைகளிலே நாம் சீமோன் பேதுருவைப் போல இருக்கிறோம். தட்டுத்தடுமாறி விழுந்து போகிறோம். ஆனால் சீமோன் பேதுருவுடைய வாழ்க்கைக்காக ஆண்டவருக்கு நாம் ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். சீமோன் பேதுரு எத்தனை முறை விழுந்துபோனாலும் மீண்டும் மீண்டும் எழுந்து தூசியைத் தட்டிக்கொண்டு முன்னாடி செல்லுகிறவராய் இருந்தார். அவருடைய வாழ்க்கையிலேயும் ஒருநாள் வந்தது. அன்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் போல தைரியத்தோடு சிலுவையை நோக்கி நடந்தார்.

அருமையான சகோதரனே, சகோதரியே, நீங்களும் நானும் நம்முடைய வாழ்க்கையிலே உணர்ந்து அறிந்து கொள்ள வேண்டிய ஒரு உண்மை என்னவென்றால் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை மெதுவானதாய் இருந்தாலும் அது தொடர்ந்து வளருகிற ஒன்றாய் இருக்க வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையிலே வளர்ச்சி எப்படி மெதுவானதாய் இருக்கிறதோ, அதுபோலத்தான் மற்றவர்களுடைய வாழ்க்கையிலேயும் ஆவிக்குரிய வளர்ச்சி மெதுவானதாக இருக்கும்.

சிலவேளைகளிலே வேறு சமயத்திலிருந்து புதிதாக இயேசு கிறிஸ்துவை இரட்சகராக

www.Radio882.com

ஏற்றுக் கொண்டு வந்த பெற்றோர், தங்கள் பிள்ளைகளுடைய வாழ்க்கையிலே பெரிய ஒரு மாற்றத்தை எதிர்பார்ப்பார்கள். அப்படியல்ல பிரியமானவர்களே, பெற்றோராகிய உங்களுடைய வாழ்க்கையின் குணநலன்தான், அதிகமாக பிள்ளைகளுடைய வாழ்க்கையில் இருக்கும். உங்கள் பிள்ளைகள் கர்த்தரை அறிய அறிய நிச்சயமாய் அவர்களுடைய வாழ்க்கையிலேயும் ஒரு வளர்ச்சி, ஒரு முதிர்ச்சி காணப்படும். எனவே நீங்கள் சோர்ந்து போகக்கூடாது.

ஆதியாகமப் புத்தகத்தில் மூன்று அதிகாரங்கள் மிக இனிமையான அதிகாரங்கள் அல்ல என்று சொல்லலாம். இவை எல்லாமே லேயாளின் பிள்ளைகளைக் குறித்ததாகவே இருக்கிறது. லேயாள் லாபானின் மூத்த மகள், தேவனுடைய திட்டப்படி தேவன் பலதார மணத்தை ஏற்றுக்கொள்கிறவர் அல்ல. பல பெண்களை திருமணம் செய்யவேண்டிய சூழ்நிலை யாக்கோபின் மேலே புகுத்தப்பட்டது. அவன் கட்டாயப்படுத்தப்பட்டான், என்றாலும் அவனும் அதற்கு ஒத்துக்கொண்டுவிட்டான்.

இப்பொழுது நாம் பார்க்கப்போகிற ஆதியாகமம் 34ஆம் அதிகாரத்திலே லேயாளின் பிள்ளைகள் பாவத்திலே விழுந்து போகிறார்கள். லேயாளுக்கு 6 குமாரர்கள் இருந்தார்கள், இந்த அதிகாரத்திலே சிமியோனைக் குறித்தும், லேவியைக் குறித்தும் வாசிக்கிறோம். 35வது அதிகாரத்திலே மூத்த குமாரனாகிய ரூபனைக் குறித்து நாம் வாசிக்கப் போகிறோம். 38வது அதிகாரத்திலே யூதாவின் தவறைக் குறித்து நாம் பார்க்கப்போகிறோம்.

லேயாளின் குமாரர்கள் ஒவ்வொருவருமே தவறானவர்களாய் பாவத்திலே வாழ்கிறவர்களாய் வெளிப்பட்டார்கள். ஆபிரகாமுடைய வாழ்க்கையிலேயோ, ஈசாக்கினுடைய வாழ்க்கையிலேயோ இடம் பெறாத ஒரு பாவம் இங்கே யாக்கோபின் குடும்பத்துக்குள்ளே நுழைகிறது.

ஆபிரகாமின் வாழ்க்கையிலேயும், ஈசாக்கின் வாழ்க்கையிலேயும் பிரச்சனைகளை சந்தித்தார்கள். ஆனால் யாக்கோபு தனது குடும்பத்திலே சந்தித்த பிரச்சனைகளைப்போல அல்ல. தேவன் லாபானுடைய வீட்டிலிருந்து யாக்கோபை வெளியே அழைத்து வருவதிலே செயல்பட்டார். ஆனால் யாக்கோபு பதான் அராமிலிருந்து சற்று தூரத்திலேலே தங்கிவிடுகிறான். அவன் தங்கியிருந்த சூழ்நிலையை குடும்பத்திலே இப்படிப்பட்ட பிரச்சனை வருவதற்கு காரணமாய் இருந்தது. நாம் எங்கே வசிக்கிறோம், எங்கே வேலை செய்கிறோம், நம்முடைய வாழ்க்கையின் சூழ்நிலை என்ன என்பதைக் குறித்து நாம் ஜாக்கிரதை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஏனென்றால் நம்முடைய சூழ்நிலைகளினாலே பலமுறை நாம் பாவத்திலே விழுந்து போவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

ஆதியாகமம் 33ஆம் அதிகாரத்தின் இறுதியிலே நாம் பார்த்தது போல யாக்கோபு சாலேம் ஊருக்கு வெளியே நல்ல காற்றோட்டமான ஒரு பகுதியிலே கூடாரத்தை

www.Radio882.com

அமைத்துத் தங்குகிறான். ஒருவேளை அந்த மக்களின் கலாச்சாரத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்தானோ, என்னவோ நமக்குத் தெரியவில்லை. ஆனால் அந்த இடம் அவனுக்குச் சரியான ஒரு இடம் அல்ல.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து தேவன் அவனை சீக்கிரமாக அகற்ற விரும்பினார். இந்த அதிகாரத்தை நீங்கள் பார்த்தவுடனேயே தேவன் அவ்வாறு யாக்கோபைக் குறித்து விரும்பியது நல்லது என்று நீங்களே சொல்வீர்கள்.

ஆதியாகமம் 34 : 1

சீகேம் பட்டணத்துப் பெண்கள் எப்படியிருக்கிறார்கள், அவர்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்காக உள்ளே நுழைகிறாள்.

ஆதியாகமம் 34 : 2

இந்தச் செய்தி வானொலியிலேயோ, செய்தி தாள்களிலேயோ வந்திருக்குமென்றால் தீனாள் கற்பழிக்கப்பட்டாள் என்று வந்திருக்கும்.

அருமையானவர்களே, இன்றைக்கு அநேகருடைய வாழ்க்கை பாவம் நிறைந்ததாய் இருக்கிறது. எனவே மக்கள் பாவத்தைப்பாவம் என்று கூறுகிறதில்லை, செய்தித்தாள்களிலேயோ, தொலைக்காட்சியிலேயோ, பாவத்தைக் குறித்து வரும் செய்திகள் அநேகருடைய உள்ளங்களிலே குத்தப்படுகிறதில்லை. ஐயோ, நமது தேசத்திலே நமது மாநிலத்திலே இப்படிப் பாவம் இருக்கிறதே என்று அநேகர் சிந்திக்கிறதில்லை.

ஆனால் தேவன் பாவத்தைப் பாவம் என்றுதான் அழைக்கிறார்.

ஆதியாகமம் 34 : 3, 4

அருமையானவர்களே, கவனித்தீர்களா? தீனாள் அந்தத் தேசத்துப் பெண்களைப் பார்க்கப் புறப்பட்டாள்; எத்தனை முறை அந்த ஊருக்குள்ளே அவள் சென்று வந்தாளோ; நமக்குத் தெரியாது. எத்தனைப் பெண்களோடு அவளுக்குப் பழக்கம் ஏற்பட்டதோ நமக்குத் தெரியாது. ஆனால் போகும்பொழுது, வரும்பொழுது இந்த ஏமோரின் குமாரனான சீகேமுடனும் அவள் பேசிப் பழகியிருக்கிறாள். மூன்றாம் வசனத்தின் கடைசிப்பகுதியை பாருங்கள், அந்தப் பெண்ணின் மனதுக்கு இன்பமாய் பேசினான். தன்னுடைய வார்த்தைகளினாலே தீனாளை ஏமாற்றிவிட்டான் என்று சொல்லலாம். அவளை நேசித்தான், அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினான்.

ஆதியாகமம் 34 : 5 – 7

தீனாளுக்கு இப்படிப்பட்ட காரியம் நடைபெற்றிருக்கவே கூடாது, என்றுதான் நாம் நினைக்கிறோம். ஆனால் அப்படி நடைபெற்றுவிட்டது. சீகேம் அவளைத் திருமணம் செய்யவேண்டுமென்று விரும்பினான். இதைக்குறித்து யாக்கோபு கேள்விப்பட்டபொழுது அவனுடைய குமாரர் வரும்வரை காத்திருந்தான். குமாரர்கள் வெளியில் இருந்து வந்தபின்

www.Radio882.com

இதைக் குறித்துக் குடும்பத்திலே பேசுகிறார்கள். சீகேமின் தகப்பனாகிய ஏமோர் பெண்கேட்டு யாக்கோபினிடத்திலே வருகிறான். ஒருவேளை யாக்கோபுவும் அதற்கு சம்மதித்ததிருக்கலாம். ஏனென்றால் அந்த நாட்களிலே இப்படித்தான் திருமணங்கள் நடைபெற்றன. ஆனால் அந்த சூழ்நிலையிலே சீகேம் நடந்து கொண்ட முறை சரியானதல்ல, தேவன் அதை ஏற்றுக்கொள்கிறவரும் அல்ல.

ஆதியாகமம் 34 : 8, 9

தேவனை அறியாத மக்களோடு திருமணம் செய்வது தவறு தான். ஆனால் இந்த சூழ்நிலையைப் பார்க்கும் பொழுது தீனாள் சீகேமுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் கூட அதிகமான பாவங்கள் பெருகி இருக்காது. என்றாலும் தேவனுடைய பார்வையில் எல்லா பாவங்களும் பாவமே.

ஆதியாகமம் 34 : 10 – 12

இந்த சூழ்நிலை எல்லாமே நமக்கு என்னத்தைச் சொல்கிறது? சீக்கிரமாக யாக்கோபு இந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டுப் போக வேண்டும். இது அவன் தங்கி தாபரிக்கக்கூடிய இடமுமல்ல, மக்களோடு திருமண உறவுகளிலே கலந்து கொள்ளும் சூழ்நிலையும் அல்ல,

ஆதியாகமம் 34 : 13

அருமையான சகோதரனே, சகோதரியே இந்த சூழ்நிலையிலே குடும்பத்தின் தலைவனாக யாக்கோபு பொறுப்பெடுத்துக் காரியங்களைச், செயல்படுத்தியிருக்க வேண்டும், குறிப்பாக அவனுடைய குமாரர்கள் சீகேமையும், ஏமோரையும் ஊராரையும் ஏமாற்றி இருக்கவேக்கூடாது.

ஆதியாகமம் 34 : 14

அருமையான சகோதரனே, சகோதரியே, அங்கே நமைபெற்ற பாவத்தைக் குறித்து அவர்கள் பெரிதாக எடுத்துப் பேசவில்லை, செயல்படவில்லை, என்ன சொல்கிறார்கள்? விருத்தசேதனம் பண்ணும்படியாக தேவன் கொடுத்த அந்த கட்டளையைச் சுட்டிக்காட்டி அவர்களும் விருத்தசேதனம் பெற்றால்தான் அவர்களோடு கூட சம்பந்தம் கலக்க முடியும் என்று சொல்கிறார்கள்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே இன்றும் சபைகளிலுள்ள அநேகரும் ஆவிக்குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறதில்லை.

பாவங்களுக்குப் பல பெயரிட்டு, அதை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட்டு, அதிக முக்கியத்துவமற்ற சடங்காச்சாரங்களைப் பெரிதுபடுத்தி, திருச்சபைகளையே உடைக்கிறார்கள். நல்ல கிறிஸ்தவ ஸ்தாபனங்களை உடைக்கிறார்கள்.

ஆதியாகமம் 34 : 15 – 17

கவனித்தீர்களா? யாக்கோபுவின் குமாரர்கள் அந்த ஊர் ஜனங்களை விருத்தசேதனம்

www.Radio882.com

பண்ணும்படியாய் சொல்கிறார்கள். அருமையான சகோதரனே, சகோதரியே இன்று வாழும் மக்களுக்கு இது ஒரு எச்சரிப்பின் செய்தியாக இருக்க வேண்டும். ஒரு முறை ஒரு விசுவாசியான பெண்மணி, தான் திருமணம் செய்ய விரும்பிய ஒரு மனிதனைக் கூட்டிக்கொண்டு போதகரிடத்திலே சென்றாள். அவளுடைய விருப்பத்தை அறிந்த போதகர், அந்த மனிதனுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லி, இரட்சிப்பின் வழியை அறிவித்து, ஜெபிக்கும்படியாகச் சொன்னார்.

அதற்குப் பின்னர், அந்த மனிதனிடத்திலே அவனுடைய விசுவாசத்தைக் குறித்து அவர் கேட்டபொழுது, அவனால் எதையுமே தெளிவாகச் சொல்ல முடியவில்லை. எனவே அந்த ஊழியர் அந்தப் பெண்ணைப் பார்த்து நீ என்னுடைய திருச்சபைக்கு வந்துகொண்டிருக்கும் ஒரு பெண்மணியாக இருந்தாலும், இந்த மனிதனை உனக்கு திருமணம் செய்து வைக்க நான் சம்மதிக்கவில்லை, ஏனென்றால் இவன் உண்மையாக ஒரு விசுவாசியில்லை, என்று கூறி அனுப்பிவிட்டார்.

ஆனால் அந்தப் பெண்மணி, வேறொரு போதகரைப் பார்த்து எப்படியோ அவளுடைய திருமணத்தை நடத்தினாள். திருமணத்திற்குப் பிறகு அவனை ஆலயத்திற்கு வரச்சொன்ன பொழுது, அந்தப் போதகர் என்னிடத்திலே கோபமாகப் பேசிவிட்டார், திருமணம் செய்துவைக்க முன்வரவில்லை, எனவே நான் இந்த ஆலயத்திற்கு வரமாட்டேன் என்று சொன்னான். சரி என்று சொல்லி மற்றுமொரு ஆலயத்திற்கு இரண்டுபேரும் சென்றார்கள். இரண்டு மூன்று முறை ஆராதனைக்குச் சென்றபிறகு, அவன் அவளிடம் நான் உண்மையாக ஒரு கிறிஸ்தவனல்ல, எனவே, இனி என்னை ஆலயத்திற்கு அழைக்காதே என்று சொல்லிவிட்டான்.

அருமையான சகோதரனே, சகோதரியே, ஏதோ ஒரு சடங்காச்சாரத்திலே கலந்து கொண்டுவிட்டு, ஞானஸ்நானம் எடுத்துவிட்டு, நான் ஒரு கிறிஸ்தவன், நான் ஒரு கிறிஸ்தவள் என்று கூறமுடியாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொள்வதென்பது, ஒரு வித்தியாசமான அனுபவம்.

இன்றும் அநேக இடங்களிலே குடும்ப உறவுகளை காப்பாற்றிக் கொள்ள வேண்டும், என்பதற்காகவும் சொத்து வேறெங்கும் சென்றுவிடக்கூடாது என்பதற்காகவும், விசுவாசிகள் அவிசுவாசிகளைத் திருமணம் செய்கிறார்கள்.

அருமையானவர்களே, இது பாவம். திருமணத்திற்குப் பிறகு நான் அவரைக் கர்த்தருக்காக ஆதாயப்படுத்திவிடுவேன், அவளை நான் கர்த்தருடைய பிள்ளையாக மாற்றிவிடுவேன் என்று நீங்கள் சொல்லலாம். எத்தனையோ உதாரணங்களைக் கூட நீங்கள் காட்டலாம். ஆனால் எனக்குப் பிரியமான சகோதரனே, சகோதரியே, வேதம் இப்படிப்பட்ட உறவுகளுக்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. தேவன் மிகத் தெளிவாக ஒரு விசுவாசி அவிசுவாசியோடு கூட இணைக்கப்படக் கூடாது என்று கூறியிருக்கிறார்.

www.Radio882.com

அருமையான வாலிப சகோதரனே, சகோதரியே, இதைக் கேட்டுக் கொண்டிருக்கிற நீங்கள் ஒருவேளை கிறிஸ்தவ விசுவாசத்திலே இல்லாத யாரையாவது திருமணம் செய்ய வேண்டுமென்று சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள் என்றால், இன்றைக்கே அதைக் கடவுளுடைய பாதத்திலே நீங்கள் புதைத்துவிடுங்கள். நீங்கள் உண்மையாகவே ஆண்டவரை நேசிக்கிற ஒரு மகனாய் மகளாய் இருப்பீர்கள் என்றால், தேவன் உங்களைப் பார்த்து அப்படிப்பட்ட மகனையோ, மகளையோ திருமணம் செய்வது பாவம் என்கிறார்.

நீங்கள் விரும்புகிற அந்தப் பெண்ணோ, ஆணோ ஒரு வேளை நீங்கள் சொல்வதற்காக கட்டாயப்படுத்துவதற்காக ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளலாம், உங்கள் குடும்பத்தினருடைய எதிர்ப்பார்ப்புக்காக ஆலயத்திலே வந்து திருமணமும் செய்து கொள்ளலாம், ஆனால் உங்கள் வாழ்க்கை நரகமாகிப் போய்விடும் என்பதை மனதிலே வைத்துக்கொள்ளுங்கள்.

ஆதியாகமம் 34 : 18, 19

இந்த மனிதன் ஒரு மேன்மையான காரியத்தை செய்வது போலத் தோன்றுகிறது.

ஆதியாகமம் 34 : 20 – 23

அருமையானவர்களே, கவனித்தீர்களா? இவ்வாறு யாக்கோபுடைய குமாரத்தியோடு திருமணம் செய்துகொள்வதினாலே யாக்கோபுடைய சொத்து செல்வமெல்லாம் தங்களுக்குக் கிடைக்குமென்று ஒரு பெரிய திட்டத்தைத் தீட்டுகிறார்கள்.

ஆதியாகமம் 34 : 24

விருத்தசேதனம் பண்ணுவதினாலே, ஒரு அவிசுவாசி விசுவாசியாகிவிட முடியாது. ஒரு திருச்சபையிலே அங்கமாவதினாலே ஒரு அவிசுவாசி விசுவாசியாக முடியாது. அருமையான சகோதரனே, சகோதரியே, உண்மையாகவே உங்களுடைய இருதயத்திலே நீங்கள் மறுபிறப்பு அடையாமல் திருமுழுக்கு பெற்றாலும் ஞானஸ்நானத்தை எடுத்துக் கொண்டாலும் அது அத்தனையுமே போலியான பழக்கவழக்கமாகத்தான் இருக்குமே ஒழிய உண்மையாக நீங்கள் கிறிஸ்துவின் குடும்பத்தின் அங்கத்தினராக முடியாது. உங்கள் இருதயத்திலே இயேசு கிறிஸ்து உங்களுடைய பாவத்திற்கான தண்டனையை ஏற்றுக்கொண்டார் என்பதை விசுவாசித்து அவர் மூலமாகவே நீங்கள் பரலோகம் செல்லமுடியும் என்பதை நம்புவீர்கள் என்றால், நீங்கள் ஆண்டவருடைய பிள்ளையாகிறீர்கள்.

வேதம் என்ன சொல்கிறது தெரியுமா? அவருடைய நாமத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

அருமையான சகோதரனே நீங்கள் கிறிஸ்தவ ஆலயங்களுக்குச் செல்லாமல்

www.Radio882.com

இருக்கலாம், ஏனென்றால் நீங்கள் இருக்கும் இடத்திற்குப் பக்கத்திலே ஆலயம் இல்லாமல் இருக்கலாம் ஆனால் இயேசு கிறிஸ்துவே உங்களுடைய பாவத்திற்கான தண்டனையைச் சிலுவையிலே சுமந்து தீர்த்தார் என்பதை விசுவாசிக்கிறீர்கள், அவரே உங்கள் உள்ளத்தின் தலைவர் என்று சொல்கிறீர்கள், அந்த விசுவாசத்தினாலே நீங்கள் அவருடைய பிள்ளைகளாக இருக்கிறீர்கள், என்றாலும் நீங்கள் மற்ற கிறிஸ்தவர்களோடு ஐக்கியம் உள்ளவர்களாகவும் தொடர்ந்து விசுவாச வாழ்க்கையிலே வளரவும் நம்முடைய திருச்சபையின் அங்கமாயிருக்க வேண்டியதும் அவசியம்.

ஆதியாகமம் 34 : 25

இது மிகவும் வேதனையான ஒரு சூழ்நிலை இந்த சிமியோனும் லேவியும் தீனாளும் ஒரே தாயின் பிள்ளைகள். தீனாளைக் கெடுத்ததற்கானப் பழியை வாங்கவேண்டும் என்று புறப்பட்டுப் போகிறார்கள். சொல்லப்போனால் மிக அதிகமாகப் பழிவாங்கினார்கள். அந்த மனிதர்கள் இவ்வாறு சம்பந்தம் கொண்டு, யாக்கோபின் அத்தனை செல்வங்களையும் தங்களுடைய செல்வங்களாக்கிக் கொள்ளத் திட்டமிட்டதும், தீனாள் கெடுக்கப்பட்டதும், உண்மையாக இருந்தாலும் இது எதுவுமே அவர்களுடைய செயலுக்கு ஈடாகாது. அத்தனைக் கொடூரமாய், பட்டணத்திலுள்ள அத்தனை ஆண்களையும் கொன்று போட்டார்கள்.

ஆதியாகமம் 34 : 26, 27

மற்ற சகோதரர்கள் செய்ததை கவனித்தீர்களா? பட்டணத்துக்குள்ளே போய் எல்லாரிடத்திலிருந்தும் கொள்ளையிடுகிறார்கள். இது எதைக் காட்டுகிறது? யாக்கோபின் குடும்பத்திலிருந்த பேராசையைக் காட்டுகிறது. இது சரியான ஒரு குணநலன் அல்ல. இதை எங்கே கற்றார்கள்? லாபானுடைய வீட்டிலே கற்றார்கள்.

ஆதியாகமம் 34 : 28 – 30

பிரியமான சகோதரனே, சகோதரியே, யாக்கோபுடைய வாழ்க்கையிலே இன்னும் இருக்கிற ஒரு தவறான காரியத்தைக் கவனித்தீர்களா? அவனுடைய பெயரைக் கெடுத்துப் போட்டதற்காக சிமியோனையும், லேவியையும் கண்டிக்கிறானே ஒழிய, அவர்கள் செய்தது தேவனுக்கு விரோதமானப் பாவம் என்று சொல்லி கண்டிக்கவில்லை.

நம்முடைய வாழ்க்கையிலும் கூட நம்முடைய சில செயல்களுக்கும் பாவங்களுக்கும் வித்தியாசமான கண்ணோட்டத்திலே பதில் சொல்கிறவர்களாய் இருக்கிறோம். பல சமயங்களிலே பாவத்தை பாவம் என்று நாம் எண்ணுகிறதில்லை, சொல்கிறதில்லை. அந்த பாவத்தினால் ஏற்படப்போகிற விளைவைக் குறித்தே பெரிதாகப் பேசுகிறோம்.

இன்றும் திருச்சபையில் உள்ள சில சகோதர சகோதரிகள் குறிப்பிட்டக் காரியங்களிலே தைரியமாக உறுதியோடு நிலைநிற்பதில்லை. காரணம் என்ன தெரியுமா? அவர்களுடைய

www.Radio882.com

நண்பர்களும் உறவினர்களும் இந்தக் காரியத்திலே அவர்கள் உறுதியாக நிற்பதை விரும்புகிறதில்லை. அவர்கள் தங்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற பயத்தினாலே உறுதியற்றவர்களாய் இருக்கிறார்கள்.

அவர்கள் செய்தது சரியோ, தவறோ என்பதைக் குறித்து அவர்கள் எண்ணுகிறதேயில்லை. தங்களைச்சுற்றி இருக்கிற கூட்டத்தைப் பிரியப்படுத்தவே விரும்புவார்கள். இப்படி மற்றவர்கள் என்ன சொல்வார்கள், மற்றவர்கள் என்ன செய்வார்கள் என்று எண்ணுகிற கிறிஸ்தவர்களை கர்த்தர்தாம் கிருபையாக மாற்றியமைக்க வேண்டும். அவர்கள் இது சரியானதா? கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் ஒரு காரியமா? கிறிஸ்துவின் பிள்ளை இதைச் செய்யலாமா? என்றெல்லாம் யோசிக்கிறதில்லை.

எனக்கு அருமையானவர்களே, இந்தக் காரணத்தினாலேதான், இன்றைக்கு அநேக திருச்சபைகள் பாவத்தோடு ஒத்துப்போகும் மக்களினாலே நிறைந்ததாய் இருக்கிறது. எனவேதான், சோர்ந்துபோன, சந்தோம் இல்லாத அநேகக் கிறிஸ்தவர்களை நாம் பார்க்கிறோம்.

உண்மைக்காக உறுதியாக நிற்பது சிறந்தது. நீங்கள் உறுதியாக நிற்கும்பொழுது எதைக் குறித்தும் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

யாக்கோபு கர்த்தருக்குள்ளே வளர்ந்துகொண்டு இருந்தான். ஆனால் இன்னமும் வளரவேண்டியது அதிகம் இருக்கிறது. அவனுடைய வார்த்தைகளுக்கு அவனுடைய குமாரர்கள் சொன்ன பதில் என்ன தெரியுமா? அதற்கு அவர்கள்: எங்கள் சகோதரியை அவர்கள் ஒரு வேசியைப்போல நடத்தலாமோ என்றார்கள்.

இது ஒரு நல்ல கேள்விதான். இவர்களே நியாயத்தைச் செய்யவேண்டுமென்று நினைப்பார்களென்றால், முதலாவது அந்தப் பையனை அழைத்து, அவனுக்கே அவளை திருமணம் செய்துகொடுத்துவிட வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே இதுதான் சிறந்த ஒரு முடிவு. என்றாலும் அந்த முடிவு சரியானது அல்ல. இத்தனை ஜனங்களை கொலை செய்வதைவிட அது பரவாயில்லை. அவர்கள் செய்தது சரி என்று சொல்வதற்கு எந்த சாக்குப்போக்கும் இல்லை. அந்த சகோதரர்கள் என்ன செய்தார்களோ, அதை அவர்கள் செய்திருக்கக் கூடாது.

ஆனால் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, அவர்கள் வெளிச்சத்திலே வாழ்கிறவர்களாக இல்லை. அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் ரோமருக்கு எழுதின நிருபம் 12ஆம் அதிகாரம் 19 முதல் 21 வசனங்கள்.

பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்.

www.Radio882.com

அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்.

நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.

கிறிஸ்துவை அறிந்த ஒவ்வொரு சகோதரனும் சகோதரியும் தங்களுக்கு யார் துன்பம் விளைவித்தாலும், இது ஒன்றையே அவர்கள் பின்பற்ற வேண்டும். பதிலுக்குப் பதில் செய்ய எந்த நிமிடத்திலே நாம் சிந்திக்கிறோமோ, எப்பொழுது நாம் முயற்சி எடுக்கிறோமோ அந்த நேரத்திலே தானே, நாம் விசுவாச வாழ்க்கை வாழவில்லை என்பதைத் தெரிவிக்கிறோம். அதுமட்டுமல்ல, நாம் என்ன சொல்கிறோம் என்றால் என்னால் தேவனை நம்ப முடியாது என்று சொல்லுகிறோம். தேவன் நமக்காகச் செயல்படுவார் என்பதை நாம் விசுவாசிக்கவில்லை என்று சொல்கிறோம்.

இந்தக் குறிப்பிட்ட வேளையிலே யாக்கோபை ஓரளவு ஆவிக்குரிய வாழ்க்கையிலே வளர்ந்தவன் என்று சொல்லலாம். ஆனால் நிச்சயமாக அவனுடைய குமாரர்கள் அப்படியில்லை, என்றாலும் அவர்கள் செய்த செயல் சரி என்று நாம் வாதிடவே முடியாது. தங்கள் சகோதரிக்கு ஏற்பட்ட நிலைமையின் காரணமாகவும், அதனால் தங்கள்மேல் வந்த வெட்கத்தின் காரணமாகவும், உணர்ச்சிவசப்பட்டு அவ்வாறு செயல்பட்டார்கள். பிரச்சனைக்களுக்கு மேலே பிரச்சனை ஒவ்வொன்றாய் அவனுடைய வீடு தேடி வருகிறதை யாக்கோபு உணருகிறான்.

ஆதியாகமம் : 35

இப்பொழுது ஆதியாகமம் 35ஆம் அதிகாரத்திற்குள்ளே கடந்து செல்கிறோம். மீண்டுமாக யாக்கோபு தான் ஏற்கனவே ஒரு தூணை நட்டி பெத்தேல் என்று பெயரிட்ட அந்த இடத்திற்குத் திரும்ப வருகிறான். தேவன் அவனோடு செய்த வாக்குறுதியை மீண்டுமாய் உறுதிப்படுத்துகிறான். இங்கே இருக்கும்பொழுதுதான் பென்யமீன் பிறக்கிறான். ராகேல் மரித்துப்போகிறாள். அதுமட்டுமல்ல ஈசாக்கின் மரணத்தையும் இங்கே நாம் பார்க்கிறோம்.

33ஆம் அதிகாரத்தைக் கற்றுக்கொண்ட பிறகு யாக்கோபின் வாழ்க்கை பெனியேலிலே இருக்கும் பொழுது மாற்றம் பெற்றது என்று நான் கூறியது எவ்வளவு தவறு என்று ஒருவேளை நீங்கள் எண்ணிக்கொண்டு இருக்கலாம். 34ஆம் அதிகாரத்தை நாம் படிக்கும்பொழுது யாக்கோபின் வாழ்க்கையிலே பெரிய மாற்றங்கள் எதையுமே நாம் கண்டுகொள்ள முடிகிறதில்லை. அது உண்மைதான்.

ஆனால் எனக்குப் பிரியமான சகோதரனே, சகோதரியே, யாக்கோபினுடைய வாழ்க்கையிலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பெனியேலிலே யாக்கோபு பெற்ற அந்த

www.Radio882.com

அனுபவமானது ஒரு அவசர அனுபவம் என்று நாம் சொல்ல முடியாது. சிலருடைய வாழ்க்கையிலே இரண்டாவது அனுபவம் என்று ஒன்றைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் அவர்கள் எதையுமே பெற்றுக்கொள்ளவில்லை என்று கூறுவார்கள். ஆனால் எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே அது உண்மையில்லை.

சிலருடைய வாழ்க்கையிலே இக்கட்டான ஒரு சூழ்நிலையிலே அவர்கள் தீர்மானம் செய்திருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் வாழ்க்கையின் பல நேரங்களிலே அப்படிப்பட்ட அனுபவங்களைப் பின்னாலே திரும்பப் பார்ப்பார்கள். ஆனால் சிலருடைய வாழ்க்கையிலே அப்படிப்பட்ட எந்த ஒரு சம்பவமும் அவர்களுக்கு நினைவிலே இல்லாமலும் இருக்கலாம். ஆனால் யாக்கோபு பெனியேலண்டை வந்தபொழுது ஒரு அற்புதமான காரியம் அவன் வாழ்க்கையிலே நடைபெற்றது. பெனியேலுக்கு முந்திய காலத்திலே எல்லா சூழ்நிலையிலேயும் சுயமும் மாம்சமும் அவனை வழிநடத்தினது. ஆனால் பெனியேலிலே நடைபெற்றது என்னவென்றால் அவனுடைய சுயம் அங்கே விழுந்துவிட்டது. காத்து இறங்கிய ஒரு வாகனத்தின் சக்கரத்தைப் போல அவன் உட்கார்ந்துவிட்டான். காத்தடைக்கப்பட்ட ஒரு பொம்மையைப் போல பெரிதாக வந்து இப்பொழுது காத்து இறங்கிய ஒரு பொம்மையைப் போல ஆகிவிட்டான். 34ஆம் அதிகாரத்தை நாம் வாசிக்கும்பொழுது யாக்கோபு இன்னமும் விசுவாசத்திலே நடக்கவில்லை என்று தெரிகிறது.

யாக்கோபு ஏசாவை சந்திக்கும் முன்பதாக பயத்துடனும் நடுக்கத்துடனும் கர்த்தரைத் தேடுகிறவனாய் இருந்தான். ஆனால் ஏசா திரும்பி அவன் வீட்டிற்குப் புறப்பட்டுப் போனபிறகு சாலேமிற்கு நேரே யாக்கோபு தனது குடும்பத்தை எடுத்துச் சென்றான். அது தவறான ஒரு நடவடிக்கை. இன்னமும் யாக்கோபு தனது தந்திரங்களையே சார்ந்திருக்கிறான். தீனாள் கற்பழிக்கப்பட்டாள். அவளுடைய சகோதரர்களான சிமியோனும் லேவியும் சாலேம் ஊருக்குள்ளே சென்று அந்த பிரபுவை சந்தித்தார்கள்.

அவன் அவளை திருமணம் செய்துகொள்கிறேன் என்று சொன்னாலும், அங்கே இருந்த எண்ணற்ற ஆண்மக்களைக் கொலை செய்துவிட்டார்கள். அவர்கள் திரும்பிவந்தபொழுது யாக்கோபு சொன்னதென்ன? நீங்கள் கானானியரிடத்திலும் பெரிசியரிடத்திலும் என் வாசனையைக் கெடுத்துப் போட்டீர்கள். என்னைக் கலங்கப்பண்ணினீர்கள் என்றுதான் கூறினான். வேத வியாக்கியானம் செய்கிற அநேகர் இப்படி சாலேமிலே அவன் தங்கியது தவறு என்று கூறுகிறார்கள். அந்தக் கருத்தை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஓரளவு அது சரிதான். காரணம் என்ன தெரியுமா? இப்பொழுது யாக்கோபு இன்னமும் பெத்தேலுக்குத் தயாராகவில்லை. அங்கே தேவன் அவனுக்குக் கொடுக்கப்போகும் அனுபவத்திற்கு அவன் ஆயத்தமானவனாக இல்லை.

34ஆம் அதிகாரத்திற்கானக் காரணம், யாக்கோபு விசுவாசத்தினாலே நடக்கிறவனாய்

www.Radio882.com

இல்லாமல் மாம்சபெலனை நம்பி நடக்கிறவனாய் காணப்பட்டதனால்தான் பெத்தேலுக்குப் போகும் அளவிற்கு அவனது விசுவாசம் இல்லாதபடியினால்தான், இங்கே சாலேமிலே அவன் தங்கிவிட்டான்.

இங்கே நடந்த இந்த பரிதாபமான நிகழ்ச்சியை நாம் பார்க்கும்பொழுது யாக்கோபு தனது குடும்பத்திலே கூட ஒரு தலைவனாக இல்லை என்பதை நாம் அறிகிறோம். யாக்கோபு எடுத்துக் கொண்டிருக்க வேண்டிய தலைமைப் பொறுப்பை குடும்பத்திலேயே அவன் எடுக்கவில்லை.

பல வகைகளிலே நாம் பார்த்தால், அவன் ஆவிக்குரிய வாழ்க்கையிலே பெலனடைந்த ஒரு தலைவனாக இல்லை. இந்த பதினொரு குமாரர்களையும் மேய்த்து அடைப்பதற்கு யாக்கோபு ஆயத்தமானவனாக இல்லை. இந்த பரிதாபமான சம்பவத்திற்குப் பின்னர் யாக்கோபு தனது வாழ்க்கையிலே கர்த்தருடைய கரத்தைப் பார்க்கிறான். முன்பே செய்திருக்க வேண்டிய ஒரு தீர்மானத்தை இப்பொழுது யாக்கோபு செய்கிறான்.

ஆதியாகமம் 35 : 1

இப்பொழுது மீண்டுமாக தேவன் அவனை பெத்தேலுக்கு வரும்படியாய் அழைக்கிறார். இந்த துக்கமான சம்பவத்திற்குப் பிறகு பெத்தேலை நோக்கிப்போக ஆயத்தமாகிறான். இந்த சம்பவத்திற்கு முன்னதாக பெத்தேலுக்குப் புறப்பட்டுப் போக தேவையான விசுவாசம் அவனுக்கு இல்லை. இப்பொழுது தனது குடும்பத்திலேயும் ஆவிக்குரிய தலைமைத்துவத்தை எடுக்க ஆரம்பிக்கிறான்.

ஆதியாகமம் 35 : 2

தனது குடும்பத்தினரைப் பார்த்து, அநேக காரியங்களைச் செய்யும்படியாக யாக்கோபு சொல்கிறான். முதலாவதாக உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப் போடுங்கள் என்று சொன்னான். இந்த வார்த்தைகளைக் கேட்கும்பொழுது ஒரு வேளை நமக்கு அதிர்ச்சியாய் இருக்கலாம். ஆனால் அருமையானவர்களே ராகேல், லேயாள் குடும்பத்தினரோடு யாக்கோபு லாபான் வீட்டை விட்டுப் புறப்பட்டபொழுது ராகேல் சில சுரூபங்களை எடுத்துக் கொண்டு வந்துவிட்டாள்.

குதிரையின் மேல் ஏறிவரும்பொழுது சேணத்துக்கு அடியிலே வைத்து அதைக் கொண்டுவந்துவிட்டாள். அவள் அப்படி எடுத்து வந்தது யாக்கோபுக்குத் தெரியாது. எனவே லாபானிடத்திலே அந்த சொரூபங்களைக் குறித்து அவன் சொன்னது உண்மை. லாபானிடத்திலே அவன் சொன்ன சில உண்மைகளிலே அதுவும் ஒன்று.

ஏனென்றால் அந்த சுரூபங்கள் அங்கே இருப்பது அவனுக்குத் தெரியாது. அவை கண்டுபிடிக்கப்பட்டபொழுது யாக்கோபு ஜீவனுள்ள உண்மையான தேவனை அறிந்திருந்த படியினாலே அவற்றைத் தூர எரிந்துவிடும் படியாக சொல்லியிருப்பான், என்று நாம்

www.Radio882.com

எண்ணுகிறோம்.

உண்மையாகவே அவன் ஜீவனுள்ள தேவனை தனிப்பட்ட முறையிலே சந்தித்தவன். ஆனாலும் அந்த சுரூபங்களை அகற்றவில்லை. இங்கே அவனுடைய வார்த்தைகளைப் பார்க்கும்பொழுது அந்த அந்நிய தெய்வங்களை அவர்கள் வழிபட்டுக் கொண்டுதான் இருந்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது.

முதல் முறையாக ஆவிக்குரிய தலைமைத்துவம் எடுத்து உங்களிடத்திலிருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப் போடுங்கள் என்று சொல்கிறான். தேவனுடைய ஆசீர்வாதம் நம்முடைய வாழ்க்கையிலேயும் வேண்டுமென்றால் முதலாவது நாம் செய்யவேண்டியது நம்மிடத்திலுள்ள தவறான காரியங்களை அகற்ற வேண்டும்.

இன்று அநேகர் வாரத்து நாட்களிலே ஏதேதோ தெய்வங்களை வழிபடுகிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளிலே தேவனுக்கு சேவை செய்ய முயற்சிக்கிறார்கள். அடிப்படையான கிறிஸ்துவ குடும்பங்களிலே இருக்கிறவர்களும் கூட அவர்களுக்கென்று சில அந்நிய தெய்வங்களை வைத்திருக்கிறார்கள். எனவேதான் அவர்களுடைய ஓய்வுநாள் ஆராதனையும் உற்சாகமானதாக இல்லை.

தேவனை ஆராதிப்பதினாலே ஒரு புதிய அனுபவத்தையும் ஆசீர்வாதத்தையும் அவர்கள் பெற்றுக்கொள்கிறதில்லை. உங்கள் வாழ்க்கையிலே நீங்கள் அந்நிய தெய்வங்களை விட்டுவிட வேண்டும். உங்களுக்குரிய அந்நிய தெய்வம் எது என்று எனக்குத் தெரியாது. ஒருவேளை மற்றவர்கள் பொருட்கள் மேலே மற்றவர்களுக்குச் சொந்தமான காரியங்கள் மேலே உங்களுக்கு இருக்கும் இச்சையாக இருக்கலாம், அல்லது பண ஆசையாய் இருக்கலாம். சிலர் ஓய்வு நாட்களிலே தேவனை ஆராதிப்பதற்குக் கொடுக்க வேண்டிய நேரத்தைக் கூடக் கொடுக்க முடியாமல் தங்கள் வியாபாரங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். என்றாலும் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையிலே என்ன குறை இருக்கிறது? என்று யோசித்து யோசித்துப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆரம்ப நாட்களிலே நீங்கள் கர்த்தரைச் சந்தித்த பெத்தேலுக்குத் திரும்பி வரவேண்டுமென்றால் நீங்கள் விட்டுவிட வேண்டிய தவறான காரியங்களை விட்டுவிடத்தான் வேண்டும்.

இரண்டாவதாக யாக்கோபு அவர்களைப் பார்த்து என்ன சொல்கிறான்? உங்களை சுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள் என்று சொல்கிறான். ஒரு விசுவாசியைப் பார்த்து இந்த வார்த்தை சொல்லப்படும் என்றால் அதன் பொருளென்ன? அறிக்கையிட வேண்டிய பாவங்களை அறிக்கையிடுங்கள். உங்கள் வாழ்க்கையிலே இன்னமும் ஆங்காங்கே காணப்படுகிற பாவங்களைக் குறித்து நீங்கள் செயல்பட வேண்டும் வாரம் முழுவதும் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தீர்களோ? அப்படியே ஆலயத்திற்கு வந்து அப்படியே நீங்கள் திரும்பச் செல்வதிலே எந்த பயனும் இல்லை.

www.Radio882.com

ஆலயத்துக்கு வரும் முன்னதாக ஒரு வேளை நீங்கள் குளித்திருக்கலாம், நல்ல வாசனை திரவியங்களைப் பூசியிருக்கலாம், என்றாலும் ஆத்துமாக்கள் சுத்தம் பண்ணப்படாததினாலே அநேக திருச்சபைகளிலே ஒரு கெட்ட வாசனை வீசுகிறது. காரணம் என்ன? பாவம் அறிக்கையிடப்படவில்லை. சுத்தம் பண்ணப்படவில்லை.

1 யோவான் முதலாம் அதிகாரம் 9ஆம் வசனத்தை வாசித்துப் பாருங்கள்,

தேவன் மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறார். ஆனால், நாம் மன்னிப்புக் கேட்க வேண்டும். பாவங்களை அறிக்கை செய்ய வேண்டும்.

மூன்றாவதாக யாக்கோபு என்ன சொல்கிறான்? உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள். இதன் பொருள் என்ன? பழைய வஸ்திரங்களைக் களைந்து எரியுங்கள். வேத புஸ்தகத்திலே வஸ்திரங்கள் என்று சொல்லப்படுவது நம்முடைய பழக்கவழக்கங்களைக் குறிக்கிறதாய் இருக்கிறது.

கால்பந்து விளையாட்டுவீரன் அதற்கான விசேஷித்த உடையை அணிந்து கொள்கிறான். அதைப்போல தேவனுடைய பிள்ளை தேவனுடைய பிள்ளைக்கான உடை அணிகிறவனாய், உடை அணிகிறவளாய் காணப்பட வேண்டும்.

நீங்கள் தேவன் விரும்பும் பழக்க வழக்கங்களை உடையவர்களாய் இருக்கிறீர்களா? நீங்கள் கல்வி கற்கும் இடத்திலேயோ, நீங்கள் பணி செய்யும் இடத்திலேயோ, உங்கள் வியாபார ஸ்தலத்திலேயோ, நீங்கள் வசிக்கும் தெருவிலேயோ நீங்கள் வித்தியாசமான ஒரு வாழ்க்கை வாழ்கிறவர்கள் என்பதை மற்றவர்களால் காணமுடிகிறதா?

பெத்தேலுக்கு யாக்கோபு திரும்பிச் சென்ற அன்று, தேவனுக்காக வாழத் துவங்கினான். அதுவரை அப்படியில்லை. இப்பொழுது அவன் கூறுவது என்ன?

வாருங்கள், நாம் எழுந்து பெத்தேலுக்குப் போவோம் என்று எல்லாரையும் அழைக்கும் ஒரு மனிதனாய் இருக்கிறான்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே விசுவாச வாழ்க்கையிலே நீங்கள் துவங்கிய இடத்திற்கு மீண்டும் வந்துவிட்டீர்களா? ஒரு வேளை உங்கள் சூழ்நிலையின் காரணமாக அல்லது உங்களிலே வாசம் செய்யும் பழைய மனிதனின் காரணமாக பலமுறை நீங்கள் தேவனை துக்கப்படுத்தியிருக்கலாம். ஆனால் முதல் முதலாவதாக நீங்கள் தேவனை சந்தித்த இடத்திற்கு வரும்படியாக இன்று தேவன் உங்களை அழைக்கிறார்.

எத்தனையோ வருடங்கள் ஆகிவிட்டதே, என்று நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. இயேசு இரண்டு கரங்களையும் விரித்தவராக உங்களை அன்போடு அழைக்கிறார். என்றாலும் நீங்கள் விட்டுவிட வேண்டிய பிற தெய்வங்களை விலக்கிப்போட்டு, பாவ அறிக்கை செய்து, உங்களைச் சுத்தம் பண்ணிக் கொண்டு, அவருக்கேற்ற

www.Radio882.com

பிள்ளைகளுக்கான அடையாளமாய் இருக்கிற பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களாய் அவரண்டை வாருங்கள்.

இப்படி யாக்கோபு பெத்தேலுக்குத் திரும்பிச் செல்வதற்கு அந்த இடத்திலே அவன் சிந்திக்கக் காரணம் என்ன? தேவனே, யாக்கோபை நோக்கி, நீ எழுந்து பெத்தேலுக்குப் போ என்று அவனைப் பார்த்துச் சொல்கிறார்.

இன்று உங்களைப் பார்த்தும் ஆண்டவர், மகனே, மகளே, நீ உன் ஆவிக்குரிய வாழ்க்கையை ஆரம்பித்த நிலைமைக்குத் திரும்ப வரவேண்டும். என்று நான் விரும்புகிறேன் என்று சொல்கிறார். எத்தனை மாதங்களாக வருடங்களாக அவரைவிட்டு நாம் தூரம் போயிருந்தாலும், எத்தனை அந்நிய தெய்வங்களை நமக்கு உண்டாக்கிக் கொண்டிருந்தாலும், அது எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தேவையற்றப் பழக்க வழக்கங்களைக் களைந்துவிட்டு ஆண்டவரண்டை வருவோமா?

ஆதியாகமம் 35 : 3

ஆபிரகாமும் ஈசாக்கும் சென்ற இடத்திலெல்லாம் பலிபீடங்களைக் கட்டினார்கள். இப்பொழுது யாக்கோபும் பலிபீடத்தைக் கட்ட ஆரம்பிக்கிறான். இதற்காக நாம் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். இந்த பலிபீடமே அவனை தேவனுக்கு சாட்சியான ஒரு மனிதனாக மாற்றுகிறது.

நம்முடைய வீடுகளிலே பலிபீடம் உண்டா? கற்களினாலே அல்லது பளிங்கு கற்களினாலே கட்டப்பட்ட பலிபீடம் அல்ல. நாம் குடும்பமாக இணைந்து ஆண்டவரை சந்திக்கும் ஒரு நேரம் நம்முடைய குடும்பங்களிலே உண்டா? குடும்ப ஜெபம் இல்லாத வீடு கூரையில்லாத வீடு. என்று பேராயர் ஜெபராஜ் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்.

ஆம். அது இன்றும் நமக்கும் தேவையான ஒரு செய்தியாய் இருக்கிறது. எங்களுடைய வீட்டிலே குடும்ப ஜெபம் இருக்கிறது என்று நீங்கள் எனக்கு பதில் கூறுவீர்களென்றால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அதற்காக உங்களை நாங்கள் வாழ்த்துகிறோம்.

ஆனால் உங்களுடைய வீட்டிலே குடும்ப ஜெபம் இல்லை என்று யாராவது சொன்னால், இரண்டு பேரோ, மூன்று பேரோ ஒவ்வொரு நாளும் இணைந்து ஆண்டவருடைய சமூகத்திலே வரும் ஒரு நேரத்தைக் கண்டுபிடியுங்கள். ஒருவேளை அதற்கான தலைமைத்துவத்தை நீங்கள் எடுக்க வேண்டியதிருக்கும். குடும்பத்தின் தலைவனாக நீங்கள் எடுக்க வேண்டியதிருக்கும், அல்லது தலைவன் அக்கறையற்ற ஒரு தலைவனாய் இருப்பானென்றால் தலைவியாக நீங்கள் அந்தப் பொறுப்பை எடுக்கவேண்டியதிருக்கும். ஒருவேளை பெற்றோர் பொறுப்பில்லாதவர்களாய் இருப்பார்களென்றால் அருமையான சகோதரனே, சகோதரியே, பிள்ளைகளாகிய நீங்கள் அந்தப் பொறுப்பை எடுக்க வேண்டியதிருக்கும்.

இணைந்து ஜெபிக்க வர மனமுள்ள இன்னும் ஒருவரையாவது நீங்கள் கண்டுபிடித்து உங்கள் குடும்ப ஜெபத்தை ஆரம்பம் செய்யுங்கள். வரும் நாட்களிலே மற்றவர்களும் ஒவ்வொருவராக வந்து இணைந்து கொள்வார்கள்.

சரி இங்கே யாக்கோபு என்ன சொல்கிறார். நாம் எழுந்து, பெத்தேலுக்குப் போவோம் வாருங்கள். குடும்பத்திலுள்ள மற்ற யாருக்குமே இந்த பெத்தேல் எங்கே இருக்கிறதென்றேத் தெரியாது. அதைத்தான் விளக்கி சொல்கிறான். எனக்கு ஆபத்து நேரிட்ட நாளில் என் விண்ணப்பத்துக்கு உத்தரவு அருளிச் செய்து நான் நடந்த வழியிலே என்னோடே கூட இருந்த தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்குவேன் என்று சொல்கிறான்.

அவன் சொல்வது என்ன? தன்னந்தனியாக முதல் முறையாக இளைஞனாக குடும்பத்தை விட்டு வெளியே ஓடிவந்த நாளிலே, பெத்தேலிலே தேவன் அவனை சந்தித்தவர் உண்மையுள்ளவராக மீண்டும் அங்கே திரும்ப வரச்செய்தார். அதை நினைவு கூறுகிறார். முதன் முறை தேவன் அங்கே சந்தித்தபொழுது நான் உனக்குச் சொன்னதை செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்று கூறினார். அவ்வாறே தேவன் உண்மையுள்ளவராய் இருந்தார்.

வருடங்கள் உருண்டோடின. ஆனாலும் அவர் உண்மையுள்ளவராய் இருந்தார். இப்பொழுது தேவன் அவனைப் பார்த்து, மீண்டுமாக நீ பெத்தேலுக்குப் போக வேண்டும். நீ எங்கே துவங்கினாயோ, அங்கே திரும்பச் செல்ல வேண்டும். மீண்டுமாக உன் விசுவாச வாழ்க்கையை நீர் ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்கிறார்.

இங்கே நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய காரியம் என்ன தெரியுமா? நாம் ஒரு நிழலாட்டமான ஒழுங்கற்ற கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்த காலங்களெல்லாம் வீணானதுதான்.

மீண்டுமாக ஆரம்பம் முதல் துவங்கும்படியாய் கர்த்தர் நமக்குக் கட்டளையிடுகிறார். இந்த காரணத்திற்காகத்தான் இஸ்ரவேல் மக்களையும் எகிப்திற்குக் கொண்டுபோய் மீண்டுமாக பின்னான காலங்களிலே வாக்குத்தத்த பூமிக்கு அவர் கொண்டு வந்தார். வாக்குத்தத்த பூமியை நோக்கி கடந்துவரும்பொழுது கூட தேவன் அவர்களுக்குத் தரிசனமாகி வாக்குத்தத்த பூமிக்குள்ளே விசுவாசத்தோடு, தைரியத்தோடு நுழையச் சொன்னார், ஆனால் அவர்கள் அவிசுவாசத்தினாலே நுழையவில்லை. எனவே 40 ஆண்டுகள் சுற்றி வளைத்து அலைந்து திரிந்தார்கள். அவிசுவாசிகளெல்லாம் மரித்தப் பின்னால் யோசுவாவுக்கு ஆண்டவர் தெளிவாக ஜனங்களை உள்ளே அழைத்துப் போகும்படியாகச் சொன்னார். அப்படி அவர் கூறிய அந்த இடத்திலிருந்து யோசுவா பணியை சரியாய்ச் செய்தான். அந்த ஜனங்கள் 40 ஆண்டு காலம் வீணாய் அலைந்து திரிந்துவிட்டார்கள்,

இன்றைக்கும் எத்தனை பேர் கிறிஸ்தவர்களாக தங்கள் வாழ்க்கையை வீணாக செலவழித்துக் கொண்டு இருக்கிறார்கள். இங்கே நாம் ஒரு அருமையான ஆவிக்குரிய பாடத்தைக் கற்றுக் கொள்கிறோம்.

உங்களைக் குறித்து எனக்கு தெரியாது. ஆனால் நம்மிலே பலர் யாக்கோபைப் போலத் தான் இருக்கிறோம். என்றோ ஒரு நாள் விசுவாச வாழ்க்கைக்குள்ளே காலெடுத்து வைத்துவிட்டோம். ஆனால் விசுவாச வாழ்க்கையிலே வளர வேண்டிய அளவு வளராமல் காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம். இது இன்றைக்கும் நமக்கு எத்தனை பொருத்தமானதாக இருக்கிறதில்லையா?

ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். இங்கே அவர் என்ன சொல்கிறார்? நான் யாக்கோபின் தேவன் என்று சொல்கிறார். இந்த அதிகாரம் உண்மையாகவே நமக்கு ஒரு உற்சாகமூட்டும் அதிகாரமாகவே இருக்கிறது.

ஆதியாகமம் 35 : 4

அந்நாட்களிலே காதணிகளானது அவர்களுடைய விக்ரக வணக்கத்தோடு தொடர்புடையதாய் இருந்தன. அதைக் குறித்து வேதத்திலே கூறப்பட்டிருக்கிறது. எனவே இப்பொழுது அவர்கள் அவைகள் எல்லாவற்றையும் களைந்து போட வேண்டும். எனவே அந்நிய தெய்வங்களை விலக்கிப் போடும் செயலிலே முதலாவதாக, எல்லா தெய்வங்களையும் காதணிகளையும் யாக்கோபு குழி தோண்டிப் புதைத்தான். வேறு இடத்திலே சுற்றி, கட்டி பத்திரமாக வைக்கவில்லை, புதைத்துப் போட்டான்.

அவர்கள் புதிய வாழ்க்கையை துவங்குவதினாலே அது எல்லாவற்றையும் நிரந்தரமாக அகற்ற வேண்டும்.

ஆதியாகமம் 35 : 5, 6

யாக்கோபுக்குத் தான் தெரியும் அந்த இடத்தின் பெயர் பெத்தேல் என்று, மற்றவர்களுக்கு அது என்றைக்கும் லூசுதான்.

ஆதியாகமம் 35 : 7

ஏல்பெத் என்றால் தேவனுடைய வீடு என்று பொருள். இதுதான் முதல் முறை யாக்கோபு அந்த ஸ்தலத்திற்கு அவன் அங்கே தங்கியபொழுது கொடுத்த பெயர். இப்பொழுது அதே இடத்தை ஏல்பெத்தேல் என்று சொல்கிறான். இதன் பொருள் என்னவென்றால் தேவனுடைய வீட்டின் தேவன் என்பதாகும். இது யாக்கோபின் வாழ்க்கையிலே காணப்படும் ஆவிக்குரிய வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது.

ஆதியாகமம் 35 : 8

இந்தக் குறிப்பிட்டக் காலக்கட்டத்திலே ரெபெக்காளின் தாதியான தெபொராள் யாக்கோபோடுகூட இருந்திருக்கிறாள். இதனால் இதற்கு முன்னதாகவே ரெபெக்காள்

www.Radio882.com

மரித்துவிட்டாள் என்று நமக்குத் தெரிய வருகிறது. எப்பொழுது ரெபெக்காள் மரித்தாள் என்பதைக் குறித்து வேதப்புத்தகம் நமக்குக் கூறவில்லை. யாக்கோபை சந்திக்க ஏசா பரிவாரங்களோடு வரும்பொழுது ஒருவேளை இந்த தெபொராளும் யாக்கோபை சந்திக்கும்படியாக வந்து தனது எஜமாட்டியாகிய ரெபெக்காள் அதிகம் நேசித்த யாக்கோபுடனேயே தனது மீதி நாட்களைக் கழிக்கத் தீர்மானம் பண்ணி, அவனோடு தங்கியிருக்கலாம்.

ஆனால் யாக்கோபு தனது தாயை அதற்குப்பின் சந்திக்கவில்லை. ரெபெக்காள் கொஞ்சநாள் என்று தான் அனுப்பினாள். ஆனால் வாழ்நாள் முழுவதும் அவர்கள் ஒருவரையொருவர் பார்க்க முடியவில்லை. ரெபெக்காளின் தாதியாகிய இந்த தெபொராள் ஒருவேளை ரெபெக்காளின் மரண செய்தியை யாக்கோபுக்குக் கூறுவதற்காகக் கடந்து வந்து அதன்பின்னர் யாக்கோபோடு கூடவே நிரந்தரமாக தங்கியிருந்திருக்கலாம்.

இப்பொழுது இங்கே அவள் மரிக்கிறாள்.

ஆதியாகமம் 35 : 9

கடந்த பல ஆண்டுகளாக தேவன் யாக்கோபோடு இடைபட முயற்சித்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுது எங்கே முதன்முறையாக தேவன் அவனை சந்தித்தாரோ, அந்த இடத்திலேயே மீண்டுமாக சந்திக்கிறார். லாபானோடு அவன் செலவு செய்த அத்தனை காலங்களும் அதிகமாக வீணான காலங்களாகவேப் போயிற்று.

ஆதியாகமம் 35 : 10, 11

கவனித்தீர்களா? தேவன் ஆபிரகாமுக்குத் தன்னை எப்படி வெளிப்படுத்தினாரோ அதேப் போல இங்கேயும் தன்னைக் குறித்துச் சொல்கிறார். நான் சர்வவல்லமை உள்ள தேவன். அதுமட்டுமல்ல ஏற்கனவே யாக்போக்கு நதியண்டையிலே தேவன் அவனைப்பார்த்து இனி நீ யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் எனப்படுவாய் என்று கூறியிருந்தார். என்றாலும் அவனுடைய வாழ்க்கையிலே அநேக மாற்றங்கள் இல்லை. மிக மெதுவாகவே கர்த்தருக்குள்ளே வளர்ந்து வந்துகொண்டிருந்தான். இங்கே மீண்டுமாக இஸ்ரவேல் என்று உனக்குப் பேர் வழங்கும் என்று சொல்லி, அவனுக்கு இஸ்ரவேல் என்று பெயரிடுகிறார்.

நம்முடைய வாழ்க்கையிலேயும் கூட பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே தேவன் ஒரு நோக்கத்தையும், ஒரு அர்தத்தையும், புதிய கண்ணோட்டத்தையும் நமக்குக் கொடுத்துவிடுகிறார். நாம் அதை அதிகமாய் உணராமல், அதைப்பற்றி சிந்திக்காமல், மெதுவாக வளர்ந்து வருகிறபடியினாலே மீண்டும் ஒரு முறை அவர் குறுக்கிட்டு நம்மை சந்தித்து அதைக் குறித்து நம்மிடத்திலே பேசவேண்டியதிருக்கிறது. அதேப் போல இங்கே யாக்கோபோடு அவர் பேசுகிறார்.

www.Radio882.com

ஆதியாகமம் 35 : 12

இங்கே நாம் பார்க்கிறது போல மூன்றாவது முறையாக தேவன், இந்த வாக்குத்தத்த பூமியைக் குறித்துச் சொல்லுகிறார். முதலாவது ஆபிரகாமுக்குச் சொன்னார்; பின்னர் ஈசாக்குக்குச் சொன்னார், இப்பொழுது யாக்கோபினிடத்திலேயும் இந்த தேசத்தை உனக்குப் பின் உன் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று வாக்குக்கொடுக்கிறார்.

கவனித்தீர்களா? ஒவ்வொருவரிடத்திலும் கூட தேவன் ஒருமுறை அல்ல பலமுறை அந்தத் தேசத்தைக் குறிப்பிட்டு அது அவர்களுடைய சந்ததிக்கு என்று திரும்பத் திரும்பச் சொல்கிறவராய் இருக்கிறார்.

உங்களுக்கு என்று தேவன் வைத்திருக்கிற ஆசீர்வாதம் வேறு யாருக்கும் செல்லப்போவதில்லை. அதைப் பெற்றுக் கொள்வதற்காக நீங்கள் குறுக்கு வழிகளையோ, மாம்ச வழிகளையோ தேடவேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு கர்த்தர் ஒரு ஆசீர்வாதத்தை வாக்குப்பண்ணியிருக்கிறாரென்றால் அவருடைய நேரம் வரும் வரை பொறுமையாய் காத்திருங்கள். கர்த்தர் நிச்சயம் அதை உங்களுக்குத் தருவார்.

ஆதியாகமம் 35 : 13 – 15

இங்கேதான் முதல் முறையாக வேதத்திலே பானபலியைக் குறித்து நாம் பார்க்கிறோம். லேவியராகமப் புத்தகத்திலே ஐந்து விதமான பலிகளைக் குறித்து நாம் பார்க்கிறோம். ஆனால் பானபலியைக் குறித்து அங்கே சொல்லப்படவில்லை. அது எப்படி செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்படவில்லை. ஆனால் அதைக் குறித்துக் கூறப்பட்டிருக்கிறது. இதுதான் மிகப் பழமையான ஒரு காணிக்கையாக, பலியாகத் தெரிகிறது. இன்றைய விசுவாசிகளுக்கும் அது மிக ஆழமான அர்த்தமுள்ளதாய் இருக்கிறது. பான பலியானது மற்ற பலிகள் மேலே ஊற்றப்படுகிறதாய் இருக்கிறது. அது நீராவியாக மேல் எழுந்து செல்கிறது.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் தனது வாழ்க்கையைக் குறித்து பிலிப்பு சபையாருக்கு எழுதும்பொழுது, தனது வாழ்க்கையும் அப்படிப்பட்ட பான பலியாக ஊற்றப்பட வேண்டும் என்று விரும்புவதாகச் சொல்கிறார்.

இப்பொழுது ராகேலுடைய மரணத்தைக் குறித்து சிந்திக்கப் போகிறோம். ஆதியாகமம் 35 : 16

ராகேலுக்கு ஏற்கனவே யோசேப்பு என்ற ஒரு மகன் பிறந்திருந்தான். இப்பொழுது இரண்டாவது குமாரனைப் பெற்றெடுக்கிறாள்.

ஆதியாகமம் 35 : 17, 18

ராகேல் அந்தப் புதிய குழந்தைக்கு என் வேதனையின் மகன் என்று பேரிடுகிறாள். ஆனால் யாக்கோபு அவனுடைய முகத்தைப் பார்த்து எனக்கு அருமையான ராகேல்

www.Radio882.com

மரித்துப் போனாள். இந்தக் குழந்தை அவளைப் போலவே இருக்கிறான். எனவே அவனை நான் பென்யமீன் என்று அழைப்பேன், எனது வலதுகரத்தின் மகனே என்று கூறினான்.

யாக்கோபு ராகேலின் பிள்ளைகளின் மேலே ஒரு விசேஷித்த பாசம் வைத்திருந்தான். யாக்கோபு பதான் அரானிலே இருந்த காலங்களிலே ராகேலின் மேலே வைத்திருந்த அன்பு ஒன்றே அவனுக்கு விசேஷித்ததாய் இருந்தது, வேறு எதையுமே அவன் சரீரப் பிரகாரமாகவோ, தனக்கென்றோ தேடியதாகத் தெரியவில்லை. ராகேலை நேசித்தான். அதிலே எந்த விதமான கேள்விக் குறியும் இல்லை. அவளுக்காக தனது வாழ்க்கையிலே எதையுமே செய்ய ஆயத்தமாய் இருந்தான்.

பின்னாலே அவளுடைய வாழ்க்கையை நீங்கள் திரும்பிப் பார்ப்பீர்களென்றால், தகப்பனுடைய சுரூபங்களை அவள்தான் எடுத்துக் கொண்டு வந்திருந்தாள். அதைக் குறித்துக் கூட அவன் கடிந்து கொள்ளவில்லை. லேயாளோ அல்லது வேறு யாராவது அதை எடுத்து வந்திருப்பார்களென்றால் அதைக் குறித்து அறிந்த உடனேயே ஒரு வேளை அகற்றியிருப்பான். ஆம், ராகேலை அவன் விசேஷித்து நேசித்தான். அவள்தான் யோசேப்பைப் பெற்றுக் கொடுத்தாள். இப்பொழுது பென்யமீனையும் பெற்றுக் கொடுக்கிறாள்.

பென்யமீன் பிறக்கும்பொழுதுதான் அவள் மரித்துப் போகிறாள். பென்யமீனுக்கு ஜீவன் கிடைத்ததினாலே அவள் ஜீவனை இழந்தாள். உண்மையாகவே யாக்கோபுக்கு இது ஒரு மனவேதனையான நேரம்தான். யாக்கோபு ராகேலின் பிள்ளையான யோசேப்பையும், பென்யமீனையும் அதிகமாக நேசித்தான்.

எனவே அந்தப் பிள்ளைகளுடைய சகோதரர் எல்லாரும் அவர்கள் மேலே பொறாமை கொண்டார்கள்.

யாக்கோபு தனது வீட்டிலேயே விசேஷித்து நேசிக்கப்பட்டபடியினாலே பிரச்சனைகளை சந்தித்திருந்தும், இப்பொழுது யோசேப்பை விசேஷித்து நேசிக்கிறான். அதை அவன் செய்திருக்கக் கூடாது. அதனாலே விளையக்கூடிய கஷ்டங்களை அறிந்திருந்தாலும் அதை சிந்திக்கவில்லை. ராகேலின் மரணத்திற்குக் காரணமாய் அந்தக் குழந்தை இருந்தாலும் அதை ராகேலின் துக்கம் என்று அழைக்க அவன் விரும்பவில்லை. ஏனென்றால் அவனுடைய துக்கமாக அவனில்லை.

யாக்கோபுவின் வலதுகரமாய் அவன் இருந்தான். வயதான காலத்திலே அவன் பிடித்து நடக்கும் ஒரு கம்பானான். இங்கே அவன் செய்த அந்தத் தவறைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். ஏனென்றால் பின்னான காலத்திலே இதனாலே அவன் மிகுந்த துக்கத்திற்குள்ளே கடந்து செல்கிறான். அவனுடைய வாழ்க்கையிலே அவன் அனுபவித்த எல்லாக் காரியங்களுக்குமான வேர் யாக்கோபின் வாழ்க்கையிலே காணப்பட்ட

www.Radio882.com

இப்படிப்பட்ட பாவங்கள்.

அருமையான சகோதரனே, சகோதரியே, நம்முடைய வாழ்க்கையிலே நாம் செய்யும் தவறுகளை தேவன் சரி என்று சொல்வதில்லை. அதை வைத்துக்கொண்டு நாம் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறோம். நாம் அவ்வாறு தப்பித்துக்கொள்ள முடியாது என்பதை யாக்கோபின் வாழ்க்கையிலிருந்து அறிந்து கொள்கிறோம்.

ஆதியாகமம் 35 : 19

அருமையானவர்களே, இன்றைக்கும் அவளுடைய கல்லறை இருக்கிறது. அந்தப் பகுதியைச் சுற்றிப்பார்க்கப்போகிறவர்கள், இந்த இடத்தைப் பார்வையிடுகிறார்கள்.

ஆதியாகமம் 35 : 20

இந்த வார்த்தை மோசேயின் காலத்திலே எழுதப்பட்டது. மோசே இதை எழுதும்பொழுது அந்தக் கல் அங்கே இருந்தது. அதுமட்டுமல்ல இன்றும் அந்தக் கல் அங்கே இருக்கிறது.

ஆதியாகமம் 35 : 21 – 26

யாக்கோபு மற்ற மனைவிகளின் மூலமாகப் பெற்ற குழந்தைகளைக் குறித்து வாசிக்கிறோம். யாக்கோபின் குமாரர்களிலேயே இந்த யோசேப்பும், பென்யமீனும் தான் விசேஷித்தவர்களாய் காணப்படுகிறார்கள். மற்றவர்களுடைய வாழ்க்கை அவ்வளவு சிறந்ததாக இல்லை. தேவன் பலதார மணத்தை ஏற்றுக் கொள்கிறதில்லை என்பதற்கு இது ஒரு அடையாளம்.

லாபானே இதற்கு பொறுப்பானவனாய் இருந்தாலும் அவனுடைய ஆலோசனையின்படியே யாக்கோபும் சென்றுவிட்டான். காரணம் அவன் ராகேலின் மேலே வைத்திருந்த அன்பு.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, திருமண வயதிலே இருக்கிறவர்கள் தாங்களே தங்களுடைய வாழ்கைத் துணையை தெரிந்தெடுக்கும் சூழ்நிலையிலேயும் எந்தக் காரணத்தைக் கொண்டும், தேவன் வெளிப்படுத்தியிருக்கிற தமது சித்தத்தை மீறி செயல்படக்கூடாது என்பதை மறந்துபோகக்கூடாது.

ஆதியாகமம் 35 : 27

யாக்கோபு வந்து சேர்ந்தபொழுது ஈசாக்கு அவனைப் பார்க்கும்படியாக அவனுடைய சத்தத்தைக் கேட்கும்படியான நிலைமையிலே இருந்தானா இல்லையா என்று நமக்குத் தெரியவில்லை. ஏனென்றால் இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக அவன் புறப்பட்டுப் போகும்பொழுதே அவனுடைய பார்வை அத்தனை சரியானதாய் இல்லை.

ஆதியாகமம் 35 : 28

யாக்கோபு வாக்குத்தத்த பூமிக்கு திரும்ப வந்திருந்தாலும், தகப்பனாருடைய மரணமே

www.Radio882.com

இரண்டு பேரும் சேர்ந்து செயல்படும் ஒரு நேரத்தைக் கொண்டுவந்தது. இது தவிர அவர்கள் இணைந்து இருந்ததாகத் தெரியவில்லை. இந்த அதிகாரத்தை வாசிக்கும் பொழுது உங்கள் மனதிலே ஒன்று பட்டிருக்கும் என்று நினைக்கிறேன்.

முதலாவது ரெபெக்காளின் தாதியாகிய தெபொராளின் மரணத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம். அதுமட்டுமல்ல இதற்கு சற்று காலங்களுக்கு முன்னர்தான். ரெபெக்காள் மரித்திருக்க வேண்டும். அடுத்ததாக ராகேலின் மரணத்தைக் குறித்து வாசிக்கிறோம். இறுதியாக ஈசாக்கின் மரணத்தோடு இந்த அதிகாரம் நிறைவடைகிறது.

இந்த அதிகாரத்திலே நாம் கற்றுக் கொள்கிற முக்கியமான காரியம் என்ன? நாம் தேவனோடு வாழும்படியாய் ஒரு குறிப்பிட்ட காலத்திலே வாழ்க்கையைத் துவங்கியிருந்தாலும் கருத்தற்ற கிறிஸ்துவ வாழ்க்கை வாழ்ந்து வீணாக்கிய நாட்களை எல்லாம் விட்டு மீண்டுமாக நாம் ஆரம்பித்த இடத்திற்குத் திரும்ப வரவேண்டும் என்பதைக் குறித்து சிந்தித்தோம். யாக்கோபுவும் பெத்தேலிலே விசுவாச வாழ்க்கையைத் துவங்கினாலும், பல அனுபவங்களின் வழியாக கடந்து வந்து கொஞ்சம் கொஞ்சமாய் விசுவாசத்திலே வளர்ந்து இருந்தான். ஆனால் மீண்டுமாக அதே இடத்திற்கு தேவன் அவனைக் கொண்டுவந்து, அவனுக்கு வாக்குறுதிகளைத் திரும்பக் கொடுத்து, பரிபூரணமான ஒரு விசுவாச வாழ்க்கைக்குள்ளே யாக்கோபை உறுதிப்படுத்தினார். அந்த உறுதிப்படுத்துதலுக்கு முன்னதாக தேவன் அருவறுக்கிற காரியங்களை யாக்கோபு விலக்க வேண்டியதிருந்தது.

புதைக்க வேண்டிய காரியங்களைப் புதைக்க வேண்டியதிருந்தது. சுத்தம் பண்ண வேண்டிய காரியங்களை சுத்தம்பண்ண வேண்டியதிருந்தது. மாற்றப்பட வேண்டிய பழக்கவழக்கங்கள் மாற்றப்பட வேண்டியதிருந்தது. அத்தனையையும் அவன் செய்தபொழுது தேவன் அவனுடைய வாக்குத்தத்தத்தை மீண்டுமாக உறுதிப்படுத்தி, நான் சர்வவல்லமையுள்ள தேவன் நீ பலுகிப் பெருகுவாயாக என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தார். நம்மையும் தேவன் இன்றும் ஆசீர்வதிக்க வேண்டுமென்றால், நம்முடைய வாழ்க்கையிலேயும் நாம் விலக்க வேண்டிய காரியங்களை விலக்கி, புதைக்க வேண்டிய காரியங்களைப் புதைத்து, அறிக்கை செய்ய வேண்டிய காரியங்களை அறிக்கை செய்து, மாற்ற வேண்டிய பழக்க வழக்கங்களை மாற்றி அவருடைய சமூகத்திலே நம்மை அர்ப்பணிக்கும்பொழுது நம்மையும் அவர் மீண்டுமாக ஆசீர்வதிக்க ஆவலோடு இருக்கிறார்.

ஆதியாகமம் 36

நாம் ஆதியாகமம் 36ஆம் அதிகாரத்தை சிந்திக்கப் போகிறோம். இந்த அதிகாரம் முழுவதிலும் ஏசாவின் குடும்பத்தினர்தான் ஏதோம் தேசமானார்கள் என்பதைப் பார்க்கப் போகிறோம். சாதாரண வாசகர்களுக்கு இந்த அதிகாரம் ஆர்வம் தரக்கூடிய ஒன்றல்ல, ஆனால் பெயர்களையும் மனிதர்களையும் குறித்து படிக்கிறவர்களுக்கு எந்தெந்த தேச மக்கள் யார் யார் மூலமாய் வந்தார்கள் என்பதைக் குறித்து ஆர்வம் உள்ளவர்களுக்கு இது ஒரு சிறப்பான பகுதியே.

அரேபிய பாலைவனத்திலே இன்றும் கேட்கும் பல பெயர்களை நாம் இங்கேப் பார்க்கலாம். கூடாரம் செய்யும் ஓமர் என்பவர் ஏதோம் இனத்தை சேர்ந்தவர்தான். அதேப்போல தேமான், செப்பொ, கத்தாம், கேனாஸ்– இவர்கள் எல்லாருமே ஏசாவின் வம்சவழி மக்கள். இன்றைக்கும் அந்த இடங்களிலே அவர்கள் தங்கியிருக்கிறார்கள். ஏசாவின் குடும்பத்தினர் ஏதோம் நாட்டிலே குடியேறினார்கள். இந்தப் பகுதி சவக்கடலுக்குத் தென்கிழக்குப் பகுதியிலே இருக்கிறது. இது மலைப்பாங்கான ஒரு பிரதேசம். ஏதோம் தேசத்தின் தலைநகர் பாறைகள் நிரம்பிய பெற்ரா என்பதாகும். வேதப் புத்தகத்திலே ஏசாயா, ஏரேமியா, ஏசேக்கியல், ஒபதியா மூலமாக ஏதோமைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்களெல்லாம், மிகச் சிறப்பாக நிறைவேறின.

ஏசாவின் வம்சத்திலே வந்தவர்கள்தான் ஏதோம் தேசத்து மக்கள். இந்த அதிகாரம் முழுவதையும் நாம் வாசித்துப் பார்க்கும்பொழுது ஏசாதான் ஏதோமின் தகப்பன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் ஏசாவுக்கும் ஏதோமுக்கும் என்ன வித்தியாசம்? முதலாவதாக நாம் ஏசாவை சந்திக்கும்பொழுது ஈசாக்கின் குடும்பத்திலே ஒரு குமாரனாக நாம் சந்தித்தோம். எப்பொழுதும் ஏசா வீட்டைவிட்டு வெளியே காடுகளிலே, மலைகளிலே அலைந்து திரிகிற விளையாட்டு வீரனைப் போல சரீரம் கொண்ட ஒரு மனிதனாய் இருந்தான். வெளியே பார்வைக்கு மிகவும் கவர்ச்சிகரமாய் இருந்தான். ஆனால் அவன் மாம்சீகமான ஒரு மனிதன். அதுதான் ஏசா.

போதகர் ஒருவரிடத்திலே பல ஆண்டுகளுக்கு முன்னதாக ஒரு இளம் கிறிஸ்தவப்பெண் வந்து, பார்வைக்கு சிறப்பாய் தோன்றுகிற ஒரு வாலிபனைக் குறித்துப் பேசினாள். இரண்டுபேருமே பார்ப்பதற்கும் மிகவும் கவர்ச்சிகரமானவர்களாய் இருந்தார்கள். அந்தப் பெண் சீன தேசத்திலே பிறந்தவள்; அவளுடைய தகப்பனார் ஒரு எண்ணெய் கம்பெனியிலே வேலை செய்தார். மிகவும் செல்வந்தராக அவர் இருந்தார். இந்தப் பெண்மணி வங்கியிலே வேலை செய்த இந்த வாலிபனைச் சந்தித்தாள். அந்த வாலிபன் ஏழையான ஒருவன். பொதுவாகவே வங்கியிலிருக்கிற வாலிபர்கள் திருமணத்தைக் குறித்த எதிர்பார்ப்போடு இருப்பார்கள்.

வங்கியிலே அதிகமான பணம் வைத்திருக்கிற வாடிக்கையாளருடைய பிள்ளைகளை

www.Radio882.com

அவர்கள் கவனிப்பார்கள். எனவேதான் இந்தப் பையனும் அந்தப் பெண்ணை சந்தித்தான். அந்த வாலிபன் பார்ப்பதற்கு நன்றாக இருப்பான். ஏசாவைப் போல இருப்பான் என்று சொல்லலாம். அவள் சீனாவிலே வாழ்ந்த ஒரு ஊழியர் மூலமாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து கொண்ட ஒரு கிறிஸ்தவப் பெண். இந்த வாலிபனை திருமணம் செய்ய வேண்டும் என்று தனது போதகரிடத்திலே கூறினாள்.

எப்படியாவது ஒருநாள் இவனும் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வான் என்று கூறினாள். ஆனால் அந்தப் போதகர் அந்தப் பையனோடு பேசிப்பார்த்தபொழுது அவன் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதைக் குறித்து எந்த ஒரு சலனமும் காட்டவில்லை. ஆனாலும் அந்தப் பெண்மணியை திருமணம் செய்ய விரும்பினான். ஏனென்றால் அவள் அழகாயிருக்கிறாள். பணம் இருக்கிறது. அந்த வாலிபன் ஒரு மாம்சீகமானவன். எனவே அந்தத் திருமணத்தைத் தான் நடத்தி வைக்க முடியாது என்று அந்தப் போதகர் கூறிவிட்டார். அதைக் கேட்ட அந்தப் பெண் மிகுந்த கோபமடைந்தாள்.

ஆனால் சில மாதங்களுக்குப்பின் அந்தப் பெண் போதகரிடம் வந்து ஐயா அவன் என்னை விவாகரத்து செய்துவிட்டான் என்று சொன்னாள். அவள் சொன்ன காரியம் என்ன தெரியுமா? உலகப் பொருள்கள் மேலும் மாம்சீகமான காரியங்களின் மேலும் அத்தனை அதிகம் வாஞ்சை உள்ள எந்த ஒரு மனிதனையும் நான் பார்த்ததில்லை என்று கூறினாள். வெளியே பார்ப்பதற்கு அவன் மிக நல்லவன் போலக் காட்சியளித்திருக்கிறான். ஆனால் அவன் ஆவிக்குரிய மனிதனாக இல்லாதது மட்டுமல்ல, மிகவும் கொடுமையான மனிதனாய் இருந்திருக்கிறான். வெளியே பார்ப்பதற்கு சிறந்தவன் போலக் காணப்பட்டான். ஆனால் உள்ளத்திலோ கொடூரமான மிருகத்தனமான மனிதனாய் இருந்திருக்கிறான்.

ஆம். பிரியமானவர்களே, அது தான் ஏசா. ஏசாவின் காலத்திலே வாழ்ந்த பெண்களிலே அழகு நிறைந்த ஒரு பெண்மணியாய் நீங்கள் இருந்திருப்பீர்களென்றால், அவனைத் திருமணம் செய்ய நீங்களும் வாஞ்சித்திருப்பீர்கள், ஏனென்றால் அவ்வளவு வசீகரமான ஒரு இளைஞன். ஆனால் அவன் உலக ஆசையுடையவன்.

ஒருவேளை சிலர் தேவன் ஏன் ஏசாவை வெறுத்துவிட்டு யாக்கோபை மட்டும் தெரிந்துகொண்டார் என்று வாதிடலாம். ஏசா வெளியே பார்ப்பதற்த்தான் அத்தனை சிறந்தவனாய் இருந்தான்.

அருமையான சகோதரனே, சகோதரியே, தேவன் தவறு செய்வார் என்று நினைக்கிறீர்களா? ஒபதியா தீர்க்கதிரிசன புத்தகத்திலே ஏசாவின் வாழ்க்கையைக் குறித்து நாம் வாசிக்கிறோம். ஒரு ஏசா பத்து லட்சம் ஏதோமியர்களாகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருமே ஒவ்வொரு ஏசாதான். ஏதோமியரை சற்றே நாம் பார்போமென்றால், ஏசாவிலிருந்து இப்படிப்பட்ட மனிதர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஏசாவை ஒரு பூதக்கண்ணாடியின் கீழே வைத்து ஆராய்வதுபோல மிகவும்

www.Radio882.com

பெரிதாக விரிவாக்கப்பட்டு நாம் பார்க்கமுடியும். அங்கே நாம் பார்பதென்ன? பெருமை நிறைந்த ஒரு தேசம். எனவேதான் தேவன் ஏதோமியரைப் பார்த்து என்ன கூறினார் தெரியுமா?

ஒபதியா முதலாம் அதிகாரம் 3ஆம் 4ஆம் வசனங்களைப் பாருங்கள்.

கன்மலை வெடிப்புகளாகிய உன் உயர்ந்த ஸ்தானத்திலே குடியிருந்து, என்னைத் தரையிலே விழத்தள்ளுகிறவன் யார் என்று உன் இருதயத்தில் சொல்லுகிறவனே, உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம்போக்குகிறது.

நீ கழுகைப்போல உயரப்போனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தங்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்று அவர்களுடைய இருதயம் கேட்டதற்குக் காரணம் அவர்கள் இருதயத்தின் பெருமை. எனக்கு தேவனே தேவையில்லை என்று கூறியவர்கள்தான் இந்த ஏதோமியர்கள். மல்கியா தீர்க்கதரிசன புத்தகத்திலே தேவன் என்ன சொல்கிறார் தெரியுமா? யாக்கோபை நான் நேசித்தேன் ஏசாவையோ வெறுத்துவிட்டேன் என்று சொல்லியிருக்கிறார்.

ஏசா, யாக்கோபு வாழ்ந்த காலத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர்தான் அதைச் சொன்னார். ஆனாலும் எனக்குப் பிரியமான சகோதரனே, சகோதரியே, ஏசாவின் இருதயத்தை கர்த்தர் அறிந்திருக்கிறார். அவனுடைய வாழ்க்கையின் வழியை சரித்திரத்திலே நாம் பார்ப்போமென்றால், தேவன் செய்த எல்லாக் காரியமும் சரியானதே என்று கூறுவோம்.

ஆதியாகமம் 36 : 1

மீண்டுமாக இங்கே ஏதோம் என்பது ஏசாவின் வம்சம் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

ஆதியாகமம் 36 : 2 – 5

ஞாபகம் இருக்கிறதா? ஏசா இரண்டு கானானிய பெண்களையும் இஸ்மவேல் வம்சத்திலிருந்து ஒரு பெண்ணையும் திருமணம் செய்கிறான்.

ஆதியாகமம் 36 : 6, 7

ஞாபகம் இருக்கிறதா? ஆபிரகாமுக்கும் லோத்துக்கும் கூட இதே பிரச்சனை வந்தது. ஏனென்றால் இரண்டு பேருடைய மந்தைக்கும் போதுமான மேய்ச்சல் நிலம் அவர்களைச் சுற்றி இல்லை. ஏனென்றால் இருவருமே அதிகமான மந்தையை வைத்திருந்தார்கள். எனவே இங்கே ஏசாவும் யாக்கோபும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து செல்கிறார்கள். குறிப்பாக வாக்குத்தத்தப் பூமியை விட்டு ஏசா பிரிந்து செல்கிறான். தன் மந்தைக்கு அதிகமான மேய்ச்சல் நிலம் வேண்டும் என்பதற்காக ஏசா வேறு இடத்திற்குச் செல்லுகிறான்.

www.Radio882.com

ஆதியாகமம் 36 : 8

கானான் தேசத்திலுள்ள சேயீர் என்னும் மலைக்கு அவன் போகிறான். பதான் அராதுலிருந்து யாக்கோபு திரும்பி வந்த பொழுது ஏசா அங்கேதான் குடியிருந்தான். இதை ஆதியாகமம் 32: 3இல் நாம் அறிந்துகொள்ளலாம்.

ஆதியாகமம் 36 : 12

அருமையானவர்களே, அமலேக்கியர்களின் ஆரம்பம் இங்கேதான் சொல்லப்பட்டிருக்கிறது. தொடர்ந்து வரும் நூற்றாண்டுகளாக இந்த வனாந்திரத்திலே குடியிருந்த இந்த அமலேக்கியர்கள், பல திசைகளுக்குத் தள்ளப்பட்டார்கள். சிலர் வடக்கு ஆப்பிரிக்கா வரைக்கும் தள்ளப்பட்டார்கள். எல்லா அரேபியர்களுமே ஆபிரகாமின் மூலமாக வந்தவர்கள்தான். எகிப்திய பெண்ணாகிய ஆகார் மூலமாகவும் மற்றும் கேத்தூராள் மூலமாகவும் வந்தவர்கள். இந்த கேத்தூராளை ஆபிரகாம் சாராளுடைய மரணத்திற்குப் பின்னர் திருமணம் செய்திருந்தான். இப்படி இந்த மக்களிடையே கலப்பு மணங்களும் நடைபெற்றன. இஸ்ரவேலர்களின் குடும்பமும் இந்த குடும்பங்களும் ஆபிரகாமிலிருந்து வந்தவைகள்தான்.

ஊழியர் ஒருவர் மத்திய கிழக்குப் பகுதியிலே தன்னோடு சென்றிருந்த விசுவாசிகளுக்கு செய்தி அளிக்கும்போது ஒரு அரபு சகோதரரும் அங்கு இருந்தார். அவர் ஒரு கிறிஸ்தவராக இருந்தாலும், இஸ்ரவேல் தேசத்தைத் தான் வெறுப்பதாகக் கூறினார். அதற்கு இந்த ஊழியர் சகோதரனே அவர்களும் உங்களுடைய சகோதரர்கள்தானே என்று சொன்னபொழுது, அந்த அரபு சகோதரன் மிகவும் கோபப்பட்டு, எனக்கும் அவர்களுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது, என்று சொன்னார். ஆனால் இந்த ஊழியர் திரும்பத்திரும்ப இரண்டு பேருமே நாடோடிகளான வம்சவழியிலே வந்தவர்கள்தான் என்று தெளிவுபடுத்த வேண்டியதாயிற்று. எனவே எனக்கு பிரியமான சகோதரனே, சகோதரியே, இந்த உறவு முறைகளை விளக்கிக் காண்பிக்கும் இந்த அதிகாரமும் முக்கியமானதுதான்.

பரிசுத்த ஆவியானவர் திட்டமிட்டுத்தான் இந்த சரித்திரங்களை நமக்கு தெரியப்படுத்துகிறார். இந்த அதிகாரத்திலே சில வேடிக்கையான காரியங்களையும் நாம் பார்க்க முடியும்.

ஆதியாகமம் 36 : 15

இவர்களுக்கு அந்த பிரபுக்கள் பட்டம் எங்கேயிருந்து கிடைத்தது? இதுதான் பிரபுக்கள் வம்சங்களுக்கு ஆரம்பம் என்று சொல்லலாம். அவர்களே அந்தப் பெயர்களை தங்களுக்கு வைத்துக்கொண்டார்கள். ஆம். பிரியமானவர்களே பிரபுக்களைக் குறித்த வம்ச ஆரம்பம் இதுதான்.

ஆதியாகமம் 36 : 19

www.Radio882.com

இப்பொழுது ஏசாவின் குடும்பத்திலே பிரபுக்கள் இருக்கிறார்கள். ஐரோப்பா கண்டத்திலே வாழ்ந்த அநேகர் இந்த மக்களின் சந்ததியினராய் இருக்கிறார்கள். அதுமட்டும் அல்ல பிரபுக்களை உருவாக்குவதைவிட இன்னும் சில காரியங்களையும் செய்தார்கள்.

ஆதியாகமம் 36 : 31

அருமையானவர்களே, ஜனங்களுக்கு இராஜாவை ஏற்படுத்துவதென்பது தேவனுடைய திட்டமே அல்ல, இது ஏதோம் மக்களின் வாழ்க்கை முறை. அவர்கள் தங்களுக்கு மேலாக பிரபுக்களையும் அரசர்களையும் கொண்டவர்களாய் இருந்தார்கள். இஸ்ரவேல் மக்களுக்கு அரசர்கள் நியமிக்கப்படும் முன்னதாகவே இந்த ஏதோமியர்கள் அரசர்களைப் பெற்றவர்களாய் இருந்தார்கள்.

பின்னான காலங்களிலே 1 சாமுவேல் 8ஆம் அதிகாரம் 5ஆம் வசனத்திலே நாம் வாசிக்கிறது போல மற்ற தேசத்தைப் போல, எங்களை அரசாள எங்களை நியாயம் தீர்க்க அரசனை உண்டாக்க வேண்டும் என்று இஸ்ரவேல் ஜனங்கள் சாமுவேலிடத்திலே கேட்கிறார்கள். ஒருவேளை தென் திசையிலே பாருங்கள், ஏதோமியர்கள் அரசர்களை வைத்திருக்கிறார்கள். எனவே எங்களுக்கும் அரசன் வேண்டும் என்று கூறியிருப்பார்கள்.

ஆதியாகமம் 36 : 40 – 43

தேவன் புறக்கணித்த ஏசாவின் குடும்ப சரித்திரத்தை இங்கே நாம் வாசிக்கிறோம். இந்த அதிகாரத்தின் இறுதியிலேயும் மீண்டும் பல பிரபுக்களைக் குறித்து நாம் பார்க்கிறோம். ஒருவரையொருவர் சந்திக்கும்பொழுது மிக அதிகமாக வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் சொல்லியிருப்பார்கள். ஒருவர் இன்னொருவரைப் பார்த்து என்னுடைய சகோதரனை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன், அவர்தான் அல்வா பிரபு, என்று சொல்லியிருப்பார்.

மற்றுமொருவர் இவரை சந்தித்திருக்கிறீர்களா? இவர்கள் தான் திம்னா பிரபு என்று கூறியிருப்பார். அதுமட்டுமல்ல அநேக அரசர்களைக் குறித்து நாம் வாசிக்கிறோம். வம்ச வரலாறுகளை கற்றுக் கொள்ளும் மனிதர்களுக்கு இது ஒரு ஆர்வம் தரக்கூடிய அதிகாரமாகவே இருக்கிறது.

எனவே அருமையானவர்களே, இந்த அதிகாரம் இந்த பிரபுக்களின் பட்டியலோடு நிறைவடைகிறது. இவர்கள் ஏதோம் தேசத்திலே ஆங்காங்கே குடியிருந்தார்கள் என்று பார்த்தோம். இறுதியாக மீண்டுமாக இந்த ஏதோமியருக்குத் தகப்பன் ஏசாதான் என்று சொல்லி முடிக்கிறார்.

இந்த ஏதோமியர்களைக் குறித்து ஒபதியா, மல்கியா போன்ற தீர்க்கதரிசிகளும் தீர்க்க தரிசனம் உரைத்தார்கள். அது அப்படியே நிறைவேறியது. நாம் சிந்தித்த இந்த அதிகாரத்திலே, தேவனுடைய வாக்குத்தத்தம் யாக்கோபின் வாழ்க்கையிலே

www.Radio882.com

நிறைவேறுவதுதான் முக்கியமான பகுதி.

யாக்கோபு ஈசாக்கின் குடும்பத்திலிருந்து ஓடிப் போனாலும், தேவன் அவனுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படியே அவனை மீண்டுமாக இந்த வாக்குத்தத்த பூமிக்கு திரும்பி வரப்பண்ணினார். அதுமட்டுமல்ல, யாக்கோபுவின் சந்ததிக்கு என்று அந்த தேசத்தை அவர் ஏற்கனவே வாக்குப்பண்ணி இருந்தபடியினாலே ஏசா தன் குடும்பத்தோடு தொடர்ந்து அந்தப் பகுதியிலே தங்கியிருக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவனாக, யாக்கோபை விட்டு பிரிந்து வேறே தேசத்துக்குப் போனான் என்று வாசிக்கிறோம்.

ஏற்கனவே ஏசா சேயீர் மலையிலே இருந்தான். யாக்கோபு கானானுக்கு வந்த பொழுது அவனும் கானானுக்குத் திரும்ப வந்தான். ஆனால் காலங்கள் நிறைவேறும் பொழுது தேவனுடைய வார்த்தை நிறைவேறும் நேரம் வந்தபொழுது ஏசா பிரிந்து போகிறான்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே தேவன் நம்மிலே யார் யாருக்கு என்னென்ன வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறாரோ? அந்த வாக்குத்தத்தங்கள் ஒவ்வொன்றையும் சரியான நேரத்திலே நிறைவேற்றுகிறவராய் இருக்கிறார். அந்த வாக்குத்தத்தங்கள் நம்முடைய வாழ்க்கையிலே நிறைவேற வேண்டும் என்பதற்காக, நாம் எந்தக் குறுக்கு வழியையும், எந்த தந்திரமான வழியையும், எந்த உண்மைக்குப் புறம்பான வழியையும் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை.

கர்த்தருடைய நேரத்திற்காக நாம் காத்திருக்க வேண்டும்.

இரண்டாவதாக அவர் நமது வாழ்க்கையிலே அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்கு நம்மை தகுதிப்படுத்தும் வரை அவர் கற்றுக் கொடுக்கிற காரியங்களை ஒவ்வொன்றாக நாம் தொடர்ந்து பெற்றுக்கொண்டு, அவருக்குக் கீழ்படிந்து, அதன்படி செயல்பட்டுக்கொண்டே வரவேண்டியதும் நம்முடைய கடமையாய் இருக்கிறது.

யாக்கோபின் வாழ்க்கையிலே மட்டுமல்ல, யோசேப்பின் வாழ்க்கையிலேயும் அதேக் காரியத்தை தொடர்ந்து வரும் அதிகாரங்களிலே நாம் பார்க்கப்போகிறோம். கர்த்தர் ஒரு காரியத்தை செய்வாரென்றால், அதை நிச்சயமாய் செய்து முடிப்பார். ஒருவேளை அவர் சொன்ன காரியத்தை சீக்கிரமாய் செய்ய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம், நினைக்கலாம், ஆசைப்படலாம், ஆனால் அதற்கென்று அவர் வைத்திருக்கிற காலக்கட்டங்களை அவர் மாற்றியமைக்கிறதே இல்லை.

காரணம் என்னவென்றால், நமக்கு தேவன் வாக்குதத்தத்தைக் கொடுக்கும்பொழுது அந்த வாக்குதத்தத்திற்கு நாம் தகுதி உள்ளவர்களாக இருக்கிறதில்லை. எனவே நம்மை தகுதிப் படுத்தும்படியாகப் பலவிதமான பாதைகளிலே, வேதனைகளிலே, சோதனைகளிலே நம்மை வழிநடத்தி நம்மை தகுதிப்படுத்தி, ஏற்ற நேரத்திலே அந்த வாக்குத்தத்தத்தை நம்மிலே நிறைவேற்றுகிறார்.

அருமையான நண்பரே, உங்களுடைய வாழ்க்கையிலேயும் ஆண்டவர் எந்த வாக்குத்தத்தத்தையாவது நிறைவேற்றவில்லையே, எத்தனை வருடங்கள் ஆகிவிட்டன, என்று நீங்கள் நினைத்துக் கொண்டு, கவலைப்பட்டுக் கொண்டு இருப்பீர்கள் என்றால், ஆண்டவரே உம்முடைய நேரத்திலே அந்த வாக்குத்தத்தத்தை நான் பரிபூரணமாய் அனுபவிக்கத்தக்கதாக என்னை நீர் ஆயத்தப்படுத்தும், என்னை நீர் வழிநடத்தும், என்னை நீர் பக்குவப்படுத்தும், நீர் கற்றுக் கொடுக்கும் பொழுது உணர்வுள்ள இருதயத்தையும் கற்றுக் கொள்ளும் இருதயத்தையும் எனக்குத் தாரும் என்று ஜெபிக்க நாம் அழைக்கப்படுகிறோம். அவ்வாறு நாம் செய்யும்பொழுது தேவனுடைய திட்டம் பரிபூரணமாக நம்முடைய வாழ்க்கையிலே நிறைவேறும். அதிலே சந்தேகம் இல்லை.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் வம்ச வரலாற்றின் தொடரை நாம் சிந்திக்கும்பொழுது ஆதியாகமப் புத்தகத்தின் இந்த இறுதிப் பகுதியிலே நான்காவது முக்கியமான நபரைக் குறித்து நாம் பார்க்கப் போகிறோம்.

இந்த அதிகாரம் முதல் ஆதியாகமத்தின் இறுதிவரை முக்கியமான நபராக நாம் சிந்திக்கப்போவது யோசேப்பு. யாக்கோபுவின் குடும்பத்தைக் குறித்துதான் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் குறிப்பாய் யோசேப்பைக் குறித்துப் பார்க்கப்போகிறோம். ஆதியாகமப் புத்தகத்திலே ஆபிரகாம், ஈசாக்கு இவர்களைக் காட்டிலும் யோசேப்புக்கு அதிகமான அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

ஆதியாகமத்தின் முதல் பகுதியாகிய 11 அதிகாரங்களை விட யோசேப்புவைக் குறித்து நாம் சிந்திப்பதற்கு அதிகமான அதிகாரங்கள் இருக்கின்றன. வேதாகம மாணவர் ஒவ்வொருவருமே ஏன் யோசேப்புக்கு மட்டும் வேதப் புத்தகத்திலே இத்தனை முக்கியமான ஒரு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சிந்திக்க வேண்டும். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அதற்கு ஒரு காரணம் யோசேப்பின் வாழ்க்கை நல்லதொரு வாழ்கையாகவும், மாதிரியான ஒரு வாழ்க்கையாகவும் இருக்கிறது. பிலிப்பியர் 4ஆம் அதிகாரம் 8ஆம் வசனத்திற்கு அவன் ஒரு ஜீவனுள்ள மாதிரி என்று சொல்லலாம்.

பிலிப்பியர் 4:8

கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.

ஆம். இதற்குத்தான் யோசேப்பு ஒரு முன்மாதிரி. நம்முடைய வாழ்க்கையிலேயும், உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ அதற்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். யோசேப்பின் வாழ்க்கையும் அப்படித்தான்

www.Radio882.com

அமைந்திருந்தது.

யோசேப்பின் வாழ்க்கை அதிகமான அதிகாரங்களிலே சொல்லப்பட்டிருப்பதற்கான இரண்டாவது காரணம் யோசேப்பினுடைய அனுபவங்கள் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கைக்கு ஒத்ததாய் இருக்கின்றன. என்றாலும் புதிய ஏற்பாட்டிலே எந்த ஒரு இடத்திலேயும் இயேசு கிறிஸ்துவுக்கு நிழல் யோசேப்பு என்று சொல்லப்படவே இல்லை. இருந்தாலும் இயேசு கிறிஸ்துவுக்கும், யோசேப்புக்கும் இருக்கக்கூடிய ஒற்றுமையான காரியங்களை நாம் கவனிக்காமல் இருக்க முடியாது.

யோசேப்பின் சரித்திரத்தை நாம் கற்றுக்கொள்ளும்பொழுது இந்த ஒற்றுமைகளைக் குறித்து நாம் பார்ப்போம். குறைந்தது 30 ஒற்றுமைகள் இருக்கின்றன.

சரி, இப்பொழுது யாக்கோபுவின் வம்ச வரலாறை நாம் சிந்திக்கப் போகிறோம். இந்த சந்ததிதான் கிறிஸ்துவாகிய மேசியாவை உலகத்திற்குக் கொடுக்கிறது. யோசேப்பின் வாழ்க்கை துவங்கும் இந்த நேரத்திலே யாக்கோபு கானான் தேசத்திலே குடியிருக்கிறான்.

ஆதியாகமம் 37

ஆதியாகமம் 37 : 1

வடக்கே இருந்து கானானுக்குள்ளே வந்த யாக்கோபு பெத்லகேமிற்கு தெற்காக பிரயாணம்செய்து இப்பொழுது எபிரோனிலே வந்து தங்கியிருக்கிறான். இங்கே தான் ஆபிரகாம் வாழ்ந்து வந்தான். இது ஐக்கியத்தின் இடம், அதாவது இங்கேதான் ஆபிரகாம் தேவனோடு நெருங்கி வாழ்ந்து வந்தான்.

ஆதியாகமம் 37 : 2

அருமையானவர்களே, யாக்கோபுவின் குமாரர்களான யோசேப்பையும், பென்யமீனையும் தவிர மற்ற எல்லா குமாரர்களுமே பிரச்சனையானவர்களாய்தான் இருக்கிறார்கள்.

தேவன் கற்றுக் கொடுக்கும் பாடங்களை இந்த சகோதரர்கள் கற்றுக் கொள்வதற்கு மிக அதிகமான நாட்கள் எடுக்கின்றனர். இந்த அதிகாரத்திலே யாக்கோபுவின் முக்கியத்துவம் குறைந்து யோசேப்பைக் குறித்து, நாம் சிந்திக்கத் துவங்குகிறோம்.

யோசேப்பிற்கு அப்பொழுது பதினேழு வயதுதான் ஆகிறது. அருமையான வாலிப சகோதரனே, வாலிப சகோதரியே இந்த வாலிபனுடைய வாழ்க்கையை நாம் கற்றுக் கொள்ளும் பொழுது பல பயனுள்ள சத்தியங்களை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

வெளியே ஆடு மேய்க்கச் சென்றிருந்த யாக்கோபின் குமாரர்களிலே இவனே இளையவன். பென்யமீன் மிகவும் இளையவனாய் இருந்தபடியினாலே, அவன் வீட்டிலேதான் இருக்கிறான். ஆடு மேய்க்க சென்றிருந்த யோசேப்பு தன் சகோதரர்களின் தவறான காரியங்களை தகப்பனாருக்கு அறிவிக்கிறான். அதுமட்டுமல்ல, இவ்வாறு

www.Radio882.com

யோசேப்பு தகப்பனிடத்திலே வந்து தங்கள் காரியங்களைக் கூறுவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

அவனைப் பார்த்து கோள்மூட்டி என்று சொல்லியிருப்பார்கள்.

ஆதியாகமம் 37 : 3

யாக்கோபு தனது வீட்டிலேயே ஒரு நல்ல பாடத்தைப் படித்திருக்க வேண்டும், பிள்ளைகளிலே ஒரு பிள்ளையை விசேஷித்து நேசிக்கும்பொழுது, அங்கு பிரச்சனை வரும் என்பது அவனுக்குத் தெரியும்; அவனுடைய தகப்பனாரே அவனுடைய அண்ணனான ஏசாவை அதிகமாய் நேசித்தார், என்றாலும் அதே பழக்கத்தை தன்னுடைய குடும்பத்திலேயும் அவன் காண்பிக்கிறான். ஒருவேளை அவனுடைய உணர்ச்சிகளை நாம் புரிந்து கொள்ளக் கூடியதாய் இருக்கிறது. ஏனென்றால் அவன் அதிகமாய் நேசித்த மனைவியாகிய ராகேல் இப்பொழுது இல்லை. அவளே அவனுடைய வாழ்க்கையிலே மிக முக்கியமானவளாய் இருந்தாள். யோசேப்பும் மிகவும் நல்ல பையன். எனவே யாக்கோபு யோசேப்பை அதிகமாய் நேசிக்கிறான்.

இந்தக் காரியங்களெல்லாம் உண்மையாக இருந்தாலும் இது ஒரு சாக்குபோக்குதானே ஒழிய இந்தப் பழக்கம் சரியான ஒரு காரியமல்ல. பலவர்ணமான அங்கியை யாக்கோபு யோசேப்பிற்காகச் செய்திருக்கக் கூடாது. பல வர்ண அங்கி என்ற வார்த்தைக்கான மற்றுமொரு மொழிபெயர்ப்பு முழு கையுள்ள ஒரு அங்கி என்று சொல்லலாம். முழுமை உள்ள நீளமான ஒரு அங்கி.

அந்நாட்களிலே பொதுவாக அங்கி என்று சொல்லும்பொழுது அதில் பத்தடி நீளமான துணி இருக்கும். அதின் மத்தியிலே ஒரு வட்டமான துளையிட்டு அதை தலைவழியாக மாட்டிக் கொள்வார்கள். பாதிப்பகுதி முன்பக்கம் தொங்கும், மீதிப்பகுதி பின்பக்கம் தொங்கும். அந்தத் துணியை தங்கள் இடுப்பைச்சுற்றி அவர்கள் கட்டிக் கொள்வார்கள்.

அப்படிப்பட்ட அங்கிகளுக்கு நீண்ட கை கிடையாது எனவே நீண்ட கையுள்ள அங்கியை ஒருவன் தரித்துக் கொள்வானென்றால், மற்றவர்களைவிட அவன் உயர்வானவனாய் காணப்பட்டான். எனவேதான் இந்த பலவர்ண அங்கியும் யோசேப்பை சகோதரர் கூட்டத்திலிருந்து பிரித்தெடுக்கிறதாய் இருந்தது.

ஆதியாகமம் 37 : 4

தகப்பனாருக்கு விருப்பமான ஒரு மகனாய் அவன் காணப்பட்டபடியினாலே, இயற்கையாகவே சகோதரர்கள் அவனைப் பகைத்தார்கள். அவனோடு அன்போடே பேசக்கூட அவர்களால் முடியவில்லை. எனவே இந்த குடும்பத்திலேயும் ஒரு பிரச்சனையை இப்போது நாம் பார்க்கிறோம்.

அருமையான சகோதரனே, சகோதரியே, உங்களுக்கு நான் சொல்லிக்கொள்ள

www.Radio882.com

விரும்புகிற ஒரு காரியம் என்னவென்றால் யாருடைய குடும்பமாய் இருந்தாலும் பாவம் குடும்பத்தைப் பாழாக்கும். பாவம் வாழ்க்கையைப் பாழாக்கும். பாவம் சமுதாயத்தைப் பாழாக்கும். பாவம் தேசங்களைப் பாழாக்கும். இன்று நம்முடைய குடும்பங்களிலேயும் நம்முடைய பட்டணங்களிலேயும் நம்முடைய தேசங்களிலேயும் இதுதான் பிரச்சனை. காரணம் என்ன? அதைத்தான் தேவன் பாவம் என்றழைக்கிறார். எனவே இங்கே நாம் பார்க்கிறது போல யோசேப்பு மற்றவர்களுடைய பகைக்கு ஆளானவனாகிறான். தகப்பனோ இவனை விசேஷித்து நேசிக்கிறான், ஆனால் சகோதரர்கள் விசேஷித்துப் பகைக்கிறார்கள்.

ஆதியாகமம் 37 : 5, 6

இங்கே யோசேப்பின் நடத்தையை எப்படி நாம் விளக்குவது? சகோதரர்கள் செய்யும் தவறுகளை எதற்காக இவன் போய் தகப்பனாரிடத்திலே சொல்கிறான்? இப்படிக் கூறுவதினாலே சகோதரர்கள் பகைக்கிறார்கள் என்பது தெரிகிறது, இருந்தாலும் ஏன் அவன் கூறுகிறான்?

இந்த உலகம் எவ்வளவு கொடூரமானதாய் இருக்கிறது என்பதை அறியவில்லை. அவனுடைய சகோதரர்கள் எவ்வளவு கேடானவர்களாய் இருக்கிறார்கள் என்பது புரியவில்லை. சொல்லப்போனால் உலகம் அறியாத ஒரு இளைஞனாய் இருக்கிறான். பதினேழு வயது ஆனாலும் அவனுடைய உள்ளம் பாழாகவில்லை. உலகத்தின் வழிகளை அவன் அறிந்து கொள்வதற்கு மிக நீண்ட காலமாகிறது, என்றாலும் அவற்றையும் அவன் கற்றுக்கொள்கிறான். எந்த ஒரு மனிதனைப் போலவும் காலாகாலங்களிலே இந்த உலகம் எவ்வளவு கேடானது என்றும், ஒவ்வொரு மனிதனும் எவ்வளவு கேடானவனாய் இருக்கிறான் என்பதையும் புரிந்து கொள்கிறான். ஆனால் அது இப்பொழுது அல்ல, பின்னாலே.

அருமையானவர்களே, இவ்வளவு காலமாக யோசேப்பு எப்படி பாதுகாக்கப்பட்டான் என்பதை சற்று எண்ணிப்பாருங்கள். அவனுடைய தகப்பனாகிய யாக்கோபு தனது முழு அன்பையும் ராகேல் மேலே வைத்திருந்தான். முதல் முறையாக அவளை சந்தித்தப் பொழுதே அவள்மேல் அன்புகொண்டு அவளுக்காகப் பதினான்கு ஆண்டுகள் அவன் வேலை செய்தான். அவனுக்காக முதல் குழந்தையை அவள் பெற்றெடுக்கும் முன்பதாக எத்தனையோ ஆண்டுகளாகிவிட்டன.

இறுதியாக யோசேப்பு பிறந்தான். யோசேப்பு பிறந்தது யாக்கோபுக்கு எத்தனை பெரிய மகிழ்ச்சியாய் இருந்திருக்கும், இல்லையா? ஆனால் இப்பொழுது ராகேல் மரித்துப் போய்விட்டாள். எனவே தனது அன்பு முழுவதையும் யோசேப்பின் மேலே அவன் காட்டுகிறான்.

அதை அவன் செய்திருக்கக் கூடாது. ஏனென்றால் அவனுக்கு இன்னும் அநேகக்

www.Radio882.com

குமாரர்கள் இருந்தார்கள். அவர்களையும் அவன் வளர்க்க வேண்டும். ஆனாலும் அவன் யோசேப்பை பட்சத்தோடு வித்தியாசமாய் சிநேகித்தான். தகப்பனின் அன்பே அவனது பாதுகாவலாயிற்று.

ஆதியாகமம் 37 : 7, 8

ஒருவேளை அவர்கள் பற்களைக் கடித்துக் கொண்டு அவன் மேல் எவ்வளவு எரிச்சலானார்கள் என்பதை சிந்திக்க முடிகிறதா? அவன் அவர்களை ஆளப்போகிறான் என்பதை அவர்களால் எண்ணிப்பார்க்கக்கூட முடியவில்லை. அவனது சொப்பனத்தினால் அவனை அதிகமாய் பகைத்தார்கள்.

இந்த சொப்பனத்தோடு அவனுடைய சொப்பனக்கதை முடியவில்லை. மற்றுமொரு சொப்பனத்தையும் அவன் கண்டான்.

ஆதியாகமம் 37 : 9 – 11

இந்த சொப்பனத்தையும் அவன் சொன்னபொழுது அவன் என்ன சொல்ல வருகிறான் என்பதை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். அருமையானவர்களே, இதே காரியத்தை வெளிப்படுத்தின சுவிசேம் 12ஆம் அதிகாரம் முதலாம் வசனத்திலே வாசிக்கிறோம். அங்கே சூரியனை அணிந்திருந்த ஒரு பெண்ணைக் குறித்து நாம் பார்க்கிறோம். சந்திரன் அவள் கால்களின் கீழே இருக்கிறது. அவளுடைய தலையிலே பன்னிரெண்டு நட்சத்திரங்களை உடையவளாய் இருக்கிறாள். இது எதைக் காட்டுகிறது?

இஸ்ரவேல் தேசத்தை அது குறிக்கிறது. இப்பொழுது யோசேப்பின் சகோதரர்கள் இஸ்ரவேலின் குமாரர்களைக் குறித்து அதாவது தங்களைக் குறித்துத்தான் அவன் சொல்லிக் கொண்டிருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்கிறார்கள். இங்கே இஸ்ரவேல் தேசத்தின் ஆரம்ப காலங்களை நாம் பார்க்கிறோம். ஆதியாகமத்திலே இஸ்ரவேல் ஒரு மொட்டாய் இருக்கிறது. அந்த பூவானது வேத புத்தகம் முழுவதிலேயும் அது விரிந்து வருகிறதாய் இருக்கிறது.

இங்கே ஒரு மொட்டைப் பார்க்கிறோம். இது வெளிப்படுத்தின சுவிசேம் வரும்வரை திறக்கப்போகிறதில்லை. பிந்திப் பூக்கும் ஒரு பூவாய் இருக்கிறது. ஆனால் அருமையானவர்களே அது நிச்சயமாய் மலரப்போகிறது. இது தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதைக் குறித்து எந்தக் கற்பனையும் நாம் செய்யத் தேவையில்லை. எப்பொழுது அது நமக்கு விளங்கும் என்று திகைக்கத் தேவையில்லை.

யாக்கோபு அவன் கூறியதை சரியாக புரிந்து கொண்டான், என்றாலும் நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்குவோமோ, என்று கடிந்து கொள்கிறான். இப்பொழுது இவர்களுக்கு யோசேப்பு சொல்லக்கூடிய பதில்

www.Radio882.com

எல்லாம், ஆம். அதுதான் அந்த சொப்பனம் என்று சொல்கிறான்.

இதை அவன் விளக்கிக் கூற விரும்பவில்லை, ஏனென்றால் அதுதான் அந்த சொப்பனத்தின் கருத்து. அவனது சகோதரர்கள் அதை அவ்வளவு பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அது நடைபெறமுடியுமா என்று கூட அவர்கள் சிந்திக்கவில்லை. அவர்களை பொருத்தமட்டிலேயும் அது முடியாத ஒரு காரியம். அவர்களிலே எந்த ஒரு சகோதரனும் யோசேப்பிற்கு முன்னாலே வணக்கம் செய்யப்போவதில்லை. என்பதை அறிந்திருந்தார்கள், என்றாலும் யாக்கோபு அவன் சொன்ன அந்த சொப்பனத்தை எல்லாம் தன் மனதிலே வைத்துக் கொண்டான் என்று பார்க்கிறோம்.

ஆதியாகமம் 37 : 12

இந்த காலக்கட்டத்திலே யாக்கோபும் அவன் குடும்பமும் எபிரோனிலே தங்கியிருக்கிறார்கள். இது எருசலேமிலிருந்து இருபது, இருபத்தி ஐந்து மைல்களுக்கு தெற்கே இருக்கிறது. எனவே யாக்கோபின் குமாரர்கள் ஆடுகளை மேய்க்கும்படியாக வீட்டைவிட்டு மிக தூரமாக செல்கிறார்கள்.

அந்த முழு பகுதிகளிலேயும் இவர்கள் தங்கள் ஆடுகளை மேயவிட்டார்கள் என்று பார்க்கிறோம்.

ஆதியாகமம் 37 : 13

யோசேப்பு வாலிபனாக இருந்தாலும் தகப்பனார் ஒரு கட்டளை கொடுத்த உடனேயே சரி போகிறேன் என்று உடனே கீழ்ப்படியும் ஒருவனாய் இருக்கிறான். எனக்கு அருமையான வாலிப தம்பியே, தங்கையே, நீங்கள் உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிகிறீர்களா? என் பெற்றோர் படிக்கவில்லை நான் படித்துவிட்டேன் என்பதினாலேயோ, என் பெற்றோர் வயதானவர்கள் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்பதினாலேயோ பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாமல் நீங்கள் எதிர்த்து பேசுகிறவர்களாய் இருப்பீர்கள் என்றால், அது ஒரு பாவம் என்பதை நீங்கள் மறந்துபோகக்கூடாது.

இங்கே யோசேப்பு தகப்பனுக்கு உடனடியாகக் கீழ்ப்படிகிறான்.

ஆதியாகமம் 37 : 14

யோசேப்பு எபிரோனிலிருந்து சீகேம் வரை பிரயாணமாய் புறப்பட்டுப் போகிறான்.

அவன் சீகேமிலே போய் சேர்ந்தபொழுது தனது சகோதரர்கள் எங்காவது இருக்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்க்கிறான், தேடி அலைகிறான், மலைப்பாங்கான அந்த பிரதேசத்திலே அவர்களை அவன் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆதியாகமம் 37 : 15

அங்கே கூடாரமிட்டிருந்த ஒரு மனிதன், யோசேப்பு பல சமயங்களிலே அவனுடைய

www.Radio882.com

கூடாரத்தைத் தாண்டி அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும் போய் எதையோ தேடுவதை கவனித்துவிட்டு, அவனைப் பார்த்து என்ன தேடுகிறாய் என்று கேட்கிறான்.

ஆதியாகமம் 37 : 16, 17

தோத்தான் என்பது சீகேமுக்கு மேலும் வடக்கே தூரமான ஒரு இடம். இங்கே ஆடுகளுக்கேற்ற புல்வெளி காணப்படுகிறபடியினாலே இவ்வளவு தூரமாய் அவர்கள் வந்துவிட்டார்கள். இறுதியாக யோசேப்பு அவர்களைக் கண்டுபிடித்துவிட்டான்.

ஆதியாகமம் 37 : 18 – 20

அவர்கள் யோசேப்பை எவ்வளவு வெறுக்கிறார்கள், பார்த்தீர்களா? கிட்டத்தட்ட அவர்கள் வீட்டைவிட்டு நூறு மைல் தூரமாய் இருக்கிறார்கள். இங்கேயும் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து, அவனை ஒழித்துக்கட்டுவோம் வாருங்கள், அவனது சொப்பனம் என்ன ஆகும் பார்ப்போம் என்கிறார்கள். தொடர்ந்து என்ன நடைபெற்றது என்பதை நாம் சிந்திக்கும் முன்னதாக இயேசு கிறிஸ்துவையும் யோசேப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கும் சில காரியங்களை சிந்திப்போம். இப்பொழுது முதலே நீங்கள் இவைகளை எல்லாவற்றையும் குறித்துக் கொள்ளலாம். முதலாவதாக யோசேப்பின் பிறப்பு அற்புதமானது. தேவன் தலையிட்டு ஜெபத்திற்குப் பதிலாக யோசேப்பைக் கொடுத்தார்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பும் அற்புதமானது. ஏனென்றால் அவர் கன்னியின் வயிற்றிலே தோன்றினார். இரண்டாவதாக யோசேப்பு அவனுடைய தகப்பனால் அதிகமாய் நேசிக்கப்பட்டான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பிதாவினாலே அதிகமாய் நேசிக்கப்பட்டார். இவர் என்னுடைய நேசகுமாரன் என்று வெளியரங்கமாய் அறிக்கையிட்டார். மூன்றாவதாக யோசேப்பு தனது பலவர்ண அங்கியினாலே மற்றவர்களிடத்திலிருந்து பிரிக்கப்பட்டவனாய் விசேஷித்தவனாய் காணப்பட்டான், இயேசு கிறிஸ்துவும் மற்றவர்களை விட்டுப் பிரிக்கப்பட்டவராய் இருந்தார், காரணம் என்னவென்றால் அவர் பாவமில்லாதவர். பாவிகளிலிருந்து அவர் பிரிக்கப்பட்டவராய் இருந்தார்.

நான்காவதாக யோசேப்பு தன் சகோதரர்களுக்கு மேலே ஆளுகை செய்வேன் என்று கூறினான்.

இயேசு கிறிஸ்துவும் தன்னை மேசியாவாகக் காண்பித்தார். எப்படி அன்று யோசேப்பின் செய்தியை அவர்கள் ஏளனம் செய்தார்களோ, அதேப் போல இயேசு கிறிஸ்துவும் ஏளனம் செய்யப்பட்டார். எனவேதான் சிலுவையிலே அவர் அடிக்கப்படும்பொழுது நசரேனாகிய இயேசு யூதருடைய ராஜா என்று எழுதினார்கள்.

ஐந்தாவதாக யோசேப்பு தகப்பனாரால் சகோதரரிடத்திலே அனுப்பப்பட்டான். இயேசு கிறிஸ்துவும் தன் சகோதரரிடத்திலே அனுப்பப்பட்டவர். இயேசு கிறிஸ்து காணாமல் போன

இஸ்ரவேல் வீட்டாருக்காகவே முதலாவது அனுப்பப்பட்டார். ஆறாவதாக எந்தக் காரணமும் இல்லாமல் யோசேப்பு தன் சகோதரரால் பகைக்கப்பட்டான். இயேசு கிறிஸ்துவும் எந்தக் காரணமும் இல்லாமல் சகோதரர்களால் பகைக்கப்பட்டார்.

இந்தப் பதினேழு வயதான யோசேப்பைக் குறித்து வேதத்திலே பல அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. எனவே யோசேப்பினுடைய வாழ்க்கை நம் ஒவ்வொருவருக்கும் மிக முக்கியமான ஒரு மாதிரியான வாழ்க்கை. எனவே ஆரம்பம் முதல் அவனுடைய வாழ்க்கையை கவனமாக நாம் கற்று அறிந்து அதன் மூலமாய் கர்த்தர் நம்மோடு பேசும் காரியங்களுக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். இன்று நாம் வாசித்த பகுதியிலே பதினேழு வயதானாலும் கள்ளம் கபடு இல்லாமல் மற்றவர்கள் செய்யும் தவறு அவனுடைய உள்ளத்திலே அவனைக் காயப்படுத்தியபடியினாலே அதைத் தகப்பனாருக்கு அறிவிக்கிறவனாய் அவன் காணப்பட்டான் என்பதைப் பார்த்தோம்.

நாமும் பாவமான உலகத்திலே வாழ்கிறவர்களாய் இருந்தாலும் பிறருடைய பாவமும் நம்மை துக்கப்படுத்துகிறதாய் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் நம்முடைய இருதயத்திலே சரியான எண்ணம் உள்ளவர்களாய் இருக்கிறோம் என்பது பொருள்.

அடுத்ததாக யோசேப்பு சகோதரரால் எவ்வளவு பகைக்கப்பட்டாலும் அவனிடத்திலே அவர்கள் பட்சமாய் பேசவில்லை என்றாலும், அதை அவன் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை. அதைக் குறித்து துக்கப்படவில்லை. ஏனென்றால் அவனுடைய இருதயம் கர்த்தரோடு சரியானதாய் இருந்தது. யோசேப்பு தனக்கு தேவன் வெளிப்படுத்திய சொப்பனத்தை கள்ளம் கபடு இல்லாமல் தனது பெற்றோருக்கும் சகோதரருக்கும் கூறுகிறான். ஒருவேளை அவன் கூறுவது இன்னது என்று அவன் அறியாவிட்டாலும் மற்றவர்கள் அறிந்து அதைக் குறித்து அவர்கள் பேசினாலும் யோசேப்பு எதைக் குறித்தும் வாதிடவில்லை. அவனுக்கு கொடுக்கப்பட்ட சொப்பனத்தை அறிவித்தான், அவ்வளவுதான். அதுமட்டுமல்ல வாலிப வயதிலே இருந்த யோசேப்பு தகப்பனாருக்குக் கீழ்படிந்து தன்னைப் பகைக்கும் சகோதரர்களுக்கும் நன்மை செய்யும்படியாக புறப்பட்டுப் போகிறான்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, நம்மிலே எத்தனைபேர் நம்மைப் பகைக்கும் சகோதர சகோதரிகளையும் நேசித்து அவர்களுக்கும் உதவி செய்ய ஆயத்தமாய் இருக்கிறோம், என்பதை சற்றே எண்ணிப்பார்ப்போம்.

யோசேப்பு பல வர்ண நீண்ட கரங்களுடைய தனது அங்கியை உடுத்தியிருக்கிறான். இங்கே சகோதரர்கள் மத்தியிலே வெறுப்பு, பொறாமை வந்து அவனைக் கொலை செய்ய எண்ணுகிறார்கள். ரூபன் செய்த பாவத்தினாலே அவன் குடும்பத்தின் மூத்த மகன் என்ற தகுதியை இழந்து போகிறான் என்றாலும் இங்கே சரியான காரியத்தைச் செய்ய அவன் முன்வருகிறான். மற்ற சகோதரர்களை விட சிறப்பாக நிதானிக்கிறான். பாருங்கள் அங்கே என்ன நடக்கிறது?

www.Radio882.com

ஆதியாகமம் 37 : 21

ரூபன் அங்கே தலையிடாவிட்டால் மற்ற சகோதரர்கள் அங்கேயே அவனைக் கொன்றிருப்பார்கள்.

ஆதியாகமம் 37 : 22

ஏன் அவ்வாறு குழியிலே போட்டுவிடும்படியாகச் சொல்கிறான். யோசேப்பைக் குழியிலே போட்ட பிறகு மற்றவர்களெல்லாம் சற்று தள்ளி ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும்பொழுது அவன் வந்து குழியிலிருந்து அவனைத் தூக்கி விட்டு தகப்பனாரிடத்திலே கொண்டு போக வேண்டும் என்ற எண்ணத்தினால்தான் அவ்வாறு செய்தான்.

ஆதியாகமம் 37 : 23

கோபமான ஒரு காளைக்கு முன்னாலே காட்டப்பட்ட சிவப்பு அங்கியைப் போல யோசேப்பின் அந்தப் பலவர்ண அங்கி சகோதரர்கள் கண்களுக்குத் தெரிந்திருக்கிறது. யோசேப்பு உடுத்தியிருந்த அந்த அங்கியானது, மற்றவர்களை விட அவனைத் தனியாகப் பிரித்து காட்டினபடியினாலே அதை அவர்கள் வெறுத்தார்கள். அந்தக் கால வழக்கத்தின்படி மூத்த சகோதரர்கள் எதைக் கேட்டாலும் இளையவர்கள் கொடுத்து விட வேண்டும். இதன் அடிப்படையிலே சகோதரர்கள் அவனுடைய பல வர்ண அங்கியைக் கழற்றி விட்டார்கள்.

ஆதியாகமம் 37 : 24, 25

இங்கே மீண்டுமாக நாம் இஸ்மவேல் வம்சத்தைக் குறித்து வாசிக்கிறோம். இவர்கள் வியாபாரிகளாய் இருந்தார்கள். என்ன நடக்கிறது பாருங்கள்?

ஆதியாகமம் 37 : 26, 27

சாப்பிட உட்கார்ந்தவர்களுடைய கண்களிலே அந்த வியாபாரிகள் கூட்டம் தெரிகிறது. யூதா அதற்குத் தலைமைத்துவம் வைத்து சகோதரனைக் கொலை செய்ய விருப்பம் இல்லாமல், இரத்தப் பழிக்கு பயந்து இந்த ஆலோசனையை சொல்லுகிறான். மற்ற சகோதரர்களும் இதற்கு ஒத்துக் கொள்கிறார்கள். ஏனென்றால் அவன் அவர்களை விட்டுத் தொலைந்தால் போதும் என்று எண்ணிக் கொண்டு இருந்தார்கள். அது எந்த வகையிலே நடைபெற்றாலும் சரிதான் என்று எண்ணியிருந்தார்கள்.

இந்த இஸ்மவேலர்கள் அவனை எடுத்துக்கொண்டு போய் எகிப்து தேசத்திலே ஒரு அடிமையாக விற்று விடுவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். என்றாலும் தங்களை விட்டு அவன் போய்விடுவானே என்ற எண்ணம்தான் அவர்களுக்குள்ளே இருந்தது. அடிமைத்தனம் என்றாலே உயிரோடு சாவது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். எனவே அதற்குப் பின்னர் அவனை அவர்கள் சந்திக்கவேப் போவதில்லை என்றுதான் எண்ணினார்கள்.

www.Radio882.com

ஆதியாகமம் 37 : 28

இந்த வசனத்தை நீங்கள் கூர்ந்து பார்ப்பீர்களென்றால், மோசே காரியங்களைச் சரியாக எழுதாதது போல் தெரியும். ஏனென்றால் இந்த வர்த்தகக் கூட்டத்தை முதலாவது இஸ்மவேலர் என்று சொல்கிறார். பின்னர் இந்த 28ம் வசனத்தின் முன்பகுதியிலே மீதியானியர் என்று சொல்கிறார். பின்னர் அவனை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப் போட்டார்கள் என்று சொல்லகிறார். இது என்ன குழப்பமாய் இருக்கிறது என்று நினைக்கலாம்.

வேதத்திலே குறை கண்டுபிடிக்க வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் பலர், இதை ஒரு தவறு என்று சுட்டிக் காட்டுவதுண்டு. ஆனால் இது நமக்கு ஆர்வம் தரக்கூடிய ஒரு குறிப்பு என்று சொல்ல வேண்டும். இதை நாம் நன்றாகக் கூர்ந்து கவனிக்க வேண்டும். பொதுவாகவே வேதத்தைக் குறை காண்பவர்கள் சுட்டிக்காட்டுகிற காரியம் மிகத் தெளிவாகக் குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிற பகுதியை அவர்கள் தவறு என்று சொல்வார்கள்.

சரி, இஸ்மவேலர்கள் யார்? இஸ்மவேலின் சந்ததியினர் இல்லையா? ஆபிரகாமின் மகனாகிய இஸ்மவேலின் சந்ததியினர். மீதியானியர்கள் யார்? அவர்களும் ஆபிரகாமின் மகனான மீதியானின் சந்ததியினர். இஸ்மவேல் ஆபிரகாமுக்கு ஆகார் மூலமாகப் பிறந்த மகன் மீதியான் சாராளின் மரணத்திற்குப் பிறகு சேத்தூராள் என்ற பெண்ணை ஆபிரகாம் திருமணம் செய்தானல்லவா? அவளுடைய மகன்தான் இந்த மீதியான். சொல்லப்போனால் இருவரும் சகோதரர்கள்தான். உறவினர்களே சகோதரனை விற்கிறார்கள்.

சரி, இப்பொழுது இந்த இஸ்மவேலர்கள் யார்? அவர்களிலே பன்னிரண்டு பேர் இருக்கிறார்கள். இந்தக் குறிப்பட்ட காலக்கட்டத்திலே எத்தனை இஸ்மவேலர்கள் இருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள். இஸ்மவேல் ஈசாக்கின் சகோதரன்தான். ஆனால் இஸ்மவேல் மூத்தவன். எனவே இப்பொழுது நூற்றுக்கணக்கான இஸ்மவேலர்கள் இருப்பார்கள்.

மீதியானியர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள்? அவர்கள் குறைவானவர்களாகவே இருப்பார்கள். ஏனென்றால் ஈசாக்கு பிறந்த பின்னர் தான் இந்த மீதியான் பிறந்தான். எனவே அவர்கள் அநேகர் இருக்க வாய்ப்பில்லை. ஒருவேளை பத்து, பன்னிரண்டு அல்லது பதினைந்து பேர் இருப்பார்கள் என்று வைத்துக் கொள்ளலாம். இவர்கள் சிறிய குழுக்கள்தான். அந்நாட்களிலே பிரயாணமானது ஆபத்தானது. குறிப்பாக அதுவும் அவர்கள் பாலைவனத்தை கடந்து எகிப்திற்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். தங்கள் பாதுகாவலுக்காக ஒருவரோடு ஒருவர் இணைந்து கூட்டமாகச் செல்கிறார்கள். எல்லாருமே எகிப்திற்கு வியாபாரத்திற்காகப் போகிறார்கள். ஒருவரோடு ஒருவர் சொந்தக்காரர்கள்

www.Radio882.com

ஆனபடியினாலே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்கிறார்கள். இணைந்து செல்கிறார்கள்.

வேத வசனம் எல்லாவற்றையும் மிகத் துல்லியமாக, தெளிவாகத்தான் சொல்கிறது. ஒன்றுக்கொன்று முரணாய் இருக்கிறது என்று சொல்வதற்காக சிந்திக்கிறவர்கள் தங்கள் அறியாமையினாலே தவறான காரியங்களைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதை எழுதிய மோசேக்குத் தான் எதை எழுதுகிறேன் என்பது தெரியும். எனவே, அவர் சரியாகவே எழுதுகிறார்.

எனவே நாம் பார்த்தது போல யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பை இஸ்மவேலரிடத்திலே விற்றுப் போட்டார்கள். இஸ்மவேலர்கள் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டு செல்கிறார்கள்.

ஆதியாகமம் 37 : 29 – 31

கவனித்தீர்களா? இந்த சகோதரர்கள் யூதாவின் தலைமைத்துவத்திலே யோசேப்பை விற்றுப்போட்ட பொழுது ரூபன் அங்கே இல்லை போலும், எல்லாரும் போஜனம் செய்யும் போது எங்கோ சென்றிருந்த ரூபன் மீண்டுமாய் வந்து குழியைப் பார்க்கிறான், யோசேப்பைக் காணவில்லை. திகைத்துப் போகிறான். உடனே தன் சகோதரரிடத்திலே வந்து, இளைஞன் இல்லையே, ஐயோ! நான் எங்கே போவேன்? என்று கதறுகிறான்.

அவனை விற்றதைக் குறித்து அவர்கள் ரூபனிடம் சொல்லியிருப்பார்கள். அதுமட்டுமல்ல, அந்த வியாபாரிகளின் பின்னாலே போய் அவனை மீட்டுக் கொண்டு வருவது இலகுவானதல்ல அவர்கள் அதிக தூரம் சென்றிருப்பார்கள் என்று கூறியிருப்பார்கள். எனவே இப்பொழுது யாக்கோபினிடததிலே சொல்வதற்கு ஒரு நல்ல கதையை ஆயத்தம் பண்ணுகிறார்கள்.

ஆதியாகமம் 37 : 32

எவ்வளவு பெரிய தந்திரம் இல்லையா? ஆடு மேய்க்கப் போயிருந்த அவர்கள் யோசேப்பைப் பார்க்கவே பார்க்கவில்லை என்பது போல நடிக்கிறார்கள். வரும் வழியிலே அவர்கள் இந்த அங்கியை மட்டும் கண்டெடுத்ததாகச் சொல்கிறார்கள். அவர்கள் பகைத்த அந்த அங்கி அவர்களுக்குத் தெரியும். அதைத் தாங்கள் அடையாளம் கண்டுகொள்ளவில்லை என்பது போல, இது உம்முடைய குமாரன் அங்கியோ, அல்லவோ, பாரும் என்று அவனையே பார்க்கும்படியாகச் சொல்கிறார்கள். இது யாருடைய அங்கி என்பது யாக்கோபுக்குத் தெரியும். இப்பொழுது யாக்கோபும் யோசேப்பின் சகோதரர்கள் எதிர்பார்த்த அந்த முடிவிற்கே வருகிறான்.

ஆதியாகமம் 37 : 33

சற்று கூர்ந்து இந்தப் பகுதியைப் பார்ப்போம். ஒரு வெள்ளாட்டுக்கடாவைக் கொன்று அதின் இரத்தத்தை இந்த அங்கியிலே தோய்த்தார்கள்.

www.Radio882.com

இப்படி ஒரு அங்கியினாலே தங்கள் தகப்பனாரை ஏமாற்றுகிற இந்த செயலை வாசிக்கும் பொழுது வேறு ஏதாவது நமக்கு நினைவிற்கு வருகிறதா ? இதைக் குறித்து எப்போதாவது கேட்டது ஞாபகத்தில் இருக்கிறதா ? ஆமாம். ரெபெக்காளும் யாக்கோபுவும் சேர்ந்து வேட்டைக்கறிக்குப் பதிலாக ஒரு ஆட்டுக்குட்டியை சமைத்துக் கொடுத்தார்கள். அந்த ஆட்டுக்குட்டியின் தோலை கழுத்திலும் கைகளிலும் போட்டு, ஈசாக்காகிய தனது தகப்பனாரை யாக்கோபு ஏமாற்றினான்.

இப்பொழுது யோசேப்பின் சகோதரர்கள் ஆட்டின் இரத்தத்தை அங்கியிலே தோய்த்து அதே யாக்கோபை ஏமாற்றுகிறார்கள். மனுன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான். அவர்கள் செய்வது என்ன? அந்த இரத்தம் தோய்ந்த அங்கியை தகப்பன் கரத்திலேக் கொடுத்து உமக்கு இது அடையாளம் தெரிகிறதா என்று கேட்கிறார்கள். நாங்கள் அங்கே மலைகளிலே இதைப் பார்த்தோம், ஏதோ கொடிய காட்டு மிருகம் அவனைக் கொன்றிருக்கும் போல, என்று சொல்கிறார்கள். எனவே வயதான யாக்கோபுவும் தனது மகன் யோசேப்பு மரித்து விட்டான் என்றே முடிவிற்கு வந்துவிடுகிறான். அருமையானவர்களே, இதை நன்றாகக் கவனியுங்கள். அவன் எப்படி தனது தகப்பனாரை ஏமாற்றினானோ, அது போலவே தன்னுடைய பிள்ளைகளினாலே அவன் ஏமாற்றப்பட்டான். ஞாபகம் இருக்கிறதா கலாத்தியர் 7ஆம் அதிகாரம் 6ஆம் வசனத்திலே நாம் வாசித்தது.

மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார் ; மனுன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

மனுஷன் எதை விதைக்கிறானோ, அதைப் போல ஒன்றை அல்ல, அதற்கு இணையான ஒன்றை அல்ல, எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான். தவறான காரியத்தை ஒரு காலத்திலே அவன் விதைத்தான். ஏமாற்று வேலை செய்தான், இப்பொழுது அவன் தகப்பனாய் இருக்கிறான். தன் தகப்பனை அவன் ஏமாற்றிய வண்ணமாகவே அவனுடைய குமாரர்கள் அவனை ஏமாற்றி விட்டார்கள்.

அருமையானவர்களே, நாம் சோளத்தை விதைத்தால் சோளத்தை அறுப்போம் ; நெல்லை விதைத்தால் நெல்லை அறுப்போம்.எதை விதைக்கிறோமோ அதைத்தான் நாம் அறுப்போம். இன்றைய நம்முடைய வாழ்க்கையிலேயும் நம்முடைய வாழ்க்கையின் எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும் இதுதான் உண்மை. சரீரப் பிரகாரமாகவும் இதுதான் உண்மை. ஒழுக்க முறையிலேயும் இதுதான் உண்மை. ஆவிக்குரிய நிலையிலேயும் இதுதான் உண்மை. இது ஒரு விசுவாசியின் வாழ்க்கையிலேயும் இதுதான் உண்மை.

நீங்கள் ஆண்டவருடைய பிள்ளைகளாய் இருப்பதினாலே, நீங்கள் செய்கிற பாவங்களிலே தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறீர்களா? அந்தப் பாவ சோதனை வரும்பொழுதே மற்றொரு எண்ணமும் வருகிறதல்லவா? அப்படிச் செய்யாமல்

www.Radio882.com

இருப்பதற்காக அந்த எண்ணத்திற்கு இடம் கொடுத்து, பாவத்தைச் செய்யாமல் இருங்கள். ஏனென்றால் ஆண்டவர் எல்லோருக்கும் ஒரே நீதியைத்தான் வைத்திருக்கிறார். என்ன செய்தால் என்ன நடக்கும் என்பதை தேவன் சொல்லி விட்டார். நீங்கள் யாராய் இருந்தாலும் அதுதான் உங்கள் வாழ்க்கையிலேயும் நடக்கும். என்னுடைய வாழ்க்கையிலேயும் அப்படித்தான் நடக்கும்.

கர்த்தருடைய ஊழியத்தில் இருக்கிற ஒருவர் மற்றொருவரது மனைவியோடு தவறான ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். இதைக் குறித்து ஒரு ஊழியர் அவரோடு பேசியபொழுது, நான் ஆண்டவருடைய பிள்ளை. ஆண்டவர் எனக்கு அப்படிச் செய்யமாட்டார். தன்னை வேறுவிதமாய் ஆண்டவர் நடத்துவார் என்று நினைத்தார். ஆனால் தேவனுடைய சட்டமானது எல்லாருடைய வாழ்க்கையிலேயும் ஒன்றுபோலவே செயல்படும் என்பதை சீக்கிரத்திலே கண்டு கொண்டார்.

பாருங்கள். யாக்கோபுவின் நிலையை,

ஆதியாகமம் 37 : 34, 35

இந்த அழுகையைக் குறித்து சிந்திக்கிற சிலர், யாக்கோபு தன் மகனாகிய யோசேப்பை எவ்வளவு அதிகமாக நேசித்தான், எனவேதான் அவ்வளவு அதிகமாக அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்து தன் அரையிலே இரட்டைக் கட்டிக் கொண்டு அநேக நாள் துக்கித்துக் கொண்டிருந்தான் என்று நினைக்கிறோம்.

அருமையானவர்களே, உண்மைதான் அவனுடைய மகனை அவன் அதிகமாக நேசித்தான். ஆனால் இங்கே யாக்கோபு வெளிப்படுத்துகிற ஒரு காரியம் என்னவென்றால் இன்னமும் அவன் விசுவாசத்திலே நடக்கவில்லை என்பது தெரிகிறது. பெனியேலிலே அவன் சந்தித்த அனுபவங்களை சற்றே எண்ணிப் பாருங்கள். நான் என்ற பிரச்சனை அவனுக்கு இருந்திருக்கிறது. பழைய மனிதனின் நான் என்ற பிரச்சனை அது. சரீரமானது அங்கே விழுந்து போகிறது. இப்பொழுதாவது விசுவாசத்திலே நடக்க அவன் கற்றுக் கொள்ள வேண்டும். அதை இன்னமும் அவன் கற்றுக் கொள்ளவில்லை.

யாககோபுவினுடைய விசுவாசத்தைக் குறித்து எபிரேயர் 11வது அதிகாரத்திலே நாம் வாசிக்கிறோம். ஆனால் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிற எந்த காரியமும் விசுவாசத்திற்கு அடையாளமாக அங்கே சொல்லப்படவில்லை. பின்னால் அவனுடைய விசுவாசம் வெளிப்படுத்தப்படுகிறதாய் இருக்கிறது.

அருமையானவர்களே, இவனுடைய இந்த துக்கத்தை தாவீதின் துக்கத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். தாவீதின் துக்கத்தைக் குறித்து 2 சாமுவேல் 12ஆம் அதிகாரம் 15 முதல் 23 வசனங்களிலே வாசிக்கிறோம். தாவீதும் தான் அதிகமாய் நேசித்த அந்த மகன் மரித்துப் போன பொழுது, மிகவும் அழுதான். யாக்கோபு யோசேப்பை எவ்வாறு நேசித்தானோ, அதுபோல அவனும் நேசித்து இருந்தான். ஆனாலும் தாவீது ஒரு

விசுவாசத்தின் மகன். அந்த மரித்துப் போன குழந்தை தன்னிடத்திலே திரும்ப வராது என்பதை அறிந்திருந்தான். ஏதோ, ஒரு நாள் தான் அந்தக் குழந்தையினிடத்திலே கடந்து செல்வேன் என்பதையும் அவன் அறிந்திருந்தான்.

என்ன ஒரு விசுவாசம் இல்லையா ? ஆனால் யாக்கோபு விசுவாசத்திலே நடக்கவில்லை. வழக்கத்திற்கு மாறான ஒரு துக்கத்தை யாக்கோபினுடைய வாழ்க்கையிலே பார்க்கிறோம்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, ஒருவேளை உங்களுக்கு அருமையான ஒருவரை நீங்கள் சமீபத்திலே இழக்கக் கொடுத்திருக்கலாம். அந்த துக்கத்தை உங்களால் மேற்கொள்ள முடியாமல் இருக்லாம். மிக அன்போடு நான் உங்களிடத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிற காரியம், விசுவாசத்திலே நடக்கக் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் அச்சப்படுவதினாலே, அந்த மரித்துப் போன சகோதரனையோ, சகோதரியையோ மீண்டும் ஜீவனோடு கொண்டு வர முடியாது என்பதை உணர்ந்தவர்களாக உங்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்துங்கள்.

நீங்கள் கர்த்தருடைய பிள்ளையாய் இருந்து, இப்படி மரித்துப் போன மற்றுமொரு கர்த்தருடைய பிள்ளையைக் குறித்து இவ்வளவு நீங்கள் துக்கப்பட்டுக் கொண்டு இருப்பீர்களென்றால், விசுவாசத்திலே நடவுங்கள். மரித்துப் போன அந்த சகோதரனை அல்லது சகோதரியை நீங்கள் நிச்சயமாக சந்திக்கப் போகிறீர்கள். நீங்கள் நிரந்தரமாகப் பிரிக்கப்படப் போவதில்லை.

நீங்கள் நம்பிக்கை அற்றவர்களைப் போல துக்கப்படக் கூடாது. நீங்கள் விசுவாசத்திலே நடக்க முடியும். இந்த அதிகாரத்தின் கடைசி வசனம் என்னச் சொல்கிறது பாருங்கள்.

ஆதியாகமம் 37:36

யோசேப்பின் சரித்திரம் இங்கே நின்று விடுகிறது. பின்னர் நாம் யோசேப்பின் சரித்திரத்தை 39ஆம் அதிகாரத்திலே தொடர்ந்து பார்க்கப் போகிறோம்.

எனக்கு அருமையான சகோதரனே, அருமையான சகோதரியே யோசேப்பு தனது சகோதரரால் பகைக்கப்பட்டது போல, வெறுக்கப்பட்டது போல நீங்களும் ஒரு வேளை உங்கள் சொந்த குடும்பத்திலே பகைக்கப்பட்டவர்களாய், வெறுக்கப்பட்டவர்களாய் காணப்படலாம், கலங்காதிருங்கள். நீங்கள் நன்மையான காரியங்களைச் செய்து தவறாக குற்றம் சாட்டப்படுவீர்களென்றால், உங்களுக்கு எதிராக வரும் பகை உணர்வை நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது. பகைக்கப்பட்ட யோசேப்போடு கூட கர்த்தர் இருந்தார். தனித்துவிடப்பட்டிருக்கிற உங்களோடும் கர்த்தர் இருக்கிறார்.

நீங்கள் அவரை எவ்வளவு நேசிக்கிறீர்கள், எவ்வளவு அவரைத் தேடுகிறீர்கள் என்பது

www.Radio882.com

அவருக்குத் தெரியும். மற்றவர்கள் உங்களைக் குழியிலே போட்டிருக்கலாம். நீங்களாக எழும்பி வர முடியாத சூழ்நிலையிலே உங்களைத் தள்ளியிருக்கலாம். ஆனால் கர்த்தர் உங்களோடு இருக்கிறார் என்பதை நீங்கள் மறந்து போகாதிருங்கள். நீங்கள் பொறுமையோடு இருங்கள். கர்த்தர் நிச்சயம் வழிநடத்துவார்.

ஆதியாகமம் : 38

இப்பொழுது நாம் ஆதியாகமம் 38ஆம் அதிகாரத்திற்குள்ளே வருகிறோம். ஒரு மாட்டிற்கு ஐந்தாவது கால் தேவையில்லை என்று நாம் எண்ணுவது போல இந்த அதிகாரமும் வேத புத்தகத்திலே அவசியம் இல்லை என்று அநேகர் எண்ணுகிறதுண்டு.

இந்த அதிகாரத்தை வாசித்தப் பிறகு நீங்களும் கூட இது வேதத்திலே சொல்லப்படாமல் இருந்திருந்தால், நன்றாய் இருந்திருக்குமே என்று நினைக்கலாம். இது ஏன் வேதத்திலே இருக்கிறது என்று அநேகர் கேட்கிறார்கள். உண்மையாகவே வேத புத்தகத்திலுள்ள துக்கமான அதிகாரங்களிலே இதுவும் ஒன்று. ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்குள்ளே வருவதற்கு பயன்படுத்திய யூதா வம்சத்தின் பின்னணியத்தைக் குறித்து இங்கே நாம் அறிந்து கொள்கிறோம். இந்த உண்மையே இது வேதத்திலே சேர்க்கப்பட்டிருப்பதற்கு முக்கியமான காரணம் ஆகும்.

இந்த அதிகாரத்திலே யூதா, தாமார், பாரேஸ், சேரா என்று பல பெயர்களைப் பார்ப்பீர்கள். இது எங்கோ கேட்டது போல உங்களுக்குத் தெரியலாம். ஏனென்றால் இதே பெயர்களை நீங்கள் மத்தேயு எழுதின சுவிசேம் முதலாம் அதிகாரத்திலே வாசித்திருக்கிறீர்கள். இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு என்று சொல்லப்பட்டிருக்கிற பகுதியிலே இந்தப் பெயர்களை நாம் பார்க்கலாம்.

அருமையானவர்களே, இது மிக ஆச்சரியமான ஒன்று. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்குள்ளே வந்தபொழுதும் பாவமான ஒரு சந்ததியின் வழியாகவே வந்தார். பல வகைகளிலே அவர் நம்மைப்போலவே ஆக்கப்பட்டார். என்றாலும் அவர் பாவமில்லாதவராய் இருந்தார். இயேசு கிறிஸ்து வந்த வம்ச வழியானது பாவம் நிறைந்ததாகவும், தேவனுடைய இந்த உலகத்திலே மகிமை அற்றதாகவும்தான் காணப்பட்டது.

இந்த அதிகாரத்திலே யூதாவின் பாவத்தைக் குறித்தும் அவமானத்தைக் குறித்தும் நாம் வாசிக்கிறோம். இவற்றையெல்லாம் நாம் பார்க்கும்பொழுது யாக்கோபுவினுடைய குமாரர்கள் அவனுக்கு ஆறுதலைக் கொடுக்கவில்லை என்பது நமக்குத் தெரியவருகிறது. பார்க்கப்போனால் யோசேப்பையும், பென்யமீனையும் தவிர மற்ற எல்லா பிள்ளைகளுமே பிரச்சனையானவர்கள் தான். யோசேப்பும் ஆறுதலான ஒரு மகனல்ல, ஏனென்றால் அவன் வீட்டைவிட்டுப் போனபிறகு யாக்கோபு மனம் உடைந்து போனான். இவை

www.Radio882.com

எல்லாமே நமக்கு என்ன சொல்கிறது? தன்னுடைய பிள்ளைகளுக்கு நல்ல காரியங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டிய நேரத்திலேயும், பதான் அரானிலே இருக்கும் பொழுதும் தனக்கு சொத்து சேர்ப்பதிலேயே யாக்கோபு கருத்தாய் இருந்திருக்கிறான் என்று தெரிகிறது.

ஆபிரகாமைவிட யாக்கோபு எவ்வளவு வித்தியாசமானவனாய் இருக்கிறான், ஆபிரகாமினிடத்திலே கர்த்தர் சொன்னது ஞாபகம் இருக்கிறதா? நினைவுபடுத்திக் கொள்வோமா? ஆதியாகமம் 18ஆம் அதிகாரம் 19ஆம் வசனம்.

'கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும் நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்.'

ஆனால், அருமையானவர்களே, யாக்கோபு அதைச் செய்யவில்லை. மாமனாகிய லாபானோடு போட்டியிட்டு தனது சொத்தை பெருக்கிக் கொள்ளவே தனது நேரத்தை செலவழித்துக் கொண்டிருந்தான். பிள்ளைகளுக்கு நேரம் கொடுக்கவில்லை. அது மிகப் பரிதாபமானது. ஏனென்றால் யாக்கோபுடைய ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு விதமான பாவத்திலே விழுந்து போகிறார்கள்.

இந்த இடத்திலே கர்த்தருடைய வார்த்தையிலே இந்த அதிகாரம் சேர்க்கப்பட்டிருப்பதற்கான மற்றுமொரு காரணம் யோசேப்போடு கூட அடுத்த அதிகாரத்திலிருந்து நாம் எகிப்திற்குப் போகப் போகிறோம். தேவன் யோசேப்பை முன்னாலே அனுப்புகிறார். இது எல்லாவற்றையும் பார்க்கும் பொழுது இஸ்ரவேல் மக்கள் எகிப்திற்கு ஒரு காலத்திலே கடந்து போவதற்காக தேவன் செய்த ஆயத்தமாக இது இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

கானான் தேசத்திலே வந்த பஞ்ச காலத்திலே அவர்கள் காக்கப்படப்போகிறார்கள். அதைவிட மேலாகத் தீட்டான காரியங்களைச் செய்யும் கானானியரிடத்திலிருந்தும் பிரத்யேகப்படுத்தப்பட்டு எகிப்திலே கோசேன் பகுதியிலே தங்க வைக்கப்படப் போகிறார்கள். யாக்கோபும் அவன் குடும்பமும் தொடர்ந்து கானானிலே தங்கியிருந்திருப்பார்களென்றால், கானானியர்களுடைய வாழ்க்கைத் தரத்திற்கேக் கீழே இறங்கியிருப்பார்கள். கானானியர்களுடைய தரக்குறைவான வாழ்க்கைத் தரத்தையும் யாக்கோபின் குடும்பம் இருந்த சூழ்நிலையையும் இந்த அதிகாரம் நமக்கு வெளிப்படுத்துகிறது.

இஸ்ரவேல் வம்சத்திலே இராஜ வம்சம்தான் யூதா வம்சம்.

ஆதியாகமம் 38 : 1, 2

அதுல்லாம் என்கிற ஒரு மனிதனிடத்திலே போய் அவன் சேர்ந்திருக்கிறான். வியாபாரத்

தொடர்பாக அவன் அங்கே சென்றிருக்க வேண்டும். அங்கே சென்ற பொழுது ஒரு கானானியப் பெண்ணைப் பார்த்து, அவளோடு ஒரு உறவை ஏற்படுத்திக் கொள்கிறான் விளைவு என்ன?

ஆதியாகமம் 38 : 3

ஆம், யூதா தவறு செய்துவிட்டான்.

ஆதியாகமம் 38 : 4- 6

இந்த வழியாகத்தான் தாமார் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்று அட்டவணைக்குள்ளே வருகிறாள். இப்பொழுது இந்தக் குடும்பத்தை சற்றே கவனியுங்கள். பாவத்தின் மேலே பாவம் நிறைந்ததாய் இது இருக்கிறது.

ஆதியாகமம் 38 : 7 – 10

இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் பார்க்கும்பொழுது, இது உடல் உறவுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் இந்தக் காலத்தை நமக்கு நினைவுபடுத்துகிறது.

ஆதியாகமம் 38 : 11

அருமையானவர்களே ஒரு மனிதன் மரித்துப் போனால், அவனுடைய இளைய சகோதரன் அவளைத் திருமணம் செய்வது அந்த நாட்களின் வழக்கமாய் இருந்திருக்கிறது. ஓனான் அதை செய்ய மறுத்தபடியினாலே தேவன் அவனை அழித்துப் போட்டார். இப்பொழுது யூதாவிற்கு வளர்ந்துவரும் மற்றுமொரு மகன் இருக்கிறான்.

இப்பொழுது தனது மருமகளிடத்திலே அந்தக்காலத்து வழக்கப்படி இந்தச் சிறுவன் பெரியவனாகும் வரை உன் தகப்பன் வீட்டிலே போய்த் தங்கியிரு என்று யூதா அனுப்பி வைக்கிறான்.

ஆதியாகமம் 38 : 12, 13

யூதாவைப் போலவே அவனுடைய சிநேகிதனான அதுல்லாம் ஊரானாகிய ஈராவும் அதிகமான ஆட்டுமந்தைகளுக்குச் சொந்தக்காரனாய் இருக்கிறான். அவர்கள் அவைகளை மயிர்க்கத்தரிப்பதற்காகத் திம்னாவுக்குப் போகிறார்கள். இதே வேளையிலே பல காலமாய் காத்திருந்த தாமார் இனி தனது மகனாகிய சேலாவை தனக்குத் தரமாட்டாரோ என அஞ்சியவளாக ஒரு முடிவெடுக்கிறாள்.

ஆதியாகமம் 38 : 14

யூதாவின் மூன்றாவது மகன்தான் சேலா. அவன் தாமாருக்கு கொடுக்கப்படுவதற்கான எந்த அறிகுறியும் இல்லை என்பதைக் கண்டு தாமார் செயல்பட ஆரம்பிக்கிறாள். விதவைக்குரிய உடைகள் எல்லாவற்றையும் களைந்துவிட்டு முகத்தையெல்லாம் மூடி அந்தக் காலத்து வேசியைப் போல உடையணிந்து நீரூற்றுகளுக்கு முன்பாகப் போய் உட்கார்ந்திருக்கிறாள்.

ஆதியாகமம் 38 : 15, 16

இங்கே நாம் வாசிக்கிறது போல யூதா சூவா என்னும் பேருள்ள அந்தக் கானானியனுடைய குமாரத்தியைப் பார்த்து எப்படி பேசி அவளை மயக்கினானோ, அதே போல தாமாரோடு பேசுகிறான். இது மிகவும் அருவறுப்பான ஒரு சரித்திரமாகத்தான் இருக்கிறது. அவள் வேசி என்று அவன் நினைத்துக் கொண்டான். தனது மாமனை மேற்கொள்ள இதுதான் சந்தர்ப்பம் என்று அவள் அதை பயன்படுத்திக் கொண்டாள்.

ஆதியாகமம் 38 : 17 – 20

யூதா தனது சிநேகிதன் ஒருவன் கையிலே ஆட்டுக்குட்டியை சொன்னது போல கொடுத்தனுப்புகிறான். அவன் அங்கே போய் தேடுகிறான்.

ஆதியாகமம் 38 : 21 – 24

அருமையானவர்களே, இதுதான் யூதா. இரட்டை வாழ்க்கை வாழும் ஒரு மனிதன். இப்படிப்பட்டக் காரியங்களுக்கு தேவன் ஒத்துப் போகிறவர் அல்ல. இது அவருடைய வார்த்தைகளிலே எழுதப்பட்டிருக்கிறது. இந்த காரணத்தினாலே இப்படிப்பட்ட காரியங்களை அவர் ஏற்றுக் கொள்கிறார் என்று சொல்லக்கூடாது. அவருடைய பிள்ளைகளாய் அழைக்கப்பட்டிருந்தவர்கள், கானானியர்களைப் போல நடந்து கொள்கிறார்கள். இந்தக் காரணத்திற்காகவே இந்த இடத்தை விட்டு அவர்களை தேவன் எகிப்திற்குக் கொண்டுபோகப் போகிறார். அங்கே கோசேன் என்னும் தேசத்திலே அவர்களைப் பிரத்யேகமாகத் தங்கியிருக்கப் பண்ணப் போகிறார். எகிப்தியர்களுடைய காரியங்களையோ, கானானியர்களுடைய காரியங்களையோ இஸ்ரவேலர் கற்றுக் கொள்ளாதபடி அவர்களை தனித்து எடுத்துச் செல்லப் போகிறார்.

இப்பொழுது நாம் வாசித்துக் கொண்டிருக்கிற இந்தப் பகுதிதான் அப்படிப்பட்ட தீர்மானத்தை தேவன் செய்ய தேவையானதாயிற்று என்பதை வெளிப்படுத்துகிறது. மிகவும் அருவறுப்பான காரியத்தை யூதா செய்கிறான். உண்மை என்னவென்றால் மற்றுமொருவருடைய பாவத்தைக் கண்டு கொள்வதிலே இவன் மிகத் தீவிரமானவனாய் இருக்கிறான். ஆனால், அவன் தன்னைத்தானே பார்க்கவில்லை.

வேதப் புத்தகத்திலுள்ள மற்றுமொரு சரித்திரத்தை இது நமக்கு நினைவுபடுத்துகிறது. ஞாபகம் இருக்கிறதா? நாத்தான் தாவீதினிடத்திலே அவனுடைய பாவத்தைக் குறித்து சொல்லும் பொழுது, ஒரு செல்வந்தன் ஒரு ஏழை வீட்டிலே உள்ள, பிள்ளையைப் போல் வளர்த்த ஆட்டுக்குட்டியைத் தன்னிடத்தில் வந்த மனுனுக்கு சமையல் பண்ணுவித்தான் என்ற சம்பவத்தைச் சொன்னபொழுது, இந்தக் காரியத்தைச் செய்த மனுன் மரணத்துக்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன், என்று தாவீது கூறினான்.

இங்கே நாம் கற்றுக் கொண்டிருக்கிறப் பகுதியிலேயும் தாவீதைப் போலவே யூதா உடனடியாக கொதித்து எழும்புகிறான். தாவீது அங்கே சொன்ன காரியம் என்ன? அந்த மனிதன் கல்லெறியப்பட வேண்டும் என்று சொன்னான். உடனே நாத்தான் நீயே அந்த மனுன் என்று சொன்னான்.

அருமையானவர்களே, நாம் எல்லாருமே மற்றவர்களுடைய வாழ்க்கையிலுள்ள பாவத்தை மிகத் தெளிவாக உடனே பார்த்து விடுகிறோம். ஆனால் பல சமயங்களிலே நமக்குள்ளே இருக்கிற பாவத்தை நாம் பார்க்காமல் இருக்கிறோம். யூதாவுக்கு எதிராக இரண்டு விதமான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அவனுடைய பாவமே ஒரு பயங்கரமான பாவம். அதுமட்டுமல்ல தன் சொந்த மருமகளிடத்திலே அவ்வாறு நடந்திருக்கிறான். இதுதான் கானானியருடைய வாழ்க்கை.

இந்தக் காலத்திலேதான் மக்கள் மாம்ச இச்சையானக் காரியங்களிலே இப்படி தலைவிரித்து ஆடுகிறார்கள் என்று எண்ணுகிறோம். இந்த காரியம் தேவனை அறியாத மக்கள் மத்தியிலே நூற்றாண்டுகளாக தொடர்ந்து வருகிறதாய்தான் இருக்கிறது. தேவனை அறியாத சந்ததியின் வாழ்க்கை முறை இது. தேவனை அறியாதபடியினாலே தான் அத்தனைக் கீழ்த்தரமான வாழ்க்கையிலே வாழ்ந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட காரணத்தினாலேதான் அவ்வப்பொழுது அவர்கள் நியாயம் தீர்க்கப்பட்டு அழிக்கப்படுகிறார்கள். கானானியர்கள் அழிந்து போனார்கள். தேவன் அவர்களை நியாயம் தீர்த்துவிட்டார். இந்தக் காரியமே ஒவ்வொருவருக்கும் ஒரு செய்தியைக் கொடுக்கிறதாய் இருக்கிறது, என்றாலும் எண்ணற்ற மக்கள் இன்னமும் அந்த செய்தியைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஏன் கிறிஸ்தவர்களும் கூட தேவனுடைய தண்டனையைக் குறித்து சிந்திக்கிறதில்லை. இந்த அதிகாரம் ஏன் வேதத்திலே இருக்கிறது என்று தான் ஆச்சரியப்படுகிறார்களேயொழிய இது எனக்கு ஒரு எச்சரிப்பாய் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்கிறதில்லை.

அருமையானவர்களே, தேவன் இப்படிப்பட்ட பாவங்களை ஏற்றுக் கொள்கிறதில்லை என்பதை நமக்கு தெரியப்படுத்தத் தான் இது வேதப்புத்தகத்திலே இருக்கிறது. தேவன் ஏன் இஸ்ரவேல் ஜனங்களை பாலஸ்தீன தேசத்தில் இருந்து எகிப்திற்கு அனுப்பினார் என்பதை விளக்குவதற்காகவும் இந்த அதிகாரம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தொடர்ந்து என்ன நடக்கிறது?

ஆதியாகமம் 38 : 25

யூதா தனது மருமகளை உயிரோடு கொளுத்த விரும்பினான். ஆனால் அவள் என்ன சொல்கிறாள்? என் வயிற்றில் வளரும் குழந்தைக்குத் தகப்பன் யார் என்பதைச் சொல்ல விரும்புகிறேன், என் கரத்திலிருக்கிற இந்தப் பொருள்களின் சொந்தக்காரர்தான் அவர் என்று சொல்கிறாள். அதைப் பார்த்த யூதா அது தனது என்பதை ஒத்துக்கொள்ள

www.Radio882.com

வேண்டியதாயிற்று.

ஆதியாகமம் 38 : 26

அருமையானவர்களே, இதுதான் யூதா. தன்னைச் சுற்றி உள்ள மக்களின் கலாச்சாரத்தை எவ்வளவு அதிகமாகத் தன்னுடைய வாழ்க்கையிலே எடுத்துக் கொண்டு விட்டான் பார்த்தீர்களா?

இவைகள் யாவும் நமக்கு எச்சரிப்பாகத்தான் எழுதப்பட்டு இருக்கிறது. இன்று சிலர் இந்தக் காலத்திலே வாழ்கிற மக்களுக்கு நாம் சுவிசேத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென்றால், அவர்கள் தரத்திற்கு இறங்கிப் போய்த்தான் சொல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள்.

ஆனால், தேவன் அவ்வாறு ஒருபொழுதும் செய்யவில்லை. எல்லா சூழ்நிலைகளிலுமே கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை உயர்வான, பரிசுத்தமான ஸ்தானத்திலேயே வாழும்படியாகத்தான் அழைத்திருக்கிறார்.

பாவத்திலே வாழ்கிற மக்களோடு பாவத்திலே வாழ்ந்து கொண்டு, அவர்களோடு தொடர்பு கொண்டுதான் கர்த்தருடைய வசனத்தைச் சொல்ல வேண்டும் என்று தேவன் ஒரு இடத்திலேயும் கற்றுக் கொடுக்கவில்லை. நீங்கள் உலகமெங்கும் சென்று சகல மனுருக்கும் சுசேத்தைப் பிரசங்கியுங்கள் என்றுதான் சொன்னார். அவருடைய செய்தியைத்தான் கொடுக்கும்படியாகச் சொன்னார். இன்றும் அதையேதான் அவர் கூறுகிறார். என்றைக்கும் கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய வார்த்தையை மக்களுக்குக் கொடுக்க வேண்டும்; அந்த வார்த்தையின்படி வாழ வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையே அவர்களுடைய வார்த்தைக்கு பெலனளிக்கிறதாய் இருக்கும். திருச்சபைக்கு மக்களைக் கூட்ட வேண்டும் என்பதற்காக எதையும் செய்யும் ஊழியர்களாயும் இருக்கக்கூடாது. இவ்வாறு செய்வதினாலே பிரச்சனைகளிலே விழுந்த அநேகர் உண்டு. உலகத்தோடு ஒத்துப்போக தேவன் நம்மை அழைக்கவேவில்லை. அவருடைய வார்த்தையை தெளிவாக மக்களுக்குக் கொடுக்கத்தான் அழைத்திருக்கிறார்.

ஆலயத்திலே பத்து பேர் இருந்தாலும் சரி, பத்தாயிரம் பேர் வந்தாலும் சரி, மக்களைப் பிரியப்படுத்த அல்ல; கர்த்தர் எதைச் சொல்கிறாரோ அதைச் சொல்லவே அவர் உங்களை அழைத்திருக்கிறார். அநேக வேளைகளிலே பெருங்கூட்டம் இருந்தால்தான் அது கர்த்தருடைய ஊழியம் என்று நினைக்கிறோம். இல்லை, அருமையான ஊழியக்காரனே, இயேசு கிறிஸ்து பன்னிரெண்டு சீடர்களுக்குத்தான் அதிகமான ஊழியத்தை நிறைவேற்றினார்.

உங்கள் சபையிலே சில விசுவாசிகள்தான் இருக்கிறார்கள் என்று நீங்கள் கவலைப்படக் கூடாது. நீங்கள் அவர்கள் முன்னிலையிலேயே உண்மையும் உத்தமமுமாய் அந்த சிலருக்கு கர்த்தருடைய வார்த்தையை கற்றுக் கொடுத்துக்கொண்டே

இருப்பீர்கள் என்றால், அதின் விளைவு பெரியது. கர்த்தருடைய வசனத்தில் உள்ள வல்லமை பெரியது. இன்று தேவன் தம்முடைய வார்த்தையை மக்களுக்குக் கொடுக்கத்தக்கதான சுத்தமான பாத்திரங்களையே எதிர்பார்க்கிறார்.

யூதா கானானியர்களின் தரத்திற்கு தாழ்ந்து போய்விட்டான்.

ஆதியாகமம் 38 : 27 – 30

இப்பொழுது நீங்கள் மத்தேயு எழுதின சுவிசேத்திற்கு திருப்புவீர்களென்றால், இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு அங்கே காணப்படுகிறது. மத்தேயு முதலாம் அதிகாரத்திலே ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்; ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்; யாக்கோபு யூதாவையும் அவன் சகோதரரையும் பெற்றான்; யூதா பாரேஸையும் சேராவையும் தாமாரிடத்தில் பெற்றான் ; பாரேஸ் எஸ்ரோமைப் பெற்றான்; எஸ்ரோம் ஆராமைப் பெற்றான் என்று தொடர்ந்து வருகிறது.

மத்தேயு 1 : 11ஆம் வசனத்தில்,

‘யாக்கோபு மரியாளுடைய புருனாகிய யோசேப்பைப் பெற்றான் ; அவளிடத்தில் கிறிஸ்து என்னப்படுகிற இயேசு பிறந்தார்‘ என்று பார்க்கிறோம்.

சரீரப்பிரகாரமாகப் பார்ப்போமென்றால், யூதாவின் வம்வத்திலே தாமார் மூலமாக இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே தோன்றினார் என்பது அற்புதமானது.

ஆம், பிரியமானவர்களே, மனித குடும்பத்திற்குள்ளே அவர் வரும்பொழுது, பாவமான ஒரு சந்ததியிலேதான் அவர் வந்தார். நமக்காக அவர் பாவமாக்கப்பட்டார். அவர் எந்த பாவத்தையும் அறியவில்லை; காரணம் என்ன? நாம் தேவனுக்கு முன்னதாய் நீதிமான்களாக நிறுத்தப்பட வேண்டும்.

2 கொரிந்தியர் 5 : 21

‘நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

ஆதியாகமம் : 39

அருமையானவர்களே, யோசேப்பின் வாழ்க்கை யூதாவின் வாழ்க்கையை விட முற்றிலும் மாறுபட்ட ஒரு வாழ்க்கை என்பதை நாம் பார்க்கப் போகிறோம்.

அநேக சமயங்களிலே நாம் உணர்வது என்னவென்றால் மற்ற பத்து பிள்ளைகளும் கற்றுக்கொண்ட அறிவுரைகளை விட, ஆலோசனைகளை விட யோசேப்புக்கும், பென்யமீனுக்கும் யாக்கோபு நேரம் எடுத்து கற்றுக் கொடுத்திருக்கிறார். தேவனுடைய கற்பனைகளைக் குறித்து சொல்லியிருக்கிறார். அவர்களை தனிப்பட்ட விதத்திலே கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடு வாழ்வதிலே அக்கறை காட்டியிருக்கிறார்.

www.Radio882.com

யோசேப்பின் வாழ்க்கையைப் பார்க்கும்பொழுது எந்த ஒரு நன்மையும் நடக்காதது மாதிரி நமக்குத் தெரிகிறது. எகிப்திற்குச் சென்றபொழுதும் எல்லாம் நன்றாகப் போவது போல தெரியும். ஆனால் உடனடியாக ஏதாவது ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் ஒவ்வொரு முறையும் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகவே அது நடைபெற்றது. யோசேப்பின் பார்வைக்கு அது கடினமானதாகத் தெரிந்தாலும், அதிலே ஒரு நோக்கம் இருந்தது. பழைய ஏற்பாட்டுப் புத்தகத்திலேயே யோசேப்பைத் தவிர வேறு யாருடைய வாழ்க்கையிலேயும், தேவனுடைய சித்தத்தை நாம் பரிபூரணமாக காணக்கூடாதவர்களாய் இருக்கிறோம்.

யோசேப்பினுடைய வாழ்க்கையைப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு பகுதியிலேயும் தேவனுடைய பிரசன்னத்தை நாம் காணக்கூடியவர்களாய் இருக்கிறோம். தேவனுடைய கரம் அவனோடு இருந்தது; தேவன் அவனை வழி நடத்தினார்; ஆனாலும் யோசேப்புக்கு ஒருபொழுதும் தேவன் தரிசனமாகவே இல்லை. தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனமானார். ஈசாக்குக்குத் தரிசனமானார், ஏன் யாக்கோபுக்குகூட தரிசனமானார். ஆனால், யோசேப்புக்கு தரிசனமாகவில்லை. இருந்தாலும் அவனுடைய வாழ்க்கையிலே தேவனுடைய சித்தப்படி தெளிவாக ஆண்டவர் அவனை வழிநடத்திச் சென்றார்.

ரோமர் 8ஆம் அதிகாரம் 28ஆம் வசனத்திற்கான பழைய ஏற்பாட்டு மாதிரி அவன்தான். ‘அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.‘

இதே கருத்தை யோசேப்பு மிகத் துல்லியமாக வேறு வார்த்தைகளிலே சொல்லியிருக்கிறான். யோசேப்பினுடைய தகப்பனார் மரித்தபொழுது யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பு தங்கள் மேல் கோபமாகி தங்களுக்குத் தண்டனைக் கொடுப்பானோ என்று பயந்து, அவனுடைய தயவுக்காகக் கெஞ்சும்படியாய் அவனிடத்திலே வருகிறார்கள். அப்பொழுது அவன் அவர்களுக்கு எதிராகத்தான் எந்தப் பகை உணர்வையும் மனதிலே வைத்துக் கொள்ளவில்லை, என்பதைச் சொல்கிறான்.

ஆதியாகமம் 50 : 20

எந்த ஒரு காரியமும் அவனுக்கு எதிராகவே செயல்படுவது போலத் தெரிந்தாலும், வெளிப்படையாக அத்தனையும் இருளாய் காணப்பட்டாலும், பயங்கரமானதாய் இருந்தாலும், ஒவ்வொரு நிகழ்ச்சியுமே யோசேப்புடைய வாழ்க்கையிலே தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதை நோக்கி சென்று கொண்டிருந்தது.

எனக்கு அருமையான சகோதரனே, அருமையான சகோதரியே, நம்முடைய வாழ்க்கையிலேயும் ஒரு சத்தியத்தை ஆழமாகப் பதித்துக் கொள்ள வேண்டும். எபிரேயர் 12ஆம் அதிகாரம் 6ஆம் வசனம்,

‘கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்

www.Radio882.com

கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்.'

நாம் ஆண்டவருடைய பிள்ளைகளாக இருப்போமென்றால், ஆண்டவருடைய சித்தத்தின் படி அவருடைய அனுமதியில்லாமல் நம்முடைய வாழ்க்கையிலே எதுவும் நடைபெறாது என்ற நிச்சயம் உள்ளவர்களாய் நாம் இருக்கலாம். ஏனென்றால் தேவனிடத்திலே அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாகத்தான் நடக்கும்.

நம்முடைய வாழ்க்கையிலே நமக்கு தீமைகளே வருவது போல காரியங்கள் காணப்படலாம், மனவேதனைகள் வரலாம், பாடுகள் நம்முடைய வாழ்க்கையிலே குறுக்கிடலாம், அவை எல்லாமே நம்முடைய வாழ்க்கையின் நன்மைக்காகவும் அவருடைய நாமத்தின் மகிமைக்காகவுமே.

அருமையான சகோதரனே, சகோதரியே, ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளையைச் சுற்றிலேயும் ஒரு வேலி இருக்கிறது. தேவனுடைய அனுமதியில்லாமல் அந்த வேலியைத் தாண்டி எதுவும் வருகிறதில்லை. ஞாபகம் இருக்கிறதா? பிசாசானவன் யோபுவை சோதிக்க வேண்டுமென்று எண்ணினான். எனவே தேவனிடத்திலே போய் என்னச் சொல்லுகிறான். யோபு முதலாம் அதிகாரம் 10ஆம் வசனம்

'நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடையக்கவில்லையோ? அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர்; அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று.'

பிசாசானவன் யோபுவைச் சுற்றி தேவன் வைத்திருந்த வேலியை எடுக்கும்படியாகக் கேட்டுக் கொண்டான். நம்மையும் சோதிக்கும்படியாக பிசாசானவன் தேவனிடத்திலே அனுமதிப் பெற்றுக் கொண்டாலும், எல்லாமே நம்முடைய நன்மைக்காகவே நடைபெறும்.

ஒரு தேவனுடைய மனிதர் ரோமர் 8ஆம் அதிகாரம் 28ஆம் வசனத்தைக் குறித்துச் சொல்லும் பொழுது களைத்துப்போன இருதயத்திற்கு ஒரு பஞ்சுத் தலையணைதான் ரோமர் 8 : 28 என்று சொல்கிறார்.

யோசேப்பின் வாழ்க்கையிலுள்ள மற்றுமொரு காரியம் கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் இன்றும் உற்சாகத்தைக கொடுக்கும் ஒரு காரியமாக இருக்கிறது. இன்று வாழ்கிற கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் யாருக்குமே தேவன் நேரடியாகத் தரிசனம் கொடுக்கிறதில்லை. சில கள்ளத் தீர்க்கத்தரிசிகள் தங்களுக்கு அவ்வாறு கிடைப்பதாகக் கூறலாம்; ஆனால், தேவன் இன்று யாருக்கும் நேரடியாகக் காட்சி கொடுக்கிறதில்லை. நம்மை உற்சாகப் படுத்துவதற்காகவே தேவன் யோசேப்புக்கு நேரடியாகக் காட்சி கொடுக்கவில்லை, என்றாலும் தேவன் அவனை வழிநடத்தியது போல நம்மையும் வழிநடத்துவார் என்ற நிச்சயத்தை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

சரி. இப்பொழுது யோசேப்பினுடைய வாழ்க்கையிலே என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம்.

ஆதியாகமம் 39 : 1

பதினேழு வயதான, பார்ப்பதற்கு அழகான இந்த இளைஞனை அடிமைகளின் சந்தையிலே நல்ல விலைக்கு அவர்கள் விற்றிருப்பார்கள். பிரதானியான, தலையாரிகளுக்கு அதிபதியுமான போத்திபார் யோசேப்பை விலை கொடுத்து வாங்குகிறான். போத்திபார் இராணுவ அதிபதிகளுக்கெல்லாம் தலைவன். இராணுவ அலுவலகத்திலே அவனுக்கு அதிகமான வேலை. அரசாங்கத்திலே மிக முக்கியமான ஒரு நிலைமையிலே இருந்தவன்.

ஆதியாகமம் 39 : 2

பார்வோனின் அரசாங்கத்திலே அதிகாரியாயிருந்த போத்திபாரின் வீட்டியே யோசேப்பு வேலையிலே சேர்ந்த உடனேயே யோசேப்போடு கர்த்தர் இருந்தது தெரியவருகிறது. எப்படி? யோசேப்பு அந்த வீட்டிற்கு வந்தபொழுது ஆசீர்வாதமும் அந்த வீட்டிற்கு வந்தது.

ஆதியாகமம் 39 : 3

இந்த நேரம் வரைக்கும் அவனுடைய வாழ்க்கை மிகச் சிறப்பானதாக இருந்தது. அன்று முதல் என்றென்றும் அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள் என்று சொல்லவேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால் அப்படி இல்லை பிரியமானவர்களே, இது ஒரு கற்பனை கதையல்ல, இது உண்மையான வாழ்க்கை. இந்த கர்த்தருடைய பிள்ளை ஒரு சோதனையை சந்திக்கப் போகிறான். பிரச்சனைகளையும், வேதனைகளையும் அவன் அனுபவிக்கப் போகிறான்.

ஆதியாகமம் 39 : 4

'யோசேப்பினிடத்தில் தயவுவைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்.'

சற்றே இதை கற்பனை செய்து பாருங்கள். உண்மையும் உத்தமமுமாய் வேலை செய்த யோசேப்பை பார்த்த போத்திபார், வீட்டிலுள்ள அத்தனை பொருள்களுக்கும் அதிகாரியாக்குகிறான். போத்திபாருக்குரிய எல்லாவற்றையும் பொறுப்போடு கவனிக்கிறவனாய் மாறுகிறான். போத்திபார் யோசேப்பை எல்லாக் காரியங்களிலேயும் பரிபூரணமாய் நம்புகிறான்.

ஆதியாகமம் 39 : 5, 6

முற்றிலும் யோசேப்பை நம்பினபடியினாலே எந்தக் கணக்கு வழக்கும் கேட்டது

போல தெரியவில்லை. கணக்குகளை பரிசோதிக்கும் எந்த ஒரு மனிதனையும் அழைத்து யோசேப்பின் கணக்குகளை சரிபார்க்கவில்லை. இந்த இளைஞனின் உண்மையை பரிபூரணமாய் விசுவாசித்தான். பார்வோனின் அதிகாரியாக பார்வோனிடத்திலே நல்ல பேர் எடுக்க வேண்டுமென்பதே போதிப்பாரின் நோக்கமாய் இருந்தது. எனவே தனது தனிப்பட்ட வீட்டுக்காரியங்கள் எல்லாவற்றையும் யோசேப்பு கவனிக்கும்படியாக விட்டு விட்டான். உணவு அருந்த மேஜையிலே வந்து அமரும்பொழுது ஆகாரம் அவனுக்கு முன்னாலே வைக்கப்படும், அதன் ஒன்றின் மேல்தான் அக்கறையாய் இருந்தான். ஏனென்றால் மற்றெல்லாவற்றையும் யோசேப்பின் வசத்திலே அவன் விட்டுவிட்டான்.

ஆதியாகமம் 39 : 7

போத்திபார் அவனுடைய வீட்டிலே யோசேப்பிற்கு முழு அதிகாரமும் கொடுத்திருந்தான். வீட்டின் அனைத்து காரியங்களுக்கும் பொறுப்பு யோசேப்புதான். யோசேப்பு தனது பணிகளிலே தீவிரமாய் இருந்தபொழுது போத்திபாரின் மனைவியும் தீவிரமாய் இருந்தாள். எதிலே தீவிரமாய் இருந்தாள்? தந்திரமாகத் திட்டமிடுவதிலே தீவிரமாய் இருந்தாள். யோசேப்பு அழகான ஒரு இளைஞன் ஒரு வேளை போத்திபார் சற்று வயதானவனாக இருந்திருக்கலாம். ஏனென்றால் அந்தக் காலத்து வழக்கப்படி வயதானவர்களும் இளம் மனைவிகளைப் பெற்றவர்களாய் இருந்தார்கள்.

இப்பொழுது யோசேப்பை தன் வசப்படுத்த முயற்சி செய்கிறாள்.

ஆதியாகமம் 39 : 8, 9

அருமையான சகோதரனே, சகோதரியே கவனித்தீர்களா? இப்பொழுது யோசேப்பு செய்த எல்லா வேலைகளிலுமே அவன் தேவனுக்கு சேவை செய்வதாகவே நினைத்து பணி செய்து கொண்டிருக்கிறான். நீங்கள் எகிப்திலே போய் பார்ப்பீர்களென்றால், பாபிலோனைப் போல விக்ரக வணக்கம் நிறைந்த இடம்தான் எகிப்து தேசமும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலேயும் யோசேப்பு ஜீவனுள்ள உண்மையான தேவனுக்கு ஒரு சாட்சியாக வாழ்க்கை நடத்தினான். உயர்வான ஒழுக்க நெறிகளைக் கொண்டவனாய் வாழ்ந்து கொண்டிருந்தான். இந்தப் பெண் அவனுக்கு ஆசைக்காட்டியபொழுது அவன் சொன்னது என்ன? நீ அவருடைய மனைவியாய் இருக்கிறபடியால் உன்னைத் தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை. திருமண உறவைக் குறித்து யோசேப்பு கொண்டிருந்த உயர்வான எண்ணத்தைப் பார்த்தீர்களா?

அருமையானவர்களே, எல்லா மனுகுலத்திற்கும் தேவன் குடும்ப வாழ்க்கையை கொடுத்திருக்கிறார். ஒருவன் திருமணத்திலே கொடுத்த வாக்குறுதியை மீறும்பொழுது தேவனுடைய கட்டளைகளை அவன் மீறுகிறான். திருமண வாழ்க்கையை முறிக்கும் ஒருவன், தேவனோடு செய்யும் எந்த ஒரு வாக்கையும் முறிக்கிறவனாய் இருப்பான்.

இன்றும் குடும்ப உறவுகளிலே உண்மையில்லாதவர்களாய் இருந்து, பிரிந்து

www.Radio882.com

போகிறவர்களே, தேவனை விட்டு மிக தூரம் போகிறவர்களாகக் காணப்படுவார்கள். இன்று நீங்கள் கவனிக்கிற பிரிந்து போகிற எந்தக் குடும்பத்தைப் பார்த்தாலும் இதை நீங்கள் புரிந்துகொள்ளலாம். இங்கே தேவனுக்கு உண்மை உள்ளவனாய் இருக்க யோசேப்பு முயற்சி எடுக்கிறான். அவனுக்கு இருந்த உயர்வான எண்ணத்தைப் பார்த்தீர்களா? உண்மையுள்ள தேவனுக்கு உண்மையாயிருக்க அவன் விரும்பியபடியினாலே அவனுக்கு நடந்தது என்ன எனப் பாருங்கள்.

ஆதியாகமம் 39 : 10

பார்வோனின் இந்த அதிகாரியான போத்திபார் வீட்டை விட்டு அதிகமாக வெளியே இருக்கிறவன். சொல்லப்போனால் அளவுக்கு அதிகமாகவே அவன் வீட்டை விட்டு வெளியே இருந்திருக்கிறான். இந்தப் பெண்மணி யோசேப்பை ஒரே ஒரு முறை மட்டும் சோதிக்கவில்லை. திரும்பத் திரும்ப, திரும்பத் திரும்ப அவள் சோதித்துக் கொண்டே இருக்கிறாள். இது தொடர்ச்சியாக அவனுக்கு வந்த சோதனையாயிருந்தாலும், இந்த இளைஞன் இந்த சோதனையிலே விழுந்து போகவில்லை.

பழங்கால பழமொழி ஒன்று இவ்வாறு சொல்கிறது. 'நரகத்தின் அகோரம் கூட பெண்ணின் கோபத்தைப் போல இல்லை.' ஆம். யோசேப்பை அவள் பழிவாங்கப் போகிறாள்.

ஆதியாகமம் 39 : 11 – 14

போத்திபாருக்கும் அவனுடைய மனைவிக்கும் உள்ள உறவு அத்தனை நன்றாக இருந்ததாகத் தெரியவில்லை. அவ்வளவு பெரிய மனிதனை எவ்வளவு கீழ்த்தரமாக அவள் பேசுகிறாள். எபிரெய மனுஷன் நம்மிடத்தில் சரசம் பண்ணும்படிக்கு அவனை நமக்குள் கொண்டு வந்தார், என்று சொல்லுகிறாள். வேறு வார்த்தைகளிலே சொல்ல வேண்டுமென்றால் இதைப் போல மற்றும் வேறு யாரையாவது தனது விருப்பத்திற்கு அவள் இணங்கச் செய்திருப்பாள் என்பது போலத்தான் தெரிகிறது.

இப்பொழுது போத்திபார்தான் ஒரு பரிதாபமான மனிதனாய் இங்கே காணப்படுகிறான். அவளுடைய வாழ்க்கையைக் குறித்து ஏற்கனவே அவனுக்குக் கேள்விக்குறிகள் இருந்திருக்கத்தான் செய்யும். இப்பொழுது அப்படிப்பட்ட தனது வாழ்க்கையை மூடுவதற்காக இப்படி ஒரு நாடகமாடுகிறாள்.

ஆதியாகமம் 39 : 15, 16

வாலிபனான யோசேப்பு எகிப்திலே தன்னந்தனியாக இருக்கிறான். இப்பொழுது பொய்யாய் குற்றம் சாட்டப்படுகிறான். மற்ற ஆண்களிடத்திலே யோசேப்பைக் குறித்து அவள்குற்றம் சாட்டுகிறாள். வீட்டிலே அவள் கணவனில்லை. எனவே அவன் வரும்பொழுது கூறுவதற்காக நல்ல ஒரு கதையை தயாரித்து வைக்கிறாள்.

www.Radio882.com

ஆதியாகமம் 39 : 17 – 19

வெளிப்பிரகாரமாக நாம் பார்க்கும்பொழுது அவள் சொன்ன கதையை போத்திபார் நம்பினது போல தெரிகிறது. அந்த குறிப்பிட்ட வேளையிலே அவனைக் கோபமுள்ளவனாக்கியது, என்றாலும் பார்வோனின் படையிலே ஒரு முக்கியமான அதிகாரி என்பதினாலே அவன் கூர்மையான அறிவுள்ளவனாகத்தான் இருந்திருப்பான். உண்மையில் என்ன நடந்தது என்பதும் அவனுக்குத் தெரிந்திருக்கும். ஆனால், அவன் ஒரு முட்டாளான கணவனாய் இருக்கிறான். இவள் எப்படிப்பட்ட ஒரு மனைவி என்பதை இவன் உணர்ந்தவனாய் இப்படிப்பட்ட சூழ்நிலையிலே சிறந்தது யோசேப்பை சிறையிலே அடைத்துவிட்டு காரியத்தை மறந்து விடுவதுதான் என்றுதான் எண்ணினான். இப்படிப்பட்ட ஒரு பெண்ணுக்கு அவன் கணவனானதைக் குறித்து நாம் வருத்தப்படத்தான் வேண்டியதிருக்கிறது.

என்னுடைய கருத்து என்னவென்றால், இந்தப் பெண் பலமுறை இவனுக்கு துரோகம் செய்தவள்தான். யோசேப்பையும் அப்படிப்பட்ட ஒரு வரிசையிலே கொண்டுவர அவள் திட்டம் பண்ணினாள், முடியவில்லை சீறிவிட்டாள்.

இந்த நூற்றாண்டிலே வாழ்கிற அநேகருக்கு இந்த வேதப்பகுதி ஒரு எச்சரிப்பின் செய்தியாகவும், ஆலோசனையின் செய்தியாகவும், அறிவுரையின் செய்தியாகவும் வருகிறது என்று சொன்னால் மிகையாகாது.

இன்றும் திருமணமான எத்தனையோ பெண்கள் தங்கள் கணவன்மார் வேலையிலே அதிகமான நேரத்தைச் செலவு செய்வதினாலே கணவனை விட்டு மற்றவர்களோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள். இது வேதனைக்குரிய ஒரு காரியம். அதுமட்டுமல்ல எத்தனையோ இளம் வாலிபர்கள் இப்படிப்பட்ட பெண்களினாலே பிடிக்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே நீங்கள் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள் என்று சொன்னால், அந்த சூழ்நிலையை விட்டு நீங்கள் சீக்கிரமாய் வெளியேறுவது உங்களுக்கு நல்லது. யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டு அங்கே இருந்தபடியினாலேதான் அவன் எங்கும் ஓட முடியவில்லை. இரண்டாவதாக யோசேப்பு தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்யக்கூடாது என்பதைக் குறித்து மிக உறுதியான மனதுடையவனாய் காணப்பட்டான். ஆனால் புதிய ஏற்பாட்டிற்கு வரும்பொழுது, அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் கொடுக்கிற ஆலோசனை என்ன தெரியுமா?

ணுறணு தீமோத்தேயு 2 : 22 லே

'அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோட கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும், விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு.'

www.Radio882.com

இந்த இச்சையானது உங்கள் வாழ்க்கையிலேயும் இருக்குமென்றால் நீங்கள் இருக்கும் அப்படிப்பட்ட சூழ்நிலைகளைவிட்டு நீங்கள் நிச்சயமாக விலகி ஓடவேண்டும். அல்லது நீங்கள் இருக்கும் சூழ்நிலையிலேயே வேறு ஒருவருக்கு இப்படிப்பட்ட இச்சைகள் இருக்குமென்றாலும் நீங்கள் விலகி வாழ்வதுதான் சிறந்தது. ணூ கொரிந்தியர் 10 : 12 என்ன சொல்கிறதென்றால்,

'இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன்' என்று சொல்கிறது.

அருமையான சகோதரனே, சகோதரியே ஆவிக்குரிய வாழ்க்கையிலே நிலைத்திருப்பதைக் குறித்து நாம் அடிக்கடி சிந்திக்கிறவர்களாய் இருப்போமென்றால், பேதுரு கொடுக்கும் ஆலோசனையையும் நாம் கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ணூணூ பேதுரு முதலாம் அதிகாரம் 5ம் வசனத்திலே அவர்,

'இப்படியிருக்க நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்' என்று சொல்கிறார்.

விசுவாச வாழ்க்கைக்குள்ளே கடந்து வந்த எந்த மனிதனும், எந்த மனுஷியும் முதலாவது அதிக ஜாக்கிரதை உள்ளவர்களாய் இந்த உலகத்திலே இருக்க வேண்டும். ஏனென்றால், பாருங்கள் ணூ பேதுரு 5 : 8

'தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.

ஆதியாகமம் 39 : 20

யோசேப்பை பார்வோனிடம் கொண்டு போகவில்லை. எந்த நீதி மன்றத்திற்கும் அவனைக் கொண்டு போகவில்லை. இப்பொழுது இவனுக்கு இது ஒரு கெட்டகாலம், என்று ஒருவேளை நீங்கள் நினைக்கலாம். தகப்பனுடைய வீட்டிலே தகப்பனுக்குப் பிரியமான மகனாய் இருந்தான். பலவர்ண அங்கியை உடுத்தியவனாய் இருந்தான்.

அவனுடைய சகோதரர்கள் அவனுடைய அந்த பலவர்ண அங்கியை எடுத்துக் கொண்டு அவனைக் குழியிலே தள்ளினார்கள். அடுத்ததாக அவனை வியாபாரிகளிடத்திலே விற்றுப் போட்டார்கள். இறுதியாக எகிப்திற்கு அவன் விற்றுப்போடப்பட்டான். அவனுக்கு பதினேழு வயதுதான் ஆகிறது. எகிப்திற்கு வந்த பின்னாலும் இளைஞனான அவன் பல நாட்கள் இரவிலே தன்னுடைய கண்ணீரினாலே தலையணையை நனைத்திருப்பான்.

தகப்பனால் அதிகமாக நேசிக்கப்பட்டவன் எந்தத் தொடர்பும் இல்லாமல் தூரமாய் இருக்கிறான். இப்பொழுது புதிய ஒரு பொறுப்பைப் பெற்றுக்கொள்கிறான். பார்க்க அழகானவனாய் இருந்தபடியினாலும், செய்யும் வேலையிலெல்லாம் திறமையானவனாய்

இருந்தபடியினாலும் பணியிலே உயர்வைப் பெற்றான். அப்படிப்பட்ட வேளையிலேதான் போத்திபாரின் மனைவி பாவம் செய்ய அவனைத் தூண்டுகிறாள். ஒரு நாள் அல்ல, இரண்டு நாட்கள் அல்ல, நித்தம் நித்தம் அவள் முயற்சிக்கிறாள். யோசேப்புடைய உள்ளத்திலே உயர்வான ஒரு ஒழுக்க நெறியை அவன் வைத்திருந்தபடியினாலே தான் இந்த சூழ்நிலையிலேயும் பாவம் செய்ய அவன் தன்னை அர்ப்பணிக்கவில்லை. விளைவு என்ன? பழி சுமத்தினாள், எந்த ஒரு வாய்ப்பும் அவனுக்குக் கிடைக்கவில்லை.

அருமையான சகோதரனே, சகோதரியே, ஒன்றை நாம் நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும். யோசேப்பு என்னதான் பதவி உயர்வுகளைப் பெற்றாலும் அவன் ஒரு அடிமைதான். போத்திபாரின் மனைவி ரோம சக்கரவர்த்தியின் மனைவி போல. அவளைக் குறித்து ஒருவரும் ஒன்றும் சொல்ல முடியாது. அவளுடைய வார்த்தை அப்படியே ஏற்றுக் கொள்ளப்படும். பாவம் யோசேப்பு, அவன் தனது வாயைத் திறக்கக்கூடிய ஒரு சூழ்நிலைக்கூட இல்லை. யோசேப்பு தான் குற்றமற்றவன் என்று சொல்லும் முன்னதாகவே அவன் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டுவிட்டான்.

உடனடியாகவே சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டான். பார்வோனுடைய கைதிகள் எங்கே அடைக்கப்படுவார்களோ, அங்கே அடைக்கப்பட்டான்.

ஆதியாகமம் 39 : 21 – 23

அருமையானவர்களே, இந்த இளைஞனுடைய வாழ்க்கையிலே கர்த்தருடைய கரம் வெளியரங்கமாகவேத் தெரிகிறது. என்றாலும் இவற்றிற்கெல்லாம் எதிராக அவனுக்கு பயங்கரமான காரியங்கள் நடைபெறுகின்றன. இப்பொழுது அவன் சிறைச்சாலையிலே இருக்கிறான்; சற்றே சிந்தித்துப் பாருங்கள். அவனுக்கு அது எவ்வளவு மனசோர்வை உண்டு பண்ணியிருக்கும். ஆனால் ஆர்வம் தரக்கூடிய ஒரு காரியம் என்னவென்றால், கர்த்தர் யோசேப்போடே இருந்தார். அவனுக்கு அவர் காட்சியளிக்கவில்லை என்றாலும், அவனுக்கு கிருபையைக் காண்பித்தார்.

முதலாவதாக, அந்த சிறைச்சாலையின் தலைவனுக்கு யோசேப்பைப் பிடித்துவிடுகிறது. அவனை நம்புகிறான். இயற்கையாகவே யோசேப்பு பார்க்க கவர்ச்சிகரமான ஒரு இளைஞனாகவும், சிறப்பான திறமைகள் உள்ளவனாகவும் காணப்பட்டான். உலகமே யோசேப்புக்கு எதிர்த்து வந்தாலும் தேவன் அவனோடு கூட இருந்தது அவனுக்கு சிறப்பான காரியமாயிற்று.

கர்த்தர் அவனோடு இருந்து அவனை நடத்திச் செல்கிறார். இந்த இளைஞனுடைய வாழ்க்கையிலே தேவன் கொண்டிருக்கிற திட்டத்தை நிறைவேற்றும்படியாக இவைகள் எல்லாமே அவனுடைய வாழ்க்கையிலே நடைபெறுகிறது.

இதை உணர்ந்த யோசேப்பு மிக அமைதியாக எல்லாவற்றையுமே நன்மைக்கு என்று எடுத்துக் கொள்கிறான். யோசேப்புடைய சூழ்நிலை அவனைக் கீழே

www.Radio882.com

தள்ளிவிடவில்லை. அவனுடைய சூழ்நிலைக்கு மேலாக வாழும் கிருபை பெற்றிருந்தான்.

இன்று நீங்கள் உங்களுடைய வாழ்க்கையிலே புறக்கணிக்கப்பட்டவர்களாய் இருந்தாலும், தவறாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களாய் இருந்தாலும், நீங்கள் கர்த்தருடைய பிள்ளையாக இருப்பீர்களென்றால், சூழ்நிலைக்கு மேலாக நீங்கள் வாழவேண்டும். ஏனென்றால் கர்த்தர் உங்களோடு இருக்கிறார். உங்களுக்கு நடப்பது எல்லாம் நன்மைக்குத் தான் என்பதை நீங்கள் மறந்து போகாதிருங்கள்.

இன்று அநேகருடைய வாழ்க்கையிலே அவர்களுடைய சூழ்நிலை அவர்களை ஆட்சி செய்கிறது. ஆனால் யோசேப்போ, சூழ்நிலைகளுக்கு மேலாக வாழ்கிறவனாய் இருந்தான். கர்த்தர் அவனோடு கூட இருந்தார் ; கர்த்தருடைய கரத்தை தன்னுடைய வாழ்க்கையிலே அவன் உணர்ந்தான். எனவே, அவன் சோர்ந்து போகவில்லை; சாத்தானுடைய வலிமையான ஆயுதங்களிலே ஒன்று சோர்வடையச் செய்வது. யோசேப்பினுடைய வாழ்க்கை எபிரெயர் 12ஆம் அதிகாரம் 11ஆம் வசனத்தை நமக்கு நினைவுப்படுத்துகிறது.

'எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும் ; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்.'

யோசேப்பினுடைய வாழ்க்கையிலேயும் அதுதான் நடைபெறப்போகிறது. யோசேப்பினுடைய சரித்திரம் நமக்கு வெளிப்படுத்துகிற உண்மை என்ன? எல்லா மனிதர்களும் யோசேப்பின் விலையைப் பெறமுடியாது. யோசேப்பைப் போல இன்றும் பிசாசினால் வாங்க முடியாத எத்தனையோ பேர் உண்டு. யோபுவும் பிசாசினால் வாங்கப்பட முடியாதவன்.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலும் பிசாசினாலே வாங்கப்பட முடியாதவன். அருமையானவர்களே, இப்படி பலரைப் பிசாசானவன் முயன்றும், வாங்க முடியாமல் போய்விட்டான். யோசேப்பு சிறைச்சாலையிலே இருப்பது தேவனுடைய சித்தமாய் இருந்தது. இதைக் குறித்து நாம் அடுத்த அதிகாரத்திலே பார்க்கப் போகிறோம்.

இப்பொழுது ஆதியாகமம் 40ம் அதிகாரத்திற்குள்ளே கடந்து செல்லப் போகிறோம். யோசேப்பின் சரித்திரம் துரிதமாய் செல்லும் என்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால் இந்த அதிகாரத்தில் மெதுவாகச் செல்கிறது. யோசேப்பு சிறைச்சாலையிலே இருக்கிறான். பான பாத்திரக்காரன் யோசேப்புக்கு உதவி செய்வான் என்று நினைத்தான். ஆனால், அவன் யோசேப்பை நினையாமல் மறந்துவிட்டான். இவைகள் எல்லாமே யோசேப்பினுடைய வாழ்க்கையிலே தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன.

ஆதியாகமம் 37 வது அதிகாரத்தை நாம் கற்றுக் கொண்ட பொழுது யோசேப்பிற்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் இடையிலான சில ஒற்றுமைகளைக் குறித்து நாம் பார்த்தோம். இப்பொழுது இந்த சரித்திரத்திலே இன்னும் அநேகக் காரியங்களை அறிந்து

கொண்டுவிட்டோம். இப்பொழுது இங்கே சற்று நிறுத்தி, இன்னும் சில ஒற்றுமைகளைக் குறித்து நாம் பார்ப்போம்.

பாருங்கள்.

1. யோசேப்பு தனது சகோதரர்களிடத்திலே அனுப்பப்பட்டான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் சகோதரராகிய காணாமற் போன இஸ்ரவேலரிடத்திற்கே அனுப்பப்பட்டார்.

2. எந்தக் காரணமும் இல்லாமல் யோசேப்பு தனது சகோதரர்களால் பகைக்கப்பட்டான். அதே போல ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் காரணமில்லாமல் தன்னைப் பகைத்தார்கள் என்று சொல்கிறார்.

3. தன்னுடைய சொந்த சகோதரர்களாலேயே யோசேப்பு விற்கப்பட்டான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தன்னுடைய சீடர்களிலே ஒருவனாலேயே விற்கப்பட்டார்.

4. யோசேப்பு இருபது வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்பட்டான். ஆண்டவராகிற இயேசுகிறிஸ்து முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்பட்டார்.

5. சகோதரர்கள் யோசேப்பைக் கொல்ல சதி செய்தார்கள்; இயேசு கிறிஸ்துவைக் கொல்வதற்காகவும் யூத ஜனங்களே சதி செய்தார்கள். அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார். அவருக்கு சொந்தமானவர்களோ, அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

6. யோசேப்பு மரிக்கும் படி ஒரு குழிக்குள்ளே போடப்பட்டான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் சிலுவையிலே மரிக்கும்படியாய் அடிக்கப்பட்டார்.

7. யோசேப்பு குழியிலிருந்து தூக்கி எடுக்கப்பட்டான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் மூன்றாவது நாள் மரணத்திலிருந்து உயிரோடு எழுந்தார்.

8. யோசேப்பு தனது தகப்பனாருக்குக் கீழ்ப்படிந்தான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தனது பிதாவிற்குக் கீழ்ப்படிந்து எப்பொழுதுமே பிதாவிற்குப் பிரியமான காரியங்களையே செய்து வந்தார்.

9. யோசேப்பின் தகப்பனார் சகோதரர்களைத் தேடும்படியாக யோசேப்பை அனுப்பி வைத்தார். இயேசு கிறிஸ்துவும் தனது சகோதரர்களை தேடும்படியாக வந்தபொழுது பிதாவின் சித்தத்தின்படியே வந்தார் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

10. சொந்த சகோதரர்களால் யோசேப்பு பரிகசிக்கப்பட்டான். அவன் தூரத்தில் வரும்பொழுதே இதோ, சொப்பனக்காரன் வருகிறான் என்று சொன்னார்கள். இயேசு கிறிஸ்துவும் சொந்த சகோதரர்களாலேயே பரிசிக்கப்பட்டார். அவர் சிலுவையிலே தொங்கிய பொழுது நீர் கிறிஸ்துவானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று பரிகசிக்கப்பட்டார்.

11. யோசேப்பினுடைய சகோதரர்கள் யோசேப்பை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சகோதரர்களான யூதர்களும் அவரை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள்.

www.Radio882.com

12. யோசேப்பை கொல்வதற்கு சதி ஆலோசனைப் பண்ணினார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை கொலை செய்வதற்கும் சதி ஆலோசனை நடைபெற்றது என்று நாம் வாசிக்கிறோம்.

13. இரத்தம் வடிந்த யோசேப்பின் உடை தகப்பனாரிடத்திற்குத் திரும்பக் கொடுத்தனுப்பப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் மேலங்கியும் சீட்டுப்போடப்பட்டது.

14. யோசேப்பு எகிப்திற்குள்ளேயே விற்கப்பட்டான். பல ஆண்டுகளாக அவன் காணப்படாமல் போனான். இயேசு கிறிஸ்துவும் பரலோகத்திற்குள்ளே எடுக்கப்பட்டு விட்டார். அவருடைய சகோதரர்களுக்குச் சொல்லப்பட்டதும் அவர் திரும்ப வரும்வரை அவர்கள் அவரைக் காணப்போவதில்லை என்பதுதான்.

15. யோசேப்பு உலகத்தாலும், மாம்சத்தாலும், பிசாசினாலும் சோதிக்கப்பட்டான். அதை எதிர்த்து நின்றான். இயேசு கிறிஸ்துவும் உலகத்தாலும், மாம்சத்தாலும், பிசாசினாலும் சோதிக்கப்பட்டும், வெற்றியைப் பெற்றார்.

16. யோசேப்பு அந்த நாட்களில் உலகத்தின் இரட்சகனானான். அதாவது பட்டினியால் மக்கள் சாகாமல் அவர்களைக் காப்பாற்றினான். இயேசு கிறிஸ்து எல்லா விதங்களிலேயும் உலகத்தின் இரட்சகராய் இருக்கிறார்.

17. யோசேப்பு சகோதரர்களால் பகைக்கப்பட்டான். எனவே இஸ்ரவேலர் அல்லாத புறஜாதியாரின் கையிலே ஒப்புக்கொடுக்கப்பட்டான். தனக்காக அவன் எதையுமே பேசமுடியாதவனாய் இருந்தான். அநியாயமாய் தண்டிக்கப்பட்டான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், யூத ஜனங்களாலும், சமயத் தலைவர்களாலும், புறஜாதியாரின் கையிலே ஒப்புக் கொடுக்கப்பட்டார். அவர் குற்றமற்றவராய் இருந்தார்.

18. இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாகக் கொண்டு வரப்பட்டக் குற்றச்சாட்டுகளை பிலாத்து விசுவாசிக்கவில்லை. அவரிலே ஒரு குற்றமும் நான் காணவில்லை என்றுதான் கூறினான். இருந்தாலும் அவரைக் காயப்படுத்தினான். யோசேப்பு குற்றமற்றவன் என்பதை போத்திபாரும் ஒருவேளை அறிந்திருந்தாலும், அவன் சிறையிலே ஒப்படைக்கப்பட்டான். பிலாத்து சமுதாயத்தின் முன்னாலே ஏற்றுக்கொள்ளப்பட்டவனாய் இருக்கவேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது போல போத்திபாரும் பார்வோனுக்கு முன்பாக தனது நிலையைக் காத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக அவ்வாறு செய்தான்.

19. சிறை அதிகாரியின் கண்களிலே யோசேப்புக்கு தயவு கிடைத்தது. இயேசு கிறிஸ்துவைப் பொறுத்த மட்டிலேயும் நூற்றுக்கதிபதி 'இவர் மெய்யாகவே தேவனுடைய குமாரன்' என்று அறிக்கை செய்தார்.

20. யோசேப்பு குற்றம் செய்தவர்களோடு எண்ணப்பட்டான். பானபாத்திரக் காரனுக்கு ஒரு

www.Radio882.com

ஆசீர்வாதமாக விளங்கினான். சுயம்பாகிகளின் தலைவனுக்கோ நியாயத்தீர்ப்பு வழங்கினான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், இரண்டு குற்றவாளிகளுக்கு நடுவாக சிலுவையிலே தொங்கினார். ஒருவன் நியாயம் தீர்க்கப்பட்டான். மற்றவன் ஆசீர்வதிக்கப்பட்டான்.

ஆதியாகமம் 40

அருமையான சகோதரனே, சகோதரியே நாம் பார்க்கபோகிற ஆதியாகமம் 40ஆம் அதிகாரத்திலே யோசேப்பு சிறையிலே இருந்தது ஏன் கர்த்தருடைய சித்தம் என்பதைக் குறித்து சிந்திக்கப் போகிறோம்.

ஆதியாகமம் 40 : 1 – 3

அங்கே எந்த ஒரு விபத்தும் நடக்கவில்லை. இவை எல்லாம் எதை வெளிப்படுத்துகிறது? அந்நாட்களிலே எகிப்தில் பார்வோன் தான் நினைத்த எதையும் செய்ய முடியும். இந்த சுயம்பாகிகளின் தலைவன் என்ன செய்தானோ, நமக்குத் தெரியவில்லை, காலை உணவு சற்று கருகிவிட்டதோ என்னவோ; அவன் மேலே கோபங்கொண்டு சிறையிலே போடுகிறான். பானபாத்திரக்காரனும் என்ன செய்தானோ, நமக்குத் தெரியவில்லை. ஒருவேளை கையிலே திராட்ச ரசத்தைக் கொண்டுவரும் பொழுது, கீழேக் கிடந்த ஏதாவது கயிற்றிலே தட்டி, கீழே விரிக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த விரிப்பிலே சிந்திவிட்டானோ, எதுவோ நமக்குத் தெரியவில்லை. ஆனால், முக்கியமான காரியம் என்னவென்றால், இவர்கள் இருவருமே யோசேப்பு இருந்த சிறைக்கு வந்து சேர்ந்தார்கள். யோசேப்பு அங்கே ஒரு உயர்ந்த ஸ்தானத்திலே இருக்கிறான். எங்கெங்கு அவன் சென்றானோ, அவனுடைய தாலந்து சீக்கிரமாக மற்றவர்களால் இனம் கண்டு கொள்ளப்பட்டது.

ஞாபகம் இருக்கிறதா? நீதிமொழிகள் 18ஆம் அதிகாரம் 16ஆம் வசனத்திலே

‘ஒருவன் கொடுக்கும் வெகுமதி அவனுக்கு வழியுண்டாக்கி, பெரியோர்களுக்கு முன்பாக அவனைக் கொண்டு போய்விடும்.‘

இது யோசேப்பைப் பொருத்தமட்டிலேயும் மிகவும் உண்மை. அவனுடைய வாழ்க்கையிலே ஒரு சிறப்பான திட்டத்தோடு, தேவன் அவனை வழிநடத்திச் செல்லுகிறார்.

ஆதியாகமம் 40 : 4

இவர்கள் இரண்டு பேருக்கும் யோசேப்பு பொறுப்பாய் இருந்தபடியினாலே அவர்களைக் குறித்து நன்றாக அவன் அறிந்து கொண்டான். அவர்கள் சிறையிலே இருந்தபொழுது அவர்களை கவனிக்க வேண்டிய பொறுப்பு யோசேப்பினிடத்தில் கொடுக்கப்பட்டிருந்தது.

ஆதியாகமம் 40 : 5, 6

பிரியமானவர்களே, கவனித்தீர்களா? யோசேப்பு மிகவும் ஞானமுள்ள புத்திக்

www.Radio882.com

கூர்மையுள்ள ஒரு மனிதன். இரண்டு பேருடைய முகத்தையும் பார்க்கிறான். இரண்டு பேரும் துக்கத்தோடு இருக்கிறார்கள்.

ஆதியாகமம் 40 : 7, 8

யோசேப்பு இவை எல்லாவற்றிலுமே தேவனுக்கே மகிமையை செலுத்துகிறான். வேதப் புத்தகத்தை நாம் பின்னாலே படிக்கும்பொழுது மற்றுமொரு யூத இளைஞன் இதைப் போல தேவனை அறியாத மக்கள் முன்னாலே சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியது என்று தேவனுக்கு மகிமையை செலுத்தவதைப் பார்க்கலாம்.

ஆம். அதுதான் தானியேல். இன்றைக்கு கிறிஸ்துவை அறிந்திருக்கிற ஒவ்வொருவரும் இதைத்தான் செய்யவேண்டும். நாம் கர்த்தருக்காக எதைச் செய்தாலும், அதினாலே தேவனுக்கே கனத்தையும் மகிமையையும் செலுத்த வேண்டும்.

அருமையானவர்களே, நீங்கள் உங்களுக்குக் கர்த்தர் கொடுத்த தாலந்தினாலோ, திறமையினாலோ, இவைகளில் எதைச் செய்தாலும் கூட தேவனுக்கே மகிமையைச் செலுத்துங்கள். இன்று நம்மிலே அநேகர் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்க வேண்டிய அளவு ஆசீர்வதிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம், நாம் அற்புதமான காரியங்களைப் பெற்றுக் கொள்ளும்பொழுது அதைக் குறித்து நாம் பெரிதாக எடுத்துக் கொள்ளுகிறதில்லை, தேவனுக்கு மகிமையை செலுத்துகிறதில்லை.

பிரியமானவர்களே, எல்லாக் காரியங்களிலேயும் கர்த்தருக்கே கனத்தையும் மகிமையையும் செலுத்த நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இங்கே யோசேப்பு சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்வது கர்த்தருக்குரியது என்று கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துகிறான்.

கவனியுங்கள், தேவனுக்குரிய மகிமையை ஒருபொழுதும் நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது.

ஆதியாகமம் 40 : 9 – 13

பழைய ஏற்பாட்டிலே தேவன் சொப்பனங்கள் மூலம் பேசியது நமக்கு சுவாரஸ்யமாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டிலே தேவன் அவ்வாறு செயல்படவில்லை. ஏனென்றால் வேத புத்தகம் எழுதப்பட்டுவிட்டது. இப்பொழுது சொப்பனங்கள் நமக்குத் தேவையில்லை. ஆனால், அந்நாட்களிலே தேவன் சொப்பனங்கள் வழியாகப் பேசினார். அடையாளங்கள் அர்த்தமுள்ளதாய் இருந்தன.

பானபாத்திரக்காரன் திராட்ச ரசத்தைப் பரிமாறுவதைக் குறித்துப் புரிந்து கொள்ளமுடியும். அதைத்தான் பார்வோனுக்காக அவன் செய்து கொண்டிருந்தான். பின்னாலே நாம் வேதத்தைக் கற்றுக் கொள்ளும்பொழுது நேபுகாத்நேச்சார் ஒரு சொப்பனம் கண்டான். அதை ஒரு சிலை வடிவத்திலே அவன் கண்டான். சிலையைக்

www.Radio882.com

குறித்து அவன் அறிந்து கொள்ளமுடியும். எனவே தேவன் அவ்வாறு அவனுக்கு அந்த சொப்பனத்தைக் கொடுத்தார். இங்கே நாம் வாசித்தது போல யோசேப்பு இந்த பானகாத்திரகாரனின் சொப்பனத்திற்கு அர்த்தத்தைச் சொல்லி, 'இன்னும் மூன்று நாளிலே மீண்டுமாக நீ முன்பு செய்து வந்த வேலைக்கு திரும்புவாய்' என்று கூறினான்.

ஆதியாகமம் 40 : 14

யோசேப்பு என்ன சொல்கிறான்? பானபாத்திரக்காரனே, இன்னும் மூன்று நாளைக்குள்ளே நீ விடுதலை பெற்றுவிடுவாய், ஆனால் எனக்காக யாரும் பார்வோனிடதிலே பேசும் வரை நான் இங்கே தான் இருக்க வேண்டியதிருக்கும். உன்னுடைய சொப்பனத்திற்கான அர்த்தத்தை நான் சொல்லிவிட்டேன். நீ என்னை மறந்துவிடாதே என்று சொல்லி அனுப்பினான்.

இப்பொழுது யோசேப்பு தனது வாழ்க்கையின் பின்னணியத்தை இந்த பானபாத்திரக்காரனுக்கு மெதுவாகச் சொல்கிறான்.

ஆதியாகமம் 40 : 15

வேதத்திலே அது கொடுக்கப்படாவிட்டாலும் இந்த பானபாத்திரக்காரன் நிச்சயமாக தான் பார்வோனிடத்திலே யோசேப்பிற்காகப் பேசுவேன் என்று சொல்லியிருக்க வேண்டும்.

நீங்களும் தவறுதலாக குற்றம் சாட்டப்பட்டு தண்டனையை அனுபவித்துக் கொண்டிருப்பீர்கள் என்றால் பொறுமையோடு காத்திருங்கள். தேவனே என்னுடைய வாழ்க்கையிலே நீர் வைத்திருக்கிற சித்தத்தை நிறைவேற்றும் என்று ஜெபித்துக் கொண்டிருங்கள் ஆண்டவரே இந்த சூழ்நிலையிலே நான் கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்களைக் கற்றுக்கொள்ள எனக்கு உதவி செய்யும் என்று கேளுங்கள்.

தேவனிடத்திலே அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

ஆதியாகமம் 40 : 16, 17

சுயம்பாகிகளின் தலைவனுக்கு வந்த சொப்பனம், ஒரு அடையாளமாக அதின் அர்த்தம் புரிந்து கொள்ளத்தக்க விதத்திலேயே வந்திருக்கிறது. கூடை நிறைய பலகாரங்கள் இருப்பது அவனுக்குத் தெரியும்.

ஆதியாகமம் 40 : 18, 19

யோசேப்பு இவனுடைய சொப்பனத்திற்கான அர்த்தத்தையும் கூறுகிறான். ஆனால் அது அவனுக்கு நன்மைக்கானது அல்ல. அவனுடைய வாழ்க்கையின் இறுதியைக் குறித்து அது சொல்கிறது என்பதை விவரித்தான். மூன்று நாளைக்குள்ளே அவன் தூக்கிலிடப்படுவான், ஆகாயத்துப் பறவைகள் அவன் சரீரத்தின் இறைச்சியைத் தின்னும் என்றும் கூறினான்.

www.Radio882.com

அருமையானவர்களே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே அடுத்ததாக அங்கு என்ன நடக்கிறது என்று பாருங்கள்.

ஆதியாகமம் 40 : 20 – 23

யோசேப்பு பாவம். இப்பொழுது அவனுக்கு எந்தவிதமான நம்பிக்கையும் இல்லாத ஒரு சூழ்நிலையாயிற்று. இங்கே அவன் அடிமையாக மட்டுமல்ல, தவறாக குற்றம் சாட்டப்பட்டவனாகவும் இருக்கிறான். அவன் சிறைச்சாலைக்குள்ளே இருப்பதினாலே அவன் குற்றவாளியாகவே கருதப்படுகிறான். போத்திபார் அவனை முற்றிலுமாக மறந்துவிடும்படியாக இங்கே சிறையிலே அவன் இருக்கிறான்.

யோசேப்பை வெளியே எங்கேயும் விட்டால் அவன் மனைவியைக் குறித்த உண்மையை மற்றவர்களிடத்திலே சொல்லிவிடுவான். எனவே, போத்திபாருடைய குடும்பத்தின் அசிங்கம் வெளிளே பரவக்கூடாது என்பதற்காக யோசேப்பு சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறான். போத்திபாரின் இந்த மூடுமந்திரத்திற்கு யோசேப்பு பாடுபட வேண்டியதிருக்கிறது.

யோசேப்புடைய ஒரே ஒரு எதிர்பார்ப்பு என்னவென்றால் இந்தப் பானபாத்திரக்காரன் தன்னைக் குறித்து பார்வோனிடத்திலே பேசுவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். பார்வோனின் காதுகளுக்குத் தன்னைக் குறித்து சொல்ல அது சிறந்த வழி என்று எண்ணினான். ஆனால் பானபாத்திரக்காரன் திரும்பவும் தன்னுடைய வேலையிலே ஜாக்கிரதையாய் இருந்ததினாலே யோசேப்பை மறந்துவிட்டான் பாவம் யோசேப்பு.

தேவனும் ஒரு நோக்கத்தோடுதான் தொடர்ந்து யோசேப்பு சிறைச்சாலையிலே இருக்கும்படியாக அவனை விட்டுவிட்டார். ஒருவேளை அந்த பானபாத்திரக்காரன் பார்வோனைப் பார்த்து: ஐயா, நான் சிறைச்சாலையிலே இருக்கும்போது ஒரு குற்றம் செய்யாத ஒருவனைப் பார்த்தேன். அவன் அங்கே இருக்கவே கூடாது. அவன் தவறாக குற்றம் சாட்டப்பட்டவன். எனக்கு வந்த சொப்பனத்தை சரியாக அர்த்தம் கூறினான். அவனை சிறையிலிருந்து நீங்கள் வெளியே அனுப்பிவிட்டால் உண்மையாகவே எனக்கு மிகுந்த சந்தோமாய் இருக்கும், என்று சொல்லியிருப்பான் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

பார்வோனும் யோசேப்பை சிறையிலிருந்து வெளியே விட்டிருப்பான். என்ன நடந்திருக்கும்? மீண்டுமாக யோசேப்பு பாடுபட்டு கானானுக்கு தன்னுடைய தகப்பன் வீட்டிற்கே போயிருப்பான். ஆனால், பார்வோனுடைய சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லவேண்டிய நேரம் வரும்பொழுது அவன் அங்கே இருந்திருக்க மாட்டான்.

தேவனுடைய சித்தம் என்ன? பார்வோனுக்கு யோசேப்பு அர்த்தம் சொல்ல வேண்டிய வேளைவரும் பொழுது, அவன் பார்வோனுக்கு அருகில் இருக்கவேண்டும். அதற்கு சிறந்த வழி அவன் சிறையிலே பத்திரமாக இருப்பதுதான். அப்பொழுதுதான் பார்வோனுக்கு அவன் தேவையாய் இருக்கும்பொழுது எந்தக் கஷ்டமும் இல்லாமல் அவனை அவன்

www.Radio882.com

கண்டுகொள்ள முடியும்.

அருமையானவர்களே, பானபாத்திரக்காரன் தன்னைக் குறித்து பார்வோனிடத்திலே பேசவில்லை என்பதை அறிந்து கொண்டபொழுது யோசேப்புக்கு மிகுந்த துக்கமாகத்தான் இருந்திருக்கும். ஆனாலும், தேவன் தன்னுடைய வாழ்க்கையிலே எப்படியோ செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை யோசேப்பு விசுவாசித்தான். விசுவாசத்திற்கான அறிகுறிகள் அவனுடைய வாழ்க்கையிலே காணப்பட்டன. யோசேப்புடைய வாழ்க்கையிலே மற்றவர்களோடு உள்ள உறவுகளிலே அவன் உண்மையுள்ளவனாக இருந்தான். போத்திபார் வீட்டிலே இருக்கும் பொழுதும் அவன் உண்மையுள்ளவனாய் இருந்தான். சிறைச்சாலையிலே இருக்கும்பொழுதும் சிறையின் அதிகாரிக்கு அவன் உண்மையுள்ளவனாக இருந்தான். தேவனுக்கு யோசேப்பு உண்மையுள்ளவனாய் இருந்தான். எப்பொழுதும் தேவனுக்கே கனத்தையும் மகிமையையும் செலுத்தினான்.

அதுமட்டுமல்ல, பின்னால் அவன் பார்வோனுக்கும் உண்மையுள்ளவனாய் இருக்கப் போகிறான். தன்னுடைய சொந்த சகோதரர்களுக்கும் உண்மையுள்ளவனாய் இருக்கப் போகிறான்.

அருமையான சகோதரனே, சகோதரியே கவனித்தீர்களா? யோசேப்புக்கு விசுவாசம் இருந்ததால் அவன் உண்மையுள்ளவனாய் செயல்பட்டான். இன்றைக்கும் உலகத்திலே அநேகர் உண்மையற்றவர்களாய் காணப்படுவதற்கு ஒரு முக்கியமான காரணம் அவர்களுடைய வாழ்க்கையிலே விசுவாசம் இல்லை. நீங்கள் ஆழமான விசுவாசமுள்ளவர்களாக இருந்தால், நீங்கள் தேவனுக்கும், மனிதருக்கும் உண்மையுள்ளவர்களாய் இருப்பீர்கள்.

நாம் வாழும் இந்த நாட்களிலே உள்ள பரிதாபமான சூழ்நிலை என்ன தெரியுமா? வெகு சில கிறிஸ்தவர்களே நம்பப்படத் தக்கவர்களாக, உண்மை உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். அநேக கிறிஸ்தவ ஸ்தாபனங்களிலே பணி செய்கிறவர்களும் இன்று உண்மை உள்ளவர்களாக இல்லை என்பது மிக துக்கமான ஒரு காரியமாய் இருக்கிறது. தங்கள் நிலைகளிலே இருக்கிறவர்களிலே மிகச் சிலரே உண்மை உள்ளவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்காக நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

ஒருவேளை உங்களுடைய வாழ்க்கையிலே நீங்கள் உண்மையற்றவர்களாய் இருப்பீர்களென்றால் நன்றாக சிந்தித்துப் பாருங்கள். அதற்கு ஒரு முக்கியமான காரணம் கர்த்தர் உங்களுக்காக எல்லாவற்றையும் செய்து முடிப்பார் என்ற விசுவாசம் இல்லாதபடியினாலேதான் குறுக்கு வழிகளையும் தவறான வழிகளையும் நீங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

யோசேப்பு தனது விசுவாசத்தினாலே ஒரு விசுவாசமுள்ள மனிதனாய், உண்மையுள்ள மனிதனாய் நடந்து கொண்டான். எனவே, தனது வாழ்க்கையைக் குறித்த

www.Radio882.com

ஒரு சரியான கண்ணோட்டமுடையவனாய், உயர்வான கண்ணோட்டமுடையவனாய் இருந்தான். பாடுகளின் மத்தியிலேயும், கஷ்டங்களின் மத்தியிலேயும் கூட யோசேப்பு முறுமுறுக்கவில்லை. அவனுடைய வாழ்க்கையிலே காணப்பட்ட விசுவாசமே அவன் மற்றவர்களோடு தயவோடு இரக்கத்தோடு நடந்து கொள்ளும்படியாகச் செய்தது.

அந்த பானபாத்திரக்காரனுக்கும் சுயம்பாகிக்கும் தயவுள்ளவனாய் காணப்பட்டான். பின்னால் நாம் பார்க்கும்பொழுது தனது சகோதரர்களிடத்திலேயும் அவன் எவ்வளவு தயவுள்ளவனாய் இருக்கிறான் என்பதை நாம் பார்க்க முடியும். அதுமட்டுமல்ல யோசேப்புடைய வாழ்க்கையிலே இருந்த விசுவாசமானது மிகவும் மனத்தாழ்மையுள்ள ஒரு மனிதனாக அவனை மாற்றியது. அவனுடைய எல்லா சாதனைகளுக்கும் அவன் கர்த்தருக்கே மகிமையை செலுத்தினான். எவ்வளவு அருமையான ஒரு மனிதன் பார்த்தீர்களா? அவனுடைய வாழ்க்கையின் சிறப்பு குணங்களுக்குக் காரணம் என்ன? அவன் தேவனை விசுவாசித்தான்.

யோசேப்பு முப்பாட்டனாகிய ஆபிரகாமைப் போல தேவனை விசுவாசித்தான். இந்தத் தாழ்மை விசுவாசமுள்ள வாழ்க்கை கொடுக்கும் கனிகளில் ஒன்று. சரி, இங்கே மறக்கப்பட்டவனாக யோசேப்பு சிறையிலே இருக்கிறான். ஆனால், ஒருவர் யோசேப்பை மறந்துபோகவில்லை. ஆம். தேவாதி தேவன் அவனை மறந்து போகவில்லை. அவனுடைய வாழ்க்கையிலே அவர் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார். அருமையான சகோதரனே, சகோதரியே இந்தப் பகுதி நமக்கு ஒரு உண்மைச் செய்தியைக் கொடுக்கிறது. நீங்கள் இருக்கும் சூழ்நிலை இப்பொழுது எப்படிப்பட்டதாய் இருக்கிறதோ, எனக்குத் தெரியாது.

எங்களுக்கு வரும் கடிதங்களைப் பார்க்கும் பொழுது உங்களிலே அநேகர் கடினமான சூழ்நிலைகளிலே இருக்கிறீர்கள் என்பதை அறிகிறோம். ஒரு பெண்மணி என்னுடைய கணவர் இப்படி, மாமியார் இப்படி, இப்படிப்பட்ட ஒரு நிலையிலே நான் இருக்கிறேன். எல்லாமே இருளாகக் காட்சியளிக்கிறது. எனக்கு இதிலிருந்து விடுதலையே கிடையாதா என்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். தேவன் என்னைக் குறித்து அக்கறை உள்ளவராய் இருக்கிறாரா என்ற கேள்விக்குறியோடு இருக்கிறேன் என்று எழுதியிருந்தார்கள்.

அருமையான சகோதரியே, இதற்காகத்தான் யோசேப்பின் சரித்திரத்தை நீங்கள் கற்றுக் கொள்ளும்படியாக ஆண்டவர் வைத்திருக்கிறார். கர்த்தாதி கர்த்தர் உங்களைக் குறித்து அக்கறை உள்ளவராய் இருக்கிறார். அதை உங்களுக்கு நினைவுப்படுத்தவே இன்று உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் கர்த்தருடைய பிள்ளையானால், உங்களுடைய நன்மைக்காகவே எல்லாக் காரியங்களும் நடைபெறும்படியாக அவர் அனுமதித்திருக்கிறார். அவர் நமக்குத்

தரும் தண்டனை எல்லாமே நம்முடைய நன்மைக்குத்தான். அதை நாம் இழந்து போகக்கூடாது. தேவன் அற்புதமானவர்.

ஆதியாகமம் : 41

இப்பொழுது நாம் ஆதியாகமம் 41ம் அதிகாரத்திற்குள்ளே கடந்து செல்கிறோம். கடந்த அதிகாரத்தை விட இது மிக வித்தியாசமான ஒரு அதிகாரம். கடந்த அதிகாரத்திலே யோசேப்பு மறக்கப்பட்டவனாக சிறைச்சாலையிலே வாழ்ந்து கொண்டிருந்தான். என்றாலும் தேவனுடைய திட்டத்தின்படியே அவனுடைய வாழ்க்கையின் நன்மைக்காகவே அத்தனையும் அவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இன்றைக்கும் நம்முடைய வாழ்க்கையிலே தேவனுடைய கரத்தை நாம் அறிந்து கொள்வோமென்றால் நம்முடைய வாழ்க்கையைக் குறித்த நம்முடைய கண்ணோட்டம் வித்தியாசமானதாக இருக்கும். இந்த அதிகாரத்திலே பார்வோனின் கனவுக்கு அர்த்தத்தைச் சொன்னபொழுது யோசேப்பு சிறையிலிருந்து விடுவிக்கப்படுகிறான். எகிப்து தேச முழுமைக்கும் அதிகாரியாக வைக்கப்படுகிறான். அதுமட்டுமல்ல ஆஸ்நாத் என்கிற ஓன் பட்டணத்து ஆசாரியனின் மகளை அவன் திருமணம் செய்கிறான். அவள் மூலமாக மனாசே, எப்பிராயீம் என்கிற பிள்ளைகளை அவன் பெற்றுக் கொள்கிறான்.

இதுதான் குப்பை மேட்டிலிருந்து குன்றுக்கு உயர்த்தப்படும் ஒரு அருமையான சம்பவம். யோசேப்பின் வாழ்க்கையைவிட மயிர் கூச்சரிக்கச்செய்யும் வேறு எந்த கதையையும் நான் வாசித்ததில்லை. எத்தனையோ முறை இந்த வசனங்களை வாசித்திருந்தாலும், ஒவ்வொரு முறை அதை வாசிக்கும் பொழுதும் நமக்கு முன் அது ஜீவனுள்ள ஒரு ஓவியமாய் இருக்கிறது.

இந்த அதிகாரத்திலே தேவனுடைய கரத்தை யோசேப்பின் வாழ்க்கையிலே நாம் பார்க்கிறோம். பாடுகளை அனுபவித்த காலங்களிலேயும் தேவனுடைய கரம் தன்னோடு இருந்ததை யோசேப்பு உணர்ந்தவனாகத்தான் இருந்தான். ஆவியின் அநேக கனிகள் அக்காலங்களிலே அவனுடைய வாழ்க்கையிலே விருத்தி அடைந்தன. அவைகளிலே ஒன்றுதான் நீடிய பொறுமை.

இந்த சத்தியத்தைக் குறித்து ரோமர் 5ஆம் அதிகாரம் 3ஆம் வசனத்திலே நாம் வாசிக்கிறோம்.

"அது மாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து," என்று பவுல் சொல்கிறார். இது யோசேப்பின் வாழ்க்கையைப் பொருத்தமட்டிலேயும் மிகவும் உண்மை. பார்வோனின் பிரசன்னத்திற்குள்ளே இந்த இளைஞன் அழைத்து வரப்படுகிறான். பார்வோனுக்கு தேவனைக் குறித்த அறிவு கிடையாது.

www.Radio882.com

வேதத்திலே நாம் பின்னாலே படிக்கும்பொழுதும் தேவனை அறியாத நேபுகாத்நேச்சார் முன்னாலே தானியேல் கொண்டுவரப்படுவதைப் பார்க்கலாம். இருவருமே சொப்பனத்திற்கு அர்த்தத்தைத் தெரிவித்தார்கள். ஆதியாகமம் 41வது அதிகாரத்தின் கடைசிப் பகுதியிலே, அங்கே ஏற்பட்ட பெரிய பஞ்சத்தைக் குறித்து வாசிக்கிறோம். இந்த பஞ்சத்தினாலே தேவன் என்ன காரியத்தைச் செய்யப் போகிறார்? இந்த பஞ்சத்தின் மூலமாகத்தான் யாக்கோபை கானானைவிட்டு வெளியேற்றி, கானானியர்களுடைய பாவங்களிலே தொடர்ந்து பிள்ளைகள் பழகிவிடாதபடி எகிப்திற்குக் கொண்டுவந்து, அவர்களுக்காக ஒரு பிரத்யேகமாக கோசேன் என்னும் நாட்டை தேவன் ஆயத்தப்படுத்துகிறார். இதுதான் அவருடைய திட்டங்களிலே ஒன்று.

தேவன் எதைச் செய்தாலும் இப்படிப்பட்ட ஒரு காரணத்திற்காக மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ, நோக்கங்களை மனதிலே கொண்டவராகத்தான், அவ்வாறு அவர் செயல்பட்டிருப்பார்.

இப்பொழுது 41வது அதிகாரத்திற்குள்ளே கடந்து செல்வோம். 40வது அதிகாரத்திலே பார்த்தது போல பார்வோன் பானபாத்திரக்காரனையும் சுயம்பாகிகளின் தலைவனையும் சிறையிலே போட்டுவைத்தான். அங்கேதான் அவர்களுக்கு யோசேப்போடு அறிமுகம் கிடைக்கிறது. அவர்களுக்கு வந்த சொப்பனங்களை சரியான முறையிலே அவன் அர்த்தப்படுத்திக் காண்பித்தான். சுயம்பாகி தூக்கிலிடப்பட்டான். பானபாத்திரக்காரனோ அவனது பழைய நிலைமைக்கு உயர்த்தப்பட்டான்.

யோசேப்பு அந்த பானபாத்திரக்காரன் தன்னைக் குறித்து பார்வோனிடத்திலே பேசவேண்டுமென்பதற்காக கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். ஆனால் அவ்வாறு அவன் செய்யவில்லை. இப்பொழுது தேவன் பார்வோனுக்கு ஒரு சொப்பனத்தைக் கொடுக்கிறார்.

ஆதியாகமம் 41 : 1

இரண்டு வரும் என்று சொல்லும்பொழுது பானபாத்திரக்காரன் சிறைச்சாலையை விட்டு வெளியே போய் இரண்டு வருங்கள் உருண்டோடிவிட்டன. இன்னும் தன்னை நினைவில் வைத்திருப்பான் என்ற நம்பிக்கை யோசேப்புக்குப் போய்விட்டது.

ஆதியாகமம் 41 : 2, 3

அங்கே அவன் பார்த்தது என்ன? செழிப்பாக உண்டு கொழுத்த ஏழு பசுக்களைப் பார்க்கிறான். மட்டுமல்ல, அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்களையும் பார்க்கிறான்.

ஆதியாகமம் 41 : 4

இந்த சொப்பனம் முடிந்தவுடனே பார்வோன் திடுக்கிட்டு விழித்துக் கொள்கிறான். உட்கார்ந்து யோசிக்கிறான். இது என்ன சொப்பனம்? அதற்கான அர்த்தம் அவனுக்குப்

www.Radio882.com

புரியவில்லை. அந்த நாளிலே அவனுக்கு உதவி செய்யக்கூடிய ஒருவரும் அவன் அருகிலே இல்லை. தொடர்ந்து என்ன நடக்கிறது பாருங்கள்.

ஆதியாகமம் 41 : 5 – 8

அங்கே பார்வோனின் அரண்மனையிலே எல்லா மந்திரவாதிகளும், ஞானிகளும் அழைக்கப்படுகிறார்கள். பார்வோன் தன் சொப்பனத்தைச் சொல்கிறான். அதற்கான சரியான அர்த்தத்தை யாராலுமே கூறமுடியவில்லை. இந்த நேரத்திலெல்லாம் இந்த பானபாத்திரக்காரன் அங்கேதான் நின்று எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். ஏனென்றால் எப்பொழுதுமே அவன் பார்வோனுக்கு அருகிலே நின்று பார்வோனுக்கு என்ன வேண்டுமோ, அதை உடனடியாக சாப்பிடுவதற்கோ குடிப்பதற்கோ கொடுக்கவேண்டும். இப்படி எத்தனை மணிநேரம் அவர்கள் சொப்பனத்திற்கு பதில் சொல்லமுடியாமல் நின்றார்களோ நமக்குத் தெரியாது. திடீரென்று பானபாத்திரக்காரன் விழித்துக் கொள்கிறான் என்றுதான் சொல்லவேண்டும்.

ஆதியாகமம் 41 : 9

அது குற்றம் என்று சொல்வதை விட பாவமென்று சொல்லாம். எல்லாமே தேவனுடைய திட்டப்படி நடைபெறுகிறது. யோசேப்பின் கடினமான அனுபவங்களைக் குறித்து அப்பொழுது புரிந்து கொள்ள முடியாது. ஆனாலும் தேவன் எல்லாவற்றையும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடும், திட்டத்தோடும் ஒரு குறிப்பிட்ட நேரம் வரை அனுமதித்துக் கொண்டு தான் இருப்பார்.

இப்பொழுது பானபாத்திரக்காரன் சொல்கிறான். ஐயையோ, மறந்தே போனேனே, நான் சிறையிலே சந்தித்த ஒரு மனிதனைக் குறித்து உம்மிடத்திலே பேசுவேன் என்று வாக்கு கொடுத்தேன். ஆனால் மறந்து போனேனே, ஐயா. பார்வோனே அவனுக்கு சொப்பனங்களுக்கான அர்த்தத்தை சொல்லத் தெரியும், என்று கூறுகிறான். தொடர்ந்து, பானபாத்திரக்காரன் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறான்.

ஆதியாகமம் 41 : 10 – 13

சரி, அங்கு என்ன நடைபெறுகிறது? பார்வோன் சொல்கிறான், சரி எல்லாரையும் நாம் முயற்சித்துப் பார்த்து விட்டோம். பானபாத்திரக்காரனாகிய உன்னுடைய சொப்பனத்திற்கு அவன் அர்த்தம் கூறினபடியினாலே அவனை அழைத்துக் கேட்டுப் பார்ப்போம். ஏனென்றால், என்னுடைய சொப்பனங்களும் ஏதோ மிக முக்கியமானது போல எனக்குத் தெரிகிறது.

ஆதியாகமம் 41 : 14

அருமையானவர்களே, அந்நாட்களிலே எபிரெயர்கள் யாருமே சவரம் செய்கிறதில்லை. ஆனால் இங்கே நாம் பார்க்கிறதென்ன? யோசேப்பு சவரம் செய்து

www.Radio882.com

கொண்டு அரசன் முன்னால் போக ஆயத்தம் ஆகிறான். நீங்கள் எகிப்தியர்களின் படங்களையும், எகிப்தியர்களின் சிலைகளையும் பார்த்தீர்களென்றால், யாருக்குமே தாடி இருக்காது. எல்லாருமே மிகவும் சுத்தமாக சவரம் செய்தவர்களாய் காணப்படுவார்கள்.

செய்தவர்கள் தங்களுடைய நிலையை தங்களுடைய ஸ்தானத்தை உயர்த்திக் காண்பிப்பதற்காக ஒட்டுத்தாடி வைத்துக் கொண்டார்கள். ஆனால், பொதுவாக எகிப்தியர்கள் எவருமே தாடி வளர்ப்பதில்லை. இதிலேயும் நமக்கு ஒரு பெரிய செய்தி அடங்கியிருக்கிறது. இந்த இளைஞனான யோசேப்பு சிறையிலிருந்து இப்பொழுது உயர்த்தப்படுகிறான். அவன் சவரம் செய்து கொண்டு சிறைச்சாலைக்குரிய உடைகளை எல்லாம் களைந்து போட்டு விட்டு அரசன் முன்னால் நிற்பதற்கான தகுதியான ஆடைகளை அணிந்து கொள்கிறான்.

இது எதைக் காட்டுகிறது? அவனுக்கு முன்னாலே இருக்கிற புதிய ஒரு வாழ்க்கையை காட்டுகிறது. அவன் உயிர்தெழுந்தது போன்ற ஒரு அனுபவத்தைக் காட்டுகிறது. இப்பொழுது அவன் தேவனை அறியாத அந்த புறஜாதியார் மத்தியிலே செல்கிறான். சற்றே சிந்தித்துப் பாருங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் எப்படி ஒரு புதிய வாழ்க்கையின் மூலமாக மனுகுலத்திற்குள்ளே வந்தாரோ, அதே போல யோசேப்பும் இங்கே வருகிறான்.

இந்த வேதபகுதி நமக்கு கற்றுக்கொடுக்கிற சத்தியம் என்ன? முதலாவதாக நாம் ஆண்டவருடைய பிள்ளைகளாய் இருக்கும்பொழுது நம்முடைய வாழ்க்கையிலே வரும் கஷ்டங்கள், துன்பங்கள், நெருக்கங்கள் எல்லாவற்றிற்கும் ஒரு அர்த்தம் இருக்கும்.

நம்முடைய வாழ்க்கையிலே தேவன் வைத்திருக்கிற திட்டத்தை நிறைவேற்றும் படிக்கட்டுகள் அவை என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இரண்டாவதாக நாம் பாடுகளின் மத்தியிலே, பிரச்சனைகளின் மத்தியிலே இருக்கும்பொழுதும் மற்றவர்கள் நமக்கு உதவி செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது தவறல்ல. ஆனால் மற்றவர்கள் உதவி செய்யவில்லை என்றவுடனேயே சோர்ந்து போய் அவர்களைக் குறை சொல்லவோ, அவர்களைப் பழிக்கவோ கூடாது.

யோசேப்புக்கு பானபாத்திரக்காரன் வாக்குக் கொடுத்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் அதைக்குறித்து அவன் எண்ணிப் பார்க்கவே இல்லை. ஒரு பொழுதாகிலும் அவன் திரும்ப வந்து அவனுக்கு நன்றி சொல்லக்கூட இல்லை.

மூன்றாவதாக தேவன் எல்லாவற்றையும் அதின் அதின் காலங்களிலே நேர்த்தியாய் செய்வார் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

வருடங்கள் உருண்டு ஓடினாலும், நெருக்கமான சூழ்நிலையிலே வைக்கப்பட்டிருந்தாலும் யோசேப்பு தனது பணிகளிலே உண்மை உள்ளவனாய் உத்தமனாய் வாழ்ந்து வந்தான். காரணம் என்ன? கர்த்தர் மேலே அவன் வைத்திருந்த விசுவாசம்.

ஆதியாகமம் 41 : 15

இப்பொழுது பானபாத்திரக்காரன் விளக்கமாகத்தான் பார்வோனுக்குச் சொல்லியிருக்கிறான். பார்வோனின் வார்த்தைகளுக்கு யோசேப்பு என்ன சொல்கிறான் பாருங்கள்?

ஆதியாகமம் 41 : 16

யோசேப்பின் எண்ணத்தின்படி தேவனே சகல மகிமையையும் பெற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவருமே நாம் செய்யும் எந்த சிறப்பான காரியங்களுக்கும் உரிய மகிமையை கர்த்தர் பெற்றுக் கொள்ளும்படியாகச் செய்வதிலே கவனமாயிருக்க வேண்டும். நாம் செய்யும் ஒரு காரியம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்குமென்றால் அதை தேவன் நம் மூலமாகச் செய்கிறார், அவ்வளவுதான். இதைக் குறித்த அறிவுள்ளவனாய் யோசேப்பு இருந்தான். எனவேதான் யோசேப்பு, நானல்ல தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச் செய்வார் என்று சொல்கிறான்.

எனக்கு சொப்பனத்திற்கான அர்த்தத்தைச் சொல்லத் தெரியாது. ஆனால் தேவனால் அதைச் செய்ய முடியும் என்கிறான். உடனடியாக பார்வோன் யோசேப்பினிடத்திலே தனது சொப்பனங்களைச் சொல்கிறான். உண்மையைச் சொல்லவேண்டுமென்றால் அது இரண்டு பகுதிகள் உள்ள ஒரே சொப்பனம்தான்.

ஆதியாகமம் 41 : 25

யோசேப்பும் அதை அறிந்து சொப்பனம் ஒன்றுதான், ஆனால் இரண்டுமுறை அந்த சொப்பனம் கொடுக்கப்பட்டதற்குக் காரணம், அது மிகவும் முக்கியமானது என்பதை தேவனே பார்வோனுக்குச் சொல்ல விரும்பினார், அவ்வளவுதான் என்று கூறுகிறான். அதுமட்டுமல்ல தேவன் பார்வோனுக்கு இந்த சொப்பனத்தைக் கொடுத்தற்கான காரணம் தேவன் தாம் செய்யப் போகிறதை பார்வோனுக்கு தெரியப்படுத்தியிருக்கிறார். இதுதான் இந்த சொப்பனங்களின் அர்த்தம் என்று அவன் கூற ஆரம்பிக்கிறான்.

ஆதியாகமம் 41 : 26 – 31

பிரியமானவர்களே, வரப்போகும் காரியத்தை தேவன் முன்னறிவிக்கிறார். ஏழு வரும் செழிப்பு வரப்போகிறது. அதைத் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் பஞ்சம் வரப்போகிறது.

ஆதியாகமம் 41 : 32

பஞ்சத்தை அனுப்பும்படியாக தேவன் தீர்மானித்துவிட்டார், இதைக் குறித்து பார்வோன் அறிந்து கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்று சொல்லிவிட்டு தொடர்ந்து பார்வோனுக்கு ஒரு ஆலோசனையையும் கொடுக்கிறான்.

ஆதியாகமம் 41 : 33 – 37

www.Radio882.com

யோசேப்பு பார்வோனுக்குச் சொன்ன ஆலோசனையை கவனித்தீர்களா? செழிப்பான வருடங்களிலே வரப்போகும் பஞ்ச காலத்திற்குரிய தானியத்தை சேர்த்து வைக்கவேண்டும் என்று யோசேப்பு சொல்கிறான்.

இந்த ஆலோசனை பார்வோனுக்கு மட்டுமல்ல, அங்கே நின்று கொண்டிருந்த எல்லா ஊழியக்காரர்களுக்கும் நல்ல ஒரு ஆலோசனையாகத் தெரிந்தது.

ஆதியாகமம் 41 : 38 – 41

இந்த சூழ்நிலையின் சிறப்பை கவனித்தீர்களா? ஆரம்பத்திலே இளைஞனான யோசேப்பு பின்னால் சிறைச்சாலையில் மறக்கப்பட்டவனாக, கைவிடப்பட்டவனாக, விட்டுவிடப்பட்டவனாக இருந்தான். இப்பொழுது சரியான ஒரு நேரத்திலே பார்வோனின் சொப்பனத்திற்கு யாரும் அர்த்தம் சொல்ல முடியாத அந்த சூழ்நிலையிலே அவன் அங்கே கொண்டு வரப்பட்டான். அவன் சொப்பனத்திற்கான அர்த்தத்தைச் சொன்னது மட்டுமல்ல. அவனுடைய உற்சாகத்தினாலே, யோசேப்பு தாலந்துகள் நிறைந்த ஒரு மனிதனாயிருந்தபடியினாலே, யாரும் எதுவும் கேட்காமலேயே பார்வோன் என்ன செய்யவேண்டும் என்பதற்கான அழகான ஆலோசனையையும் கொடுக்கிறான்.

தேவனாகிய கர்த்தரே அவனை அவ்வாறு வழிநடத்திச் சென்றார். உலகளவிலான ஒரு பஞ்சம் வரப்போகிறது. எகிப்து தேசமே அதனால் பாதிக்கப்படும் அளவிற்கு ஒரு கொடிய பஞ்சமாய் இருக்கப்போகிறது. ஏனென்றால், எகிப்து தேசம் மழையை நம்பியிருக்கும் ஒரு தேசமல்ல. அதற்கு அருமையான நைல் நதி உண்டு. ஆப்பிரிக்க கண்டத்தின் மத்திய பகுதியிலிருந்து எகிப்திற்குத் தேவையான தண்ணீரை அது கொண்டுவரும். செழிப்பான ஆண்டிலே கூட எகிப்திலே ஒரு அங்குலம்தான் மழை பெய்யும். மழையை பொருத்தமட்டிலேயும் எப்பொழுதுமே எகிப்திலே பஞ்சம்தான். ஆனால், நைல் நதி நிறைந்து வழிந்து ஓடியபடியினாலே அது தண்ணீரை மட்டுமல்ல, செழிப்பான மண்ணையும் கொண்டு வந்தது. என்றாலும் அங்கே வரப்போகிற கொடிய பஞ்சம் எகிப்தையும் பாதிக்கும் என்பதினாலே தேவன் அதை முன் கூட்டியே தெரியப்படுத்துகிறார்.

யோசேப்பு சொல்வதை கவனித்துக் கொண்டிருந்த பார்வோனுக்கு அவன் கூறிய காரியங்கள் அர்த்தம் நிறைந்தது என்பது புரிந்தது. ஆனால் இன்று அநேக அரசாங்கங்களிலே எதிர்காலத்தைக் குறித்து சிந்திக்க வேண்டிய அளவு சிந்திக்கக் கூடிய நபர்கள், தேவனுக்கு பயந்த மனிதர்கள் இல்லை. இந்நாடுகளிலே அநேக அரசாங்கங்கள் அவசர உதவிதான் மக்களுக்கு செய்யமுடிகிறதே ஒழிய முறையாக மக்களின் முன்னேற்றத்திற்காகச் செயல்பட முடியவில்லை.

மேலைநாடு ஒன்றிலே அரசாங்கத்திலே இருந்த உயர் அதிகாரியான கிளாட்ஸ்டன் என்பவரைப் பார்த்து சிறந்த ஒரு மனிதனுக்கான அளவுகோல் எது? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா. அடுத்த 50 ஆண்டுகளாக தேவன் எப்படி

www.Radio882.com

செயல்படப்போகிறார் என்பதை அறிந்திருக்கிற மனிதனே சிறந்தவன் என்று கூறினார்.

ஆதியாகமப் புத்தகத்திலே அடுத்த பதினான்கு ஆண்டுகள் என்ன நடைபெறப் போகிறது என்பதை தேவன் பார்வோனுக்கு வெளிப்படுத்தினார். இப்படிப்பட்ட தலைவர்கள் இன்றும் நம்முடைய தேசத்திற்கும், உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்திற்கும் தேவை. பிரியானவர்களே, நம்முடைய தேசத் தலைவர்களுக்காக நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் கர்த்தரை நோக்கி ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் தேவனுடைய சித்தத்தையும் தேவனுடைய நோக்கங்களையும் அறிந்து கொள்ளும் மனமுடையவர்களாய் வாழவேண்டும்.

சரி, இப்பொழுது இவ்வளவு பொறுப்புகளையும் யோசேப்பைத் தவிர வேறு யார் எடுத்துச் செய்யமுடியும்? அவனுடைய வார்த்தைகளைக் கேட்ட பார்வோன் உடனடியாக யோசேப்பின் திறமைகளைப் புரிந்து கொள்கிறான். எப்படி தேவன் யோசேப்புக்கு போத்திபாரின் வீட்டிலே பயிற்சி கொடுத்தார், கவனித்தீர்களா? பல வேளைகளிலே அவன் வீட்டிற்குள்ளே ஏன் போயிருக்க வேண்டும் என்று கூட நாம் சிந்தித்தோம். போத்திபாரின் வீட்டிலே அவன் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பயிற்சி இருந்தது. எல்லாம் தனக்கு சொந்தமாயிருக்கும் வேளையிலேயும் அவன் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டியதிருந்தது.

இப்பொழுது ஒரு வீடு மட்டுமல்ல, ஒரு தேசம் முழுவதும் அவனுடைய கரங்களின் கீழே வருகிறது. அவனுடைய வாழ்க்கையிலே எத்தனை அற்புதமான ஒரு மாற்றம் இல்லையா?. சிறையின் பின்னாலே கிடந்தவன் பார்வோனின் அரியணைக்கு பக்கத்து அரியணைக்கு வந்துவிட்டான்.

உங்களையும் கர்த்தர் உயர்த்தும் முன்பாக, மேன்மையான காரியங்களை உங்களுக்குக் கொடுக்கும் முன்பாக, தாழ்வான இடங்களை நீங்கள் கடந்து வரும்படியாகச் செய்வார். அப்படிப்பட்ட எல்லா இடங்களிலேயும் நீங்கள் உண்மை உள்ளவர்களாய் இருக்கும்பொழுதுதான் தேவன் உங்களை நம்பி பெரிய காரியங்களைக் கொடுக்க முடியும்.

ஆதியாகமம் 41: 42

அவன் தரித்துக்கொண்டிருந்த அந்த மோதிரத்திலே ஒரு முத்திரை இருந்தது. அதை இளகி இருக்கும் ஒரு அரக்கிலே அழுத்தும்பொழுது அது பார்வோனின் கையெழுத்தாகவேப் பதிகிறது. பார்வோன் யோசேப்பை தன்னுடைய பிரதிநிதியாக்குகிறான். அவனே அரசனின் கையெழுத்தை சரியாக பயன்படுத்தக் கூடியவன் என்பதை அறிந்து செயல்படுகிறான்.

ஆதியாகமம் 41: 43 - 45

www.Radio882.com

அருமையானவர்களே, யோசேப்பு என்ற பெயர் சொல்வதற்கு நமக்கு நன்றாக இருக்கிறது. ஆனால், பார்வோன் யோசேப்புக்கு சாப்நாத்பன்னேயா என்கிற பெயரைக் கொடுத்தான். சாப்நாத்பன்னேயா என்ற பெயரின் பொருள் என்னவென்றால், மறைவான காரியங்களை வெளிப்படுத்துகிறவன் என்பதாகும்.

ஆதியாகமம் 41 : 46

இங்கே யோசேப்பின் வயது 30 என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவேதான் யோசேப்பு 13 ஆண்டு காலமாக எகிப்திலே இருந்திருக்கிறான் என்பது தெரியவருகிறது. இந்த காலங்களிலே பானபாத்திரக்காரனுக்கு சொப்பனத்தை வெளிப்படுத்திய பின்னர் இரண்டு ஆண்டுகள் சிறையிலே இருந்திருக்கிறான் என்பது தெரியவருகிறது. அந்த நிகழ்ச்சிக்கும் ஓராண்டுக்கு முன்னதாகவே அவன் சிறைக்கு வந்திருப்பான் என்று நாம் தெரிந்து கொள்ளலாம். எனவே போத்திபாரினுடைய வீட்டிலே சுமார் 10 ஆண்டுகள் யோசேப்பு வேலை செய்திருக்கிறான். இவற்றின் மூலமாக எகிப்திலே அவன் எங்கே வாழ்ந்தான் என்பதை ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது.

இந்த 13 ஆண்டுகளுக்கு பின்னர் இப்பொழுது அவன் எகிப்து தேசத்தின் பிரதம மந்திரியாக இருக்கிறான். பார்வோனுக்கு அடுத்தபடியாக அவன் இருக்கிறான். இவ்வாறு பார்வோன் அவனை ஏற்றுக் கொள்வதற்குக் காரணம் என்ன? முக்கியமாக இதற்கான விடை என்னவென்றால் கர்த்தர் யோசேப்போடே இருந்தார். இதை எல்லாக் காலக் கட்டங்களிலேயும் நாம் பார்க்கிறோம். தேவனுடைய கரமே எப்பொழுதும் அவனோடு இருந்திருக்கிறது. யோசேப்பை வழிநடத்தியிருக்கிறது.

யோசேப்பு தன்னைக் குறித்து சொல்லும்பொழுது, சகோதரர்களாகிய நீங்கள் தீமையான எண்ணத்தோடு செய்தீர்கள். ஆனால், தேவன் அதை நன்மையாக மாற்றினார் என்று சொல்கிறான். இதை அறிந்து கொள்வது அற்புதமானதாயிருக்கிறது. பார்வோன் யோசேப்பை ஏற்றுக் கொண்டதற்கு மற்றும் ஒரு காரணமும் இருக்கலாம். அநேக அறிஞர்களின் கூற்றுப்படி அந்த நாட்களிலே வாழ்ந்த பார்வோன் எகிப்து தேசத்தான் அல்ல, அரபு தேசத்து பாலைவனத்திலிருந்து வந்த வம்சத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் நாடோடிகளாய் சுற்றித் திரிந்தவர்கள். ஒரு குறிப்பிட்ட காலத்திலே அவர்கள் எகிப்து தேசத்திற்குள்ளே வந்து அரியணையைப் பிடித்தார்கள்.

இது உண்மையாக இருக்குமென்றால், அன்று பார்வோனாய் இருந்தவன் எகிப்தியர்களைவிட யோசேப்புக்கு மிக நெருக்கமானவனாய் காணப்படுகிறான். இது யோசேப்பின் மேலே அவனுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுக்கிறது. இந்த அரசு வம்சத்தினர் எகிப்து மக்களிடையே உண்மையும் உத்தமமுமான மனிதர்களைக் கண்டுபிடிப்பது கஷ்டமானதாய் இருந்தது.

ஆம், யோசேப்பின் குணநலனிலே சிறந்தது, அவன் உண்மையுள்ளவன். தேவன்

www.Radio882.com

தமது வாழ்க்கையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார், என்ற விசுவாசமானது யாரோடு இணைக்கப்பட்டபொழுதும் அவர்களுக்கு அவன் உண்மையுள்ளவனாய் இருக்கச் செய்தது. அவன் தனது பணியிலே உண்மையுள்ளவனாய் இருந்தான்; ஏனென்றால், தேவன் அதில் இருக்கிறார் என்பதை அவன் அறிந்திருந்தான். எனவே பார்வோனும் யோசேப்பைப் போல ஒரு நாடோடி வம்சத்திலே வந்தபடியினாலே யோசேப்பை அரியணையிலே தனக்கடுத்தவனாக எளிதாக ஏற்றுக் கொள்ள முடிந்தது என்று சொல்லப்படுகிறது.

ஆனால், பின்னான காலங்களிலே இந்த அரச வம்சத்தினர் எகிப்திலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டார்கள். எனவேதான், யாத்திராகமம் முதலாம் அதிகாரம் 8ஆம் வசனத்திலே, 'யோசேப்பை அறியாத புதிய ராஜன் ஒருவன் எகிப்தில் தோன்றினான்'என்று வாசிக்கிறோம்.

இஸ்ரவேல் மக்களான எபிரெயர்களை ஒடுக்கி ஆண்ட பார்வோன் எபிரெயர்களைக் குறித்த எந்த அறிவும், உணர்வும் அற்றவனாகத்தான் இருந்திருக்க வேண்டும். யோசேப்பின் கழுத்திலே ஒரு சரப்பணியை பார்வோன் தரிப்பிக்கிறான். இது பார்வோனுடைய அதிகாரத்தை அவனுக்குக் கொடுக்கிறதாய் இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஓன் பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்தை அவனுக்கு மனைவியாகக் கொடுக்கிறான்.

ஆஸ்நாத் என்றாலே எகிப்திய கடவுளான நைப் என்பவருக்கு அர்ப்பணிக்கப்பட்டவள் என்று பொருள். மெய்தேவனை அறியாத மக்கள் மத்தியிலிருந்துதான் அவள் வந்தாள். இந்த காரியமும் இயேசு கிறிஸ்துவோடு யோசேப்பை ஒப்பிடும் ஒரு குறிப்பாய் இருக்கிறது.

யோசேப்பு புறஜாதியான ஒரு மனையாட்டியைக் கொண்டவனாய் இருந்தான். இயேசு கிறிஸ்துவும் தனக்குரிய மணவாட்டியாகிய திருச்சபையை புறஜாதியான மக்களிடையேதான் எடுத்துக் கொள்கிறார். மட்டுமல்ல, யோசேப்பு பார்வோன் முன்னாலே நிற்கும்பொழுதும் 30 வயதாய் இருந்தான். இயேசு கிறிஸ்துவும் தனது பணிப்பொறுப்பை எடுக்கும்பொழுது 30 வயது உள்ளவராய் இருந்தார்.

செழிப்பான அடுத்த 7 ஆண்டுகளிலே விளைச்சலையெல்லாம் சேகரிக்கிறான்.

ஆதியாகமம் 41: 47, 48

இப்பொழுது எளிதாக வினியோகம் பண்ணதக்கதாக அந்தந்த பட்டணங்களிலே சேமிப்பு கிடங்குகளை ஏற்படுத்தி சேமிக்கிறான்.

ஆதியாகமம் 41: 49

யோசேப்பின் தலைமைத்துவத்தின் கீழ் உலகத்திற்கே உரிய உணவு அங்கே சேகரித்து வைக்கப்படுகிறது.

www.Radio882.com

ஆதியாகமம் 41 : 50 – 52

பஞ்சகாலம் வரும் முன்னதாகவே இரண்டு குமாரர்களும் பிறந்துவிட்டார்கள். மனாசே என்றால் 'மறந்துவிடுவது,' அதாவது தனது வருத்தத்தை அவன் மறந்தான். ஏனென்றால் இங்கே முக்கியமான பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான்.

இந்த அதிகாரத்தின் முதற்பகுதியிலே யோசேப்பு சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு, உடையை மாற்றி, சவரம் செய்து பார்வோனின் முன்னாலே நிற்கிறான். சவரம் பண்ணியது முக்கியமான ஒன்று அல்ல என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், எபிரெயர்கள் எல்லாருமே தாடி வைத்திருப்பார்கள். யோசேப்பு சவரம் செய்து புதிய உடையணிந்தது, அவன் உயிர்த்தெழுந்ததைப் போன்று இருக்கிறது. ஏனென்றால், யோசேப்பு அவனுடைய பழைய வாழ்க்கையை களைந்து புதிய வாழ்க்கைக்குள்ளே வந்திருக்கிறான்.

இப்பொழுது எகிப்தியனைப் போல உடை அணிகிறான். எகிப்தியனைப் போலப் பேசுகிறான். எகிப்தியனைப் போல வாழுகிறான். எனவேதான் அவன், பழைய காரியங்களை மறக்கும்படியாக தேவன் செய்தார் என்று சொல்கிறான். எபிரெய மொழியிலே புதுஜளவிஷ்ழி என்று சொல்லலாம்.

இரண்டாவது பையனுடைய பெயர் எப்பிராயீம். அப்படியென்றால், தேவன் என்னைப் பலுகப் பண்ணினார் என்று பொருள். இந்த பெயர்களை ஏன் கொடுத்தான் என்றால் தகப்பன் வீட்டையும், தனது துக்கத்தையும் தேவன் மறக்கும்படியாகச் செய்து இங்கே அவனைப் பலுகிப் பெருகப் பண்ணினபடியினாலே அவ்வாறு பெயரிட்டான்.

அருமையான சகோதரனே,சகோதரியே, யோசேப்போடு இருந்த கர்த்தர் யோசேப்பினுடைய வாழ்க்கையிலே அவனை உயர்த்தியதைக் கவனித்தீர்களா? உங்களையும் ஆண்டவர் வைத்திருக்கிற இடத்திலே பாடுகளின் மத்தியிலே பொறுமையோடு இருங்கள், உண்மையோடு இருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக தேவன் மேலே விசுவாசம் உள்ளவர்களாய் இருங்கள். அப்பொழுது உங்களுடைய வாழ்க்கையிலேயும் தேவன் வைத்திருக்கிற திட்டத்தை அவர் நிறைவேற்றி உங்களையும் கனம் பண்ணுவார். அவருடைய நாமத்தையும் உங்கள் மூலமாய் மகிமைப்படுத்துவார்.

ஆதியாகமம் 41 : 53

தேவன் பார்வோனுக்கு சொப்பனத்தில் வெளிப்படுத்தின அந்த செழிப்பான ஏழு வருடங்கள் முடிவடைந்து விட்டது. இப்பொழுது யோசேப்புக்கு 37 வயது. அவனுடைய வயதை நாம் மனதிலே வைத்துக் கொள்ளவேண்டும்.

ஆதியாகமம் 41 : 54, 55

இப்பொழுது பார்வோனிடத்திலே கூட கொடுப்பதற்கு ஒன்றுமில்லை.

யோசேப்பினிடத்திலே மக்களுக்கு தேவையான உணவு இருக்கிறது. பஞ்ச காலத்திலே ஜீவனை காக்கும் உணவு. யோசேப்பை இயேசுவோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இயேசு கிறிஸ்து நானே ஜீவ அப்பம் என்று சொன்னார்.

ஆதியாகமம் 41 : 56, 57

கவனித்தீர்களா? பஞ்சமானது எகிப்திலே மட்டுமல்ல உலகமெங்கிலும் உண்டான ஒரு பஞ்சம். எனவே பல தேசங்களிலிருந்து எகிப்திற்கு மக்கள் உணவு தானியம் கொள்ள வருகிறார்கள். தொடர்ந்து அதிகாரம் : 42 பார்க்கப் போகிறோம். ஒரு நாடகம் போல ஒன்றன் பின் ஒன்றாக அநேக நிகழ்ச்சிகள் யோசேப்பின் வாழ்க்கையிலே நடைபெற இருக்கிறது. இஸ்ரவேல் மக்களை பஞ்ச காலத்திலே காக்கும்படியாகவும் கானானியர்களின் சூழ்நிலையிலிருந்து விலக்கிக் காக்கும்படியாகவும் யாக்கோபின் குடும்பத்தை தேவன் எகிப்திற்கு கொண்டு வரும் காட்சியானது இங்கே வெளிப்படையாகத் தெரிகிறது. யோசேப்பு சிறையிலே அடைப்பட்டு கிடந்த பொழுது இந்த காரியங்களையெல்லாம் அவனுடைய கண்களால் பார்க்க முடியவில்லை. ஆனால் தேவன் ஏதோ நன்மைக்காக இதையெல்லாம் அனுமதிக்கிறார் என்பதை மட்டும் யோசேப்பு விசுவாசித்துக் காத்திருந்தான்.

அவன் தனது வாழ்க்கையிலே ஒரு விசுவாசத்தின் மகனாய் இருந்தபடியினாலே உற்சாகம் நிறைந்தவனாகவும் எதையுமே சாதிக்க முடியும் என்று எண்ணுகிறவனாயும் இருந்தான்.

நம்முடைய வாழ்க்கையிலேயும் விசுவாசம் இருக்குமென்றால் உற்சாகம் இருக்கும். விசுவாசம் இருக்குமென்றால் எதையுமே நாம் செய்யமுடியும் என்ற உறுதியும் நமக்கு இருக்கும். எந்த மழையோ மேகமோ நம்மை தடைசெய்ய முடியாது. இன்று நம்மிலே அநேகர் சின்ன சின்னக் காரியங்கள் வந்தாலும் திட்டமிடுகிற காரியங்களிலே பின்வாங்கிப் போய் விடுகிறோம்.

இப்பொழுது யோசேப்பு ஒரு முக்கியமான நிலையிலே இருக்கிறான். இப்பொழுது என்ன நடக்கப்போகிறது என்பதை ஒருவேளை நீங்கள் யூகித்திருப்பீர்கள். உங்களிலே சிலருக்கு ஏற்கனவே அது தெரியும். பஞ்சகாலமானது உலகெங்கும் பரவிவிட்டது. உலகத்தின் பல பகுதிகளிலிருந்து மக்கள் எகிப்துக்கு வருகிறார்கள். பஞ்சமானது யாக்கோபையும் தனது பத்து குமாரர்களையும் உணவு வாங்குவதற்காக எகிப்திற்கு அனுப்பச் செய்கிறது.

ஏன்? பத்துக் குமாரர்கள் மட்டும் ஏன்? பென்யமீனை அவன் அனுப்பவில்லை. பென்யமீனையும் அவன் இழந்துபோக விரும்பவில்லை. பென்யமீனை இழந்து போனால் யாக்கோபும் மரித்துப் போவான். அதுதான் நிலைமை. இப்படி யோசேப்பின் சகோதரர்கள் எகிப்திற்கு வந்தபொழுது யோசேப்பு அவர்களை இனம் கண்டுகொள்கிறான். ஆனால், அவர்கள் யோசேப்பை இனம் கண்டுகொள்ளவில்லை. ஏன்? அதற்குப் பல காரணங்கள்

www.Radio882.com

இருக்கின்றன.

முதலாவதாக யோசேப்பு மரித்துப் போனான் என்றுதான் அவர்கள் நினைத்திருந்தார்கள். அவனை அவர்களுடைய கண்கள் தேடவேயில்லை. அவனை மீண்டுமாக சந்திக்க வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கவும் இல்லை. ஆனால், யோசேப்போ அவர்களை சந்திப்பேன் என்று எதிர்பார்த்திருந்தான்.

அதுமட்டுமல்ல அநேக வருடங்கள் உருண்டோடிவிட்டன. யோசேப்பு விற்கப்பட்டபோது, பதினேழு வயதுடையவனாய் இருந்தான். இப்பொழுது பஞ்சம் ஆரம்பித்து விட்டது. சொல்லப்போனால் ஓராண்டிற்குப் பிறகு அவர்கள் வருகிறார்கள். எனவே 21 வருடங்களாக யோசேப்பை அவர்கள் பார்க்கவில்லை. கிட்டத்தட்ட 40 வயதிற்கு நெருங்கிவிட்டான். யோசேப்பு எகிப்தியனைப் போல உடையணிந்திருக்கிறான். எகிப்தியர்களின் மொழியிலே அவன் பேசுகிறான். எகிப்தியனைப் போலவே நடந்து கொள்கிறான்.

ஆதியாகமம் 42

ஆதியாகமம் 42 : 1

பஞ்சம் அதிகமாகிக் கொண்டு போகிறது; உண்ண உணவு குறைந்து கொண்டு போகிறது; எங்கே போக, என்ன செய்ய என்று தெரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆதியாகமம் 42 : 2

அருமையானவர்களே, இது யாக்கோபின் விசுவாசத்தை நமக்குக் காட்டுகிறது. இன்று அநேகர் விசுவாசம் என்றாலே எங்களுக்குப் புரியாததாக இருக்கிறது. எப்படி விசுவாசிக்க என்று எங்களுக்குத் தெரியவில்லை என்று சொல்வார்கள்.

ஒருமுறை ஊழியர் ஒருவர் விசுவாசிக்க மனதில்லாத ஒரு மனிதனிடத்திலே பேசும்பொழுது அவனுடைய வாக்குவாதம் என்ன தெரியுமா? நான் எப்படி விசுவாசிக்க வேண்டும் என்று கேட்டான். இங்கே கவனியுங்கள், யாக்கோபு எப்படி விசுவாசித்தான்? ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் குறித்துக் கேள்விப்படுகிறான். அதாவது எகிப்திலே தானியம் உண்டு என்று கேள்விப்படுகிறான். அதை அவன் விசுவாசித்தான். அந்த உணவு அவர்களுக்கு ஜீவனைக் காக்கும் என்று விசுவாசித்தான். அந்த விசுவாசத்தின் அடிப்படையிலே செயல்பட ஆரம்பித்தான்.

அங்கே போய் நமக்காக தானியம் கொள்ளுங்கள் என்று தனது குமாரர்களிடத்திலே சொன்னான். இதுதான் இரட்சிக்கும் விசுவாசம் என்பது. நான் எப்படி இயேசுவினிடத்திலே விசுவாசம் வைப்பது என்று சிலர் கேட்பார்கள். சற்றே கற்பனை செய்து பாருங்கள், யாக்கோபு தனது பத்துக் குமாரர்கள் முன்னாலும் நின்று, எகிப்திலே தானியம் உண்டு என்று கேள்விப்படுகிறேன். ஆனால் அதை எப்படி விசுவாசிப்பது என்று அவன்

www.Radio882.com

கேட்கவில்லை. விசுவாசிப்பது என்றால் அதைக் குறித்து செயல்படுவதுதான்.

வேதம் என்ன சொல்கிறது? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி; அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். நீங்கள் ஒரு குறிப்பிட்டக் காரியத்தைக் கேட்கிறீர்கள். அதை விசுவாசிக்கிறீர்கள். இதைத்தான் வயதான யாக்கோபு செய்தான். அவ்வாறுதான் அவன் தானியத்தைப் பெற்று தன் குடும்பத்தின் ஜீவனைக் காத்தான். இதைப் போலத்தான் நானும் நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதினாலே நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறோம்.

ஆதியாகமம் 42 : 3, 4

மோசம் வந்தால் என்ன ஆகும்? இந்தப் பத்துக் குமாரர்களும் பெரியவர்கள். அதுமட்டுமல்ல, பென்யமீனுக்கு மோசம் வந்தால் யாக்கோபால் அதைத் தாங்க முடியாது. ஏனென்றால், பென்யமீனும் யோசேப்பும் தான் யாக்கோபு அதிகமாக நேசித்த அவனுடைய மனைவியாகிய ராகேலின் பிள்ளைகள். எனவே, பென்யமீனைத் தன்னோடு வைத்துக் கொண்டு, மற்ற பத்துக் குமாரர்களையும் அனுப்புகிறான்.

ஆதியாகமம் 42 : 5

இப்பொழுது ஒரு அற்புதமான நாடகத்தின் முதல் காட்சியைப் பார்க்கப் போகிறோம்.

ஆதியாகமம் 42 : 6

யோசேப்பு அவர்கள் எல்லாரையும் கவனித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவர்கள் இங்கே வந்துதான் ஆகவேண்டும் என்பதை அவன் அறிந்திருந்தான். உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கூட்டம் கூட்டமாய் மக்கள் தானியம் வாங்க வந்து கொண்டிருந்தார்கள். ஏனென்றால், பஞ்சம் உலகெங்கிலும் இருந்தது. எனவே அவ்வாறு அவன் கவனித்துக் கொண்டிருந்தபொழுது அந்த பத்து மனிதர்களும் வருகிறார்கள். யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்புக்கு முன்பாக வந்து தரையிலே விழுந்து அவனை வணங்கினார்கள்.

அவன் எப்படி உணர்ந்திருப்பான்? இந்த காட்சியைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? யோசேப்புடைய சொப்பனம் அப்படியே வார்த்தைக்கு வார்த்தை உண்மையாகிறது. அவன் சிறுவனாய் இருக்கும்போது அவனுடைய அரிக்கட்டு நின்றுகொண்டிருக்க மற்றவர்களுடைய அரிக்கட்டு விழுந்து வணங்கியதை அவன் கனவிலே கண்டான்.

இப்பொழுது அது அங்கே நடைபெறுகிறது. அவனுடைய மூத்த சகோதரர்கள் முகங்குப்புற விழுந்து அவனை வணங்குகிறார்கள்.

ஆதியாகமம் 42 : 7, 8

யோசேப்பு ஏன் இவ்வளவு கடுமையாய் அவர்களோடு நடந்து கொள்கிறான், என்று

தெரியுமா? அவன் அவர்களை சோதிக்கிறான். ஆரம்பம் முதல் முடிவு வரை அவர்களை சோதிக்கப் போகிறான். அவர்கள் மனதைத் துளைக்கும் சில கேள்விகளை அவன் கேட்கப் போகிறான்.

ஆதியாகமம் 42 : 9 – 11

யோசேப்பு சோதனையின் மேலே சோதனையை அவர்களுக்கு வைக்கிறான்.

ஆதியாகமம் 42 : 12, 13

யோசேப்பு தன்னை யாரென்று சொல்லாமலேயே, தன்னுடைய குடும்பத்தைக் குறித்து எவ்வளவு உண்மைகளை அறிந்து கொள்ள முடியுமோ, அவ்வளவு உண்மைகளை அறிந்து கொள்ள முயற்சிக்கிறான். அவர்கள் வேவு பார்க்க வந்தார்கள் என்று குற்றம் சாட்டுகிறான். அவர்கள் அங்கே பத்து பேர்தான் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அறிக்கை செய்வதென்ன? தாங்கள் பன்னிரெண்டு சகோதரர்கள் என்றும் ஒருவன் தகப்பனாரோடு வீட்டிலே இருக்கிறான் என்றும், ஒருவன் காணாமல் போனான் என்றும் சொல்கிறார்கள்.

ஏனென்றால், அவன் உயிரோடேவே இல்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அந்த யோசேப்பே அவர்களுக்கு முன்னாலேயே நின்று கொண்டிருக்கிறான். மூன்றாவது முறையாக மீண்டுமாக அவர்களை நீங்கள் வேவுக்காரர்கள்தான் என்று சொல்கிறான்.

ஆதியாகமம் 42 : 14 – 16

தனது இளைய சகோதரனோடு கூட தொடர்பு கொள்ள முயற்சிக்கிறான். உண்மையாகவே இந்த சகோதரர்கள் எல்லாரும் ஒரே தகப்பனின் குமாரர்கள்தான். இருந்தாலும், பென்யமீன்தான் அவனுடைய தாய்க்கு அவனோடு பிறந்தவன். எனவே அவனைப் பார்க்க மிகவும் வாஞ்சிக்கிறான். அவன் தம்பியைப் பார்ப்பதற்காக அவன் செய்த திட்டம்தான் இது.

ஆதியாகமம் 42 : 17

யோசேப்பு சொன்ன ஆலோசனையை எடுத்துக் கொண்டு எந்த ஒரு சகோதரனும் தகப்பனிடத்திலே போய் பென்யமீனை கூட்டிக்கொண்டு வரத் துணியவில்லை. தகப்பனார் பென்யமீனை தன்னோடு அனுப்ப மாட்டார் என்பதை உணர்ந்தவர்களாக யாரும் அதற்குச் செயல்பட தங்களை அர்ப்பணிக்கவில்லை. எனவேதான் மூன்று நாட்கள் சிறையிலே அடைபட்டுக் கிடக்கிறார்கள்.

இப்பொழுது எல்லாமே தங்களுக்கு விரோதமாகப் போகிறதே என்று பயந்துகொண்டு இருக்கிறார்கள். அடுத்தது என்ன நடக்கப் போகிறது என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

ஆதியாகமம் 42 : 18

www.Radio882.com

இவனுடைய வார்த்தைகளிலிருந்து இவன் யோசேப்பு என்று அவர்கள் கண்டுகொள்ள வேண்டுமென்றால் அதற்கு அவனுடைய வாயிலிருந்து வந்த ஒரு வாக்கியத்தை அவர்கள் பிடித்துக் கொள்ளலாம். அதுதான் நான் தேவனுக்குப் பயப்படுகிறவன் என்ற அவனுடைய வாக்கியம்.

உண்மையாகவே, இந்த நாட்களிலேயும் யாக்கோபின் குடும்பத்தைத் தவிர தேவனை அறிந்த மற்றவர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு தேவன் என்றாலே பலி செலுத்துவது என்ற எண்ணம்தான் இருந்தது. தேவனுடைய பிள்ளைகள் உண்மையான ஒரு வாழ்க்கை வாழ்வார்கள் என்பதைக் குறித்த அறிவெல்லாம் அவர்களுக்கு இல்லை. சொல்லப்போனால் இப்போது இந்த எகிப்தின் அதிகாரியைக் குறித்தே இவர்கள் சந்தேகப்பட ஆரம்பிக்கிறார்கள்.

இறுதியாக அவன் சாட்சி பகருகிறான். எந்த ஒரு சூழ்நிலையிலேயும் தேவனுக்கு சாட்சி பகருவதை யோசேப்பு இழந்து போகிறதில்லை. எந்த ஒரு வாய்ப்பையும் பயன்படுத்தி தேவனுக்கு சாட்சியும் மகிமையும் செலுத்துகிறான். அவரே அவனுடைய வாழ்க்கையை வழிநடத்திச் செல்கிறார் என்பதினாலே தேவனை அவன் மகிமைப்படுத்துகிறான்.

நான் தேவனுக்கு பயந்தவன் என்ற வாக்கியமாவது அவன் தன்னை தவறாக நடத்தமாட்டான் என்ற எண்ணத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்க வேண்டும். என்ன நடக்கிறது, பாருங்கள்.

ஆதியாகமம்42 : 19, 20

அவனுடைய சகோதரர்கள் எல்லாரும் வயது முதிர்ந்தவர்கள். சிலர் 50 வயதிற்கும் மேலானவர்கள். இப்பொழுது ஒரு இக்கட்டான சூழ்நிலையிலே மாட்டிக் கொண்டதை உணர்கிறார்கள். தேவனுக்குப் பயந்த ஒரு மனிதன் அவர்களோடு இடைபடுகிறான். ஆனால் அவன் என்ன செய்யப் போகிறான் என்பது இவர்களுக்குத் தெரியாததினாலே மிகவும் பயந்து போயிருக்கிறார்கள்.

நீங்கள் நிஜஸ்தரா என்று பார்ப்பதற்காகத்தான் இதையெல்லாம் சொல்கிறேன் என்று பேசுகிறான்.ஆனால், உண்மையாகவே அவனது இளைய சகோதரன் அங்கே வந்து சேர அவன் விரும்பினான்.

ஆதியாகமம் 42 : 21

இங்கே நடைபெறுகிற சம்பவம் மிகவும் ஆர்வம் தரக்கூடிய ஒன்று. யோசேப்பின் சகோதரர்கள் எபிரெய மொழியிலே ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்கிறார்கள். என்ன பேசிக் கொள்கிறார்கள்? தங்கள் சகோதரனாகிய யோசேப்பை குழியிலே போட்ட பொழுது அவன் அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்கிறான். அதைக் குறித்தெல்லாம் அவர்கள் பேசுகிறார்கள். அவனுடைய மன வியாகுலத்தைக் கண்டு

www.Radio882.com

செவிகொடுக்கவில்லையே என்று துக்கப்படுகிறார்கள். அவர்களுடைய இந்த பேச்சு வார்த்தைகளை யோசேப்பு கேட்டுக் கொண்டு இருக்கிறான். அது அவனுக்குப் புரியும்.

அந்த மனிதர்களோடு அவன் ஒரு மொழிபெயர்ப்பாளரை பயன்படுத்திப் பேசிக் கொண்டிருக்கிறான். உண்மையாக அவன் அப்படிப் பேச வேண்டுமென்று அவசியம் இல்லை. இப்பொழுது அவன் ஒரு எகிப்தியனைப் போல நடித்துக் கொண்டிருப்பதினாலே அவ்வாறு செய்கிறான். யோசேப்பின் சகோதரர்கள் உண்மையாகவே தாங்கள் செய்த தவறை எல்லாம் உணர்ந்து அறிக்கை செய்கிறார்கள்.

ஆதியாகமம் 42 : 22

இந்த வார்த்தைகளை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த யோசேப்புக்கு எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

ஆதியாகமம் 42 : 23, 24

முதல் முறையாக அவனுடைய சகோதரர்கள், மனுன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான் என்பதை உள்ளத்தில் உணர்ந்து அறிக்கை செய்கிறார்கள். யோசேப்புக்கு நாம் செய்த தீங்கினாலே தான் இந்தத் தீங்கு நமக்கு நேரிடுகிறது என்கிறார்கள். உண்மையாகவே மனந்திரும்புகிறார்கள் என்று சொல்லலாம். அவர்களின் ஒவ்வொரு வார்த்தையையும் யோசேப்பு கேட்டுக் கொண்டிருக்கிறான். ஒரு வேளை அவர்கள் பக்கமாகத் திரும்பி, அவர்களிடத்திலே போய் அவர்களைக் கட்டிப்பிடித்து, நான்தான் உங்கள் சகோதரன் என்று அவன் சொல்லி இருக்கலாம். அப்படிக் கூறியிருந்தால் கூட பென்யமீனை அவர்கள் அழைத்துக் கொண்டு வந்திருப்பார்கள் என்று சொல்லமுடியாது. எனவே, அமைதியாய் இருக்கிறான்.

பரீட்சைகளை அவர்களுக்குக் கொடுக்கிறான். யோசேப்பின் சகோதரர்களிலே ஒருவன் பின்னாலே தங்கியிருக்க வேண்டும். எனவே சிமியோன் தங்கி இருப்பதற்கு சம்மதிக்கிறான். நடைபெறுகிற இந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் அவனால் தன்னைத்தான் அடக்கிக் கொண்டு இருக்க முடியவில்லை. உடனடியாக யோசேப்பு வேறொரு இடத்திற்குச் சென்று அழுதுவிட்டு, முகத்தைக் கழுவிக்கொண்டு, ஒன்றுமே நடக்காதது போல திரும்ப வருகிறான். எதற்காக சிமியோன் தெரிந்தெடுக்கப்பட்டான் என்பது நமக்குத் தெரியவில்லை. யோசேப்பு அழுது முகங்கழுவும்படியாய் வெளியே சென்றிருந்தபொழுது சிமியோன் இருக்கும்படியாகத் தீர்மானம் பண்ணுகிறார்கள். யோசேப்பும் அதை ஏற்றுக் கொள்கிறான்.

இந்த சகோதரர்கள் யோசேப்புக்கு விரோதமாய் செய்த அந்த செயல் இருபது ஆண்டுகளுக்கு முன்னாக நடந்த ஒரு சம்பவம்.

ஆம். பிரியமானவர்களே, எத்தனை ஆண்டுகள் உருண்டு ஓடினாலும் நாம் செய்த

www.Radio882.com

பாவத்தை நாம் மறக்க முடியாது. உண்மையாகவே மனந்திரும்பி புதிய வாழ்க்கையைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றால், நமது பாவம் நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலேயும் மேலெழுந்து வந்து நம்மைக் குற்றம் சாட்டிக்கொண்டே இருக்கும் என்பதை நாம் மறந்து போகக்கூடாது. ஆனால், நம்முடைய பாவங்களை நாம் அறிக்கை செய்து விட்டு விடும் பொழுது தேவன் நமக்குப் புது ஜீவனைக் கொடுக்கிறார். புதிய ஒரு வாழ்க்கையைத் தருகிறார்.

அதிகாரம் 42 : 25

தன்னுடைய சகோதரரின் கரங்களிலே அவர்களின் பணத்தைக்கூட வாங்க யோசேப்புக்கு விருப்பம் இல்லை. எனவே தானியத்திற்காக அவர்கள் கொடுத்த பணத்தை அவர்களுக்குத் தெரியாமல் திரும்ப அவனவன் சாக்கிலே போட்டது மட்டுமல்ல வழிக்கு ஆகாரத்தையும் கொடுத்தனுப்புகிறான்.

ஆதியாகமம் 42 : 26 – 28

யோசேப்பின் சகோதரர்களுக்கு இப்படி நடப்பது தேவன் அவர்களுக்குக் கொடுக்கிற நியாயத் தீர்ப்பு என்று உணர்கிறார்கள். சாதாரணமாக தங்கள் பணம் தங்களுக்கே கிடைத்துவிட்டது என்றால் அது சந்தோமான ஒரு செய்தி. இப்படி எப்பொழுதாவது உங்களுக்கு கிடைக்குமென்றால் சனிக்கிழமை கடைக்குப் போய் சந்தையிலேயோ, சூப்பர் மார்கெட்டிலேயோ, உங்களுக்குத் தேவையான எல்லாக் காரியங்களையும் வாங்கிக் கொள்வீர்கள், இல்லையா? குறிப்பாக நீங்கள் பொருட்கள் வாங்கும் அந்த கடையிலேயே இப்படி அவர்களே வெகுமதியாக உங்கள் பணத்தைத் திரும்பக் கொடுப்பார்களென்றால் நீங்கள் அதைக் குறித்துக் கவலைப்படுவீர்களா? இல்லை. கவலைப்பட மாட்டோம் இல்லையா?

ஏனென்றால் சாதாரண சூழ்நிலையிலே அப்படி நமக்கு கிடைக்குமென்றால் அது நமக்கு உற்சாகத்தைத் தான் கொடுக்கும். ஆனால், அருமையானவர்களே, யோசேப்பின் சகோதரர்களுக்கு அது உற்சாகத்தைக் கொடுக்கவில்லை. ஏற்கனவே இவர்கள் தண்ணீரிலே தத்தளிப்பதைப் போல உணர்கிறார்கள். ஒன்று மாற்றி ஒன்றாக இந்த எகிப்திய தலைவன் கேட்கிறான், வாழ்க்கையை கஷ்டமாக்குகிறானே என்று எண்ணுகிறார்கள். எனவே இது மேலும் மேலும் அவர்களுக்குப் பாரத்தை உண்டு பண்ணுகிறது. இப்படி யோசேப்பின் சகோதரர்களில், ஒருவனுடைய சாக்கிலே பணம் இருந்ததைப் பார்த்தவுடனேயே உடனேயே அதை எடுத்துக் கொண்டு அவர்கள் திரும்ப எகிப்துக்குப் போகவில்லை. காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள். யோசேப்பின் சகோதரர்கள் பயத்தினாலே, திரும்பப் போயிருக்க மாட்டார்கள். உடனடியாக திரும்பப் போயிருந்தால் பணத்தைத் திருடிய குற்றச்சாட்டு அவர்கள் மேலே வந்திருக்கும். எனவே இப்பொழுது அவர்கள் வீட்டை நோக்கிப் போகிறார்கள்.

யோசேப்பின் சகோதரர்கள் அடுத்த முறை வரும்பொழுது அந்த பணத்தைத் திரும்பக் கொண்டுவந்து விடலாம் என்று யோசித்தவர்களாகப் புறப்படுகிறார்கள்.

ஆதியாகமம் 42 : 29 – 34

ஞாபகம் இருக்கிறதா? சிமியோனை எகிப்திலே விட்டு வந்திருக்கிறர்கள். எனவே நடந்தது எல்லாவற்றையும் அவர்கள் தகப்பனாருக்கு விவரமாகச் சொல்கிறார்கள்.

ஆதியகாமம் 42 : 35

இதில் ஏதோ தந்திரம் இருக்கிறது என்று அவர்கள் இப்போது யோசிக்கிறார்கள்.

ஆதியாகமம் 42 : 36

பாவம் யாக்கோபு. அவன் முன்பு இருந்ததைப் போல தந்திரமான ஒரு மனிதனல்ல, இப்பொழுது ஒரு விசுவாசத்தின் மகனாக இருக்கிறான். அவன் விசுவாசத்திலே வளர்ந்து கொண்டிருக்கிறான். இந்த ஆலோசனைக்குக் கடுமையாக எதிர்க்கவில்லை. என்றாலும், உடனடியாக அந்த ஆலோசனையை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. என்ன சொல்கிறான்? இதெல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது, என்று யாக்கோபு சொல்கிறான்.

அவனுடைய குமாரனாகிய யோசேப்பு எத்தனையோ பாடுகளை சந்தித்த பொழுதும் இது எல்லாம் எனக்கு விரோதமாக நேரிடுகிறது என்று ஒரு பொழுதும் அவன் சொல்லவில்லை. ஆனால் யாக்கோபு அப்படிச் சொல்கிறான். யோசேப்பு, எல்லாம் என்னுடைய நன்மைக்காகவே தேவன் செய்கிறார் என்றுதான் சொல்லியிருப்பான்.

பிலிப்பியர் முதலாம் அதிகாரம் 5ஆம் வசனத்தைப் பாருங்கள்,

‘உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி,

ஆதியாகமம் 42 : 37, 38

யாக்கோபினுடைய வாழ்க்கை பென்யமீனுடைய வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்ததாய் இருந்திருக்கிறது. அவன் நேசித்த ராகேலின் மூத்த மகன்தான் யோசேப்பு. எனவே, அவன் அவனுக்கு விருப்பமான மகன். இப்பொழுது யோசேப்பு இல்லை. அதுவே அவனுக்கு ஒரு துக்கமான காரியம். எனவே இப்பொழுது இளைய குமாரனாகிய பென்யமீனுக்கும் ஏதாவது நடக்குமென்றால். நான் மரித்தே போவேன் என்று சொல்கிறான்.

ஆம், உண்மையாகவே, அப்படித்தான் ஆகியிருக்கும். அவனுடைய வாழ்க்கை பென்யமீனின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்திருந்தது. ஏனென்றால், பென்யமீன் தான் யாக்கோபுடைய வலது கையின் மகன். யாக்கோபின் ஊன்றுகோல் அவன்தான். அவன் மேல்தான் யாக்கோபு சாய்ந்து கொண்டிருந்தான். கடந்த பல ஆண்டுகளாக

அதுவே யாக்கோபுவின் எண்ணமாகவும் இருந்தது. எனவே, யாக்கோபு பென்யமீனை அவர்களோடு எகிப்துக்கு அனுப்ப முடியாது என்று சொல்லிவிட்டான். இதே வேளையிலே பாவம் சிமியோன் அங்கே எகிப்திலே சிறைச்சாலையிலே இருக்கிறான்.

ஆதியாகமம் : 43

ஆதியாகமம் 1 : 1, 2

கவனித்தீர்களா? தானியம் முழுவதும் செலவழிந்து போகும் வரைக்கும் சிறைச்சாலையிலே இருந்த சிமியோனைக் குறித்து யோசேப்பின் சகோதரர்கள் யோசிக்கவில்லை. மீண்டுமாக பஞ்சம் தொடராமல் இருந்திருக்குமென்றால், சிமியோன் தன் வாழ்நாள் முழுவதும் எகிப்திலேதான் சிறையிலேதான் செலவு செய்திருப்பான்.

ஒரு வேளை யோசேப்பு தலையிட்டு அவனை விடுதலை செய்திருக்கலாம். மற்றபடி யோசேப்பின் சகோதரர்கள் சிமியோனுக்காக எதையுமே செய்ய முடியாதவர்களாகிவிட்டார்கள். இப்பொழுது தகப்பனார் மீண்டுமாக தானியம் வாங்கப் போகச் சொல்கிறார். ஏனென்றால், தானியம் இல்லையென்றால், எல்லாரும் மரித்துப் போக வேண்டிய சூழ்நிலைதான் என்பதை யாக்கோபுவும் அறிந்து கொண்டான்.

ஆதியாகமம் 43 : 3 – 5

அந்த மனிதன் என்று அவர்கள் சகோதரனாகிய யோசேப்பைத் தான் சொல்கிறார்கள். ஏனென்றால் அவன் யார் என்று அவர்களுக்கு இன்னமும் தெரியாது. அவன் அவர்களோடு பேசிய வார்த்தைகளிலிருந்து அவன் எத்தனை உறுதியான ஒரு மனிதன் என்பதை மட்டும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். எனவேதான் அங்கே நாங்கள் போகவேண்டுமென்றால், கட்டாயம் பென்யமீனை நாங்கள் கொண்டு செல்ல வேண்டும். அப்படி அவனை நீர் எங்களோடு அனுப்பவில்லை என்றால் நாங்கள் அங்கே போவதிலே எந்த பிரயோஜனமும் இல்லை, அந்த எகிப்தின் அதிபதி எங்களை ஏறிட்டுக்கூட பார்க்கமாட்டான், என்று சொல்கிறார்கள்.

ஆதியகாமம் 43 : 6, 7

பாவம் யாக்கோபு. மிகவும் பதறிப் போகிறான். எனவேதான் உங்களுக்கு இன்னும் ஒரு சகோதரன் உண்டென்று நீங்கள் ஏன் அவனிடம் சொன்னீர்கள் என்று கேட்கிறான். அவர்கள் சொல்லாவிட்டாலும் யோசேப்புக்கு அதைக் குறித்துத் தெரியும் என்பதை யாக்கோபு உணரவில்லை. எனவே அவர்கள் இந்த உண்மையை மறைத்திருந்தால்கூட நன்றாக இருந்திருக்குமே என்று யாக்கோபு சிந்திக்கிறான்.

ஆதியாகமம் 43 : 8, 9

இப்பொழுது மிகவும் கருத்தோடு யூதா தகப்பனாருக்கு பதில் சொல்லுகிறான். நாங்கள் வேண்டுமென்றே அந்த மனிதனுக்கு எல்லாவற்றையும் சொல்லவில்லை.

www.Radio882.com

ஆனால் ஒவ்வொன்றாக அவன் கேட்டுக்கொண்டே இருந்தபடியினாலேதான் நாங்கள் சொல்லவேண்டியதாயிற்று என்று சொல்கிறான். எனவே யூதா பென்யமீனுக்கு உத்திரவாதம் பண்ணுகிறான்.

அருமையான சகோதரனே, சகோதரியே இன்றைக்கு எனக்கும் உங்களுக்கும் ஒரு உத்திரவாதம் உண்டு. ஆம், அந்த உத்திரவாதத்தை யூதா கொடுக்கிறான். அந்த யூதாவின் வம்சத்திலேதான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வந்தார். அந்த இடத்தை அவர் எடுத்து ஒரு மேய்ப்பனாக நமக்காக வந்தார். என்னுடைய தண்டனையை உங்களுடைய தண்டனையை அவரே சுமந்து தீர்த்தார். அவருடைய எதிர்பார்ப்பை என்னுடைய வாழ்க்கையிலே நான் செய்யமுடியாது. ஆனால் இயேசு கிறிஸ்து அதிலே தலையிட்டு எனக்காக அவர் உத்திரவாதம் எடுத்துக்கொண்டார். எனக்காக அவர் தமது ஜீவனைக் கொடுத்தார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்த எத்தனை அருமையான ஒரு காட்சி இது இல்லையா?

ஆதியாகமம் 43 : 10

யூதா சொல்கிறான், நாங்கள் வந்த உடனே காரியங்களை எல்லாம் சொன்ன உடனேயே பென்யமீனை நீர் அனுப்பியிருந்தால், இப்போது நாங்கள் போய் மீண்டுமாக தானியத்தோடு வந்திருப்போமே.

ஆதியாகமம் 43 : 11

கவனித்தீர்களா? அவர்களுக்கு தானியம்தான் குறைவுபட்டது. அப்படியென்றால், ரொட்டி செய்ய தானியம் இல்லை. தேன் இருந்தன; கொட்டைகள் இருந்தன; வாசனைப் பொருட்கள் எல்லாம் இருந்தன; எனவே, யாக்கோபு அந்த மனிதனுக்கு வெகுமதி கொண்டு போங்கள் என்று சொல்கிறான்.

முன்பின் அறியாத அவனுக்கு வெகுமதி கொடுப்பதின் காரணமென்ன? அவனுடைய இருதயத்தை வெல்வதற்காக.

ஆதியாகமம் 43 : 12 – 14

மிகவும் துக்கத்தோடு யாக்கோபு பென்யமீனை அனுப்பி வைக்கிறான். மீண்டுமாக சகோதரர்கள் எல்லாரும் புறப்பட்டு எகிப்தை நோக்கிச் செல்கிறார்கள்.

ஆதியாகமம் 43 : 15

அருமையானவர்களே, யோசேப்பின் முன்னாலே இவர்கள் வந்து நின்றபொழுது, தன்னுடைய தம்பியாகிய பென்யமீனைக் கண்டவுடனே அவன் உள்ளம் எப்படி இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்

ஆதியாகமம் 43 : 16, 17

www.Radio882.com

தனிமையிலே அவர்களோடு பேசுவதற்காக அவர்களை தனது வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போகிறான்.

ஆதியாகமம் 43 : 18

இப்பொழுது அவனுடைய சகோதரர்கள் உண்மையாகவே மிகவும் பயந்து போனார்கள். தனது வீட்டிற்கு எந்த ஒரு நல்ல காரியத்திற்கும் அவன் அவர்களை அழைத்து செல்ல முடியாது என்று எண்ணி பயப்படுகிறார்கள். இதுவரை அவர்களிடத்திலே கடினமாகத் தான் பேசினான். இப்பொழுது வீட்டிற்கு உணவு அருந்தும்படியாக அழைத்துச் செல்கிறான்.

பொதுவாக ஒரு பெரிய மனிதர் உங்களை தங்கள் வீட்டிற்கு விருந்திற்கு அழைப்பாரென்று சொன்னால், சாதாரணமான சூழ்நிலையிலே அதைக் குறித்து நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள், அதைக் குறித்து பெருமைப்பட்டுக் கொள்வீர்கள். இது ஒரு அற்புதமான வாய்ப்பு என்று நினைப்பீர்கள். ஆனால் இந்த சகோதரர்களுக்கு இந்த அழைப்பு எந்த விதத்திலும் உற்சாகம் கொடுக்கவில்லை.

அவர்களுக்குள்ளே குற்ற உணர்வு வருகிறது. தங்களுடைய வாழ்க்கையிலே நடக்கும் ஒவ்வொரு காரியத்தைக் குறித்தும் குற்ற உணர்வுள்ளவர்களாகிறார்கள். ஏனென்றால், அவர்கள் ஒரு சூழ்நிலையிலே தங்கள் சகோதரனையே விற்றுப் போட்டவர்கள். குற்ற உணர்வானது மகிழ்ச்சியை துக்ககரமாய் மாற்றுகிறது. அவர்கள் பயத்தின் மத்தியிலே ஆச்சரியப்பட்டு எதற்காக இருக்கும் என்று அவர்களே சில காரியங்களை யோசித்துக் கொள்கிறார்கள். யோசேப்பின் சகோதரர்கள் நமது தானியச் சாக்குகளிலே பணம் வந்துவிட்டது அதற்காக நம்மை அடிமைகளாக்கப் போகிறானோ என்று எண்ணுகிறார்கள். அந்த நாளிலே யோசேப்பின் சகோதரர்கள் தங்களுக்கு அருமையான சகோதரனாகிய யோசேப்பை இஸ்மவேலரிடத்திலே எகிப்திற்கு அடிமையாக விற்றுப்போட அவ்வளவு அதிகமாய் சிந்திக்கவில்லை.

ஆதியாகமம் 43 : 19 – 22

அவர்கள் மன்னிப்பு கேட்கத் துவங்குகிறார்கள். விளக்குகிறார்கள், கெஞ்சுகிறார்கள். யோசேப்பினிடத்திலே அவர்கள் அதைச் செய்யவில்லை; அவர்களை யோசேப்பின் வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோன வேலைக்காரனிடத்திலே அதையெல்லாம் சொல்லி மன்னிப்பு கேட்கிறார்கள். என்ன ஒரு பரிதாபமான நிலை பார்த்தீர்களா?

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, இது யோசேப்பின் சகோதரர்கள் வாழ்க்கையிலே மட்டுமல்ல, நம்மில் அநேகருடைய வாழ்க்கையிலே இப்படிப்பட்ட சூழ்நிலைகளை நாம் சந்தித்திருக்கலாம். உண்மையாகவே நம்முடைய வாழ்க்கையிலே நாம் நெருக்கப்படும்பொழுது, ஒடுக்கப்படும்பொழுது என்றோ நம்முடைய வாழ்க்கையிலே நாம் செய்த பாவங்களும் அக்கிரமங்களும் நம்முடைய உள்ளத்திலே கடந்து வந்து குற்ற

www.Radio882.com

உணர்வோடு கூட தேவையில்லாமல் அளவுக்கதிகமாக நம்மைத் தாழ்த்தி பயந்து சோர்ந்து போகிறவர்களாய் காணப்படுகிறோம்.

இப்பொழுது அந்த சகோதரர்களுடைய வாழ்க்கையைப் பார்த்தால், எல்லாக் காரியங்களிலேயும் அவர்கள் உண்மை பேசத் துவங்குகிறார்கள். சோதனைகளும் பரீட்சைகளும் தேவன் நம்முடைய வாழ்க்கையிலே அனுமதிப்பதற்கான காரணம் நம்மை பரிசுத்தத்தின் மேலே பரிசுத்தமடையச் செய்வதற்காக என்பதை நாம் மறந்து போகக் கூடாது.

நாம் அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டிருந்தாலும் அவர் நம்மை தம்முடைய பிள்ளைகளாக தெரிந்தெடுத்திருந்தாலும் நம்முடைய வாழ்க்கையிலே வளர்ச்சியானது மரணபரியந்தம் தொடர வேண்டிய ஒரு உண்மை என்பதை நாம் மறந்து போகக்கூடாது. எந்த ஒரு மனிதனும் இந்த உலகத்திலே முதிர்ச்சி பெற்று முடிக்கிறதில்லை. நாம் அனைவருமே கர்த்தருக்குள்ளே வளர்ந்து வருகிறோம். ஒவ்வொரு வருடமும் நாம் பின்னாலே திரும்பப் பார்க்கும் பொழுது, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டிலே நாம் கர்த்தருக்குள்ளே அதிகமாய் நெருங்கி நடந்திருக்கிறோம் என்று சொல்லக்கூடியவர்களாய் இருக்கவேண்டும்.

ஆதியாகமம் 43 : 23

கவனித்தீர்களா? யோசேப்பின் சாட்சி மூலமாக இந்த வேலைக்காரனும் ஜீவிக்கிற உண்மையுள்ள தெய்வத்தைக் குறித்த அறிவுள்ளவனாய் இருந்திருக்கிறான். ஒரு வேளை இந்த வேலைக்காரனிடத்திலே இந்த சகோதரர்களிடத்திலே தான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பதைக் கூட ஓரளவு அவன் சொல்லியிருக்கக் கூடும். உங்கள் பணம் என்னிடத்தில் இருக்கிறது என்று சொன்ன பொழுது அது அந்த சகோதரர்களை மேலும் பயமுறுத்தியிருக்கும்.

ஆதியாகமம் 43 : 24

கால்களைக் கழுவும் பழக்கத்தைக் குறித்து இங்கேயும் நாம் பார்க்கிறோம். ஆபிரகாமுடைய வாழ்க்கையிலே இதைக் குறித்துப் பார்த்தோம். அவனை சந்திக்க வந்த அவனுக்கு முன்பின் தெரியாத விருந்தினர்களை அவன் உபசரித் பொழுது, அவர்கள் கால்களைக் கழுவுவதற்கு தண்ணீர் கொடுத்தான். சோதோம் கொமோரா பட்டணத்தை அழிக்க வந்தவர்களும் கால்களைக் கழுவினார்கள். இது அந்நாளின் ஒரு வழக்கமாயிருந்தது.

ஆதியாகமம் 43 : 25, 26

ஞாபகமிருக்கிறதா? யாக்கோபு தன்னுடைய குமாரர்கள் புறப்பட்டபொழுது அந்த மனிதனுக்குக் காணிக்கை கொண்டு போய் கொடுங்கள் என்று சொன்னான் அல்லவா. அவற்றை முன் வைத்து, தரை மட்டும் குனிந்து யோசேப்பை வணங்குகிறார்கள்.

www.Radio882.com

மீண்டுமாக யோசேப்பின் சொப்பனம் நிறைவேறுகிறது.

ஆதியாகமம் 43 : 27

இது நாடகம் போன்ற ஒரு காட்சி. இப்பொழுது யோசேப்பு உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும். ஒரு அரியணை போல இல்லாவிட்டாலும் ஏதோ சற்று உயர்வான ஒரு இடத்திலே முக்கியமான இடத்திலே அவன் அமர்ந்திருக்க வேண்டும். சகோதரர்கள் தாழ விழுந்து அவனைப் பணிந்து கொள்கிறார்கள்.

இப்பொழுது அவர்கள் எல்லாரும் பணிந்து எழுந்த பிறகு அவர்கள் முகத்தை நேருக்கு நேர் பார்த்து, நீங்கள் சொன்ன முதிர்வயதான உங்கள் தகப்பன் சுகமாயிருக்கிறாரா? அவர் இன்னும் உயிரோடு இருக்கிறாரா? என்று அவர்களிடத்திலே கேட்கிறான். அவரைக் குறித்து அவன் ஏன் விசாரிக்கிறான்? அவனுக்கும் அவர் தகப்பன்தான். இல்லையா?

ஆதியாகமம் 43 : 28

கவனித்தீர்களா? மீண்டுமாகக் குனிந்து அவனை வணங்குகிறார்கள். அப்படி அவர்கள் குனிந்து வணங்கும்பொழுது எடுத்த புகைப்படம் ஒன்றை பார்க்க எனக்கு ஆசையாய் இருக்கிறது. உங்களுக்கும் விருப்பமாய் இருக்குமென்று நினைக்கிறேன். பென்யமீனும் அங்கே இருக்கிறான். அவனும் மற்ற சகோதரர்களோடு சேர்ந்து குனிந்து வணங்குகிறான்.

ஆதியாகமம் 43 : 29

ஆம். மற்ற சகோதரர்கள் எல்லாரும் அவனுடைய தகப்பனுக்குப் பிள்ளைகள். ஆனால் அவனுடைய தாய்க்குப் பிள்ளைகளல்ல, பென்யமீன் மட்டுமே அவனுடைய தாயின் மகன். அவன் கேட்டபொழுது எல்லா சகோதரர்களுமே மேலும் கீழும் தலையை ஆட்டியிருப்பார்கள். உடனடியாக யோசேப்பு என்ன சொல்கிறான்? மகனே தேவன் உனக்கு கிருபைசெய்யக்கடவர் என்று சொல்கிறான். இவ்வளவு நேரம் தன்னை அடக்கிக் கொண்டு எல்லா காரியங்களையும் நடத்திக் கொண்டிருந்த யோசேப்புக்கு இப்பொழுது தன்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

ஆதியாகமம் 43 : 30

ஆனால் இன்னமும் தனது சகோதரர்களுக்கு அவன் தன்னை வெளிப்படுத்தவில்லை. கொஞ்சம் பொறுங்கள், இதோ வருகிறேன் என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள்ளே அவன் சென்றிருக்க வேண்டும். அழுவதற்காகத் தனியான இடத்தைத் தேடி அவன் போகிறான். பல ஆண்டுகளுக்குப்பிறகு தனது சகோதரனாகிய பென்யமீனை பார்க்கிறான். இருபது வருடங்கள் உருண்டோடி விட்டன. யோசேப்புக்கு இப்பொழுது கிட்டத்தட்ட வயது 40 ஆகிவிட்டது. பென்யமீன் இளைஞனாய் இருக்கிறான்.

www.Radio882.com

ஆதியாகமம் 43 : 31

இது ஒரு அற்புதமான காட்சி. வரப்போகிற ஒரு காலத்திலே நிறைவேறப் போகிற ஒரு காட்சியின் நிழலாகவும் இது இருக்கிறது. தீர்க்கதரிசியாகிய சகரியா இயேசு கிறிஸ்து தம்மை தம் சகோதரர்களான இஸ்ரவேலருக்கு வெளிப்படுத்துவதைக் குறித்து எழுதியிருக்கிறார். அவர்கள் அவருடைய கரங்களில் உள்ள காயத்தையும் ஆணியினால் உண்டான தழும்புகளையும் குறித்து கேட்கப் போகிறார்கள். அப்பொழுது அவர் அவர்களைப் பார்த்து என்னுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலரிடமிருந்து இந்தக் காயங்களை நான் பெற்றுக் கொண்டேன் என்று சொல்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் தவறை உணர்ந்து அழுவார்கள் இயேசுவே அவர்களுக்கு இரட்சிப்பை சம்பாதித்தவர். அவர்களுடைய மீட்புக்காக தன் ஜீவனைக் கொடுத்தவர். இயேசு கிறிஸ்து மீண்டுமாக இந்த பூமிக்கு வரும்பொழுது தம்முடைய சகோதரர்களான இஸ்ரவேல் மக்களுக்கு தம்மை மேசியாவாக வெளிப்படுத்துவார்.

முதல் முறை இயேசு வந்தபொழுது அவர் சகோதரர்களான யூதரில் அநேகர் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்னும் யூதரில் அநேகர் அவரை விசுவாசிக்கவில்லை. ஆனாலும் இனி இயேசு வரும்பொழுது அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள்.

அதே போல யோசேப்பின் சகோதரர்கள்தான் யோசேப்பையும் அடிமைத்தனத்திற்குள்ளே விற்றுப் போட்டவர்கள். அவன் ஒழிந்து போக வேண்டுமென்று அவ்வாறு செய்தார்கள். இப்பொழுது தன்னுடைய சகோதரர்களுக்கு அவன் தன்னை வெளிப்படுத்தப் போகிறான்.

யூத மக்கள் இயேசு கிறிஸ்துவை இன்றைக்கும் விசுவாசிக்கவில்லை. என்றாலும், அவர்களுக்கு அவர் சகோதரர்தான். சரி, உள்ளே அழும்படியாகச் சென்ற யோசேப்பு முகத்தைக் கழுவி தன்னுடைய சகோதரர்கள் மத்தியிலே வந்து உணவு அருந்தும்படியாக உட்காருகிறான்.

ஆதியாகமம் 43 : 32

இவ்வாறாக உட்கார்ந்து உணவு அருந்தும்பொழுது அவனுடைய சகோதரர்கள் அநேக காரியங்களை வித்தியாசமானதாகப் பார்க்கிறார்கள். இது எல்லாமே அவர்களுக்கு பயத்தை உண்டு பண்ணுகிறது. முதலாவதாக யோசேப்பு எகிப்தியர்களோடே கூட உட்கார்ந்து உணவு அருந்தவில்லை. எகிப்தியர்கள் தனியாக உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களிலிருந்து பிரிக்கப்பட்டவனாக யோசேப்பு உட்கார்ந்திருக்கிறான். ஒருவேளை அவன் அங்கே தலைவனாய் இருந்தபடியினாலே அப்படி தனித்து அவன் சாப்பிடுகிறான் என்று கூட அவர்கள் நினைத்திருக்கலாம். மேலும் ஒரு காரியம் நடைபெறுகிறது பாருங்கள்.

www.Radio882.com

ஆதியாகமம் 43 : 33

எப்படி இது நடந்தது என்று அவர்களுக்கு மிக ஆச்சரியமானதாய் இருக்கிறது.

இங்கேயும் தனது அன்பை தனது தம்பியாகிய பென்யமீனுக்குக் காட்டாமல் அவனால் இருக்க முடியவில்லை. எனவே, ஐந்து மடங்கு அதிகமாக அவனுக்கு உணவு கொடுக்கிறான். பஞ்சத்திலே அடிபட்ட அவர்கள் இப்பொழுதுதான் ஒரு முழுமையான உணவை சாப்பிடுகிறார்கள். வசனத்தின் கடைசியிலே அவர்கள் பானம் பண்ணி, அவனுடனே சந்தோமாயிருந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையாகவே அந்த உணவு வேளையிலே தங்களுடைய எல்லா சூழ்நிலைகளையும் மறந்து அந்த சகோதரர்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். ஆனால் யோசேப்பு இன்னமும் தன்னை வெளிப்படுத்தவில்லை.

ஆதியாகமம் : 44

இந்த அதிகாரத்திலே யோசேப்பு தனது சகோதரர்களை தகப்பன் மேலும் பென்யமீன் மேலும் அவர்கள் வைத்திருந்த அன்பைக் குறித்து சோதிக்கப் போகிறான். ஏனென்றால் ஞாபகமிருக்கிறதா? அவனை அவர்கள் விற்றுப் போட்டார்கள். உண்மையானவே அவர்கள் சகோதர பாசத்திலே முன்னேறி இருக்கிறார்களா? தன்னைப் போல பென்யமீனையும் அவர்கள் விற்றுப் போட்டு விடுவார்களா? இந்த சூழ்நிலைகளிலே யூதா சகோதரர்களின் சார்பாகப் பேசுகிறான். குறிப்பாக பொறுப்புள்ளவனாய் நடந்து கொள்கிறான்.

வேதப் புத்தகத்திலே நம்முடைய உள்ளத்தைத் தொடும் அதிகாரங்களிலே இதுவும் ஒன்று.

ஆதியாகமம் 44 : 1 – 5

யோசேப்பு அவர்களை அனுப்பி விடுகிறான். அதிகாலமே புறப்பட்டுப் போகிறார்கள். பென்யமீனின் சாக்கிலே வைக்கப்பட்ட அந்தப் பாத்திரத்தைக் குறித்து அவர்களுக்குத் தெரியாது. யோசேப்பு சொன்னது போலவே வீட்டு விசாரணைக்காரன் எல்லாவற்றையும் செய்கிறான். கொஞ்சதூரம் அவர்கள் எல்லாரும் போனவுடனே அவர்களுக்குப் பின்னாலே ஒரு படை வருகிறது. யோசேப்புக்குச் சொந்தமானப் பாத்திரத்தை அவர்கள் திருடிக் கொண்டு வருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறார்கள். என்ன நடக்கிறது பாருங்கள்.

ஆதியாகமம் 44 : 6, 7

எகிப்து மக்களுக்கு முன்னாலே யோசேப்பு ஒரு தீர்க்கதரிசியாகவேக் காணப்பட்டான். எதிர்காலத்தைக் குறித்துச் சொல்லும் வல்லமை படைத்தவனாய் அவனை அவர்கள் அறிந்திருந்தார்கள். ஏனென்றால், பானபாத்திரக்காரன் சுயம்பாகி பார்வோன் இவர்களுடைய சொப்பனத்திற்கு அவன் அர்த்தம் கூறியிருந்தான். இது தேவன்

www.Radio882.com

அவனுக்குக் கொடுத்திருந்த ஒரு வரம்.

ஆனால், எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, எதிர்காலத்தை அறிந்து கொள்வதற்காக உலகத்திலே தேவனை அறியாதவர்கள் செய்கிற காரியங்களிலே நாம் ஈடுபடக்கூடாது. வேத வசனங்களை அறிந்தவர்கள் தங்கள் எதிர்காலத்தைக் குறித்து அறிந்து கொள்ள வேறு வகைகளைத் தேடுவார்களென்றால், அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையிலே மிகத் தரம் தாழ்ந்த நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள் என்பதை அது வெளிப்படுத்துகிறது. யோசேப்புக்கு தேவன் இதை ஒரு விசேஷித்தக் தாலந்தாகக் கொடுத்திருந்தார்.

ஆதியாகமம் 44 : 8, 9

எப்படி இவ்வளவு தைரியமாகப் பேசுகிறார்கள்? எந்த ஒரு சகோதரனும் அதை எடுத்துக் கொண்டிருக்க வாய்ப்பில்லை என்று எண்ணியவர்களாக அவ்வளவு உறுதியாய் சொல்கிறார்கள்.

ஆதியாகமம் 44 : 10 – 12

அந்த வீட்டு விசாரணைக்காரனிடத்திலே பென்யமீனுடைய சாக்கிலே இதைப் போடும்படியாக யோசேப்பு சொல்லியிருந்தான். எனவே, பென்யமீனின் சாக்கைத் திறக்கும்பொழுது அது அங்கே இருக்கிறது.

தங்கள் வஸ்திரங்களைத் தாங்களே கிழித்துக் கொள்ளுதல் அளவுக்கு அதிகமான துக்கத்தை வெளிப்படுத்துவதாய் இருக்கிறது.

கானான் தேசத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தவர்கள் மீண்டுமாக யோசேப்பின் வீட்டை நோக்கித் திருப்பப்படுகிறார்கள். ஏன் தெரியுமா? பென்யமீனை மட்டும் விட்டு விட்டு அவர்கள் வீடு திரும்ப முடியாது. எவனிடத்தில் அது காணப்படுமோ அவன் எனக்கு அடிமையானவன் என்று சொல்லப்பட்டிருந்தாலும், அவனை மட்டும் அடிமையாக விட்டுவிட்டு இப்பொழுது சகோதரர்கள் போகவில்லை. சகோதர பாசத்திலே அவர்கள் வளர்ந்திருக்கிறார்கள்.

ஆதியாகமம் 44 : 14, 15

மீண்டுமாக அவர்கள் யோசேப்பின் முன்னால் முகம் தரையிலே படும்படியாக விழுந்தார்கள். யோசேப்பு அவர்களைப் பார்த்து தனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்கிறான். யோசேப்பின் சகோதரர்கள் உள்ளம் உடைந்து சோர்ந்து போகிறார்கள். என்ன செய்ய என்று அவர்களுக்குத் தெரியவில்லை. காரணம் என்ன? யாருடைய சாக்கிலே அந்தப் பாத்திரம் காணப்படுமோ, அவன் எனக்கு அடிமையாக இருக்கட்டும் மற்றவர்கள் போகலாம் என்று கூறப்பட்டிருந்ததினாலே அவர்கள் உள்ளம் உடைந்து இருந்தார்கள்.

www.Radio882.com

இந்தப் பகுதியிலே யோசேப்பு ஒரு வேளை நாடகமாடுவதைப் போலத் தெரியலாம். ஆம். யோசேப்பு தான் செய்த காரியத்தை ஏன் செய்கிறேன் என்ற அறிவோடு செய்தான். பழிக்குப் பழி வாங்கவோ, அவர்களைத் தண்டிக்கவோ அவன் அதைச் செய்யவில்லை. உண்மையாகவே சகோதர சிநேகத்திலே அவர்கள் எவ்வளவு வளர்ந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டுகொள்ளத் தான் யோசேப்பு அவ்வாறு செய்தான்.

பென்யமீனை இழந்து தன்னுடைய தகப்பனாரிடத்திலே போக அவர்கள் துணிகிறார்களா? அல்லது பென்யமீன் இல்லாமல் நாங்கள் போகமாட்டோம் என்பதில் உறுதியாய் இருக்கிறார்களா என்பதை அறிந்து கொள்ளவே யோசேப்பு இதை செய்தான்.

நம்முடைய குடும்பங்களிலே இன்று சகோதர சிநேகம் எப்படிப்பட்டதாய் இருக்கிறது? எத்தனை குடும்பங்களிலே உண்மையான அன்பு ஐக்கியம் நிலவுகிறது. கடைசியாக எப்பொழுது உங்களுடைய சகோதரனை அல்லது உங்கள் சகோதரியை நீங்கள் சந்தித்தீர்கள்? ஒரு வேளை தூரத்தில் இருப்பார்களென்றால் ஒவ்வொரு நாளும் நீங்கள் கருத்தோடு அவர்களுக்காக ஜெபிக்கிறவர்களாய் இருக்கிறீர்களா? அவர்களுடைய குடும்பத்திற்காக, அவர்களுடைய பிள்ளைகளுக்காக, அவர்களுடைய பேரப்பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறவர்களாய் இருக்கிறீர்களா? அல்லது என்றோ ஒரு நாள் ஏதோ ஒரு அற்பமான காரியத்திற்காக மனமுறிவு ஏற்பட்டதற்காக இன்றைக்கும் அவர்களைக் குறித்து எண்ணினாலே கசப்போடும் எரிச்சலோடும் இருக்கிறீர்களா?

அவர்கள் உங்களோடு பேச முற்பட்டாலும் அதை ஏற்று மனம் திறந்து பேச முடியாதவர்களாய் இருக்கிறீர்களா? அருமையான சகோதரனே, சகோதரியே கிறிஸ்துவை அறிந்தவர்களுடைய அன்பே மற்றவர்களை கிறிஸ்துவண்டை வழிநடத்தும் என்பதிலே சந்தேகம் இல்லை. இயேசு கிறிஸ்து இதைக் குறித்து தெளிவாக அறிந்திருந்தார். யோவான் 15 : 12 பாருங்கள்.

‘நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது‘.

இயேசு கிறிஸ்து இங்கே ஆலோசனை என்று சொல்லவில்லை. கற்பனை என்று சொல்லுகிறார். அடுத்ததாக யோவான் 17 : 21 பாருங்கள்.

‘அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.‘

இங்கே இயேசு கிறிஸ்து தனது சீடர்களுக்காக ஜெபிக்கும் பொழுது அவர்கள் ஒருவரோடு ஒருவர் அன்பாய் இருந்தால், உலகம் அவரை எளிதாக விசுவாசிக்கும் என்பதை வெளிப்படுத்துகின்றார். உங்கள் திருச்சபையிலே உண்மையான அன்பும் ஐக்கியமும் உண்டா? அல்லது ஏதோ காரணத்தினாலே போட்டியினாலே,

www.Radio882.com

பொறாமையினாலே, சண்டையினாலே, வாக்குவாதத்தினாலே, அன்பை இழந்தவர்களாய் இருக்கிறீர்களா?

கிறிஸ்துவை அறியாத சமுதாயத்தில் வாழ்கிற கிறிஸ்துவை அறிந்தவர்கள் ஒருவரோடு ஒருவர் உண்மையான அன்பு உள்ளவர்களாயிருப்பார்களென்றால் இன்றைக்கு உலகமே கிறிஸ்தவ திருச்சபைகளை நோக்கி ஓடிவரும். ஏன் அது நடைபெறவில்லை? இன்று கிறிஸ்தவ குடும்பங்களிலேயும் திருச்சபைகளிலேயும், கிறிஸ்துவின் அன்பு பிரதிபலிக்கப்படவில்லை, அதுதான் காரணம்.

அருமையானவர்களே, ஒரு வேளை உங்கள் குடும்பத்திலே ஒற்றுமை குறைவிற்கு அன்பு தாழ்ச்சிக்கு நீங்கள் காரணமாய் இருக்கிறீர்களா? நான் என்ற சுயமோ, பண ஆசையோ உங்களிலே இருந்து அதை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறதா? சற்றே எண்ணிப் பாருங்கள், அல்லது உங்கள் திருச்சபையிலே ஒற்றுமை ஐக்கியத்திற்கு இடையூறாய் இருப்பதற்கு பிசாசானவன் உங்களை தன்னுடைய கரத்திலே வைத்து பயன்படுத்துகிறானா? அதைக் குறித்து நீங்கள் ஆழமாய் சிந்தித்து மனம் திரும்ப ஆண்டவர் உங்களை அழைக்கிறார்.

சகோதரர்களுக்குள்ளே ஏன் உறவு சரியானதாக இல்லை. அங்கே அன்பு இல்லை. அன்பு விலையேறப் பெற்றது. பிரியமானவர்களே, ஒரு விசுவாசியாக நீங்கள் எத்தனை தாலந்துகளை உடையவர்களாய் இருந்தாலும், எத்தனை திறமைகளை உடையவர்களாய் இருந்தாலும் அன்பு இல்லையென்றால், நீங்கள் ஒன்றுமில்லை.

இன்றைக்கு நேரம் எடுத்து ணூ கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்தை நீங்கள் வாசித்துப் பார்க்க நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். உங்கள் சகோதரர்களை உங்கள் சகோதரிகளை நீங்கள் நேசிக்க முடியாதவர்களாய் இருந்தால், நீங்கள் தேவனை அறியாதவர்கள் என்பது உறுதி. ஏனென்றால், அன்பில்லாதவன் தேவனை அறியான், என்று வேதப்புத்தகம் மிகத் தெளிவாகச் சொல்கிறது.

ஆதியாகமம் 44 : 16, 17

இப்பொழுது சகோதரர்கள் சார்பாக யூதா முன்னாலே வந்து நின்று பரிந்து பேசுகிறான். இந்த யூதாவின் வம்சத்திலேதான் நமக்காகப் பரிந்து பேசும் இரட்சகர் இயேசு தோன்றினார். இது எல்லாம் தங்கள் மேலே வந்தது, தன்னுடைய பாவத்தினாலேதான் என்பதை யூதா அறிக்கையிடுகிறான். யோசேப்போ அவர்களுக்கு தன் சகோதரன் பென்யமீன் மேலே இருந்த அன்பைச் சோதனை செய்ய வேண்டுமென்று எண்ணுகிறான். எனவே பென்யமீன் சாக்கிலேதான் பாத்திரம் இருந்தது. அவன் மட்டும் இங்கே அடிமையாக இருக்கட்டும். ஏனென்றால், அவன் தான் குற்றவாளி நீங்கள் எல்லாரும் போகலாம் என்று சொல்கிறான்.

இப்பொழுது யூதா என்ன சொல்கிறான் பாருங்கள்,

ஆதியாகமம் 44 : 18

இப்பொழுது யோசேப்பு இருக்கும் ஸ்தானம் அவர்களுக்கு இப்பொழுது தெரிந்திருக்கிறது.

ஆதியாகமம் 44 : 19 – 29

இப்பொழுது யூதா கடந்த நாட்களிலே என்னென்னவெல்லாம் நடைபெற்றன, அவர்களுடைய தகப்பனார் சிறுவனைக் குறித்து எத்தனை அக்கறை உள்ளவராய் இருக்கிறார், அவருடைய உணர்வுகள் எப்படி இருக்கிறது என்பதையெல்லாம் விவரிக்கிறான். அதுமட்டுமல்ல, இப்பொழுது யூதா சொன்ன வார்த்தைகளிலிருந்து தகப்பனாரை சகோதரர்கள் எப்படி ஏமாற்றியிருக்கிறார்கள் என்பதையும் யோசேப்பு புரிந்து கொண்டான். இந்த நேரத்திலேதான் யோசேப்பைக் குறித்து இவ்வளவு காரியங்களை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

கடந்த முறை யோசேப்பைக் குறித்து அவர்கள் யோசேப்பினிடத்திலே சொல்லும் பொழுது, நாங்கள் பன்னிரெண்டு சகோதரர், ஒரு தகப்பன் புத்திரர், ஒருவன் காணாமல் போனான், என்று சொன்னார்கள். யூதாவின் வார்த்தைகளிலிருந்து மற்றுமொரு காரியம் தெரிகிறது. யாக்கோபு கிருபையிலே வளர்ந்து கொண்டிருந்தாலும் இன்னும் வளர வேண்டிய அளவு வளரவில்லை. தேவனை சார்ந்து தேவனை நம்பியிருப்பதற்குப் பதிலாக தனது மகனான பென்யமீன் மேலே தனது நம்பிக்கையையும் தனது பெலனையும் வைத்திருக்கிறான். பென்யமீனுக்கு எது நடந்தாலும் அவன் மரித்துப் போவேன் என்பது போலக் கூறியிருக்கிறான். அதாவது பென்யமீன் மரித்துப் போனால் அதன் பின் பென்யமீனைப் பார்க்க முடியாது என்று மரித்தவர்களைக் குறித்து நம்பிக்கையற்றவனாக யாக்கோபு பேசியிருக்கிறான்.

இன்றும் அநேக கிறிஸ்தவர்கள் தங்களைச் சந்திக்கும் பொழுது உயிர்த்தெழுதல், பரலோக ராஜ்ய வாழ்வு ஆகியவற்றைப் பற்றிய விசுவாசத்தை அறிக்கையிட்டு வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் தாங்கள் மிகவும் அதிகமாக நேசிக்கும் சிலர் மரணத்தை சந்திக்கும்பொழுது உயிர்த்தெழுதலின் விசுவாசத்தையே இழந்தவர்கள் போலக் காணப்பட்டிருக்கிறார்கள். உங்கள் குடும்பத்திலுள்ள மற்றவர்களை நீங்கள் எவ்வாறு நேசிக்கிறீர்களோ எனக்குத் தெரியாது. ஆனால், பெற்றோரோ பிள்ளைகளோ நண்பர்களோ நாம் அனைவருமே மரணத்திற்குப் பின்னாலும் ஒருவரை ஒருவர் சந்திக்கப் போகிறோம் என்ற நிச்சயம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. எனவே யாக்கோபுவின் வார்த்தைகள் அவன் மேன்மையான பரலோக ராஜ்ய வாழ்வைப் பற்றிய விசுவாசத்திலே இன்னமும் வளர வேண்டிய அளவு வளரவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. கிருபையிலே வளர்ந்திருந்தாலும் விசுவாசத்திலே இன்னும் அதிகமாய் வளர வேண்டியவனாய் காணப்படுகிறான்.

www.Radio882.com

ஆதியாகமம் 44 : 30, 31

கவனித்தீர்களா? யூதா தனது வயதான தகப்பன் மேலே எவ்வளவு அக்கறை வைத்திருக்கிறான். இந்தக் கூட்டத்தின் சார்பாக யூதா பேசுகிறான். ஒரு வேளை ஒவ்வொரு சகோதரனாக கேட்டிருந்தால் கூட இந்தக் காரியத்தைத் தான் அவர்களும் கூறியிருப்பார்கள்.

ஆதியாகமம் 44 : 32 – 34

மீண்டுமாக யூதாவே தலைமைத்துவம் எடுத்து இங்கே பேசுகிறான். அதுமட்டுமல்ல சகோதரர்களிலே ஒவ்வொருவருமே பென்யமீனுக்காக தங்களைக் கொடுக்கும் அளவுக்கு தகப்பனைக் குறித்து கரிசனை உள்ளவர்களாகிவிட்டார்கள். யோசேப்பு தன் சகோதரர்களை பரீட்சிக்கிறான். அந்த பரீட்சையிலே அவர்கள் தேர்வு பெற்றுவிட்டார்கள். பென்யமீன் அடிமைத்தனத்திற்குள்ளே செல்வதைப் பார்ப்பதைவிட அவனுக்குப் பதிலாகத் தாங்கள் ஒவ்வொருவருமே அதற்கு ஆயத்தம் என்பது போல பேசுகிறார்கள்.

இந்த யூதாவின் வம்சத்திலே வந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் எல்லாருடைய பாவங்களுக்காகவும், தண்டனையை ஏற்றுக் கொள்ள தம்மையே ஒப்புக் கொடுத்தார். ரோமர் 5ஆம் அதிகாரம் 8ஆம் வசனம் என்ன சொல்கிறது?

‘நாம் பாவிகளாயிருக்கையிலே கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்.‘

ஆதியாகமம் 44ஆம் அதிகாரத்தின் சம்பவம் தொடர்ந்து 45வது அதிகாரத்திலேயும் தொடருகிறது.

ஆதியாகமம் 45

ஆதியாகமம் 45 : 1

தன்னை வெளிப்படுத்துவதற்கு ஆயத்தமாக தன்னுடைய சகோதரர்களைத் தவிர மற்ற அனைவரையும் வெளியேற்றுகிறான்.

ஆதியாகமம் 45 : 2

இந்த நேரத்திலே அவசர அவசரமாக யோசேப்பு வெளியே போக முடியவில்லை. எனவே மனமுடைந்து அவன் அழ ஆரம்பிக்கிறான். அவன் ஏன் அழுகிறான் என்று அவனைத்தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது. அவனுடைய சொந்த சகோதரர்களுக்கும் அப்பொழுது அது தெரியாது. வேலைக்காரர்களுக்குத் தெரியாது. தன்னை வெளிப்படுத்துவதற்கு இப்பொழுது வேறு எந்தத் தடையும் இருப்பதாக யோசேப்புக்குத் தெரியவில்லை. ஏனென்றால் தனது சகோதரர்களை பரிபூரணமாய் அவன் சோதித்துவிட்டான்.

யோவான் முதலாம் அதிகாரம் 11ஆம் வசனத்திலே நாம் வாசிக்கிறது போல் முதல்

www.Radio882.com

முறையாக இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்தபொழுது, 'தமக்கு சொந்தமானதிலே வந்தார், ஆனால் தமக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.' ஆனால் இயேசு இரண்டாவது முறை வரும்பொழுது தம்மை தம்முடைய சகோதரர்களான யூதர்களுக்கு வெளிப்படுத்தப் போகிறார். அப்பொழுது அவர்கள் அவரை ஏற்றுக் கொள்வார்கள்.

முதல்முறை அவர் வந்தபொழுது யூதர்கள் சிலுவையிலே அடிக்கப்படும்படியாக அவரை ஒப்புக் கொடுத்தார்கள். இரண்டாவது முறை அவர் வரும்பொழுது அவருக்கு சொந்தமானவர்களாகிய அந்த யூதர்கள் அவரைப் பார்த்து, இந்தக் காயங்கள் என்ன? இந்த தழும்பு என்ன? என்று கேட்பார்கள். அப்பொழுது அவர் என்ன சொல்வார் தெரியுமா? சகரியா 13ஆம் அதிகாரம் 6ஆம் வசனத்தைப் பாருங்கள்.

'அப்பொழுது ஒருவன் அவனை நோக்கி : உன் கைகளில் இருக்கிற இந்த வடுக்கள் ஏதென்று கேட்டால், என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள் என்பான்'.

அதுமட்டுமல்ல சகரியா 13ஆம் அதிகாரம் முதலாம் வசனம்.

'அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்.'

அருமையானவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அவருடைய சகோதரர்களான யூதர்களுக்கும் ஒரு குடும்ப உறவாய் அது இருக்கும். யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுக்கு தன்னை வெளிப்படுத்தும் இந்த சம்பவம், ஒரு நாள் இயேசு கிறிஸ்து தன்னை வெளிப்படுத்தும் சம்பவத்திற்கு ஒத்ததாயிருக்கும்.

யோசேப்பு உணர்ச்சிவசப்பட்டு தன்னை அடக்கிக் கொள்ள முடியாதவனாய் இருக்கிறான். யோசேப்பு அழுததை பார்வோன் வீட்டிலே இருக்கிறவர்களும் கேட்டார்கள். யோசேப்பின் வீட்டிலே என்ன நடக்கிறது என்பது அவர்களுக்குப் புரியவில்லை.

ஆதியாகமம் 45 : 3

இங்கே நாம் வாசிக்கிறது என்ன? சகோதரர்கள் கலக்கமுற்றிருந்தார்கள். ஏற்கனவே அவர்கள் பயத்தோடும், நடுக்கத்தோடும் இருக்கிறார்கள். இப்பொழுது யோசேப்பு தான் யார் என்பதை வெளிப்படுத்திய உடனே பயம் அதிகமாயிற்று, அதைத்தான் 'கலக்கம்' என்ற வார்த்தை வெளிப்படுத்துகிறது.

இஸ்மவேலரிடத்திலே யோசேப்பு விற்கப்பட்டதிலிருந்து கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன, என்றாலும் இப்பொழுது அவன் பழிக்குப்பழி வாங்குவான் என்று பயப்படுகிறார்கள். வாயைத் திறந்து அவர்களால் பேச முடியவில்லை. அவனுடைய கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை.

www.Radio882.com

ஆதியாகமம் 45 : 4

சற்றே கற்பனை செய்து பாருங்கள். உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான் என்று சொன்ன உடனே அது எப்படி இருந்திருக்கும் அவர்களுக்கு? யோசேப்பின் உணர்ச்சிகளை கவனித்தீர்களா? அவன் அவர்கள் மேலே கோபமாக இல்லை. பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் கொஞ்சம் கூட இல்லை. சாதாரண மனிதனுடைய உணர்ச்சிதான் அப்படிச் சொல்லும். ஆனால் ஏன் அவன் பழிவாங்க எண்ணவில்லை?

ஆதியாகமம் 45 : 5

தனது வாழ்க்கையிலே நடைபெற்ற எல்லா காரியமுமே தேவன் ஒரு நோக்கத்தோடு அனுமதித்தார் என்பதை யோசேப்பால் காணக்கூடியதாய் இருந்தது. ஆம். தேவன் அவனுடைய வாழ்க்கையிலே செயல்பட்டு வந்தார். இதைத்தான் பலமுறை கர்த்தர் யோசேப்போடே இருந்தார். கர்த்தர் யோசேப்போடடே இருந்தார் என்று வாசிக்கிறோம்.

ஆதியாகமம் 45 : 6 – 8

நீங்களும் நானும் கர்த்தருடைய கரத்தை நம்முடைய வாழ்க்கையிலே காணக்கூடியவர்களாய் இருப்போமென்றால், நாம் கோபப்பட்டு பழிவாங்க வேண்டுமென்று நினைப்போமா? நிச்சயமாக நாம் அப்படி இருக்கப்போவதில்லை. இந்த சூழ்நிலையிலேயும் யோசேப்பு கர்த்தருக்கு கனத்தையும், மகிமையையும் செலுத்துகிறான். எகிப்திற்குள்ளே யோசேப்பு வந்தபொழுது வயது 17. பார்வோனுக்கு முன்னாலே அவன் நின்ற பொழுது அவனுக்கு வயது 30. ஏழு வருடங்கள் அங்கே விளைச்சல் செழிப்பாக இருந்தது. இப்பொழுது பஞ்சம் ஆரம்பித்து 2 வருடங்கள் உருண்டோடிவிட்டன. எனவே இப்பொழுது யோசேப்புக்கு வயது 39. அவன் இந்த எகிப்து தேசத்திலே கடந்த 22 ஆண்டுகள் வாழ்ந்து வந்திருக்கிறான். இந்த 22 ஆண்டுகள் அவனுடைய வாழ்க்கையிலே நடந்த ஒவ்வொரு காரியத்திலேயும் கர்த்தருடைய கரத்தை அவனால் காணக்கூடியதாய் இருந்தது.

உங்களுடைய வாழ்க்கையிலேயும் கடந்த இத்தனை ஆண்டுகளாக நான் இப்படியெல்லாம் பாதையைக் கடந்து வந்திருக்கிறேனே என்று யோசித்துக் கலங்கிக் கொண்டு இருக்கிறீர்களா? நீங்கள் கர்த்தருடைய பிள்ளையாக இருப்பீர்களென்றால், நீங்கள் கர்த்தருடைய வழிநடத்துதலை உங்கள் வாழ்க்கையிலே உணர முடியும்.

ஆதியாகமம் 45 : 9 – 11

அந்தக் குறிப்பிட்ட காலக்கட்டத்திலே யாக்கோபும் அவன் குடும்பமும் கானான் தேசத்திலேயே குடியிருந்திருப்பார்களென்றால், உயிர் பிழைத்திருக்க முடியாது. அவர்கள் எல்லாருமே மரித்துப் போயிருப்பார்கள். ஆனால், எகிப்து தேசத்திலேயே சிறப்பான பகுதியாகிய கோசேன் நாட்டிலே அவர்களைத் தங்கும்படியாக யோசேப்பு அழைக்கிறான்.

www.Radio882.com

அந்த கோசேன் நாட்டிலே இருக்கும் பொழுதுதான் தேவன் அவர்களை ஒரு தேசமாக்கப் போகிறார். உலகத்திலே எல்லா மக்கள் மத்தியிலேயும் அவர்களைத் தனித்து அவர் பாதுகாக்கப் போகிறார். யோசேப்பின் சகோதரர்களுடைய வாழ்க்கையானது அவர்கள் சீக்கிரமாக கானானைவிட்டு வெளியே வரவேண்டும் என்பதை வெளிப்படுத்தியது.

ஆதியாகமம் 45 : 12

யோசேப்பு பேசப் பேச அவர்கள் எதையும் சொல்லமுடியாதவர்களாக, துக்கம் நிறைந்த, முகத்தோடு யோசேப்பின் வார்த்தைகளை கவனித்துக் கொண்டே இருக்கிறார்கள். எதையுமே அவர்களால் நம்பமுடியவில்லை. அவர்கள் கொஞ்சம் கூட சிந்தனை செய்து பார்க்காத ஒரு நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆதியாகமம் 45 : 13, 14

ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளான பென்யமீனும் யோசேப்பும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி அழுகிறார்கள்.

ஆதியாகமம் 45 : 15

இதுவரை அதிர்ச்சியிலே மூழ்கிப்போயிருந்த சகோதரர்கள் இப்பொழுது தங்கள் உண்மையான மனநிலைக்குள்ளே வருகிறார்கள். மனம் திறந்து பேச ஆரம்பிக்கிறார்கள். இந்த செய்தி உடனே வெளியே பரவ ஆரம்பிக்கிறது.

ஆதியாகமம் 45 : 16

யோசேப்பின் வீட்டிலே பெரிய அமர்க்களமாய் இருக்கிறது. வெளியிலிருக்கிற மக்கள் அதைக் கேட்கிறார்கள். அங்கே என்னதான் நடக்கிறது என்பதைப் பார்வோன் அறிந்துகொள்ள விரும்புகிறான். எனவே யோசேப்பின் வீட்டிலே வேலை செய்கிற ஏதாவது ஒரு வேலைக்காரனைக் கூப்பிட்டு இது எல்லாம் என்னப்பா, என்ன நடக்கிறது என்று கேட்டிருப்பான். அதற்கு அந்த வேலைக்காரன், கானான் தேசத்திலிருந்து 11 பேர் வந்தார்கள் அல்லவா, அவர்கள் எல்லாரும் யோசேப்பின் சகோதரர்கள் என்று கூறியிருப்பான். இது பார்வோனுக்கு உற்சாகத்தை அளித்தது.

இது ஏன் பார்வோனுக்கு உற்சாகத்தை அளித்து இருக்கவேண்டும்? ஞாபகமிருக்கிறதா? அந்தக் குறிப்பிட்ட காலத்திலே எகிப்தின் பார்வோனாய் இருந்தவன் எகிப்து தேசத்து மனிதனல்ல, அவன் ஒரு க்ஷிதீவவிலிவி லுஷ்ஜஆ. அதாவது யோசேப்பின் குடும்பத்தைப் போல வேறு நாட்டிலிருந்து எகிப்துக்கு குடியெர்ந்து வந்து, அங்கு மற்றுமொரு குடும்பத்தைச் சேர்ந்தவன். எகிப்தியர்களை அவனால் நம்பமுடியவில்லை. யோசேப்பின் வாழ்க்கையிலே காணப்பட்ட உண்மையும் உத்தமமும் அவனுக்கு பிடித்ததாய் இருந்தது. எனவே, இன்னும் சிலர் அப்படிப்பட்ட மனிதர்கள் தனது தேசத்திற்கு வருவதைக் குறித்து அவன் மகிழ்ச்சி அடைந்தான்.

www.Radio882.com

ஆதியாகமம் 45 : 17 – 19

யோசேப்பு காரியங்களைத் திட்டம் செய்யும் முன்பதாக தேவன் பார்வோனின் இருதயத்திலே பேசி, அவனுடைய குடும்பத்திலே எல்லாரையும் அழைத்து வருவதற்கான வண்டிகளை ஒழுங்குபண்ணும்படியாய்ச் சொல்கிறான்.

பிரியமானவர்களே, சக்கரத்தை கண்டுபிடித்தது ஒரு பெரிய காரியம். அந்நாட்களிலே, கானானிலே வாழ்ந்த யாருமே வண்டிகளை பயன்படுத்தவில்லை. சக்கரங்களை பயன்படுத்தவில்லை. ஆனால் அந்த நாட்களிலே எகிப்தியர்கள் அந்தக் காரியத்திலே முன்னேற்றம் அடைந்தவர்களாய் காணப்பட்டார்கள்.

ஆதியாகமம் 45 : 20

குழந்தைகளையும் மனைவிகளையும் அழைத்துக் கொண்டு வாருங்கள்; வேறு பொருட்களை எடுத்து வரவேண்டாம்; இங்கே உங்களுக்குத் தேவையானது எல்லாம் இருக்கிறது என்று உறுதி சொல்கிறான்.

ஆதியாகமம் 45 : 21 – 26

யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பின் ஆலோசனைப்படியே வண்டிகளைக் கொண்டு போகிறார்கள். தகப்பனாருக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் தின்பண்டங்களையும் அனுப்புகிறான். ஆனால் இவற்றையெல்லாம் பார்த்த பிறகும் யாக்கோபு அவனுடைய குமாரர்கள் சொல்வதை நம்பவில்லை என்று வாசிக்கிறோம்.

ஆம். அவன் கொஞ்சங் கூட இதை எதிர்பாராததினாலே அவனால் நம்ப முடியவில்லை.

ஆதியாகமம் 45 : 27

இறுதியாக எல்லாவற்றையும் நம்ப ஆரம்பிக்கிறான். அவனுக்குள்ளே கொஞ்சம் உற்சாகம் பிறக்கிறது.

ஆதியாகமம் 45 : 28

இப்படிப்பட்ட மயிர்க்கூச்சரிக்கும் சம்பவங்களை நாம் இங்கே வாசிக்கிறோம். தன் வாழ்நாள் முழுவதும் யோசேப்பைப் பார்க்கவே மாட்டேன் என்று எண்ணியிருந்த யாக்கோபுக்கு இந்தச் செய்தி மிகவும் உற்சாகத்தைக் கொடுத்தது. எனவே எகிப்துக்குப் போவதைக் குறித்து உடனடியாகத் தீர்மானம் பண்ணுகிறான்.

அங்கே போய் எகிப்திலே தொடர்ந்து தங்கவேண்டுமென்று யாக்கோபு நினைத்தான், என்று நினைக்கிறீர்களா? இல்லை. நான் மரணமடையும் முன்னே போய் அவனைப் பார்ப்பேன். தனது மகனாகிய யோசேப்பைப் பார்த்து விட வேண்டுமென்ற ஒரு எண்ணம்தான் அப்பொழுது அவனுக்கு இருந்தது. தன்னுடைய மகனுடைய வீட்டிற்குப் போய்விட்டுப் பஞ்சகாலம் முடிந்தவுடனே திரும்ப வந்துவிடவேண்டும் என்றுதான்

www.Radio882.com

எண்ணினான்.

ஆனால், அவன் திரும்பக் கானான் தேசத்திற்கு வரவில்லை. ஆனால் அடக்கத்திற்காக அவனுடைய சரீரத்தைக் கொண்டு வந்தார்கள். அவன் எகிப்திலே மரித்தான். அவனுடைய முழு குடும்பமும் எகிப்திலேயே ஜீவித்து வந்தாலும் அவனுடைய சரீரம் கானானிலே அடக்கம் செய்யப்பட்டது.

ஆதியாகமம் : 46

ஒரு சில ஆண்டுகள் தான் எகிப்து தேசத்திற்குள்ளே போகிறேன் என்று யாக்கோபு சிந்தித்தான். தேவன் ஆபிரகாமைப் பார்த்து, எகிப்திற்குப் போக வேண்டாம் என்று கூறினார். ஆனால் ஆபிரகாம் எகிப்திற்குச் சென்றபடியினாலே பிரச்சனையிலே மாட்டிக்கொண்டான். அதே காரியத்தை ஈசாக்குக்கும் தேவன் சொன்னார். எனவே இப்பொழுது கேள்வி என்னவென்றால், யாக்கோபு எகிப்திற்குச் செல்ல வேண்டுமா? இல்லையா? என்பதுதான்.

தனது மகனுடைய அழைப்பும், பார்வோனுடைய அழைப்பும் இருந்தாலும் தேவன் தன்னை அங்கு போகச் சொல்லுகிறாரா? இல்லையா? என்பதைக் குறித்து அவன் அறிந்து கொள்ள விரும்பினான்.

ஆதியாகமம் 46 : 1

இங்கே ஒரு அற்புதமான காரியம் நடைபெறுகிறது. தன் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுக்கு யாக்கோபு பலியிடுகிறான். முதல் முறையாக அவன் கானானை விட்டு ஆரானை நோக்கி செல்லும் பொழுது பெத்தேலுக்குப் போனான். அப்பொழுது அவன் தேவனைத் தேடினானா? இல்லை. தேவனை விட்டு தூரமாக ஓடுகிறேன் என்றுதான் எண்ணினான். தேவனுடைய திட்டத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணமே அப்பொழுது அவனுக்கு இல்லை. தேவன் தன்னை வழிநடத்த வேண்டும், என்று அவன் கேட்கவும் இல்லை.

இளைஞனான யாக்கோபுக்கும், ஆபிரகாமின் வேலைக்காரனுக்கும் எவ்வளவு வித்தியாசம் பார்த்தீர்களா? ஆபிரகாமுடைய வேலைக்காரன் ஈசாக்குக்குப் பெண் கொள்ளப் போகும்பொழுது ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்பொழுதும் ஜெபிக்கிறான். ஆனால் யாக்கோபு தன்னுடைய வாழ்க்கையிலே தேவன் தேவை என்பதை உணரவேயில்லை.

ஆனால், பல காலங்களுக்குப் பின்னர்தான் ஒவ்வொரு காரியத்திலேயும் தேவனைத் தேடி அவருடைய வழிநடத்துதலை பெற்றுக் கொள்வதுதான் வாழ்க்கையிலே சரியான வழிமுறை என்பதை அறிந்து கொண்டான்.

இன்றைக்குக் கிறிஸ்தவர்களிலே எத்தனை பேர் தங்கள் வார நாட்கள் முழுவதிலுமே

www.Radio882.com

தேவனை தங்களுடைய வாழ்க்கைத் திட்டத்திற்கு வெளியே வைத்திருக்கிறார்கள். அவர்களே தங்கள் சொந்த தீர்மானங்களை செய்கிறார்கள். தங்கள் விருப்பம் போல நடக்கிறார்கள். பின்னர் ஞாயிற்றுக் கிழமையிலே ஆலயத்திற்கு வருகிறார்கள். மிக பயபக்தியோடு தேவனுடையச் சித்தத்தைச் செய்ய விரும்புவதாய் சொல்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே ஞாயிற்றுக்கிழமை ஆலயத்திற்குப் போவதும் அல்லது ஒரு ஓய்வு நாள் பள்ளி வகுப்பை எடுப்பதுமே கடவுள் சித்தம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பின்னர் ஞாயிற்றுக்கிழமை இரவிலே தேவனுக்கு டாட்டா சொல்லிவிட்டு வாரம் முழுவதிலேயும் அவரைக்குறித்து சிந்திப்பதும் இல்லை, வாழ்க்கையிலே எந்தக் காரியத்திற்கும் அவரிடத்திலே கேட்பதுமில்லை.

யாக்கோபு தன்னுடைய வாழ்க்கையிலே எத்தனையோ காரியங்களுக்கு தேவனை ஏறிட்டுப் பார்க்கவே இல்லை. ஆனால் இப்பொழுது பெயெர்செபாவுக்கு வருகிறான். தனது தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுக்குப் பலி செலுத்துகிறான். இப்பொழுது தேவன் அவன் மேலே கிருபையாய் இரங்கி அவனுக்குக் காட்சி கொடுக்கிறார்.

ஆதியாகமம் 46 : 2, 3

எகிப்திலே கொண்டுபோய் வைத்து யாக்கோபை ஒரு பெரிய தேசமாக்குவேன் என்று தேவன் வாக்குக்கொடுக்கிறார். இப்படிச் சொன்ன வார்த்தையை தேவன் செய்தாரா என்று நீங்கள் கேட்கலாம். வேதப்புத்தகத்தின் அடுத்த புத்தகத்திலே இதை நாம் அறிந்து கொள்ளமுடியும்.

யாத்திராகமம் முதலாம் அதிகாரம் 7ஆம் வசனத்தைப் பாருங்கள்.

‘இஸ்ரவேல் புத்திரர் மிகுதியும் பலுகி, ஏராளமாய்ப் பெருகிப் பலத்திருந்தார்கள். தேசம் அவர்களால் நிறைந்தது.‘

ஆம். பிரியமானவர்களே, எகிப்திலே அவர்கள் இருக்கும் பொழுது உண்மையாகவே இஸ்ரவேலரின் ஜனத்தொகை மிகவம் பெருகியது. இதற்கு நாம் கொடுக்கக்கூடிய விளக்கம் என்ன? யாக்கோபுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை பரிபூரணமாக நிறைவேற்றுகிறார். அது என்ன வாக்குத்தத்தம்? நீ எகிப்து தேசத்துக்குப் போகப் பயப்படவேண்டாம் அங்கே உன்னை பெரிய ஜாதியாக்குவேன்.

ஆதியாகமம் 46 : 4, 5

ஞாபகமிருக்கிறதா? யாக்கோபைக் கூட்டிவருவதற்காக பார்வோன் வண்டிகளை அனுப்பியிருந்தான். அவைகளில் ஏறிப் புறப்படுகிறார்கள்.

மூன்று நிலப்பிரதேசங்களைக் கொண்டு யாக்கோபின் வாழ்க்கையை மூன்று பகுதிகளாக நாம் பிரிக்கலாம். ஆரானில் வாழ்ந்த காலம், கானானில் வாழ்ந்த காலம், எகிப்திலே வாழ்ந்த காலம். அதுமட்டுமல்ல அது மூன்று நிலப்பரப்புக்கள் தொடர்பானது

www.Radio882.com

மட்டுமல்ல, ஆவிக்குரிய வாழ்க்கையிலேயும் மூன்று நிலைமைகளிலே அவன் வாழ்ந்திருக்கிறான். ஒரு கோலோடு கூட யாக்கோபு தனது சொந்த வீட்டை விட்டுப் புறப்பட்டான். ஆரானுக்கு வந்தான். அங்கே அவன் தேவனுடைய மனிதனாய் இருந்தாலும் மாம்சத்திற்கடுத்த காரியங்களுக்காக வாழ்ந்தான்.

இரண்டாவதாக ஆரானைவிட்டு வெளியே ஓடி வந்தான். தன்னுடைய மாமனைவிட்டு பயந்து கொண்டு ஓடி வந்தான். அதே நேரத்திலே தனது சகோதரனாகிய ஏசாவை சந்திக்கவும் பயந்தான்.

அடுத்ததாகக் கானானிலே யாக்கோபு போராடினான். அதாவது தன் சொந்த பெலத்தினாலேயே அவன் போராடினான். இப்பொழுது அவன் எகிப்திற்கு வருகிறான். அவனுடைய சொந்த பெலத்தினாலே அவன் நடக்கப் போகிறதில்லை, பயந்து ஒழிந்து ஓடவில்லை. இப்பொழுது விசுவாச நடை நடக்கிறான்.

இந்த வேதப் பகுதியிலே யாக்கோபு ஒரு முக்கியமானவனாய் திகழ்ந்தாலும், எப்படி அவன் ஒரு விசுவாச மனிதனாக மாறினான் என்பதும் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. தேவன் விரும்பிய ஒரு மனிதனாக யாக்கோபு மாறினான். தேவனே இப்படிப்பட்ட மனிதர்களை உருவாக்க முடியும்.

நம்மில் அநேகருடைய வாழ்க்கை இப்படித் தான் இருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். முதல் முதலாவதாக சுவிசேத்தோடு நாம் தொடர்பு கொண்ட காலம் உண்டு. கர்த்தருடைய வார்த்தையினாலே நாம் அவரண்டை திரும்பினோம். தொடர்ந்து போராட்டங்கள் நிறைந்த காலம் நம்முடைய வாழ்க்கையில் இருந்தது. அதாவது நாமே நம்முடைய சொந்த பெலத்தினாலே ஒரு விசுவாச வாழ்க்கை வாழ முயற்சித்தக் காலங்கள். சொல்லப்போனால் பல ஆண்டுகள் அவ்விதமான போராட்டமான வாழ்க்கையிலே வாழ்ந்தோம். நம்முடைய வாழ்க்கையிலேயும் ஒரு குறிப்பிட்ட காலம் வந்தபொழுது கிருபையிலே பெரியவர்களாக கிருபையிலே பெருகினவர்களாக தேவனை அறியும் அறிவிலே சரியான அளவு வளர்ந்து விசுவாசத்தினாலே நாம் நடக்க ஆரம்பித்திருக்கிறோம்.

ஒரு வேளை உங்களிலே சிலர் இப்பொழுதுதான் இரட்சிப்பின் அனுபவத்திற்குள்ளே கடந்து வந்தவர்களாய் இருக்கலாம். புதிதாக இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கலாம். அல்லது ஒரு வேளை நீங்கள் இந்த போராட்டத்தின் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கலாம். கர்த்தருக்காக வாழவேண்டுமென்ற விருப்பம் இருக்கிறது; ஆனால் உங்களால் வாழ முடியவில்லை. காரணம் நீங்கள் உங்கள் சொந்த பெலத்தினாலே முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள்.

கலங்காதிருங்கள். பரிபூரணமாக தேவனை விசுவாசியுங்கள். அவர் உங்களை மேன்மையான விசுவாச வாழ்க்கைக்குள்ளே வழிநடத்துவார்.

www.Radio882.com

ஆதியாகமம் 46 : 6, 7

அங்கே காணப்பட்ட பஞ்சத்தின் நிமித்தமாக யாக்கோபு எல்லாரையும், பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு செல்ல வேண்டியதாயிருந்தது. அது மட்டுமல்ல தங்கள் ஆடு மாடுகளையும் தாங்கள் கானான் தேசத்திலே சம்பாதித்த தங்கள் பொருள்கள் எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு போகிறார்கள்.

ஆதியாகமம் 46 : 8 – 25

இங்கே யாக்கோபுவின் சந்ததியைக் குறித்து நாம் வாசிக்கிறோம். இது மிக முக்கியமான ஒரு சந்ததி. ஏனென்றால் இந்த வரிசையிலேதான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே வருகிறார். இந்த அட்டவணைக்குப் பிறகு,

ஆதியாகமம் 46 : 26

கவனித்தீர்களா? யாக்கோபு மூலமாக இப்பொழுது எகிப்துக்குள்ளே பிரவேசிக்கிறவர்கள் அறுபத்தி ஆறுபேர். யோசேப்பும் அவனுடைய குடும்பமும் ஏற்கனவே எகிப்திற்குள்ளே இருக்கிறது.

ஆதியாகமம் 46 : 27

எனவே யாக்கோபின் குடும்பத்தினர் எழுபது பேராக கணக்கெடுக்கப்படுகிறார்கள். யாக்கோபுவின் ஒவ்வொரு மகனும் அவனுடைய சந்ததியும் பட்டியலிடப்பட்டு இருக்கிறது. சரி, இந்தப் பட்டியல்கள் ஏன் வேதப் புத்தகத்திலே சொல்லப்பட்டிருக்கிறது? இதை விட நமக்குக் கொடுக்க அதிகமான முக்கிய காரியங்கள் தேவனிடத்திலே இல்லையா?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு முக்கியமான காரியங்கள் எதுவும் இல்லை. இந்த சந்ததியிலேதான் இயேசு கிறிஸ்து உலகத்திலே வந்தார். இந்தப் பெயர் பட்டியலிலே பார்க்கிற சிலருடைய பெயரை மீண்டுமாக நாம் மத்தேயு எழுதின சுவிசேம் முதலாம் அதிகாரத்திலே புதிய ஏற்பாட்டிலே பார்க்கலாம். அதுமட்டுமல்ல லூக்கா எழுதின சுவிசேம் 3ஆம் அதிகாரத்திலேயும் நாம் பார்க்கலாம்.

இந்த காரணங்களினாலே இந்தப் பெயர் பட்டியல் முக்கியமானது. அதுமட்டுமல்ல மற்றுமொரு காரணமுமுண்டு. அது தனிப்பட்ட வித்திலே முக்கியமானது. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இப்போது உங்கள் முன்னாலே நான் வைக்க விரும்புகிற கேள்வி உங்களுடைய பெயர் அந்த ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறதா? ஆதாமின் சந்ததியிலே எப்படி நீங்கள் ஒரு சந்ததியானீர்களோ, அதேப்போலக் கிறிஸ்துவின் வரிசையிலேயும் நீங்கள் கடந்து வரவேண்டும். ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்திலே பெயர் எழுதப்பட வேண்டுமென்றால், இயேசு கிறிஸ்துவை உங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வதின் மூலமாக நீங்கள் மறுபிறப்பு அடையவேண்டும். அவ்வாறு அவரை நீங்கள்

ஏற்றுக் கொள்ளும் பொழுது நீங்கள் அவருடையப் பிள்ளைகளாகிறீர்கள்.

அருமையானவர்களே, அப்பொழுது நீங்கள் எத்தனை முக்கியமானவர்களாகி விடுகிறீர்கள் இல்லையா? உங்களிலே எண்ணற்றவர்களை எங்களுக்கு தனிப்பட்ட விதத்திலே தெரியாது. உங்களிலே அநேகரைக் குறித்து நாங்கள் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால் உங்களைக் குறித்து தேவனுக்குத் தெரியும். உண்மையைச் சொல்லப் போனால் உங்கள் தலையிலே எத்தனை முடியிருக்கிறது என்பதும் அவருக்குத் தெரியும்.

இந்த உலகத்திலே வேறு எவரையும் விட உங்களை அவர் பரிபூரணமாய் அறிந்திருக்கிறார். அவர் உங்களை அறிந்திருக்கிறது மட்டுமல்ல உங்கள் தாயுடைய அன்பைக் காட்டிலும் மேலாக உங்களை அவர் நேசிக்கிறார். உங்கள் தாய் எப்போதாவது உங்கள் தலையில் உள்ள முடி எத்தனை இருக்கிறதென்று எண்ணியிருக்கிறார்களா? ஆனால் தேவனுக்கு அது தெரியும். உங்களை தனிப்பட்ட விதத்திலே அவர் அறிந்திருக்கிறார். உங்களுடைய ஒவ்வொரு உணர்வுகளையும், சரீரத்திலே உங்கள் வேதனைகளையும், உங்கள் ஆசைகளையும், உங்கள் எதிர்பார்ப்புகளையும் எல்லாவற்றையும் அவர் அறிந்திருக்கிறார்.

யாக்கோபுடைய வம்சத்தின் பெயர் பட்டியல் எனக்கும் உங்களுக்கும் எந்த அர்த்தத்தையும் கொடுக்கிறதாய் இல்லை. தொலைக்காட்சிகளிலே செய்தி தொடரிலே எத்தனையோ செய்திகளை நாம் பார்க்கிறோம். சில செய்திகளைப் பார்க்கும்பொழுது திரள் கூட்டமான மக்களை தெருக்களிலேயோ, அரங்கங்களிலேயோ பார்க்கிறோம். அவர்களைப் பார்க்கும்பொழுது நம்முடைய உள்ளத்திலே எழும்புகிற எண்ணமென்ன? அவர்கள் ஒவ்வொருவரையும் தேவன் தனிப்பட்ட விதத்திலே அறிந்திருக்கிறார். அவர்கள் ஒவ்வொருவரையுமே அவர் நேசிக்கிறார்.

ஒரு வேளை அவர்கள் எல்லாரும் அவரைக் குறித்து சிந்திக்கிறதில்லை, அவரைத் தேடுகிறதில்லை. ஆனால் தேவனுடைய பார்வையிலே அவர்கள் ஒவ்வொருவருமே விசேஷித்தவர்கள். ஏன் தெரியுமா? அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய இரத்தத்தை சிந்தி சிலுவையிலே மரித்திருக்கிறார்.

உலகத்திலே மக்கள் தொகை பெருக்கத்தின் மத்தியிலே நீங்கள் ஒருவராக இருக்கலாம். ஆனால் நீங்களும் தேவனுக்கு முக்கியமான ஒரு நபர். யாக்கோபின் சந்ததியிலே உள்ள மக்களின் பெயர்கள் நமக்கு முக்கியமானதாக இல்லை. ஆனால் அவர்கள் ஒவ்வொருவரைக் குறித்தும் தேவன் கரிசனை உள்ளவராய் இருக்கிறார். எனவேதான் அவர்களுடைய பெயர்களை அவர் பதிவு செய்திருக்கிறார்.

இதையெல்லாம் சிந்திக்கும் பொழுது மீண்டுமாக என்னுடைய உள்ளத்திலே எழும்புகிற ஒரு கேள்வி, உங்களுடைய பெயர் ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறதா? இப்பொழுது யாக்கோபின் சந்ததி முழுமையாக எகிப்து தேசத்திலே வந்து சேருகிறது.

www.Radio882.com

ஆதியாகமம் 46 : 28

இந்த வேதப்பகுதியிலிருந்து நாம் கற்றுக் கொள்ளுகிற பாடமென்ன? முதலாவதாக நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலேயுமே இப்படிப்பட்ட மூன்று விதமான ஆவிக்குரிய வாழ்க்கையை நாம் காணக்கூடியவர்களாய் இருக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்த பின்னரும் மாம்சீகத்திற்கு அடுத்த காரியங்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கும் காலம். இரண்டாவதாக சொந்த பெலத்தினாலே வாழ முயற்சிக்கும் போராட்டமான ஒரு காலம். மூன்றாவதாக விசுவாசத்திலே நடக்கும் ஒரு வாழ்க்கை.

இந்த மூன்று வகையான வாழ்க்கைகளிலே இன்றைக்கு நீங்கள் எதிலே இருக்கிறீர்கள் என்பதை சற்றே சிந்தித்துப் பாருங்கள். பரிபூரண விசுவாசமுள்ள விசுவாச வாழ்க்கைக்குள்ளே கர்த்தர் நம்மை வழிநடத்தும் படியாய் அனுதினமும் அவரை நோக்கிப் பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இரண்டாவதாக நாம் எந்த ஒரு முக்கியமான தீர்மானங்கள் எடுக்கும்பொழுதும் தேவனுடைய பாதத்திலே காத்திருந்து ஜெபித்து அவர் திட்டவட்டமாய் நமக்கு வழி நடத்தும் போதே நாம் அதற்குக் கீழ்படிந்து நடப்பது சிறந்தது. அவசரப்பட்டு தீர்மானங்களை செய்வோமென்றால், பின்னாலே நாம் வருத்தப்படுவோம். ஆனால், நாம் தீர்க்கமாக ஜெபித்து எடுத்த தீர்மானங்களிலேயும் பிரச்சனை வந்த உடனே இது கர்த்தருடைய சித்தம் இல்லையோ என்று நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆரம்பம் முதலே ஆண்டவருடைய சித்தத்தை, நாம் செய்யவேண்டுமென்ற வாஞ்சையோடு நீங்கள் செயல்பட்டுக் கொண்டிருப்பீர்கள் என்றால், பிரச்சனைகள் வந்தாலும் அதின் முடிவிலே ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை நீங்கள் கண்டு கொள்ளமுடியும்.

மூன்றாவதாக நம்முடைய ஆண்டவராகிய கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட விதத்திலே அறிந்திருக்கிறார். நம்மைக் குறித்து அவர் அக்கறை உள்ளவராய் இருக்கிறார். ஆனபடியினாலே எனக்கு யார் இருக்கிறார்கள் என்று இன்றைக்கு நீங்கள் கவலையோடு இருப்பீர்கள் என்றால், சகோதரனே, சகோதரியே கர்த்தர் உங்களை நேசிக்கிறார். உங்களைக் குறித்து அக்கறை உள்ளவராய் இருக்கிறார். உங்களுடைய வாழ்க்கையிலே ஒரு திட்டம் வைத்திருக்கிறார். உங்களை அவர் மகிமைப்படுத்துவார்.

ஆதியாகமம் 46 : 29

அருமையானவர்களே, இந்த சந்திப்பும் வெகுநேரம் அவன் கழுத்தை விடாமல் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுத அழுகையும் மிக அர்த்தம் நிறைந்தது. அவனுடைய உணர்வுகள் உண்மையானது. ஏனென்றால் எத்தனை அற்புதமான ஒரு கூடிவருதல் இது இல்லையா?

ஆதியாகமம் 46 : 30

www.Radio882.com

வயதான யாக்கோபிற்கு இது எத்தனை மகிழ்ச்சியான ஒரு நேரம் இல்லையா? சொல்லப்போனால் யாக்கோபு மிகவும் வயது சென்றவனாகி மரிக்கும் தருவாயிலே இருக்கிறான் என்று கூட சொல்லலாம். எப்படியோ கஷ்டப்பட்டுத்தான் இந்த பிரயாணத்தையும் அவன் மேற்கொண்டிருப்பான். தேவன் அவனைத் தாங்கினார். எகிப்து நாட்டிலேயும் சில ஆண்டுகள் அவன் ஜீவனோடு வாழ தேவன் அவனுக்குக் கிருபை செய்தார்.

இந்த இறுதி காலக்கட்டத்திலே இஸ்ரவேலும் யோசேப்பும் ஒன்றாக வாழ்ந்தார்கள். இப்பொழுது யாக்கோபு விசுவாசத்திலே தேவனுடைய பிள்ளையாய் இருப்பதை நாம் காணக்கூடியதாய் இருக்கிறது. எனவே அவனுடைய பெயர் இஸ்ரவேல் என்று அழைக்கப்படுகிறது.

ஆதியாகமம் 46 : 31 – 34

அருமையானவர்களே, இன்றைக்கும் உலகத்தின் பல பகுதிகளிலே இந்த பிரச்சனை இருக்கிறது. நீங்கள் வசிக்கிற இடங்களிலே ஆடுகளை வளர்க்க முடியாது. அப்படி செய்வீர்களென்றால், உங்களுக்குப் பிரச்சனைதான். சில இடங்களிலே அப்படி ஆடுகளை வளர்க்கிறவர்களோடுகூட மற்றவர்கள் உறவு வைத்துக்கொள்வது கூட இல்லை. சொல்லப்போனால், அவர்களுக்கு மிகுந்த பிரச்சனை.

அதேபோலத்தான் அன்றைக்கு எகிப்து தேசத்திலேயும் மேய்ப்பர்களைக் குறித்து அவர்கள் அக்கறைப்பட்டுக் கொள்ளவேயில்லை. அவர்களை அருவருப்பாக நினைத்தார்கள். ஆனால் நமக்கு மிக ஆர்வம் தரக்கூடிய ஒரு காரியம் என்னவென்றால், வேதப் புத்தகமானது மேய்ப்பர்களைக் குறித்து அநேகக் காரியங்களைச் சொல்லுகிறது.

இவர்கள் தங்கள் சொந்த ஆடுகளை மேய்த்து வந்த மேய்ப்பர்கள். இன்றைக்கும் அப்படிப்பட்ட மக்கள் இஸ்ரவேல் தேசத்திலே இருக்கிறார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விவரிப்பதற்கும் இந்த மேய்ப்பன் என்ற வார்த்தைப் பயன்படுத்தப்படுகிறது. யோவான் 10ஆம் அதிகாரம் 11ஆம் வசனத்திலே நாம் வாசிக்கிறது போல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே நல்ல மேய்ப்பனாய் இருக்கிறார். அவர் தன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனையேக் கொடுத்தவர்.

இன்றைக்கும் தனது எல்லா ஆடுகளையும் மேற்பார்வை செய்யும் பிரதான மேய்ப்பராகவும் அவர் இருக்கிறார். அதுமட்டுமல்ல, அவரே இனிவரும் காலத்திலே தோன்றப் போகிற உன்னதமான மேய்பராகவும் இருக்கிறார். அவரே தன்னை மேய்ப்பன் என்று அழைக்கிறார்.

அருமையானவர்களே, அவர் இந்த உலகத்திற்கு அருவருப்பானவராய் காணப்படுகிறார். அவரை இந்த உலகம் இன்றைக்கு ஏற்றுக்கொள்ளவில்லை. வேதப் புத்தகத்தைப் பரிபூரணமாக விசுவாசியாத சிலர் இன்றைக்கு உலகத்திற்கு வித்தியாசமான

www.Radio882.com

ஒரு இயேசு கிறிஸ்துவைக் காண்பிக்கிறார்கள். அவர் கன்னியின் வயிற்றிலே பிறந்தவர் அல்ல, அவர் எந்த அற்புதங்களையும் செய்யாதவர், உலகத்தின் பாவத்திற்காக அவர் மரிக்கவில்லை. அதுமட்டுமல்ல உயிரோடு சரீரத்திலே அவர் எழுப்பப்படவும் இல்லை, என்று சொல்கிறார்கள்.

அருமையானவர்களே, இப்படிப்பட்ட இயேசு வாழவே இல்லை. இப்படிப்பட்ட இயேசுவைக் குறித்து எந்த சரித்திரமும் இல்லை. நாம் கன்னிப் பிறப்பான அற்புதங்களைச் செய்த உலகத்தின் பாவத்திற்காக மரித்த சரீரத்தோடு உயிரோடு எழுந்த இயேசுகிறிஸ்துவைக் குறித்த வரலாற்றைப் பெற்றவர்களாய்தான் இருக்கிறோம். அந்த மேய்ப்பனைத் தான் இந்த உலகம் விரும்புகிறதில்லை. இன்றைக்கும் அவர் உலகத்திற்கு அருவருப்பானவராய் இருக்கிறார்.

ஆம். எகிப்தியர்களுக்கு மேய்ப்பர்கள் அருவருப்பானவர்களாய் இருந்தார்கள். எனவே யோசேப்பு தனது சகோதரரிடத்திலே, பார்வோனிடத்திலே தாங்கள் மேய்ப்பர்கள் என்று சொல்லும்படியாகவும், தங்கள் ஆடுகளை தாங்களே மேய்ப்பவர்கள் என்றும் கூறும்படியாகவும் சொல்கிறான். அவர்களிடத்திலே ஆடுகளும், மாடுகளும் இருந்தன.

பின்னால் நாம் பார்க்கும்பொழுது, பார்வோன் கோசேன் நாட்டை அவர்களுக்குக் கொடுத்துத் தனது ஆடுகளையும் கவனிக்கும்படியானப் பொறுப்பை இந்த இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுக்கிறான். கோசேன் நாட்டிலே யாக்கோபின் குடும்பம் வந்து தங்கியிருப்பது அற்புதமான ஒரு காட்சியாய் இருக்கிறது. இதுவே பல்லாண்டு காலத்திற்கு அவர்களுடைய வீடாய் இருக்கப் போகிறது.

யோசேப்பின் மரணத்திற்குப் பிறகு அவர்கள் எகிப்து மக்களுக்கு அடிமைகளாகப் போகிறார்கள். அந்த காலக் கட்டங்களின் ஊடேயும் தேவன் அவர்களோடு கூட இருந்தார். அந்த இடத்திலேதான் அவர்கள் மிகப்பெரிய தேசமாக உருவெடுக்கிறார்கள். மோசேயின் தலைமைத்துவத்திலே தேவன் அவர்களை வழிநடத்திச் செல்லப்போகிறார்.

அருமையானவர்களே, யோசேப்புக்கு தேவன் தரிசனம் கொடுத்ததாக எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றாலும் யோசேப்பின் வாழ்க்கையிலே கர்த்தருடைய செயல்களை நாம் காணக்கூடியவர்களாய் இருக்கிறோம். யாக்கோபின் குடும்பம் முழுவதுமே பஞ்ச காலத்திலே உயிர் பிழைக்கும்படியாக எகிப்துக்கு வருவதற்காக தேவன் அவனை முன்னாலே அனுப்ப வேண்டியதிருந்தது.

இப்பொழுது ஆதியாகமம் 47ஆம் அதிகாரத்தைப் பார்ப்போம். இதுவரை யாக்கோபை ஒரு விசுவாசத்தின் மகனாக நாம் பார்க்கவில்லை. எகிப்திற்குள்ளே வரும் பொழுதுதான் ஒரு விசுவாச மனிதனாய் காணப்படுகிறான். இந்த அதிகாரம் யாக்கோபை ஒரு விசுவாச வீரனாக நமக்கு காட்டுகிறது. தேசத்திலே காணப்பட்ட பஞ்சமானது, மிகவும் கொடிதானதாகிறது. உலகத்தின் பல பகுதிகளிலுள்ள மக்கள் இதனாலே

www.Radio882.com

பாதிக்கப்பட்டிருந்தாலும் கானான் தேசமும் எகிப்து தேசமும் மட்டுமே இங்கே நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அங்கே வாழ்ந்த மக்களைக் குறித்துதான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஆதியாகமம் 47

ஆதியாகமம் 47 : 1

யோசேப்பு தனது தகப்பனாரையும், சகோதரர்களையும் பார்வோனுக்கு இப்பொழுது அறிமுகப்படுத்தப் போகிறான். அவர்களுக்கென்று ஒரு இடத்தைக் கேட்கும் முன்பதாகவே கோசேன் நாட்டிலே அவர்களைக் குடியிருக்கப் பண்ணுகிறான். எதற்காக அவர்கள் இங்கே குடியேறினார்கள் என்பதைக் குறித்து நாம் பின்னாலே பார்க்கப் போகிறோம். கோசேன் நாட்டிலே அவர்கள் தங்கிவிட்டார்கள் என்று சொல்லும்பொழுதே அந்த இடத்தை எளிதாகப் பார்வோன் அவர்களுக்குக் கொடுக்க முடியும். வாய்ப்பு அதிகம் இருக்கிறது. ஏனென்றால் ஏற்கனவே அவர்கள் அங்கே சேர்ந்து தங்களுடைய பொருட்களையெல்லாம் அவிழ்த்து அங்கே குடியேறியிருக்கிறார்கள்.

ஆதியாகமம் 47 : 2, 3

அருமையானவர்களே, அந்நாட்களிலே ஆடு மேய்க்கிறவர்களும் மாடு மேய்க்கிறவர்களும் இணைந்து செல்வதாக இல்லை. அதுமட்டுமல்ல எகிப்தியர்களுக்கு மேய்ப்பர்கள் என்றால் அருவருப்பாய் இருந்தது. மேய்ப்பர்களைக் குறித்து அவர்கள் அக்கறைப்பட்டுக் கொள்ளுகிறதே இல்லை. எனவே எகிப்திய ஜனங்கள் செய்யாத ஒரு காரியத்தை இந்த இஸ்ரவேலின் குமாரர்கள் செய்யும்படியான ஒரு வாய்ப்பு அங்கே திறக்கப்பட்டது.

ஆதியாகமம் 47 : 4– 6

எகிப்தியர்கள் ஆடுகளை மேய்க்கிறதிலே சிறந்தவர்களாகக் காணப்படாததால், பார்வோன் தனது ஆடுகளை மேய்பதற்குச் சிறந்த ஆட்களைத் தேடிக் கொண்டு இருந்திருக்கிறான். எனவே பார்வோன் தனது ஆடுகளை மேய்க்கும் பொறுப்பையும் யோசேப்பின் சகோதரரிலே சிலருக்குக் கொடுக்கும்படியாகக் கட்டளையிடுகிறான்.

ஆதியாகமம் 47 : 7

யாக்கோபைக் குறித்து நாம் கற்று வந்த காலங்களிலே இப்பொழுதுதான் சிறந்த ஒரு நிலைமையிலே யாக்கோபு நிற்கிறதை நாம் பார்க்கிறோம். யாக்கோபு பார்வோனை ஆசீர்வதிக்கிறான். தனது பையனுக்கேற்ற உயர்ந்த நிலையிலே அவன் வாழ ஆரம்பிக்கிறான். இப்பொழுது தேவனுக்குச் சாட்சியாக நிற்கிறான்.

பொதுவாகப் பெரியவர்கள் சிறியவர்களை ஆசீர்வதிப்பார்கள். இங்கே தேவனுக்குச் சாட்சியாக யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்தான்.

www.Radio882.com

ஆதியாகமம் 47 : 8

அருமையானவர்களே, இப்பொழுது யாக்கோபு தனது பழைய மாம்சீக வாழ்க்கையிலே கட்டுப்படுத்தப்பட்டவனாய் வாழந்துகொண்டு இருப்பானென்றால், நல்லது பார்வோன், எனக்கு இப்போது 130 வயதாகிறது, நான் எத்தனையோ காரியங்களை என்னுடைய வாழ்க்கையிலே சாதித்திருக்கிறேன், இளவயதிலேயே என்னுடைய மூத்த சகோதரனுக்கு நான் மேலெழுந்தவன், அதைத் தொடர்ந்து என்னுடைய மாமனாருக்கு மேலெழுந்து நான் எவ்வளவோ சம்பாதித்தவன் என்று கூறியிருப்பான்.

அவனுடைய குடும்பத்தைக் குறித்து பெருமைப் பாராட்டி இருந்திருப்பான். எனக்கு பன்னிரெண்டு குமாரர்கள் இருக்கிறார்கள் என்று இவ்வாறாகப் பல காரியங்களை அவன் சொல்லியிருக்கலாம்.

ஆனால், எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, இப்பொழுது யாக்கோபு மாம்சத்தினாலே ஆண்டு நடத்தப்படுகிறவன் அல்ல. எனவே என்ன சொல்லுகிறான் பாருங்கள்.

ஆதியாகமம் 47 : 9

முதலாவது கவனியுங்கள், அவன் எகிப்திற்கு வந்தபொழுது யாக்கோபுக்கு வயது நூற்றி முப்பது (130). அவன் மரிக்கும் பொழுது 147 வயதிலே மரிக்கிறான். எனவே 17 ஆண்டுகள் எகிப்திலே வாழ்ந்திருக்கிறான். சொல்லப்போனால் மரணத்தின் விளிம்பிலே அந்நாட்களில் வாழ்ந்து கொண்டிருந்தான்.

எகிப்துக்கு வந்தபொழுது ஒரு காலை கல்லறையிலேயும் ஒரு காலை வாழைப்பழத் தோலிலேயும் வைத்திருக்கிறான். ஆனால் எகிப்திற்கு வந்து யோசேப்பைக் கண்ட சந்தோத்திலே மேலும் 17 ஆண்டுகள் ஜீவனோடு இருந்தான். உண்மையாகவே பார்வோனை சந்தித்த இந்த சந்திப்பினாலே அவன் தன்னைக்குறித்துப் பெருமை பாராட்டி இருக்கலாம். ஆனால் அவனுடைய வாழ்க்கை எவ்வளவு மாற்றம் பெற்றிருக்கிறது, கவனித்தீர்களா?

தனக்கு வயது 130 என்று சொல்லுகிறான். அதுமட்டுமல்ல என்னுடைய வாழ்க்கை பெருமை பாராட்டத்தக்க ஒரு வாழ்க்கை அல்ல. அது எல்லாமே சஞ்சலமுள்ளதுமாய் இருக்கிறது. அது கொஞ்சமாய் இருக்கிறது என்று சொல்லுகிறான். தனது தகப்பனை ஏமாற்றியதைக் குறித்து அவன் பெருமைப் பட்டுக்கொள்ளவில்லை. என் பிதாக்களுடைய ஆயுசு நாட்களுக்கு வந்து எட்டவில்லை என்று பார்வோனிடத்திலே சொன்னான்.

அருமையானவர்களே, இப்பொழுது யாக்கோபை ஒரு வித்தியாசமான மனிதனாய் காணமுடிகிறதா? பழைய யாக்கோபைப் போல இல்லை. இப்பொழுது தனது வாழ்க்கைக்காக தேவனுக்கே மகிமையை செலுத்துகிறான். தான் செய்து முடித்த எந்த

www.Radio882.com

காரியத்தைக் குறித்தும் அவன் பெருமைப்பட்டுக்கொள்ளவில்லை.

அருமையான சகோதரனே, சகோதரியே, இத்தனை வயதான பின்னர்தான் நாம் விசுவாச வாழ்க்கையிலே வளரவேண்டும் என்பதல்ல. நாம் ஒவ்வொருவருமே ஒவ்வொரு நாளுமே விசுவாச வாழ்க்கையிலே வளருகிறவர்களாய் காணப்பட வேண்டும்.

ஆதியாகமம் 47 : 10

பார்வோனை சந்தித்த இந்த அருமையான வாய்ப்பைப் பயன்படுத்தி பார்வோன் என்னதான் ஆட்சியாளனாய் இருந்தாலும் கானான் தேசத்திலே நான் எவ்வளவு பெரிய ஆள் என்பது அவனுக்குத் தெரியவேண்டுமென்று யாக்கோபு எதைக்குறித்தும் பெருமை பாராட்டவில்லை. அவன் ஒரு பாவியாக தேவனுடைய கிருபையினாலே மீட்கப்பட்டவனாகவேக் காட்சி அளிக்கிறான்.

இன்றைக்குக் கிறிஸ்தவர்கள் மத்தியிலே தங்களைக் குறித்து அதிகமாய்ப் பெருமை பாராட்டுகிற அநேகரை நாம் பார்க்கிறோம். சில வேளைகளிலே நம்முடைய திருச்சபைகளிலேயே சில காரியங்களைச் செய்தவர்களை அளவுக்கு அதிகமாக உயர்த்துகிறோம். அவர்கள் எவ்வளவு சிறந்தவர்கள் என்று சொல்லுகிறோம். உண்மையைச் சொல்வோமென்றால், நாம் எல்லாரும் பாவிகள்தான். நமக்குக் கிடைத்த அருமையான இரட்சகரைத் தவிர வேறு எதைக் குறித்தும் நாம் பெருமை பாராட்ட முடியாது. அவரே நம்மேலே கிருபை உள்ளவராய், பொறுமை உள்ளவராய் கடந்த பல ஆண்டுகளாக நம்மைக் குறித்து அக்கரை உள்ளவராய் இருக்கிறார். நாம் பெருமைபாராட்ட வேண்டுமென்றால் அவரைக் குறித்துத்தான் பெருமைபாராட்ட வேண்டும்.

அதுமட்டுமல்ல, நம்முடைய தகப்பனாரை விட நாம் சிறந்தவர்கள் என்று எந்த காரியத்திலேயும் சொல்லமுடியாது. ஆனால் இன்றைக்கும் சிலர் தங்கள் தகப்பனார் எத்தனையோ காரியங்களிலே குறைவுள்ளவர்கள் அவர்களுடைய பிள்ளை நான் என்று சொல்வதற்குக் கூட வெட்கப்படுகிறார்கள். ஆனால் பிரியமான சகோதரனே, சகோதரியே, பல வேளைகளிலே உண்மையை ஆராய்ந்து பார்த்தால் அந்த தகப்பன்மாரும் மிகச் சிறந்தவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆதியாகமம் 47 : 11

ராமசேஸ் நாடுதான் கோசேன்.

ஆதியாகமம் 47 : 12, 13

இந்த இரண்டு தேசங்கள் மட்டும் குறிப்பிடப்பட்டிருப்பதற்குக் காரணம் இந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருந்த மக்களைக் குறித்தே நம்முடைய சரித்திரம் போகிறது. யாக்கோபு தனது குடும்பத்தோடு கானானிலே தங்கியிருந்திருப்பானென்றால் அவன் அழிந்து போயிருப்பான். எகிப்திலே தானியம் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. என்றாலும்

www.Radio882.com

தேசத்திலே இப்பொழுது தானியம் விளைகிறதில்லை. சொல்லப் போனால் ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதிலேயும் இந்தப் பஞ்சம் பரவிவிட்டது. நைல் நதி பொங்கி வழியவில்லை. ஏனென்றால் எகிப்திலே விளைச்சலுக்கு அடிப்படை நைல் நதிதான்.

ஆதியாகமம் 47 : 14

அருமையானவர்களே, யோசேப்பின் இந்த செயலை பலர் குறை கூறுவார்கள். இந்த மக்களின் ஏழ்மையான சூழ்நிலையை பயன்படுத்தி நிலங்களை அவன் வாங்கினான் மக்கள் நிலங்களை அடகுவைக்கச்செய்தான் என்று சொல்வார்கள். இது நியாயமற்ற ஒரு குற்றச்சாட்டு. முதலாவதாக அவன் பார்வோனின் பிரதிநிதியாக இந்த வேலையை செய்கிறான். இந்த நிலங்களிலே எதுவும் அவனுக்குச் சொந்தமாகிறதில்லை. தன்னைத்தான் பணக்காரனாக்கிக் கொள்வதற்காக அவன் எதையுமே செய்யவில்லை. எந்த விதத்திலேயும் அவன் தவறான வழிகளைப் பின்பற்றவில்லை. சொல்லப்போனால் பஞ்ச காலத்திலே அவன் தனிப்பட்ட விதத்திலே எந்த ஆதாயத்தையும் தேடிக்கொள்ளவில்லை.

ஒருமுறை அமெரிக்க ஐக்கிய நாட்டிலே யுத்த காலத்திலே யுரேனியம் அதிகமாகத் தேவைப்பட்டது. அந்தக் காலக் கட்டங்களிலே யார்யார் நிலங்களிலே யுரேனியம் என்ற தாது கிடைத்ததோ அவர்களுக்கு அரசாங்கம் நல்லதொகை கொடுத்தது. குறிப்பாக அரிசோனா பகுதி மக்கள் இதனால் அதிக பயன்பெற்றார்கள். இந்த சூழ்நிலையை பார்க்கும் பொழுது அவர்கள் அரசாங்கத்தைக் கொள்ளையிட்டார்கள் என்று சொல்லமுடியுமா? இல்லை. அந்த தேசத்தின் தேவையை சந்திக்க அவர்கள் உதவினார்கள் அவ்வளவுதான்.

அதே போலத்தான் அன்று எகிப்து தேசத்திலேயும் நடைபெற்றது. யோசேப்பு பார்வோனுக்காக நிலத்தையெல்லாம் வாங்கினான். மக்கள் ஜீவனோடு இருக்கும்படியாக அவர்களுக்கு உணவு கொடுத்தான். எனவே சட்டம் ஒழுங்கு இவைகளுக்குள்ளேதான் யோசேப்பு செயல்பட்டான்.

www.Radio882.com

ஆதியாகமம் 47 : 15 – 20

இந்த சூழ்நிலையெல்லாம் பார்க்கும் பொழுது பஞ்சம் எத்தனை கொடிதானதாய் இருந்தது என்பது நமக்குத் தெரிகிறது. அந்தக் கொடிதான பஞ்ச காலத்திலேயும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் அத்தனை பேரையும் காக்கும்படியாகத் திட்டமிட்டுச் செயல்பட்டார். இந்த சூழ்நிலையிலேயும் யாக்கோபின் குடும்பம் தனித்து தன்னை அறிகிற அறிவிலேயும், தனக்குப் பயப்படுகிற பயத்திலேயும் வளருவார்கள் என்பதினாலே தனித்து வாழும்படியாகச் செய்தார். எகிப்தியரோடும் கானானியர்களோடும் தொடர்பற்றவர்களாய்த் தனித்து வாழ்ந்தார்கள்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே, நம்முடைய வாழ்க்கையிலேயும் நாம் ஆண்டவருக்குப் பிரியமானவர்களாய் வாழும்படியாக பல சமயங்களிலே சில கூட்ட மக்களுக்கு நாம் விலகியே ஜீவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அதைக் குறித்து ஆண்டவர் உங்களிடத்திலே பேசுவார் என்றால் அவருக்குக் கீழ்ப்படியுங்கள். ஏனென்றால் நம்முடைய பிள்ளைகள் எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே வளருகிறார்கள் என்பது மிக முக்கியமானது.

ஒவ்வொரு வருடமும் பஞ்சத்தின் கொடூரம் அதிகமானதாய் இருந்தபடியினாலே ஒவ்வொரு வருமும் மக்கள் தங்களுக்குள்ள காரியங்களை பார்வோனுக்கு விற்று தானியத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இறுதியாக நாம் 20ம் வசனத்திலே பார்த்தது போல தங்கள் தங்கள் வயல் நிலங்களை விற்றார்கள்.

யோசேப்பு எகிப்தின் நிலங்கள் யாவையும் பார்வோனுக்காகக் கொண்டான். இவ்விதமாய் அந்த பூமி பார்வோனுடையதாயிற்று என்று சிந்தித்தோம்.

ஆதியாகமம் 47 : 21, 22

பஞ்ச காலத்திலே மக்களுக்கு ஏற்ற உணவு தானியம் கிடைக்கும்படியாக ஆங்காங்கே தூரமாய் இருந்த மக்களை பட்டணங்களுக்கு அருகிலே குடியேற்றுகிறான். செழிப்பான காலத்தின் ஆரம்ப நாட்களிலே எந்தெந்த இடங்களிலே தானியங்களைச் சேர்த்து வைக்கப்போகிறேன் என்பதை யோசேப்பு திட்டம் பண்ணியிருந்தான். இப்பொழுது எந்தெந்த இடங்களிலே மக்களுக்கு உணவு கொடுக்க முடியுமோ அந்த இடங்களுக்கு நேராக மக்களை குடியேறிப்போகப் பண்ணுகிறான்.

ஆதியாகமம் 47 : 23, 24

அடுத்த ஆண்டிலே பஞ்சம் முடிவடைந்துவிடும் என்று யோசேப்புக்குத் தெரியும். எனவே இப்பொழுது விதைக்கும்படியாக தானியத்தைக் கொடுக்கிறான்.

ஆதியாகமம் 47 : 25, 26

யோசேப்பு எல்லாவற்றையும் ஒழுங்கும் கிரமுமாய் செய்து வருகிறான்.

www.Radio882.com

ஆதியாகமம் 47 : 27 – 31

இங்கே நாம் வாசித்ததுபோல யாக்கோபு தன்னைக் கானானிலே அடக்கம் பண்ண வேண்டுமென்று கேட்கிறான். இதற்குப் பல காரணங்களை நாம் சொல்லலாம். முதலாவதாக இப்பொழுது அவனுக்கு 147 வயது. இந்த எகிப்பது தேசத்திலேயே தான் மரித்துவிடுவேன் என்ற எண்ணம் அவனுக்கு வருகிறது. சொல்லப்போனால், அது அவனுக்கு தெளிவாயிற்று என்று சொல்லலாம்.

அடுத்ததாக இப்பொழுது பார்வோனுக்காக மக்களின் நிலத்தையெல்லாம் யோசேப்பு வாங்குகிறான். எனவே தன்னுடைய சந்ததி எகிப்திலே செல்வ செழிப்பாக வாழ்வார்கள். கானானுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று நினைக்கபோவதில்லை, என்ற எண்ணம் அவனுக்குள்ளே வருகிறது. அதனோடுகூட அவனுடைய வயது அதிகமானபடியினாலே சீக்கிரமாக தான் மரித்துப் போவேன் என்பதையும் உணர்ந்து கொண்டான்.

யாக்கோபு தன்னை கானான் தேசத்திலே அடக்கம் பண்ணச் சொல்லும்படியாய் கேட்டதற்கு ஒரு காரணம் தேவன் யாக்கோபுடைய தகப்பனாருக்கு, தாத்தாவுக்கு, கொடுத்த வாக்குத்தத்தத்தின் மேலே விசுவாசமுள்ளவனாய் இவ்வாறு செயல்பட்டான் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இதை நாம் நம்முடைய மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் நாம் கற்றுக் கொள்ளப்போகிற வேத புத்தகத்திலே பல பகுதிகளிலே இந்த சத்தியத்தை நாம் பார்க்கலாம்.

பழைய ஏற்பாட்டு மக்களின் நம்பிக்கை பூமிக்கடுத்த நம்பிக்கை. அந்த பூமியிலேயே ஆபிரகாம், உயிரோடு எழுப்பப்படுவான் என்பதை ஆபிரகாம் விசுவாசித்தான். எனவே அங்கே அடக்கம்பண்ணப்படும்படியாய் அவன் விரும்பினான். ஈசாக்கும் அதையே விசுவாசித்தான். இப்பொழுது யாக்கோபும் அதே விசுவாசத்தை அறிக்கை செய்கிறான்.

பழைய ஏற்பாட்டின் விசுவாசம் நடுவானத்திலே கர்த்தரை சந்திக்கும்படியாய் புறப்பட்டுப் போகும் ஒரு நம்பிக்கையல்ல. புதிய எருசலேமிற்குள்ளே செல்வோம் என்ற நம்பிக்கை அவர்களுக்குக் கிடையாது. அந்த புதிய எருசலேம் திருச்சபைக்குரியது. பழைய ஏற்பாட்டின் நம்பிக்கை எல்லாமே கிறிஸ்து இந்த உலகத்திலே தனது இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார் என்பதே. அந்தக் காரியம் நடைபெறும்பொழுது, இஸ்ரவேல் மக்களின் பெரிய எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். மக்கள் எல்லாரும் அதற்காக உயிரோடு எழுப்பப்படுவார்கள். முதல் ஆயிரம் ஆண்டுகள் சோதனையின் காலம், தொடர்ந்து நித்தியமான இராஜ்ஜியம் காலம் காலமாய் தொடரும்.

இந்தக் காரணத்தினாலேயே யாக்கோபு எகிப்திலே புதைக்கப்பட விரும்பவில்லை. தேவனுடைய வாக்குத்தத்தத்திலே எந்த நம்பிக்கையோ, விசுவாசமோ இல்லாதவனாய் இருந்திருப்பானென்றால் தான் எங்கே புதைக்கப்பட வேண்டும் என்பதைக் குறித்து எந்த விருப்பமுமே அவனுக்கு இருந்திருக்காது.

www.Radio882.com

இன்றைய விசுவாசிகளாகிய நாம் எங்கே புதைக்கப்பட்டாலும் அதிலே எந்த வேறுபாடும் இல்லை. ஏனென்றால், அவர் நடுவானத்திலே வரும்பொழுது, நாம் எங்கெங்கே புதைக்கப்பட்டிருந்தாலும் அங்கே உயிரோடு எழுப்பப்பட்டு, நம்முடைய சரீரமும் ஆத்துமாவும் இணைந்து அவரை சந்திக்க நடுவானத்திற்குச் செல்வோம். அதாவது அவருடைய வருகைக்கு முன்பதாக மரித்திதோர்களும் ஜீவனோடு இருப்பவர்களும் கர்த்தர் நடுவானத்திலே வரும்பொழுது மறுரூபமடைந்து அவரை சந்திக்கும்படியாக நடுவானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். எனவே, இப்பொழுது நாம் எகிப்திலே புதைக்கப்பட்டாலும் இந்தியாவிலே புதைக்கப்பட்டாலும் இலங்கையிலே புதைக்கப்பட்டாலும் உலகத்தின் எந்த பகுதியிலே புதைக்கப்பட்டாலும் அதிலே எந்த ஒரு வித்தியாசமும் இல்லை.

கிறிஸ்துவில் மரித்தவர்களும், கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களும் அவரோடு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். அந்த நேரத்திலே நாம் எங்கே இருக்கிறோம் என்பது முக்கியமான காரியமே அல்ல, நாம் எடுத்துக்கொள்ளப்படுவதற்காக எந்த ஒரு விமான தளத்திற்கோ, ராக்கெட் ஏவும் ஒரு தளத்திற்கோ நாம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், நம்முடைய நம்பிக்கை பரலோக நம்பிக்கை. பழைய ஏற்பாட்டின் நம்பிக்கை பூமிக்கடுத்த நம்பிக்கை, யாக்கோபு கானானிலே புதைக்கப்பட விரும்பியதற்கான காரணம் தனது உயிர்த்தெழுதலைக் குறித்த நம்பிக்கை உடையவனாய் காணப்பட்டான். வாக்குத்தத்த பூமியிலே உயிரோடு எழும்ப அவன் விரும்பினான். இதையெல்லாம் பார்க்கும்பொழுது இப்பொழுது யாக்கோபு ஒரு விசுவாச மனிதனாய் காணப்படுகிறான்.

இப்பொழுது நாம் ஆதியாகமம் 48ம் அதிகாரத்திற்குள்ளே கடந்து செல்வோம். இந்த அதிகாரத்திலே யாக்கோபு சுகவீனமாய் இருந்ததையும், யோசேப்பின் இரண்டு குமாரர்களையும் ஆசீர்வதித்ததையும் பார்க்கிறோம். இதைக்குறித்து எபிரேயர் 11ஆம் அதிகாரம் 21ஆம் வசனத்திலே,

விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்

என்று வாசிக்கிறோம். அதுமட்டுமல்ல இந்த அதிகாரத்திலே யாக்கோபுவினுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கான மேலும் சில அறிகுறிகளை நாம் காணக்கூடியதாய் இருக்கிறது. அவனுடைய வாழ்க்கையின் இளமைப்பருவத்திலிருந்து விசுவாச வாழ்க்கையிலே மிக மெதுவாக நீண்ட காலமாக அவன் வளர்ந்து வந்தான். இந்த வயதான காலத்திலே அவனுக்கு இருந்த குணங்கள் எல்லாம் அவனுடைய வாழ்க்கையிலே இளமையிலே இருந்திருக்குமென்றால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும், என்று நாம் யோசிக்கத்தோன்றுகிறது. அதுமட்டுமல்ல ஆவிக்குரிய வாழ்க்கை என்பது

வளர்ச்சியடைவதும், முதிர்ச்சி அடைவதும் என்பதை நாம் காணக்கூடியதாய் இருக்கிறது.

ஆவிக்குரிய வாழ்க்கை என்பது ஏதோ உணர்ச்சிவசப்பட்ட ஒரு அனுபவமல்ல, ஒரு குறிப்பிட்ட நேரத்திலே நடந்து முடிகிற ஒரு காரியமுமல்ல, வேத வசனத்திலே ஆவியிலே நடப்பது என்று சொல்லப்பட்டிருக்கிறது. யாக்கோபு இளைஞனாய் இருந்த பொழுது அவனிலே அதிகமான பழைய சுபாவம் இருந்தது. அவன் வயது முதிர்ந்த நிலைக்கு வரும்வரை புதிய சுபாவமானது வெளியே காணப்பட முடியாமல் இருந்தது.

சிலர் ஆலயங்களுக்குச் செல்லும்பொழுது, ஒரு சில வாரங்கள் ஆலயத்திற்குச் சென்றால், முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவர்களாகிவிடலாம் என்று எண்ணுகிறார்கள். இல்லை, பிரியமானவர்களே, 2 பேதுரு 3ஆம் அதிகாரம் 18ஆம் வசனம் என்ன சொல்கிறது தெரியுமா?

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்.

யாக்கோபுடைய வாழ்க்கையைப் பார்க்கும்பொழுது, ஆவியின் கனி நம்முடைய வாழ்க்கையிலே காணப்பட காத்திருக்க வேண்டும். ஆனால் நம்முடைய வாழ்க்கையிலேயும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பார்க்கும் பொழுதும், தேவன் நம்மிலே எவ்வளவு பொறுமையாய் இருக்கிறார் என்பதை கவனிக்கும் பொழுதும் நாம் ஆண்டவருக்கு நன்றி செலுத்தாமல் இருக்க முடியாது. மற்றொரு காரியத்திற்காகவும் நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்த வேண்டும், நாம் எதிர்பார்க்கிற வளர்ச்சி சிலருடைய வாழ்க்கையிலே காணப்படவில்லை என்றால், நாம் உள்ளே நுழைந்து காரியங்களைச் செயல்படுத்த முயற்சி செய்வோம். ஆனால் கர்த்தர் அப்படி நம்முடைய வாழ்கையிலே செய்கிறதில்லை.

கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருவதற்குக் காலங்களை நமக்குக் கொடுக்கிறார். யாக்கோபுடைய வாழ்க்கையிலே செயல்படும்பொழுது அவர் நீடிய பொறுமை உள்ளவராய் இருந்தார். அதே போலத்தான் இன்று என்னுடைய வாழ்க்கையிலேயும் உங்களுடைய வாழ்க்கையிலேயும் அவர் பொறுமையோடு செயல்படுகிறவராய் இருக்கிறார்.

ஆதியாகமம் 48

ஆதியாகமம் 48 : 1 – 3

யாக்கோபு என்ற இந்த மனிதனின் உள்ளத்தில் எழும்பும் உணர்ச்சிகளை எண்ணிப்பார்க்க முடிகிறதா? அவனுக்கு விருப்பமான யோசேப்பு எனும் அவனுடைய மகன் வருகிறான். அவனுடைய இரண்டு குமாரர்களையும் அழைத்துக் கொண்டு வருகிறான். யாக்கோபு தான் யோசேப்பை மீண்டுமாக சந்திப்பேன் என்று கனவிலும்

www.Radio882.com

நினைக்கவில்லை. ஏனென்றால், அவன் கொல்லப்பட்டுவிட்டான் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தான், என்றாலும் எகிப்திலே இவ்வாறு உயர்த்தப்பட்ட ஒரு நிலமையிலே யோசேப்பை அவன் கண்டான். தேவனே இவை எல்லாவற்றிலேயும் செயல்பட்டிருக்கிறார் என்பதையும் அறிந்து கொண்டான்.

இப்பொழுது யாக்கோபு 17 ஆண்டுகளாக இங்கே எகிப்திலே இருக்கிறான். இப்பொழுது வயதான நிலைமையிலே மரிக்கும் தருவாயிலே இருக்கிறான். ஆனால் அவன் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு கட்டிலின் ஓரத்திலே உட்காருகிறான்.

அருமையானவர்களே, கவனித்தீர்களா? அவனுடைய சிந்தனை பின்னால் எங்கே போகிறது? கர்த்தர் லூஸ் என்னும் இடத்திலே தன்னை சந்தித்ததை நினைவு கூறுகிறான். யோசேப்பே, சர்வ வல்லமையுள்ள தேவன் கானான் தேசத்திலுள்ள லூஸ் என்னும் இடத்திலே எனக்குத் தரிசனமாகி, என்னை ஆசீர்வதித்தார் என்று கூறுகிறான். தனது வாழ்க்கையிலே ஒரு நீண்ட பயணம்தான் யாக்கோபு செய்திருக்கிறான். இப்பொழுது யாக்கோபினுடைய விசுவாசம் காணப்படக் கூடியதாய் இருக்கிறது. இப்பொழுது அவன் தன்னைக் குறித்து பெருமைப்பட்டுக் கொள்ளவில்லை. கர்த்தரை நம்புகிறவனாய் காணப்படுகிறான். இளவயதிலே தந்திரமாக தான் விரும்பியதைப் பெற்றுக் கொள்ளும் மனிதனாய் இருந்தான். தான் நினைத்ததை எல்லாம் பெற்றுக்கொள்ள எந்த ஒரு வழிமுறையையும் பின்பற்றலாம் என்று எண்ணியிருந்தான். இப்பொழுது தன்னுடைய வாழக்கையைப் பின்னாலே திரும்பிப்பார்த்து தேவன் தனக்குப் பெத்தேலிலே தரிசனமானக் காலத்தை எண்ணிப்பார்க்கிறான்.

கானானை விட்டுப் புறப்பட்டுப் போகும்பொழுதும் சரி, மீண்டுமாக கானானுக்குத் திரும்பி வரும்பொழுதும் சரி, தேவன் அவனுக்குத் தரிசனமாகி அவனை ஆசீர்வதித்தார்.

இப்பொழுது நாம் விசுவாசத்தின் மகனான யாக்கோபை இங்கே நாம் பார்க்கிறோம்

ஆதியாகமம் 48 : 4

அருமையானவர்களே, புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும் தொடர்ந்து பிரதிபலித்து வருகிற தேவன் யாக்கோபுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை சற்றே கவனிக்க வேண்டும். ஆபிரகாமுக்கு அதே வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார். பின்னர் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் அதே வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார்.

இந்த வாக்குத்தத்தத்திலே மூன்று விதமான உடன்படிக்கைக் குறிப்புகளை நாம் பார்க்கலாம். முதலாவது ஒரு தேசத்தைக் குறித்ததானது. இரண்டாவது ஒரு நிலப்பரப்பைக் குறித்ததானது. மூன்றாவது ஒரு ஆசீர்வாதத்தைக் குறித்ததானது.

ஆனால், இப்பொழுது யாக்கோபிற்கு முக்கியமாக தெரிந்த இரண்டு காரியங்களைப் பார்ப்போமென்றால், ஒன்று, நான் உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி உன்னைப்

பல ஜனக் கூட்டமாக்கி என்று பார்க்கிறோம். இரண்டாவதாக உன் சந்ததிக்கு இந்த தேசத்தை நித்திய சுதந்திரமாகக் கொடுப்பேன் என்று சொன்ன காரியம்.

அருமையானவர்களே, அந்த உடன்படிக்கையின் மூன்றாவது பகுதி எனக்கும் உங்களுக்கும் முக்கியமானது. அது என்ன தெரியுமா? பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்ற ஆசீர்வாதம்.

அருமையான சகோதரனே, சகோதரியே இன்று நானும் நீங்களும் வேத புத்தகத்தோடுகூட உட்கார்ந்து கொண்டு இருக்கிறோமென்றால், தேவன் மூன்றில் இரண்டு பகுதியான வாக்குதத்தத்தை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே நிறைவேற்றிவிட்டார். இந்த வாக்குதத்தத்திலே மூன்றில் ஒரு பகுதி இன்னமும் நிறைவேற வேண்டியதிருக்கிறது. அதுதான் இஸ்ரவேல் ஜனங்கள் அந்த தேசத்தைப் பெற்றுக்கொள்ளும் காரியம்.

இப்பொழுது அங்கே அவர்களுக்கு ஒரு சிறிய பகுதி இருக்கிறது. தேவனுடைய கரத்திலிருந்து அந்த இடத்தை அவர்கள் பெற்றுக் கொள்ளும்பொழுது அங்கே அவர்கள் சமாதானத்தோடு கூட கூடியிருப்பார்கள். ஒவ்வொரு மனிதனும் தன் தன் திராட்சையின் கீழும் தன்தன் அத்திமரத்தின் கீழும் குடியிருப்பான். தங்கள் சொந்த நிலங்களை உடையவர்களாய் இருப்பார்கள். அவர்கள் வரி செலுத்துவதில்லை, இது ஆயிரம் வருட அரசாட்சியைப் போல தொனிக்கிறது இல்லையா?

ஆம். அதைத்தான் நான் கூறுகிறேன்.

ஆதியாகமம் 48 : 5, 6

யோசேப்பின் குமாரரான இவர்கள் இரண்டுபேரும், அதாவது இந்த இரண்டு பேரக்குழந்தைகளும் கூட ஒவ்வொரு கோத்திரங்களாகிறார்கள். எனவேதான் சிலர் இஸ்ரவேலிலே 13 கோத்திரத்தார் உண்டு என்று கூறுவார்கள். 12 குமாரர்கள் இருந்தார்கள். இப்பொழுது இந்த இரண்டு குமாரர்களும், இரண்டு கோத்திரங்களாகிறார்கள். யோசேப்பின் கோத்திரம் என்று ஒரு கோத்திரத்தை நாம் பார்க்க முடியாது. ஆனால் எப்பிராயீம் கோத்திரம் என்றும், மனாசே கோத்திரம் என்றும் வாசிக்கிறோம். எனவே 13 கோத்திரங்களை நாம் பார்க்கக்கூடியதாய் இருக்கிறது.

ஆனால், வேதப்புத்தகம் 12 கோத்திரங்கள் என்றே கணக்கிடுகிறது. லேவியின் கோத்திரத்தை எடுத்துக்கொள்வீர்களென்றால் அவர்கள் ஒரு கோத்திரமாக கணக்கிடப்படுகிறதில்லை. அவர்கள் பிரதான ஆசாரியரின் கோத்திரமாய் இருக்கிறார்கள். அவர்களுக்கென்று எந்த நிலப்பரப்போ வேறு எதுவும் கொடுக்கப்படுகிறதில்லை. எல்லா கோத்திரத்தார் மத்தியிலேயும் அவர்கள் ஆசாரியர்களாக சிதறியிருக்கிறார்கள். ஆனபடியினாலே அவர்களை ஒரு கோத்திரமாக எண்ணுகிறதில்லை.

ஆம். பிரியமானவர்களே, வேத புத்தகம் இவ்வாறுதான் அந்த இஸ்ரவேலரின்

www.Radio882.com

கோத்திரத்தை எண்ணுகிறது. அப்படித்தான் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். எனவே, தேவனே அவ்வாறு படைத்திருக்கிறார்.

இப்பொழுது எப்பிராயீமும் மனாசேயும் கூட பதினேழு வயதிற்கு அதிகமானவர்களாய் இருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் யாக்கோபு எகிப்துக்கு வரும் முன்னதாகவே அவர்கள் இரண்டு பேரும் பிறந்துவிட்டார்கள்.

அவர்கள் இரண்டுபேரும் ஒவ்வொரு கோத்திரங்களாகிறார்கள். இப்பொழுது கவனித்துப் பாருங்கள். யாக்கோபின் மனது ராகேலை நினைவு கூறுகிறது. அதுதான் யோசேப்பின் அருமைத் தாயார்.

ஆதியாகமம் 48 : 7

அருமையான சகோதரனே சகோதரியே, ஓ.பெத்லகேமே, சிற்றூரே என்று நாம் பாடல் பாடும்பொழுது இயேசு கிறிஸ்து பாலகனாப் பிறந்ததை நினைவுகூறுகிறோம். ஆனால் யாக்கோபு அந்த பாடலைக் கேட்டால் தனக்கு அருமையான அழகிய மனைவியாகிய ராகேல் அங்கே மரித்ததுதான் அவனுடைய எண்ணத்திற்கு வரும்.

இப்பொழுது, இங்கே அவன் மரணப்படுக்கையிலே இருக்கிறான். அவனுடைய எண்ணம் அவளை அடக்கம் செய்த இடத்தை எண்ணிப்பார்க்கிறது.

ஆதியாகமம் 48 : 8, 9

அருமையானவர்களே, கலனித்தீர்களா? ஈசாக்கினுடைய வாழ்க்கையிலேயும், வயதான காலத்திலே பார்வை குறைந்து கஷ்டப்பட்டான். அதேப் போல யாக்கோபுக்கும் வயது முதிர்ந்த நிலையிலே கண் பார்வை தெளிவானதாக இல்லை. அளவுக்கதிகமான சூரியனின் பிரகாசம் இதற்கு ஒரு காரணமாயிருந்திருக்கலாம். இந்த நாட்களிலேயும் மத்திய கிழக்கு நாடுகளிலே அநேகருக்குக் கண்ணிலே வியாதி இருக்கிறது. அவர்கள் பரிபூரணமாய்ப் பார்வை அற்றவர்களாகிறதில்லை. ஆனால், அவர்கள் பார்வையிலே கஷ்டப்படுகிறார்கள்.

இங்கேயும் நாம் பார்க்கிறது போல யாக்கோபால் யோசேப்பின் குமாரர்களை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

ஆதியாகமம் 48 : 10

தங்கள் தாத்தா தங்களை அணைத்து முத்தமிட்டதினாலே தங்களை அவர் எவ்வளவு அதிகமாக நேசிக்கிறார் என்பதை அந்தப் பேரப்பிள்ளைகள் புரிந்திருப்பார்கள்.

ஆதியாகமம் 48 : 11, 12

யாக்கோபு பேரப்பிள்ளைகளை அணைத்து முத்தமிட்டபொழுது அவனுடைய அன்புப்பிடியிலிருந்து இரண்டு பிள்ளைகளும் தப்பித்துக் கொள்ள முயற்சித்திருக்கிறார்கள்.

www.Radio882.com

ஆதியாகமம் 48 : 13

தாத்தா பேரப்பிள்ளைகளை ஆசீர்வதிக்க வேண்டுமென்பதற்காக யோசேப்பு தனது குமாரர்களை அவர் அண்டை கொண்டுவருகிறான். யாக்கோபின் வலது கைக்கு நேராக மூத்தவனும், இடது கைக்கு நேராக இளையவனும் நிற்கும்படியாக நிறுத்தினான். பாருங்கள் யாக்கோபு என்ன செய்கிறான்?

ஆதியாகமம் 48 : 14

கவனித்தீர்களா? மனாசேக்கு மேலான எப்பிராயீம் தலைவனாக இருக்க வேண்டும். பின்னாலே வரும் நாட்களிலே மனாசே கோத்திரத்தார், எப்பிராயீம் கோத்திரத்தாரின் கொடியின் கீழ் வனாந்தரத்திலே நடந்தார்கள். இதைக் குறித்து எண்ணாகமத்திலே நாம் வாசிக்கலாம். யோசுவா இந்த எப்பிராயீம் கோத்திரத்தாரில் ஒருவனாயிருந்தான். அதுமட்டுமல்ல அநேக சிறந்த மனிதர்கள் இந்த எப்பிராயீம் கோத்திரத்திலிருந்து வந்தார்கள்.

எப்பிராயீம் கோத்திரம் ஒரு குறிப்பிடத்தக்க கோத்திரமாய் இருந்தது. அதைக்குறித்து எந்த சந்தேகமும் இல்லை. அருமையானவர்களே, இங்கே என்ன நடைபெற்றது என்பதை கவனித்தீர்களா? யாக்கோபால் சரியாகப் பார்க்கமுடியாதவனாக இருந்தாலும் யோசேப்பு என்ன செய்துகொண்டிருந்தான் என்பதை அவனால் சொல்ல முடிந்தது. யோசேப்பு தனது மூத்த மகனை யாக்கோபுவின் வலது கரத்திற்கு நேராகவும், இளையவனை இடது கரத்திற்கு நேராகவும் முன்னே தள்ளினான்.

இப்பொழுது வயதான யாக்கோபு செய்தது என்ன? தனது கரங்களை குறுக்காக மாற்றி இடது பக்கம் நின்றவனுடைய தலையிலே வலது கையையும், வலதுபக்கம் நின்றவனுடைய தலையிலே இடது கையையும் வைத்து ஆசீர்வதித்தான். ஏன் இதை அவன் செய்தான்? இரண்டு பேரப்பிள்ளைகள் மேலேயும் அவன் அன்புள்ளவனாய்தான் இருந்தான். ஏனென்றால் அவர்கள் தனது நேசகுமாரனாகிய யோசேப்பின் குமாரர்கள். எனவேதான் என்ன செய்கிறேன் என்பதை அறிந்தவனாக இளையவனுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறான். அதற்கு ஒரு காரணம் யாக்கோபு இளையனாயிருந்தும் ஆசீர்வாதத்தைப் பெற்றபடியினாலே இளையவனுக்கே அவனும் ஆசீர்வாதத்தைக் கொடுக்க விரும்புகிறான்.

அருமையானவர்களே, வேத புத்தகம் முழுவதிலேயும் கடந்து செல்லும் இந்த கருத்து ஆர்வம் தரக்கூடிய ஒன்றாய் இருக்கிறது. தாவீதைப் பாருங்கள். ஈசாயின் வீட்டிலே தாவீதுதான் இளைஞன். தேவன் ஏன் அவனைத் தெரிந்துகொண்டார்? நானும் நீங்களும் கற்றுக்கொள்ளும்படியாக ஒரு பெரிய ஆவிக்குரிய சத்தியத்தை ஆண்டவர் விவரிக்கிறார். இயற்கையான பிறப்பின்படி மூத்தவனை தேவன் ஏற்றுக்கொள்கிறதில்லை. ஒரு மறுபிறப்பு தேவையானதாய் இருக்கிறது. எனவே உலக வழக்கத்தை தேவன் கண்டுகொள்ளுகிறதில்லை. குடும்பத்திலே மூத்த மகன், வீட்டில் பொறுப்புள்ளவன் என்று

www.Radio882.com

சொல்கிறோம். ஆனால், எல்லா சமயங்களிலேயும் தேவன் மூத்த குமாரர்களைத் தெரிந்துகொள்கிறதில்லை.

இயற்கையான தகுதியினாலே எந்த ஒரு மனிதனையும் தேவன் தெரிந்தெடுக்கிறதில்லை. தேவன் தாலந்துகளைப் பயன்படுத்துகிறார். ஆனால், அது அவருக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட தாலந்துகளாய் இருக்கவேண்டும். தாலந்துகளினால் மட்டுமே தேவன் உயிர்மீட்சியைக் கொடுப்பாரென்றால், எப்பொழுதோ உயிர்மீட்சிகள் வந்திருக்கும். உலகம் முழுவதும் தாலந்துகள் இருக்கின்றன. கிறிஸ்துவை அறிந்தவர்களுடைய கரத்திலேயும் தாலந்துகள் இருக்கிறது. ஆனால் ஏன் உயிர்மீட்சி வரவில்லை? அவை தேவனுக்கென்று பரிபூரணமாக அர்பணிக்கப்படவில்லை. அவருக்கு என்று ஒப்புக்கொடுக்கப்படும் பொழுதே அவர் அதை பயன்படுத்த முடியும்.

யாக்கோபு தனது கரங்களை மாற்றி வைத்து இளைஞனுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவனை ஆசீர்வதிக்கிறான்.

ஆதியாகமம் 48 : 15

நான் பிறந்த நாள்முதல் இந்நாள் வரைக்கும் என்னை ஆதரித்து வந்த தேவன் என்று சொல்கிறான். இங்கே பார்க்கிறது போல ஆவிக்குரிய வாழ்க்கையிலே ஒரு உயர்ந்த நிலையிலே யாக்கோபைப் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 48 : 16

எல்லாத் தீமைக்கும் என்னை மீட்ட தூதரானவர் இந்தப் பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக என்று சொல்கிறான். தன்னுடைய வாழ்க்கையைப் பொருத்தமட்டிலேயும் எதைக்குறித்தும் பெருமைபாராட்ட அவனுக்கு ஒன்றுமே இல்லை. தன்னை மீட்க ஒருவர் இருந்தார் என்பதைக் குறித்து மட்டும் பெருமை பாராட்டுகிறான். யாக்கோபு கூறியது போலவே பூமியில் இவர்கள் மிகுதியாகப் பெருகினார்கள்.

ஆதியாகமம் 48 : 17, 18

பிரியமானவர்னளே, இதற்கு யாக்கோபு என்ன பதில் உரைக்கிறான் பாருங்கள்,

ஆதியாகமம் 48 : 19

இங்கே நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒரு வாக்கியம் என்னவென்றால், அவனுடைய சந்ததியார் திரளான ஜனங்களாவார்கள் என்பது. யோசேப்பும் இதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால் அவனும் குடும்பத்திலே மூத்தவன் அல்ல.

யோசேப்பு தனது குடும்பத்திலே இளையவனானாலும் அவனுடைய பிள்ளைகளே இங்கே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

ஆதியாகமம் 48 : 20, 21

www.Radio882.com

யாக்கோபின் ஒரு முதிர்ந்த விசுவாசத்தின் நிலையை நாம் இங்கு பார்க்கிறோம்.

ஆதியாகமம் 48 : 22

கவனித்தீர்களா? இதுதான் யோசேப்பு. அவனுடைய இரண்டு குமாரர்கள் மூலமாகவும் மற்ற சகோதரர்களைக் காட்டிலும் அவன் அதிகமான சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளுகிறான். இது யாக்கோபு யோசேப்புக்குக் கொடுத்த சிறப்பான தனிப்பட்ட விதத்திலே கொடுக்கப்பட்ட வெகுமதியாகும். யோசேப்பு அடக்கம்பண்ணப்பட்ட இடத்திற்கு பக்கத்திலே உள்ள பூமி அது.

யோவான் 4ம் அதிகாரம் 5ம் வசனத்திலே இதை நாம் பார்க்கலாம்.

யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார்.

என்று வாசிக்கிறோம். இதுதான் அந்தப்பகுதி.

யோசேப்பின் மூலமாக மேலும் இரண்டு கோத்திரத்தார் இஸ்ரவேலிலே சேர்க்கப்பட்டபடியினாலே இந்தப் பகுதி அவர்களுக்கு தேவையானதாயிருந்தது. எமோரியர் கையிலிருந்து யாக்கோபு வாங்கிய நிலம்தான் அது. ஆனால் பின்னான காலங்களிலே அவர்கள் அதை எடுத்துக்கொண்டுவிட்டார்கள். இப்பொழுது அது யோசேப்புக்குக் கொடுக்கப்படுகிறது. வலுக்கட்டாயமாக அவர்கள் அதை எடுத்துக்கொள்ளப் போகிறார்கள். இன்று வரை பிரச்சனைக்குரிய ஒரு நிலமாயிருப்பதும் அந்தப் பகுதிதான்.

இப்பொழுது நாம் ஆதியாகமம் 49ம் அதிகாரத்துக்குள்ளே கடந்து செல்கிறோம். இங்கே யாக்கோபின் இறுதி தீர்க்கதரிசனமான வார்த்தைகளையும், யாக்கோபின் மரணத்தையும் குறித்து நாம் பார்க்கலாம். இதுவும் குறிப்பிடத்தக்க ஒரு அதிகாரமாகும். ஏனென்றால் இங்கேதான் வயதான யாக்கோபுவின் மரணத்தைக் குறித்து வாசிக்கிறோம். கடந்த அதிகாரத்திலேயே மரண படுக்கையிலே இருந்தாலும் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு அவன் எழுந்து உட்கார்ந்தான். உட்கார்ந்து கொண்டுதான் யோசேப்பின் குமாரர்களை ஆசீர்வதித்தான். இவ்வாறு தனது பேரப்பிள்ளைகளோடு அவன் பேசிக்கொண்டிருந்த பிறகு, யாக்கோபின் மற்ற குமாரர்கள் அங்கே வருகிறார்கள்.

இப்பொழுது பன்னிரெண்டு குமாரர்களும் அவனைச் சுற்றி நிற்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் யாக்கோபு தீர்க்கதரிசனம் உரைக்கிறான். மூத்த குமாரன் முதல் ஆரம்பித்து கடைசி குமாரன் வரை தொடர்ந்து செல்கிறான். பொதுவாகவே மரணப்படுக்கையிலிருந்து யார் எதைச் சொன்னாலும் அதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஏனென்றால் பொதுவாக ஒரு மனிதன் தனது மரணப்படுக்கையிலே உண்மையைதான் சொல்வான். மரணப்படுக்கையிலிருந்து யாக்கோபு சொன்ன இந்த செய்தி தீர்க்கதரிசனமானது.

www.Radio882.com

தனது பன்னிரெண்டு குமாரர்களுக்கும் என்னென்ன நடக்கும் என்று சொல்லப்படுகிறது. அந்த நாளிலே தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டவைகளிலே பெரும்பான்மையான பகுதி இப்பொழுது சரித்திரமாகிவிட்டது.

அருமையானவர்களே, யாக்கோபின் வாழ்க்கையிலே விசுவாசத்தைக் காக்கக்கூடிய இறுதி வாய்ப்பு இது என்று சொல்லலாம். இஸ்ரவேல் தேசத்தின் பன்னிரெண்டு கோத்திரங்களாகப்போகிற தனது குமாரர்களோடு அவன் பேசுகிறான். இவர்கள்தான் கானான் தேசத்திலே போய் குடியிருக்கப் போகிறார்கள். எவ்வளவு பெரிய ஒரு விசுவாசம். கானான் தேசத்திலே கானானியர்கள் இருந்தார்கள், என்றாலும் ஒருநாள் அவர்கள் கானானுக்குப் போவார்கள் என்பதை தீர்க்கதரிசனமாக யாக்கோபு கூறுகிறான்.

ஆதியாகமம் 49

ஆதியாகமம் 49 : 1

இங்கே சொல்லப்பட்டிருக்கிற சில முக்கியமான கருத்துக்கள் வேதத்திலே திரும்ப திரும்ப கூறப்பட்டிருப்பதை நாம் காணமுடியும். அவைகளிலே ஒன்றுதான் கடைசி நாட்கள் என்ற வார்த்தையாகும். இஸ்ரவேல் தேசத்தின் கடைசி காலங்கள் திருச்சபைக்கான கடைசி காலத்தைவிட வேறுபட்டது. இப்பொழுது யாக்கோபு இஸ்ரவேல் மக்களின் இறுதி காலத்தைக குறித்து கூறப்போகிறான். பன்னிரெண்டு கோத்திரத்து மக்களுக்கும் என்னென்ன நடக்கும், ஒவ்வொரு குமாரர்களின் சந்ததியிலேயும் என்ன நடைபெறும் என்பதைக் கூறப்போகிறான்.

இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்த அநேக வாக்குத்தத்தங்கள் நிறைவேறிவிட்டன. உண்மைதான். அதே வேளைகளிலே ஒவ்வொரு கோத்திரமாக நாம் குறிப்பிட்டு பார்க்கும்பொழுதும், ஒவ்வொருவரைக் குறித்தும் தேவன் ஒவ்வொரு காரியங்களை வைத்திருக்கிறார் என்பது தெளிவாகிறது.

இஸ்ரவேல் தேசமாக தேவன் கூறிய காரியங்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு கோத்திரத்தைக் குறித்தும் குறிப்பாகக் கூறிய காரியங்களும் நிறைவேறியிருக்கின்றன.

அருமையான சகோதரனே, சகோதரியே, இது குறிப்பிடத்தக்க ஒரு காரியம். கடைசி காலங்களிலே ஒவ்வொரு கோத்திரத்திலேயும் என்ன நடைபெறும் என்பதை நாம் பார்க்கப்போகிறோம். அவைகளிலே சில காரியங்கள் ஏற்கனவே நிறைவேறிவிட்டன. ஆனால் அதிகமான காரியங்கள் நிறைவேற காத்திருக்கின்றன.

ஆதியாகமம் 49 : 2

வயதான யாக்கோபு தனது படுக்கையிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறான். தனது கோலின் மேல் சாய்ந்து கொண்டவனாகப் பேச ஆரம்பிக்கிறான். இதைத்தான் எபிரேயர் 11:21 லே நாம் வாசிக்கிறோம். உண்மையாகவே யாக்கோபு இப்பொழுது மரண

www.Radio882.com

தருவாயில்தான் இருக்கிறான். மரணம் மிக சீக்கிரமாக தனக்கு வருகிறது என்பதை யாக்கோபு அறிந்தவனாயிருந்தான்.

ஆதியாகமம் 49 : 3, 4

தகப்பனைப்போல மகன் என்பதற்கு உதாரணமாக ரூபனைக் குறித்து சொல்லும்பொழுது தண்ணீரைப் போல தளம் பினவனே, என்று சொல்கிறான். அநேக காரியங்களிலே ரூபன் யாக்கோபைப்போல இருக்கிறான். அதாவது தனது இளம் காலத்திலே யாக்கோபு அவ்வாறு இருந்தான். தனது மூத்த மகனுடைய வாழ்க்கையும் அப்படியே இருக்கிறது. அவனைக் குறித்துச் சொல்லும்பொழுது, நீ மேன்மை அடையமாட்டாய் என்று சொன்னான். அதுபோலவே ரூபனின் சந்ததி மேன்மை அடையவில்லை.

அருமையான சகோதரனே, சகோதரியே இன்றைக்கும் அநேகர் அப்படியிருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் இருக்கும் நிலைமையிலே திருப்தியோடு இருக்கிறார்கள். மேன்மை அடைய விரும்புகிறதில்லை. போதகர் ஒருவர் இருந்தார். அவர் உலக பிரசித்தி பெற்ற ஒரு எழுத்தாளராக மாறியிருந்திருக்கலாம். ஆனால் அவ்வாறு அவர் மாறவில்லை. இரண்டு சிறிய ஒற்றைத்தாள் பிரதிகளைத்தான் அவர் எழுதினாரே ஒழிய வேறு எழுதவில்லை. ஆனால் அவருக்கு இருந்த ஞானத்திற்கும் அறிவிற்கும் அவர் ஒரு சிறந்த வேதப் பாட ஆசிரியராகி இருந்திருக்கலாம், அப்படி அவர் ஆக விரும்பவில்லை.

நாம் வாசித்த இந்த வசனத்திலே ரூபனைக் குறித்து யாக்கோபு சொல்கிற சம்பவம் மிகவும் துக்கமான ஒரு சம்பவம்தான். ஆதியாகமத்தை நாம் கற்று வரும்பொழுது அந்த பகுதியை நாம் கடந்து வந்துவிட்டோம். ஏனென்றால் ஏற்கனவே இன்று நாம் வாசிக்கும் புத்தகங்களும், பார்க்கும் நாடகங்களும், தொலைக்காட்சி ஒளிபரப்புகள் எல்லாமே இப்படிப்பட்ட காரியங்களைத் தான் சொல்லிக் கொண்டிருக்கின்றன. மனிதனுடைய பாவத்தைக் குறித்து உட்கார்ந்து நாம் அதிகமாய் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்பவில்லை. நாம் சிந்திக்க வேண்டிய சில முக்கியமான காரியங்களைக் குறித்து அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் பிலிப்பியர் 4ஆம் அதிகாரம் 8ஆம் வசனத்திலே இவ்விதமாய் சொல்லியிருக்கிறார்.

கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.

உலகத்திலே வாழ்ந்த நம்முடைய மூதாதையர்களைக் குறித்து நாம் சரியாய் அறிந்துகொள்ளும்படியாக அவர்களுடைய பாவத்தைக் குறித்தும் தேவன் வேதபுத்தகத்திலே பதிவு செய்திருக்கிறார்.

www.Radio882.com

சரி, அடுத்த இரண்டு குமாரர்களைக் குறித்து யாக்கோபு சொல்லும் பொழுது ஒன்றாக சேர்த்து சொல்கிறார். சிமியோனும், லேவியும் ஏக சகோதரர். இரண்டுபேரும் ஒரு தாய் வயிற்றிலே பிறந்த பிள்ளைகள். அவர்களைக் குறித்து சொல்லும் பொழுது அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் லேயாளின் குமாரர்கள்.

ஆதியாகமம் 49 : 5

ஞாபகமிருக்கிறதா? சீகேமிலே சாலேம் என்னும் ஊருக்குள்ளே சென்று எப்படி இவர்கள் அந்தப் பட்டணத்திலுள்ள ஆண்மக்களை வெட்டிப்போட்டார்கள். தங்கள் சகோதரி தீட்டுப்பட்டபொழுது அவர்களால் கோபத்தை அடக்கமுடியவில்லை. ஒரு மனிதன் செய்த தவறினாலே முழு பட்டணத்தையும் பழிக்குப்பழி வாங்கினார்கள். அதை அவர்கள் செய்திருக்கக்கூடாது.

ஆதியாகமம் 49 : 6, 7

லேவியைப் பார்க்கும் பொழுது தேவனுடைய மகா பெரிய இரக்கத்தையும் கிருபையையும் நாம் காணக்கூடியதாய் இருக்கிறது. யாக்கோபு சொன்னது போலவே அவர்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்குள்ளே சிதறடிக்கப்பட்டார்கள். ஏனென்றால், அவர்கள் ஆசாரியப் பணிக்கென்று பிரத்யேகப்படுத்தப்பட்ட கோத்திரமாய் இருந்தார்கள். லேவியைப் போல கொடூரமான ஒரு மனிதனும் தேவனுடைய கிருபையினாலே ஆசாரியப்பணியை பெற்றுக் கொள்ளுகிறான்.

ஆம். பிரியமானவர்களே, தேவனுடைய இராஜ்ஜியத்திலே என்னையும், உங்களையும் அவர் ஆசாரியர்களாக மறுரூபப்படுத்துகிறார். காரணம் என்னவென்றால், தேவனுடைய கிருபையே, இன்று விசுவாசிகளாகிய நாம் எல்லாருமே ஆசாரியர்களாய் இருக்கிறோம். இக்கட்டத்தில் மனம் திரும்பிய குடிகாரர்கள், மனம் திரும்பிய வேசிகள், மனம் திரும்பிய கொலைகாரர்கள் உண்டு.

அப்படிப்பட்டவர்கள் எப்படி தேவனுடைய இராஜ்ஜியத்திலே ஆசாரியர்களானார்கள்? அதுதான் தேவனுடைய அற்புதமான கிருபை. 1 பேதுரு முதலாம் அதிகாரம் 18,19ஆம் வசனங்களை வாசிக்கிறேன்.

உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அறிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல்,

குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல 1 பேதுரு 2ஆம் அதிகாரம் 5ஆம் வசனத்திலே என்ன சொல்கிறார்?

www.Radio882.com

ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்.

இங்கே யாரைக் குறித்து அவர் பேசுகிறார்? இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்களைக் குறித்து சொல்கிறார். ரூபன் முதல் ஸ்தானத்தை இழந்து போனான். சிமியோனும், லேவியும் கூட முதல் ஸ்தானத்தை இழந்து போனார்கள். இந்தக் கோத்திரங்களின் வாயிலாக இராஜா வரப்போவதில்லை. மற்றுமொரு குமாரன் இருக்கிறான். அவனும் பாவியானவனே, அவனைக் குறித்த தேவனுடைய கிருபையை சற்றே கவனியுங்கள்.

ஆதியாகமம் 49 : 8

உன் தகப்பனின் பிள்ளைகள் உன்முன் பணிவார்கள் என்று சொல்கிறாரே, ஏன்? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யூதாவின் வம்சத்திலேயே வருகிறார். அவர் முன்னாலேயே எல்லாரும் பணியப்போகிறார்கள்.

ஆதியாகமம்49 : 9

தொடர்ந்து யூதாவைக்குறித்து சொல்லப்பட்டிருக்கிற தீர்க்க தரிசனத்தை அடுத்தப் பகுதியில் நாம் சிந்திப்போம். யாக்கோபு மரணப்படுக்கையிலே இருந்தாலும் தன்னுடைய சந்ததியைக் குறித்த அநேகக் காரியங்களை இங்கே தீர்க்க தரிசனமாகக் கூறுகிறார். அவை எல்லாமே ஏற்ற வேளையிலே நிறைவேறுகிறதாய் இருக்கிறது. அவற்றிலே சில ஏற்கனவே நிறைவேறிவிட்டன. இன்னும் சில ஒரு நாளிலே நிறைவேறப்போகின்றன.

இந்தப் பகுதியிலே நாம் கவனிக்க வேண்டிய ஒரு வார்த்தை கடைசி நாட்களில் என்பது. அருமையானவர்களே, இஸ்ரவேல் ஜனங்களுக்கு கடைசி நாட்களிலே சம்பவிப்பது வேறு, விசுவாசிகளுக்கு கடைசி நாட்களிலே சம்பவிப்பது வேறு. இதைக் குறித்த தெளிந்த அறிவுள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும்.

விசுவாசிகளாகிய நம்முடைய வாழ்க்கையிலே அவர் நடுவானத்திலே வரும்பொழுது நாம் அவரோடு எடுத்துக் கொள்ளப்படப் போகிறோம். அவரோடு என்றென்றும் வாழப்போகிறோம். இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்து தேவன் வேறு விதமான திட்டம் வைத்திருக்கிறார். அதை நாம் தொடர்ந்து வேத புத்தகம் முழுவதிலேயும் பார்க்கக்கூடியதாய் இருக்கிறது.

வெளிப்படுத்தின விசேத்திலேயும் அதைக் குறித்து தெளிவாக நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதியாகமம் 49 : 10

இங்கே யாக்கோபு யூதாவைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறான். கர்த்தருடைய

www.Radio882.com

வசனத்திலே குறிப்பிடத்தக்க தீர்க்கதரிசனங்களிலே இதுவும் ஒன்று. ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரத்திலேயே ஒரு ஸ்திரியின் வித்தைக் குறித்து நாம் படித்திருக்கிறோம். அது இயேசு கிறிஸ்துவைக் குறித்த முதலாவது தீர்க்கதரிசனம். ஞாபகப்படுத்திக் கொள்வோமா?

ஆதியாகமம் 3ஆம் அதிகாரம் 15ஆம் வசனம்.

உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.

ஆம். பிசாசுகளின் தலையை நசுக்கும் அவர்தான் ஸ்திரீயின் வித்தாகிய இயேசு கிறிஸ்து. அவரே வெற்றியைப் பெற்றுக் கொள்ளப் போகிறவர். இந்த முதலாவது தீர்க்கதரிசனம் ஆதியாகமத்தில் இருக்கிறது. இந்த வித்தைக் குறித்து ஆபிரகாமுக்குச் சொல்லப்பட்டது, ஈசாக்குக்குச் சொல்லப்பட்டது, யாக்கோபுக்கும் சொல்லப்பட்டது.

இப்பொழுது அது யூதாவுக்குச் சொல்லப்படுகிறது. ஏனென்றால், இயேசு கிறிஸ்து யூதாவின் சந்ததியிலேயே வர இருக்கிறார். சமாதான கர்த்தர் என்று சொல்லும்பொழுது இளைப்பாறுதல்,, அமைதி அங்கே காணப்படுகிறது.

இயேசு கிறிஸ்துவே அந்த அமைதியை சமாதானத்தை, இளைப்பாறுதலை கொண்டுவரப்போகிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே நடந்து திரிந்து அலைந்தபொழுது, அவரைப் புறக்கணித்த மக்களைவிட்டு அவர் திரும்பி, வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன், என்று அழைப்புக் கொடுத்தார்.

ஆம். அந்த சமாதான கர்த்தர் வந்துவிட்டார். இயேசு கிறிஸ்து சமாதான கர்த்தர் மட்டுமல்ல. அவரே செங்கோலைக் கரத்திலே பிடித்திருப்பவருமாவார். இந்த உலகத்தை ஆளும் செங்கோலை ஆணி கடாவிய தனது கரத்திலே அவர் பிடித்திருப்பார். இந்த அதிகாரத்தின் 24ஆம் வசனத்தை நாம் வாசிக்கும்பொழுது, தேவனிடத்திலிருந்து மேய்ப்பனும், இஸ்ரவேலின் கன்மலையும் வரும் என்று வாசிக்கிறோம்.

இந்த சமாதான கர்த்தர் மேய்ப்பனாகவும், கன்மலையாகவும் வரப்போகிறார். எண்ணாகமம் 24ஆம் அதிகாரம் 17ஆம் வசனத்திலே ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும் என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாமே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகத்திலே தோன்றப்போவதற்கான முன் அடையாளங்களாகும். ஏவாளுக்கும் ஆதி பிதாக்களுக்கும் வாக்குப் பண்ணப்பட்ட வித்து அவரே. அவரே சமாதானத்தையும் ஓய்வையும் கொண்டுவரப்போகிறவர். செங்கோலைக் கரத்திலே பிடித்திருப்பவரும் அவரே, தனது ஜீவனைக் கொடுத்த மேய்ப்பனும் அவரே, மீண்டுமாக வரப்போகிற பிரதான மேய்ப்பனும் அவரே. வேண்டாம் என்று தள்ளப்பட்ட கல்லாகிய அவர், மூலைக்கு தலைக்கல்லானார். அவரே, அதிகாலை நட்சத்திரமாய் தமது திருச்சபையில் இருக்கப்போகிறார். இதுதான் ஆதாம் முதல் சேத்தின் வழியாக நோவா,

சேம், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு வழியாக இப்பொழுது யூதா வழியாக கடந்து செல்லும் சந்ததியாய் இருக்கிறது.

அருமையான சகோதரனே, சகோதரியே தேவன் எல்லாவற்றையும் ஒரு திட்டமிட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார், என்பதை நாம் இங்கே புரிந்து கொள்ள வேண்டும்.

ஆதியாகமம் 49 : 11, 12

இங்கே யாரைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறான். எருசலேமிற்குள்ளே கழுதைக்குட்டியிலே பவனியாக வந்து மேசியாவாகவும், ராஜாவாகவும், இரட்சகராகவும் தன்னையே அர்ப்பணித்த இயேசு கிறிஸ்துவைக் குறித்துதான், பேசிக் கொண்டிருக்கிறான். இரத்தத்திலே தன் அங்கியைத் தோய்ப்பான் என்று வாசிக்கிறோமே, அதன் பொருளென்ன? அதுதான் தன்னுடைய இரத்தத்தையே அவர் சிந்துவதைக் குறிக்கிறது. ஆனால் அடுத்த முறை இயேசு கிறிஸ்து வரும்பொழுது, அவருடைய வஸ்திரம் சிவப்பானதாய் இருக்கும். அப்பொழுது ஒரு கேள்வி கேட்கப்படும். பாருங்கள் ஏசாயா 63ஆம் அதிகாரம் 2ஆம் வசனம்.

உம்முடைய உடுப்புச் சிவப்பாகவும், உம்முடைய வஸ்திரங்கள் ஆலையை மிதிக்கிறவன் வஸ்திரங்கள் போலவும் இருக்கிறதென்ன?

இரண்டாவது முறை அவர் வரும்பொழுது அவருடைய வஸ்திரம் சிவப்பாய் இருக்கப்போவதற்கு காரணம், அவருடைய சத்துருக்களின் இரத்தம்தான். ஏனென்றால், அவர் நியாயம் தீர்க்க வருகிறார். ஆம். அருமையானவர்களே, யூதாவுக்கு யாக்கோபு மூலமாய் தேவன் கொடுத்த தீர்க்கதரிசனம் வேத புத்தகத்திலேயே மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு தீர்க்கதரிசனமாகும். ஏன் தெரியுமா? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையையும், இரண்டாவது வருகையையும் குறித்து இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதியாகமம் 49 : 13

கானான் தேசத்தின் வட பகுதியிலே கடற்கரையிலே வாழும்படியாய் நியமிக்கபட்டவர்கள் தான் செபுலோன் கோத்திரத்தார்.

ஆதியாகமம் 49 : 14, 15

இசக்கார் வம்சத்தின் மக்களும் கானான் தேசத்தின் வடக்கு புறத்திலே குடியிருந்தார்கள். தேசத்திலே முதுகெலும்பாக இருந்து அநேக பணிகளைச் செய்தவர்கள் இந்த இசக்கார் கோத்திரத்தார்தான். அவர்கள் பணியாளர்களாய் இருந்தார்கள். அதைத்தான் இந்த வசனம் முன்னறிவிக்கிறது.

இன்றைக்கு சமுதாயத்திலே மிக அமைதியான பெருங்கூட்ட மக்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் தான் நம்மைப்போல சாதாரணமான மனிதர்கள். நாம் செய்திகளிலே வருகிறதில்லை, செய்திதாள்களிலேயும், தொலைக்காட்சிகளிலேயும்

www.Radio882.com

வருகிறவர்கள் முக்கியமானவர்களாகக் கருதப்படுகிறார்கள். இவர்கள் தான் முக்கியமான மனிதர்கள் என்று ஊடகங்கள் கூறலாம். ஆனால், எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே அவர்கள் எல்லோரும் தேசத்தின் முதுகெலும்புகள் அல்ல.

பொதுவாகவே, இந்த செபுலோன் மற்றும் இசக்கார் போல சாதாரணமாய் எண்ணப்படுகிறவர்களே, தேசத்தின் முதுகெலும்பாய் இருக்கிறார்கள். அன்றும் இஸ்ரவேல் தேசத்தின் முதுகெலும்புகளாய் இந்த செபுலோனும், இசக்காரும் காணப்பட்டார்கள். இதுவே அவர்களைக் குறித்த தீர்க்கதரிசனம்.

ஆதியாகமம் 49 : 16 – 18

இந்த தாண் கோத்திரத்து மக்கள்தான் தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்வதிலே முன்னாலே நின்றவர்கள். எனவே தேவனுடைய இரட்சிப்பு அவர்களுக்கு மிகவும் தேவையானதாய் இருந்தது.

தொடர்ந்து வேத வசனங்களைப் படிக்கும் பொழுது இந்த கோத்திரத்தின் மக்களைக் குறித்து நாம் நிச்சயமாக தெளிவாக கற்றுக் கொள்ளுவோம்.

ஆதியாகமம் 49 : 19

தேசத்தின் வடக்கு பகுதியிலே குடியேறிய மற்றுமொரு கோத்திரம்தான் இந்த காத் கோத்திரம். இவர்கள் தான் வடக்குக் கடைசியிலே இருந்தார்கள். எனவே, இஸ்ரவேல் தேசத்தைக் குறித்து விவரிக்கும் பொழுதெல்லாம் தாண் முதல் பெயெர்செபா வரை என்று சொல்வது வழக்கமாய் இருந்தது.

ஆதியாகமம் 49 : 20, 21

இங்கே யாக்கோபின் பிள்ளைகள் ஒவ்வொருவரைக் குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களும் உண்மையாகவே நிறைவேறியதை வேதத்தின் மற்ற பகுதிகளிலே நாம் பார்க்கலாம். தனிப்பட்ட விதத்திலே தேவன் செயல்பட்ட ஒவ்வொரு மனிதர்களுமே இந்த பன்னிரெண்டு கோத்திரங்களின் வழியாக வந்தவர்களாய் இருக்கிறார்கள்.

ஆதியாகமம் 49 : 22

யோசேப்பு கானான் தேசத்தை விட்டு எகிப்திற்குள்ளே வந்தான், என்றாலும் அங்கேயும் அவன் கர்த்தருக்கு ஒரு சாட்சியாகவே வாழ்ந்தான். பின்னான காலங்களிலே அவனுடைய பிள்ளைகளாகிய எப்பீராயீம், மனாசே என்பவர்களின் கோத்திரமானது, சமாரியா என்று பின்னாலே அழைக்கப்பட்ட இடத்தைச்சுற்றி தங்கினார்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் காலத்திலே அது புறஜாதியாரின் தேசம் என்று அழைக்கப்பட்டது. அங்கே நற்செய்தி சொல்லப்பட வேண்டியதாய் இருந்தது. சுவிசேம் அவ்வளவாக அங்கே செல்லவில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் அங்கே சென்று தனது ஊழியத்தை நிறைவேற்றினார்.

www.Radio882.com

யோவான் 4ஆம் அதிகாரத்திலே இயேசு கிறிஸ்து போய் சமாரிய பெண்மணிக்கு சாட்சி பகர்ந்ததை நாம் வாசிக்கிறோம், அந்த கிணற்றண்டையிலே அந்த பெண்ணின் மூலமாக இயேசுவை விசுவாசிக்கும் ஒரு திரள் கூட்டம் பின்னாலே உருவானார்கள் என்று வாசிக்கிறோம்.

ஆதியாகமம் 49 : 23 – 25

யாக்கோபின் மூலமாய் வந்த கோத்திரங்களான எப்பிராயீம் கோத்திரமும், மனாசே கோத்திரமும் மிக முக்கியமானவர்களாகி சிறப்பானவர்களாய் இருந்தார்கள். இஸ்ரவேல் தேசமே இவர்களை அடிப்படையாகக் கொண்டே இரண்டு பகுதியாகப் பிரிகிறது. அவர்கள் அத்தனை வலிமை நிறைந்தவர்களாய் இருந்தார்கள்.

ஆதியாகமம் 49 : 26

கவனித்தீர்களா? யாக்கோபு யோசேப்பையும், அவன் மூலமாய் வந்த இரண்டு கோத்திரத்தினரையும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரோடு, சிருஷ்டிகரோடு, இரட்சகரோடு இணைக்க முற்படுகிறான். ஏன்? இந்த கோத்திரங்கள் குறிப்பாக எப்பிராயிம், இஸ்ரவேல் ஜனங்களை விக்ரக வணக்கத்திற்கு வழிநடத்தினது. யெரொபெயாம் என்பவன் தேவனுக்கு விரோதமாக, அந்த கலகத்திலே ஈடுபட்டு, இஸ்ரவேல் தேசத்தின் எல்லைகளிலே இரண்டு பொன் கன்றுகுட்டிகளை செய்து வைத்தான். இது எங்கிருந்து வந்தது? எனவே இங்கே தனது மரணப்படுக்கையிலே யாக்கோபு அவர்களை மீண்டுமாக அழைத்து தங்கள் முற்பிதாக்களின் தேவனோடு இணைக்க முற்படுகிறான்

ஆதியாகமம் 49 : 27

பென்யமீனைக் குறித்து இது வினோதமான ஒரு தீர்க்கதரிசனம் என்று சொல்லலாம். பென்யமீன் யூதாவோடுகூட மிக நெருக்கமாக எண்ணப்பட்டது. இஸ்ரவேல் தேசம் இரண்டாகும் பொழுது யூதாவும் பென்யமீனும் ஒன்றாயிருந்தது. பென்யமீன் கோத்திரம் ஒன்றே தாவீதின் வம்சத்தோடு சேர்ந்திருந்தது.

இப்பொழுது நாம் யாக்கோபுவின் இறுதியான வார்த்தைகளைப் பார்க்கப்போகிறோம்.

ஆதியாகமம் 49 : 29

யாக்கோபின் மரணம் எல்லாவற்றிற்கும் ஒரு முடிவை கட்டியது என்று சொல்ல முடியாது. அவன் என்ன சொல்கிறான்? என்னை என் பிதாக்களன்டையிலே அடக்கம் பண்ணுங்கள் என்று சொல்கிறான். அதாவது, ஆபிரகாம் விலைகொடுத்து வாங்கி சாராள் அடக்கம் பண்ணப்பட்டு, பின்னர் ஆபிரகாம் அடக்கம் பண்ணப்பட்டு, அதன்பின் ஈசாக்கும் அடக்கம் பண்ணப்பட்டு இருந்த அதே கல்லறையிலே அடக்கம் பண்ணப்பட விரும்புகிறான்.

அவனுடைய மனதின் விருப்பமென்ன? மரித்தோர் உயிரோடெழும்பும் நாள் வரைக்கும் தன் சரீரம் கானான் தேசத்திலே இருக்க விரும்பினான். உயிரோடெழுப்பப்பட்ட பின்னும்

தொடர்ந்து தேவன் வாக்குப் பண்ணின அத்தேசத்திலேயே குடியிருக்க ஆசைப்பட்டாள். எனவே தான் தன்னுடைய சரீரத்தை அங்கே கானானிலே அந்த குறிப்பிட்ட கல்லறையிலே அடக்கம் பண்ணப்படும்படியாய் கேட்கிறான்.

ஆதியாகமம் 49 : 30

குடும்பத்தின் சரித்திரத்தை எவ்வளவு அதிகமாக அறிந்த ஒரு மனிதனாய் இருந்திருக்கிறான். பார்த்தீர்களா? இதைக் குறித்த எந்த எழுத்து வடிவ புத்தகமோ அவனிடத்திலே கிடையாது. ஆனால், சந்ததி சந்ததியாக அறிந்திருந்த இந்த உண்மைகளை அவன் மனதிலேயே வைத்திருந்திருக்கிறான்.

ஆதியாகமம் 49 : 31

பிரியமானவர்களே, இங்கே, அங்கே என்று சொல்லப்பட்டிருக்கிற வார்த்தை தேவன் கொடுத்த வாக்குத்தத்த பூமியைக் குறிக்கிறதாய் இருக்கிறது. ஏனென்றால், உண்மையிலேயே ராகேலை யாக்கோபு பெத்லகேமிலே புதைத்தான். ஆனால் இங்கே அவன் சொல்வது என்ன? தான் உயிரோடு எழுப்பப்படும்பொழுது தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாக்குப் பண்ணின பூமியிலே வாக்குத்தத்தம் நிறைவேறும் பொழுது தானும் அங்கே உயிரோடு எழுப்பப்பட வேண்டுமென்று விரும்பினான். எனவேதான் தன்னை எகிப்திலே புதைத்து விடக்கூடாது, கானானிலே புதைக்க வேண்டும் என்பதைக் குறித்து மிக தெளிவாக தனது பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்கிறான்.

ஆதியாகமம் 49 : 32, 33

இங்கே ஆர்வம் தரக்கூடிய ஒரு காரியம் என்னவென்றால், யாக்கோபு தனது மரணத்திற்கு சற்று முன்னர்வரை தன்னுடைய கால்களை நிலத்திலே ஊன்றிக்கொண்டிருக்கக்கூடியவனாய் இருந்தான். யாக்கோபு வாழ்க்கையைத் துவங்கும் பொழுது ஒரு மாம்சீகமான மனிதனாய்தான் இருந்தான். பிறக்கும் பொழுதே தனது சகோதரனின் குதிங்காலைப்பிடித்துக்கொண்டு வந்தான். எனவேதான் அவன் யாக்கோபு என்றழைக்கப்பட்டான். எத்தன் என்ற அவனுடைய பெயருக்கு ஏற்றப்படி அவன் வாழ்ந்தான். கண்களில் பட்டதெல்லாம் தனக்கு வேண்டுமென்று அவன் செயல்பட்டான். எப்பொழுதுமே முதன்மையாய் இருக்க முயற்சித்தான். என்ன வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ள தனது வழிமுறையைப் பின்பற்றுகிறவனாய் இருந்தான். இளவயதினிலே தன்னுடைய சொந்த கால்களினாலே சொந்த பெலத்தினாலே சொந்த திறமையாலே அவன் நடந்தான். அவனுடைய திறமையின் மேலும், அவனுடைய தந்திரத்தின் மேலும், சார்ந்து வாழ்ந்தான்.

தன்னைத்தானே அவன் பார்த்துக் கொள்ள முடியும், தனக்கு தேவன் தேவையில்லை என்றும் எண்ணினான். சுயதிருப்தி உள்ளவனாக தனக்கு உலகத்திலே வேறு எதுவும் தேவையில்லை என்பதுபோல வாழ்ந்தான். பெனியேலிலே தேவன் யாக்கோபை

முடமாக்கினார். அவனை பிடிப்பதற்கு தேவன் நொறுக்க வேண்டியிருந்தது. சொல்லப்போனால் அவனுடைய கழுத்தை முறிப்பதற்குக் கூட தேவன் ஆயத்தமாய் இருந்தார். அதந்கு பின்னால் அவனுடைய வாழ்நாள் முழுவதும் நொண்டி, நொண்டி நடந்தான். ஒரு கம்பை ஊன்றிக்கொண்டு அவன் மூன்று கால்களால் தனது வாழ்க்கையை கடந்து செல்ல வேண்டியிருந்தது.

இப்பொழுது அவனுடைய மரணத்திற்கு முன்னதாக, படுக்கையிலே அமர்ந்தவனாக, தனது கோலிலே சாய்ந்து கொண்டிருந்தவனாகக் காணப்பட்டான். இப்பொழுது நேரம் வந்தபொழுது தனது கால்களைப் படுக்கையில் எடுத்து வைக்கிறான். தான் இவ்வளவுநாள் ஊன்றிவந்த அந்தக் கம்பை விட்டுவிடுகிறான். மரிக்கும்படியாக அவன் படுக்கிறான். இதுதான் யாக்கோபு. அவனுடைய வாழ்க்கையிலே மிக நெடுந்தூரம் அவன் வந்துவிட்டான்.

இப்பொழுது இறுதியான விசுவாச செயலாக தான் உயிரோடு எழுப்பப்படும் நாளை எண்ணிப்பார்க்கிறான். தேவன் அவனுக்கும் அவன் சந்ததிக்கும் அந்த தேசத்தைக் கொடுப்பார் என்ற வாக்குத்தத்தத்தை பரிபூரணமாக அவன் விசுவாசித்திருந்தான்.

யாக்கோபைக் குறித்து எபிரெயர் புத்தகத்திலே நாம் வாசிப்பது என்ன? எபிரெயர் 11ஆம் அதிகாரம் 13ஆம் வசனம்.

இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே மிக முக்கியமான ஒரு சத்தியத்தை எப்பொழுதும் நாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய வாழ்க்கையிலே தேவன் வாக்குபண்ணின எல்லாவற்றையும் இந்த உலகத்தின் இந்த வாழ்க்கையிலே நாம் பெற்றுக் கொள்ளப் போகிறதில்லை. ஆனால் அவைகளை நம்பி அணைத்துக் கொண்டவர்களாக இந்த உலகத்திலே வாழ்கிற காலத்திலே நாம் அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே வாழவும், விசுவாசத்தோடே மரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறோம்.

அந்நியரும், பரதேசிகளும் என்று சொல்லும்பொழுது இந்த உலகத்தின் காரியங்களிலும், உலகத்தினால் உண்டான காரியங்களிலும் அன்பு செலுத்தாதவர்களாக, அது நம்மைப் பற்றிப் பிடித்துக்கொள்ளும் அளவிற்கு அதற்கு நெருக்கமாகச் செல்லாதவர்களாக, நாம் கடந்து செல்ல வேண்டும். இந்த உலகம் நமக்கு நித்திய பூமியல்ல, தேவன் நமக்கென்று ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ண சென்றிருக்கிறார். ஒரு நாள் என்னை அங்கே அழைத்துச் செல்வார் என்ற விசுவாசத்தோடு நடக்கவும், மரண பரியந்தம் அந்த விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவும் அவர் எதிர்பார்க்கிறார்.

இன்றைக்கு நம்முடைய வாழ்கையிலே நாம் என்ன வயதிலே இருந்தாலும் சரி, நாம் அந்நியர்களும் பரதேசிகளும் என்ற உணர்வோடு ஒவ்வொரு நாளும் வாழ வேண்டும். எந்த நேரத்திலேயும் தேவன் நம்மை தம்முடைய இராஜ்ஜியத்துக்கு அழைத்துக் கொள்வார். ஆனால், நாம் உயிர் வாழ்கிற காலமெல்லாம் அவர் மேலே பரிபூரண விசுவாசமுள்ளவர்களாய் வாழ அவர் நம்மை அழைக்கிறார்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே உங்கள் வாழ்க்கையிலே, நீங்கள் எல்லா காரியங்களுக்காகவும் தேவனை விசுவாசிக்கிறீர்களா? உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு உங்களுக்கு மீட்பு கிடைப்பதற்காக இயேசு கிறிஸ்து உங்களுக்காக செய்த செயலை விசுவாசிக்கிறீர்களா? தேவன் உங்களுக்கு வாக்குபண்ணின அந்த பரலோக வாழ்க்கையை நீங்கள் விசுவாசித்து எதிர்பார்ப்போடுகூட அவருடைய பாதையிலே நடக்கிறீர்களா?

இந்த அதிகாரத்திலே யாக்கோபு, தனது விருப்பப்படியே கானானிலே அடக்கம் செய்யப்படுவதைக் குறித்தும், யோசேப்பின் சகோதரர்கள் இப்பொழுதும் பயந்து கொண்டே இருப்பதைக் குறித்தும், யோசேப்பு எகிப்திலே மரித்து அடக்கம் செய்யப்படுவதைக் குறித்தும் கற்றுக் கொள்ளப்போகிறோம்.

ஆதியாகமத்தின் இந்த இறுதி அதிகாரம் சற்றே துக்கமான அதிகாரம். ஆதியாகமம் புத்தகத்திலே மரணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டிருப்பதைக் குறித்து ஏற்கனவே நாம் சிந்தித்துவிட்டோம். தேவனாகிய கர்த்தர் ஆபிரகாமிடத்திலே என்ன சொன்னார்.

ஆதியாகமம் 2ஆம் அதிகாரம் 17ஆம் வசனம்

ஆனாலும் நன்மை தீமை அறியதக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம் ; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலும் இது தொடர்பாக எழுதும்பொழுது ரோமர் 5ஆம் அதிகாரம் 12ஆம் வசனத்திலே,

இப்படியாக, ஒரே மனுனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று என்று சொல்லுகிறார்.

எனவே ஆதியாகமம் பாவத்தை குறித்ததான உண்மைக்கும், மரணத்தைக் குறித்ததான உண்மைக்கும், மாதிரியாக காணப்படுகிறது. ஆதியாகமம் தேவனோடும், ஏதேன் தோட்டத்திலே தேவன் உருவாக்கிய மனிதனோடும் ஆரம்பமாகி எகிப்திலே சவப்பெட்டியிலே முடிவடைகிறது.

இந்த புத்தகம் மனித சமுதாயத்திற்குள்ளே பாவம் வந்ததை எடுத்துச் சொல்லுகிறது.

அதுமட்டுமல்ல, கரிசனையுடைய தேவன் மனிதன் மேல் இரக்கப்பட்டு அவனுக்கு நித்திய வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்ததைப் பற்றியும் இந்தப் புத்தகம் விவரிக்கிறது.

ஆதியாகமம் 50

ஆதியாகமம் 50 : 1

ஆம் பிரியமானவர்களே,உண்மையாகவே யோசேப்பு மிகுந்த துக்கமடைந்தான். ஏனென்றால், அவ்வளவு அதிகமாக அவனும் அவனுடைய தகப்பனாரை நேசித்தான்.

ஆதியாகமம் 50 : 2

அருமையானவர்களே, இப்படி மரித்துப்போன சரீரத்தைப் பாதுகாக்கும் பணியிலே எகிப்தியர்கள் மிக சிறந்து விளங்கினார்கள். சமீப காலம் வரைக்கும் கண்டெடுக்கப்பட்ட எகிப்தின் பழங்கால சரீரத்தைக் குறித்து நாம் கேள்விப்படுகிறோம். இந்த நாளும் நாம் கற்றுக்கொள்ளாத மரித்துப்போன சரீரத்தைப் பக்குவப்படுத்தும் ஒரு முறையை அவர்கள் கையாண்டிருக்கிறார்கள். எனவே, யோசேப்பு வைத்தியர்களை அழைத்துத் தன்னுடைய தகப்பனாருக்கு சுகந்தவர்க்கமிடும்படியாகச் சொல்கிறான்.

அருமையானவர்களே, யாக்கோபின் நம்பிக்கை இந்த உலகப் பிரகாரமான நம்பிக்கை. அதாவது, தேவன் அவர்களுக்கு கானான் தேசத்தை சொந்தமாக கொடுப்பார் என்ற நம்பிக்கை உறுதியாக இருந்தபடியினாலே தன்னை எபிரோனில் உள்ள மக்பேலா என்ற குகையிலே அடக்கம் செய்யப்படும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறான்.

ஏனென்றால், அவன் உயிரோடு எழுப்பப்படும்பொழுது இஸ்ரவேல் தேசத்திலே தன் ஜனங்களோடு இருப்பான். ஆனால், இன்றைய விசுவாசிகளின் நம்பிக்கை என்ன? இயேசு கிறிஸ்துவின் திருச்சபையின் ஒரு அங்கமாக விசுவாசி புதிய எருசலேமிலே பங்கடையும்படியாக இயேசு கிறிஸ்துவை நடுவானிலே சந்திப்பான். எனவே, இரண்டு வித்தியாசமான நம்பிக்கைகளைக் குறித்து நாம் வாசிக்கிறோம். அவை இரண்டுமே மகிமை நிறைந்தவை.

ஆதியாகமம் 50 : 3

கவனித்தீர்களா? அந்த வைத்தியர்கள் யாக்கோபின் சரீரம் கெட்டுப்போகாதபடி பதனிடுவதற்கு 40 நாட்கள் சென்றன. இதை பல வழிமுறைகளிலே அவர்கள் செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல இங்கே நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான குறிப்பு என்னவென்றால், எகிப்தியர்கள் யாக்கோபுக்காக துக்கம் கொண்டாடினார்கள்.

அருமையான சகோதரனே, சகோதரியே இது ஏதோ பணம் கொடுத்ததால் வந்து மாரடிக்கிறவர்களைப் போல அல்ல. எகிப்து தேசத்திலே யோசேப்பு சிறந்து விளங்கினபடியாலே, யோசேப்பின் தகப்பனாராகிய யாக்கோபு ஒரு பரிசுத்தவானாக உன்னதமானவனாகக் கருதப்பட்டான். எனவே அவனுக்காக மக்கள் துக்கம்

www.Radio882.com

கொண்டாடினார்கள்.

யோசேப்பு உண்மையாகவே அவர்களுக்கு ஒரு இரட்சகன். ஆனாலும், யாக்கோபு மறிக்கும் தருவாயிலே ஒரு பரிசுத்தவானாக அவன் மரித்தான் என்று சொல்லலாம்.

ஆதியாகமம் 50 : 4 – 7

அருமையானவர்களே, கவனித்தீர்களா ? யோசேப்பு தனது மன விருப்பத்தைச் சொன்னபொழுது உடனடியாக அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. காரணம் யோசேப்பு எகிப்திலே மிகவும் மேன்மையானவனாக மதிக்கப்பட்டான், எல்லாராலும் நேசிக்கப்பட்டான், கனம் பண்ணப்பட்டான். ஒருவேளை உலகமே கண்டிருக்கக்கூடிய மிக நீளமான ஒரு சவ ஊர்வலம் இது என்று சொல்லலாம். எகிப்து தேசத்திலிருந்து கானானில் உள்ள எப்பிரோன் வரைப் போகிறார்கள்.

ஆதியாகமம் 50 : 8

அருமையான சகோதரனே, சகோதரியே இதைக் குறித்து ஒரு தேவமனிதர் சொல்லும்பொழுது ஆடு மாடுகளையும், பிள்ளைகளையும் எகிப்திலேயே விட்டுவிட்டு செல்லும்படியாகப் பார்வோன் கூறியிருப்பான். ஏனென்றால் அப்பொழுதுதான் அவர்கள் எல்லாரும் திரும்ப வருவார்கள் என்பதைக் குறித்த உறுதி அவனுக்கு உண்டாயிருக்கும் என்று சொன்னார். ஏன் தெரியுமா? யோசேப்பை இழந்து போவதற்குப் பார்வோனுக்கு விருப்பம் இல்லை. ஏனென்றால், அத்தனை அதிகமாக இராஜ்ஜியத்தின் ஆளுகையிலே யோசேப்புத் தொடர்ந்து பயனுள்ள சேவை செய்தான்.

நீங்கள் வேலை செய்கிற இடத்திலே ஒரு நீண்ட விடுமுறை வேண்டுமென்று நீங்கள் கேட்டால், அதைக்குறித்து உங்கள் அதிகாரி மகிழ்ச்சி அடைவாரா அல்லது நீங்கள் அங்கே இல்லையென்றால் பணி தாமதமடையும் என்பதைக் குறித்துத் துக்கப்பட்டு நீங்கள் சீக்கிரமாக வருவது நல்லது என்று சொல்லுவாரா? என்பதை சற்றே எண்ணிப்பார்ப்போம்.

சோம்பேறியான ஊழியர்கள் பணித்தளங்களிலே இல்லாமல் போவதைக் குறித்து எந்த பொறுப்பாளர்களும் வருந்துகிறதில்லை. ஆனால் உண்மையோடும் உத்தமத்தோடும் பொறுப்போடும் சிறப்போடும் பணிசெய்கிற ஊழியர்கள் இல்லையென்றால், அந்தப் பணி பாதிக்கப்படும் என்பதை மேலதிகாரிகள் அறிந்திருக்கிறார்கள்.

அருமையான சகோதரனே, சகோதரியே ஆண்டவர் உங்களை எந்த இடத்தில் ஊழியம் செய்யும்படியாக வைத்திருந்தாலும் நீங்கள் அந்த இடத்திலே உண்மை உள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார். எனவேதான் சாலொமோன் ஞானி சொல்கிறார், தன் வேலையில் ஜாக்கிரதையாய் இருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், இராஜாக்களுக்கு முன்பாக நிற்பான் என்று சொல்லியிருக்கிறார்.

ஆம். தன்னுடைய வேலையிலே ஜாக்கிரதையாய் இருந்ததினாலே யோசேப்பு

www.Radio882.com

உயர்த்தப்பட்டான். உங்கள் வாழ்கையிலேயும் நீங்கள் பணி செய்கிற இடத்திலே உண்மையோடும் ஜாக்கிரதையோடும் சிறப்போடும் பணி செய்ய உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்.

ஆதியாகமம் 50 : 9 – 13

அருமையான சகோதரனே, சகோதரியே, யாக்கோபு ஏன் பெத்லகேமிலே ராகேலோடுகூட அடக்கம் பண்ணப்படவில்லை, என்பதைக் குறித்தும் நீங்கள் யோசிக்கலாம். இந்த எப்பிரோனில் இருந்து சுமார் 20 மைல் வடக்கே சென்றால் அங்கேதான் பெத்லகேம் இருக்கிறது. ஆனால் இந்தப் பகுதியிலேயே அதற்கான காரணத்தையும் நாம் காணக்கூடியதாய் இருக்கிறது. ஆபிரகாம் விலைகொடுத்து இந்த இடத்தை வாங்கினான். தனது தகப்பனாரோடுகூட மூதாதையர்களோடுகூட அந்த இடத்திலே அடக்கம் பண்ணும்படியாய் யாக்கோபு விரும்பினான். அப்பொழுதுதான் தேவன் வாக்குத்தத்தம் பண்ணின அந்த பூமியிலேயே தான் இருப்பேன் என்பதைக் குறித்து உறுதி உள்ளவனாய் எண்ணினான். எனவேதான் மற்ற முற்பிதாக்களோடுக் கூட அவன் அடக்கம் செய்யப்பட்டான்.

அவர்கள் அனைவருமே உயிர்த்தெழுதலைக் குறித்த நம்பிக்கை உள்ளவர்களாய் காணப்பட்டார்கள்.

ஆதியாகமம் 50 : 14 – 17

கவனித்தீர்களா? யாக்கோபு மரிக்கும் முன்னதாகவே தங்கள் உள்ளத்திலிருந்த பயத்தை யோசேப்பின் சகோதரர்கள் யாக்கோபுக்கு தெரிவித்திருக்கிறார்கள். ஏனென்றால், அவருடைய மரணத்திற்குப் பிறகு யோசேப்பு தங்களை எப்படி நடத்துவானோ, என்ற பயம் அவர்களுக்குள்ளே இருந்திருக்கிறது. அவர்களுக்கு எதிராக அவன் செயல்பட்டு தகப்பனார் மரித்தபிறகு தங்களைத் தண்டிப்பான் என்று பயந்தார்கள். யோசேப்பு தன் சகோதரர்களை தண்டிப்பான் என்றோ, பழிக்கு பழிவாங்குவான் என்றோ யாக்கோபு நினைக்கவில்லை. அப்படி நினைத்திருப்பானென்றால், அதைக் குறித்து யோசேப்பினிடத்திலேயே அவன் பேசியிருப்பான்.

இந்த செய்தியை மூன்றாவது நபர் மூலமாக யோசேப்புக்குச் சொல்லி அனுப்புகிறார்கள். இந்த வார்தைகளைக் கேட்டவுடனே யோசேப்பின் உள்ளம் உடைந்து கண்ணீர் வடிக்கிறான். அந்த சகோதரர்களும் உண்மையாகவே தங்கள் பாவங்களைக் குறித்து மனம் திரும்புகிறார்கள்.

ஆதியாகமம் 50 : 18

நேரடியாக யோசேப்பின் முகத்தைப் பார்க்க தைரியம் இல்லாததினாலே ஆள் மூலமாய் சொல்லி அனுப்புகிறார்கள். இரண்டாவதாக அவன் அழுததைக் குறித்து நிச்சயமாய்

www.Radio882.com

அவர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள். எனவே இப்பொழுது எல்லோரும் சேர்ந்து வந்து அவனுக்கு முன்பாகத் தாழ விழுந்து நாங்கள் உமக்கு அடிமைகள் என்று சொல்கிறார்கள்.

யோசேப்புடைய வாழ்கையிலே சிறுவயதிலே தீர்க்கதரிசனமாக அவனுக்குக் கொடுக்கப்பட்ட இந்த செய்தி மீண்டும் மீண்டும் நிறைவேறுகிறதை இங்கேயும் நாம் பார்க்கிறோம்.

ஆதியாகமம் 50 : 19

கவனித்தீர்களா? ஒவ்வொரு காரியத்திலேயும் யோசேப்பு தேவனுக்கே கனத்தையும் மகிமையையும் செலுத்துகிறான். தேவனுக்குப் பயப்பட வேண்டிய பயத்தைக் குறித்து அவன் அறிந்திருக்கிறான். எனவேதான் நான் தேவனா? என்று அவன் கேட்கிறான்.

ஆதியாகமம் 50 : 20

நம்முடைய வாழக்கையிலும், நம்முடைய பிள்ளைகளுடைய வாழ்கையிலும் கூட நாம் இன்று பார்க்கிற காரியங்களையும் நோக்கங்களையும் விட மிக மேலான காரியங்களையும், நோக்கங்களையும் தேவன் வைத்திருக்கிறார். நாம் ஒவ்வொருவருமே எவ்வளவு மனுஷீகமானவர்கள், என்பதை அறிக்கையிட வேண்டும். ஏனென்றால் எந்த ஒரு பிரச்சனை வரும்பொழுதும் அதன் முடிவைக்குறித்து நமக்குத் தெரியாது. அநேக வேளைகளிலே இது எனக்கு ஏன் வந்தது? என் குடும்பத்திலே ஏன் நடைபெற்றது? எனக்கு ஏன் தேவன் இதை அனுமதித்தார்? என்று நாம் கேள்வி கேட்கிறோம்.

இன்றும் உங்களுடைய வாழ்க்கையிலே நீங்கள் கடந்து வருகிற பாதைகளைக் குறித்துக் கேள்விக்குறிகள் இருக்குமென்றால், நிச்சயமாக உங்கள் வாழ்க்கையிலே நடைபெறுகிற எல்லாவற்றையும் ஒரு நோக்கத்தோடும், ஒரு திட்டத்தோடும் தேவன் நடத்திக்கொண்டு வருகிறார். தேவன் நம்முடைய வாழ்க்கையைக் குறித்துச் சிறப்பான நோக்கமுள்ளவராய் இருக்கிறார். நம்முடைய நினைவுகள் அவருடைய நினைவுகளல்ல, அவருடைய நினைவுகள் நம்முடைய நினைவுகளைவிட உயர்ந்தது.

உங்கள் வாழ்க்கையிலே ஒரு மேன்மையான காரியத்தை செய்வதற்காகவே சில வேளைகளிலே அவர் உங்களுக்குத் தீமை போன்ற காரியங்களையும் அனுமதிக்கிறார். இப்பொழுது யோசேப்பு என்ன சொல்லுகிறான் பாருங்கள்.

ஆதியாகமம் 50 : 21 – 23

கவனித்தீர்களா? எப்பிராயீமுக்குப் பிறந்த மூன்றாம் தலைமுறை என்று சொல்லும்பொழுது எப்பிராயீமின் பிள்ளைகளின் பிள்ளைகளின் பிள்ளைகளையும் யோசேப்பு கண்டான் என்று சொல்லலாம்.

ஆதியாகமம் 50 : 24 – 26

இவ்வாறாக ஆதியாகமப் புத்தகம் நிறைவடைகிறது. ஆதியாகமம் ஆரம்பமாகும்

www.Radio882.com

பொழுது தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்ததை பார்த்தோம். இப்பொழுது எகிப்திலே ஒரு சவப்பெட்டியோடு அது நிறைவடைகிறது.

அருமையான சகோதரனே, சகோதரியே மனுகுலத்திற்கு என்ன ஆனது? தேவனுடைய படைப்பிற்குள்ளே பாவம் நுழைந்துவிட்டது. சரி, யோசேப்பு மரித்த உடனேயே ஏன் அவனுடைய சரீரம் எடுத்துச்செல்லப்பட்டு கானானிலே அடக்கம் செய்யப்படவில்லை? யோசேப்பு அந்த குறிப்பிட்ட காலத்திலே அந்த தேசத்திலே மிகப் பெரிய ஒரு கதாநாயகனாக கருதப்பட்டான். எனவே, அவனுடைய சரீரத்தை எகிப்திலிருந்து எடுத்துச் செல்ல எகிப்திய மக்களே அனுமதித்திருக்கமாட்டார்கள். எகிப்தியர்கள் கனம் பண்ணிய ஒரு சிறந்த மனிதனாய் யோசேப்பு காணப்பட்டான். அவன் பெட்டியிலே வைக்கப்பட்டு ஒரு வேளை அங்கேயே அடக்கம் செய்யப்பட்ட இடத்திலே ஒரு நினைவுச்சின்னத்தைக் கூட அவர்கள் எழுப்பியிருந்திருப்பார்கள். ஆனால், யோசேப்பு தன் ஜனங்களிடத்திலே என்ன சொல்கிறான்? நீங்கள் கானானுக்குத் திரும்பிச் செல்லும்பொழுது என்னுடைய எலும்புகளை இங்கே விட்டுச்சென்று விடாதிருங்கள், என்று சொல்கிறான்.

யாக்கோபின் வாழ்க்கையிலே காணப்பட்ட அதே நம்பிக்கையை இங்கே யோசேப்பின் வாழ்க்கையிலேயும் நாம் பார்க்கிறோம். தங்கள் நித்திய கால சொத்தாக தேவன் வாக்குப் பண்ணிய கானானை தங்களுக்கும் தங்கள் சந்ததிக்கும் கொடுப்பாரென்று யோசேப்பும் விசுவாசித்தான். எனவே, அவனுடைய தகப்பனார், தாத்தா எல்லாருமே கானானிலேயே புதைக்கப்படுவதை விரும்பினார்கள். தேவன் தனது மக்களை அந்த இடத்திலேயே உயிரோடு எழுப்பி கானான் தேசத்தை நித்திய சுதந்திரமாக அவர்களுக்குக் கொடுப்பார்கள் என்று விசுவாசித்தான்.

யோசேப்பின் வாழ்க்கையிலே குறிப்பிட்டுச் சொல்லப்படும் விசுவாச செயலாக இதுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பாருங்கள் எபிரேயர் 11ஆம் அதிகாரம் 22ஆம் வசனம்

விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்திய காலத்தில் பேசி, தன் எலும்புகளைக் குறித்துக் கட்டளைகொடுத்தான்.

யாத்திராகமம் 13ஆம் அதிகாரத்தை நாம் படிக்கும் பொழுது எவ்வளவு அற்புதமாக தேவன் யோசேப்பின் விருப்பத்தையும் மதித்து அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுகிறார், என்பதைப் பார்க்கலாம். மோசேயும், இஸ்ரவேல் ஜனங்களும் எகிப்தை விட்டுப் புறப்பட்டுச் செல்லும்பொழுது யோசேப்பின் எலும்புகளை எடுத்துக்கொண்டுதான் சென்றார்கள்.

மூன்று காரியங்களை நான் உங்களுடைய மனதிலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முதலாவதாக யோசேப்பு பணி செய்த இடத்திலே எல்லா மக்களின் நல்மதிப்பையும்

www.Radio882.com

பெற்றிருக்கிறான். காரணம் தேவனுக்கு பயந்து தேவனுக்கு விரோதமான காரியங்களைச் செய்யக்கூடாது என்ற மன உறுதியோடு இளவயது முதல் வாழ்ந்தான். நம்முடைய வாழ்க்கையிலேயும் உண்மையுள்ளவர்களாய் பணிசெய்வோமென்றால் பணி செய்கிற இடத்திலே நிச்சயமாய் எல்லாரும் நம்மைக்குறித்து அறிந்து கொள்வார்கள்.

இரண்டாவதாக, யாக்கோபு மரித்தபொழுது யோசேப்பின் சகோதரர்கள் பயந்து போய் அவன் பாதத்திலே வந்து விழுந்தார்கள். ஆனால் தன் வாழ்க்கையின் எல்லா காரியங்களிலேயும் கர்த்தருடைய கரத்தைக் கண்ட யோசேப்பு எந்த விதமான கோபத்தையும் வைராக்கியத்தையும் இருதயத்திலே பேணாமல், ஆதிமுதலே எல்லாவற்றையும் கர்த்தர் தனது நன்மைக்காக அநேக ஜனங்களை உயிரோடு காக்கும்படிக்கு அதைச் செய்தார் என்பதை அறிந்து உணர்ந்தவனாய் அவன் வாழ்ந்து வந்தான்.

நம்முடைய வாழ்க்கையிலேயும் நாம் ஆண்டவரை நேசிக்கிறவர்களாய் வாழும்பொழுது எல்லாவற்றையும் நம்முடைய நன்மைக்காக நம்முடைய பிள்ளைகளுடைய நன்மைக்காக அவருடைய நாம மகிமைக்காக அநேகருடைய ஆசீர்வாதத்துக்காகவே இதைச் செய்வார் என்ற நிச்சயம் உள்ளவர்களாய் நாம் வாழ வேண்டும்.

இறுதியாக யோசேப்பினுடைய வாழ்க்கையிலே தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையினாலேதான், தன் எலும்புகளையும் கானான் தேசத்திற்கு எடுத்துச் செல்லும்படியாக அவன் கட்டளைக் கொடுத்தான்.

எனக்கு அருமையான சகோதரனே, சகோதரியே இயேசு கிறிஸ்துவை இரட்சகராக விசுவாசிக்கிற விசுவாசமுள்ள ஒவ்வொருவரும் நம்முடைய மரணத்திற்குப் பின்னால் நித்திய நித்தியமாய் அவரோடு வாழும் நிச்சியத்தைக் குறித்து உறுதி உள்ளவர்களாய் வாழ அழைக்கப்படுகிறோம். அந்த நிச்சயம் உங்களுக்கு உண்டா? நமக்காக ஒரு இடத்தை ஆயத்தம் பண்ண சென்றிருக்கிற அவர் ஏற்ற நேரத்திலே வந்து நம்மை அழைத்துச் செல்வார்.

www.Radio882.com